# இந்தியாவின் சிறப்பு வரலாறு

( முதற் பகுதி )

ஆசிரியர்கள் :

R. C. மஜும்தார்

H. C. ராய்சௌதுரி

K. தத்தா

தமிழாக்கம் :

டாக்டர் தி. வெ. குப்புசாமி

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண் —69

# இந்தியாவின் சிறப்பு வரலாறு

(முதற் பகுதி)

ஆசிரியர்கள்

**R. C. மஜும்தார்,** M.A., Ph.D.,
முன்னாள் துணைவேந்தர், டாக்காப் பல்கலைக்கழகம்.

**H. C. ராய்சௌதுரி,** M.A., Ph.D.,
முன்னாள் கார்மைக்கேல் பேராசிரியர்,
பண்டைய இந்திய வரலாறு மற்றும் பண்பாட்டுத்துறை,
கல்கத்தாப் பல்கலைக்கழகம்.

**K. தத்தா,** M.A., Ph.D.,
முன்னாள் துணைவேந்தர், பாட்னாப்பல்கலைக்கழகம்,
பாட்னா.

தமிழாக்கம்

டாக்டர் தி. வெ. குப்புசாமி, எம்.ஏ. (வரலாறு), பிஎச்.டி.,
எம்.ஏ. (பொருளாதாரம்), எம்.ஏ. (அரசியல்),
வரலாற்றுத்துறைப் பேராசிரியர், துறைத் தலைவர்,
ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி (தஞ்சாவூர்).

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—February, 1965
Second Edition—June, 1971
Third Edition—November, 1976
Reprint—March, 1979
Number of Copies—2,000

T.N.T.B.S. (C.P.) No. 69

© Government of Tamilnadu

# AN ADVANCED HISTORY OF INDIA-I

R. C. MAJUMDAR
H. C. RAYCHAUDHURI and
K. DATTA

Translation
Dr. T. V. KUPPUSAMY

**Price Rs. 6-90**

This translation of "An Advanced History of India"—by R. C. Majumdar, H. C. Raychaudhuri and K. Datta, third edition reprinted in 1974 is published by arrangement with *Messrs* MacMillan and Company Limited of St. Martin's Street, London, W. C. 2

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed by*

Srinivasam Press The Jupiter Enterprises,
1, Smith Lane, Mount Road,
Madras-600 002.

# அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினெட்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்களின் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். நாடு முழுவதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்களின் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்கவகையில் நடைபெற்றுவருகிறது.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், மெய்ப்பொருளியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய பல துறைகளில் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான இந்தியாவின் சிறப்பு வரலாறு (முதற் பகுதி) என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் வெளியான 69 ஆவது வெளியீடாகும். தமிழ் மக்களின் பேராதரவினாலும் தமிழைப் பயிற்சிமொழியாகக் கொண்டவர்களின் நல்லூக்கத்தினாலும் இதன் முந்தைய பதிப்புப் படிகள் அனைத்தும் விற்பனையாகிவிட்டன. ஆதலின், இப்பொழுது இந் நூல் மீண்டும் வெளிவருகிறது. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூகநல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள் அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதைவலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பது தான். 'எதிலும் தமிழ்; எங்கும்தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்றவேண்டிய கடப்பாடு தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரித்தாகுக.

செ. அரங்கநாயகம்.

# ஆங்கில முதற்பதிப்பின் முன்னுரை

தொடர்ச்சியும் தெளிவும் குன்றிய தொன்மை வாய்ந்த நம் நாட்டு வரலாற்றினை மேலை நாட்டறிஞரும் கீழை நாட்டு அறிஞரும் ஆகிய பலர் எழுதி வெளியிட்டுள்ளனர். 'பழம்பெரும் புராதன இதிகாசத்தை' எடுத்துரைக்கும் மற்றுமொரு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. புதைபொருளாராய்ச்சியாளரின் பெரு முயற்சிகளும் பேரறிஞர் பலரின் ஆராய்ச்சிகளும் ஆண்டு தோறும் புதிய வரலாற்றுண்மைகளைப் புலப்படுத்தி வருகின்றன. மாணவருக்கு வரலாற்றுண்மைகளை எடுத்தோதும் போது, செய்திகளைப் பல கோணங்களில் ஆய்ந்து உரைக்க வேண்டிய அவசியமும் அனுபவ வாயிலாக உணரப்படுகிறது. எங்கள் புது முயற்சிக்கு இவைகளே அடிப்படைக் காரணங்களாய் விளங்குகின்றன.

வரலாற்றின் அடிப்படைகளைக் கற்றுணர்ந்து, மேலும் ஊன்றிப் படித்து, பேரறிவு பெற விரும்பும் மாணவர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு இந் நூல் வெளிவருகிறது. முக்கியச் செய்திகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. அவை வெவ்வேறு காலங்களில் நிகழ்ந்தவை. நிகழ்ச்சிகள் எழுந்த வகை, அவற்றின் படிப்படியான வளர்ச்சி ஆகியவைகளை இளமையில் மாணவர் கற்றுணர்ந்த பரந்த பொது நோக்கிற்கு முரண்படாது கூற முயன்றுள்ளோம். நிருவாக, சமூக, பொருளாதார, கலாசாரத் துறைகளில் அதிக கவனம் செலுத்தியிருக்கிறோம். ஆங்காங்கே கிடைக்கும் செய்திகளைச் சீரிய முறையில் தொகுத்தளித்திருப்பது இந் நூலின் தனிச்சிறப்பு. பண்டைய இந்து சமூகத்தினர் கலாசார, அரசியல் துறைகளில் கண்ட வெற்றிகளையும் முன்னேற்றத்தையும் நன்கு விளக்கியிருப்பதுடன், கட்டடக்கலை, நுண்கலை ஆகிய துறைகளைச் சார்ந்த பல செய்திகளையும், அயல்நாட்டுத் தொடர்பால் இந்தியக் கலாசாரமும் பண்பாடும் அடைந்த மாறுதலையும் சிறப்பாகக் கூறியுள்ளோம்.

ஆராய்ச்சியின் பயனாக இன்றுவரை நமக்குக் கிடைக்கும் நம்பகமுள்ள செய்திகளைத் திரட்டித் தெளிவாகக் கூறியுள்ளோம். செய்திகளிலிருந்து ஊகித்தறியப்படும் முடிவுகளை நடுவுநிலை தவறாது ஆய்ந்து தெரிவித்துள்ளோமெனினும், நடைமுறையில் இருந்துவரும் பல கருத்துகளையும் உள்ளவாறு ஆங்காங்கே கூறியிருக்கின்றோம். வெற்றெலும்புக்கூடாகக்

காட்சியளிக்கும் வரலாற்றிற்கு, குறிப்பாகப் பண்டைக்கால வரலாற்றிற்குப் பல மூலாதாரங்களைப் பயன்படுத்தி, சதையும் இரத்தமுமளித்து ஜீவகளை யூட்டியுள்ளோம். தேசப்படங்கள், மேற்கோள் நூல்கள், வமிசாவளிகள், கால வரன்முறைப் பட்டியல்கள் ஆகியவை ஆராய்ச்சியில் ஈடுபடுவோருக்கு நற்பயன் அளிக்கவல்லவை. நூலைப் பயன்படுத்துவோர் மேலும் பல சிறப்புகளையும் காண்பர். அவற்றை மிகைப்படுத்தி உரைப்பதில் எங்களுக்கு விருப்பமில்லை.

கூட்டு முயற்சியில் எழும் இலக்கியங்களால் நன்மைகள் பல உண்டெனினும், அவற்றிலடங்கிய வருந்தத்தக்க குறைபாடுகளையும் நாங்கள் அறிவோம். கூடி ஆலோசித்தும், ஒவ்வோர் அதிகாரத்தையும் மீண்டும் மீண்டும் பரிசீலனைசெய்து கவனத்துடன் திருத்தியும், குறைகளை நீக்க முயன்றோம். இதில் எவ்வளவில் வெற்றி பெற்றுள்ளோமென்பதை வாசகர்களே அளவிடக்கூடும். நூல், பிரிட்டனில் அச்சிடப்பெற்றதால், நூலாசிரியர்களுக்கும் அச்சகத்தாருக்கும் இடையேயுள்ள தொடர்பிற்குச் சற்றுக் குந்தகமேற்பட்டது. அந் நிலைக்கு நாங்கள் பொறுப்பாளிகளல்லோம். அது எங்கள் சத்திக்கப்பாற்பட்டது. தொடரவிருக்கும் வெளியீடுகளில் இக் குறைகளை நீக்க அரும்பாடு படுவோம். காணப்படும் குறைகளை வாசகர்கள் எங்கள் கவனத்திற்கு அனுப்பவேண்டுமென வேண்டுகிறோம்.

கீழ் நாடுகளில் வழங்கி வரும் சுட்டுப்பெயர்களையும் பிறவற்றையும் குறிப்பிடும்போது 'கேம்பிரிட்ஜ் இந்திய வரலாற்று' நூலைப் பின்பற்றி, மூலப் பெயர்களையே கையாண்டு அளித்துள்ளோம்.

எங்களுக்கு வழிகாட்டிகளாய் விளங்கும் 'பூர்வாசிரியர்'களுக்கும், புகைப்படங்களையும் மற்றும் பலவற்றையும் நல்கிய பெரியோருக்கும், பிற குழுக்களுக்கும் இத் தருணத்தில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவராவோம். இந் நூல் உருப்பெறுவதில் மிக்க ஆர்வம் கொண்ட வெளியிடுவோரின் பேராளர்களுக்கு நாங்கள் சிறப்பாக நன்றி கூறுவது இன்றியமையாதது. நம் நாட்டு வரலாறு என்னும் பெருவாய்க்கால், மிக அகலமாகவும் ஆழமாகவும் அமைவதற்கான முயற்சிக்கு மாணவருக்கென எழுந்த இந் நூல் ஒருசிறிது பயன்படுமாயின் அதனினும் சிறந்த பேறு எங்களுக்கில்லை.

ஆர். சி. மஜூம்தார்
எச். சி. ராய்சௌதுரி
களிகின்கர் தத்தா

கல்கத்தா

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இயற்கை அமைப்பும் அடிப்படை ஒற்றுமையும் ... | 3 |
| 2. | வரலாற்றிற்கு முந்திய காலம் ... | 10 |
| 3. | முந்திய வேதகாலம் ... | 29 |
| 4. | பிந்திய வேதகாலப் பண்பாடு ... | 53 |
| 5. | மகதப் பேரரசின் எழுச்சியும் யவனர் வருகையும்... | 69 |
| 6. | மகதப் பேரரசு எழுச்சியின் தொடக்க காலத்துப் பண்பாடு ... | 90 |
| 7. | மௌரியப் பேரரசு ... | 128 |
| 8. | மகதப் பேரரசின் சீர்குலைவும் மத்திய ஆசிய, ஈரானியப் படைத் தாக்குதல்களும் ... | 151 |
| 9. | மௌரியப் பேரரசுக் காலப் பண்பாடும், கிரேக்கர் சித்தியர் படையெடுப்புக் கால நாகரிகமும் (கி. மு. 324—கி. பி. 320) ... | 165 |
| 10. | குப்தப் பேரரசு ... | 193 |
| 11. | ஹூணர்களை எதிர்த்துப் போராட்டமும் கன்னோசி, காஷ்மீரம், கௌடம் இவற்றின் எழுச்சியும் ... | 204 |
| 12. | சாதவாகனர் வீழ்ச்சியிலிருந்து இராஷ்டிரகூட ஆதிக்க முடிவு வரையில் தக்காணத்தின் சரித்திரம்—காஞ்சி, கர்நாடகச் சாம்ராச்சியங்களின் எழுச்சி ... | 231 |
| 13. | பழைய இந்து சாம்ராச்சியங்களின் மறைவு ... | 240 |
| 14. | குப்தப் பேரரசர், அவர் சந்ததியார்கள் கால இந்திய நாகரிகம் ... | 254 |
| 15. | எல்லை விஸ்தரிப்பும் பண்பாடு பரவுதலும் ... | 277 |
| 16. | பண்டைய இந்திய நினைவுச் சின்னங்கள் ... | 294 |
| | வமிசாவளி அட்டவணை ... | 333 |
| | முற்பகுதியின் நூலடைவு ... | 351 |
| | கலைச்சொற்கள் ... | 362 |
| | பொருட்குறிப்பு அகராதி ... | 367 |

# தேசப் படங்கள்

(பொருட்குறிப்பு அகராதிக்குப் பின் இணைக்கப்பட்டுள்ளன.)

1. புராதன இந்தியா (பாரத வர்ஷம்)
2. இடைக்கால இந்தியா—தொடக்கம்
3. புராதன ஆசியா

அதிகாரங்கள் 1, 3, 14 டாக்டர் H. C. ராய்சௌதுரியாலும் அதிகாரங்கள் 2, 15, 16 டாக்டர் R. C. மஜூம்தாராலும் தொகுக்கப்பட்டவை.

# இந்தியாவின் சிறப்பு வரலாறு

முதற் பகுதி

பழங்கால இந்தியா

# 1. இயற்கை அமைப்பும் அடிப்படை ஒற்றுமையும்

ஆசியாக் கண்டத்தில், திபெத்தின் தெற்கெல்லையில் வாள் போன்று வளைந்து காணப்படும் கம்பீரமான மலைத்தொடர் களுக்குத் தெற்கிலுள்ள பரந்த நிலப்பகுதி 'இந்தியா' என வழங் கப்படுகிறது. இதை ஓர் உப கண்டம் எனலாம். இவ் வுபகண்டம் ஒழுங்கற்ற நாற்கர வடிவுடையது. பண்டைய பூமி சாத்திர வல்லுநர், நாற்புறங்களிலும் நன்கமைந்துள்ள எல்லைகளை வர்ணித்துள்ளனர். தெற்கு, மேற்கு, கிழக்கு ஆகிய மூன்று பகுதிகளிலும் இந்து மாக் கடல் சூழ்ந்துள்ளது. வடக்கில், இமய மலைத்தொடர் வில்லின் நாண் போலப் பரவியுள்ளது. இமயத்தின் வானளாவிய பனி மூடிய மலைச்சிகரங்களோடு, கீழ்த்திசையிலுள்ள லூஷாய், சிட்டகாங் போன்ற குறுமலைத் தொடர்களும், மேற்கிலுள்ள சுலைமான், கிர்தார் மலைத்தொடர் களும் காணப்படுகின்றன. இரு மருங்கிலும் சரிவாய் உள்ள கடற்கரை வரையிலும் இவை பரவியுள்ளன. இவை அடர்ந்த காடுகளுடைய ஐராவதிப் பள்ளத்தாக்கைக் கிழக்கிலும், குன்றுகளடர்ந்த ஈரான் பீடபூமியை மேற்கிலும் இந்தியாவி லிருந்து பிரிக்கின்றன. அரசியல் கண்ணோட்டத்துடன் நோக்கும் போது, 1947ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 15ஆம் தேதிக்கு முன் இந்தியப் பேரரசு, மேற்குறித்த இயற்கையெல்லைகளுக் கப்பால் பரவியிருந்தது புலனுகும். கிர்தார் மலைகளுக்கப்பா லுள்ள பலுச்சிஸ்தானமும், வங்காள விரிகுடாவின் பல பகுதி களும் இந்தியப் பேராட்சியுள் அடங்கியிருந்தன. கடலுக்கப்பா லுள்ள பகுதிகள் நீங்கலாக, இந்திய நாட்டின் பிற பகுதிகள் ஏறக்குறைய 61ஆவது தீர்க்கரேகைக்கும், 96ஆவது தீர்க்க ரேகைக்கும் இடையிலும், 8ஆவது அட்சரேகைக்கும், 37ஆவது வடஅட்ச ரேகைக்கும் இடையிலும் அடங்கியிருந்தன எனக் கூறலாம் இந் நிலப்பரப்பின் அதிகபட்ச நீளம் 1,800 மைல்; அகலம் 1,360 மைல். 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி தனி நாடாகப் பிரிக்கப்பட்ட பர்மா நீங்கலான இதர இந்திய ஆட்சிப் பகுதிகளின் நிலப்பரப்பு 1,575,000 சதுர மைல்களாம். மக்கள்தொகை முப்பத்தெட்டுக் கோடியே எண்பது இலட்சமாகும்.

இமயம் முதல் குமரிவரை பரவியுள்ள இப் பெருநிலப் பரப்பை இந்துக்கள் 'பாரத வர்ஷம்' என வழங்கினுர்கள் ; புராணப் புகழ் எய்திய பரதன் என்னும் மன்னன் ஆண்ட நாடு என்றும் கருதி வந்தனர். பாரதம், 'ஜம்பூ த்வீபம்' என்னும் பெரிய நிலப்பரப்பின் ஒரு பகுதி என இந்து பூதத்துவ வல்லுநர் கருதுவர். உலகப் பரப்பு, ஏழு வட்ட வளையங்களால் அமைந்திருப்பதாகவும், ஒவ்வொரு வளையமும் கடலொன்றுல் சூழப் பட்டிருப்பதாகவும், வளையங்களின் மையத்தில் 'ஜம்பூ த்வீபம்' அமைந்திருப்பதாகவும் புராதன பூவல்லுநர் (Cosmographers) சித்திரித்துள்ளனர். இப் புராண வர்ணனையில் கற்பனையும் கலந்திருப்பதாகக் கொண்டாலும், புத்த சமய ஆதி நூல்களில், கி.மு. மூன்றும் நூற்றுண்டிலேயே வழக்கிலிருந்த 'ஜம்பூ த்வீபம்' என்னும் சொல், பெரியதொரு நிலப்பரப்பைக் குறிப்பதாகும் என்னும் கருத்தைக் காண்கிருேம். சீனு நீங்கலாக ஆசியாவின் இதரப் பகுதிகளில், மௌரியப் பேரரசின் ஆதிக்கம் பரவியிருந்தது. அப் பகுதிகள் யாவும் 'ஜம்பூ த்வீபம்' என்னும் பெயரைப் பெற்றிருந்தன. 'இந்தியா' என்னும் பெயர் கிரேக்கர்களால் வழங்கப்பட்டது. அது பாரசீகக் கல்வெட்டுக் குறிப்புகளிலுள்ள 'ஹிந்து' என்பதற்கொப்ப அமைந்துள்ளது. 'சப்த சிந்து' (Saptha Sindhu), 'ஹப்த ஹிந்து' (Haptha Hindu) போன்ற இந் நாட்டிற்குரிய பெயர்கள், வேதங்களிலும் உபநிடதங்களிலும் காணப்படும். இந்திய உபகண்டத்தின் சிந்து நதிக்கரையே வளமிக்க பகுதியாகும். இந் நாட்டின் தொன்மையான பண்பாட்டிற்கும் இதுவே விளைநிலமாய் விளங்குகிறது. சிந்து நதியை அடிப்படையாகக்கொண்டு உபகண்டத்தின் காரணப் பெயர்கள் பல தோன்றியிருக்க வேண்டும். 'ஹிந்து' (Hindu), 'இந்துஸ்தானம்' (Hindusthan) என இக் கண்டத்தை இடைக்கால ஆசிரியர் குறிப்பர். இச் சொற்களும் முன்னர் நாம் குறித்த சொற்களின் திரிபுகளேயாகும்.

எல்லை நாடுகள் நீங்கலாக, இந்திய உபகண்டத்தை மட்டிலும் நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவையாவன : (1) மலைப்பாங்கான வடபகுதியைப் புராணங்கள் 'பர்வதாரச்யம்' (Parvathasrayin) எனக் குறிக்கின்றன. அடர்ந்த காடுகளைக் கொண்ட தாரை நாட்டிலிருந்து (Jungles of the Tarai) இமயமலைச் சிகரம் வரை பரவியுள்ள இந் நிலப்பகுதியில், காஷ்மீரம், காங்கிரம் (Kangra), தேரி (Tehri), குமான், நேப்பாளம், சிக்கிம், பூட்டான் ஆகிய நாடுகள் அடங்குகின்றன. (2) வடக்கிலுள்ள விசாலமான சமவெளி கோதுமைக் களஞ்சியமாய் விளங்கும் சிந்து, மற்றும் கிளை நதிகளின் பள்ளத்தாக்கு

களும், மணற்பாங்கான ராஜபுதனச் சிந்துப் பாலைவனங்களும், கங்கை, யமுனை, பிரமபுத்திரா நதிகளின் வளமிக்க வண்டல் பகுதிகளும் இவ் வெல்லைக்குட்பட்டவை. (3) தென்திசையில் மையமாயுள்ள தக்காணப் பீடபூமி, கங்கைச் சமவெளிக்குத் தெற்கிலுள்ள நிலப்பரப்பை உபகண்டத்தின் வட பகுதியி லிருந்து 'பரிபத்ர' (Paripathra), மேற்கு விந்திய, விந்திய மலைத் தொடர்கள் பிரிக்கின்றன. 'சஹ்யாத்ரி' (Sahyadri) அல்லது மேற்கு மலைத்தொடர்களும், 'மகேந்திரம்' (Mahendra) அல்லது கிழக்கு மலைத்தொடர்களும், முறையே, பீடபூமியை அரபிக் கடல், வங்காள விரிகுடாக் கடல்களினின்றும் பிரிக்கின்றன. (4) மேற்கு, கிழக்கு மலைத்தொடர்களுக்கும், கடல்களுக்கு மிடையே காணப்படும் நீண்டும் குறுகியும் உள்ள நிலப்பகுதியுள், 'கொங்கணம்' (Konkan), 'மலபார்' (Malabar) போன்ற துறை முகங்களும், கோதாவிரி, கிருஷ்ணை, காவிரி நதிகளின் வண்டற் பகுதிகளும் அடங்குகின்றன.

இவ் வியற்கை நிலப்பிரிவினைக்கும், முன்னோர்கள் கையாண்டு விரித்துரைக்கும் நிலப்பிரிவினை முறைகளுக்கும் வேற்றுமைகள் பல உண்டு. பழங்கால இலக்கியங்கள் இவ் வுபகண்டத்தை நான்கு பெரும்பகுதிகளாகப் பிரித்துரைக் கின்றன. சிந்து, கங்கைச் சமவெளிகளை உள்ளடக்கிய 'மத்திய தேசம்' (Madhya Desa) தானேஸ்வரம், பீஹோவா (Thaneswar, Pehoa) நாடுகளையடுத்துப் பாயும் சரஸ்வதி நதிக்கரையிலிருந்து அலகாபாது, காசி வரையிலும் பரவியிருந்ததாக 'பிராமண ஏடுகள்' (Brahminical Records) வருணிக்கின்றன. பழங்காலப் புத்த சமயக் குறிப்புகளிலிருந்து இப் பகுதி 'ராஜ்மகல்' (Raj-mahal) குன்றுகள் வரை பரவியிருந்ததென்றும் கொள்ளலாம். இந் நிலப்பரப்பின் மேற்குப் பகுதி 'பிரம்மரிஷி தேசம்' (Brahma-rishi Desa) எனப் பெயர் பெறும். இப் பகுதியே பதஞ்சலியின் (Pathanjali) இலக்கண நூலில் 'ஆரியாவர்த்தம்' எனக் குறிக்கப் படுகிறது. சில சாத்திர நூல்கள் (Law Books) ஆரியாவர்த்த எல்லையை விரித்துரைக்கின்றன. பீஹோவிற்கு அப்பாலும், மத்திய தேசத்திற்கு வடக்கிலும் அமைந்த பகுதி 'உத்தரப் பிரதேசம்' அல்லது 'உதீச்சியம்' (Udichya—வடமேற்கிந்தியா) என்றும், மேற்கிலமைந்த பகுதி 'அபராந்தம் அல்லது பிரதீச் சியம்' (Aparantha or Pradichya—மேற்கிந்தியா) என்றும், தென் பகுதி 'தட்சணபதம்' அல்லது தக்காணம் (Dakshinapatha or Deccan) என்றும், கிழக்குப் பகுதி 'பூர்வ தேசம்' அல்லது பிராச்சியம் (Purva Desa or Prachya) என்றும் [இதை அலெக் ஸாந்தரைப் பின்தொடர்ந்த கிரேக்க வரலாற்று நிபுண

'பிரசீ' (Prasii) எனக் குறிப்பார்.] வழங்கப்படுகின்றன. வட இந்தியா முழுவதையும் குறிப்பதற்கு 'உத்தரபதம்' என்னும் பெயரும், கிருஷ்ணா நதியின் வடக்கிலமைந்துள்ள மேற்குத் தக்காணத்தை மட்டிலும் குறிப்பதற்குத் 'தட்சணபதம்' என்னும் பெயரும் பண்டை இலக்கியங்கள் சிலவற்றில் ஆளப்பட்டிருக்கின்றன. தென்கோடியிலுள்ள பகுதி 'தமிழகம்' அல்லது 'தமிழர் நாடு' (Tamilakam or the Tamils) எனக் குறிக்கப்படுகிறது. 'அந்தர் வேதி' (Antar-Vedi) அல்லது கங்கை நதியின் இடைவெளிப் பிரதேசத்திற்கு அப்பாலுள்ள 'மத்தியப் பகுதியின், கீழ் முனையைப் 'பூர்வ தேசம்' (Purva Desa) எனக் குறிப்பர் புராண மரபையொட்டி வழங்கி வரும் ஐந்து பிரிவுகளுடன் 'பர்வாச்ரயம்' (Parvasrayin) அல்லது இமாலய வெளி, விந்தியப் பகுதி ஆகிய இரு பகுதிகளையும் இணைத்துக் கூறுவது முண்டு.

உலகிலுள்ள பிற நாடுகளைப் போல, இந்திய வரலாற்றுப் போக்கும் பூவியலை ஒட்டியே அமைந்துள்ளது. இயற்கைச் சக்திகளால் துண்டிக்கப்பட்டு விளங்கும் பகுதி ஒவ்வொன்றிற்கும், அததற்குரிய தனி வரலாறு உண்டு. ஆழமான நதிகளும், சங்கிலித் தொடர் போன்ற மலைகளும், மணல் நிரம்பிய பாலைவனங்களும், அடர்த்தியான காடுகளும் நாட்டுப் பகுதிகளிடையே தொடர்பேற்படா வண்ணம் பிரித்தன. ஆங்காங்கே நிலவிய எண்ணிலடங்காத வாழ்க்கை வசதிகளுக்கேற்ப, அரசியல், சமுதாயக் கருத்துகள் தோன்றி வளர்ந்தன. கூட்டு வாழ்க்கையில் அதிக ஆர்வமும், கருத்துப் பரிவர்த்தனைகளும் வட இந்தியச் சமவெளிகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. உப கண்டத்தின் உள் வாயிலில் அமைந்துள்ள விசாலமான பீடபூமியின் வாழ்க்கை முறைகளை, இமாலயம், மேற்கு மலைத் தொடர்களிலிருந்து பெருகி ஓடிய எண்ணற்ற ஆறுகள் சீர்திருத்தி அமைந்தன. மாபெரும் சங்கிலி மலைத்தொடர் ஆசியாவின் பிற பகுதிகளிலிருந்து இந்திய நாட்டைத் துண்டிக்கிறது; எனினும் இந்தியாவை ஒரு தனி உலகாகச் செய்து தனிப்பட்டதொரு பண்பாடு சிறந்தோங்கி வளர்வதற்கும் உதவியது. என்றாலும் வளமிக்க சிந்து கங்கை வெளிகளை நாடோடிகளிடமிருந்தும், பேராசை கொண்ட மன்னர்களிடமிருந்தும் முற்றும் காப்பாற்றவல்ல அரணாய் விளங்கவில்லை என்பதும் உண்மையாகவே தென்படும். மாபெரு மலைத்தொடரில், ஆங்காங்கே தென்படும் இடைவெளிகள் வழியாக ஒருவர்பின் ஒருவராக, அன்னியர், இந் நாட்டின்மீது படையெடுத்தனர். செல்வம் கொழித்த துறைமுகங்களையுடைய நெடிய கடற்கரை, நெஞ்

சுறுதி படைத்த நெடுந்தூரக் கடற்பிரயாணிகளின் ஆக்கிரமிப்பிற்கும், சாகசக்காரரின் ஆக்கிரமிப்பிற்கும் இலக்காயிற்று.

மலைக்கணவாய்களையும், கடல்களையும் அன்னியரை வரவேற்று உபசரிக்கும் தலைவாயில்களாக மட்டிலும் கொள்ளலாகாது. பிற நாட்டினருடன் தொடர்புகொள்வதற்கும் இவை உதவின. பத்திமான்களும், பண்பு வாய்ந்த வணிகரும் இவைகளைக் கடந்து வந்தனர். சிறப்பு வாய்ந்த இந்தியக் கலாசாரம் ஆசியாவின் பல பகுதிகளிலும், சோழமண்டலக் (Coramandal) கரைக்கப்பாலுள்ள தீவுகளிலும், மலேயாத் தீபகற்பத்திலும் மிகுதியாகப் பரவுவதற்குக் கணவாய்களும் கடலும் பேருதவியளித்தன.

இந்திய நாடு விசாலமானது; பிரிட்டனைப்போலப் பரப்பில் இருபது மடங்கு பெரியது; ரஷ்யா நீங்கலாக உள்ள ஐரோப்பாவைப் போல விரிந்து கிடப்பது; மிக விசித்திரமான பூவியல் கூறுகளை உடையது. பனி மூடிக் கிடக்கும் உயர்ந்த மலைகளும், வெள்ளம் பெருகுந்தோறும் வளம் பெருகி விளங்கும் சமவெளிகளும், மனித இனத்தின் காலடி காணுக் கடும் பாலைவனங்களும், சதுர மைலுக்கு மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களைக் கொண்ட வளமிக்க நதிப் பள்ளத்தாக்குகளும் இந் நாட்டின் எல்லைக்குள் அடங்குகின்றன. பத்தொன்பதாம் நூற்றுண்டில், இவ் வுபகண்டத்தின் பெரும்பகுதி, ஒரே ஆட்சியின்கீழ் இணைக்கப்பட்டது. 1947 ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 15 ஆம் நாளன்று, 'பாக்கிஸ்தான்', 'இந்தியா' என்ற இரு அரசியல் கூறுகளாகத் துண்டிக்கப்பட்டது. இவ்விரு அரசியல் பகுதிகளும், பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கின்றன. [1]நேப்பாளம், பூடான் போன்ற பகுதிகளும், பிரெஞ்சு, போர்ச்சுகீசியர் வசமுள்ள நிலப்பகுதிகளும் காமன்வெல்த் எல்லைக் கோட்டிற்கப்பாலுள்ளவை. 700,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட பகுதிகள், சுதேச மன்னராட்சியிலிருந்தன. பிரிட்டிஷ் பேரரசின் கண்காணிப்பில், உள்நாட்டு விவகாரங்களில் சிறிதளவு சலுகை பெற்றுப் பெருமை வாய்ந்த பண்டைய பேரரசுகளை நினைவூட்டும் சிற்றரசுகளாய் இவை விளங்கி வந்தன. ஒரு சில நீங்கலாகப் பாக்கிஸ்தான் அல்லது இந்தியப் பகுதியுடன் இவை இணைந்து விட்டன.

நிலப்பரப்புப் பரந்திருப்பது போல, மக்கள்தொகையும் அதிகம். 'நம் கவனத்திற்கெட்டிய நாடுகள் யாவற்றிலும் இந்தியாவில் அதிக மக்கள் வசித்து வருகிறார்கள்' என 'ஹீரோ

[1] கருத்துகள் மூலநூலைச் சார்ந்தவை.

டோட்டசு' (Herodotus) குறித்தார். பர்மா நீங்கலாகவுள்ள இந்திய உபகண்டத்தின் மக்கள்தொகை 38 கோடியே எண்பது இலட்சம் என 1941ஆம் ஆண்டுக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்கள் அறிவிக்கின்றன. உலகில் வாழும் மக்களின் மொத்த எண்ணிக்கையில் இது ஐந்தில் ஒரு பங்காய் விளங்குகிறது. பெருகியிருக்கும் மக்களின் கூட்டம் பல இனங்களை உள்ளடக்கியுள்ளது. பல பிரிவுகளடங்கிய இக்கூட்டத்தில் எண்ணிலடங்காச் சாதிகளும் கணக்கற்ற சமயக் கருத்துகளும், இருநூற்றிற்கும் மேற்பட்ட மொழிகளும் காணப்படுகின்றன. சமுதாய வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையையும் விளக்க வல்ல சான்றுகளும் உண்டு. வன விலங்குகளை வேட்டையாடியும். கனி கிழங்குகளை உண்டும் வாழ்ந்த அக்கால மனித இனத்தின் பழங்குடி மக்களையும், விஞ்ஞானம் முதலிய பொது அறிவின் விளைவுகள் யாவையும் பயன்படுத்தி வாழ்க்கை வசதிகளைப் பெருக்கி, போக வாழ்வு நடத்தி வரும் நகர மாந்தரையும் இன்றும் காணலாம்.

இனம், சாதி, சமயக் கோட்பாடுகள் ஆகிய வேற்றுமைகள் நிறைந்த இம் மனிதர்கூட்டத்தை உற்று ஆராயுங்கால், வேற்றுமைகளிடையிலும் அடிப்படை ஒற்றுமை தெரிய வரும். மேல்நோக்காகக் கவனிப்பவர்களுக்கு இது புலனாகாது. இவ் அடிப்படை ஒற்றுமை, பத்தொன்பதாம் நூற்றுண்டில் வளர்க்கப் பட்டது. பரவியெழுந்த கல்வியறிவும், ஒரே வகையான ஆட்சி முறையும் இவ்வொற்றுமையைப் பெரிதும் உறுதிப் படுத்தின. இவ் வடிப்படை ஒற்றுமை உணர்ச்சி, பத்தொன் பதாம் நூற்றுண்டிற்கு முன்னரே இருந்ததென்பது குறிப்பிடத் தக்க செய்தி. உண்மையில் இவ் வுணர்ச்சி மிகத் தொன்மை யானது. இதிகாச புராணங்கள் இந் நாட்டைப் 'பாரத வர்ஷம் அல்லது 'பரத சாம்ராச்சியம்' என்றும், 'பரதவமிசத்தினரின் பேரரசு' என்றும் குறிக்கின்றன. கடல்களுக்கு வடக்கிலும் பனி உறைந்திருக்கும் மலைத்தொடர்களுக்குத் தெற்கிலும் உள்ள நிலப்பகுதி 'பாரதம்' எனப் பெயர் பெறும்; அங்குப் பரதனின் சந்ததியார் வசித்து வருகின்றனர்.

> உத்தரம் யத் சமுத்ரஸ்ய
> ஹிமாத்ரேஸ்சைவ தக்ஷிணம்.
> வர்ஷம் தத் பாரதம் நாம
> பரதீ யத்ர ஸந்ததி : (ஹி)' (விஷ்ணு புராணம் II; 3:1)

அரசியல் ஞானிகளும் வேதாந்திகளும் இவ்வொருமைப் பாட்டுணர்ச்சியைக் கருத்தில் கொண்டிருந்தார்கள். 'இமயத்தி

லிருந்து சேது வரை, ஆயிர யோசனை விஸ்தீரணமுள்ள நிலப் பகுதி பேரரசிற்கேற்றது', என அவர்கள் குறித்தது நினைவு கூரத்தக்கது. வட திக்கிலுள்ள பனியுறைந்த இமயமலைத் தொடர்களிலிருந்து, தென் திசையிலுள்ள சேது வரை (Adam's bridge), கீழ்த்திசையிலுள்ள பிரமபுத்திரா நதிப் பள்ளத்தாக்கி லிருந்து, ஏழு கிளைகளுடன் கூடிய மேற்கிலுள்ள சிந்துநதிக் கப்பாலும் ஆதிக்கம் செலுத்திய பெருமன்னர்களை இவர்கள் போற்றி வருணிப்பதும் கவனித்தற்குரியது. கி. மு. மூன்ருவது நூற்ருண்டில் அரசு செலுத்திய மன்னன் ஒருவன், 'பிராகிருதம்' என்ற ஒரே மொழி வாயிலாகத் தனது மனத்தைக் கவர்ந்த சமயமொன்றின் கருத்துகளை, சாம்ராச்சிய முழுவதும் வாழ்ந்து வந்த மக்களுடன் பகிர்ந்து வெற்றிகண்டான் என்பது முக்கியச் செய்.தி சில நூற்ருண்டுகளுக்குப்பின் 'சம்ஸ்கிருத' மொழி (வடமொழி) அரண்மனைகளிலும், நாட்டின் பிற இடங்களிலும் வழங்கலாயிற்று. இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களைத் தமிழ், தெலுங்குப் பகுதிகளிலும், அறிவுக் களஞ்சியங்களாய் விளங்கிய தட்சசீலம் (மேற்குப் பஞ்சாப்), நைமிசாரண்யம் (மேல்கங்கைச் சமவெளி) முதலிய இடங்களிலு முள்ள மக்கள் ஒருங்கே விரும்பிக் கற்றனர். வேதங்களிலும் புராணங்களிலும் காணப்படும் சமயக் கருத்துகள் இன்றும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு மன நிறைவளித்து வருகின்றன. சிவன், விஷ்ணு போன்ற கடவுளருக்குப் பனி உறைந்த இமயமலை உச்சியிலும், கோதாவிரி, கிருஷ்ண நதிகளின் வண்டற் பிரதேசங்களிலும் ஒருங்கே கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக் கோவில்களில் சென்று வழிபடாது நிற்கும் பிறரையும், இந்து சமயக் கொள்கைகள் ஓரளவு கவர்ந் திருக்கின்றன. பல்வேறு சமயவாதிகளிடையிலும் ஒற்றுமை நிலவிவருவது கண்கூடு. இந் நாட்டுச் சமயவாதிகளுள் இஸ்லாமியர், இரண்டாவது இடம் பெறுவர். ஆல்-பிருனியின் (Al-Biruni) காலந்தொட்டு இந்துக்களின் விஞ்ஞான தத்துவ ஆராய்ச்சிகளில் இஸ்லாமியர் மிகுந்த அக்கறை கொண் டிருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது. இன்றும், இந்து சமயக் கோட்பாடுகள் கிராம வாழ்க்கையின் அடித்தளங்களாய் விளங்குகின்றன. இக் கோட்பாடுகளைக் கிராமங்கள் புறக் கணிக்க இயலாது. இஸ்லாமியரின் ஏகாதிபத்திய அரசியற் கொள்கையும் சமுதாயத் துறையில் சம அந்தஸ்துக் கொள்கையும், நாட்டில் உலவிய சாதி சமயச் சண்டைகளை அகற்றுவதற்கும் தடை செய்வதற்கும் பெரிதும் உதவின; குறிப்பாக, இடைக்காலத்தில் 'இந்திய அரசியல் கூட்டு'த்தத்து வம் (Pan Indian State) வலுப்பெறுவதற்கு இடமளித்தன.

# 2. வரலாற்றிற்கு முந்திய காலம்

மனித குலத்தின் சாதனைகளைத் தொகுத்தளிக்கும் ஏடு வரலாறு எனப்படும். பிற நாடுகளைப்போன்று, இந்திய மண்ணிலும் மனிதன் தோன்றிய நாள் முதல் வரலாறு தொடங்கும். சான்றுகளின் அடிப்படையில் வரலாறு அமைக்கப்படும். சான்றுகள் பல வகையானவை. சான்றுகளின்றி எந்தச் சமுதாயத்தினரின் வரலாற்றையும் தொகுக்க இயலாது. இந்திய மக்களுள் சிலரைப்பற்றிய சான்றுகள் இன்னும் நம் ஆராய்ச்சிக்கு அகப்படாமலும் இருக்கக் கூடும். சான்றுகள் கண்டறியப் படும் வரை, அம் மக்கள் வரலாற்றில் இடம் பெற இயலாது. பெரும்பாலோரது வாழ்க்கை முறைகளை விளக்கவல்ல சான்றுகள் கிடைத்துள்ளன. அம் மக்களின் வரலாற்றை மட்டிலும் தொகுப்பது சாத்தியம்.

ஆதிக் குடிகளின் வாழ்க்கை முறைகளை விளக்கும் சான்றுகள் கற்கருவிகள். இக் கருவிகளை நாள்தோறும் உருவாக்கி, ஆதிக்குடிகள் உபயோகித்திருக்கவேண்டும். இக் கருவிகளை அடிப்படையாகக்கொண்டு, ஆதிக்குடிகளை, பழங்கற் கால வாசிகள் (Palaeolithic men) என்றும், புதிய கற்கால வாசிகள் (Neolithic men) என்றும் பிரிக்கலாம்.

### பழங்கற்கால மனிதர்
### (Paleaolithic Men)

பழமை (Palaeo), கல் (lithic) என்னும் சொற்கள் கிரேக்க மொழியிலிருந்து வந்தவை. இந்திய ஆதிக்குடிகளைக் குறிப்பதற்கு இச் சொற்கள் பயன்படுகின்றன. ஆதிக்குடிகளின் உபயோகத்திலிருந்த கரடுமுரடான கற்கருவிகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை ஆதிவாசிகளின் வாழ்க்கை முறைகளை விளக்குகின்றன. கரடுமுரடான கற்களாலாகிய இவை பலதரப்பட்டவை. இவற்றுக்கு மரம் அல்லது எலும்புகளாலான கைப்பிடிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். வனவிலங்குகளை வேட்டையாடுவதற்கு ஆதிவாசிகள் இக் கருவிகளை உபயோகித்திருக்க வேண்டும். பிற பொருள்களைத் துண்டிப்பதற்கும் துளைப்பதற்கும், மற்றும் சம்மட்டிகளாகவும்

இக் கருவிகளை ஆதிக்குடிகள் உபயோகித்திருக்கக்கூடும். இத்தகைய கற்கருவிகள், இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான கருவிகள் குவார்ட்

குவார்ட்ஸைட் கல்லினாலான
பழுப்புநிற நேர்முனையுள்ள கற்கருவி
(செங்கற்பட்டு மாவட்டம்—சென்னை மாநிலம்)



வழுவழுப்பான கூர் உருளை
வடிவான தொளையிடப்
பட்ட கற்கருவி
(பந்தா மாவட்டம்-
ஆக்ரா மாவட்டம் (உ. பி.)



வழுவழுப்பான தோல் அமைப்புக்
கொண்ட-வாய்ச்சி விளிம்பு உடைய
பழுப்பு நிறச் சிலேட்டுக் கற்கருவி
(கங்கைச் சமவெளியைச்
சார்ந்தது)

ஸைட் (Quartzite) என்னும் ஒருவகைக் கல்லால் ஆனவை. இது காரணமாகப் பழங்கற்கால மனிதரைக் குவார்ட்ஸைட் மக்கள் (Quartzite men) என்றும் குறிப்பதுண்டு.

ஆதிக்குடிகளின் வரலாற்றைத் தொகுப்பதற்குக் கற்கருவி களைத் தவிரப் பிற சான்றுகளில்லை. இக் கருவிகளை மட்டிலும் ஆராய்ந்து அவர்தம் வரலாற்றைத் தொகுப்பதும் கடினம். உலோகங்களைப் பற்றிய அறிவு அவர்களுக்கில்லை எனத் துணிந்து கூறலாம். நாடோடிகளாகவே அவர்கள் வாழ்ந்து இருக்க வேண்டும். சிற்சிலர், இலைகளையும் சிறு குச்சிகளையும் உபயோகித்துக் குடிசைகளமைத்து வாழ்ந்திருக்கக் கூடும். சிங்கம், புலி, காண்டாமிருகம், யானை போன்ற வன விலங்குகள் அவர்களை மிகவும் அச்சுறுத்தியிருக்க வேண்டும். பயிர் செய்து தானியம் விளைவிக்கும் ஆற்றல் அவர்களுக்கில்லை; மாமிசம் மற்றும் கனி கிழங்குகளை உணவாகக் கொண்டிருந்தனர். அவர்கள் பாண்டங்கள் செய்யும் வகையறியார். நெருப்பின் உபயோகமும், தீ மூட்டும் முறையும் அவர்தம் அறிவிற்கு அப்பாற்பட்டவையாய் இருந்தன. பொதுவாக, வன விலங்கு களாய் (Savages) அவர்கள் வாழ்ந்து வந்தார்கள் எனக் கூறலாம். எனினும், அவர்தம் வாழ்க்கைமுறை கவனித்தற் குரியது. மேம்பட்டு, இறுமாப்புடன் சீரிய வாழ்க்கை நடத்தி வரும் மனிதகுலத்தின் இன்றைய நிலையையும், தொடக்கத்தி லிருந்த அநாகரிக வாழ்க்கையையும் ஒப்பிடுவதன் பயனாக மனித குலத்தின் மாபெருஞ் சாதனைகளை எண்ணி நாம் வியப் பெய்துகிறோம்.

இந்தியப் பழங்கற்கால மனிதன், நீக்ரிட்டோ இனத்தைச் (Negrito race) சார்ந்தவன். இன்றைய அந்தமான் வாசிகளை அவனது மரபினராகக் கருதுவதுண்டு. கறுத்த மேனியும், அடர்த்தியான உரோமமும், தட்டை மூக்குமுடைய அவர்கள் குள்ளமான தோற்றமுடையவர்கள்.

## புதிய கற்கால மனிதர்
## (Neolithic Men)

வாழ்வில் வெற்றி கண்டு முன்னேறும் ஆற்றல் மனித குலத்தின் தனிச் சிறப்பு. விலங்கினங்களுக்கு அவ்வாற்றல் இல்லை. இயற்கைச் சக்திகளின் வலிமையறிந்து, காலப் போக்கில் அவைகளை வயப்படுத்தி மனிதகுலம் வெற்றி கண்டிருக்கிறது. வெற்றியின் அளவையும் வேகத்தையும் அளவிட்டு நிர்ணயிக்க இயலாதெனினும் பல்லாயிரமாண்டு களாக வருந்தி உழைத்து, மனிதன் முன்னேறி வருவது மட்டிலும் உண்மை. இம் முயற்சியின் இரண்டாவது நிலையைப் புதிய கற்காலம் (Neolithic Age) எனக் குறிப்போம். இதுவும்

கிரேக்க மொழி மரபையொட்டிய சொற்றொடரேயாகும். இக்கால மனிதனும், கற்கருவிகளையே உபயோகித்தான். தங்கம் நீங்கலாகப் பிற உலோகங்களை அவனறியான். 'குவார்ட்ஸைட்' கற்கருவிகளைப் போலன்றிப் புதிய கற்காலக் கருவிகள், மெருகிடப்பட்டுப் பளபளப்பாகவும், தேவைக்கேற்ற உருவ முடையனவாகவும் (Ground, grooved and polished) காணப் படுகின்றன. கருவிகள் பலவகையானவை. அருமையான கற்கருவிகள், புதிய கற்கால மனிதனின் கைத்திறனுக்குச் சான்று பகர்கின்றன. இக் கருவிகளை அவன் நன்கு பயன் படுத்தியிருக்க வேண்டும். பழங்கற்காலக் கருவிகளைக் காட்டிலும் சிறந்து விளங்கும் இவைகளை, நாம் எளிதில் கண்டு கொள்ளலாம்.

புதிய கற்கால வரலாற்றுச் சான்றுகள் இந்நாட்டின் பல பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பல்லாரி மாவட்டத் திலும் சென்னையிலும் கருவி உற்பத்திக்கென ஆலைகள் இருந் திருக்கக் கூடும். ஆலை நிறுவன வேலையின் பல நிலைகளையும் விளக்குகின்ற சான்றுகள் உண்டு.

பல துறைகளிலும் புதிய கற்கால மனிதன் மேம்பட்டு விளங்குவது கண்கூடு. தானியம், கனி வர்க்கம் இவைகளின் உற்பத்தி பெருகியது. எருது, ஆடு போன்ற கால்நடைகளை உழவிற்கும் பிற வேலைகளுக்கும் பயன்படுத்தினர். மூங்கில், மற்றும் துண்டுக் கட்டைகளின் உதவியுடன் தீ மூட்டவும், மட்பாண்டங்கள் செய்யவும் கற்றுத் தேர்ந்தனர். மட் பாண்டங்கள் தயாரிப்பதற்கெனச் சக்கரமொன்றையும் கண்டு கொண்டனர். வசித்து வந்த குகைச் சுவர்களை அழகான சித் திரங்கள் தீட்டி அலங்கரித்தனர். வேட்டையாடுதல், நடனக் காட்சிகள் ஆகியவற்றை அழகாகச் சித்திரித்துள்ளனர். இச் சித்திரங்களை வடஇந்திய தென்னிந்தியப் பகுதிகளில் இன்றும் காணலாம். மட்பாண்டங்களுக்கு வர்ணம் தீட்டி அலங் கரிப்பதும் வழக்கிலிருந்தது. கடற்பிரயாணம் மரக்கலங்களின் உதவி கொண்டு நடைபெற்றது. பருத்தி, கம்பளி நூற்கவும், ஆடைகள் நெய்யவும் விரைவில் கற்றுணர்ந்தனர். இறந்த வரைப் புதைக்கும் வழக்கமிருந்தது. புதிய கற்காலக் கல்லறைகள் இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் காணக்கிடைக் கின்றன. பிணங்களை மட்பாண்டங்களில் (urns) இட்டுப் பூமியில் புதைத்தனர். இத்தகைய மட்பாண்டங்கள் (urns) இந் நாட்டின் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. டால்மென்ஸ் (Dolmens) எனப் பெயர்பெறும் இக் கல்லறைகளின் கூரைகளும்

தூண்களும் கற்களால் ஆனவை. வட்ட வடிவமான மூன்று அல்லது அவற்றிற்கு மேற்பட்ட கற்றூண்கள், கனமான மற்று மொரு கல்லைக் கூரையாகக் கொண்டு கல்லறைகளாயமை கின்றன. இவற்றைப் போன்ற புதிய கற்காலக் கல்லறைகள் உலகின் பல பகுதிகளிலும் உண்டு.

பழைய புதிய கற்காலச் சகாத்தங்களை, வரலாற்றிற்கு முற்பட்ட காலமெனக் கருதுகிறோம். அக்காலத்துச் செய்தியறி வதற்குக் கற்கருவிகளையும், குகைச் சித்திரங்களையும் தவிர வேறு சான்றுகளில்லை. புதிய, பழைய கற்கால மனிதரிடை யுள்ள தொடர்பை ஆராய்ந்து முடிவு கூறுவதும் கடினம். புதிய கற்காலத்தவரைப் பழங்கற்காலத்தவரின் சந்ததியார்கள் எனக் கருதவும் கூடும். அறுதியிட்டுக் கூற வகையில்லை. இவ் விரு காலங்களுக்கிடையே சுமார் இரு நூற்றாண்டு இடைவெளி இருந்திருக்க வேண்டுமென்று அறிஞர் பலர் கருதுவர். ஆயிரம் ஆண்டுகள் இடைவெளி உண்டு எனக் கூறுவோரும் உண்டு. கைவசமுள்ள சான்றுகள் மிகக் குறைவாயிருப்பதால், போதிய சான்றுகள் அகப்படும்வரை, செய்திகளை ஓரளவு கற்பனை செய்தே தீரவேண்டும். மதியூகங்களையும் கற்பனைகளையும் நம்பியிருக்கும் நிலையை மாற்றி, ஒளிவீசச் செய்வது மானிட நூல் ஆராய்ச்சியாளரின் (Anthropologists) கடமை.

## உலோக காலம்
## (Age of Metals)

மனித குலப் பண்பாட்டு வளர்ச்சியில் அடுத்துக் காணப் படுவது 'உலோக காலம்.' இக் காலத்து மக்கள் உலோகங்களை உபயோகித்தனர். இவர்களைப் புதிய கற்காலத்தவரின் சந்ததி யாராகக் கொள்வதில் கருத்து வேற்றுமைகள் குறைவாய் உள்ளன. சிறுகச்சிறுக, உலோக உபயோகம் ஏற்பட்டிருக்க வேண்டும் என எண்ணுவதற்கு ஆதாரங்களுண்டு: (1) உலோ கங்களுடன் கற்கருவிகளையும் அவன் உபயோகித்தான். (2) உலோகக் கற்கருவிகளிடையே காணப்படும் உருவ ஒற்றுமை.

நாட்டுப்பகுதி ஒவ்வொன்றிலும் வெவ்வேறு உலோகம் உபயோகத்திலிருந்தது. வடஇந்தியப் பகுதிகளில் தாமிர உபயோகம் மிகுதி எனக் கருதலாகும். கண்டெடுக்கப்பட்டுள்ள தாமிரத்தாலாகிய ஆயுதங்களும் பிற கருவிகளும் இதற்குச் சான்று. கோடரி, வாள், ஈட்டிமுனை போன்ற பல ஆயுதங் களைக் கண்டெடுத்துள்ளனர். இரும்பு உபயோகம் நெடுநாள்

களுக்குப்பின் தொடங்கியிருக்க வேண்டும். இவ் வடிப் படையில் வடஇந்திய 'உலோக காலத்'தைத் தாமிரக் காலம், இரும்புக்காலம் என இரு கூறுகளாகப் பிரிக்க வகையுண்டு. தென்னிந்தியாவில் இரும்பு உபயோகம் மிகுதியென்பது தெரிய வருகிறது. கற்கலையடுத்து இரும்பு உபயோகம் தொடங்கி யிருக்க வேண்டும். வடஇந்தியாவைப் போன்று தாமிரக் கால இடைவெளி இங்கில்லை. ஒன்பது பங்கு தாமிரமும், ஒரு பங்கு தகரமும் கொண்ட கலவை வெண்கலம் (Bronze) எனப்படும். தாமிரத்தையடுத்து வெண்கல உபயோகம் காணப்படுகிறது. தாமிரத்தைக் காட்டிலும் உறுதியான வெண்கலம் பல வகையான ஆயுதங்களைத் தயாரிப்பதற்குப் பயனுள்ள தாயிற்று. ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில், புதியகற்காலத்தை யடுத்து வெண்கல யுகம் தொடர்ந்திருக்க வேண்டும். மேனாடு களில் அக்காலங்களில் தாமிரம் ஒன்றே உபயோகத்திலிருந்தது என்பதும் தெரியவருகிறது, இந்தியாவில் வெண்கலத்துடன் தாமிர உபயோகமும் இருந்தது என்பது கவனித்தற்குரியது. இந்திய நாட்டில், தனித்ததொரு 'வெண்கல யுகம்' இல்லை யெனக் கூறலாம்.

தாமிர, வெண்கலங்களுக்குப் பின் தெளிவான வரலாற்றுச் சான்றுகள் கிட்டுகின்றன. செய்திகளைத் திட்டமாக அறிந்து கூறவும் வழியுண்டு. இந்திய வரலாற்றுத் தொகுப்பில் முதலிடம் பெறும் ரிக்வேத காலத்தில் (Rigvedic period) தாமிரம், வெண்கலம், இரும்பு போன்ற உலோகங்களில் எந்த உலோகம் மிகவும் வழக்கிலிருந்ததென்பதைத் திட்டமாகக் கூற இயலாது. இரும்பின் உபயோகமே மிகுந்திருந்ததென அறிஞர் சிலர் கருதுவர். ரிக்வேத காலநிலை இவ்வாறிருக்க, தாமிர உபயோகம் மிகுந்திருந்த சிந்துச் சமவெளியில் விளைந்த நாகரிகம், இந்திய வரலாற்றில் சிறப்பு வாய்ந்தது. உயரிய சிந்துவெளிப் பண்பாடு, நாளடைவில் சுற்றுப்புறங்களிலும் பரவிற்று. 'சிந்து நாகரிகத்தை' விரிவாக ஆய்தல் வேண்டும். அவ்வாராய்ச்சியைத் தொடங்குமுன் இந்நாட்டு மக்களினங் களைப் பற்றிய விவரங்களைக் கூறுவோம்.

## மக்களினங்கள்
## (Races)

மொழி, உடற்கூறு ஆகியவற்றைத் துணையாகக்கொண்டு மக்களை நான்கு வகைகளாகப் பிரித்துக் கூறலாம். அவை யாவன : (1) பெரும்பாலாரான உயர் வகுப்பு (சாதி) இந்துக்

கள். காந்தியையுடைய தோலும் நீண்ட மூக்கும் படைத்த இவர்கள் உயரமாயிருப்பார்கள் ; வடமொழி மரபையொட்டிய மொழி பேசுவர். இவர்களுக்கு 'ஆரியர்' அல்லது 'இந்திய ஆரியர்' (Aryans or Indo-Aryans) என்பது பெயர். (2) தென்னிந்தியத் தீபகற்பத்தில் வாழும் மற்றுமோர் இனத்தவர் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளைப் பேசுபவர்கள். இவர்கள் இந்திய ஆரியரைப் போலன்றி, நிறத்தாலும் தோற்றத்தாலும் வேறுபட்டவர்கள். இவர்கள் பேசிவரும் மொழிகளைத் 'திராவிட மொழிகள்' என்னும் காரணப் பெயரிட்டு வழங்குகிறோம். திராவிட மொழி பேசிவரும் மக்களைத் திராவிடர் என்றும் குறிக்கிறோம். (3) காடு மலைகளில் வசித்து வரும் மற்றுமோர் இனத்தவர் குள்ளமாயும் கறுத்த நிறமுடையவர்களாயும், சப்பை மூக்கினர்களாயும் காணப்படுவர். நிறத்திலும், அங்க அமைப்பிலும் ஆரியருக்கு நேர் மாறான இவர்கள், நூதனமான மொழி பேசி வருகின்றனர். கோலர், பில்கள், முண்டர் (Kols, Bhils, Mundas) ஆகிய மலைவாசிகள் இவ்வினத்தைச் சார்ந்தவராவர். (4) சப்பை மூக்கும், தட்டை முகமும், மஞ்சள் நிறமும், வழுவழுப்பான உரோமமற்ற முகமும், எடுப்பான தாடைகளும் கொண்ட மற்றுமோர் இனத்தினரும் உண்டு. மங்கோலியரைப் போன்ற அங்க அடையாளமுள்ள இவர்களை, இமயமலைச் சரிவுகளிலும், அஸ்ஸாம் மலைப்பகுதிகளிலும் காணலாம். கூர்க்கர், புத்தியர், காசிகள் (Gurkhas, Bhutiyas aud Khasis) ஆகியோர் இவ்வினத்தைச் சார்ந்தவர்கள்.

இறுதியாகக் கூறப்பட்ட ஈரினத்தினர்களையும், புதிய கற்காலத்தவரின் சந்ததிகளாகக் கொள்ளலாம். புதிய கற்கால மனிதரைப் பற்றிய செய்திகளை முன்னர்க் குறித்தோம். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் இவர்தம் வாழ்க்கை முறைகளில் பெருமாறுதல் எதுவும் காணப்படவில்லை.

ஆதிக்குடிகள், நாடு முழுவதும் பரவியிருந்தனர் என்பதில் ஐயமில்லை. காலப்போக்கில் ஆற்றல் மிக்க திராவிடர்களுக்கு இவர்கள் அடிபணிய நேர்ந்தது. இவர்கள் வாழ்ந்துவந்த பகுதிகள் திராவிடர் வசமாயின. இதைப் போலச் சிறிது காலத்திற்குப் பின் ஆரியர் ஆதிக்கம் பெருகி வளர்ந்தது. நாட்டின் பெரும்பகுதியை ஆரியர் வசப்படுத்தினர். இவ்வாறு ஆதிக்குடிகளுக்கும் புதியவராகக் குடியேறுபவர்களுக்குமிடையே நிகழ்ந்த போர்களின் விளைவுகள் வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சிகளாயின. போரில் பலர் மடிந்தனர்; மற்றும் பலர் அடிமைகளாயினர். வெற்றி கண்டோரின் சமுதாய அமைப்பில்

அடிமைகள் கடைநிலை எய்தினர். தப்பியோடிய சிலர், காடுகளிலும், கோட்டை கொத்தளங்கள் போன்ற மறைவிடங்களிலும் வசிக்கத் தொடங்கினர். இவர்களிடையே இன்றும் ஆதிக்குடிகளின் பழக்கவழக்கங்கள் காணப்படுகின்றன. முன்னோரது வாழ்க்கை முறைகளை நினைவுறுத்தும் வகையில் இன்றும் இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்திய ஆதிக்குடிகளுக்கும், இந்தோ-சீனா, மலாய்த்தீவு, இந்திய ஆர்ச்சிபிலாகோ முதலிய பகுதிகளில் வசித்துவந்த மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பிருந்திருக்க வேண்டுமென மொழி ஆராய்ச்சி வாயிலாக அறிகிறோம். முண்டர், காசிகள் (Mundas, Khasis) போன்ற ஆதிவாசிகளின் மொழி, இந்தோ-சீன இந்தோனீசிய மொழிகளைப் போன்று 'ஆஸ்டிரிக்' (Austric) வகையைச் சார்ந்ததென 'சிமிட்' (Schmidt) என்னும் மொழி ஆராய்ச்சியாளர் கூறுவர். எனவே, இந்தியாவில் குடியேறிய ஆதி மனிதர், இந்தோ-சீனத் தீபகற்பத்தைக் கடந்து, தெற்கு முகமாகவும், தென்கிழக்கு முகமாகவும் சென்று, பசிபிக்குக் கடலிலுள்ள பல தீவுகளையும் கடந்து, ஆசியாவின் கீழ் முனையைச் சென்றடைந்திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. 'சிமிடின்' (Schmidt) கருத்திற்கிணங்க, மற்றொரு சாரார், இந்திய நாட்டிலிருந்து வெளிப்பட்டுத் தென்முகமாகச் சென்று, பசிபிக்கு மகா சமுத்திரத்தின் மேற்கெல்லையைத் தொட்டு 'நியூ கினி' (New Guinea) வழியாக ஆஸ்திரேலியக் கண்டத்தை அடைந்திருக்க வேண்டும்.

தென்கிழக்கு ஆசிய வரலாற்றில் இந்தியக் கற்கால மனிதருக்குச் சிறந்த முதலிடம் அளிக்கப்படவேண்டுமென்பது 'சிமிடின்' கருத்து. அறிஞர் பலர் 'சிமிடின்' கருத்தைப் பயனற்றதெனத் தகுந்த மேற்கோள்களுடன் உணர்த்துகின்றனர். எனவே, அவர் கருத்தை முற்றிலும் ஏற்பதற்கில்லை.

## சிந்து சமவெளி நாகரிகம்
## (The Indus—Valley Civilisation)

சிந்து மாகாணத்தின் 'லார்க்கானா' (Larkana) மாவட்டத்திலுள்ள 'மொகஞ்சதாரோ'விலும், பஞ்சாபு மாகாணத்தின் மான்ட்கோமரி மாவட்டத்திலுள்ள 'ஹரப்பா' என்னுமிடத்திலும் அண்மையில், தொல்பொருள் ஆராய்ச்சியாளரால் தொல்

பொருள்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிந்து, பலுச்சிஸ்தானப் பகுதிகளிலும், இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ் வாராய்ச்சிகள், சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, பண்பட்டதொரு மனிதரினம் இப் பகுதிகளில் வாழ்ந்திருக்கவேண்டுமென உணர்த்துகின்றன. எகிப்து, அசிரியா, பாபிலோனிய நாடுகளைப் போன்று, இந்திய நாகரிகம் மிகப் பழமையானது எனத் தொல்பொருள் ஆராய்ச்சியாளரின் முயற்சிகள் அறிவித்தன. நைல், டைகிரிஸ் நதிப்பள்ளத்தாக்குகளில் தோன்றி வளர்ந்த நாகரிகங்களைப்போன்று, சம வயதுடைய நாகரிகமொன்று, சிந்து நதிப்பள்ளத்தாக்கிலும் வளர்ந்தோங்கியிருந்ததென்பது தெளிவாயிற்று. பழம்பெரு நாகரிகங்களைக் கொண்டதாய் வரலாற்றில் சிறப்பெய்திய நாட்டுப்பட்டியலில், இந்திய நாடும் இடம் பெற்றது. காலவரன்முறையில், வரலாற்று அறிவிற்கு எட்டியவரை தொன்மையானது எனக் கருதப்படும் நாகரிகங்களில், சிந்து சமவெளி நாகரிகமும் ஒன்று.

எனினும், இந் நாகரிகத்தின் சிறப்பை அறிவிக்கவல்ல இலக்கியச் சான்றுகளோ, பிற எழுத்துமூலமான ஆதாரங்களோ இல்லையென்பது வருந்தத்தக்கது. பிற நாடுகளில் இக் குறையில்லை. இலச்சினைகள் (Seals) பல சிந்து வெளியில் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. இவ் விலச்சினைகளில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகளைக் கண்டறியும் வாய்ப்பில்லை. சிந்து வெளியின் அரசியல் வரலாற்றையும் பண்பாடுகளையும் தெளிவாக அறிய இயலாது. ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் கிடைத்துள்ள சான்றுகளைக் கவனமாகப் பரிசீலனை செய்து, சிந்து வெளி வரலாற்றை ஓரளவு தொகுத்துக்கூற இயலும்.

சிந்து நதியின் மூலப்பகுதிக்கும், மேற்கு நாராக் கால்வாய்க்கும் (Western Nara Canal) இடையே குறுகலான நிலப்பகுதி ஒன்றுண்டு. இச் சமவெளிப் பிரதேசத்தின் சற்று உயரமான பகுதியொன்றில் மொகஞ்சதாரோ அமைந்துள்ளது. இவ்வுயரமான பகுதியை இடுகாட்டு மேடு (Mound of the Dead) என அப் பகுதிவாழ் மக்கள் வழங்குவதுண்டு. இதைச் சுற்றிலுமுள்ள வளமிக்க நிலப்பகுதிக்கு 'நாக்லிஸ்தானம்' அல்லது 'சிந்து மாகாணப் பூங்கா' (Nakhli-sthan or Sind) என்ற பெயர்களுண்டு. ஐயாயிரமாண்டுகளுக்கு முன்னரே, அழகியதொரு நகரம் இங்குத் தோன்றியது. சிந்து நதியின் வெள்ளப் பெருக்கிற்குக் குறைந்தது ஏழு முறைகளாவது இந் நகரம் இலக்காகியிருக்க வேண்டும். தண்ணீர் வடிந்ததும் மீண்டும் இந் நகரம்

புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். சிதைந்த நகரை வெள்ளம் வடிந்தபின் இடைவெளியின்றிப் புதுப்பித்தனர் என்றும் கூற இயலாது. புனர் நிருமாண வேலை சிறிது காலம் தடைப்பட்டு மீண்டும் நடைபெற்றிருக்கவும் கூடும். அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்கால், நகரெழுப்பியவர்கள் இன்னல்களுக்கிலக்காகி, சோர்வடைந்து, புனர் நிருமாண முயற்சியைக் கைவிட்டு, பிற இடங்களுக்குக் குடி பெயர்ந்திருக்க வேண்டும்.

இப்போது பொலிவிழந்து நிற்கும் அந் நகரின் பண்டை வரலாற்றையும், அந் நகரில் வாழும் வாய்ப்புப்பெற்றிருந்த மக்களின் பண்பாட்டையும் அறிய முற்படுவோம்.

## நகர்
## (City)

வசிப்பதற்கேற்ற நகரம், மக்கள் மனைகளைக் கொண்ட பரந்த நகரமாய் விளங்கியது. மனைகள் பலதரப்பட்டவையாய் இருந்தன. சிறு மனைகளில் இரண்டே அறைகள் காணப்படுகின்றன. முகப்பில் எண்பத்தைந்து அடி நீளமுள்ள காலியிடமும், தொண்ணூற்றேழு அடிப் பரப்புமுள்ள மாளிகைகள் சில, நான்கு அல்லது ஐந்தடிக் கனமுள்ள எல்லைச் சுவர்களுடையவை. இவை நன்கு சுடப்பட்ட உயர்ந்த வகைச் செங்கற்களாலானவை. இருபதேகால் அங்குல நீளமும், பத்தரை அங்குல அகலமும், மூன்றரை அங்குலக் கனமும் கொண்ட பெருஞ்செங்கற்களையும் இம்மனைக்குப் பயன்படுத்தியுள்ளார்கள். பெருமனைகள், இரண்டு அல்லது மேற்பட்ட மாடி அடுக்குகளை உடையனவயாகக் காணப்படுகின்றன. நன்கு அமைந்த சமதளங்களையும், நிலாமுற்றங்களையும், கதவுகளையும், குறுகலான மச்சுப்படிகளையும் இம் மனைகளில் காணலாம். ஒவ்வொரு வீட்டிலும் கிணறும், வடிகால்களும், குளிக்கும் அறையும் இருந்தனவென்பது கவனித்தற்குரியது.

இவை நீங்கலாக, அரண்மனை போன்ற பெரிய கட்டடங்கள் சில இருந்தன. விசாலமான இவைகளைத் திட்டமிட்டுக் கட்டியிருக்க வேண்டும். சிலவற்றில் தூண்களும் பலம் பொருந்திய எண்பது அடிச் சதுர அளவுள்ள விசாலமான கூடங்களும் உண்டு. இக் கட்டடங்களின் உபயோகத்தைப்பற்றிய தெளிவான கருத்துகளில்லை. நகரசபைக் கூட்ட மன்றங்களாகவோ, அல்லது வசிப்பதற்கேற்ற அரண்மனைகளாகவோ, இவைகளை உபயோகித்திருக்கலாம்.

காண்போர் கருத்தைக்கவரும் ஒரு கட்டடம் (The Great Bath) நகரத்தின் தனிச்சிறப்பாய் விளங்கும். நாற்கோண வடிவமுள்ள நீர்த்தேக்கமொன்று அக்கட்டடத்தின் நடுவில் அமைந்துள்ளது. நாற்புறங்களிலும் அறைகளும், அடுக்கடுக்கான மேல் தட்டுகளும் உண்டு. முப்பத்தொன்பதடி நீளமும், இருபத்து மூன்றடி அகலமும், எட்டடி ஆழமும் உடைய 'நீச்சுக் குளம்' ஒன்று (Swimming enclosure) நடுவில் காணப்படுகிறது.



மொகஞ்சதாரோ– செயற்கைத் தடாகம்

இதன் இரு மருங்கிலும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. அருகிலுள்ள அறையொன்றிலிருந்து கிணற்றுநீரால் நீச்சுக்குளம் நிரப்பப்படும். ஆறடிக்கு மேலான உயரமுடைய கூரையோடு கூடிய வடிகாலின் மூலம் கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது. 'கிரேட் பாத்' என்னும் கட்டடம் நூற்றெண்பது அடி நீளமும், நூற்றெட்டடி அகலமும் உடையது. இதன் வெளிப்புறச் சுவர்கள் எட்டடிக் கனமுள்ளவை. ஐயாயிரமாண்டுகளுக்குப் பின்னரும் பொலிவுடன் விளங்குவதால் இக்கட்டடம் மிக உறுதியாக அமைக்கப்பட்டிருக்கிறதென்பதை அறியலாம்.

அதிக வளைவுகளின்றி அமைந்துள்ள வீதிகள் விசாலமானவை. கழிவுப்பொருள்களை அப்புறப்படுத்துவதற்கான வடிகால்களும், திடப்பொருள்களைத் தேக்குவதற்கான குழிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுவாகக் கூறுமிடத்து, இந்நகரமாந்தர், சுகாதார வசதிகளையும் பிற வாழ்க்கை வசதிகளையும் பெற்று, மனநிறைவுடன் போக வாழ்க்கை நடத்தியிருக்க வேண்டுமென்பது திண்ணம். வாழ்க்கை வசதிகள் நிரம்பிய இதுபோன்ற நகர

மொன்றைப் பண்டைய உலகில் காண்பதருமை. சிலைதவுகளைக் காணும்போது மக்கள்தொகை மிக்க அழகிய நகரமொன்று இருந்திருக்கவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி நிற்கும்.



மொகஞ்சதாரோ-சுண்ணும்புக் கற்சிலை

கட்டுப்பாடான நகராட்சியும் நடைபெற்றிருக்க வேண்டும். கட்டடக் கலையின் உச்சியை இந்நகர மன்றத்தார் எட்டியிருந்தனர் எனக் கூறுவதும் பொருந்தும்.

## நகரமாந்தர்

(People)

பாழடைந்த மொகஞ்சதாரோ, அங்கு நல்வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த மக்களைப்பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றது; இந்தியாவின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் முதன்முதல்

நாம் அறிந்துகொள்ளும்படி செய்கிறது. பண்புமிக்க நம் முன்னோரின் சமூகப் பொருளாதாரச் சமய நிலைகளையும், முறையே



மொகஞ்சதாரோ—அணிகலன்கள்

பல கூறுகளாகப் பிரித்து, பொருத்தமுள்ள தலைப்புகளில் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

## உணவு
(Food)

சோதுமை, முக்கிய உணவுப்பொருள். பார்லி, பேரீச்சை ஆகியவைகளை உபயோகித்திருக்கலாம். ஊன், பன்றி இறைச்சி, மீன், முட்டைகள் ஆகியவைகளையும் உணவாகக் கொண்டிருந்தனர்.

## உடைகளும் அணிகளும்
(Dresses and Ornaments)

மக்கள் பருத்தி ஆடைகளையும், குளிர்காலங்களில் கம்பளி உடைகளையும் அணிந்து வாழ்ந்தனர். ஆடவர், பெண்டிர் ஆகிய இருபாலாரும் ஆபரணங்கள் அணிவதுண்டு. கழுத்தணிகள், மூக்குத்திகள், வங்கி, மோதிரங்கள், வளைகள் போன்ற அணிகளை இருபாலாரும் உபயோகித்து வந்தனர். ஒட்டியாணங்கள் (Girdles), புல்லாக்குகள் (nose-studs), காதணிகள் (ear-rings), காலணிகள் (anklets) போன்ற

ஆபரணங்களை மாதர்கள் விரும்பி அணிந்தனர். அணிகள் சில கவர்ச்சிமிக்கவையாய்க் காணப்படுகின்றன. தங்கம், வெள்ளி, தாமிரம் ஆகிய உலோகங்களினாலும் தந்தத்தினாலுமாகிய இவ்வணிகள் சிலவற்றில், வைடூரியம், பவழம், மாணிக்கம், முத்துப் போன்ற செயற்கை, இயற்கை இரத்தினங்கள் பதிக்கப்பட்டிருந்தன.

## வீட்டுமுட்டுச் சாமான்கள்
(Household articles)

பல வகையான மட்பாண்டங்கள் காணப்படுகின்றன. சக்கரத்தின் உதவியால் இவைகளைச் சமைத்துச் சில பாண்டங்களுக்கு வர்ணமும் பூசியுள்ளனர். தாமிர, வெண்கல, வெள்ளி, பீங்கான் பாண்டங்கள் வழக்கிலிருந்தன. பாண்டங்களின் உபயோகம் மிகக் குறைவாகவே இருந்திருக்குமெனத் தென்படுகிறது. இரும்பினாலான பொருள் மருந்திற்குமில்லை என்பது மட்டிலும் நினைவிருக்க வேண்டும். இம் மக்களுக்கு இரும்பைப் பற்றிய அறிவு இல்லை.

சுட்ட களிமண், பீங்கான், சிப்பிகளாலான கதிர்களும், நூற்ற நூலைச் சுற்றி வைப்பதற்கான சிறு கட்டைகளும் (Spindle whorls) கிடைத்துள்ளன. எலும்பு, தந்த ஊசிகளும், சீப்புகளும், தாமிர வெண்கலக் கோடரிகள், அரிவாள் முதலியவைகளும், கன வடிவமான (cubes) பட்டைக் கற்கள் சிலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக் கற்கள் நிறுத்தலளவைகளாகப் பயன்பட்டிருக்கக்கூடும். நாற்காலிகள், உருளிகள் (wheeled carts) போன்ற அன்றாட உபயோகத்திற்கான சாதனங்களுடன், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்களும் காணப்படுகின்றன. வாழ்க்கையில் இவைகளை மிகவும் பயன்படுத்தியிருக்க வேண்டும். சொக்கட்டான் ஆடுவதற்கான பகடைகள் (dice pieces) சில கிடைத்துள்ளன. இவ் விளையாட்டு, சிறந்ததொரு பொழுது போக்காய் விளங்கியிருக்கலாம்.

## பழக்கப்படுத்தப்பட்ட பிராணிகள்
(Domesticated animals)

திமில் பருத்த மாடுகள், எருமை, ஆடு, யானை, ஒட்டகம் முதலிய விலங்குகளின் எலும்புக்கூடுகள் கிடைக்கின்றன. மக்கள், இவ்விலங்குகளை வயப்படுத்தி உபயோகித்திருக்க வேண்டும். குதிரையின் உபயோகத்தைப்பற்றித் தெளிவாக ஏதும் கூறுவதற்கில்லை. சிறுவரின் விளையாட்டுப் பொருள்களில், நாயுருவம் பொறிக்கப்பட்டுள்ளது. நாய்களையும் பாசத்துடன் இவர்கள் வளர்த்திருக்கலாம்.

## போர்க்கருவிகள்
(Weapons of war)

கோடரிகள், ஈட்டிகள், பிச்சுவாக்கள், கதை, கவண் போன்ற போர்க்கருவிகள் மிகுதியாகவும், வில்லும் அம்புகளும் சற்றுக் குறைவாகவும் கிடைத்துள்ளன. வாள்கள் (Swords) இல்லையென்பது கவனித்தற்குரியது. கேடயங்களும், தலையிலணிவதற்குரிய கவசங்களும் ஏனைய தற்காப்புக் கருவிகளும் இல்லையென்பது வியத்தற்குரிய செய்தியாகும். வெண்கலம், தாமிரம் ஆகிய உலோகங்களாலான படைக்கலங்கள், எதிரிகளைத் தாக்குவதற்கானவை. கற்கருவிகளும் அரிதாகக் காணப்படுகின்றன.

## இலச்சினைகள்
(Seals)

களிமண்ணும் மணலும் சேர்ந்த கலவையாலான ஐந்நூற்றுக்குச் சற்று அதிகமான சிறிய இலச்சினைகள் கிடைத்துள்ளன. வனவிலங்குகளின் உருவங்கள் இவ் விலச்சினைகளில் காணப்படுகின்றன. புராணச் செய்திகளைக் கற்பனை செய்தும் இலச்சினைகளில் பொறித்திருக்கின்றனர். இலச்சினைகள் சிலவற்றில் சித்திர எழுத்துக் குறிப்புகள் காணப்படுகின்றன. குறிப்புகளைப் படித்து உணரும் வாய்ப்பு இல்லை.

## நுண்கலைகள்
(Fine Arts)

அழகுமிக்க விலங்குச் சித்திரங்கள் அருமையானவை. ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள சில கற்சிலைகள் அழகில் கிரேக்கச் சிலைகளையொத்தவை. சிற்பக்கலையில் சிந்து வெளி மக்களுக்குள்ள திறமையைச் சிற்பங்கள் நன்கு விளக்குகின்றன.

## வர்த்தகமும் வாணிகமும்
(Trade and Commerce)

இலச்சினைகளை நாணயங்களாகவும் உபயோகித்திருக்கலாம். இலச்சினைகளின் உபயோகத்தினால் வாணிகம் பெருகியிருக்கவேண்டும். இந்திய நாட்டின் பிற பகுதிகளோடும், ஆசியாவின் பல பகுதிகளோடும், சிந்து சமவெளி மக்கள் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். தகரம், தாமிரம், விலையுயர்ந்த இரத்தினங்கள் ஆகியவற்றைப் பிற நாடுகளிலிருந்து பெற்றனரென்பது தெரியவருகிறது.

## கலைகளும் தொழில்களும்
(Arts and Crafts)

சிந்து வெளியினரின் கலைத்திறனையும் தொழில் திறமையையும் சிறிதளவு முன்னர்க் குறித்தோம். எளிய மக்கள் உழவுத்தொழிலை மேற்கொண்டிருந்தனர். நிலத்தை உழுது பயிரிட்டுக் கோதுமை, பார்லி, பருத்தி, மற்றும் பல பொருள்களையும் ஏராளமாக உற்பத்தி செய்தனர்; குயவர், நெசவாளர், தச்சர், கொத்தர், கொல்லர், பொற்கொல்லர், அணிகள் செய்வோர், தந்த வேலை நிபுணர், கல்லுடைப்பவர் போன்ற தொழிலாளர்களும் மிகுந்திருந்தார்கள்.

மட்பாண்டங்களை உருவாக்குவதற்கெனச் சக்கரங்கள், களிமண் செங்கற்களைச் சூளையிடுதல், உலோக வார்ப்பு, மற்றும் கடினமான பொருள்களைத் துளையிடுதல் போன்ற தொழில் நுணுக்கங்களில் மாந்தர் மேம்பட்டு விளங்கினர் என்பது தெரிகிறது. சிற்பங்கள், சித்திரங்கள், இலச்சினைகள், அணிகள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்யும்போது இம் மக்களின் அழகுணர்ச்சி வெளியாகிறது.

## சமயம்
(Religion)

மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் அங்கு வாழ்ந்த மக்களின் சமயக் கோட்பாடுகளையும் தெரிவிக்கின்றன. 'சத்தி வழிபாடு' (Cult of the Divine Mother) மக்களிடை அதிகமாகப் பரவியிருந்தது. சத்தியன்னையின் பல உருவங்களில் சிலைகள் வடிக்கப்பட்டுள்ளன. பிற்காலச் சத்தி வழிபாட்டு முறைகள், இவைகளையொட்டியவை அல்ல என்றாலும் அடிப்படைகளில் பலத்த ஒற்றுமை காணலாம். உதாரணமாகச் 'சத்தியே படைப்பின் மூலம்' (Female energy is the source of all creation) எனும் சமயக் கருத்துப் பொதுவாயமைந்திருப்பதைக் காணலாம்.

மொகசஞ்சதாரோ–இலச்சினை

சத்தியுடன் சிவனை வழிபடும் வழக்கமிருந்தது. கண்டெடுக்கப்பட்டுள்ள ஆண் சிலைகளைச் சிவபிரானைக் கருதுவர்

ஆராய்ச்சியாளர் சிலர். யோகாசனமிட்டுச் சிவபிரான் அமர்ந்திருக்கும் காட்சி இலச்சினையொன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. விலங்குகள் அவரைச் சூழ்ந்திருக்கின்றன. அவரது தலையினின்று இரு கொம்புகள் எழுவன போன்று சித்திரிக்கப்பட்டுள்ளது. மூன்று முகங்களுடைய இச் சித்திரம் பிற்காலச் சிவ தத்துவத்தை விளக்குவதாயமைகிறது. சிவபிரானுக்கு 'மகாயோகி' (Maha Yogin) என்றும், 'பசுபதி'-விலங்கினங்களின் தலைவன் (Pasupathi—Lord of animals) என்றும் பெயர்களுண்டு. முக்கண்ணும், திரிசூலமும் அவருக்குரியவை. மொகஞ்சதாரோ யோக நிலைச்சித்திரம், மகாயோகி என்னும் சிவநாமத்தை விளக்கவல்லது. விலங்கினங்களால் சூழப்பட்டிருக்கும் இவருக்குப் 'பசுபதி' என்னும் பெயரும் பொருந்தும். இவ் வடிவில் காணப்படும் மும்முகங்களே பிற்காலத்தில் முக்கண்ணன் என்ற கொள்கை பரவுவதற்கு இடம் தந்திருக்கலாம். இரு கொம்புகளுடைய தலையணியிலிருந்து, பிற்காலத் திரிசூலமும் தோன்றியிருக்கக்கூடும்.

இவைகளைத் தவிர, லிங்க வடிவமுள்ள சிறு கற்சிலைகளும் காணப்படுகின்றன. சைவர்களிடம், லிங்க வழிபாட்டு முறை வழக்கிலிருந்து வருகிறது. எனவே, சிந்து சமவெளியில் காணும் ஆண்சிலையைச் சிவபிரானாகக்கொள்ளும் எண்ணம்வலுப்பெறும்.

சிவ-சத்தி போன்ற ஆண்-பெண் கடவுளரின் தன்மையுணர்ந்தும், அவைகளை உருவகப்படுத்தியும் வழிபட்டனர். அன்றியும், ஆதி மனிதனின் மரபையொட்டி மரம் செடிகளையும், விலங்கினங்களையும் வழிபடும் வழக்கும் இருந்தது. இவ்வியற்கைச் சின்னங்களைச் சத்தி வாய்ந்த தேவதைகளாக எண்ணி வழிபட்டனர். கேடு விளைவிக்கும் ஆற்றலும், நன்மை புரியும் ஆற்றலும், இத் தேவதைகளுக்கு உண்டென்றும் நம்பி வந்தனர். இன்றும் நம்மிடையே வழக்கிலிருந்து வரும் யட்ச, நாக (Yaksha, Naga) வழிபாட்டு முறைகள் இம் மரபையொட்டியவை. இவ் வழிபாட்டு மரபை ஐயமின்றி விளக்கவல்ல சான்றுகள் மொகஞ்சதாரோவில் உண்டு. சிந்துவெளியினரின் சமயக் கருத்துகளுக்கும், இன்றைய இந்து சமயக் கோட்பாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதைக் காணலாம்.

## பொதுவான முடிவுகள்
## (General Conclusions)

சிந்துவெளிப் பண்பாட்டாராய்ச்சியின் விளைவாக எழும் பிரச்சினைகள் சில, சீரிய சிந்தனைக்குரியவை. சுமேரிய, மெசபட்டேமியப் பண்பாடுகளுக்கும், இப் பண்பாட்டிற்குமுள்ள

ஒற்றுமை வியப்பூட்டுகிறது. மூன்று பண்பாடுகளும் வரலாற்றிற்கு முந்திய காலத்தவை. நகர வாழ்க்கை, பாண்டங்கள் செய்தல், சுட்ட செங்கற்களின் உபயோகம், தாமிர வெண்கலப் பாண்டங்களை உபயோகித்தல், இவை யாவற்றிற்கும் மேலாகச் சித்திர வரி வடிவங்கள் (Pictorial Writings) ஆகிய சில ஒற்றுமைகளைக் காண்கிறோம். மொகஞ்சதாரோ இலச்சினைகள் 'இலாம்' (Elam), மெசபட்டேமிய (Mesopotamea) ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந் நாடுகளுக்குள் நெருங்கிய தொடர்பிருந்திருக்க வேண்டுமென்பதிலும் ஐயமில்லை. இந் நிலையில், 'இம் மூன்று நாகரிகங்களும் ஒன்றோடொன்று தொடர்பின்றி எழுந்தவையா, அல்லது ஒன்று மற்றொன்றிலிருந்து முளைத்தெழுந்த கிளை நாகரிகமா?' என்ற கேள்வி எழுவது இயற்கை. பிரச்சினையை வேறு வகையாகவும் கூறலாம். இத்தகைய பண்பாடு இந்திய நாட்டில் தோன்றி மேற்கு முகமாகப் பரவியதா, அல்லது மேற்குத் திசையில் தோன்றி இந் நாட்டிற்குள் நுழைந்ததா, அல்லது சிந்துவெளிப் பண்பாடு, வெளிநாட்டுத் தொடர்பு எதுவுமின்றித் தனித்து வளர்ந்ததொரு நாகரிகமா?'—இது போன்ற கருத்துகள் சிந்தித்தற்குரியவை. இவ் வினாக்களனைத்திற்கும் விடை விறுப்பது கடினம். இக் கருத்துகளுள் ஒவ்வொன்றையும் ஆதரிப்போரும் எதிர்ப்போரும் பலருண்டு.

மற்றுமொரு சிக்கல், ஆரியருக்கும் சிந்து வெளியினருக்குமுள்ள தொடர்பின் தன்மையைப் பற்றியது. வேதகால ஆரியரே இந் நாட்டு வாசிகளில் முதல்வரென்றும், பிறர் அவரது வழித்தோன்றல்களாவர் என்றும் ஒரு கருத்து நிலவி வருவதால், இவ்விருவர்க்குமிடையே தொடர்பை ஆராய்ந்தறிவது நலம். இரு வகுப்பினரிடையில் வேற்றுமைகள் பல உண்டு. ஆரியர் நாட்டுப்புறவாசிகள். சிந்து வெளி மக்களோ, நகரவாசிகள். இரும்புக்கருவிகளையும், தற்காப்பிற்கான கவசங்களையும் ஆரியரிடம் காண்கிறோம். இவைகளைச் சிந்து வெளியில் காண்பதரிது. குதிரைகளை ஆரியர் பயன்படுத்தினரா என்பது விவாதத்திற்குரியது. சமயக் கருத்துகளிலும் வழிபாட்டு முறைகளிலும் வேற்றுமைகள் பல காணப்படுகின்றன. பசுக்களை ஆரியர் கடவுளென வழிபட்டனர். எருதுகளே சிந்துவெளி மக்களின் தெய்வம். சிந்து வெளியில் வழக்கிலிருந்த சிவ-சத்தி வழிபாட்டுக் கருத்துகளை ரிக்வேதம் ஏற்பதில்லை. லிங்க வழிபாட்டு முறையையும் ரிக்வேதம் ஆதரிப்பதில்லை எனக் கருதும் அறிஞர் பலர் உருவ வழிபாடு வேத காலத்தில் வழக்கிலில்லை எனக் கூறலாம்.

இக் காரணங்கள் பற்றி, சிந்து வெளி நாகரிகம், ஆரியப் பண்பாட்டிலிருந்து வேறுபட்டதென்பதும், காலத்தால் முற்பட்டதென்பதும் தெளிவாகும். கால வரன்முறையமைப்பு விதிகளுக்கு இக் கருத்து முரண்பட்டதாகாது. முன்பு கூறியது போல, சிந்து வெளி நாகரிகம் கிறிஸ்து தோன்றுவதற்கு மூவாயிரமாண்டுகளுக்கு முற்பட்டது. அதற்கு ஆயிரமாண்டுகளுக்குப்பின், ரிக்வேதம் தோன்றியிருக்க வேண்டுமென்பது பல ஆராய்ச்சியாளர்களின் கருத்து. சிலர், ரிக்வேதம், சிந்து வெளி நாகரிகத்தைக்காட்டிலும் மூவாயிரமாண்டுகள் காலத்தால் முற்பட்டதென்றும் கருதி வருகின்றனர்.

இச் சுழலினின்று கரையேறுவது கடினம். பண்பாடுகளிடையே உள்ள வேற்றுமைகள் வெளியிடை டீலே. எனவே, இரண்டும் வெவ்வேறு வகையைச் சார்ந்தவையென்பதிலும் ஐயமில்லே. கால நிருணய வேலே சிக்கல் நிறைந்து கருத்து வேற்றுமைகளுக்கிடமளிக்கிறது. திட்டமான முடிவெய்த வகையின்றித் தவிக்கிரேம். ஆரியர், இரும்பை உபயோகித்து வந்தனர் என்ற ரிக்வேதச் செய்தியொன்றை மட்டிலும் ஆதாரமாகக்கொண்டு அவர்களேக் காலத்தால் பிற்பட்டவர் எனக் கொள்வதும் முறையன்று. திட்டமான முடிவு அறிவிக்கும் வாய்ப்பளிக்கவல்ல சான்றுகளும் இல்லே. சிந்து வெளி நாகரிகமே காலத்தால் முற்பட்டது என்னும் கருத்து வேரூன்றி வளர்ந்து வருகிறது. அக்கருத்தையே நாமும் ஏற்பது அறிவுடைமையாகும்.

கால ஆராய்ச்சி இவ்வாறிருக்க, ஆரியரின் வழித்தோன்றல்களாக, பிற இந்திய மக்களினங்களேக் கருதுவது மதியீனம். இந்தியப் பண்பாட்டு வளர்ச்சியில் சிந்து வெளியினருக்குப் பெரும்பங்குண்டு என்பதில் ஐயமெதுவுமில்லே.

இறுதியாகச் சிந்து வெளி மக்கள் எவ்வினத்தைச் சார்ந்தவர்கள் என்னும் வினு எஞ்சி நிற்கிறது. அறிஞர் பலர் கூறியுள்ள விடைகளில் சிலவற்றை முன்பு குறித்தோம். இவர்களேச் சுமேரியர் எனக் கருதுவோரும், திராவிடர் எனக் கருதுவோரும் பலருண்டு. இவர்கள் யாவரையும் ஓர் இனமாகக் கொள்பவர்களும் உண்டு. அக் கருத்திற்கிணங்கத் திராவிடர், பஞ்சாபு, சிந்து, பலுச்சிஸ்தானம் போன்ற இந்தியப் பகுதிகளில் வாழ்ந்தனரென்றும், நாளடைவில் மெசபட்டேமியாவில் சென்று குடியேறினரென்றும் எண்ணத் தோன்றும். பலுச்சிஸ்தான் வாசிகளான 'பிரௌகி' (Brahui) என்னும் சாதியினர் இன்னும் திராவிட மொழி பேசி வருவது இக் கருத்தை வலுப்படுத்துகின்றதென்றும் கூறப்படும்.

சிந்து வெளி மக்களும் ஆரியரே என்ற கருத்தும் உண்டு. இக் கருத்தை இப்போது பலர் ஏற்பதில்லே. இனப்பிரச்சினேக்கு முடிவு காண்பது மிக அருமை. சிந்து வெளி மக்கள் தனி இனத்தவர்கள் எனக் கருதுவதற்குரிய சான்றுகள் பின்னுள்களில் கிடைக்கவும் கூடும்.

# 3. முந்திய வேதகாலம்
## (The Early Vedic Age)

### முற்கால ஆரியரின் குடியேற்றம்
### (Early Aryan Settlements)

'இந்தியா' என்னும் பெயர் 'சிந்து' என்பதிலிருந்து பிறந்த தென்பது தெளிவு. தொன்மை வாய்ந்த இந்தியப் பண்பாடு இந் நதிப்பள்ளத்தாக்கையே உறைவிடமாய்க் கொண்டிருந்தது. இப் பள்ளத்தாக்கின் கீழ்முனையில் மேற்கொள்ளப் பட்ட புதை பொருள் ஆராய்ச்சியின் விளைவாக, நன்கமைக்கப் பட்ட பல நகரங்களும் மெசபட்டேமியாவிலுள்ள இஷ்நூனு (Eshnuna), கிஷ் (Kish), ஊர் (Ur) முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டவைகளை ஒத்த இலச்சினைகளும் காணக் கிடைக்கின்றன என முன்னர்க் குறித்தோம். கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னர் இவை தோன்றியிருக்க வேண்டும். அருமையான இப் பண்பாட்டை உருவாக்கிய மக்கள் யாவர் என்பது உறுதிப்படுத்த இயலவில்லை. சிவபெருமானின் முன்னோ னெனக் கருதக்கூடிய ஆண்கடவுள் ஒன்றையும், 'சத்தி' என்னும் பெண் தெய்வம் ஒன்றையும் இவர்கள் வழிபட்டு, உருவ வழிபாட்டு முறைகளையொட்டிய சமயக்கருத்துகளையும் கடைப்பிடித்து வந்திருக்கக்கூடும். லிங்க வழிபாட்டு முறையும் இருந்ததெனலாம். 'அக்கினிக் குண்டங்கள்' (Fire Pits) இல்லை யென்பது கவனித்தற்குரியது.

சிந்து வெளியின் மேற்கெல்லையை உறைவிடமாகக் கொண்டு விளங்கிய மற்றுமொரு நாகரிகம், கிழக்கெல்லையில் வழக்கிலிருந்த பண்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகிறது. இப் பண்பாட்டுச் சிற்பிகள் தங்களை ஆரிய ரெனக் குறிக்கின்றனர். ஆரியரது ஆதி இலக்கியங்களில் மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் நாம் கண்ட நகர வாழ்க்கையைப்பற்றிய குறிப்புகள் இல்லை. அவர்தம் சமயக் கருத்துகளில் உருவ வழிபாடு இடம் பெறுவதில்லை. பெண் தெய்வ ஆராதனையைக்காட்டிலும், ஆண் தெய்வ ஆராதனைகள் மிகுந்திருக்கின்றன. இந்திரன், வருணன்

மித்திரன், நசத்தியஸ் (Nasatyas), சூரியன், அக்கினி (நெருப்பு) ஆகிய கடவுளர் பெருமதிப்புப் பெற்று விளங்குகின்றனர். சென்ற அத்தியாயத்தில், நாம் ஆராய்ந்த சிந்து வெளியினரிடம் இத் தெய்வங்களைக் காண்பதரிது. இவை யாவும் இயற்கைச் சத்திகளின் உருவகங்கள். ஆரியரின் ஆதி இலக்கியங்களான வேதங்கள் எக்காலத்தவை என்பதை நம்மால் அறுதி யிட்டுக் கூற இயலாதது வருந்தத்தக்கதே. கி. மு. 3000 ஆண்டு களுக்கு முன் வழக்கிலிருந்த சிந்து வெளி நாகரிகத்திற்கும் இவ்வரிய பண்பாட்டிற்குமிடையிலுள்ள தொடர்பை நிச்ச யிப்பதும் கடினமான முயற்சியேயாம். கி. மு. 2000 ஆண்டு களுக்கு முன் வேதங்கள் தோன்றியிருக்கக் கூடுமென 'மாக்ஸ் முல்லர்' (Maxmuller) மிகுந்த தயக்கத்துடன் கூறுவர். 'திலகர்', 'யாகபி' (Tilak, Jacobi) ஆகியோர் வான ஆராய்ச்சியின் அடிப்படையில் வேதங்கள் கி. மு. 3000-க்கு முன்னரே தோன்றியிருக்கக் கூடுமென எண்ணுவர். மொழி ஆராய்ச்சி யாளர் பலர், வான நூலின் அடிப்படையில் கால நிருணயம் செய்வது தகாது எனக் கருதுவர். இவ் வாராய்ச்சியை மேற்கொண்ட திலகர் என்பவரும், தாம் மேற்கொண்ட முறையின் பயனை முழுவதும் நம்புவதில்லை.

இருள் மூடிக்கிடக்கும் இக் கால நிருணயம் ஆராய்ச்சிக்கு ஆசியா மைனர், மேற்கு ஆசியப் பகுதிகளிலிருந்து சிறிது ஒளி கிடைக்கிறது. கி. மு. 1400ஆம் ஆண்டுச் சாசனங்கள் சில 'போகஸ் காய்' (Boghaz Keui) என்னுமிடத்தில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இந்திரன், மித்திரன், வருணன், நசத்யஸ் (Nasatyas) முதலிய ஆரியக் கடவுளரை, உடன்படிக்கைகள் சிலவற்றிற்குச் சாட்சிகளாக வரித்து உடன்படிக்கைகளைக் காத்தருள வேண்டுமென இந்தச் சாசனங்கள் வேண்டு கின்றன. ஆரிய மன்னர்களின் பெயர்களையும், கடவுளரின் பட்டியலையும் இங்குக் காண்கிறோம். இந்திரன், வருணன் போன்ற ஆரிய தெய்வங்கள் செல்வாக்கு மிகப்பெற்று விளங்கிய காலத்திலேயே இச் சாசனங்களும் உண்டாகி யிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. வேத காலத்து இத் தெய்வங்கள், 'பிராமண காலத்தில்' (Brahmanic period) செல்வாக்கிழந்து காணப்படுகின்றன. பிராமண காலத்தில் 'பிரஜாபதியும்' (Prajapathi) இதிகாச புராணங்களில் 'திரிமூர்த் தியும்' (Trimurthi) மிகச்சிறந்து விளங்குகின்றனர். இது காரண மாகவே போகஸ் காய்ச் சாசனங்களை, ரிக்வேதத்தை யொட்டியவை எனக் குறித்தோம்.

'இந்திரனை வழிபடும் வழக்கமுடைய மக்கள் சிந்து வெளியி லிருந்து ஆசியா-மைனருக்குச் சென்றனரா, அல்லது ஆசியா மைனரிலிருந்து மக்கள் இங்குக் குடியேறினரா?' என்ற பிரச்சினைகள் குழப்பமுண்டாக்குபவை. ரிக்வேதச் செய்யு ளொன்றில், பக்தனொருவன் வழிபாட்டுக்கென அமைந்த பீடத்திலமர்ந்து (Pratoankas-பிராத்தெளகஸ்) பரம்பரைத் தெய்வ மாகிய இந்திரனை வழிபடும் செய்தியொன்று கிடைக்கிறது. ரிக்வேதங்களில் குறிக்கப்படும் தலையாய மரபினருள் இருவ ராகிய 'யதுக்களும்' 'துர்வசுக்களும்' (Yadus and Turvasus) நெடுந்தொலைவிலிருந்து இந்திரனால் அழைத்துவரப்பட்டவர் கள். 'பாசு' அல்லது 'பார்சு' (Pasu or Parsu) என்னும் பாரசீக மக்களின் வழித்தோன்றல்களாக, இவர்களைச் சில செய்யுள்கள் குறிக்கின்றன. 'பாசு' அல்லது 'பார்சு' என்னும் பெயர்கள், முற்காலப் பாரசீக மன்னர்களுக்கு வழங்கி வந்தன. 'பார்சுகள்', 'பார்த்தவன்' (Parthavan) என்னும் மன்னனொருவ னுடன் போரிட்டதாகத் தெரியவருகிறது. போரை ரிக்வேதம் பின்வருமாறு வருணிக்கிறது: 'சயமானன்' (Chayamana) புதல்வனான 'அபயவர்த்தனனை' (Abhayavarthin) காப்பாற்று வதற்கென 'வரசிக' (Varasikha) குலத்தினரை இந்திரன் வேரறுத்தான். கிழக்குத் திக்கில் 'ஹரியூபியா' (Hariyupia) என்னுமிடத்தில் கூடியிருந்த 'வீரிச்சிவத்'தின் (Vrichivat) சந்ததியார் கொல்லப்பட்டனர். மேற்குப் பகுதியிலுள்ள கூட்டம் அச்சத்தினால் கலைந்து சென்றது.

பலருடைய வேண்டுதல்களுக்கிணங்கிக் கவசமணிந்த மூவாயிரம் படைவீரருடன், புகழ் வேண்டி, இந்திரன் அவ் வழியைச் சென்றடைந்தான். குரோதங்கொண்டு முன்னேறிய 'விரிச்சிவத்' (Vricivath) வேள்விப் பாண்டங்களை நாசம் செய்து, காலனை விரும்பி அழைத்து, உயிர் நீத்தான்.

'மண்ணிற்கும் விண்ணிற்கும் பறந்து திரிந்த, உண்டு கொழுத்த, பளபளப்பான மேனியையுடைய குதிரைகள், 'சிரிஞ்சயனை' (Srinjaya) விடுத்துத் 'துர்வாசனை' (Turvasa) ஏற்றன. 'விரிச்சிவத்தின்' சந்ததியார்கள் 'தேவதத்தன்' (அபயவர்த்தின்) அடிமைகளானார்கள்.

'சயமானன் குமாரனான பேரரசன் அபயவர்த்தன் களிப் பெய்தி, அழகிய இரு மாதர்களைத் தேரிலேறி வரச்செய்து, தேவதத்தனுக்களித்தான். இருபது பசுக்களையும் நன்கொடை யாக வழங்கினான். பார்த்தவனின் இந் நன்கொடைகளை யாராலும் அழிக்க இயலாது.'

மேலே குறிக்கப்பட்ட போர்ச்செய்தியினின்றும் தொலை நாட்டிலிருந்து இந்திரனால் அழைத்துவரப்பட்ட துர்வசு, 'விரிச்சிவத்' என்னும் கூட்டத்தினருக்கு உதவி புரிய முற்பட்டான் எனத் தெரியவரும். 'சிரிஞ்சயன்' (Srinjaya) என்பவனுக்கு இறுதி வெற்றி கிடைத்திருக்க வேண்டும். 'பர்வதன்' என்னும் இளவலொருவன் சிரிஞ்சயனின் படைக்குத் தலைமை தாங்கி நடத்தினான் என்றும், தேவர்கள் துர்வசுவையும் அவனுடைய தோழரையும் கைவிட்டனர் என்றும் எண்ணவேண்டியிருக்கிறது. 'பர்வதன்' என்னும் பெயர் இரேனிய நாட்டை நினைவுறுத்துகிறது. இச் சொல்லும் யதுக்களையொட்டிக் கையாளப்படும் 'பார்சு' என்ற சொல்லைப் போன்றதேயாகும். 'ஹரியூபியா' (Hariyupia) என்பது ஓர் ஆறாகவோ அல்லது நகரமாகவோ இருக்கக்கூடுமென, விளக்கவுரையாசிரியர்கள் கருதுகின்றனர். இப் பகுதி, வேள்விகளுக்குரிய சாமக்கிரியைகளைச் சிதைத்த விரிச்சிவத்தின் வசமிருந்ததாக எண்ணுவதற்கிடமுண்டு. இவர்களை ஹரப்பாவாசிகளாகக் கருதலாம் எனச் சிலர் கூறி வருகின்றனர். இது, புகழ்பெற்ற முற்காலப் பண்பாட்டைக் குறித்ததொரு ரசமான செய்தி. பண்பாட்டின் உறைவிடமொன்று போர்க்களமாயும் இருந்த செய்தி மிக விந்தையானது. எனினும், படையெடுத்து வந்தோர் இந்திரனை வழிபட்டு வந்தவரென்றும், கவசமணிந்த போர் வீரர்களென்றும், மிடுக்கான நடைபோடும் குதிரைகளில் சவாரி செய்தவர்களென்றும் வருணிக்கப்பட்டிருக்கும் செய்திகள் முரணானவை. இவைகளெவையும் ஹரப்பா வாசிகளிடமில்லை என்பதை நாம் நன்கறிவோம்.

இந்திரனைத் தெய்வமாகக் கொண்டிருந்த கூட்டத்திலும் கட்சிகள் இரண்டிருந்தன. சிரிஞ்சயனும், அவனுக்குத் துணைவரான 'பரதர்'களும் கூடி வாழ்ந்தார்கள். 'பரத்துவாஜ' முனிவர் குழாம் இவர்களைப் போற்றி வந்தது. யதுக்கள், துர்வசுக்கள், த்ருஹயர், அனஸ், புருக்கள் ஆகிய மரபினர், ஆதிவாசிகளின் தொடர்புகொண்டு மற்றொரு கட்சியினராய் விளங்கினர். இவர்களுள் முதலிரண்டு மரபினர்களைத் 'தாசர்கள்' (Dasas) என, ரிக்வேதத்துச் செய்யுளொன்று பெயரிட்டு வழங்குகிறது. மற்றுள்ளோருள், புருக்களை 'மிரித்ரவசர்கள்' (Mridhravachas) என வழங்கும் வழக்கமுண்டு. சுடுசொல்லுடையவர் (hostile speech) எனப் பொருள்படும் இச் சொற்றொடரைச் சாதாரணமாக ஆரியரல்லாத 'தஸ்யுக்களை' (Dasyus)க் குறிப்பதற்கே உபயோகிப்பது மரபு.

'தாசர்கள்' அல்லது 'தஸ்யுக்கள்' (Dasas or Dasyus) இவ்விரு இனத்தவரிடமிருந்தும் மாறுபட்டவர்கள். கறுப்பு நிறமும், சப்பை மூக்கும் கொண்ட இவர்தம் மொழி ஆரியர்களுக்கு விளங்காததொன்று. கோட்டைகள் கட்டி வாழ்ந்த இவர்களிடம் ஆடுமாடுகள் அதிகமிருந்தன. இவர்களிடமிருந்து ஆனிரைகளைக் கவருவதற்குத் தக்க தருணத்தை ஆரியர் எதிர்நோக்கியிருந்தனர். தெய்வங்களுக்கு ஆடுமாடுகளைப் பலியிட்டு வணங்குவதைத் தஸ்யுக்கள் வெறுத்தனர். இலிங்க வழிபாட்டு முறை இவர்களிடம் வழக்கிலிருந்தது. இது காரணமாகச் சிந்துவெளி மக்களிடம் இவர்களுக்கு நெருங்கிய தொடர்பிருந்ததென எண்ணுவதற்கிடமுண்டு.

ஆரியக் கூட்டத்தினரான (ஜன-Jana) 'பரதர்', 'யதுக்கள்' ஆகியோரிடையிலும் பல வேற்றுமைகள் காணப்படுகின்றன. 'பரதர்' குடியேற்றச் செய்தி, வேதச் செய்யுள்களில் கிடைப்பதரியதாயுள்ளது. 'யதுக்களும்', 'துர்வசுக்களும்', பிற்காலத்தில் குடியேறியவர்களெனக் குறிக்கப்படுகின்றனர். வடமேற்கெல்லைக்கப்பால், மேற்குப்பகுதியில் பாய்ந்தோடும் 'த்ரிஷித்வதி', 'சரஸ்வதி', 'அபய' (Drishadvathi, Sarasvathi and Apaya) போன்ற நதிக்கரையில் பரதகுல இளவல்கள், வேள்விகள் பல மேற்கொண்டனரென ரிக்வேதம் சித்திரிக்கிறது. அக்கினி-குலச் (Agni-cult) சடங்கு முறைகளை இவர்கள் கையாண்டார்கள் என்பது கவனித்தற்குரிய செய்தியாகும். கி. மு. 14ஆம் நூற்றாண்டு 'போகஸ காய்ச்'சாசனங்களில், அக்கினி தேவனைப் பற்றிய செய்திகளில்லை.

'பரதர்' ஆதியில் பலங்குன்றியிருந்தனர்; 'ஆடு மேய்க்க உபயோகிக்கப்படும் இலைகளற்ற குச்சியைப்போலத் தங்கள் நாடுகளை இழந்து நின்றனர். பிற்காலத்தில் வசிஷ்டரைக் குல குருவாகப் பெற்று 'த்ரித்சுகள்' வலுப்பெற்றனர். 'த்ரித்சுகளை'ப் பரதகுலத்தினரின் கிளைகளாகக் கருதுவதுண்டு. 'திவோதாசனும்' (Divodasa) அவன் பேரனான 'சுதசும்' (Sudas) இக்குலத்தில் புகழ்பெற்ற மன்னராவர்.

த்ரித்சுகளையும் அவர்தம் துணைவரான சிரிஞ்சயர்களையும் யதுக்கள், துர்வசுக்கள், த்ரிஷ்யுகள், அனஸ், புருக்கள் போன்ற கூட்டத்தினர் எதிர்த்து வந்தனர். முதலிரண்டு கூட்டத்தினரும் திவோதாசனின் எதிரிகளாவர். சரயுநதி வரையிலும் இவர்கள் முன்னேறியதாகத் தெரியவரும். சரயுநதி எனப்படுவது அயோத்தி (Oudh) மாகாணத்திலுள்ளதோர் ஆறு என நிச்சயிப்பதிலும் சிக்கல்களுண்டு. இரானிலும் இதே பெய

ருடைய ஆறு ஒன்றிருப்பதே குழப்பத்திற்குக் காரணம். காந்தார நாட்டினரென்று த்ரிஷ்புகளை மரபு சித்திரிக்கிறது. காந்தாரம், ஆடுகளுக்கும் கம்பளிகளுக்கும் பிரசித்தி பெற்று விளங்கி வந்தது என ரிக்வேதம் அறிவிக்கும். இக்காலப் பெஷாவரைச் சுற்றியுள்ள நிலப்பகுதி காந்தாரம் என வழங்கப்பட்டு வந்தது. 'அனஸ்' என்ற கூட்டத்தினர் த்ரிஷ்புகளின் நெருங்கிய நண்பர்கள். புருக்களும், அவர்களுடைய பகைவர்களான பரதர்களும், சரஸ்வதி நதிக்கரையிலும், மேற்குப் பஞ்சாபிலும் வசித்து வந்தனரென்பது தெரியவருகிறது.

நாடிழந்து நின்ற பரதர்கள், இழந்த உடைமைகளை மீட்பதற்குத் தருணம் பார்த்திருந்தனர்; எனவே, எதிரிகளிடையே போர்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. யுத்தமொன்றில் சிரிஞ்சயர்கள், துர்வசுக்களையும் அவர்தம் நண்பர்களான விரிச்சிவத்துகளையும் முரியடித்தனர். 'பத்து மன்னர்கள் பங்கு கொண்ட சமர்' (Battle of Ten Kings) என்னும் புகழ் பெற்ற யுத்தமொன்றில் திரித்ஸுக்களின் தலைவனான 'அதஸ்' எதிரிகளைப் பருஷ்ணி (Parushni) நதிக்கரையில் முரியடித்தான். வடமேற்குப்பகுதியில் வாழும் சிவசு (Sivas), பக்தசு என்னும் கூட்டத்தினரும் எதிரிகளுக்கு உதவினரென்பதை அறிகிறோம். ஆரியக் கூட்டத்தினருள் பரதர் முதன்மைப் பதவி எய்தி விளங்கினர். பிற்கால வேத இலக்கியங்களுள் ஒன்றான சதபத பிராமணம் (Sathapatha Brahmana) பழம் செய்தியொன்றைக் குறிப்பிட்டுப் 'பரதரைப் போன்ற புகழடைந்த இனமொன்று அவர்களுக்கு முன் இருந்ததில்லை; பின்னும் இருக்கப்போவதில்லை,' எனக் கூறுகிறது.

ஆரியரிடையுள்ள பூசலைக்காட்டிலும் ஆரியரல்லாத இனத்தாருடன் ஆரியர் புரிந்த போர்கள் முக்கியமானவை. இப்போர்களின் விளைவாக ஆரியராதிக்கம் கீழ்த்திசையில் பெருகி வளர்ந்தது. சம்பரன் (Sambara) என்னும் தஸ்யுக்களின் தலைவனுடன் பொருது வெற்றி கண்ட பெருமை திவோதாசனைச் சாரும். அவனுக்குப் பேரனான சுதசும் (Sudas) ஆதிவாசிகள் கூட்டமொன்றை யமுனை நதிக்கரையில் நடைபெற்ற போரில் வென்றான். விஸ்வாமித்திரர் என்னும் ஆசாரியரின் தூண்டுதலால் தெற்குப் பீகாரைச் சேர்ந்த 'கிக்கதர்' (Kikatas) என்னும் ஆதிக்குடிகளைப் பரதர் வெல்ல முயன்றதாக அறிகிறோம். தஸ்யுக்களை (Dasyus) எதிர்த்துச் சமர் புரிந்தபோது பரதர்களுக்குப் புருக்கள் துணை புரிந்தார்களென்றும், புருக்களின் தலைவனொருவனுக்கு 'த்ரஸதஸ்யு' (Trasadasyu — தஸ்யுக்களுக்கு அச்சம் விளைப்பவன்) என்னும் பெயர் வழங்கி வந்ததாகவும் தெரியவருகிறது.

நதிகள் சில குறிக்கப்பட்டுள்ளன. இவற்றை அடையாளம் கண்டுகொள்வது எளிது. நதிகளின் வருணனைகளிலிருந்து

ரிக்வேத ஆரியராதிக்கம் பரவியிருந்த நிலப்பகுதிகளை ஊகித்தறிவது சாத்தியமாகிறது. இப் பகுதிகளில் முக்கியமானவை குபா அல்லது காபூல் (Kubha or Kabul), சுவஸ்து அல்லது சுவாத் பள்ளத்தாக்கு (Suvastu or Swat), 'குருமு' அல்லது 'குர்ரம்' (Kurumu or Kurram), கோமதி அல்லது குமல் (Gomathi or Gumal), சிந்து அல்லது இந்து (Sindu or Hindu), 'சுஷோமா அல்லது ஷோகன்' (Sushoma or Shohan), 'விதஸ்தம் அல்லது ஜீலம்' (Vitasta or Jhelam), 'அசிகினி அல்லது சீனுப்' (Asikini or Chenab), 'மருத்வரிதா அல்லது மருவர்துவான்' (Marudvridha or Maruvarduwan), 'பருஷி அல்லது ராவி' (Parushini or Ravi), 'விபசு அல்லது பீயசு' (Vipas or Beas), 'சதுத்ரி அல்லது சட்லஜ்' (Sadutri or Sutlej), 'சரஸ்வதி' (Sarasvathi), 'த்ருஷத்வதி அல்லது ரஷி அல்லது சிதாங்' (Drushadvathi, Rakshi or Chitang), யமுனை, கங்கை, சரயு முதலியன. இப் பட்டியலிலிருந்து கிழக்கு ஆப்கானிஸ்தானம் முதல் கங்கையின் மேற்பகுதிவரை உள்ள நாடுகளில் ஆரியராதிக்கம் பரவியிருந்ததெனக் கொள்ளலாம். இந் நிலப்பரப்பின் பெரும்பகுதியடங்கிய பிரதேசத்திற்குச் 'சப்த சிந்து' அல்லது ஏழு நதிகள் பாயும் பகுதி (Sabdha Sindhu or Land of Seven Rivers) என்பது பெயர். இந் நிலப்பரப்பு முழுவதையும் ஆரியர் வயப்படுத்தினர் என்று கூறுவது முற்றிலும் பொருந்தாது. தஸ்யுக் கூட்டத்தினர் சிலரும் இப் பகுதிகளில் இருந்தனரென்பதும் தெரியவருகிறது. சிறுகச்சிறுக ஆரியர்கள் தஸ்யுக்களை வென்றிருக்கவேண்டும். மேலும், இப் பகுதிகளில் அடர்ந்த காடுகளும் (ஆரண்யானி), ஆங்காங்கே கிணறு (பிரபா)களைக்கொண்ட பாழ்நிலங்களும் நிறைந்திருந்தன.

## ரிக்வேத ஆரியரின் அரசியல்
## (Political Organisation of the Rig Vedic Aryans)

ரிக்வேத ஆரியரின் அரசியல் சமூக வாழ்க்கையின் அடிப்படை, தந்தையைத் தலைவராகக்கொண்ட 'குடும்பம்' (Patriarchal family), பல குடும்பங்கள் சேர்ந்த உயர் தொகுதிகள் முறையே கிராமம், விசு (Vis), ஜன (Jana) எனப் பெயர் பெற்று விளங்கின. வெவ்வேறு தொகுதிகளிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகள் தெளிவாகக் குறிக்கப்படவில்லை. சில சமயங்களில் இவை யாவும் ஒரே பொருளைக் குறிப்பனவாயும் அமைந்துள்ளன. பரதர்களை ஒரு செய்யுளில் 'த்ரித்ஸ்வர்க்க விசுக்கள்' என்றும், மற்றுமோர் இலக்கியத்தில் இவர்கள் பரத குல 'ஜனங்கள்' என்றும், பசுக்களைத் தேடித் திரியும் 'கிராமத்தினர்' என்றும் குறிக்கப்பட்டதை மேற்கோள்களாக எடுத்

துரைக்கலாம். 'கிராமம்' என்பது விசு, ஜனம் போன்றவைகளை விட அளவில் சிறியது எனக் கொள்ளலாம். கிராமத் தலைவனான 'கிராமணி' (Gramani) பெரிதும், வைசியனாய் (Vaisya) இருப்பதோடு விசுவின் தலைவனான 'விசுபதி' அல்லது ஜனத்தின் தலைவனான 'கோபன்' ஆகியவர்களைவிட மதிப்பில் குறைந்தவனாகக் காணப்படுகிறான். கோபன் ஆரியக் கூட்டத்தின் தலைவனாயும் விளங்கி வருகிறான்.

'ஜன', 'விசு' ஆகியவைகளிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளை ஆராய்ந்து கூறுவதும் கடினம். 'வேதச் செய்யுள்கள் சில இவர்களைத் தெளிவாகப் பிரித்துக் கூறுகின்றன. இரேனிய உவமைகள் 'விசு' என்பது ஜனப்பகுதியின் ஒரு பிரிவு என அறிவிக்கின்றன. 'ஜன' என்பது இரேனிய 'சன்டு' (Zantu) என்னும் சொல்லைப் போன்றது என்ற அடிப்படையிலேயே, இக் கருத்து அறிவிக்கப்படுகிறது. பரதர்களை ஓர் 'ஜன'த்திரளாகக் கருதும்போது ஒருமையும், 'விசு'க் கூட்டத்தினராகக் கருதும்போது பன்மையான 'விசா' (Visah) என்ற சொல்லும் உபயோகிக்கப்பட்டிருப்பது கவனித்தற்குரியது. எனவே, 'விசா' எனும் பன்மையாலமைந்த சொல் இவருடன் இணைந்த வேறு இனத்தினரையும் சுட்டும் என்றும் கொள்ளலாம்.

ரிக்வேத ஆரியரிடையே கோனாட்சி முறை வழக்கிலிருந்தது. சில கூட்டத்தினரிடை வேறு முறைகளும் வழக்கிலிருந்தன என்பதற்கும் சான்றுகளுண்டு. 'கண' (Gana) என்னும் நிலப்பிரிவுகளையும் அவற்றின் தலைவர்களான 'கண-பதி'கள் (Gana-Pathi) என்னும் பெயர்களையும் கேள்விப்படுகிறோம். கண-பதிகளை (மூத்தோர்) 'ஜ்யேஷ்டர்' என்றும் வழங்கி வந்திருக்கின்றனர். 'ஜ்யேஷ்டர்' என்னும் சொல்லுக்கும், பாலி மொழி இலக்கியங்களில் கையாளப்படும் 'ஜெத்தக' (Jettaka) என்னும் சொல்லுக்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது. எனவே, புத்த சகாத்த ஆதி நாள்களில் வழக்கிலிருந்த 'குடியரசு' முறைகளை ரிக்வேத ஆரியர் அறிந்திருந்தனர் என எண்ணுவதற்கு இடமுண்டு.

ரிக்வேத காலத்தில் நாட்டை (Rashtra-ராஷ்டிரம்) 'ராஜன்' (Rajan) என்னும் பெயர் கொண்ட மன்னன் ஆண்டுவந்தான். அவனுக்கு எதிரிகள் இல்லை. எதிரிகள் யாவரையும் அவன் வேரறுக்க வல்லவன். வாரிசுரிமை பெற்றவன் மன்னனாகலாம்; ரிக்வேத காலத்துக் கூட்டத்தினரான திரித்ஸு, புருசு ஆகியோரின் தலைவர்களடங்கிய பட்டியலொன்று 'ரிக்சம்ஹிதை' (Rik Samhitha) என்னும் நூலில் காணப்படுகிறது.

ரிக்வேதத்தில் தெளிவான சான்று இல்லாவிடினும், மன்னனைத் தேர்ந்தெடுக்கும் முறை இல்லையென்றே கூற வேண்டும். அதர்வ வேதத்திலும், மகாபுராணத்திலும், மன்னனைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அரசு நீடித்திருப்பதற்கு மக்களொப்பம் தேவை என்ற கருத்து ரிக்வேதத்திலும் காணப்படுகிறது. இக் கருத்தை வலுப்படுத்தும் குறிப்புகள் முடி சூட்டுச் சடங்கு முறைகளை வருணிக்கும் பகுதியில் காணப்படுகின்றன. 'ராஜன்' என்னும் பட்டத்தோடு 'சாம்ராட்டு' என்னும் விருதும் வழக்கிலிருந்தது. பெருமன்னனைக் குறிக்கும் சொல் என்று இதனைக் கொள்ளலாம். மௌரிய, குப்த பேரரசுகளைப் போன்ற பெருநிலப்பகுதிகளைப் பற்றிய குறிப்புகளை ரிக்வேதத்தில் காண்பதரிது. ஏகாதிபத்தியக் கொள்கைகளும் பேரரசுக் கருத்தில் நிலவி வந்தன என்பது மட்டிலும் தெரியவரும். ('விச்வஸ்ய புவனஸ்ய ராஜா'—Visvasya Bhuvanasya Raja).

கூட்டத்தில் மன்னன் முதலிடம் பெறுகிறான். முடிசூட்டு விழா ஒன்று நடத்தி, ஏனைய மக்களைக்காட்டிலும் அவன் மேம்பட்டவனாகப் பதவி பெறச் செய்வது மரபு. அவன் வசிப்பதற்கென மாளிகையும், அவன் உடுப்பதற்கெனப் பளபளப்பான உடைகளும் வழங்கப்பட்டன. பண்டிதரும், பாட்டிசைப்போரும், அலுவலர்களும், பணியாள்களும் அவனை இடைவிடாது சூழ்ந்திருந்தார்கள்.

நாட்டினரையும், நாட்டெல்லையையும் பாதுகாப்பது மன்னனின் முதற்கடமை. அயற்கூட்டத்தினருடன் போரிடுவது இவன் தொழில். உள்நாட்டு மக்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு ஒற்றர்களை (ஸ்பசன், Spasa) நியமித்துத் தவறிய மக்களைத் தண்டிப்பதும் இவன் கடமை. புரோகிதர் பலரையும் இவன் அமர்த்தியிருந்தான். புனிதச் சடங்குகள் பல நடத்தி மக்களளிக்கும் 'பலி'ப் (Bali) பொருள்களை ஏற்பது சிலர் கடமை. மன்னனுக்கு உதவியாகப் பலரிருந்தனர். 'புரோகிதன்' அல்லது 'மதகுரு' இவர்களுள் முக்கியனுவான். அரசனுக்கு அவ்வப்போது அறிவுரை வழங்கியதோடு, போரில் மன்னன் வெற்றி பெறுவதற்கெனப் பிரார்த்தனை நடத்துவதும் மந்திர சத்திகளைப் பெறுவதும் இவன் கடமைகளாம். வெற்றி பெற்ற மன்னனை வாழ்த்திப் போற்றுவதும் புரோகிதன் மேற்கொள்ளும் பணி. 'சேனுனி' (Senani) என்னும் படைத்தலைவன் மற்றுமோர் முக்கிய அலுவலன். இவனது படையமைப்பு முறைகளைப் பற்றிய விவரங்கள் மிகக் குறைவாயுள்ளன. 'பட்டி

(Patti) என்ற காலாட்படையினரும், 'ரதர்' (Rathar) என்ற தேர்ப்படையினரும், நாட்டுச்சேனையின் பிரிவினர் ஆவர். போரிலக்கியங்கள் மிடுக்கு நடையிடும் குதிரைகளைச் சித்திரிக்கின்றன. யானைப்படையைப் பற்றிய குறிப்பு இல்லை. கைகளிலும், மார்பிலும், தலையிலும் உலோகங்களாலாகிய கவசங்களை நற்குலத்துதித்த வீரர் அணிந்திருந்தனர். வில்லின் உதவி கொண்டு எதிரிகளைத் தாக்கினர். விஷம் தோய்ந்த கொம்பு முனைகளைக்கொண்ட அம்புகளும், தாமிரம் அல்லது இரும்பாலான முனைகளைக்கொண்ட அம்புகளும், (அயோமுகம்-Ayomukham) உபயோகத்திலிருந்தன. ஈட்டிகள், கோடரிகள், வாள்கள் போன்ற போர்க்கருவிகளும் உபயோகிக்கப்பட்டன. 'பூர்சரிஷ்ணு' (Purcharishnus) அல்லது தாற்காலிகக் கோட்டைகளை எழுப்பி, பலம் பொருந்திய எதிரிகளின் கோட்டைகளைத் தாக்குவதும் வழக்கம். இசைக்கருவிகளையும், கொடிகளையும் உபயோகித்தனரென்பதும் தெரிய வருகிறது. சர்தா (Sardha), வ்ரதா (Vradha), 'கண' (Gana) என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்த செய்தி தெளிவுற்றுக் காணப்படுகிறது. 'குலபதிகள்' என்னும் குடும்பத் தலைவர்கள், வ்ரகபதி' (Vragapathi) என்பவரின் தலைமையில் போரிட்டனரென்பது தெரியவருகிறது. வ்ரகபதி என்பவரே கிராமணியார் எனக் கருதுபவர்களுமுண்டு. கிராமணி என்பவர் கிராமங்களின் அரசியலையும் பாதுகாப்பு வேலையையும் மேற்கொண்டிருக்க வேண்டும். கோட்டை கொத்தளங்கள் 'பூர்பதி' (Purpathi) என்பவரின் பாதுகாப்பிலிருந்தன. ஒற்றர் படையும், தூதுவர் குழாமும் (Duthas—தூதுவர்கள்) வேதகால மன்னர்வசம் இருந்தன.

மக்கள் தலைவனான 'ராஜன்' மக்கள் விருப்பத்திற்கிணங்கியே அரசு செலுத்தி வந்தான். 'சமிதி' (Samithi) என்னும் பொது அவையில், இளவல்களும் பிறரும் கூடிக் கூட்டத்தினரின் பொதுப் பிரச்சினைகளை விவாதித்து வந்தனர். 'சபா' (Sabha) என்னும் மற்றோர் அவையும் இருந்ததாகத் தெரியவருகிறது. 'சபா' என்பது முதியோர் அடங்கிய அவையெனச் சிலர் கருதுவர். மற்றும் சிலர், இதைக் கிராமவாசிகளடங்கிய கூட்டமெனக் கருதுவர். பின்னும் சிலர், இதை அவை கூடுமிடமென்றும், சமூகத்தினர் கூடும் பொதுவிடம் என்றும் கூறுவர். ரிக்வேத இலக்கியப் பகுதிகளில் சபா என்பது, செல்வரும் பதவியால் உயர்ந்தோருமடங்கிய அவையெனச் சித்திரிக்கப்பட்டுள்ளது. கூட்டத்தினர் யாவரையும் 'சபா' கொண்டிருக்கவில்லை. மிக்க முதியோரே இதில் இடம் பெற்றிருந்தனர்.

என்னும் கருத்தை ரிக்வேதச் செய்தி உறுதிப்படுத்தும். 'சபைகளில்' பெண்களுக்கு இடமில்லை. பொதுப் பிரச்சினைகளுக்கு முடிவு காண்பது சபையின் தலையாய கடமையாய் இருந்தது. பிற்கால இலக்கியக் குறிப்புகளிலிருந்து 'சபை', நீதி மன்றமாகவும் செயலாற்றியது எனக் கருத இடமுண்டு.

## சமூக வாழ்க்கை
## (Social life)

ரிக்வேத காலத்தில், அரசியல், சமூக அமைப்பின் அடிப்படையாய் விளங்கியது, 'குடும்பம்' என்பது ஏற்கனவே கூறப்பட்டது. குடும்பத்தினர் யாவரும் ஒரே வீட்டில் வசித்து வந்தனர். அக்காலத்தில் வீடுகள் மரத்தினாலோ, கோரைப் புல்லாலோ கட்டப்பட்டன எனக் கருதப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிலும் 'அக்கினி குண்டம்', 'அக்கினி சாலா' அமைக்கப்பட்டிருந்தன. ஒரு கூடமும், பெண்டிருக்கெனத் தனி அறைகளும் அமைக்கப்பட்டிருந்தன. வீட்டின் தலைவன் 'கிருஹபதி' அல்லது 'தம்பதி' எனப்படுவான். அவன் பொதுவாக அன்பும் பிரியமும் உள்ளவனாய் இருந்தான். சிற்சில சமயங்களில் கொடுமைகளும் இழைக்கப்பட்டன என்றும் அறிகின்றோம். உதாரணமாக, ஊதாரித்தனமாய் நடந்த மகனுடைய கண்களைத் தகப்பன் பறித்துக் குருடாக்கினான் என்ற கதையும் உண்டு. குடும்பத்தில் தகப்பன் வழியாக ஆண் வாரிசுரிமை இருந்தது. ஆதலால், மக்கள் ஆண்மகவுக்காகக் கடவுளை வேண்டினர். பெண் குழந்தைகள் பிறப்பதை மக்கள் விரும்பவில்லை. ஆயினும், பிறந்த பெண் குழந்தைகளிடம் அன்பும் பரிவும் காட்டப்பட்டன. அவர்களுக்கும் கல்வி அளிக்கப்பட்டது. பெண்களுள் சிலர் கவிதை புனைவதில் திறம் பெற்று விளங்கினர். விஸ்வவாரா, கோஸா, அபாலா போன்ற சிலர் சிறந்த ஞானிகளின் நிலையை எய்தினர். நல்ல பக்குவமடைந்த பின்னரே பெண்களுக்கு மணம் செய்விக்கப்பட்டது. காதல் மணமும், பணத்திற்காக மணம் செய்து கொடுப்பதும் வழக்கத்திலிருந்தன. மணப்பெண்ணின் பெற்றோர் வீட்டிலேயே கல்யாணச் சடங்குகள் நடைபெற்றன. பொதுவாக, ஒரு மனிதன் ஒரு பெண்ணை மணஞ்செய்துகொள்வது வழக்கம். பலதார மணமும் நடைபெற்று வந்தது. ஆனால், மனைவி அல்லாத வேறு மாதருடன் உண்டாகும் கூடா நட்பைச் சமூகம் ஆதரிக்கவில்லை விதவைகளின் மறுமணம் அனுமதிக்கப்பட்டது. சட்டப்படி மாதர்கள் சுதந்தரமுள்ளவர்கள் அல்லர். அவர்கள் தங்கள் ஆண் உறவினரைச்சார்ந்தே வாழவேண்டியவர்களாயிருந்தனர்; தங்களுக்கு வேண்டிய உதவிக்கும் ஆதரவுக்கும்

ஆண் உறவினரையே எதிர்நோக்க வேண்டியிருந்தது. குடும்பத்தில் பெண்டிருக்குக் கௌரவமான அந்தஸ்து அளிக்கப்பட்டிருந்தது. தம்பதி என்னும் சொல் குடும்பத்தலைவனைக் குறிப்பது போன்று தலைவியையும் குறிக்கும். மனைவியர் தத்தம் கணவரின் மதச்சடங்குகளில் கலந்துகொண்டு, இல்லத்தரசிகளாய் விளங்கினர். ரிக்வேதத்தில் மகளிர் புறக்கணிக்கப்பட்டார் என்பதற்குச் சான்றுகள் இல்லை. அதற்கு நேர் மாறாக மகளிர் அணிகள் அணிந்து சூரியக் கதிர்கள் போன்ற ஒளியுடன் விளங்கி, விழாக்களில் குழுமியிருந்தனர்.

ஆடை ஆபரணங்களில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. வேதகால ஆடை மூன்று வகைப்பட்டவை. அவற்றுள் உள்ளாடைக்கு 'நீவி' என்றும், இடை உடைக்கு 'வாஸ' அல்லது 'பரிதானம்' என்றும், மேலாடைக்கு 'ஆதிவாஸ', 'அட்கா' அல்லது 'த்ராபி' என்றும் பெயர்கள் வழங்கி வந்தன. பல நிற ஆடைகள் வழக்கிலிருந்தன. அவை பருத்தி, மான்தோல் அல்லது கம்பளியாலானவை. ஆடைகள் சித்திரச் சரிகைத் தையல் வேலையோடு விளங்கின. தங்க நகைகளும், பூமாலைகளும் சாதாரண காலங்களிலும், விசேட காலங்களிலும் சிறப்பாக அணியப்பட்டன. ஆடவர், பெண்டிர் இருபாலாரும் தலைப்பாகை அணிவது வழக்கம். தலைமுடி நீளமாகச் சீவி விடப்பட்டுத் தொங்கியது. பெண்களின் நீண்ட கூந்தல் அகன்ற மடிப்புகளுடையதாய் அமைக்கப்பட்டது.

வேதகாலக் குடும்பத்தின் தினசரி உணவு 'பொரி' அப்பம் பால், தயிர், வெண்ணெய், பலவிதக் காய்கறிகள், பழங்கள் ஆகும். மாமிச உணவும் சாதாரணமாக உட்கொள்ளப்பட்டது. முக்கியமாகப் பெருவிருந்துகளிலும், குடும்பக் கூட்டங்களிலும் மாமிச உணவு விசேடமாக வழங்கப்பட்டது. பாடல்கள் பல பசுவை 'அஹ்ன்ய' என்று விவரிக்கின்றன. இதனின்று, பிற்காலங்களில் பசுவதை குறைந்து வந்ததெனக் கொள்ளலாம். உப்பு என்ற பண்டத்தைப் பற்றிய குறிப்பு எதுவும் ரிக்வேதத்தில் காணப்படாமை மிக விந்தையாகவுள்ளது.

நீரூற்றுகளிலிருந்தும் (உத்ச), ஆறுகளிலிருந்தும் தேவையான குடிநீர் கிடைத்து வந்தது. 'அவதசு' என்னும் செயற்கைக் கிணறுகளும் இருந்தன. கல் ராட்டினமமைத்து, அதனுதவியால் கிணற்று நீரையிழுத்து மரத்தொட்டிகளில் நிரப்பி உபயோகிப்பது வழக்கம். 'சோம, சுரா' என்னும் தெம்பூட்டும் பானங்களையும் தயாரித்து அருந்தினரென்பது தெரிகிறது. இமாலயத்திலுள்ள 'முஜாவத்' (Mujavath) சிகரத்தில் வளரும் ஒருவகைச்

செடியிலிருந்து சோமபானம் தயாரிக்கப்பட்டது. பாரசீக ஏடுகளான 'அவெஸ்தா' (Avetsa) இப் பானத்தை 'ஹேயிமா' (Haema) எனக் குறிக்கும். சமயச் சடங்குகளில் இப் பானம் உபயோகிக்கப்பட்டது. சுரா பானம் போதை தரவல்லது. பொதுக் குறிப்புகளிலிருந்து இதைப் பிற்காலங்களில் உபயோகிப்பதில்லை என்பது அறியலாகும். ஊக்கமிகுந்த மக்கள் ஓட்டப் பந்தயம், வேட்டையாடுதல், போர், நடனம் போன்ற கேளிக்கைகளில் பங்கு கொண்டனர். தேரோட்டப் பந்தயம் பொதுவழக்கிலிருந்தது. 'வாஜபேயம்' (Vajapeya) என்னும் பிற்கால வேள்விச் சடங்குகளில், தேரோட்டப் போட்டி முக்கிய இடம் பெற்றிருந்தது. வேட்டையாடுவதிலும், ஆரியர் மிகுந்த ஆர்வமுடையவர்கள். சிங்கம், யானை, காட்டுப்பன்றி, காட்டு எருமை, மான் முதலிய மிருகங்களை வேட்டையாடி வந்தனர். பறவைகளை வேட்டையாடுவதும் வழக்கம். சொக்கட்டான் ஆடுவதிலும் ஆரியருக்கு விருப்பமதிகம். இவ் விளையாட்டில் ஈடுபடுவோர், உடைமைகள் யாவையும் பணயம் வைத்து இழப்பதுண்டு. குத்துச்சண்டை, நடனம், இசை ஆகியவைகளும், நேரம் போக்குவதற்குப் பயன்பட்டன. குழல், கைத்தாளம் முதலியவை முழங்க இசையிலும், நடனக்கலையிலும் தங்களுக்குள்ள புலமையை வெளிப்படுத்துவதில் பெண்டிருக்கு விருப்பமதிகமாயிருந்தது. பிற்காலங்களில் இதிகாசங்கள் தோன்றி வளருவதற்கு, யாழிசைப்போர் பேருதவி புரிந்தனர்.

வேதகால இசை வல்லுநர், வாழ்க்கை வரலாற்றை விளக்கும் சாகித்தியங்களைப் பாடிவந்தனர். மரணம் போன்ற சோகச் செய்திகளை அவர்கள் அமைத்துப் பாடுவதில்லை. எனினும், எதிரிகளின் மரணத்தைப் போன்ற செய்திகளை அவர்கள் பாட்டிலிசைத்துப் பாடுவதுண்டு. இறந்தோரைப் புதைக்கும் வழக்கமும், தீயிலிட்டுப் பொசுக்கும் வழக்கமும் இருந்தன. கைம்பெண்களை நெருப்பிலிடும் வழக்கமிருந்ததாகச் சொல்வதற்கில்லை.

'வருணம்', (Varna) 'ஸாஜாத்தியம்' (Sajathya–உறவு-Kinship) ஆகிய அடிப்படைகளில் வேதகாலக் குடும்பங்கள் பிரிக்கப்பட்டிருந்தன. வெள்ளை நிறமுடைய ஆரியர் (சுவித்னியர்-Svitnya) கருநிறமுடைய ஆதிக்குடிகளிலிருந்து வேறுபட்டவர். பின் கூறப்பட்டவர்களை, 'தாசர்', 'தஸ்யுக்கள்' அல்லது 'சூத்திரர்' (Dasas, Dasyus or Sudras) என வழங்குவது வழக்கம். ஆரியகுலத்தினரிடமும், அரச குடும்பத்தினர், ராஜன்யர் அல்லது க்ஷத்திரியர், புரோகித குலத்தினர் பிராமணர் என்ற

பிரிவுகளிலிருந்து வந்தன. ‘விஸ்’ (Vis) என்னும் தன்னுரிமை பெற்ற குடிமக்களிலிருந்து இவர்கள் வேறுபட்டிருந்தனர். நால் வகைப் பிரிவினைகள் பண்டைய துதிப்பாடல்களில் குறிக்கப் பட்டுள்ளன. ‘புருஷசூக்தம்’ (Purushasuktha) என்னும் பகுதியில், நடைமுறையிலிருந்த பிரிவுகளுக்கேற்ற விளக்கம் கூறப்பட்டுள்ளது. அது வருமாறு: ‘ஆதி புருஷனைப் (Purusha) பிரித்தளிக்கும் முயற்சியின் விளைவாகப் புருஷன் வாயிலிருந்து பிராமணரும் (Brahmana), புயங்களிலிருந்து அரசர்களும் (Rajanya), தொடைகளிலிருந்து வைசியரும் (Vaisya), பாதங்களிலிருந்து சூத்திரரும் உண்டாயினர்.’

இதைப் போன்ற சமுதாயப் பிரிவினைகள், பிற இந்திய-ஐரோப்பிய வகுப்பினரிடமும் காணப்படுகின்றன. பிற்காலத்தில் தோன்றி வளர்ந்த சாதிப்பிரிவினைகளுள் காணப்படும் கட்டுப் பாடுகள் ரிக்வேத துதிப்பாடல்களில் இடம்பெறவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்வது நலம். கலப்பு மணத்தையும் தொழில் மாற்றத்தையும் தடை செய்வாரில்லை. ஆரிய-சூத்திரக் கூட்டுறவையும் நாம் காணலாம். குறிப்பிட்ட தொழிலையே, தலைமுறையாக ஏற்கவேண்டும் என்ற கண்டிப்பு இல்லை.

கவிஞர் ஒருவர் பின்வருமாறு கூறுவார் :

‘நானொரு கவிஞன்; என் தந்தையார் வைத்தியர்;
என் தாயார் தானியம் உடைப்பவர்;
வெவ்வேறு நோக்குகளையுடைய நாங்கள் ஆநிரைகளைப்
பெறுவதற்காக, இலாபத்தைக் கருதியே
வாழ்ந்துவருகின்றோம்.’

சூத்திரர்களால் தயாரிக்கப்பட்ட உணவைப் புசிப்பதில் எவ்விதத் தடையுமில்லை. ஈன சாதியினரின் தொடர்பினால் அசுத்தமேற்படும் என்ற எண்ணமும் எவருக்குமில்லை.

தொழில், திருமணம் போன்றவைகளில், பிற்காலங் களிலேயே மிகுந்த கட்டுப்பாடுகள் தோன்றியிருக்க வேண்டும். ஆஸ்டிரலாய்டு (Austroloid) வகுப்பைச் சேர்ந்த, விலங் கினங்களை வழிபடும் வழக்கமுள்ள ஆரியர், ஆசிய நாடுகளி லிருந்து குடி பெயர்ந்து இந் நாட்டில் புகுந்தவர்கள். திராவிடர் காலத்திற்கும் முற்பட்ட காலத்தவராகிய இவர்கள், மந்திர சக்திகளையும், பிறவற்றையும் கண்டு மிக அஞ்சினர். எனவே, பிறரிடம் உணவு பெற்றுப் புசிப்பதற்கு மிகவும் அஞ்சியிருக்க வேண்டும். இதைப் போலவே, கலப்பு மணத்தையும், இவர்கள் வெறுத்திருக்க வேண்டும். நிறப்பெருமையும், இனச்செருக்கும்

கொண்ட ஆரியர், இக் கருத்துகளை ஒன்றுகூட்டிச் சாதி முறையை நிரந்தரமாகச் செய்திருக்கவேண்டும். பூவியலும், பொருளாதாரச் சமயக் கருத்துகளும் இதற்கு மிகவும் உதவி யிருக்க வேண்டும்.

பிற்காலங்களில், மூன்று உயர்வகுப்புகளையும் சார்ந்த எவனும் உன்னத வாழ்வில் விருப்பமுடையவனுயின், 'ஆசிர மங்கள்' (Asramas) எனக் கூறப்படும் நான்கு வாழ்க்கை நிலைகளையும் கடந்தேயாகவேண்டும். ஒவ்வொரு நிலையிலும் கடுமையான விதிமுறைகள் உண்டு. முதற்படியான 'பிரம சரியம்' (Brahmacharya) என்பது கற்பைக் காத்து, வேதப் பயிற்சியில் ஈடுபடும் நிலை; அடுத்து அமையும் 'கிருஹஸ்தம்' (Grihastha) என்னும் நிலையில் மணம் முடித்து இல் வாழ்க்கை நடத்துவதற்கான விதிமுறைகளுண்டு; 'வான பிரஸ்தய' (Vanaprastha) என்ற மூன்ருவது நிலையில் அடவி புக விரும்பும் ஞானியாகவும், நான்காவது நிலையான சந்நியாச (Sanyasin) நிலையில் முற்றும் துறந்த முனிவராக வேண்டு மென்பதும் விதி. ஆசிரம விதிமுறைகளின் வித்து, வேத இலக்கியங்களில் காணப்படும் 'கிருகபதி' (Grihapathi) என்ற பெயரைத் தவிர 'பிரமசாரி' (Brahmacharin), 'முனி' (Muni) என்ற சொற்களும், வேதச் செய்யுள்களில் கையாளப் படுகின்றன. புலனடக்கத்துடன் பிரமசாரி வேதங்களைக் கற்க முற்படவேண்டும். 'முறை வைத்துக் கத்தும் தவளைகள்போல, பாடங்களை உரக்கக் கூறும் குருவை மாணவர் பின்தொடர்வர். முனிவர், நீண்ட ரோமங்களை உடையவரென்றும், காற்றையே உடையாகக் (Wind Clad) கொள்பவர் என்றும், கிழிந்த காஷாய உடை தரித்து அலைந்து திரிபவர் என்றும் பலவாருக வருணிக்கப்படுகின்றனர்.

## பொருளாதார நிலை

கிராமவாசிகளான ஆரியர் சிதறிக் கிடந்தனர். செய்யுள் களில் 'நகரம்' (Nagara), பட்டம் (City) என்ற சொல் உபயோகத்திலில்லை. 'புரங்கள்' (Purs), கற்கள் (அஸ்மமயி-asmamayi) அல்லது இரும்பினலானவை (அயசி-ayasi); அளவில் சற்றுப்பெரியவை. சில புரங்களில் சுவர்களிருந்தன வாகவும் தெரியவருகிறது. (சதபுஜி-Satabhuji) புரங்களை மதில் சுவர்கள் என்ருே, கோட்டைகள் என்ருே கொள்ளலாமே யொழிய அவற்றை நகரங்களாகக் கருதவியலாது. இலையுதிர் காலங்களில் தங்குமிடங்களாக அவைகள் பயன்பட்டிருக்கலாம். சில இலக்கியப்பகுதிகளில் காணப்படும் 'சாரதி' என்னும்

சொல் இக் கருத்தை விளக்கவல்லது. பிற்கால இலக்கியங்களில் 'அசந்திவதம்' (Asandivat), காம்பிலம் (Kampila) போன்ற நகரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன, ரிக்வேதத்தில் அத்தகைய குறிப்பு எதுவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கிராம நிருவாகத்தைப்பற்றிய சில தகவல்களும் கிடைத்துள்ளன. சிவில், இராணுவ நிருவாகத்தைக் 'கிராமணி' என்ற அலுவலர் கவனித்துவந்தார். 'விரஜபதி' (Vrajapathi) என்னும் அலுவலர் ஒருவரும் இருந்தாரென்பது தெரியவருகின்றது. கிராமணியைப் போன்ற கௌரவமுடைய இவர் குடும்பத் தலைவர்களடங்கிய (குலபதிகள்) படைத்தலைவராவர்.

வீடு கட்டுவதற்கான மனைகளும், விளைநிலங்களும் தனி நபர்களுக்கோ, அல்லது குடும்பத்தினருக்கோசொந்தமானவை. 'மேய்ச்சல் காடுகள்' (கில்யம்-Khilya) பொதுவிடங்களாய் விளங்கியிருக்கக்கூடும்.

பயிர்த்தொழிலைக் கிராமவாசிகள் மேற்கொண்டிருந்தார்கள். 'கிருஷ்டி', 'கர்ஷணி' (Krishti, Charshani) (உழவர்) போன்ற சொற்கள் உழவுக்கலையின் இன்றியமையாமையை எடுத்துணர்த்துகின்றன. இச் சொற்கள் பொதுவில் உழவரைச் சுட்டும். இச் சொற்கள் குறிப்பாக முற்கால வேத இனத்தினரின் ஐந்து பிரிவினரைச் சுட்டுகின்றன என்றும் கூறப்படுகிறது. பயிரிடப்பட்ட நிலங்களுக்கு 'ஊர்வரம்' அல்லது 'க்ஷேத்திரம்' (Urvara, Kshethra) என்னும் பெயர்கள் வழங்கி வந்தன. வாய்க்கால்கள் நீர்ப்பாசன வசதியளித்தன. நிலத்திற்கு உரமிடுவதுமுண்டு. விளைதானியம், 'தன' அல்லது 'யவம்' (Dhana or Yava) எனப் பெயர் பெறும். பண்டை இலக்கியங்களிலும் இச் சொற்கள் ஆளப்பட்டிருக்கின்றன. என்றாலும், இவைகள் எதைக் குறிக்கின்றன என்பதில் தெளிவில்லை. பிற்காலங்களில் அரிசி, பார்லி ஆகியவைகளுக்கு இப் பெயர்கள் வழங்கிவந்தன. பக்குவமடைந்த கதிர்களை அரிவாளினால் அறுத்து, கட்டுகளாகக் கட்டி, களஞ்சிய வாயிலில் கதிரடித்துத் தானியங்களை உதிர்த்தெடுத்தனர். காற்றினுதவியால் தூற்றி, திருவைகளிலிட்டு அரைத்து, அப்பமாகச் (Apupa- அபூபம்) செய்து புசித்தனர்.

கால்நடைகளைப் பேணி வளர்ப்பதிலும் அவர்கள் மிக்க கவனம் செலுத்தி வந்தனர்; பசுக்களை மிகவும் கௌரவித்து வளர்த்துவந்தனர். வேதகால ஆரியக் குடும்பங்களில் பால் முக்கிய உணவுப்பொருள். 'கோபன்' (Gopan) என்னும் மாடு

மேய்ப்பவன், ஆநிரைகளை நாள்தோறும் மேய்ச்சல் நிலங்களுக்கு ஓட்டிச்செல்வது வழக்கம். யமுனை நதிக்கரை கொழுத்த மாடு கன்றுகளுக்குப் பிரசித்தி பெற்று விளங்கியது. கன்றுகாலிகளின் காதில் அடையாளக் குறியிடும் வழக்கமுண்டு. 'அஷ்டகர்ணி' (Ashtakarni) என்னும் சொல் (துளைபட்ட காதுகளுடைய அல்லது எட்டு என்னும் எண்ணைப்போலக் குறியிடப்பட்ட காதுகளுடைய) பசுவைக் குறிக்கும்.

எருது (draught-Ox) குதிரை, நாய், வெள்ளாடு, செம்மறி ஆடு போன்ற உபயோகமுள்ள பல மிருகங்களும் வளர்க்கப்பட்டன. காந்தார நாட்டுப் பெண் ஆடுகள் கம்பளிக்குப் பெயர் பெற்றவை.

உழுதுண்டு வாழ்பவரெனினும், தொழில் வாணிகம் ஆகியவற்றையும் ஆரியர்கள் புறக்கணிக்கவில்லை. 'பாணி' (Pani) என்னும் வகுப்பினர் பெரும்பாலும் வணிகர்களாய் இருந்தனர். ஆரியரல்லாத இவர்கள் கருமித்தனத்துக்குப் பேர்போனவரென்பது தெரிகிறது. இவர்களிலும் 'பிரிபு' (Bribu) போன்ற தாராள மனப்பாங்குடையவர்களையும் பார்க்கிறோம். பண்டமாற்று முறை வழக்கிலிருந்தது. உடைகள், தோல்கள், மேலங்கிகள் ஆகியவை வாணிகப் பொருள்களெனப் பிற்காலச் 'சங்கிதை' (Samhithas) இலக்கியங்கள் குறிக்கின்றன. பசு, குறித்ததொரு நாணய மதிப்புள்ளதாயிருந்தது. 'நிஷ்கம்' அல்லது 'நிட்கம்' (Nishka) என்னும் தங்க நாணயமும் வாணிகப் பரிவர்த்தனைக்குப் பெரிதும் உதவியது. நிட்கமெனும் தங்கத் துண்டிற்கு, நாணயங்களுக்குள்ள இலட்சணங்கள் யாவும் பொருந்தியிருந்தன என்னும் கருத்து, சந்தேகத்துக்கிடமானது. வேத காலத்துத் தங்க நாணயமெதுவும் இந்தியாவில் இதுவரை கண்டெடுக்கப்பட்டதாகச் செய்தியில்லை. பண்டமாற்று முறை சிறுகச்சிறுக வழக்கொழிந்து, நாணய மாற்று முறை ஏற்றம் பெறத் தொடங்கியது என்பதை 'நிட்க' உபயோகம் வலியுறுத்தும். 'நிட்கம்' என்பது, குறித்த அளவுள்ள தங்கத்துண்டு. அரசாங்கத்தாரால் இது வெளியிடப்பட்டதென்பதற்கான சான்றுகள் இல்லை. பரிசு வழங்கலைச் சித்திரிக்கும் ரிக்வேதப் பகுதியொன்றில் 'மனு' (Mana) என்னும் ஒரு சொல் காணப்படும். பாபிலோனியாவில் வழக்கிலிருந்த நிறுத்தலளவையை 'மனு' (Manah), இலத்தீன் 'மின' (Latin-Mina) ஆகியவற்றை இச் சொல் குறிக்குமென அறிஞர் சிலர் கருதுவதுண்டு.

தேர்கள் (ரதம்-ratha), பெட்டி வண்டிகள் (அனசு-Anas) முதலியவை போக்குவரவு சாதனங்கள். தேர்களில் குதிரைகளும், பெட்டிவண்டிகளில் எருதுகளும் பூட்டப்பட்டன. அக்கினி தேவனை 'பதி-கிருத்' (Pathi-Krit) அல்லது வழியமைப்பவர் (path-maker) எனக் குறித்துள்ளனர். கொள்ளைக்காரரும் (தஸ்கரர், ஸ்தேனர்—Taskara, Stena), கொடிய மிருகங்களும் நிறைந்திருந்த அடவிகளை அழித்து, வணிகர், வழிப்போக்கர் ஆகியோரது உபயோகத்திற்கென வழி அமைப்பதற்கு அக்கினி தேவனின் உதவி மிகவும் தேவையாய் இருந்திருக்க வேண்டும்.

கடற்பிரயாணத்தை ரிக்வேத ஆரியர் மேற்கொண்டிருந்தனரா என்பதைப்பற்றிக் கருத்துவேற்றுமைகள் மிக அதிகம். ஓடங்களின் உதவிகொண்டு நதிகளைக் கடந்தனர் எனக் கூறுவர், ஒரு சாரார். நூறு துடுப்புகளமைந்த கப்பல்களில் கடற்பிரயாணத்தை மேற்கொண்டனர் என்பதைப்பற்றிய தெளிவான செய்திகள் கிடைத்துள்ளன. புஜ்யனின் (Bhujya) கப்பல் சிதைந்த கதையொன்று தங்குமிடமும், ஒதுங்குமிடமும் அற்ற கடலின் பயங்கரச் சூழ்நிலையை விளக்குகின்றது. இங்குக் குறிக்கப்படும் சமுத்திரத்தைச் சிந்து நதியின் கீழ்ப்பகுதி என்று கூறுவோருமுண்டு. மற்றும் சிலர், சமுத்திரத்தைப்பற்றிய செய்தி பிரயாணிகளிடமிருந்து கேள்வியுற்றதன்றி, அனுபவபூர்வமானதன்று என்று கருதுவர். கடல் அரிய பொருள்களையுடைய கருவூலமெனக் கருதப்படுகிறது. அங்கு விளையும் விலைமதிப்புள்ள பொக்கிஷங்களைப்பற்றிய குறிப்புகளும் வியப்பானவை. வேதகால ஆரியரின் 'மனு' என்னும் சொல்லும், பாபிலோனியரின் 'மனஹ்' (Manah) என்னும் சொல்லும் ஒரே பொருளைக் குறிப்பவை எனக் கருதும்போது, இந்தியர் கடல் கடந்து அந்நியருடன் தொடர்பு கொண்டிருக்கவேண்டுமென்பதும் ஐயத்திற்கிடமின்றி நிறுவப்படும்.

ரிக்வேத காலத் தொழிலாளிகளில், தச்சரும், உலோக வேலை செய்வோரும், தோல் பதனிடுவோரும், நெசவாளரும், குயவரும் சிறந்து விளங்கினர். இரதங்கள், வண்டிகள், வீடுகள், படகுகள் ஆகியவைகளையும், சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய மரக்கிண்ணங்களையும் தச்சர் உருவாக்கினர். கொல்லர், படைக்கருவிகளையும் ஆயுதங்களையும் படைத்தனர். பொற்கொல்லர்கள் தங்கத்தாலாகிய அழகுமிக்க அணிகளையும், பிற உலோகங்களாலான நகைகளையும் செய்து முடித்தனர். 'அயஸ்' (Ayas) என்று குறிக்கப்படும் உலோகத்தைச் சிலர்

தாமிரம் என்றும், மற்றும் சிலர் தகரமும் தாமிரமும் கலந்த உலோகக் கலவை என்றும் குறிப்பர். மற்றும் பலர், இது இரும்பையே குறிக்கிறது என்றும் கூறுவர். செம்மான்கள் தோலினாலான நீர்ப்பைகளையும் (Water-Cases) நாண்கயிறுகளையும் கவண் மற்றும் வில்லாளிகளுக்குத் தேவையான கைக்கவசங்களையும் செய்து குவித்தனர். ஆடவர், பெண்டிர் ஆகிய இருபாலாரும் நெசவுத்தொழில் செய்துவந்தனர். தையற்கலையிலும், கோரைப் புல் மற்றும் நாணல்களைக்கொண்டு பாய் முடைவதிலும் பெண்டிர் தேர்ந்திருந்தனர். குயவரும் (குலாலர்-Kulala) மக்களுக்குத் தேவையான பாண்டங்களை உற்பத்தி செய்தனர்.

## கலைகளும் விஞ்ஞானமும்

கவி புனையும் திறன் உச்ச நிலையடைந்திருந்தது. 'ரிக் சம்ஹிதை' (Rik Samhitha) என்னும் செய்யுள் தொகுதி கடவுளரைப் புகழ்ந்தேத்தும் பாக்கள் கொண்டது. இத் தொகுதியிலுள்ள பாக்களின் மொத்த எண்ணிக்கை 1017. 'அஷ்டகம்' அல்லது 'மண்டலம்' (Ashtakas or Mandalas) என்னும் பல பிரிவுகளாக இப் பாக்கள் அமைந்துள்ளன. 'அஷ்டகம்' ஒவ்வொன்றிலும் எட்டு அல்லது பத்துப் பாக்களுண்டு. 'ஹோத்ரிகள்' (Hotris) அல்லது பாக்களிசைப்போர் என்னும் புரோகிதர்கள் இப் பாக்களை இசைப்பர். பழமையான பாக்களைக் குடும்பச் சொத்துகளாக விளங்கிய புத்தகங்களில் (Family Books–II–VII) காணலாம். மரபிற்கிணங்க இப் புத்தகங்கள் முனிவர் கூட்டத்தினர் பலரின் (ரிஷி) தனியுரிமைகளாய் விளங்கின. இம் முனிவர் கூட்டத்தினருடன், கிருத்சமதர் (Gritsamada), விஸ்வாமித்திரர் (Visvamitra), வாமதேவர் (Vamadeva), அத்திரி (Atri), பரத்வாஜர் (Bharadvaja), 'வசிஷ்டர்' (Vasishta) ஆகியோர் முக்கியமானவர். எட்டாவது பகுதி கண்ணுவருக்கும் (Kanvas) ஆங்கிரசிற்கும் (Angirases) உரியதெனக் கருதப்படுகிறது. ஒன்பதாவது பகுதி சோமதேவரைச் (Soma) சாரும். இத்தொகுதியின் இறுதிப்பகுதிகள் I-X ஆகிய நூல்களில் காணப்படும். அவற்றில் சில பழைய பாக்களும் காணப்படுகின்றன.

சுவைமிக்க இசைக் காவியச்செய்யுள்கள் சில, ரிக் வேதத்தில் காணப்படுகின்றன. இவைகளில் சில, 'உஷத்கால' பெண் தெய்வத்தை (Goddess of the Dawn) இறைஞ்சுகின்ற வகையில் அமையும்.

எழுத்துக் கலையிலும் ரிக்வேத ஆரியர் தேர்ச்சி பெற்றிருந்தனரென்று எண்ணுவதற்கிடமுண்டு. பசுக்களை 'அஷ்டகர்ணி' என வருணிக்கும் சொல் இக் கருத்திற்கு அடிப்படை. இச் சொல்லைக் காதில் 8 எனும் எண்ணைக் குறியாகப் பெற்றவை என்னும் பொருள்பட விரித்துரைக்கின்றனர். இச் சொல்லிற்கு வேறு வகையாகப் பொருள் உரைக்கவும் கூடும். ரிக்வேத காலத்தவர்க்கு எழுத்துக் கலையறிவு இல்லை என்னும் கருத்தையே பெரும்பாலார் ஏற்கின்றனர். மௌரியப் பேரரசர் அசோகர் கையாண்ட லிபிகள் செமிட்டிக் (Semitic) வகையைச் சார்ந்தவையென்றும் ஆரியருடன் தொடர்பு கொண்டவையல்ல என்றும் கருதப்படுகின்றன. சிந்து சமவெளியில் மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற பகுதிகளில் வாழ்ந்த மக்கள், வரலாற்றுக்கு முந்திய காலத்திலேயே வரிவடிவங்கள் சிலவற்றைக் கையாண்டு வந்தனரென்பது தெரியவருகிறது. குருவையடைந்து வாய்மூலம் பாடங்கேட்கும் பழக்கம் ஆரியரிடம் மிகுந்ததென்பது கவனித்தற்குரிய செய்தி.

ரிக்வேத காலத்தில் கட்டடக்கலையும் சிறிது வளர்ந்திருந்தது. ஆயிரம் தூண்களையும் கதவுகளையும் கொண்ட மாளிகைகளைப்பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. சுவர்களையுடைய கற்கோட்டைகளையும், மட்பாண்டங்களையும் குறித்த செய்திகளையும் கேள்வியுறுகிறோம். இந்திரனைப் போன்ற உருவச்சிலை இருந்ததாகவும் குறிப்புகள் உண்டு. இதிலிருந்து, சிற்பக்கலை ஓரளவு வளர்ந்திருந்தது எனக் கொள்ளவும் கூடும்.

ஆரியர் பிணிகள் பலவற்றைக் குறித்து அறிவு பெற்றிருந்தனர் (பிஷஜ்-Bhishaj); பேய் பிசாசுகளை ஓட்டுவதும் இவர் வேலையாயிருந்தது. மூலிகைகளும், மருந்துகளும் பிணியைப் போக்கும் சக்தி பெற்றிருப்பது போல, மந்திரங்களின் உதவியாலும் பிணிகளைப் போக்க இயலும் என்ற எண்ணம் வலுப்பெற்றிருந்தது. இரணச் சிகிச்சையிலும் நல்ல தேர்ச்சி காணப்பட்டது. இயற்கைக் கால்களை இழந்தோர்க்கு இரும்பினாலான செயற்கைக் கால்கள் உபயோகிக்கப்பட்டன. வானசாத்திர அறிவு நிரம்பப்பெற்றவர், பல தாரகைகளை ஏற்கெனவே அறிந்து பெயரிட்டு வழங்கினர்.

## சமயம்

ஏற்றம் மிகுந்த ஒரே கடவுளிடம் தளரா நம்பிக்கை கொண்டு ரிக்வேத ஆரியர் வழிபட்டுவந்தனர். பல கடவுளர்

இருப்பினும் தேர்ந்து, தான் சொள்ளும் தெய்வமே, யாவரிலும் சிறந்ததென உறுதிபெறும் வழக்கம் காணப்படுகிறது. (Henotheism or Kathenotheism). இவ் வழிபாட்டுமுறையை இயற்கை வழிபாட்டுமுறை என்று குறிப்பதுண்டு. இயற்கைச் சக்திகளிலிருந்து தெய்வம் உருப்பெறுவதால் வழிபாட்டுமுறை இப் பெயர்பெறும். தாத்திரி (Dhatri-ஆதிக்கடவுள்), விதாத்திரி (Vidhatri) விதியமைக்கும்-(கடவுள்), 'விசுவேசுவரம் அகில மெலாமாக்கும் தெய்வம்)' பிரஜாபதி (Prajapathi) ஜீவராசிகளின் காவலன், 'சிரத்தா' (Sraddha) நம்பிக்கை, 'மன்யு' (Manyu), ரௌத்ரம் (சினம்) போன்ற கடவுளர் பிற்காலத்தில் உதிக்கின்றனர். இத்தகைய கடவுளருக்குப் புரோகிதர்களால் மிகுந்த கௌரவமளிக்கப்படுகிறது. மற்றும் பல கடவுளர் எளிய மக்களிடையில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இத் தகைய கடவுளரைப் 'பழமை வாதிகள்' (Orthodox) ஏற்பதில்லை. 'கிருஷ்ண' வழிபாடும், 'லிங்க' வழிபாடும் இருந்துவந்தன என்று கூறும் அறிஞர் சிலருமுண்டு. 'சிசுணதேவர்' என்னும் இக் கூட்டத்தினர் அம்சுமதி நதிக்கரையை இருப்பிடமாகக்கொண்டே 'கிருஷ்ணன்' என்னும் தெய்வத்தை வழிபட்டனர். 'திரித்ஸு களின்' தெய்வமான இந்திரனுக்குக் கிருஷ்ணன் வைரி என்ற காரணத்தால் சைவர்களைத் திரித்ஸுகளின் விரோதிகள் எனக் கருதுவது மரபு. 'சிசுனதேவ' என்னும் சொல் தொடருக்குத் 'தன்னடக்கமில்லாதவர்' எனப் பொருள் கொள்ளலாம். திரித்ஸுகளின் வைரியான சைவரை ஒரு சமயக் கூட்டத்தினராகக் கருதுவதைக்காட்டிலும் அரசியல் மரபினராகக் கருதுவதே சிறந்தது. வேதகாலப் புரோகிதர் வழிபட்டுவந்த ருத்திரனுக்குச் சிவன் என்னும் மறுபெயருண்டு. பிற்கால இதிகாச புராணங்களில் காணப்படும் 'கிருஷ்ணன்' என்ற கடவுளுக்கும், ரிக்வேத 'கிருஷ்ணனுக்கும்' எவ்விதத் தொடர்பும் இல்லை. பிற்காலக் கண்ணபிரானுர் யமுனை நதிக்கரையில் வாழ்ந்தவர். வேதகால கிருஷ்ணரோ, கௌரவ சாம்ராச்சியத்தைச் சேர்ந்ததொரு நதிக்கரையில் வாழ்ந்தவரென்பதை, 'பிருகத் தேவதம்' (Brihaddevata) என்னும் நூல் வாயிலாக அறிகிறோம்.

ஒளிமிக்க புவியின் தந்தை 'தியஸ்' (Dyas), (சூயஸ், டைஸ் பட்டர் Zeus-Diespiter) என்னும் கடவுள், தேவர் கூட்டத் தலைவர் 'புவியன்னை' (Mother Prithivi) 'பிருதிவீ' ஆகியவை பழமைமிக்கக் கடவுளர் பட்டியலில் காணப்படுகின்றன. அந்தப் பழம்பெருமைகளை ரிக்வேதச் செய்யுள் எடுத்துரைப்பதில்லை. 'வருணன்' (Varuna) என்னும் மேகராஜனும், இடிமுழக்கம் செய்து பொழியும் 'முகிற்கடவுளான' இந்திரனும், பழங்கடவுளரின் கௌரவத்தைப் பிடித்துக்கொண்டனர். முந்திய காலக் கடவுளர் பட்டியலில் 'வருணன்' மிகச்சிறந்து விளங்குவது கவனித்தற்குரியது. இயற்கைச் சக்திகளையும்,

நன்னெறிகளையும் தன்னாதிக்கத்திற்கொண்டு வலிமை பெற்று இருந்தமையால், 'வருணனை' 'அசுரன்' (Asura) (பாரசீக ஏடுகளில் 'அகுரா') என்றும் வழங்குவதுண்டு. நன்னெறிகளைச் சுட்டும் 'ரிட்டா' (Rita) என்னும் சொல் கி. பி. பதினான்காம் நூற்றாண்டிலேயே வழக்கிலிருந்தது என்பது மித்தானி மன்னர்கள் (Mitanni Kings) பட்டியலிலடங்கிய சாசனங்களிலிருந்து அறியலாகும். மக்கள் பாவ மன்னிப்புக்கோரி, வருணனை இறைஞ்சினார்கள். இதைப் போலவே பிற்காலத்தில் விஷ்ணுவைப் பாவ மன்னிப்புக் கோரி வழிபட்டு வந்தனரென்பது கவனித்தற்குரிய செய்தி.

'எம்மை நேசிப்பவனுக்கும், சகோதரனுக்கும்,
தோழனுக்கும், உடனுழைப்பவனுக்கும்,
எம்முடன் வாழும் அண்டை அயலானுக்கும்
விருந்தினனுக்கும் இயல்பால் துன்பமிழைக்கின்ற
எம் கூடாவொழுக்கத்தை மன்னிப்பாயாக,
ஓ வருணனே!
குற்றமிழைக்கும் மாண்புடைய மானிடரான யாம்,
வானவருக்கிழைக்கும் அநீதிகள்
எத்தன்மையவாயினும்
உறுதியற்ற நெஞ்சினரான யாம், உன் விதிகளை
மீறும்போதும்
அவ் வநீதியைப் பாராட்டாது மன்னிக்க.

குற்றமிழைக்கும் தன்னியல்பை உணர்ந்து மன்னிக்குமாற்றலுள்ள தெய்வசத்தியில் நம்பிக்கை ஏற்பட்டிருப்பது பிற்காலத்தில் பிரசித்தியடைந்து விளங்கும் 'பத்தி' நெறியின் கரு எனலாம்.

வருணன் அகில உலகங்களின் தலைவனாயும், நன்னெறிகளின் காவலனாயும் விளங்குவதுபோல, போரில் வெற்றி தேடித்தரவல்ல, மின்னல் வேகம் கொண்ட 'தெய்வமாயும் விளங்கினான்.

நாகத்தைக் கொன்றவனுக்கும், கடலை மீட்டவனுக்கும், உயரிய மலைகளைப் பிளந்து குகைகளமைத்தவனுக்கும், தாஸ வருணத்தைச் சிதைத்துச் சிறுமைப்படுத்தியவனுக்கும் உன்னை எண்ணிப் பணயம் வைக்கும் சூதாடிக்கும், எதிரியின் நல் விதியையும் நீ நல்குவாய்.

வேதக் கடவுளரில் இந்திரன் சிறந்து விளங்கலாயினன். இந்திரன் மேம்பட்டு வருகையில் வருணன் மதிப்பிழந்து, 'நீர் அதிபனாய்' மட்டிலும் காணப்படுகிறான்; கிரேக்கக் கடவுளாம் 'நெப்டியூனின்' நிலை எய்தினான் என்பதும் பொருந்தும்.

வருணனுடன் காணப்படும் கடவுளருள் 'மித்திரனும்' (Mithra) ஒருவன். சூரியனால் ஏற்படும் நன்மைகள் யாவையும் மனத்திற்கொண்டு, இக் கடவுளை உருவகப்படுத்தியிருக்க வேண்டும். இருவரும், 'ஆதித்திய' (Aditya) மரபினர்—அதிதி (Adithi) என்பவனுக்கு உதித்தவர்கள். ஒளி வழங்கும் பட்டியலில் 'சூரியன்' (Surya) பிரகாசிக்கச்செய்பவன், 'சாவித்திரி' (Savithri-வாழ்வளிப்பவள்) 'புஷன்' (Pusha-உணவளிப்பவன்), 'விஷ்ணு உருக்கிரமன்' (Vishnu Urukrama-நெடிய காலடிபெற்ற சூரியன்), அசுவினி அல்லது நசத்தியஸ் (Asvini or Nasathyas காலை, மாலை வேளைகளில் காணப்படும் தாரகைகளைக் குறிப்பனவாய் இருக்கலாம்) இவை பிற்காலத்தில் பிணிகளையகற்றும் குணம் படைத்தவைகளாகக் கருதப்படுபவை; இவற்றை 'டயோஸ்குரி' (Dioscuri)யுடன் ஒப்பிடலாம்; மற்றும், 'உஷஸ்' (Ushas) என்னும் அதிகாலைத் தெய்வமும் அடங்கும்.

ஒளியுலகிற்கும் பூமிக்குமிடையேயுள்ள பகுதி, 'காற்றுவெளி இவ் விடைவெளியில் இந்திரன் நீங்கலாக 'மருத்துகள்' (Maruts–புயற்கடவுள்), வாயு, வாத (Vayu, Vata–காற்றுத் தெய்வங்கள்), 'ருத்திரன்' (Rudra-புயல், மின்னல் ஆகியவற்றுக்குக் கட்டியங்கூறும் தெய்வம்), 'பர்ஜன்ய' (Parjanya-மழைத் தெய்வம்) முதலிய தெய்வங்கள் வாழ்ந்தனவெனக் கூறுவர். 'நிலப்பகுதிவாழ் தெய்வங்களில், அக்கினி, சோமன் (Soma), சரசுவதி ஆகியோர் முக்கியமானவர். அக்கினிதேவன் உதவியின்றிச் சடங்குகள் நடைபெறவியலாது. இதனால், அக்கினி தேவனுக்குத் தனி மதிப்பேற்பட்டது. சோமதேவனுக்கு வழங்கப்பட்ட ஆகுதியும் (libation) புனிதத்தன்மை பெற்றது. நதிக்கரைவாழ் 'சரஸ்வதி' என்னும் பெண் தெய்வம் பிற்காலத்தில் 'அறிவுக் கடவுளாய்' விளங்குகிருள். பிற்காலப் புராண இலக்கியங்களில் அதிகமாக இடம் பெறும் விஷ்ணுவும் ருத்திரனும் (சிவன்) ரிக்வேத இலக்கியங்களில் இடம் பெற்றுளர். பிரமனைப்பற்றிய நேரடிக் குறிப்புகள் இல்லையெனினும், 'விதாத்திரி' (விதி வகுப்பவன்), 'இரண்ய கர்ப்பன்' (Hiranyagarbha-தங்கவித்து-The Germ of Gold), 'பிரஜாபதி' (ஜீவராசிகளின் காவலன்) 'பிராமணஸ்பதி' (Brahmanaspathi) (தோத்திரங்களின் உறைவிடம்) என்னும் சொற்ருெடர் பிரமனையே குறிப்பதாகக் கொள்ளலாம். (இதை அத்துவைதக் கொள்கை என்றும் குறிக்கலாம்.) ஒரே கடவுளை வழிபடும் பழக்கம், வேதகால சமயத்தின் முக்கியக் கூறு. உலக ஒற்றுமையையும், பல பெயர்களையும் கொண்டிருந்தாலும் 'இறைவன் ஒருவனே' என்ற பிற்காலக் கொள்கையையும் முன்னறிவிக்கும் சில பாக்களுண்டு.

'இந்திரனென்றும், மித்திரனென்றும் வருணனென்றும்
அக்கினியென்றும், தெய்வீகம் பொருந்திய கருடமதன்என்றும்
உன்னை வழங்குவர் ;

'ஒருபொருளாம் உனக்குக் கவிஞர் பல பெயர்கள் அளிப்பர்;
அக்கினியும், யமனும், மாதரிசுவனும் (Matarisvan)
நீயே அன்றோ?'

இரண்யகர்ப்பனையும் (Hiranyagarbha) விஸ்வகர்மனையும் (Visva-Karman- அகிலமெல்லாம் ஆக்கியோன்) துதிக்கும் பாக்களில் அத்துவைதக் கருத்து நன்கு வெளியாகிறது.

'தோற்றுவிக்கவும், ஆக்கவும் வல்லவன் நம் தந்தை;
அவனறியா உயிரினமும், உறைவிடமும் உண்டோ?
அவன் கடவுளரையும், அவர்தம் பெயரையும் படைத்தான்;
அவனருள் பெறுவதற்கு இறைஞ்சி நிற்கும் உயிரினங்கள்.'

இறுதியாகப் படைப்பு இரகசியத்தை விளக்கும் பாட்டொன்று பின்வருமாறு தொடங்கும்:

'இறப்பும் இறப்பின்மையும் இங்கில்லை;
இரவு பகலுக்குள்ளும் வேற்றுமையில்லை;
தானே துணையான ஒருவனது அமைதியான மூச்சொன்றுண்டு,
அதனினும் சிறந்த பிறிதொன்று இல்லை.'

வேத கால வழிபாட்டில் நிவேதனங்கள் படைக்கும் வழக்கம் மிகுதி. பால், தானியம், நெய், மாமிசம், சோமரசம் ஆகியவை நிவேதனப் பொருள்கள். உபயோகப் பொருள்களைத் தெய்வமென வணங்கும் வழக்கமிருந்தது தெரியவரும். இந்திரனது உருவகப்பொருள் ஒன்றைப்பற்றிய குறிப்பு வேதப்பகுதியொன்றில் காணப்படும். ஏற்கெனவே நாம் கூறியது போல, 'சிசுன தேவர்கள் (Sisuna devas) என்னும் சொற்றொடரை இலிங்க வழிபாட்டிற்கு ஆதாரமாகக் கொள்வதை இங்கும் நினைவுகூரலாம்.

மரணத்திற்குப் பின்னுள்ள 'வாழ்க்கை'யைப் பற்றிய கருத்துகள் ரிக்வேதச் செய்யுள்களில் மிகக்குறைவாகத் தென்படுகின்றன. இறந்தவர், யமபுரியில் வாழ்ந்துவருவர் எனச் செய்யுள்கள் சில கூறுகின்றன. யமன், இவர்களை உள்ளக் கனிவோடு பராமரிப்பவனென்பதும் கூறப்படும். ஜீவாத்தும-பரமாத்தும தத்துவ ஆராய்ச்சியும், ஜீவன் உடல்விட்டு உடல் மாறும் கருத்துகள் பற்றிய ஆராய்ச்சிகளும் தொடங்கவில்லையென்பது கருதவேண்டுவதாகிறது.

# 4. பிந்திய வேதகாலப் பண்பாடு
## (Later Vedic Civilisation)

### ஆரியராதிக்கம் பெருகுதல்
### (Aryan Expansion)

காபூலிலிருந்து கங்கைச் சமவெளியின் மேற்பகுதிவரை ரிக்வேத ஆரியரது ஆதிக்கம் பெருகியிருந்ததென்பதை நாமறிவோம். வழிமுறையாக அரசு கட்டிலேறும் வாரிசுரிமை பெற்ற மன்னர் பலர், சிறிய இராச்சியங்கள் பலவற்றைத் தோற்றுவித்தனர்; சூழ்ந்திருந்த ஆரியரல்லாதாரிடமிருந்து இவ் விராச்சியங்களைக் காப்பாற்றியும் வந்தனரென்பது தெளிவு. இனத்தினரிடையே பூசல்கள் அடிக்கடி நிகழுவதுண்டு. இப் பூசல்களினுல் விளைந்த முடிவுகள் அதிசயிக்கத்தக்கவை. பலவீனமான கூட்டத்தினர் அண்டையிலுள்ள வலிமைமிக்க கூட்டத்தினருடன் இணைந்தனர். வெற்றி கண்ட இனத்தவரின் செல்வநிலை உயர்ந்தது. புதிய பிரதேசங்களைக் கைப்பற்றியும், அதிகச் செல்வத்தையடைந்தும் மேம்பட்டு வந்த இக் கூட்டத்தலைவர் பலர், பரந்த சாம்ராஜ்யங்களையமைத்து ஆண்டுவந்தனர். கம்பீரமான பல நகரங்களைப்பற்றிய வருணனைகளைப் பிற்கால வேத இலக்கியங்களில் முதன்முறையாகக் காண்கிறோம்.

பேரரசுகள் வளர்ந்தமையால், ஆரியரது அரசியல் சமயக் கருத்துகளும், தென்திசையிலும் கீழ்த்திசையிலும் பரவத் தொடங்கின. வீரமிக்க ஆரிய மன்னர்கள், இளவல்களின் பேரார்வமும், அக்கினி தேவனுக்கு வேள்விகள் மூலம் அதிக நிலப்பரப்பைக் கொள்ளும் வாய்ப்பளிக்க வேண்டுமென்னும் எண்ணமுள்ள புரோகிதரின் நெஞ்சத்துடிப்பும், ஆரியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அடிகோலின. பிந்திய வேதகால இறுதிக்குள் வளமிக்க யமுனை வெளி, மேற்குக் கங்கை வெளி 'சதநிர' (Sadanira) வெளி, ரப்தி அல்லது கண்டக் ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றினர். நெஞ்சுறுதி படைத்த வீரர் சிலர் விந்திய அடவிகளையும் கடந்து, கோதாவிரி ஆற்றிற்கு வடக்கிலுள்ள தக்காணத்தில் வலிமையுள்ள அரசுகளை நிறுவினர்.

சரஸ்வதியிலிருந்து கங்கை வெளி வரையுள்ள 'மத்திய நாடு' (துருவ மத்யம திஸ் - dhruva madhyama dis) ஆரியப் பேரரசின் மையமாய் விளங்கியது. கௌரவரும் (Kurus), பாஞ்சாலரும் (Panchalas) இவர்களைச் சார்ந்த கூட்டத்தினரும் இப் பகுதியில் வாழ்ந்துவந்தனர். இப் பகுதியிலிருந்தே பிராமண சமயம் பிற மாநிலப் பகுதிகளுக்குப் பரவியது. சரயு, வாரணவதி ஆறுகளின் வடிகால்களமைந்த கோசலம், காசி நாடுகளுக்கும், கறுப்பு நிலங்கொண்ட கண்டக் நதியின் கீழ்த் திசையிலமைந்த விதர்ப்ப நாட்டிற்கும் பிராமண சமயக் கருத்துகள் பரவின. இவற்றுக்கப்பாலுள்ள பகுதியில் கலப்பு இனத்தினர் வாழ்ந்துவந்தனர். (உ-ம்.) கிழக்குப் பீகார்ப் பகுதியிலுள்ள அங்கர் (Angas), தெற்குப் பீகார்ப்பகுதியில் வாழும் மகதர், வடக்கு வங்காளத்தில் வசித்துவந்த புண்டரர் (Pundras) போன்ற தஸ்யுக்கள், விந்திய மலைவாழ் சவரர், புளிந்தர் (Savaras and Pulindas), மற்றும் கோதாவிரிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த ஆந்திரர் முதலியோர்.

கௌரவரும் பாஞ்சாலரும் மிக்க பிரசித்தி பெற்றவர். அசந்திவதம் (Asandivat), காம்பில்யம் (Kampilya) என்பன முறையே இவர்களுக்குத் தலைநகரங்களாம். சரஸ்வதி, திருஷத்வதி ஆகிய நதிகளுக்கிடையில் நாக்குப் போன்ற நீண்ட நிலப் பரப்பையும் (சிட்டகாங்-ரக்ஷி) டில்லி, மீரட்டு என்னும் பகுதிகளையும் இவர்கள் ஆண்டுவந்தார்கள். கௌரவர் ஆண்ட இந்தியப்பகுதிக்குக் 'குருக்ஷேத்திரம்' (Kurukshetra) என்பது பெயர். ஐக்கிய மாகாணப் பகுதிகளான பாரீல்லி (Bareilly), பூதான் (Budaun), பருகபாது (Farukhabad) ஆகிய மாவட்டங்களையும், அவைகளையடுத்துள்ள நிலப்பகுதிகளையும் பாஞ்சாலர் ஆண்டுவந்தனர். புருக்கள் (Purus), பரதர் (Bharathas) போன்ற கூட்டத்தினர் இணைந்து கௌரவகுலம் தோன்றியதென்றும், சிரிஞ்சயர்களையும் (Srinjayas) துர்வசுக்களையும் கொண்ட இனமே பாஞ்சால வகுப்பு என்றும் குறிப்பிடலாம். ரிக்வேதக் காலத்துக் கிரிவிகள் (Krivis) என்னுமினத்தினரின் வழித்தோன்றல்களாகவும் பாஞ்சாலர்களைக் கருத இடமுண்டு.

பால்ஹிகப்ரதிபியர் (Balhikapratipiya), பரீட்சித்து (Parikshit), ஜனமேஜயர் (Janamejaya) போன்ற கௌரவ குல மன்னர்களைப்பற்றிய குறிப்புகள் பிந்திய வேதகால இலக்கியங்களில் காணப்படுகின்றன. புராணக் கதைகளின் முக்கியப் பாத்திரங்களாகவும் இவர்கள் விளங்கி வருகின்றார்கள். பரீட்சித்து அதர்வவேதச் செய்யுள் ஒன்றின் கதாநாயகராய் விளங்கு

கிருர். அவர் ஆட்சிபுரிந்த நாட்டில் பாலும் தேனும் பெருகி யோடின என்றும் அச் செய்யுள் விரித்துரைக்கிறது. 'அகில உலகின் தலைவன்' (ராஜா, விஸ்வஜனன்) என அச் செய்யுள் அவரை வருணிக்கிறது. அவர் மைந்தர் ஜனமேஜயர் (Janamejaya) புவனமெங்கும் திரிந்து வாகை சூடினர் என் பதும் தெரியவரும். ஜனமேஜெயரின் சந்ததியார்கள் திறமை குன்றியவர்களாய்க் காணப்படுகின்றனர்கள். பல விபத்து களுக்கு இலக்காகி இறுதியில் குருக்ஷேத்திரத்தைத் துறந்து ஓடும் நிலை அவர்களுக்கேற்பட்டது. கௌரவகுல மரபைச் சார்ந்த ஒருவன் கௌசாம்பி (Kausambi - கோசம்–அலகாபாதி னருகிலுள்ளது) என்னும் நகரத்திற்குக் குடிபெயர்ந்தனரென் பதைக் கர்ணபரம்பரைச் செய்தி வாயிலாக அறிகிறோம். அவர் தோற்றுவித்த வலிமைமிக்க அரசு, புத்த சமயம் தோன்றிய காலம்வரை நிலை பெற்றிருந்தது.

பாஞ்சால வமிசத்திலும் பேராற்றல் மிகுந்த பலர் தோன்றி னர். அவர்கள கௌரவரைச் சில சமயங்களில் வென்றும், அவ ருடன் பல உடன்பாடுகள் செய்தும் வந்தார்களென்பது தெரி கிறது. பெருமன்னன் பிரவாகன-ஜய்வலி (Pravahana-Jaivali), முனிபுங்கவர்களான 'அருணி' (Aruni), சுவேதகேது (Suvetake-thu) போன்ற தத்துவ சமய ஞானியர் பலர் பாஞ்சாலம் பகுதி யில் வாழ்ந்தமையே அந் நாட்டிற்குப் புகழ் தேடிக்கொடுத்தது.

உபநிடத காலத்தில் (Time of Upanishads) பாஞ்சால நாட் டின் புகழ் சிறிது மங்கியது எனலாம். அக்காலங்களில் விதேக நாடு அறிவுக் கருவூலமாய் விளங்கியது. சாம்ராட்டு (Samrat) என்னும் பெயர் பெற்ற அந் நாட்டு அரசர் ஜனகர் (Janaka), யாஞ்ஞுவல்கியர் (Yajnavalkya) எனனும் பேரறிஞரைப் போற்றி ஊக்கமளித்து வந்தார்; கௌரவ பாஞ்சால நாட்டிலுள்ள மேதைகள் யாவருக்கும் அழைப்பு விடுத்து அவையொன்று கூட்டினர். ஜனகர் அறிஞருக்கு அழைப்பு விடுத்து அவை கூட்டியது, ஏதென்ஸ் நகர அறிஞர், மாசிடோனிய மன்னர் அவையில் கூடும் கழகத்தை ஒத்திருந்தது. புத்த சமயம் வேரூன்றி வளரத்தொடங்கியபோது, விதேகம் மறைந்து, 'உச்செயினி நாட்டுக் கூட்டம்' (Ujjain Confederacy) வலுப் பெறத் தொடங்கிவிட்டது.

## அரசராதிக்கம் வலுப்பெறுதலும் ஆட்சிமுறை விரிவடைதலும்
## (Growth of Royal Power and Elaboration of the Administrative Machinery)

கூட்டத்தினர் பலர் இணைந்ததும், பிந்திய வேதகாலத்தில் பரந்த சாம்ராச்சியங்கள் ஏற்பட்டதும், போர்முனைகளில் படை

களை நடத்திச் செல்வதற்குத் தகுதியான தலைவர்கள் தேவைப் பட்டதும், மன்னராதிக்கத்தைப் பெருக்குவதற்குரிய சாதனங் களாய் விளங்கின. மக்கள் தலைவனெனத் தன் நிலையை அரசன் உயர்த்திக்கொண்டான். பிராமண வகுப்பினர் மட்டும் இதற்கு விதிவிலக்கு. அவர்கள் 'சோமதேவரே' தங்கள் தலை வர் என்று கூறி வந்தார்கள். ஆயினும், மன்னன் விரும்பினால் பிராமணரையும் கூட்டத்திலிருந்து வெளியேற்ற இயலும். குடி மக்கள் யாவரும் [பலி, சுல்கம், பாகம் - Bali, Sulka, Bhaga] திறை செலுத்தி வந்தனர். அவர்களைத் தன் இச்சைப்படி துன்புறுத்தும் உரிமை மன்னனுக்குண்டு. கடைச்சாதியினரைத் தன்னிச்சைப்படி நாடு கடத்தவும் கொல்லவும் மன்னனுக்கு உரிமையுண்டு.

படை நிருமாணமும், நீதி வழங்கலும் மன்னனின் முக்கியக் கடமைகள். சட்டக் காவலனாகவும், மக்களைப் பாதுகாக்கும் தந்தையாகவும், வைரிகளை வேரறுக்கும் காவலனாகவும் அவன் விளங்கினான். அவன் தனக்குத் தண்டனை வழங்குவோர் எவரு மில்லாது, பிறரைத் தண்டிக்கும் உரிமையளிக்கவல்ல செங் கோலை (Danda) ஏந்தி நின்றான்.

வலிமைமிக்க மன்னர்கள் 'ராஜவிஸ்வஜனீனன்' (Rajavisva-janina) [பற்றுமிக்க மக்கள் குலத்தின் தலைவன்], அகில புவன பதி, 'சர்வ பௌமி' (Sarva Bhoumi) 'ஏகராதன்' (Ekrat) முதலிய விருதுகளைச் சூடிக்கொண்டதோடு தங்கள் கௌரவத்திற் கொப்ப 'ராஜ சூயம்' (Rhajasuya - முடி சூடல்), 'வாஜபேயம்' (Vajapeya-வலுவூட்டும் பானம்) 'அசுவமேதம்' (Asvamedha-வேள்வி) போன்ற பல வேள்விகளைச் செய்துவந்தார்கள். ராஜசூய வேள்வியின்போது, அலுவலர் (ரதிகள்-Rahthis) வீடு களிலுள்ள தெய்வங்களுக்கு நிவேதனப் பொருள்கள் வழங்கு வதும், புரோகிதர் தண்ணீரால் மன்னையைச் சுத்தி செய்வதும் (Abisheka), ஆநிரை கவருதல், விளையாட்டுச் சமர், மன்னன் வெற்றி பெறுவதற்கென அமைந்த சூதாட்டம் போன்ற கேளிக் கைகளும் நடைபெறுவது வழக்கம். 'வாஜபேய' வேள்வியில் தேரோட்டப் போட்டி முக்கியமான சடங்கு முறை. இப் போட்டி வேள்வித் தலைவனுக்கு வெற்றி தரும் வகையில் அமை யும் புவியன்னையை வணங்கி, அரியணை அமர்த்தும் சடங்குகள், தொடர்ந்து நடைபெறும். 'அசுவமேத' வேள்வியில் குதிரை யொன்று, ஆயுதங்கள் தாங்கிய உயர்குடி இளவலர் சிலா பின் தொடர நாடெங்கும் சுற்றித்திரிய அனுமதிக்கப்படும். இடையூ றின்றிச் சுற்றித் திரிந்து மீண்டும் வரும் குதிரையை வேள்வியில்

பலியிடுவது வழக்கம். யாழிசைத்துப் புகழ் பாடும் வழக்கமும், புரோகிதர் அடுக்கான கதைகளைக் கூறும் வழக்கமும், சடங்கு முறைகளாய் விளங்கி வந்தன.

மத்திய தேசமன்னர் 'ராஜன்' என்ற விருதுடன் திருப்தியடைந்தனரென்பது தெரியவருகிறது. சுற்றுப்புறமுள்ள மன்னர்கள் பிற விருதுகளையும் கொண்டிருந்தார்கள் என்பது தெரியவருகிறது. கீழ்ப்பகுதியில் வாழ்ந்த மன்னர்கள் 'சாம்ராட்டு' என்னும் விருதையும், தெற்கிலுள்ள மன்னர்கள் 'போஜ' (Bhoja) என்னும் விருதையும், மேற்கிலுள்ளவர் 'ஸ்வராட்டு' (Svarat) என்னும் விருதையும், வடக்கிலுள்ள 'ஜனபத'த் தலைவர்கள் (Janapata) 'விராட்டு' (Virat) என்ற விருதையும் கொண்டிருந்தனரென்பதும் தெரியவருகிறது. 'சாம்ராட்டு' என்னும் விருது, 'ராஜன்' என்னும் விருதைவிடத் தரத்தில் உயர்ந்தது எனக் கீழ்ப்பகுதியிலுள்ளோர் கருதி வந்திருக்க வேண்டும். புத்த சமயம் வலுப்பெற்றுவந்த காலங்களில் சிறந்தோங்கிய ஏகாதிபத்தியக் கொள்கை, கீழ்த்திசையிலிருந்து வலுப்பெற்று வளர்ந்திருக்கக்கூடும்.

மன்னன் க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்தவன் என்பது பொது வழக்கு. அவ்வாறே இருக்கவேண்டுமென்ற நியதி இல்லை. அரசுரிமை பரம்பரைச் சொத்து. மன்னனைத் தேர்ந்தெடுக்கும் முறையும் வழக்கத்திலிருந்ததென்பது, முடிசூட்டுச் சடங்கையொட்டிய அதர்வ வேதச் செய்யுள்களிலிருந்து தெரியவரும். தேர்வு முறையிலும் அரச குலத்தினரையே மக்கள் விரும்பி வரித்தார்கள்.

மன்னனின் எல்லையற்ற செல்வாக்கிற்கு எதிர்ப்புகளும் உண்டு. முடிசூட்டு விழாவையொட்டிய சடங்குமுறைக்கேற்ப, பட்டமெய்தும் தலைவன், அரியணையினின்று இறங்கி, பிராமணர்களையும் நாட்டு அரசு விதிகளையும் வணங்கும் வழக்கமிருந்தது. மன்னனுடைய செயல்களை யாவற்றையும் மறுப்பின்றிப் பிராமணர்கள் ஏற்கவில்லையென்பது வேத கால இலக்கியங்களில் காணப்படும் கதைகள் பலவற்றிலிருந்து புலனாகிறது. இக்கதைகள் மன்னனுக்கும் பிராமணர்களுக்குமிடையே நிலவிய கருத்துவேற்றுமைகளைக் கருவாகக் கொண்டவை. 'சூதன்' (Suta), 'கிராமணி' (Gramani) போன்ற அலுவலர் எளிய வகுப்பைச் சார்ந்தவர். 'ராஜகர்த்தர்' (Rajakartri) அல்லது 'மன்னர்களை உருவாக்குபவர்' என்னும் அடைமொழிகள் இவர்களுக்கு இருந்தன. அரசியலில் இவர்களுக்குரிய செல்

வாக்கை இவ் வடைமொழிகள் விளக்குகின்றன. மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சமிதி 'சபா' என்னும் பேரவைகளும் முக்கியம் வாய்ந்தவை. மன்னனின் நல்வாழ்வு பேரவைகளுடன் அவனுக்கிருந்த நல்லுறவைப் பொறுத்தது என்ற கருத்து வழங்கிவந்தது. கடமை தவறிய அலுவலர்களையும், கொடுங்கோலர்களையும் வெறுத்த மக்கள் வெகுண்டெழுந்து பதவி நீக்கம் செய்தார்கள் என்பதும் தெரியவருகிறது.

மன்னரின் கௌரவம் வளர்ந்தமையால் விரிவான அரசு முறைகளும் ஏற்படலாயின. அரசனுக்கு உதவியாக, உயர் பதவிகளுக்குப் புரோகிதரைத் தவிர வேறு அலுவலர்கள் அமர்த்தப்படவில்லையென்பதை ரிக்வேதச் சான்றுகளிலிருந்து அறிந்தோம் 'சம்கிரஹித்ரி' (Samhirahithri-Treasurer-பொக்கிஷதார்), பாகதுக (Bhagadugha—வரி வசூலிப்பவர்), சூதன் (Sutha-தேரோட்டி, பாணன் அல்லது கட்டியக்காரன்) 'க்ஷத்திரி' அரண்மனை முதல்வன், 'அக்ஷவபன்' (Akshawapa-தோட்ட மேற்பார்வையாளன்), 'கோவிகர்த்தனன்' (Govikarthana-வேட்டையில் மன்னனுக்கு உதவுபவன்), 'பலகாலன்' (பயண உதவியாளன்) போன்ற புதிய அலுவலர் பலர் பெயர்களைப் பிந்திய வேத இலக்கியங்களில் காண்கிறோம். இவற்றுடன் முந்திய வேத காலந்தொட்டுக் காணப்படும் சமய, இராணுவ அலுவலர்களான 'புரோகிதன், சேனனி, கிராமணி' போன்ற பெயர்களும் காணப்படுகின்றன. அமைச்சர் என்னும் பிற்காலப் பதத்திற்கு வழிகாட்டியாய் விளங்கும் 'சசிவ்' (Saciv) என்னும் சொல்லும் காணப்படுகின்றது. 'சம்க்ரஹித்ரி', 'பாதுக' என்னும் பதங்கள் மக்கள் அளித்த 'பலி', 'சுல்கம்' என்ற பெயர்களையொட்டியே வழங்கப்பட்டு வருவது கவனித்தற்குரியது. பிற்கால வரி விதித்தலுக்கும், வருவாய்த்துறை நிருவாகத்திற்கும் இச் சொற்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதையும் உணரலாம்.

மாநில அரசு முறைத் தொடக்கத்தைக் குறித்த செய்திகளை 'ஸ்தபதி' (Sthapathi), 'ஸதபதி' (Sathapathi) முதலிய குறிப்புகளிலிருந்து அறியலாகும். 'ஸ்தபதி' என்னும் அலுவலர், மலைச்சாதியினர் வசித்துவந்த சுற்றுப்புறங்களையும், 'ஸதபதி' என்போர் நூறு கிராமங்களடங்கிய தொகுதிகளையும் பரிபாலித்து வந்தனரென்பது தெரியவருகிறது. பிற்காலச் சட்டப் புத்தகங்களில் நாம் காணும் கிராம அதிகாரிகள் டலரின் முன்னோர்களென இவர்களைக் கொள்ளலாம். கிராம அதிகாரிகள் ஆட்சி அலுவலர்களின் கடைநிலையில் இருந்தவர்கள். பிரஸ்ன உபநிடதக் குறிப்பிலிருந்து (Prasna Upanishad) 'அதிக்ருதர்கள்' (Adhikrita)-

என்னும் இக் கிராம அலுவலர்களை மன்னன் வேலையிலமர்த்தி ஞன் என்பது தெரியவரும். போலீஸ் இலாகாவைக் குறித்த செய்திகள் மிகக்குறைவு. ரிக்வேதத்தில் காணப்படும் 'ஜீவக்ருப்' (Jivakrub) என்னும் சொல்லும், உபநிடதங்களில் காணப்படும் 'உக்ரஸ்' (Ugras) என்ற சொல்லும் போலீஸ் அலுவலர்களைக் குறிப்பவை எனக் கருதி வருகின்றனர். இக் கருத்தை முழுவதும் ஏற்பதற்கில்லை.

நீதி வழங்குவதில் அரசனுக்குப் பெரும்பங்கு இருந்ததெனினும் சில சந்தர்ப்பங்களில் அவ் வுரிமை அத்தியட்சகர்களுக்கு (Adhyakshas) வழங்கப்பட்டிருந்தன. சில முடிவுகள் இனத்தாரின் பொதுத் தீர்மானத்திற்கு விடப்பட்டிருந்தன. பேராளர்களடங்கிய 'ஸபாசத்ஸ்' (Sabhasads-மதிப்பிடுவோர்) என்னும் சிறு அவைகள் முடிவுகளெய்தி வந்தன. கிராமங்களிலுள்ள சிறு பூசல்களைக் 'கிராமியவாதின்' (Gramyavadin) அல்லது கிராமிய நீதிபதியும் அவரது சபையும் (Sabha) விசாரித்துத் தீர்ப்பு அளித்தனர். குற்ற விசாரணை முறைகளில் கடுமபணிச் சோதனைகளும் (Use of ordeals) கையாளப்பட்டு வந்தன. சிவில் வழக்குகளில் சமரசம் செய்து வைப்பதும், கிரிமினல் வழக்குகளில் பழிக்குப்பழி வாங்கும் வழக்கமும் நடைமுறையிலிருந்து வந்தன.

## சமுதாய மாறுதல்கள்
(Social Changes)

வீடு கட்டும் முறையிலும், ஆடை அணிகளிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்களில்லை. மாமிச உணவை மக்கள் வெறுக்கத் தொடங்கினுர்கள் என்பது தெரியவருகிறது. புதிய கேளிக்கைகளும் வழங்கலாயின. வீணுகதிகள் (Vinagathis) யாழிசைக்கும் பாணரால் இசைகள் பின்தொடரப் பெருவிழாக்களில் பாடப்பட்ட பாக்கள் (காதை-gathas), 'சைலுஷா' (Sailusha-நடிகர்) மற்றுமிதுபோன்ற குறிப்புகளு முண்டு. இசைக்கருவிகளுக்கு நூற்றுக்கணக்கான நரம்புகளிருந்ததும் (சத தந்து-Sata-tantu) தெரியவருகிறது. அத்தகைய காதைகளும் வெற்றிப் பாடல்களும் பிற்கால இதிகாசங்களுக்கு வழி வகுத்தன.

பெண்கள் நிலையில் பெருமாறுதல்களில்லை. மகளிர் துன்பம் பயப்பவர் எனக் கருதப்பட்டு வந்தனர். பேரவைகளில் பெண்களுக்கு இடமில்லை. வாரிசுரிமையும் அவர்களுக்கில்லை. மண முடித்த உயர்குலப் பெண்டிரும், சகக்களத்திகளின் போட்டிகளால் வருத்தமுறும் நிலையிலிருந்தனர். குறிப்பாக, அரசி

களுக்கு இத் துன்பம் மிகுதி. 'மகிஷி' (Mahishi) அல்லது 'பட்டத்தரசி'யும் 'வவதை' (Vavata) அல்லது காதற்கிழத்தியும், நேசிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டும் வந்தனர். 'பரிவிரித்தி' (Parivrkthi) போன்ற மற்ற மனைவிகளுக்கு அப்படிப்பட்ட கௌரவம் வழங்கப்படவில்லை. ஆயினும், சமயச் சடங்குகளில் மன்னனுடன் பங்கு கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கிருந்தது. அவர்களுக்கு அறிவு பெறும் வாய்ப்புகளும் உண்டு என்பதை, அரசவைகளில் நடைபெற்றுவந்த தத்துவ விசாரணைகளில் அவர்கள் பங்குகொண்டிருந்தார்கள் என்னும் செய்தியிலிருந்து நன்கறியலாம். திருமண விதிகள் கடினமாயின. பாலிய விவாகம் இருந்ததெனவும் அறிகிறோம்.

சாதிமுறையிலும் பல முக்கிய மாறுதல்கள் ஏற்படலாயின. உயர்சாதியினரான பிராமணருக்கும் க்ஷத்திரியருக்கும் சலுகைகள் பல வழங்கப்பட்டன. வைசிய சூத்திர சாதியினருக்கு அவை மறுக்கப்பட்டன. வைசிய சூத்திரரை மற்றவர் இச்சைப்படி கொடுமை செய்ய இயலும். நான்கு சாதியினருக்கும முறையே பலவகையான விதிமுறைகள் இருந்தன. 'சாதி மாற்றம் இயலாது,' என்னும் நிலையில்லையெனினும், சாதிவிட்டுச் சாதி மாறுவது கடினமாய் இருந்தது. மேற்சாதியினர், கீழ்ச்சாதிப் பெண்டிரை மணந்துகொள்ளலாம் என்ற சலுகையுண்டு. ஆயினும், சூத்திரப் பெண்களை மணந்துகொள்வது பொதுவில் விரும்பப்படவில்லை. மேற்சாதியினரது வாழ்க்கை, கடுமையான சட்டதிட்டங்களுக்குட்படுத்தப்பட்டது. 'சாந்தோக்கிய உபநிடதம்' (Chandogya Upanishad) தெளிவான மூன்று வாழ்க்கை நிலைகளைக் குறிக்கிறது. வேள்வி வேட்பதையும், அறிவு தேடிக் கொள்வதையும் அறஞ் செய்வதையும் கடமைகளாகக் கொண்ட குடும்பத்தினர், கடுந்தவம் மேற்கொள்ளும் முனிவர், குருகுலவாசம் செய்யும் பிரமசாரிகள் என்ற நிலைகள் குறிக்கப்படுகின்றன. பிராமணர்களின் கௌரவமும் செல்வாக்கும் வளர்ந்தோங்கியிருந்தன. நாட்டைக் காப்பவரென்றும் கடவுளின் பிரதிநிதி (பேராள்) என்றும்தன்னைக் கூறிக்கொண்டு ஒரே புரோகிதன் பல நாட்டு மன்னர்களுக்கு ஆசாரியனாய் இருந்த போதிலும், மேலை நாட்டில் அரசனை எதிர்க்கவல்ல செல்வாக்குப் பெற்ற மதகுருவைப்போல புரோகிதன் செல்வாக்கு வளர்ந்துவிடவில்லை. பிராமண க்ஷத்திரிய வகுப்பினரிடையே ஏற்றத்தாழ்வுகளைக் குறித்த பூசல்கள் பல இருந்தனவென்றும், க்ஷத்திரியர் தங்களைவிட உயர்ந்த சாதியினர் இல்லையென்றும், புரோகிதர் அரசனைப் பின்பற்றுபவரென்றும் கூறி வந்தனர். பெரும்பான்மையினர் தொழிலடிப்படையில் பல சிறு குழுக்களாய்ப் பிரிந்து வாழ்ந்தனரென்பது தெரியவருகிறது. உழவுத்தொழிலையும் மாடு மேய்ப்பதையும் தொழிலாகக் கொண்டிருந்தவர்களோடு, வணிகர், தேர் செய்வோர், கொல்லர்,

தச்சர், தோல் பதனிடுவோர், மீன் பிடிப்போர் ஆகிய தொழிலாளரும் தனித்தனி இனமாய் வாழ்ந்தனர் என்பதற்கான குறிப்புகள் காணப்படுகின்றன. சிலருக்குச் சமுதாயத்திலிருந்த கௌரவம் குறைந்து வந்தது. பிராமண இலக்கியப்பகுதியொன்றில் தச்சரின் ஸ்பரிசம் (Touch) அசுத்தமானதென்றும், சடங்குமுறையின் புனிதத் தன்மையைப் பாதிக்குமென்றும் கூறப்படுகிறது. இவ்வாறு சூத்திரனும் அசுத்தமானவனென்றும் அக்கினி தேவனுக்குப் பலியாக அளிக்கப்படும் பாலை அவன் தொடக் கூடாது என்றும் தடைகளிருந்ததும் தெரியவருகிறது. சமுதாயக் கடைநிலையிலிருந்த அவரை யொத்தநிலை சூத்திரர்களுக்கும் ஏற்படலாயிற்று. அவர்களை வைசியர்களுடன் இணைத்துக் கூறுவதும், இவ் விருவரையும் பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் எதிரிகள் எனக் கூறுவதும் சர்வ சாதாரணமான செய்திகள். சூத்திரரின் நல்வாழ்விற்கும் வளத்திற்கும் இறைஞ்சுகின்ற துதிப்பாக்களும், சின்னாள்களுக்குப்பின் அவர்களைப் புகழ்ந்தேத்துகின்ற பாக்களும் உருவாயின. பூர்வக்குடிகளுள் பலரைச் சூத்திர இனத்தில் அனுமதித்து, இச் சாதியினரின் எண்ணிக்கையை ஆரியப் பேரரசு பெருக்கியது.

மேலே குறிக்கப்பட்டுள்ள நான்கு சாதிப்பிரிவுகளிலும் இடம் பெறாது 'விராட்டியர்' (Vratyas) என்றும், 'நிஷதர்' (Nishads) என்றும் இரு வகுப்பினர்களுண்டு. 'விராட்டியர், பிராமணீய எல்லைக்கோட்டிற்குப் புறம்பான ஆரியரென்பது தெரியவருகிறது. இவர்கள் பிராமணர்களின் வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை. 'பிராகிருத மொழி பேசிவந்த இவர்கள், நாடோடிகள். 'ஆருகதம்' (Arhat) முதலிய வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்த இவர்கள், மகதத்தில் வாழ்ந்த மக்களுடன் விசேஷத் தொடர்பு கொண்டிருக்க வேண்டுமென்பது தெரியவருகிறது. பிராமண இனத்தில் சேருவதற்கு இவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். அதற்கெனச் சடங்குமுறைகள் சிலவற்றை இவர்கள் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. 'நிஷாதர்' ஆரிய வகுப்பினரல்லரென்பது வெளியிடை மலை. கிராமங்களில் வசித்துவந்த இவர்களுக்கு 'ஸ்தபதிகள்' என்னும் தலைவர்கள் உண்டு. இக்கால 'பில்களின்' (Bhils) முன்னோர்களென இவர்களைக் கருதுவதற்கு இடமுண்டு.

## பொருளாதார நிலை
## (Economic Condition)

மக்கள் செல்வந்தருட்பட (இபியர் - Ibhyas)—கிராமங்களில் வசித்துவந்தார்கள். நகரமாந்தரைப் போன்று வாழ்க்கை வசதிகள் கிராமங்களிலும் நிரம்பியிருந்தன. சில கிராமங்களில் பயிரிட்டு விளைபொருளீட்டும் நிலச்சொந்தக்காரர்களிடமிருந்து பெருநிலக்கிழார் பலர், நிலங்களை விலைக்கு வாங்கி, கிராமம்

முழுவதற்கும் சொந்தக்காரராயினர். நிலவுடைமைகளைப் பிற ருக்கு மாற்றுவதில் பொதுவில் விருப்பமில்லை. நிலங்களை ஜாரி செய்வதற்கும் இனத்தினரின் ஒப்புதல் தேவையாயிருந்தது.

உழவு, மக்களின் முக்கியத் தொழில்களுள் ஒன்று. இத் தொழிலுக்கேற்ற கருவிகளும் அபிவிருத்தியடைந்திருந்தன. புதிய தானிய வகைகளும் பயிரிடப்பட்டன. உழுதுண்டு வாழ்க்கை நடத்தியவர்களுக்கு நேரிட்ட பல இன்னல்களை உபநிடதப் பகுதியொன்று குறிக்கின்றது. புயலாலும், வெட்டுக் கிளிக் கூட்டத்தாலும் கௌரவ பாஞ்சால நாடுகளில் பெருஞ் சேதமேற்பட்டதால், பலர் நாட்டைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது. வாணிகமும் தொழிலும் தழைத்தோங்கின. வாணி கப் பரம்பரையொன்று ஏற்பட்டது. மலைவாழ் இனத்தினரான 'கிராதருடன்' (Kiradas) உள்நாட்டு வாணிகம் நடைபெற்று வந்தது. மலைச்சிகரங்களில் தோண்டியெடுத்த மூலிகைகளையும், பிற மருந்துப் பொருள்களையும், துணிகள், விரிப்புகள், தோல்கள் ஆகிய பொருள்களைப் பெறுவதற்குப் பண்டமாற்றுச் செய்தனர். கடல் பற்றிய அறிவும் மிகுந்திருந்தது. 'சதபத பிராமணத்தில்' கூறப்படும் வெள்ளப் பெருக்கைப்பற்றிய கதையொன்றிலிருந்து பாபிலோனியருடன் வாணிகத் தொடர்பு இருந்திருக்க வேண்டு மென்பது கருதப்படுகிறது. நிக்ஷம், சதமானம், கிருஷ்ணலம (Krishnala) போன்ற நாணய அளவைகளிருந்தமையால், வாணிகம் வளர்ந்தோங்கியது எனக் கருதலாம். இவை நாண யங்களின் எல்லாக் குணங்களையும் பெற்றிருந்தன எனக் கூற இயலாது. 'நிக்ஷம்' என்பது குறித்த எடையுள்ள தங்கமென் பதும், இருபத்திரண்டு 'ரதிகள்' (Rathis) கொண்டது ஒரு 'நிக்ஷம்' என்பதும் அறியலாம். 'சதமானம்', 'நிக்ஷம்' ஆகியவை சம மதிப்புடையவை. ஒரு 'கிருஷ்ணலம்' ஒரு ரதியின் 1·8 கிரெயின் எடையுள்ளது. வாணிகச் சங்கங்கள் இருந்தன. 'கணங்கள்' அல்லது 'கழகங்கள்', 'ஸ்ரேஷ்டிகள்' (Sreshtins) அல்லது கழகத்தலைவர்கள் போன்ற சொற்கள், வாணிகச் சங்கங்களிலிருந்த செய்தியை உறுதிப்படுத்து கின்றன.

தொழில்களின் எண்ணிக்கை வியப்பளிக்கிறது. தொழில் நுணுக்கங்களும் பெருகியிருந்தன. தச்சர், தேர் செய்வோர், வில் செய்வோர், நாணும் அம்புகளும் செய்வோர், தோல் பத னிடுவோர், உரோம உடை தயாரிப்போர் என ஒவ்வொரு தொழி லையும் அததற்கேற்ற தனிச்சொற்களால் குறித்திருப்பது கவனித்தற்குரியது. துணிகளில் பூவேலை செய்வது, சாயம் காய்ச்சுவது போன்ற தொழில்கள் பெண்களுக்குரியவை யெனக் கருதப்பட்டுவந்தன.

## சமய வளர்ச்சி
## (Religious Development)

சமயத்துறையில் பெருமாறுதல்கள் ஏற்பட்டன. பழைய கடவுள்களின் புகழ் சிறிதுசிறிதாகக் குறைந்து வந்தது என்ருலும், புவியன்னே, வருணன் ஆகியோரின் பெருமைகளேயும் இறைத்தன்மைகளேயும் போற்றும் பல பகுதிகள், குறிப்பாக அதர்வவேதத்தில் காணப்படுகின்றன. சமயச் சடங்குமுறைகளேப் புரோகிதர் பெருக்கினர். பேய், பிசாசு, மந்திர சத்தி, மாயாஜாலம் போன்ற மூட நம்பிக்கைகளும் புனித சாத்திர ஏடுகளில் இடம் பெற்றிருந்தன. ரிக்வேத கால இறுதியில் காணும் ஒரே கடவுட் கொள்கையும் அத்துவைதக் கருத்துகளும், காலப்போக்கில் மிக வலுப்பெற்று விளங்கின. சிருஷ்டி இனங்களின் தலைவனை 'பிரஜாபதி' (Prajapathi) பழங்காலத் தெய்வங்கள் யாவற்றிலும் சிறந்து விளங்கலாயினன். பிற்கால அவதாரக் (Avatars) கருத்துகள் பல, பிரஜாபதியைக் கொண்டுள்ள பல கதைகளில் புதைந்து கிடப்பதைக் காணலாம். பிரஜாபதி பூமியைப் பிரளயத்திலிருந்து காப்பாற்றும் எண்ணத்துடன் காட்டுப்பன்றி உருக்கொண்ட கதையொன்றும், ஆமையுருக்கொண்டு புதிய உயிரினத்தைச் சிருஷ்டிக்கத் தொடங்கிய கதையொன்றும் கவனித்தற்குரியவை. புரோகிதரும் சாத்திர வல்லுநரும், சடங்குமுறைகளே விஸ்தரிப்பதிலும், நன்மையே நல்குபவனும் தியாக மூர்த்தியுமான பிரஜாபதியைக் கூவியழைத்துக் கௌரவிப்பதிலும் ஈடுபட்டிருக்கும்பொழுது தத்துவ ஞானிகள், சடங்குமுறைகளின் பயன்களேச் சந்தேகித்து, அகிலத்தின் அடிப்படை ஒற்றுமையை எண்ணி, ஒவ்வொரு ஜீவராசியிலும் உறைகின்ற உள்ளொளி பெருக்கும் அழிவிலா வழிகாட்டியும் அந்தமும் அகில ஜீவனுமாகிய 'பிரமம்' அல்லது 'பரமாத்துமனே' (Brahman or Paramathman) அடையும் வகையை எண்ணி வந்தார்கள்.

எளிய மக்களுக்குச் சாத்திர வல்லுநர்களின் சடங்கு விதிகளும் ஞானிகளின் தத்துவ விசாரணைகளும் விளங்காப் புதிர்களாய் இருந்துவந்தன. ரிக்வேத கால முதல் வழக்கிலிருந்து வரும் தெய்வங்களேயே அவர்கள் வழிபட்டு வந்தார்கள். இத்தெய்வங்கள் இந்திரன் வருணன் போன்ற மிகவும் பிரசித்தியடைந்திருக்கவில்லை. ருத்திரன் என்னும் தெய்வத்தை மக்கள் மிகமிக விருப்பத்துடன் வழிபட்டார்கள். ஆதி முறையீட்டுத் தந்திரங்களில் இவனுக்குச் 'சிவன்' மங்களமானவன் என்னும் திருநாமம் வழங்கி வருவதைக் காணலாம். விரைவில் இக்கடவுளேத் 'தேவதேவன்' (மகாதேவன்) என்றும், சேதனுப்பிராணிகளின் காவலன் (பசுபதி) என்றும் வழங்கினர். வரலாற்றிற்கு முர்திய காலந்தொட்டுச் சிந்துவெளியில் ருத்திரன் தலைமை ஆண் தெய்வமாய் விளங்குவதால் அவனுக்குப் பெருமதிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என எண்ணுவதற்கிடமுண்டு.

ருத்திரனுடன் இணையாகப் புகழ் எய்திவரும் மற்றுமொரு தெய்வம் 'விஷ்ணு' எனலாம். ரிக்வேதப் புகழ்பெற்ற சூரிய மரபினனுன விஷ்ணு, மூன்று நீண்ட சுவடுகளையுடையவன எனப தால், அவனிடம் மக்களுக்குள்ள மதிப்பு உயர்ந்து வந்தது. பிரபஞ்சம் சீர் பெறுவதற்கும், நன்னெறிகள் வளர்வதற்கும் ஆதி காரணமானவனும். மனித குலத்தைத் துன்பங்களிலிருந்து மீட்பவனும், கடவுளரின் உறுதுணைவனுமான விஷ்ணு, வருணனைப் போல ஏற்றமடைந்து விளங்கினுன் சுவர்க்கவாசிகள் யாவரிலும் மேலான புனிதத்தன்மை வாய்ந்த அவனது உயரிய 'பரம பதம்' (Paramapadam), முனிவர், ஞானிகள் ஆகியோரின் குறிக்கோளாயிற்று. வேதகால இறுதிக்குள் அவனுக்கு 'வாசுதேவன்' (Vasudeva) என்னும் பெயர் வழங்கலாயிற்று. பிற்கால இதிகாச நாயகனும், நரதெய்வமும், தேவகி புத்திரனுமான கிருஷ்ணனுக்கு வாசுதேவன் என்னும் பெயர் வழங்கி வந்தது குறிப்பிடத் தக்கது. 'கிருஷ்ண தத்துவத்தை', வேள்விக்கான சடங்கு முறை விளக்கத்தை எதிர்த்து, 'தூய வாழ்க்கையே புரோகிதருக்கு அளிக்கும் தருமங்களைவிடச் சத்தி வாய்ந்தது,' என்னும் கருத்துள்ள குழுவினரைப்பற்றி உபநிடதச் செய்யுள் ஒன்று கூறும். காலனிடமிருந்து அழைப்பு வரும் இறுதி நேரத்தில் மூன்று கருத்துகளே நினைவிலிருக்க வேண்டுமென அக் குழுவினர் கூறுவர். அவை), 'அழிவற்றவனும் நீயே; நிலை பெற்றவனும் நீயே; வாழ்க்கையின் ஜீவனும் நீயே,' என்பனவாம். தெய்வத்துள் தெய்வம் வாழும் சுவர்க்கத்தினும் மேலான ஒளிப் பிழம்பு, ஆன்ம சோதனையில் ஈடுபடுவோரின் குறிக்கோளாக அமையவேண்டும். பிற்கால 'பாகவத' சமயக்கோட்பாடுகளின் கருவாக இக்கருத்தை ஏற்கலாம். பிற்காலங்களில் இக் கருத்துப் பெருக்கினை அணையிட்டு ஒன்றுதிரட்டி விளக்கம் தந்தனர் என்பதையும் நினைவுறுத்திக்கொள்ளலாம்.

## இலக்கியமும் விஞ்ஞானமும்
(Literature and Science)

(1) வேதகால இறுதிக்குள் ஆரியரிடையே இலக்கிய வளர்ச்சி மிகுந்து காணப்படுகிறது. பெரும்பாலும் பிராமண மரபையொட்டிய இவ் விலக்கியத்தை மனப்பாடம் செய்வது வழக்கம். உபநிடதங்களில் மக்கள் விரும்பிக் கற்ற பலதுறைகளையும் அவற்றில் மக்கள் ஈடுபட்டிருந்த வகையினையும் காணலாம். உபநிடதப் பட்டியலில் பின்வரும் துறைகள் காணப்படுகின்றன: வேதங்கள் (Vedas), இதிகாச புராணங்கள் (Ithihasa-Puranas-சமயச் சார்புள்ள கதைகளும், பழைய கற்பனைக் கதைகளும்), 'பித்திரியா' (Pitrya-இறந்தோரின் ஆவிகளைப் பற்றிய சாத்திரம்), 'இராசி' (Rasi-கணிதம்), 'தைவம்' (Daiva-சகுண இலட்சணக்கலை), 'நிதி' (Nidhi-கால வரன்முறை) 'வகோவாக்கியா' (VakoVakya-வடமொழி ஆராய்ச்சி), ஏகாயன (Ekha-

yana-அறநூல்), 'தேவ வித்தியா' (Deva Vidhya-தெய்வீகப் பெயர்களின் மூலங்களைப்பற்றிய ஆராய்ச்சி), 'பிரம்ம வித்தை' (Bramhavidhya-பிரம்மத்தைப்பற்றிய அறிவு), 'பூத வித்தியா' (Bhudhayidhya-பூதகணங்களைப்பற்றிய செய்திகள்), 'க்ஷத்திர வித்தியா' (Kshatravidya-போர்க்கலை), 'நக்ஷத்திர வித்தியா' 'வான சாத்திரம்', 'சர்ப்ப வித்தியா' (Sarpavidhya-பாம்புகளைக் குறித்த சாத்திரம்), 'தேவசன வித்தியா' (Devajana vidhya-ஆடல் பாடல் அல்லது புராணம்).

இவற்றையன்றிப் பின்வரும் கலைகளும் காணப்படுகின்றன. உச்சரிப்புக்கலை (Siksha-சிட்சை), சடங்குமுறை (Kalpa-கல்பம்), இலக்கணம் (Vyakarna-வியாகரணம்), சொல்லாராய்ச்சி (Niruktha-நிருத்தம்), பாட்டுகளில் சந்தஸ் (Chandas), வானநூல் (Jyotisha).

இப் பட்டியல்களில் முன்னர்த் தரப்பட்ட துறைகள் யாவும் ஆராய்ச்சிக்குட்பட்டவையெனில், இவ் வரிய களஞ்சியங்கள் நமக்குக் கிட்டாதது வருந்தத்தக்கது! பின்னுள்ள பட்டியலிலுள்ளவையும் வழக்கிலிருந்து வருபவையுமான வேத இலக்கியச் சொற்கள் சிலவற்றைப்பற்றிய குறிப்புகள் வருமாறு:

'வேதம்' என்பதன் மூலம் 'வித்' (Vid) 'அறிவு' என்பதாகும். இது 'பொது அறிவு' எனப் பொருள்படும். பல தலைமுறைகளால் மனப்பாடம் செய்யும் முறையால் புனிதமானதென்றும், தெய்வத்தால் அருளப்பட்டதென்றும் கருதப்படும் இலக்கியப் பகுதிகளுள் ஒன்றான 'வேதம்' (சுருதி-Sruthi) நமக்குக் கிட்டுகிறது.

நான்கு வகையான இலக்கியத் தொகுப்புகளை வேதம் கொண்டிருக்கிறது. அவை: (1) மந்திரம் (Manthra-வாசகம், பாட்டு, சூத்திரம்), வேத இலக்கியத்தில் தொன்மை வாய்ந்த பகுதி, ரிக், எசுர், சாமம், அதர்வம் என்னும் நான்கு சங்கிதைகளை (தொகுதிகளை)க் கொண்டது. முதல் மூன்றையும் 'திரயி' (Trayi) அல்லது 'முப்பிரிவான அறிவு' என வழங்குவதுண்டு. இவை மூன்றும் ஆதிச் சமய இலக்கியங்களெனக் கருதப்படுகின்றன.

'ரிக்சங்கிதை' (Riksamhitha) என்னும் தொகுதி பல தோத்திர இசைப்பாக்களையுடையது. 'ஹோத்திரி' (Hotri) என்னும் பாணர் இதைச் சொல்வது மரபு. தொகுதிகள் யாவும் மிகப் பழமையானவை எனக் கருதுவதற்கு வகையில்லாதிருப்பினும், பாக்கள் பல, நாம் பிந்திய வேதகாலம் எனக் கொண்டிருக்கும் காலத்திற்குப் பின்னரே இயற்றப்பட்டிருக்க வேண்டும். சாமவேதம் (Samaveda) என்னும் சங்கிதை அல்லது கீதங்களடங்கிய புத்தகத்தில் (Book of Chants) புதிய கருத்துகள் மிகக்குறைவு.

எழுபத்தைந்து பாக்கள் நீங்கலாகப் பிற யாவும் ரிக்வேதத்தி லிருந்து பெயர்த்தளிக்கப்படுபவை. சோம வேள்வியின்போது தனிக்கூட்டத்தினரான 'உத்காத்திரிகள்' என்னும் புரோகிதர் களால் இசைக்கப்படுவதற்கென இப் பாக்கள் இயற்றப்பட்டுள் ளன. எசுர் வேதத் தொகுதியின் (வேள்விக்காலத் தோத்திரங் கள்) ரிக்வேதச் செய்யுள்களுட்பட சில புதிய வசன சூத்திரங் களும் காணப்படுகின்றன. வேள்விக்கான சாதனங்களை உடல் வருந்திச் சேகரிக்கும் 'அத்வார்யு' (Adhvaryu) என்னும் புரோகி தனின் உச்சாடத்திற்கென இவை ஏற்பட்டிருந்தன. இச் சங் கிதையில் வகையான பாடங்கள் காணப்படுகின்றன. அவை: (a) தைத்திரீய மைத்திரியாணி (Taittriya-Maitriyani), 'கத்கம்' (Kathkam) போன்ற பரிசீலனை பெற்ற பகுதிகளில் காணப்படும் பில்லிசூனிய விதிகளடங்கிய எசுர்வேதம் (Black-Yajurveda) (b) வாஜசேனேயி (Vajasaneys) என்னும் பரிசீலனை பெற்ற பகுதி யில் காணப்படும் தூய எசுர்வேதம் (White Yajur Veda) என்பன.

'அதர்வ வேதம்' என்னும் நான்காவதில் மாயாஜால வித்தைகள் பல புரிவதற்குரிய சூத்திரங்கள் காணப்படுகின்றன. முன் கூறப்பட்ட மூன்று சங்கிதைகளுக்குப் பல நாள்களுக்குப் பின், இது உருப்பெற்றுச் சாத்திரத் தொகுதிகளில் இடம் பெற் றிருக்க வேண்டும். இதிலுள்ள கருத்துகள் யாவும் பழமை யானவை. மக்களிடையே வழக்கிலிருந்த பாக்கள் இதில் இடம் பெற்றிருக்கின்றன. இதிலுள்ள பாக்கள் ஆசாரிய மரபினரால் இயற்றப்படவில்லை. சில, ரிக்வேதத்தைப்போன்று பழைமை வாய்ந்தவை. பாட்டுகள், பிணிகளை நீக்குவதற்கான மந்திர யந்திரங்கள், நட்பை நிலைபெறச் செய்வதற்கான மந்திரங்கள் முதலியவைகளைக் கொண்டது அதர்வ சங்கிதை. செய்யுள்கள் சில, புவியன்னையின் கொடை வளமையையும், எல்லா முணர்ந்த கடவுளின் தன்மையையும் ஏத்திச் சித்திரிக்கின்றன.

'சேய்க்குத்தாய் பால் வழங்குவதுபோல
புவியன்னை நலங்கள் யாவையும் நம்பொருட்டுச் சொரியட்டும்
அன்னை பிருதிவியே, நின்பாலுள்ள காடுகளும்,
குன்றுகளும், பனி உறைந்த மலைகளும் நலமே பொழிக !'
('May earth......Maintain')

(2) மற்றொரு வகையான வேத இலக்கியங்கள், 'பிராம ணங்கள்' எனப் பெயர் பெறுகின்றன. இவை வேள்விச் சடங்கு கள், தோத்திரங்கள் ஆகியவற்றின் விளக்கங்களையுடையவை. இவை வேள்விக் குறிப்புகளடங்கிய வசன இலக்கியங்கள். புவனத்தின் எழுச்சியை விளக்கும் கட்டுக்கதைகளும், பழம் புராணக் கதைகளும், காதைகள் (Gathas) என்ற ஆசாரிய மரபில் பிரசித்தி பெற்ற மன்னர்களின் அருஞ்செயல்களை விளக்கும் பாக்களுமாகும்.

(3) ஆரண்யகங்கள் (Aranyakas) அடங்கியது அடுத்து வரும் தொகுதி. இதிலுள்ள கட்டளைகளை அடவிகளின் இடையிலேயே உபயோகிக்க வேண்டும் என்னும் பொருளும், வனவாசிகளான முனிபுங்கவருக்குப் பயனுள்ளவை என்னும் பொருளும் 'ஆரண்யகம்' என்னும் சொல்லுக்குப் பொருந்தும். இவை பிராமணங்களின் பிற்பகுதிகளாய்க் காணப்படுகின்றன. மொழியும், நடையும், கருத்துகளுங்கூடப் பிராமணங்களிலுள்ளவைகளைப் போன்றவை. சடங்கு முறைகளின் உட்பொருள், சங்கிதைகளடங்கிய கருத்துகள் ஆகியவைகளிலேயே இவை மிக்க கவனம் செலுத்துகின்றன. சடங்கு முறைகளில் இவை அதிக கவனம் செலுத்துவதில்லை.

இறுதியாயுள்ள தொகுதிகள் 'உபநிடதங்கள்'. இவை சிலருக்கு மட்டும் அறிவிக்கப்பட்ட 'இரகசியக் கோட்பாடுகள்' எனப் பெயர் பெறுகின்றன. 'உப-நி-ஷத்' என்னும் தொடரிலிருந்து இதிலடங்கிய உண்மைகள் 'ஒருவரைத் தேர்ந்து கற்கத் தகுந்தவை' என்னும் கருத்துரைப்பர் சிலர். மகனுக்குக் கற்பிக்கப்படும் சூத்திரங்களையும், நம்பிக்கையுள்ள சீடனொருவனை அருகிலமரச்செய்து குருவினால் போதிக்கப்படும் பேருண்மைகளையும், 'உபநிடதங்கள்' எனலாம் என்றும் சிலர் குறிப்பர். ஆரண்யகங்களில் அடங்கியவைகளாகவோ, அல்லது அவற்றுக்குத் துணைச் செய்யுள்களாகவோ உபநிடதங்கள் அமைகின்றன. சில தனிப் பகுதிகளும் காணப்படுகின்றன. இவை 'பிரமன்', 'ஆத்துமன்' (Brahman, Athman) என்னும் இரண்டு அரிய கருத்துகளைப் பற்றிய தத்துவ விசாரணையிலும், ஆழம் மிக்க சிந்தனையிலும் ஈடுபடுகின்றன. அகில ஜீவனுக்கும், அந்தத்திற்கும், தனி ஜீவனுக்குமிடையேயுள்ள தொடர்பை ஆராய்வது உபநிடதங்களின் முக்கியக் குறிக்கோள். தொன்மை வாய்ந்த உபநிடதங்கள் புத்தர் காலத்திற்கு முன்பு தோன்றியிருக்க வேண்டும். உபநிடதங்கள் என்ற பெயரில் நிலவும் பதவுரைகள் சில, பிற்காலங்களிலேயே தோன்றியிருக்கக்கூடும்.

மேலே குறிக்கப்பட்டுள்ள இலக்கியத் தொகுதிகளுக்கு மட்டிலும் 'சுருதி' (Sruthi) என்ற பெயர் வழங்கிவருகிறது. இவை இறைவனால் அருளப்பட்டவை. வேத இலக்கியத்தின் கருவும் இவையே. இவற்றுடன் நெருங்கிய தொடர்புகொண்ட பதவுரைகள் விளக்கவுரைகளுள் சில வேதங்களெனக் கொள்ளும் தகுதி பெறுதவை. எனினும், வேதாங்கங்கள் (Vedangas) அல்லது 'வேதங்களின் உறுப்புகள்' எனக் கருதப்படுகின்றன. வேதங்களைப் போன்ற மதிப்புப்பெறுதஇவை 'ஸ்மிருதி' (Smrithi) எனப் பெயர் பெறுகின்றன. பழமைமிக்க பெருமுனிவர்களுக்கு ஆண்டவன் அளித்த வேத அறிவு, வாய்ப்பாடமாக வழிவழியாய் வந்த சீடர் வாயிலாக இன்று நமக்குக் கிட்டுகிறது. வேதப் பள்ளிகளில் (Charanas—சரணங்கள்) இம்முறை தொடங்கிற்று. எளிதில் மனப்பாடம் செய்வதற்கேற்ற வகையில், வசன காவியங்

களாகக் கருத்துகள் வடிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குச் சூத்திரங்கள் (Suthra–இழை, சுட்டும் சொற்கள், வழிகாட்டி, விதி, சுருக்கம்) என்பது பெயர். விளக்கவுரைகள் சில பிற்காலங்களில் செய்யுள்களாக வடிக்கப்பட்டன.

வேதாங்கங்களின் மொத்த எண்ணிக்கை ஆறு. அவை: 'சிட்சை' (Siksha-உச்சரிப்புக்கலை), 'கல்பம்' (Kalpa-சடங்கு முறை), 'வியாகரணம்' (Vyakarana-இலக்கணம்), 'நிருக்தம்' (Niruktha-சொல்லாராய்ச்சி), 'சந்தஸ்' (Chandas-யாப்பு அல்லது பாக்கள் அமைப்பதற்கான கலை), 'ஜோதிஷம்' (Jyothisha) வான ஆராய்ச்சி) ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகள் சில உபநிடதங்களில் காணப்பட்டாலும், தெளிவான விளக்கங்கள் பின்னரே தோன்றியிருக்கக்கூடும்.

வேதச் செய்யுள்களைச் சரிவர உணர்ந்து ஓதும் வகையை அறிவிப்பது 'சிட்சை'. ரிக்வேத இலக்கியத்தின் தொடர்ச்சியான நூலும், செய்யுள்களைப்பற்றிய இலக்கணக் குறிப்புகள் அடங்கிய சொல் அகராதியும் (Word Text) சிட்சைக் குழுவினரால் தொகுக்கப்பட்டவை. 'பத-பாதா' (Pada–Patha) என்னும் அகராதியைத் தொகுக்கவும், 'சங்சிதைப் பாதா' (Samhitha-Patha) என்னும் தொடர்ச்சியான தொகுதியை நிறுவவும் உதவுகின்ற வழி நூலான 'பிராதிசாக்கிய சூத்திரங்கள்' (Pradisakya Suthras) என்னும் நூல் இக் குழுவினரின் அரிய முயற்சியால் எழுந்தது.

'கல்பம்' அல்லது சடங்கு முறைச் சாத்திர விளக்கங்களான 'சிரௌத சூத்திரங்கள்' (Srauda Suthras) பெருவேள்விகளைச் செய்து முடிப்பதற்கான விதிமுறைகளைக்கொண்டு விளங்குகின்றன. அன்றாட வாழ்க்கையில் பின்பற்றுவதற்கான சடங்கு விதிகளை 'கிருகிய சூத்திரங்களில்' (Grihya Suthras) காணலாம். புனிதமான ஆட்சி இயலுக்கான நீதி போதனைகளைத் 'தர்ம சூத்திரங்கள்' (Dharma Suthras) விளக்குகின்றன. 'சிரௌத சூத்திரங்களின் இணை பிரியாப் பகுதிகளான 'சுல்வ சூத்திரங்கள்' (Sulva Suthras) கட்டட நிருமாணத்திற்கும் வேள்விச் சாலைக்கும் அக்கினி குண்டங்களுக்குமுரிய அளவுகளைக் குறிக்கின்றன. இவற்றை ஜியோமிதித் துறையிலுள்ள ஆதி நூல்களாகக் கருதலாம்.

கல்ப சூத்திரங்களுக்குத் துணையாகச் சில புத்தகங்களும் (Manuals) காணப்படுகின்றன, இவற்றுக்குப் 'பரிசிஷ்டங்கள்' அல்லது 'பிற்சேர்க்கை' என்பது பெயர்.

வியாகரணம், நிருக்தம், சந்தஸ் ஆகிய துறைகளில் பாணினி (Panini), யாஸ்கர் (Yaska), பிங்களர் (Pingala) ஆகியோருடைய நூல்கள் தலைசிறந்தவை. வானநூல் ஆராய்ச்சியடங்கிய சோதிடநூல் ஒன்றும் கிட்டியுள்ளது. அது பிற்காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும்.

# 5. மகதப் பேரரசின் எழுச்சியும் யவனர் வருகையும்

## The Beginning of Maghadhan - Ascendancy and The Coming of the Yavanas

### மகாஜனபதங்கள்
(The Great Janapadas)

ரிக்வேதக் கவிஞர் மண்டல முழுவதையும், தன்னாட்சியின் கீழ் இணைக்கும் ஆற்றலுள்ள பேரரசனைக் கற்பித்தனர். பிற்கால வேத நூல்களில் எண்டிசையிலும் வெற்றிக்கொடி நாட்டிய மன்னர் பலருடைய சாதனைகளைக் காண்கிறோம். போரில் வீழ்ந்த மக்களுக்குச் சொந்தமான பகுதிகளை வெற்றி கண்ட மன்னர் நிலையாகத் தம்மாட்சியில் இணைத்துக்கொண்டதாகச் செய்தியில்லை. சிறு கூட்டத்தினர் சிலரை அவ்வப்போது வெற்றி கண்டு அடிபணியச் செய்ய ஸ்தபதி (Sthapathi) என்னும் பிரதி நிதிகளை அரசன் (Rajan) ஏற்படுத்தியதாக மட்டிலும் செய்தி யறிகிறோம். கி. மு. ஆறும் நூற்றுண்டிலிருந்து இந்திய அரசியலில் புதியதொரு முன்னேற்றமான முறை தென்படுகிறது. கிழக்கிந்தியப் பகுதிகளில் வலிமைபெற்ற புதிய அரசுகள் தோன்றின. பிராமண இலக்கியங்கள் இவ்வரசத் தலைவர்களின் முடிசூட்டு விழாக்களைக் குறிக்கும் பொழுது, அரசுகளை 'சாம்ராச்சியங்கள்' (Samrajyas) எனக் குறிக்கின்றன. இச் சாம்ராச்சியங்கள் அண்டையிலுள்ள சிறு இராச்சியங்களைத் தன்வயப்படுத்திய தன் விளைவாக எழுந்த பேரரசு ஒன்று யாவற்றையும் விழுங்கி, இந்துகுஷ் மலைத்தொடரிலிருந்து மைசூர் சாம்ராச்சியத்தின் வடக்குப் பகுதியிலுள்ள மாவட்டங்கள் வரையிலும் பரந்த மாபெரும் பேரரசு ஒன்று எழுவதற்கு அஸ்திவாரமிட்டது. இந்திய அரசியலில் ஏற்பட்ட இப்பெரிய மாறுதலின் வரலாற்றை ஆராய்வதற்குமுன், பிராமணங்களின் காலந்தொட்டு, உபநிடதங்களின் காலம் வரையிலும், மா நிலப் பகுதிகள் கைமாறிய விவரங்களை அறிதல் வேண்டும்.

ஐத்திரேய பிராமணத்தில் (Aitreya Brahmana) ஆரியர் அறிவுக்கெட்டிய அகன்ற நிலப்பரப்புச் சித்திரிக்கப்படுகிறது.

கௌரவ நாட்டு வட எல்லைதொட்டுச் சென்னையின் வடபகுதி வரையிலும் இமயத்திற்கப்பாலிருந்து சத்வதர் (Satvats) (போஜ நாடு உட்பட) நாடு வரையிலும், யமுனை, சம்பல் நதிகளுக்குத் தெற்கிலும், மேற்கிலுள்ள 'நிச்யர்' (Nichyas) 'அபச்யர்' (Apachyas) நாடுகளிலிருந்து கிழக்கிலுள்ள 'பிரச்சியர்' (Prachyas) நாடு வரையிலும் ஆரிய நிலப்பரப்பு விரிந்திருந்தது. 'நிச்யர், அபச்யர்' ஆகியோர் வாழ்ந்த பகுதிகளைத் தெளிவாக அறிந்து கூறுவது இயலாது. மகதத்திலும் அதன் சுற்றுப்புற மாகாணங்களிலும் வாழ்ந்த பிரச்சியரைக் கிரேக்கர் 'பிரசீ' (Prasii) எனக் குறிக்கின்றனர் என்பது உறுதி. மகதத்திற்கு அப்பால், வட வங்காள மக்களாகிய 'புரண்டரரும்' (Pundras), மத்திய கிழக்கு வங்காள 'வங்கர்களும்' (Vangas) வசித்தனர்களென்பது தெரிய வருகிறது. இவர்கள் ஆரியப் பேரரசு எல்லைக்கப்பால் வசித்தவர்கள். வங்கர்களைப்பற்றிய குறிப்புகள் பிராமணங்களில் இல்லை; அவற்றுடன் இணைந்துள்ள ஆரண்யகங்களிலேயே காணப்படுகின்றன. ஆரிய வகுப்பைச் சேர்ந்த 'போஜர்' நீங்கலாக, கோதாவிரிப் பள்ளத்தாக்கில் ஆந்திரர்களும், விந்தியக் காடுகளில் ஆதிவாசிகளும் வசித்து வந்தார்களென்பதை அறியலாம்.

பிற்காலத்தில் இந்து-பிராமண இலக்கியங்களிலும் சில புதிய பெயர்கள் காணப்படுகின்றன. ஒரிசாப்பகுதியிலுள்ள 'வைதரணி'யிலிருந்து, கோதாவிரிவரை பரவியுள்ள கீழ்க் கரையிலமைந்த கலிங்கம், கோதாவிரி நதியின் மேற்பகுதியிலமைந்த 'அஸ்மகம்' (Asmaka), 'மூலகம்' (Mulaka), மாளவத்தின் 'அவந்தி' (Avanthi), கத்தியவாரில் உள்ள (Kathiawar), 'சௌராஷ்டிரம்' (Saurashtra), சிந்து நதியின் கீழ்ப்பகுதியிலுள்ள 'சிந்து-சௌவீரம்' (Sindhu-Sauvira) ஆகியவை குறிக்கப்படுகின்றன. தொன்மையான புத்த இலக்கியமொன்றில், காபூல் பள்ளத்தாக்கிலிருந்து, கோதாவிரி நதிக்கரை வரை பரவியிருந்த பதினாறு பெருந்தேசங்கள் குறிக்கப்பட்டுள்ளன. புத்த சமய எழுச்சிக்குச் சற்றுமுன் இவை வழக்கிலிருந்திருக்க வேண்டும். இத் தேசங்களின் பெயர்கள் வருமாறு: அங்கம் (கிழக்கு பீஹார்), மகதம் (தெற்கு பீஹார்), காசி (வாரணாசி), கோசலம் (Oudh-அயோத்தி), விரிஜி (வடபீஹார்), மல்லம் (கோரக்பூர் மாவட்டம்), 'சேதி' (யமுனை-நருமதை நதிகளுக்கிடையேயுள்ள பகுதி), வத்சம் (அலகாபாது பகுதி), 'கௌரவம்' (தானேசுவரம், டில்லி, மீரட்டு மாவட்டங்கள்), பாஞ்சாலம் [பாரிலி–Bareilly], பூதான் [பரூகாபாது மாவட்டங்கள்], மத்ஸ்யம் [ஜெய்பூர்], 'சூரசேனம்' [மதுரா], 'அஸ்கமம்' [கோதாவிரிக் கரை], 'அவந்தி' [மாளவம்], 'காந்தாரம்' [பெஷாவர்,

ராவல்பிண்டி மாவட்டங்கள்], 'காம்போஜம்' [தென்மேற்குக் காஷ்மீரம் காபிரிஸ்தானப் பகுதிகள்]. கௌரவ பாஞ்சாலரின் சிறப்புக்காலம் முடிவுற்றுக் கிழக்கு நாட்டரசியலில் மையப் பகுதியாய் விளங்கியது.

## விரிஜியன் நாடு
(The Vrijian State)

மேலே, நாம் குறித்த கீழை நாட்டுப் பட்டியலில் விதேகம் இடம் பெறவில்லை என்பதும் 'விரிஜி' (வஜ்ஜி) அதன் இடத்தைப் பெற்றதென்பதும் கவனித்தற்குரியவை. 'ஞாத்திரிகள்' (Jnatrikas), 'லிச்சாவிகள்' (Lichhavis) உட்படப் பலஇனத்தினரால் இந் நாடு உருப்பெற்றது. 'வைசாலி' (Vaisali) இதன் தலைநகர். முசபர்பூர் மாவட்டத்திலுள்ள 'பாக்கிரா' (Bakhira) வாசிகளிடம் இறந்தவரின் உடலைப் புதைக்கவோ, எரிக்கவோ செய்யாது விடல் போன்ற திபேத்திய மக்களின் வழக்கங்கள் காணப்படுவதால், விரிஜியப் பகுதி மக்களை 'மங்கோலியர்' என இக் கால ஆசிரியர் சிலர் குறிப்பர். பிராமண சாத்திர வல்லுநரும் இவரை 'விராத்தியர்' (Vratyas) அல்லது க்ஷத்திரியரில் கடைநிலையிலுள்ளவர் எனக் குறிப்பர். இவருடைய வழக்கங்களில் பல ஈரானியரிடமும் காணப்படுகின்றன. வேதச்சான்றுகளிலிருந்து 'விராத்தியர்' பிராமண சாதியினராகக் கருதப்படுவதில்லையென்பதைத் தவிர, ஆரிய இனத்தினரென்பதும் ஐயப்பாடின்றி அறியப்படும். அழகுமிக்க 'லிச்சாவிகளை' (Lichhavis) 'தாவதிம்சா' (Tavathimsa) கடவுளருடன் புத்த இலக்கியங்கள் ஒப்பிட்டுக் கூறுவது கவனித்தற்குரியது.

முடியாட்சி 'விரஜிகளிடம்' இல்லை. பொது அவை ஒன்றும், முதியோருமாக ஆட்சி நிருவாக வேலைகளைக் கவனித்து வந்தார்கள், இவ்வரசு முறை 'கணம்' (Gana) அல்லது 'குடியாட்சி' எனப் பெயர் பெறும். மல்லர்களிடையிலும் (Mallas) இத்தகைய அரசு முறை காணப்படுகிறது. கபிலவஸ்துவில் (Kapilavastu) வாழ்ந்த சாக்கியரும், சும்சுமாரக் குன்றுகளில் (Swmsumara Hills) வாழ்ந்த 'பர்கரும்' (Bhargas), பிப்பாலிவன (Pipphalivana) மௌரியரும் இத்தகைய அரசு முறையைக் கடைப்பிடித்தனர்.

## நான்கு பேரரசுகள்
(Four Great Kingdoms)

குடியரசுகளின் வாழ்வு குறுகிய கால அளவுடையதாயிற்று. அண்டை நாடுகளை ஆண்டுவந்த வலிமை பொருந்திய பெரு

மன்னர்களின் சாம்ராச்சிய வெறிக்கு இவை இலக்காயின. அவந்தி, கோசலம், மகதம், வத்ஸம் ஆகிய நான்கு அரசுகள், வலிமை மிகப்பெற்று, நாடு விஸ்தரிப்புத் திட்டத்தையும், அரசியலாதிக்கத்தை வளர்க்கும் திட்டமொன்றையும் மேற் கொண்டன. அண்டை அயலாருக்கு இது தீமையாய் முடிந்தது.

'உஜ்ஜயினி' (இக்கால மாளவம்), அவந்தி சாம்ராச்சியத்தின் தலைநகராய் விளங்கியது. இந்நாட்டு மன்னனான 'சந்த பிரத் யோத மகாசேனன்' (Chanda Pradyotha Mahasena) அண்டையி லுள்ள நாடுகளை வென்று தன் ஆதிக்கத்தைப் பரப்பினான். வத்ஸ நாட்டை (அலகாபாதுக்கருகிலுள்ள கோசம் அல்லது கௌசாம்பி மாவட்டத்தையடுத்த நிலப்பகுதி) பரதகுலக் கொழுந்தாகிய உதயணன் என்னும் மன்னன் ஆண்டுவந்தான். அவன் பிரத்யோத மன்னனின் அருமை மகளைக் கவர்ந்ததோடு, மகத நாட்டு இளவரசி ஒருத்தியையும் மணந்திருந்தான். உதய ணனின் ஆதிக்கம் அண்டையிலுள்ள 'பார்கர்' (Bhargas) மீதும் பரவியிருந்தது.

கோசலத்தை, 'மகா கோசலன்' (Maha-Kosala) என்னும் பெருமன்னனும், அவன் மகன் 'பிரசேனஜித்து' (Prasenajit) என் பவனும் ஆண்டுவந்தனர். இதை இக் கால அயோத்திப் பகுதி என்னலாம். வீரகாவிய காலத்தில் சரயு நதிக்கரையிலமைந்த அயோத்தி இதன் தலைநகராய் விளங்கியது. வேத இதிகாசங் களில் புகழ் பெற்று விளங்கும் இட்சுவாகு குலத்துதித்த பெரு மன்னர் இந்தப் பகுதியை ஆண்டுவந்தனர். 'பரன்' (Para), 'அத்நாரன்' (Atnara) ஆகிய கோசல மன்னர்கள், வெற்றி வீரர்களாயும், தியாகமூர்த்திகளாயும் புகழ் பெற்று விளங்கி னார்கள். கோசல மன்னர், தண்டகாரணியத்தைக் கடந்து, தக்கணத்தில் புகுந்து 'பம்பை' (Pampa) அல்லது துங்கபத்திரா நதிக்கரை வரையிலும், அதற்கப்பாலுள்ள சிங்களம் வரையிலுங் கூட வியாபித்தனர் என இதிகாச இலக்கியங்கள் அறிவிக் கின்றன. ஆட்சியாளரின் மரபு ஒன்று 'சிராவஸ்தியை' வயப் படுத்தியது என்பது கூறப்படுகின்றது. 'ராப்தி' (Rapti) ஆற்றின் தென்கரையிலுள்ள பாழடைந்த 'சாகேத - மகதம்' (Saheth-Mahath) என்னும் பட்டணம், முற்காலங்களில் 'சிராவஸ்தி' என்னும் பெயர் கொண்டிருக்கக்கூடுமென எண்ண இடமுண்டு. இக் குல மன்னர் கோசல நாட்டு எல்லைகளைப் பல திக்கிலும் விஸ்தரித்தனர். 'நேப்பாள தரை' (Nepalese Tarai) வாழ் சாக்கியரின் (Sakyas) நிலப்பகுதிகளையும் இக் கால வாரணாசி மாவட்டப்பகுதிவாழ் 'காசிகளின்' (Kasis} நிலப்பகுதியையும்

வென்று கோசல நாட்டுடன் இணைத்தனர். கிழக்குப் பீகார் கோட்டைகளில் முனைத்தெழுந்த மற்றுமோர் அரச வமிசத்தினர், கோசலரின் பெருவளர்ச்சிக்கு அதிவிரைவில் முற்றுப் புள்ளியிட்டனர்.

தெற்குப் பீகாரின் பாட்னு, கயா (Patna, Gaya) மாவட்டங்களை உள்ளடக்கிய 'மகத' நாட்டில் வேத, இதிகாச காலந் தொட்டு ஆற்றல்மிக்க தலைவர் பலரிருந்தனர். ஆரியரல்லாத 'கீகதர்' (Kikathas) வாழ்ந்த இப்பகுதி ஆநிரை வளத்தில் சிறப்புற்றிருந்தது. எனவே, படையெடுத்து வந்த ஆரியரை இப் பகுதி மிகவும் கவர்ந்ததெனலாம். வென்ற மக்களைக் கல்ப சூத்திர (Kalpa sutras) இறுதிக்காலம் வரையிலும் பிராமண வகுப்பினராக மாற்ற இயலாது போயிற்று. இது காரணமாக இப் பகுதி மக்கள் கலப்பினத்தவராகக் காணப்படுகின்றனர். இப் பகுதிகளில் குடியேறிய பிராமணரும், க்ஷத்திரியரும் 'பிரம்ம-பந்து' (Brahma-Bandhu - பிராமணரெனக் கருதப்படுவோர்) என்றும், 'க்ஷத்ர-பந்து' (Kshatra Bandhu - க்ஷத்திரியர் எனக் கருதப்படுவோர்) என்றும் வழங்கப்படலாயினர். இப் பெயர்கள் குரோத மனப்பான்மையை வெளியிடுகின்றன. ஆரிய இனத்திற்குப் புறம்பான இவர்களுக்கு வேத சாத்திரங்களில் 'விராத்தியர்' (Viratyas) என்னும் பெயர் வழங்கி வருகிறது. ஆரியரோடு முற்றிலும் தொடர்பற்றவர் என இவர்களைக் கருதலாகாது.

கி. மு. ஐந்து ஆறும் நூற்றுண்டுகளில் மகத நாட்டை ஆண்ட மன்னர்களை, 'சைசுநாகர்' அல்லது சிசு நாகர் (Sisunagas) எனப் புராண இலக்கியங்கள் கூறுகின்றன. இவ் வமிசத்தைத் தோற்றுவித்த 'சிசுநாகன்' (Sisunaga) என்பவனது பெயரை அடிப்படையாகக்கொண்டு இப் பெயர் வழங்கி வருகிறது. புராண இலக்கியங்கள் சிசுநாகனை முதல்வனெனக் குறிப்பிடுகின்றன. புத்த இலக்கிய ஆசிரியர் சிசுநாகனை மரபில் பின் தோன்றினவனுகவும், மரபினை இரு கிளைகள் கொண்டதாகவும் கூறுவர்; இரண்டிலும் முன்னர்த் தோன்றிய கிளைக்கு 'ஹர்யங்க' (Haryanka) என்னும் பெயரையும் சூட்டுவர். சிசுநாகன், அவன் மகன், பேரப்பிள்ளைகள் ஆகியோரடங்கிய இரண்டாம் கிளைக்கு மட்டிலும் 'சைசுநாகர்' (சிசுநாகர்) என்னும் பெயர் பொருந்தும் எனக் கூறுவர்.

## பிம்பிசாரர்
(Bimbisara)

'சிரேணிகர்' (Srenika) அல்லது 'பிம்பிசாரர்' என்பவர், ஹர்யங்க குலத்தின் தலைசிறந்த மன்னர். பதினைந்து ஆண்டுகள்

நிரம்புவதற்கு முன், தந்தையார் இவருக்கு முடி சூட்டினூர். சிங்கள மரபுச் செய்திகள், முடி சூட்டு விழா, பரி நிருவாணத்திற்கு (Parinirvana) அல்லது புத்தபிரானின் மரணத்திற்கு அறுபதாண்டுகளுக்கு முன்பு நடந்திருக்கக்கூடுமெனக் கருதுகின்றன. சிங்கள மரபு பரிநிருவாண காலத்தைக் கி. மு. 544 என்றும், புராணச் சான்று கி. பி. 489 என்றும் கூறுகின்றன. கி. மு. 544 என்னும் கால நிருணயம் குறைபாடுள்ளது. கி. மு. மூன்ருவது நூற்ருண்டில் அரசு செலுத்திய மெளரிய வமிசத்து மன்னர் அசோகர், புத்தர் நிருவாண நிலை எய்துவதற்கு 218 ஆண்டுகளுக்கு முன்னர் முடி சூடிக்கொண்டார் என்னும் சிங்கள ஏட்டுச் (Ceylonese Chronicles) செய்தியை நம்புவதற்கில்லை. இச்சான்றினடிப்படையில் கி. மு. 544ஆம் ஆண்டு நிருணயிக்கப்படுகிறது. இவ் வுண்மையும், சில சீன, சோழச் சான்றுகளின் ஒப்பு ஒருமையும், 'கெய்ஜர்' (Geiger) போன்ற ஆராய்ச்சியாளர் சிலரைச் சிங்கள மரபுச் செய்தியில் ஐயங்கொள்ளத் தூண்டியது. கி. மு. 544 என்ற கால நிருணயம், இக் காலத்தவரின் கற்பனையென்றும், புத்தர் உண்மையில் கி. பி. 483-ல் மரணமடைந்தார் என்றும் இவ்வறிஞர் கருதுவர். சற்றேறக்குறையப் புராதனச் செய்தியை இக் கருத்து ஒத்திருக்கிறது.

மேகவர்ணன் என்னும் அரசன், சமுத்திரகுப்தனது அவைக்கு அனுப்பிய தூதுவரைப்பற்றிய குறிப்புகளும், 'கியாசே' (Kia-Che-கசபா-Kassapa) என்னும் மன்னன் சீனத்திற்கு கி. பி. 527-ல் அனுப்பிய தூதைக் குறித்த செய்திகளும், சீனச்சான்றுகள். இச்சான்றுகளும், கி. மு. 486 அல்லது கி. மு. 483 ஆகியவற்றைப் புத்தபிரானின் மரணத் தேதிகளாக வலியுறுத்துகின்றன. 'கெய்ஜர்' நிருணயிக்கும் தேதியும், மரபை முழுவதும் ஒட்டிய செயலன்று. எனவே, புராணம் வாயிலாக நாமறியும் குறிப்புகளை, அசோகருக்கும் அவர் ஆட்சிக்கு முந்திய கால வரலாறுகளுக்கும் அடிப்படையாகக் கொள்ளலாம். இவ்வடிப்படையில் ஆராயுங்கால், கி. மு. 545-ல் பிம்பிசாரர் பட்டமெய்தியதாகக் கொள்ளலாம்.

தொடக்கம் முதல், நாட்டெல்லையை விஸ்தரிப்பதில் பிம்பிசாரர் நாட்டம் கொண்டனர். சம காலத்தவரான மற்ற மன்னர்களைக்காட்டிலும் சில அரிய வாய்ப்புகளை இவர் பெற்றிருந்தார். இவர் ஆண்டுவந்த சாம்ராச்சியத்தை மலைத்தொடர்களும் ஆறுகளும் பாதுகாத்து வந்தன. 'கிரிவிரஜம்' (Girvraja) என்னும் தலைநகரம் ஐந்து குன்றுகளால் சூழப்பட்டிருந்தது. இந்திய நாட்டின் பண்டைச் சின்னங்களாய் விளங்கும் கிரிவிர

ஜத்தைச் சுற்றியமைந்த கற்சுவர்கள் இவரால் எழுப்பப்பட்டவை. வளமிக்க இப்பகுதியில் தானிய உற்பத்தி பெருகியிருந்தது. இரணிய வாஹினி, அல்லது சோணை (Hiranyavaha or the Sona) என்னும் தங்கம் விளைவிக்க வல்ல ஆறு, இந் நாட்டின் வழியோடிப் பாட்னுவின் அருகில் கங்கையுடன் கலக்கிறது. கங்கை நதி வாயிலாகவும் 'கயை' (Gaya) நகரத் தரைமார்க்கம் வாயிலாகவும் பெருகிய வாணிகத்தால் இந் நாட்டு மக்கள் மிகுந்த பயனெய்தினுர்கள். அண்டையிலுள்ள மேலை நாட்டினருடன் போர் செய்தபோது, கீழைச் சாம்ராச்சிய மன்னனிடமுள்ள யானைகள் மிகவும பயனுள்ள போர்க்கருவிகளாய்ப் பயன்பட்டன.

பாகல்பூர் (Bhagalpur) அருகிலுள்ள 'சம்பா' (Champa)வைத் தலைநகராகக்கொண்ட 'அங்கம்' அல்லது கிழக்குப் பீகார்ப் பகுதியைப் பேரரசுடன் இணைத்தது இவரது அரிய சாதனையாகும். இவர் 'கோசலம், வைசாலி' (Vaisali) ஆகிய நாட்டு அரசகுலத்தினருடன் திருமணத் தொடர்பு கொண்டார்; கோசல நாட்டு இளவரசியை மணந்து வருவாய்மிக்க காசியைத் திருமணப் பரிசாகப் பெற்றுர். இவர் வைசாலிக் குலத்தினருடன் கொண்ட தொடர்பு, வடதிக்கில் நேப்பாளம் வரையிலும் மகதப் பேரரசின் செல்வாக்குப் பரவ வகை செய்தது. ஆற்றல் மிக்க அரசு முறையொன்றையும் பிம்பிசாரர் வகுத்தார். 'ராஜகிருஹம்' (Rajagriha) அல்லது 'மன்னர் மனை' (King's house) என்னும் பெயர் கொண்ட புதிய நகரமொன்றை இவர் எழுப்பியதாகச் சீன யாத்திரிகர் ஒருவர் குறித்துள்ளார். கிரிவிரஜத்திற்கு வடக்கிலுள்ள மலையடிவாரத்தில் எழும்பிய இந் நகரம், பாட்னு மாவட்டத்தில் ராஜ்கீர் (Rajgir) என்னும் பெயரோடு இப்போது விளங்கி வருகிறது. மகதம் இவர் ஆட்சியில் மிக்க பொலிவுடன் விளங்கியது. அக் காலத்துத் தலைசிறந்த அறிஞர் பலர், இந் நாட்டில் குடியேறியிருந்தனர். சமண மதத்தூதுவர்களுள் இறுதியானவரான வர்த்தமான மகாவீரரும், புத்த சமயிகளின் மாபெருந்தலைவரான கௌதம புத்தரும், பிம்பிசாரரது ஆட்சியில் தமது சமயக் கோட்பாடுகளைப் பரப்பி வந்தனர். முதிய வயதில் தம் தனையனுன அஜாதசத்துருவினுல் இவர் கொலையுண்டார் எனக் கர்ண பரம்பரைச் செய்தி கூறும்.

## அஜாதசத்துரு
(Ajatasatru)

கூனிகள் (Kunika) என்னும் பெயர்கொண்ட அஜாதசத்ரு, 'அரியணை என்பது மலர்மஞ்சமன்று,' என்பதை அதிவிரை

விலேயே உணர்ந்தான். கொலையுண்ட மன்னரின் கைம்பெண் அரசியின் சகோதரனான கோசல நாட்டுப் பிரசேனஜித்து, பழி வாங்கும் எண்ணங்கொண்டான். வடக்கு, வடமேற்கு எல்லைகளிலுள்ள குடியாட்சிகள் துணிவு பெற்று, அஜாதசத்துருவின் வைரிகளான காசி-கோசல நாட்டினருடன் கூட்டுச் சேர்ந்தனர். சிராவஸ்தி மன்னனும், வைசாலிநாட்டு விரிஜிகளும், குசிநகர மல்லரும் (கோரக்பூர்காசியர்), 'பாவாவும்' (Pava) (இதைக் கண்டகி நதிக்கரையிலுள்ள பத்ரோனாவாகக் கொள்ளலாம்). அஜாதசத்துருவின் வைரிகளானார்கள். விரிஜிகளை விரட்டுவதற்காக மகத அரசியல் வல்லுநர், கங்கை, சோணை நதிகள் கூடுமிடத்திற்கருகிலுள்ள பாடலி கிராமத்தை (Pataligrama) வலுப்படுத்தினர். ஒரு தலைமுறைக்கால அளவிற்குள் பிரசித்திபெற்ற இக் கோட்டை நான்கு நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக இந்தியத் தலைநகரமாய் விளங்கிய கம்பீரமான பாடலிபுத்திரமென்னும் நகரமாய் வளர்ந்தது.

அஜாதசத்துருவின் தளரா உறுதியும், அவன் அமைச்சர்களின் குள்ளநரிக் கொள்கைகளும் விரோதிகளை முறியடிப்பதற்கு உதவியாய் நின்றன. விரஜிகள் நாடும் மகத அரசுடன் இணைக்கப்பட்டது; கோசலம் தலை குனிய நேரிட்டதெனினும், முற்றும் வீழ்த்தப்படவில்லை. இதையடுத்துச் சிறிது காலத்திற்குப்பின், பிரசேனஜித்துவின் மகனொருவன் சாக்கியரை வேரறுக்கும் முயற்சியை மேற்கொள்ளும் அளவுக்கு வலிமை பெற்று விளங்கினான் என்பது தெரியவருகிறது. 'காசி'க் கிராமத்தைக்குறித்து விவாதங்கள் நடைபெற்றுவந்தன. இப்போது வலுவிழந்த பிரசேனஜித்து, தனது உரிமையை விட்டுக் கொடுக்கவேண்டியதாயிற்று. அதோடு மகதநாட்டு எதிரிக்குத் தன் மகளையும் திருமணம் செய்துவைக்கும் நிலையும் ஏற்பட்டது. அஜாதசத்துருவைச் சமணர், பௌத்தர் ஆகியோரின் நண்பனென்றும், பௌத்த சமயப் பிளவுகளுக்குக் காரணமாயிருந்த புத்தரின் ஒன்றுவிட்ட சகோதரனான தேவதத்தின் போஷகனென்றும், சமய கர்ண பரம்பரைச் செய்தி கூறும். அஜாதசத்துருவின் ஆட்சி தொடங்கிய சின்னாள்களில், மஹாவீரரும் புத்தரும் மரணமடைந்தனரென்பது தெரியவருகிறது. புத்தபிரானின் மறைவுக்குப் பிறகு இராஜகிருகத்தில் பௌத்த அவையொன்று கூடிற்று. சமய விஹாரங்களைச் சேர்ந்த புகழ்பெற்ற சிலர்மீது ஒழுங்குமுறை நடவடிக்கை எடுத்ததோடு, புத்த சமயக் கோட்பாடுகளைத் தொகுக்கும் முயற்சியையும் இவ்வவை மேற்கொண்டது.

## அஜாதசத்துருவின் வழித்தோன்றல்கள்
(Successors of Ajathasathru)

அஜாதசத்துருவிற்குப்பின் 'தர்சகனும்' (Darsaka), அவனை யடுத்து அவன் மகனை 'உதாயி' (Udayi) என்பவனும் அரசு கட்டிலேறினர் என்பதைப் புராண இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். 'பாச' (Bhasa) மகாகவியின் 'ஸ்வப்பன வாசவதத்தம்' (Swapna Vasavadatha) என்னும் வடமொழி நாடகத்தில் தர்சகனது பெயர் காணப்படுகிறது. 'தர்சகன்' கௌசாம்பி மன்னனுன உதயணனுக்கு மைத்துனன் என்பதையும் இந் நூலிலிருந்து அறிகிறோம். சமண, பௌத்த நூலாசிரியர், 'உதாயியை' அஜாதசத்துருவின் மகனென்றும் உறுதியாக மொழிகின்றனர். பிம்பிசாரர் வர்க்கத்தில், 'நாக-தசகன்' (Naga-Dasaka) என்ற மன்னனொருவன் உண்டென்றும், அம் மரபினருள் இறுதியாக மகதத்தை ஆண்டவனும் அவனே என்றும் பௌத்த நூலாசிரியர் கூறுவர். அவனைப் புராண தர்சகனுடன் ஒப்பிட்டுக் கூறுவர் சிலர். பௌத்த நூலாசிரியர்கள் குறிப்பு மிகவும் தொன்மையானது. எனவே, உதாயி, தர்சகன், அஜாதசத்துரு ஆகியோரிடையே யுள்ள தொடர்பைக் குறித்த புராணச் செய்திகளை முற்றும் உண்மையெனக் கொள்வதற்கில்லை.

அவந்தி மன்னனுடன் 'உதாயி' போரிடும் நிலை ஏற்பட்டிருக்கக்கூடும். அஜாதசத்துருவின் அமைச்சர்களெழுப்பிய கோட்டையை நிழலாகக்கொண்டு, குசுமபுரம் அல்லது பாடலிபுத்திரம் என்னும் பெருநகரமொன்றை உதாயி நிருமாணித்தது அவனது அரும்பெருஞ்செயல் ஆகும்.

உதாயி காலத்திற்குப் பின்னுள்ள மகத வரலாறு தெளிவற்றிருக்கிறது. புராண ஏட்டுச் செய்திகள், இவனையடுத்து நந்திவர்த்தனன், மகாநந்தி என்ற இரு மன்னர்களைக் குறிக்கின்றன. மகாநந்தி, சூத்திரகுலப்பெண்ணொருத்தியை மணந்து, அவள் மூலம் மகாபதுமன் அல்லது மகாபதுமபதி நந்தன் என்ற ஒரு மகனைப் பெற்றதாகவும் செய்தியுண்டு. மகாபதுமன் சூத்திர குல அரசொன்றைத் தொடங்கினன் என்பது நம்பப்படுகிறது. உதாயிக்கும் நந்திவர்த்தனனுக்கும் இடையில் பதின்மூன்று மன்னர் இருந்தனர் எனப் பௌத்த நூலாசிரியர் குறிப்பர். இவர்களது குறிப்பில் மகாநந்தன் என்ற பெயருக்குப் பதிலாகப் பஞ்சமகன் (Panchamaka) என்ற பெயர் காணப்படுகிறது. பௌத்த நூற்செய்திகளுக்கொப்ப, அனுருத்தன், முண்டன், நாகதாசன் ஆகியோர் உதாயியைத் தொடர்ந்து ஆண்டனர்

என்பது தெரியவருகிறது. இவர்கள் யாவரும் தந்தையைக் கொன்று அரசெய்திய பாதகர்கள். இவ் வமிசத்தில் இறுதியாகப் பட்டமெய்தியவனை வெகுண்டெழுந்த மக்கள் நாட்டைவிட்டுத் துரத்தியடித்தார்கள்; ஒன்றுகூடி, நல்லமைச்சனுன சிசுநாகனை அரசு கட்டிலேற்றினுர்கள். சிசுநாகனையடுத்து அவன் குமாரனுன காலாசோகன் (Kalasoka) அரியணையேறினுன். காலாசோகனைப் பின்பற்றி அவன் குமாரர் பதின்மரும் ஒருவர்பின் ஒருவராகப் பட்டமெய்தினர். அவர்களுள் ஒன்பதாமவன் நந்திவர்மன் என்றும், பத்தாமவனுகப் பட்டமெய்தியவன் பஞ்சமகன் என்றும் கூறுவர். 'அசோகாவதானு' (Asokavadana) என்னும் புத்த சமய நூலொன்றில் முண்டனின் சந்ததியார்களில் காலாசோகனுக்குப் பதிலாகக் காகவர்ணன் (Kakavarna) பெயர் காணப்படுகிறது.

குலமன்னர் பட்டியலில், சிசுநாகனுக்கும், காகவர்ணனுக்கும் அளிக்கப்பட்டிருக்கும் வரிசை எண்ணைப் பற்றியே, புராண பௌத்தச் செய்திகளிடையே முரண்பாடுகள் தென்படுகின்றன. பௌத்த நூலாசிரியர் இவர்களைப் பிம்பிசாரர், அஜாதசத்துரு ஆகியோரது ஆட்சிக்குப் பல காலத்திற்குப் பின் வந்தவர்களென்றும் வேறு குலத்தைச் சேர்ந்தவர்களென்றும் குறிப்பர். புராணங்கள் இவர்களைத் தலைவர்களாக்குவதோடு, பிம்பிசாரர், அஜாதசத்துரு ஆகியோர்களின் முன்னேர்களெனவும் குறிக்கின்றன. புராணங்களிலேயே காணப்படும் விளக்கமொன்று, அவை கூறும் செய்தியிலிருந்து முரண்பாடுள்ளதாகவும், பௌத்த நூற்செய்தியை உறுதிப்படுத்துவதாகவும் அமையும். அவந்தி மன்னனுன பிரத்தியோதனின் சந்ததியார்களைக் குறித்துப் புராணங்கள், 'இவர்களின் நன்மதிப்பு யாவற்றையும் அழித்து, சிசுநாகன் மன்னனுவான்', எனக் கூறுகிறது. அவந்தி மன்னன், பிம்பிசாரர், அஜாதசத்துரு ஆகியோரின் சமகாலத்தவன் என்பதை நாம் நன்கறிவோம். மேற்கண்ட புராணச் செய்தியால் சிசுநாகன், பிம்பிசாரர், அஜாதசத்துரு ஆகியோராண்ட பல நாள்களுக்குப் பின் சிசுநாகன் பட்டமெய்தியிருக்க வேண்டுமென்பதும், மாளவத்தையும் மகதத்துடன் இணைத்து, முன்னேரது முற்போக்குக் கொள்கையைக் கடைப்பிடித்திருக்க வேண்டுமென்பதும் உறுதியாகின்றன.

சிசுநாகனின் சந்ததியானுன காலாசோகன் அல்லது காகவர்ணனின் ஆட்சி, கவனித்தற்குரியதொன்று. கிரிவிரஜத்திலிருந்து தன் இருப்பிடத்தை இவன் பாடலிபுத்திரத்திற்கு மாற்றிக்கொண்டான். வைசாலிக்கும் பல சந்தர்ப்பங்களில்

இவன் விஜயம் செய்வதுண்டு. புத்தரின் பரிநிருவாணத்திற்கு ஒரு நூற்றுண்டிற்குப் பின், இம் மன்னன் அரியணையேறிய பத்தாம் ஆண்டில் இரண்டாவது பௌத்த அவையொன்று கூடிற்று என்பது தெரியவருகிறது. அது சமயக் கட்டுப்பாடுகளைக் குறித்த சில பிரச்சினைகளை விவாதித்ததோடு, கட்டுப்பாட்டு விதிகளையும் தளர்த்த முயன்ற விரஜியனைச் சார்ந்த பிட்சுகளின் நடத்தைகளையும் இடித்துரைத்தது. காகவர்ணனின் முடிவு துன்பரகமானது. நகர்ப்புறத்தே பிச்சுவா ஒன்றினல் கழுத்தில் குத்துண்டு இவன் இறந்தான் என்று கூறப்படுகிறது. குறிக்கப்படும் நகரம் பாடலிபுத்திரமாகவோ, வைசாலியாகவோ சாம்ராச்சியத்தின் வேறு நகரமொன்ருகவோ இருக்கலாம். இவனுடைய மக்கள் இளைஞர்களாயும் அனுபவமற்றவர்களாயும் இருந்தமையால், உறுதி வாய்ந்த மற்றெருவன், அரசைக் கைப்பற்றும் நிலை ஏற்பட்டது.

## நந்தர்கள்

அறிஞர் யாவரும் இப் புதிய மன்னனது குலம் 'நந்தகுலம்' எனக் கூறுவர். இவனது பெயர் அல்லது விருது 'மகாபதுமன்' அல்லது 'மகாபதுமபதி'—கணக்கற்ற படைகளுக்குத் தலைவன் அல்லது 'மிகுந்த செல்வமுடையவன்' எனப் புராண ஏடுகள் கூறும். பௌத்த நூலாசிரியர் இவனை, 'உக்கிர சேனன்' (கொடுமையான சேனையை உடையவன்) எனக் குறிப்பர். இவனைத் தொடர்ந்து இவன் மக்கள் எண்மரும் ஒருவர் பின் ஒருவராய் அரசாண்டனர். அதற்குப்பின் சிறப்பு வாய்ந்த குலத்தைத் தோற்றுவித்த சந்திரகுப்தன் அரசைக் கைப்பற்றினுன். சமய இலக்கியங்களுக்கொப்ப நந்தர்கள் 154 வருடங்கள் ஆண்டு வந்தார்கள். புராணங்கள் இவர்களுக்கு ஒரு நூற்றுண்டுக் கால ஆட்சியையும், சிங்கள நாட்டுப் பௌத்த ஏடுகள் இருபத்திரண்டு வருட ஆட்சிக் காலத்தையும் வழங்குகின்றன. சமணர் வழங்கும் இருநூற்றுண்டுக் காலம் சற்று மிகையாகக் காணப்படுகிறது. மகாபதுமனுக்குப் பன்னிரண்டாண்டுக் கால ஆட்சி வழங்குவதைப் புராணங்களும் ஏற்கும். மகாபதுமனின் ஆட்சிக் காலம் 88 ஆண்டுகள் என்றும், 28 ஆண்டுகள் என்றும் வழங்கும் முரணுன கருத்துகள் உண்டு. 28 ஆண்டுக் காலத்தைச் சந்ததியாரின் ஆட்சிக் காலமெனப் பன்னிரண்டு ஆண்டுகளும் கூட்டும் போது, மொத்த ஆட்சிக் காலம் நூற்றுக்கும் குறைவாகிறது. மன்னன் ஒருவன் 88 ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்பதும் நம்புதற்கரியது. இவ் வாட்சிக் காலத்தைக் குறைத்து நோக்கும் போது, புராணச் செய்தியான நந்தர்களின் நூற்றுண்டு

ஆட்சி என்பதையும் கைவிட நேரிடுகிறது. இது காரணமாகச் சிங்கள ஏட்டுச் செய்தியையும் எளிதில் புறக்கணிப்பதற்கில்லை.

இக் குல மன்னரின் மொத்த எண்ணிக்கை ஒன்பது. இக் கால நூலாசிரியர் சிலர் ஏடுகளில் உள்ள நவநந்தர் என்னும் தொடரில் 'நவம்' (Nava) என்பது 'பிந்திய' அல்லது 'புதிய' என்னும் பொருள்படும் எனக் கூறுவர். 'நவநந்தர்களை' க்ஷேமேந்திரன் குறிப்பிடும் பூர்வ நந்தர்களுடன் ஒப்பிட்டு, சிசுநாக வமிசத்தினருள் பின்வந்தவர்களை 'நவநந்தர்கள்' எனக் கொள்ளலாகும் என்ற கருத்தை அறிவிக்கின்றனர். ஆனால், நந்தர் என்ற குலப்பெயர் சிசுநாகர்களுக்கு என்றுமே வழங்கியதில்லை. வரலாற்று அறிவுக்கு எட்டியவரை நந்தர் குலம் ஒன்றே. எனவே, 'நவம்' என்பதை ஒன்பது என்றே கொள்ள வேண்டும். க்ஷேமேந்திரன் கூறும் கதையில் 'பூர்வ நந்தன்' என்பது ஒரு தனி நபரின் பெயராகக் காணப்படு கிறதேயன்றிக் குலப்பெயராகக் காணப்படவில்லை. 'யோகா நந்தன்' (நந்த அரசின் புத்துயிர்பெற்ற பிசாசு) அல்லது 'போலி நந்தன்' என்பவனின் வேறுபட்டவனாகப் பூர்வநந்தன் குறிப் பிடப்படுகிறானேயன்றி, நவநந்தருக்கும் மாற்றுக் காண்பது நோக்கமன்று என்பது கவனித்தற்குரியது.

முதலாம் நந்தமன்னனது குடும்ப வரலாற்றைக் குறித்த கர்ண பரம்பரைச் செய்திகள் இரண்டு; சிசுநாக வமிசத்தின் கடைசி மன்னன், மகாநந்தனுக்கும் சூத்திரகுலப் பெண் ணொருத்திக்கும் பிறந்தவன் என்பது புராணச் செய்தி. அரண் மனைத் தாதியொருத்திக்கும், நாவிதன் ஒருவனுக்கும் உதித்த வன் எனச் சமணநூலாசிரியர் குறிப்பர். 'குவின்டஸ் கர்ட்டியஸ்' அளிக்கும் கருத்தும், சமணச் செய்தியில், முதல் நந்தனின் நாவிதப் பரம்பரையை உறுதிப்படுத்துகிறது. சந்திரகுப்த மௌரியரின் முன்னோனின் தந்தையைக் குறிப்பிடும்போது, அரசியின் மனத்தைக் கவர்ந்த நாவிதன் ஒருவன் அரசனைக் கொன்று, இளவரசர்களுக்குப் பாதுகாவலனாக நடித்து அரசைக் கைப்பற்றினான் எனக் 'கர்ட்டியஸ்' கூறுவர். அரசைக் கைப் பற்றியதும் இளவரசர்களை அவன் கொன்றான். கொலையுண்ட மன்னனைக் காகவர்ணன் எனக் கருத இடமுண்டு. இளைஞர் களான அவன் மக்களைப் பேராசைகொண்ட நாவிதன் கொன்றிருக்கக்கூடும்.

இழிகுலத்தவனெனினும், இம் மன்னன் திறமை மிக்கவன். க்ஷத்திரியர் யாவரையும் வென்று, ஏகசக்கராதிபதியாய் இவன்

விளங்கினுன் என்றும், நிலப்பகுதி முழுவதையும் தன்னுட்சியின் கீழ் இணைத்தான் என்றும் புராண ஏடுகள் குறிக்கின்றன. 'நந்த மன்னர்கள்' பரந்த சாம்ராச்சியத்தை ஆண்டுவந்தார்களென்று கிரேக்க ஆசிரியர் குறிப்பர். அலெக்ஸாந்தர் காலத்தில் 'பீயாஸ்' (Beas) நதிக்கு அப்பால் வசித்த திறமைமிக்க மக்கள், பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக்கொண்ட மன்னனொருவன்கீழ் வசித்து வந்தார்கள் எனக் கிரேக்க ஆசிரியர் கூறுவர். கலிங்க நாட்டிலுள்ள அணைக்கட்டு ஒன்றில் உள்ள அந் நாட்டுப் பண்டைக் கல்வெட்டு ஒன்று நந்தர் வசமிருந்ததெனக் குறிப்பிடுகிறது. நந்தர்களுக்குக் கலிங்கம் அல்லது தென்னொரிசா, வடசர்க்கார் (Northern Circars) பகுதி வரையிலும் செல்வாக்கிருந்ததென்பதை இச்சான்றிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

முதல் நந்தனையடுத்து அவன் மைந்தர் எண்மரும் ஒருவர் பின் ஒருவராய் அரியணையேறினர். இவர்களுள் கடைசியாய் அரியணை ஏறிய 'தனநந்தனை' (Dhana Nandha) 'அக்ரேம்ஸ்' (Agrammes) அல்லது 'ஸாண்ட்ரேம்ஸ்' (Xandrames) எனக் கிரேக்க நூலாசிரியர் குறிக்கின்றனர். செல்வம் நிரம்பிய கருவூலமும், 3000 யானைகளும், 2000 தேர்களும், 20,000 காலாட்களும், 20,000 குதிரை வீரர்களும் கொண்ட பெரும்படையொன்றும் இவனிடம் இருந்தது. சில ஆசிரியர், குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை ஆகியவைகளின் எண்ணிக்கையை முறையே 80,000—8,000—6,000 எனக் கூறுவர். இவன் பெரும் படை திரட்டவும், கருவூலத்தை நிரப்பவும் மக்களிடமிருந்து அதிகமான வரியை வசூலித்திருக்க வேண்டும். இவன் மக்களிடம் நடந்துகொண்ட முறை இவன் இழிகுலத்தை விளக்குவதாய் இருந்தது. மக்கள் இவனை வெறுத்து வந்ததோடு, மிக இழிவாகவும் நடத்தினுர்கள் என்பதில் வியப்பேதுமில்லை. அதிருத்தி நிலை, சந்திரகுப்தன் என்னும் தலைவனது எழுச்சிக்கும் சிறப்பு வாய்ந்த மௌரியப் பேரரசின் வளர்ச்சிக்கும் வழி வகுத்தது. அரசகுலப் புரட்சியில் (Dynastic Revolution) தக்ஷசீலத்தைச் சேர்ந்த 'கௌடில்யன்' (Kautilya) அல்லது 'சாணக்கியன்' (Chanakya) என்னும் பிராமணன், தீவிரப் பங்குகொண்டதாகக் கர்ணபரம்பரைச் செய்திகள் புழங்கி வருகின்றன. நந்தர்களை வென்றவனுக்கு மற்றுமொரு பிரச்சினையும் காத்திருந்தது. வடமேற்கு மாகாணத்தில் அந்நியர் புகுந்தனர்.

## பாரசீக, மாசிடோனியப் படையெடுப்புகள்
(Persian and Macedonian Invasions)

பெஷாவர், ராவல்பிண்டி ஆகிய பகுதிகளைச் சுற்றியமைந்த காந்தாரம், பிம்பிசாரர் காலத்தில், 'புக்குசாதி' (Pukkusati) என்னும் பெயர் கொண்ட மன்னனால் ஆளப்பட்டு வந்தது. அவன் மகதமன்னனுக்குத் தூதுக்குழு ஒன்றை அனுப்பிக் கடிதமொன்றும் வரைந்தான். இச் செய்கைகளின் நோக்கத்தை அறிந்துகொள்வது சாத்தியமில்லையென்றாலும், கி. மு. ஆறுவது நூற்றாண்டின் இடையில் பாரசீக 'அகேமினியன்' (Achaemenian) பேரரசைத் தோற்றுவித்த 'சைரசின்' படை வீரர் (Hordes Cyrus) (கி. மு. 558-530), இந்திய மண்ணில் காலடி வைத்துக் காபூலுக்கு வடகிழக்கிலுள்ள கோர்பந்து, பஞ்சஷீர் (Chorband and Panjshir) நதிகள் கூடுமிடத்தில் அமைந்துள்ள புகழ் பெற்ற 'காபிச' (Kapisa) நகரையழித்தனர் என்பது தெரியவருகிறது. சிந்து நதியின் மேற்கிலுள்ள மாவட்டம் பாரசீகரின் வசமாயிற்று. சைரசு மன்னன் சந்ததியார்களில் தலைசிறந்து விளங்கும் 'டரையஸ்' (Darius, கி. மு. 522—486) கல்வெட்டு ஒன்றில் காணப்படும் பாரசீக அடிமை நாட்டுப் பட்டியலில் 'காந்தாரம்' (Gandhara) என்னும் பெயர் பிரதானமாகக் குறிக்கப்பட்டுள்ளது. தம் முன்னோர்கள் கண்ட வெற்றியைத் தொடர்ந்து 'டரையஸ்', 'ஸ்கைலாக்ஸ்' (Skylax) என்பவனது தலைமையில் சிந்து நதியின்மீது படையெடுப்பதற்கெனக் கடற்படையொன்றை அனுப்பி வைத்தான். இப் படையெடுப்பு ராஜபுதனப் பாலைவனம் வரையிலுள்ள சிந்து சமவெளிப் பகுதியைப் பாரசீகத்துடன் இணைத்துக்கொள்வதற்கு வழி வகுத்தது. இது பாரசீகப் பேரரசின் மக்கள் நிரம்பிய இருபதாம் சாத்ரபி (Satrapy) ஆயிற்று. ஒரு மில்லியன் ஸ்டர்லிங் மதிப்பிற்கதிகமான, 360 ரூபிக் தங்க நாணயங்களை இச் சத்ரபி செலுத்தி வந்தது. பிற பாரசீக மாகாணங்கள் யாவற்றிலும் அதிகமாகத் திறை செலுத்தி வந்தது இதுவேயாகும். முதலாம் டரையசின் மகனான 'செர்க்ஸசும்' (Xerxes), பாரசீக இராணுவத்திற்கு யுத்த தளவாடங்களை அனுப்பி வந்த அவன் சந்ததியாரும் இந்திய மாகாணங்களின்மீது சிறிது ஆதிக்கம் செலுத்தி வந்தனர். செர்க்ஸசின் கல்வெட்டுகளில் இந்திய நாட்டுக் கிளர்ச்சிகளையடக்கிய செய்திகள் பின்வருமாறு குறிக்கப்படுகின்றன. 'முன் தைவசுவை' (Daivasu) வழிபட்டுவந்த பூமியில், பிற்காலத்தில் 'அகுர் மசுதா'வின் அருளால், முதலாம் தைவசுவின் (The King) கோயில்கள் அஸ்திவாரத்தையே அழித்தன. தேவ வழிபாட்டு நிலப்பகுதி இந்திய சாத்ரபிகளை உள்ளடக்கியிருக்கலாம். கீழை நாட்டின் மேல், பிற்கால அகேமினியர்களின் பிடி சிறிது தளர்ந்தது. கி. மு. நான்காவது நூற்றாண்டின் இடையில், இந்திய எல்லைப் பகுதி பல சிறிய நாடுகளாய்ப் பிரிந்து, அவற்றுள் ஒவ்வொன்றின் தலைவனும் சுதந்தரப் பிரகடனம் செய்துகொண்டான்.

குனர் (Kunar) ஸ்வாத் (Swat) வெளிகளால் வடிக்கப்பட்ட காபூல் நதியின் வடபகுதியிலுள்ள மலைநாட்டில் 'அசுவகர்' வசித்து வந்தனர். இப பெயர் வடமொழிச்சொல்லான 'அசுவம்' (Asva-குதிரை) இரேனியச் சொல்லான 'அஸ்பம்' (Aspa) ஆகியவைகளுடன் தொடர்பு கொண்டது. இம் மலைப் பகுதியிலேயே குடியேறிய கிரேக்கரால் எழுப்பப்பட்டதாகக் கூறப்படும் 'நிசா' (Nysa) என்னும் நகரமும் இருந்ததென்பது தெரியவருகிறது. காந்தாரம் என்னும் பழைமையான பகுதி சிந்துநதியால் இரு கூறுகளாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது. நதியின் மேற்கில் இக்காலப் பெஷாவர் மாவட்டத்திலடங்கும் 'புஷ்கலாவதி' (Pushkalavathi) என்ற நாடும் கிழக்குப் பகுதியில் இககால 'ராவல் பிண்டி' மாவட்டத்திலடங்கும் தட்சசீலமும் (Taxila) அமைந்தன. தட்சசீலம் நல்லாட்சி முறை கொண்ட வளமிக்க நாடு. ராவல்பிண்டிக்கு இருபது மைல்கள் வடமேற்கிலுள்ள சரைகலாவிற்கு (Saraikala) அருகிலுள்ள இக் கால பீர்மேட்டு (Bhir Mound) பகுதியில் இதன் சீரிய தலைநகரம் அமைந்திருந்தது. மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவுக்குள் செல்வதற்கான ராஜபாதையில் அமைந்திருந்த மாபெரு வாணிகச் சந்தையான இந் நகரத்தின் பெரும்புகழ், நாகரிக உலகமெங்கும் பரவியிருந்தது. வாணிகச் சாலையெனப் புகழ் பெற்றிருந்த இந் நகரம், அறிவுக்களஞ்சியமாயும் விளங்கி வந்தது. மூன்று வேதங்களையும், பதினெட்டுக் கிளைகளுள்ள அறிவையும் கற்றுத தேர்வதற்கு, ஆர்வமிக்க புலவர் பெருமக்கள் இந் நகரில குழுமினர்கள். மா பேரிதிகாசமான மகாபாரதம் இந் நகரில் முதன் முறையாக அரங்கேறியதெனக் கர்ணபரம்பரைச் செய்தி கூறும்.

தட்சசீலத்திற்குச் சற்று மேல் உள்ள மலைப்பகுதியில் உரசர் (Urasa-ஹஸ்ரா மாவட்டம்), அபிசாரர் (Abhisara), பஞ்ச், நயோஷிரர் (Punch, Naoshera) ஆகியோர் வசித்து வந்தனர். வேதச் செய்யுள்களில் முன்னரே புகழ்பெற்ற புருக்கள் அலலது பௌரவர்கள் (Purus or Pauravas) தட்சசீலத்தில் கிழக்குப்பகுதியில் காணப்படும் இரு இராச்சியப் பகுதிகளிலும் வாழ்ந்து வந்தார்கள். 'போரஸ்' (Porus) எனக கிரேக்கரால் குறிக்கப்படும் இளவரசனது நாடு, ஜீலம், சீனுபு நதிகளுக்குமிடையில் அமைந்திருக்கிறது. அவனுக்கு மருமகனான இளைய போரசின நாடு 'சீனுப்' (Chenab) வரையிலும் பரவியிருந்தது. பௌரவ நாட்டெல்லைக்குள் 'கிளாவ்கனிகாய்' (Glaukanikoi), 'கத்யாய்' (Kathaioi), 'சௌபூதி' (Saubhuti) ஆகியோரும் வசித்தனர். ராவிச் சமவெளியின் கீழ்ப்பகுதியோடு தொடர்ச்சியாய் அமைந்த 'ஜங் மாவட்டம்' (Jhang District), 'சிபிகள்' (Sibis), 'மாளவர்' (Malwas), அவருடனிணைந்த 'க்ஷுத்ரகர்' (Kshudrakas) ஆகியோரது உறைவிடம். சீனுபு நதியின் கீழ்க்கரைப் பகுதிகளில் 'அம்பாஷ்தர்' (Ambashthar) வாழ்ந்து வந்தனர். இக் கூட்டத்தினர் சுதந்

தர வாழ்க்கை நடத்தியவர். சில கூட்டத்தினரிடையே மக்களாட்சி அரசியல் முறை இருந்ததாகத் தெரியவரும். சிந்துவின் மேற்குப்பகுதி சிற்றரசர் பலரால் ஆளப்பட்டு வந்தது. 'அலோர்' (Alor) அல்லது அதற்கருகிலுள்ள பகுதியைத் தலைநகராகக் கொண்ட 'மௌசி கானர்கள்' (Mousi Kanos) இவர்களுள் முக்கியமானவர்கள். சிந்து முகத்துவாரத்தில் (Indus Delta) 'பட்டலா' (Pattala) என்னும் நகரமிருந்தது. கிரேக்க நகரமான 'ஸ்பார்ட்டா'வைப் (Sparta) போல அரசர் இருவரையும், முதியோரடங்கிய செனட்டொன்றையும் கொண்ட அரசியலை இந் நகரம் பின்பற்றியது.

நாட்டில் நிலவிய ஒற்றுமையின்மையும், மேற்கு ஆசியாவில் கிரீஸ் முதலிய நாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களும், வெளி நாட்டினரின் படையெடுப்புகளுக்கு—குறிப்பாக யவனரான மாசிடோனியரின் படையெடுப்புக்குக் காரணமாயிற்று. அண்டை நாட்டினருடன் விரோதங்கொண்ட இந்தியர் சிலர் சுயநலனைப் பேணி அயலாரை வரவேற்றனர். நாட்டிற்கு விளையக்கூடிய பெருங்கேடுள்ள பேராபத்துகளை அவர்களால் சிந்திக்க இயலாது போயிற்று.

ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள யவன பூமியில் மாசிடோன் என்னும் இராணுவ அரசியலைக்கொண்ட நாட்டிற்குக் கி. மு. 336-இல் அதிசயிக்கத்தக்க ஊக்கமும் சக்தியுமுள்ள அலெக்ஸாந்தர் தலைவனாய்ப் பதவியேற்றான். டரையசு, செர்க்ஸசு மரபில் இறுதியாய் ஆண்டுவந்த பாரசீகப் பெருமன்னனைப் பிரசித்திபெற்ற இரு போர்களில் வென்று அவனது நாட்டைக் கைப்பற்றினான். கி. மு. 330-இல் பாரசீக மன்னன் ஆண்டான். பின்பு அகேமினியன் சாம்ராச்சியத்திற்குக் கிரேக்க மன்னன் எதிர்ப்புகளின்றித் தலைமை பூண்டான்; மூன்று ஆண்டுகளுக்குப்பின் கி. மு. 327-ல் இந்துகுஷ் மலைத்தொடரைக் கடந்து, பாரசீக முன்னோர்களை ஒரு காலத்தில் தலைவராகக் கொண்டிருந்த இந்தியச் சத்ரபங்களை மீட்க உறுதிகொண்டான்; தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும் எண்ணத்தோடு இக் காலக் காபூலுக்கு அருகில் கோட்டைகளை அமைத்துப் படைவீரரைத் தேக்கி வைத்தான்; கி. மு. 327-326-ம் ஆண்டு குளிர் காலம் முழுவதையும் குனர், ஸ்வாத் பள்ளத்தாக்கிலுள்ள கடுமையான மலைச்சாதியினரை வெற்றி கொள்வதில் செலவிட்டான்; 'மசாகா' (Masaga) 'ஆர்நாஸ்' (Aornos) கோட்டைகளை முற்றுகையிட்டு, 'நிசா' (Nysa) நகரை வீழ்த்தினான். அவனுடைய தளபதிகள் புஷ்கலாவதி நகரைக் கைப்பற்றினர்கள். 'மலாகந்து' (Malakand) கணவாய்க்கு வடக்கில் மசாகா இருந்திருக்கவேண்டும். ஸ்வாத், சிந்து நிலப்பகுதிகளுக்கு இடையேயுள்ள யூனா (Una) என்ற உயர்ந்த நிலப்பகுதி, 'ஆர்நாஸ்' என இக்கால ஆராய்ச்சி முடிவு கூறுகிறது. குனர்,

ஸ்வாத் பள்ளத்தாக்குகளுக்கு இடையேயுள்ள கோஹிமார் (Koh-i-Mor) என்னும் குன்றின் கீழ்ப்பகுதியில் 'நிசா' இருந்திருக்கலாம் என்பதும் கூறப்படுகிறது. பெஷாவருக்குப் பதினேழு மைல்கள் தென்கிழக்கில், ஸ்வாத்-காபூல் நதிகள் கூடியுள்ள இக்கால 'சார்சத்தம்' (Charasadda) புஷ்கலாவதியாய் இருந்திருக்கக் கூடுமென்பது நம்பப்படுகிறது.

மன்னன், அடர்ந்த காடுகள் பலவற்றைக் கடந்து, 'ஓஹிந்தை' (Ohind) நோக்கி முன்னேறி, படகுகளின் உதவியுடன் (கி. மு. 326) நதியைக் கடந்தான். இம் முயற்சிகளில் தட்சசீல மன்னனான 'அம்பி' (Ambi) என்பான் அலெக்ஸாந்தருக்கு மிகவும் உதவியளித்து வந்தான்; படையெடுத்து வந்த அயலானைத் தன் தலைநகருக்கு மிகுந்த படாடோபத்துடன் வரவேற்றான். சிறிது ஓய்வுக்குப்பின் மீண்டும் படையெடுப்பைத் தொடர்ந்த அலெக்ஸாந்தர், 'ஹைடாஸ்பஸ்' (Hydaspes) என்னுமிடத்தை (விதாஸ்த—இக் கால ஜீலம்) அடைந்தான். ஒரு கருத்திற்கிணங்க, ஜீலம் என்ற பட்டணத்திற்குச் செல்லும் பெருஞ்சாலையையே அலெக்ஸாந்தர் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். மற்றொரு கருத்தின்படி நந்தன் கணவாய் வழியாய் இறங்கி, ஹரன்பூர் கிராமத்திற்கு அருகிலுள்ள ஹைடாஸ்பஸின் தென்கரையை அடைந்திருக்கவேண்டும். அவன் இங்கு, மறுகரையில், தனது முன்னேற்றத்தைத் தடைசெய்யும் வகையில், பெரியதொரு படைதேக்கி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். வெல்லுதற்கரிய பெரியதொரு படைக்குத் தலைமை தாங்கிய பேருருவமும் பெருவலியுங்கொண்ட மூத்த போரஸ், அண்டை வீட்டுத் தட்சசீல மன்னனது வெட்கமற்ற துரோகச் செயலை எண்ணி நொந்து தாய் நாட்டையும் சொந்த மனைவியையும் செருக்குற்ற மேலைநாட்டு வீரனிடமிருந்து காப்பாற்ற உறுதி பூண்டான். வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதாலும், எதிர் மருங்கில் போர் வீரரும் யானைகளும் குழுமியிருந்ததாலும், ஆற்றைக் கடப்பது அரிதென உணர்ந்தான். பல திக்குகளிலும் செல்வது போன்று போக்குக் காட்டி, எதிரியின் கவனத்தைத் திருப்பி, நதியை எதிர்த்துப் பதினேழு மைல்கள் முன்னேறினான்; காடுகளடர்ந்து, ஆற்றின் நடுவில் திட்டுப்போல உயர்ந்த அடவிகள் நிரம்பிய தீவு ஒன்றால் ஏற்பட்ட திருப்பத்தில் ஆற்றைக் கடந்தான். ஆற்றைக் கடந்த இடம் ஜீலம் என்ற பட்டணமென்று சிலரும், ஜலால்பூர் என்று சிலரும் கூறுவர். ஆற்றைக் கடந்துவரும் எதிரிகளைத் தாக்கிய சிறு படையொன்று முறியடிக்கப்பட்டது. இந்திய மன்னனுடன் போரிடும் நோக்கத்தோடு முன்னேறினான் அலெக்ஸாந்தர். படையை அணிவகுத்து எதிரியைத் தாக்க, போரசும் சித்தமானான். அவனது படையில் 30,000 காலாள்களும், 4,000 குதிரை வீரரும், 300 தேர்களும், 200 யானைகளும் இருந்தன. யானைகளை முன் வரிசையிலும், காலாள்களைப் பின் வரிசையிலும் அமைத்துத் தேர்களை

முன்னிறுத்தி, இருமருங்கிலும் குதிரைப்படைகளை அமைத்தான். யானைகளைப் புற அரணாகவும் காலாள்களை மதிலாகவும் கொண்ட பெரியதொரு நகரம்போலப் படை தோற்றமளித்தது. சண்டை நடந்த இடத்தை அறுதியிட்டுக்கூற வகையில்லை. அலெக்ஸாந்தர் ஜீலத்தில் கூடாரம் அமைத்தான் எனக் கருதுபவர், 'காரிச் சமவெளியில்' (Karri Plain) எதிரிகள் போரசுடன் பொருதார்கள் எனக் கூறுவர்.

சிறந்த குதிரைப்படையினரையுடைய மாசிடோனியருக்கு முதலில் தாக்கும் வாய்ப்பளித்தது பெருங்கேடு விளைத்தது. மாசிடோனியர் இடசாரியில் தமது தாக்குதலைத் தொடங்கினர். குதிரைமீதமர்ந்து தாக்கிய மாசிடோனிய வில்லாளிகளை எதிர்த்துப் போரிட இயலாமல், இந்தியத் தேரோட்டிகளும் குதிரை வீரரும் துன்பமுற்றனர்கள். ஆற்றல்மிகுந்த நெடியவிற்களையுடைய இந்தியப் படையினர், சேறு நிறைந்த பூமியில் விற்களை ஊன்ற இயலாமல், செயலற்றிருந்தார்கள். யானைகள் எதிரிகள்மீது பாய்ந்து, பெஞ்சேதம் விளைத்தன. ஆனால், பெரிய உடம்பையுடைய அவை காயமுற்றுச் சித்தமிழந்து, விரோதி-நண்பர் என்னும் வேற்றுமையின்றிப் பெருஞ்சேதம் விளைத்தன. குழப்பமடைந்த பௌரவப்படை, அலெக்ஸாந்தரின் தளபதிகளால் தாக்குண்டு சிதறி ஓடிற்று. ஆயினும், இந்திய மன்னன் புறமுதுகிடாது, இறந்த ஒரு யானைமீதமர்ந்து, படுகாயமுறும் வரை போரைத் தொடர்ந்து செய்தான். மாசிடோனிய வெற்றி வீரனாகிய தன் முன் நிறுத்தப்பட்ட போரசை, "நான் உன்னை எவ்வாறு நடத்துவது?" என்று அலெக்ஸாந்தர் வினவினான். "மன்னனைப்போல நடத்துக" என பதிலிறுத்தான் வீரமிக்க போரசு. அலெக்ஸாந்தர், வீரனை எதிரியின் நெஞ்சுறுதியை மெச்சி, போரசின் நாட்டை அவனுக்குத் திரும்ப அளித்தான். கூடியவரையில் சத்திவாய்ந்த உள்நாட்டு மன்னரின் நட்பைப் பெறுவதே அலெக்ஸாந்தரின் கொள்கை. புதியதும், தனது சாம்ராச்சியத்திலிருந்து நெடுந்தொலைவில் உள்ளதுமான நாட்டில் துணிவும் சத்தியும் பொருந்திய உள்நாட்டுத் தலைவர்களின் நட்பு, ஒருவர்க்கொருவர் கட்டுப்பாடாயமைந்து, போரசின் செல்வாக்கை உயர்த்துவதற்கு மிகவும் பயன்படுவது என்பதை அவன் நன்கு உணர்ந்திருந்தான்.

பௌரவ நாட்டையடுத்த சிறு நாடுகளையும், கூட்டத்தினர் பலரையும், அலெக்ஸாந்தர் முறியடித்தான். 'அகிசைன்ஸ்' (Akesines) (சீனாபு) 'ஹைடரோட்ஸ்' (Hydaraotes), ராவி (Ravi) நதிகளைக் கடந்து, கதாய் (Kathaioi) இனத்தினரின் கோட்டையான சங்காலாவை (Sangala) முற்றுகையிட்டு, 'ஹைபசிஸ்' (Hyphasis) அல்லது பியாஸ் நதியை நோக்கி முன்னேறினான். 'சங்காலா' குருதாஸ்பூர் மாவட்டத்திலுள்ளது என நம்பப்

படுகிறது. கங்கைச் சமவெளியின்மீதும் தொடர்ந்து போரிட விரும்பிய அலெக்ஸாந்தரின் விருப்பத்திற்குச் சண்டைகளால் சோர்ந்திருந்த அவன் படைவீரர் இணங்கவில்லை. தனது படையெடுப்பு எல்லையைக் குறிப்பதற்கு உயர்ந்த பன்னிரண்டு கல் தூண்களை நிறுவி, துக்கம் நிறைந்த மனத்தோடு ஜீலம் நோக்கித் திரும்பினான் அலெக்ஸாந்தர்; படையின் ஒரு பகுதியினரை 'நியார்க்கஸின்' (Nearchos) தலைமையில் கடல் மார்க்கமாகச் சிறு படகுக்கூட்டத்துடன் அனுப்பிவைத்தான் ராவி, சீனுபு நதிகளின் கீழ்க்கரைப் பள்ளத்தாக்குகளில் வாழ்ந்த போர்வெறி கொண்ட சுதந்திர இனத்தினர் பலருடன் பொருது, எஞ்சிய படைவீரர் திரும்பலாயினர். பெண்டிரும், குழந்தைகளுமாக ஆயிரக்கணக்கானவர் போரில் மடிந்தனர். ஒரு நகரத்தில்தலைக் குனிவைவிடச் சாவைப் பெரிதென மதித்து, பிற்கால 'ரஜபுத்திரர்' 'ஜாவ்கர்' (Jaukar) என்னும் தீப்பாய்தல் செய்வதுபோல மக்கள் தீ வளர்த்து அதில் குதித்து மாண்டார்கள்.

மாளவரின் பலம் பொருந்திய கோட்டையொன்றைத் தாக்கும்போது அலெக்ஸாந்தர் அபாயகரமாகக் காயமுற்றான். தோல்வியடைந்தோர், தேர்களையும், விலையுயர்ந்த இரத்தினங்களையும், சிறு கேடயங்களையும், சித்திர வேலைப்பாடமைந்த துணிகளையும், சிங்கம், புலி முதலியவைகளையும் பரிசாகக் கொடுத்தனர். அலெக்ஸாந்தர் சிந்துவிலுள்ள சிறு நாடுகளையும் வென்று, பெருங்கடற்பிரயாணத்தைத் (கி. மி. 325) தொடங்கினான். மாசிடோனியப் படைப்பகுதியொன்று ஆப்கானிஸ்தானம் வழியாகத் தரை மார்க்கமாக முன்னரே அனுப்பப்பட்டது. அரசனால் நடத்திச் செல்லப்பட்ட பகுதியொன்று பலுச்சிஸ்தானப் பாலைவனத்தைப் பெருமுயற்சியுடன் கடந்து, மிக்க இன்னல்களை அனுபவித்து, பாபிலோனை (Babylon) அடைந்தது. எஞ்சியபடைவீரர் கடல்மார்க்கமாக நியார்க்கசின் தலைமையில் 'டைகிரிஸ்' (Tygris) நதியின் வடவெல்லையை அடைந்தனர். பாபிலோனுக்குத் திரும்பிய அலெக்ஸாந்தர் நெடுநாள் உயிருடனில்லை. கி. மு. 323-ல் அவன் மரணமடைந்தான்.

## அலெக்ஸாந்தர் அமைத்த நிருவாக முறைகள்
## (Administrative arrangements made by Alexander)

வென்ற பகுதிகளைக் கைநழுவ விடுவதற்கு அலெக்ஸாந்தருக்கு விருப்பமில்லை. அவன் பரந்த தனது சாம்ராச்சியத்துடன் அவற்றை இணைத்துக்கொள்ள விரும்பினான்; ஹைடாஸ்பஸிற்கு மேற்கிலுள்ள மாவட்டங்களைப் பல சத்ரபங்களாக அமைத்து, மாசிடோனிய, பாரசீகக் கவர்னர் பலரையும் நியமித்தான். ஆர்னைஸச் சேர்ந்த சசிகுப்தன், தட்சசீல அம்பி போன்ற இந்தியத் தலைவர்களும் இவர்களுக்கு உதவி புரிந்தார்கள். சிந்து

நதிக்கப்பாலுள்ள பகுதியில், சிற்றரசர்களைத் தலைமையாகக் கொண்ட பாதுகாப்பு நாடுகள் பலவற்றையும் ஏற்படுத்தினன். இவற்றில் பெருமன்னன் பௌரவனது நாடும், அபிசார மன்னன் நாடும் தலைசிறந்தவை. புஷ்பகலாவதி, தட்சசீலம் முதலிய இராணுவ கேந்திரங்களில், மாசிடோனியப் படைவீரர் தேக்கி வைக்கப்பட்டனர். வெற்றி வீரனது செல்வாக்கைக் கைப்பற்றிய நாடுகளில் வேரூன்றச் செய்வதற்கும், ஐந்து ஆறுகளைக்கொண்ட சிந்துப்பகுதியில், வாணிகக்கடற்பிரயாணங்களை ஊக்குவதற்கும், பெருநதிகளின் கரைகளில் மாபெரும் நகரங்களை எழுப்பினன்.

## பாரசீக, மாசிடோனியப் படையெடுப்புகளின் விளைவு
(Effect of the Persian and Macedonian Invasions)

மாசிடோனிய இராணுவக் கேந்திரங்களும், அரசியல் நிறுவனங்களும் அதிவிரைவிலேயே சந்திரகுப்த மௌரியனால் அழிக்கப்பட்டன. சில ஆண்டுகளுக்குள் பஞ்சாபு, சிந்து பகுதிகளிலிருந்து அயலராதிக்கம் அறவே ஒழிந்தது. ஆயினும், டரையசு, அலெக்ஸாந்தர் ஆகியோரது படையெடுப்புகள் வீண் போகவில்லை. பாரசீகப் படையெடுப்பு முதன்முறையாக மேலைநாட்டினருக்கு இந்திய நாட்டைப்பற்றி அறிவூட்டியது; மேலைநாட்டினருக்கும் இந்திய நாட்டினருக்குமிடையே தொடர்பேற்படுத்தியது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில், ஈட்டி ஏந்திய இந்திய வீரரும் வில்லாளிகளும் பாரசீகக் கொடியின்கீழ் நின்று ஐரோப்பிய மண்ணில் போரிட்டார்கள். அளவிடற்கரிய செல்வமும் புதுமையான மக்களும் நிரம்பிய இந் நாட்டில் அப் போர் கிரேக்க நாட்டினரது ஆதிக்கத்தையும் பெருக்கியது. பாரசீக, கிரேக்க அலுவலர் சிந்து மாகாணப் பகுதிகளில் அலுவல்களில் அமர்ந்து, தமது செல்வாக்கை இந் நாட்டில் பரப்பினர். அராமிக்கு (Aramic), கரோஷ்டி (Karoshti), பாணினியால் யவனானி (Yavanani) எனக் குறிக்கப்படும் வரி வடிவம் ஆகிய பல புதிய எழுத்து முறைகளும் இதன்விளைவாய் எழுந்தனஎனக் கூறலாம். மௌரியர் காலக் கட்டடக் கலையும், அசோகர் கல்வெட்டிலுள்ள சில எழுத்துகளும், பாரசீக கிரேக்கத் தொடர்பால் விளைந்தவை என்பது, வேற்றுமைகளுக்கு இடமளிக்கும் கருத்து. பேரரசனுக்கு இந்திய நாட்டின்மீதுள்ள செல்வாக்கு, கி. மு. 4ஆம் நூற்றாண்டில் குறைந்து காணப்படுகிறது. அலெக்ஸாந்தரின் கடுமையான படையெடுப்புகள், தளர்ந்திருந்த பேரரசின் இந்திய நாட்டிற்கும் கிரேக்க உலகிற்கும் இடையே ஒற்றுமை ஏற்படுவதற்கு அடிகோலியது. சிந்து சமவெளியில் தோன்றிய மாசிடோனிய அரசு, சிறிது காலத்தில் நசித்துப்போயிற்று. எனினும், அரசியல் அணுக்கள் யாவற்றையும் ஒன்றுகூட்டி மௌரியர் காலத்தில் நிலையானதொரு பேரிணைப்பிற்கு மாசிடோனிய வீரன் வழி வகுத்தான். அலெக்ஸாந்தர் திட்டமிட்டு

நடத்திய பிரயாணங்களும் படையெடுப்புகளும், அக் காலத்தவரின் பூவியல் அறிவைப் பெருக்கி, அவர்களைக் கடல் கடந்து பிரயாணம் மேற்கொண்டு வாணிகத் தொடர்புக்குப் புதிய மார்க்கங்களைத் தேடும் முயற்சியில் ஈடுபடுத்திற்று. இந்திய எல்லைப்புறங்களில் வெற்றி வீரன் நிறுவிய குடியேற்ற நாடுகள் யாவும், மௌரியரால் அழிக்கப்படவில்லை என்று எண்ணுதற்கு இடமுண்டு. பெர்சிபாலிஸ் (Persepoils), 'எக்பதானு' (Ecbatana) நாட்டுப் பெருமன்னர்களிடம் சேவகம் செய்வதைப்போல, யவன அலுவலர்கள், மகதப் பெருமன்னனிடமும் வேலைக் கமர்ந்து பணியாற்றி வந்தார்கள். துணிவுள்ள யவனர், மகதப் பேரரசு ஒளியிழக்கத் தொடங்கியதும், வடமேற்கெல்லையில் சுதந்தர நாடுகள் பலவற்றை நிறுவத் தொடங்கினர். பிற் காலங்களில் இந்தியப் பௌத்தரிடமிருந்தும், பாகவதர்களிடமிருந்தும் (Bhagavathas), தத்துவசாத்திர அறிவு பெற்றதைப் போல, இந்தியரும், கிரேக்க நாணய முறைகளைக் கையாண்டும், கிரேக்க வான சாஸ்திர வல்லுநர்களைப் போற்றியும், கிரேக்கக் கலையை ரசித்தும் வந்தனர். இருள் கவிந்த மத்திய மேற்கு ஆசியாவிலும், சிந்து, அகிசைன்ஸ் (Akesines) நதிக்கரையிலும், அலெக்ஸாந்தர் 'கிரேக்கப் பகுதிகளைப் பகிர்ந்தளித்ததே' தொடர்பேற்படுவதற்கு முக்கிய காரணமாயிற்று.

# 6. மகதப் பேரரசு எழுச்சியின் தோடக்கக் காலத்துப் பண்பாடு

(Civilisation in the early days of Magadhan Ascendancy)

## சான்றுகள்

(Sources)

மகதப் பேரரசு எழத்தொடங்கிய காலத்து இந்தியப் பண்பாட்டு நிலையை உணர்வதற்குப் பல சான்றுகளை ஆராய வேண்டும். தனித்ததொரு சான்றில் செய்திகளனைத்தையும் காண்பதரிது. சிந்து சமவெளி, வடமேற்கு எல்லைப்பகுதி ஆகியவற்றைக் குறித்த செய்திகளை அறிவதற்குக் கிரேக்கக் குறிப்புகளே மிகவும் உதவுகின்றன. கௌரவரும் பாஞ்சாலரும் ஆண்டு வந்த பிராமண சமயத்தின் உறைவிடமான மத்தியதேசம் அல்லது மேற்குக் கங்கைச் சமவெளியைப்பற்றிய குறிப்புகளையறிவதற்கு முற்கால இதிகாசங்களையும் பிராமண சூத்திரங்களையும் ஆராயவேண்டும். இதிகாசம் வீரகாலக் குறிப்புகளடங்கியது. அது பிந்திய வேதகாலத்தைப்போன்ற சமவயதுடையதெனினும், சில செய்யுள்களில், பிந்திய வேதகால நூல்களில் கிடைக்கும் குறிப்புகளைவிட பூவியலைப்பற்றிய குறிப்புகள் மிக அதிகம். பாடலிபுத்திரத்தைப்பற்றிய குறிப்பு எதுவும் இரண்டு இதிகாசங்களிலும் காணப்படவில்லை என்பது கவனித்தற்குரியது. கிரிவிரஜமும், ராஜகிருகம் அல்லது வசுமதியும் மகதப் பேரரசின் தலைநகரெனக் குறிக்கப்படுகின்றன. இரண்டு இதிகாசங்களும் மகத மன்னரின் வலிமையை உணர்ந்து சித்திரிக்கின்றன; இரண்டிலும் பெரியது, மகதப் பேரரசு ஏற்படப் போவதை முன்னறிவிக்கிறது; சிறியது, 'வைசாலிக நிருபர்களுடன் (வைசாலியின் அரசர்கள்)சமகாலத்தவரான கோசலப் பேரரசரைக் குறிக்கிறது. இரண்டிலும் புத்த சமயத்தைப்பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. கிரேக்கரும் சாகரும் அறிமுகமானவர்களேயென்றாலும், மூலக்கதையுடன் தொடர்பற்றவராய்க் காணப்படுவர். பல கட்டுக்கதைகள்,

பிந்திய சாதனைகள், அத்தியாயங்கள் நீங்கலாக, காவிய முழுவதையும் இக்காலச் செய்தியறிவதற்கு நம்பத்தகுந்த சான்ருக உபயோகிக்கலாம். வடகிழக்கு இந்திய வரலாற்றை அறிந்து கொள்ள அரிய செய்திகள் முற்காலப் பாலி இலக்கியங்களிலிருந்தும், சமணரின் புனித நூல்களிலிருந்தும் அறியலாகும். தென்னிந்திய மக்களைப்பற்றிய சிதறிய குறிப்புகள் சில, இந் நூல்களில் ஆங்காங்கே காணப்படுகின்றனவெனினும், விரிவான செய்திகளோ தெளிவான கருத்துகளோ இல்லை. தென்னிந்தியாவில் அரிய இலக்கியங்கள் உண்டு. அவை யாவும் பிற்காலங்களில் தோன்றியவையாகக் கருதப்படுவதால், மௌரியருக்கு முந்திய கால ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுவதில்லை.

## நிருவாகம்
### (Administration)

இக் காலத்தொடக்கத்திலும், இறுதியிலும், கிழக்கு, மேற்குத் திசைகளில் முடியாட்சி ஒன்று நிறுவப்பட்டது எனக் கொள்ளலாகாது. பஞ்சாபு, மாளவம், அயோத்தி, தென்பீகார் ஆகிய பகுதிகளில் வலிமை பொருந்திய மாமன்னர் ஆண்டுவந்தனர். அண்டையிலுள்ளவர்களுடன் போரிட்டுத் தங்கள் செல்வாக்கைப் பரப்பி, பேரரசு அமைக்கவும் அவர்கள் முற்பட்டார்கள். பேரார்வம் மிக்க சுதந்திரக் கூட்டத்தினரை அம் மன்னர் எதிர்த்துப் போரிட வேண்டியதாயிற்று. அவ் வினத்தினர் தம்முள் முதியோரைத் தேர்ந்தெடுத்து அரசு செலுத்தினரே ஒழிய, முடியாட்சிக்கு அடிபணிந்து வாழவில்லை. அரசபதவியும் எங்கும் ஒரே செல்வாக்குடையதாய் இல்லை. கிழக்கிந்தியப் பகுதியிலுள்ள சில நாடுகள், உண்மையில் சாம்ராச்சியங்களாய் விளங்கின. அவற்றை ஆண்டுவந்த மன்னர், 'ஏகராட்' (Ekarat) அல்லது 'தனி மன்னர்' என்ற செல்வாக்குடையவர். சிந்து நதியின் வண்டற்பகுதியில் படைத்தலைவராய் விளங்கியமன்னர் சிலர், நிருவாகப்பொறுப்பை மூதியோரடங்கியசெனட்டுஒன்றின் வசம் விடுத்திருந்தனர். 'ஸ்பார்ட்டா'வைப் (Sparta) போன்று இங்கும் சில பகுதிகளில் அரசரிருவர் இருந்தனர். தொன்மையான 'துவைராச்சியம்' (Dvairajya) அல்லது 'இரட்டையாட்சி' இந்திய வரலாற்றிலும் கர்ண பரம்பரை வாயிலாகவும் மிகப்புகழ் பெற்றது. கீழைக் கங்கைச் சமவெளியில் சூத்திரர் செல்வாக்கு மிக வளர்ந்திருந்ததெனினும், சிந்துவின் கீழை நதிப்பள்ளத்தாக்கின் நிலை வேருய் இருந்தது. பிராமணரின் அரசியல் செல்வாக்கு இப் பகுதியில் மிகுந்திருந்தது. 'மத்திய தேசத்தை' ஆண்டுவந்த 'ராஜன்', புராணச் செய்தியடிப்படையில், தனி

வல்லாட்சி நடத்தவில்லையென்பது தெரிகிறது. நாட்டு நிருவாகத்தை அரசமரபைச் சார்ந்த இளவல்களும் இராணுவத் தலைவர்களுமடங்கிய 'சபா' என்னும் அவையின் உதவியுடன் நடத்திவந்தான். சில சமயங்களில் இவ் வவையின் பேராள்களாய், புரோகிதர், அலுவலர், சூத்திரர் போன்ற கடை வகுப்பினரின் பிரதிநிதிகளும் அனுமதிக்கப்பட்டார்கள். அவ்வமயங்களில் அது பொதுமக்களவையாய் விளங்கியதேயன்றி, பெரிய மனிதர் அவையாய் மட்டிலும் விளங்கவில்லை. பொது அவை காணப்படாத நாடுகளிலும், பிராமணர், சமூகத்தின் முதியோர், வாணிகத் தொழில் சபைகளின் தலைவர் ஆகியோரின் ஆய்வுரைகளை மதித்து அரசன் நடந்தான் என்பதும் தெரியவருகிறது. மக்களுக்கு உகந்தவைகளை அவன் செய்து வந்தான். நன் முறையில் அரசு செய்வதற்கு வேத சாத்திரங்களில் அவன் பயிற்சிபெற வேண்டியதாயிற்று. கொடுங்கோலர்களை அரசு நீக்கிய செய்திகள் பல காணப்படுகின்றன. பேரரசுக் கோட்பாட்டின் உறைவிடமான மகதத்திலுங்கூட, கிராமத் தலைவர்களை மன்னன் கலந்தாலோசித்தது தெரியவருகிறது. கடமை தவறிய குலமொன்று, வெகுண்ட மக்களால் பதவியினின்றும் நீக்கப் பட்டது.

அரச பதவி பரம்பரைச் சொத்து. வாரிசைத் தீர்மானிப்பதும், பட்டத்திலிருந்த மன்னனது வழக்கம். அரசனைத் தேர்ந்தெடுத்து அமர்த்திய செய்திகளும், ஆசிரியர் பலரால் கூறப்படுகின்றன. அரச குடும்பத்தினரைத் தேர்ந்தெடுப்பது வழக்கமெனினும், அயல் குலத்தவரையும் அரசுக் கட்டிலேறச் செய்வதும் வழக்கம். பஞ்சாபு மாகாணமொன்றில் அழகுமிக்க ஒருவனை மன்னனாகத் தேர்ந்தெடுத்த செய்தியைக் கிரேக்க ஆசிரியர் கூறுவர். அரசப் பதவி க்ஷத்திரியருக்கே உரியது என்னும் விதி தளர்ந்தது. இக் காலத்து வலிமை பொருந்திய அரச குலங்களில், 'சூத்திரரும்' மிகச்சிறந்து விளங்குகின்றனர்.

நாட்டெல்லை பெருகியதாலும், புதிய நாடுகளை இணைப்பதாலும், வைசிராய் அல்லது மாகாணக் கவர்னர்களின் பதவி மதிப்பு உயர்ந்தது. கிழக்கு, வடமேற்குப் பேரரசுகளால், அரச குலத்தைச் சார்ந்த இளவல் ஒருவனுக்கு இப்பதவி அளிக்கப் பட்டது. தைமூர் வமிசத்தினரிடமும், பிற்காலத்தில் மௌரிய வமிசத்தினரிடமும் இப்பழக்கம் இருந்து வந்தது. பிற நாடுகளை நிலையாகப் பேரரசுடன் இணைத்து அரசுப் பொறுப்பேற்பதை இதிகாசம் போற்றுவதில்லை. சாதாரணமாக வெற்றி கண்ட பிறகும் தோற்றவரின் நாட்டை அம்மரபிலுதித்த அரச வமிசத்

தினருக்கே மீண்டும் அளித்துவிடுவது வழக்கம். வேறு தலைவனை யமர்த்த நேரும்போது பேரரசு அவையில் பணி புரியும் இராணுவத் தலைவர்களையே தேர்ந்தெடுப்பது வழக்கம். இத் தலைவர்கள் க்ஷத்திரியராய் இருக்க வேண்டுவதில்லை. உதாரணமாக, பாஞ்சாலப் பகுதியொன்றை ஆள்வதற்குப் பிராமணன் ஒருவனைக் கௌரவர் தேர்ந்தெடுத்த செய்தி குறிப்பிடத்தக்கது. கௌரவ மன்னன் ஒருவன், அங்கநாட்டின் (Anga) ஆட்சிப் பொறுப்பை, தேரோட்டியின் (Suta-சூதன்) மகனொருவனுக்கு அளித்திருந்தான். கோசல நாட்டில் பிராமணர்கள, சில மாவட்டங்களை ஆட்சிப் பொறுப்புட்படப் பரிசாகப் பெற்று மன்னரைப்போல வாழ்ந்தார்கள்.

அரச அலுவலர்களுள், காசி-கோசல நாடுகளில் புரோகிதனுக்குச் சிறந்த இடமளிக்கப்பட்டிருந்தது என்னும் செய்தி, 'இராமாயணம்', 'ஜாதகக் கதைகள்' (Jatakas) என்னும் இலக்கியங்களிலிருந்து தெரியவருகிறது. சூத்திரச் செய்யுள் ஒன்றிலிருந்து காசி, கோசல, விதேகநாடுகள் மூன்றிற்கும் ஒரே புரோகிதன் இருந்ததாகச் செய்தி கிட்டுகிறது. 'ஏகபுரோகித' (Eka-Purohita) என்னும் சொற்றொடர் இராணுவத் துறையில் 'ஏகராட்' (Eka-Rat) என்னும் சொற்றொடரைப்போல, சமயத் துறையில் சிறப்பு வாய்ந்தது. கௌரவ, பாஞ்சால, மத்ஸ்ய நாடுகளில், புரோகிதனைக்காட்டிலும் சேனாதிபதியின் செல்வாக்கு மிகுந்திருந்தது. சேனாதிபதிக்குச் சற்றேறக்குறைய மன்னனைப்போலவே செல்வாக்கு மிகுந்திருந்தது. அரச குலத்தைச் சார்ந்த ஒருவனுக்கு இப்பதவியை வழங்குவது மரபு. இராணுவ அலுவல்களுடன் நீதி வழங்கும் பணியையும் இவன் மேற்கொண்டான்.

இக் காலத்துப் பொது அலுவல் துறை வளர்ச்சியில் 'மகாமாத்திரர்' (Mahamatras) என்னும் புதிய அலுவலர் குழாம் ஒன்று தோன்றி வளர்ந்தது குறிப்பிடத்தக்க செய்தி. வேத இலக்கியக் குறிப்புகளில் காணப்படும் இவ் வலுவலரைப்பற்றிய செய்திகள் மௌரிய, சாதவாகன ஆட்சிக் காலங்களுக்குப்பின் காணப்படுவதில்லை. சிலர் (ஸர்வார்த்தகர் - Sarvarthakas), பொதுக் காரியங்களைக் கவனித்து வந்தனர்—மற்றும் சிலர் (வியவகாரிகர்-Vyavaharikas) மூன்றுமவர், இராணுவ நிருவாகப் பொறுப்புள்ள சேனா நாயகர் (Sena-nayakas). சிலர் பிறர் நிலங்களை அளந்து குறிப்புவைத்துக்கொள்ளும் பணியையும் (ரஜ்ஜுக் ரஹகர்—Rajjug rahakas), மற்றும் சிலர், மன்னனுக்குச் சேர வேண்டிய விளைபொருள்களைக் கணக்கெடுக்கும் பணியையும் (துரோணமபகர்—Dronamapakas) மேற்கொண்டிருந்தனர்.

நீதி வழங்குவதில் மன்னனுக்குப் பெரும்பங்கிருந்து வந்தது. குடும்பம், சாதி, மாவட்டம் ஆகியவைகளில் நிலவியிருந்த பழக்கவழக்கங்களுக்கிணங்க, அரசன் நீதி வழங்க வேண்டிய பொறுப்பு இருந்து வந்தது. 'வியவகாரிகர்' அல்லது நீதிபதிகள், அப்போது, இப் பொறுப்பில் பெரும்பகுதியை மன்னனுடன் பகிர்ந்துகொண்டனர். சில பகுதிகளின் சட்ட முறை பௌத்த மரபையொட்டிச் சிக்கல் நிறைந்து காணப்படும். ஒன்றன்மேல் ஒன்ருயமைந்த தனிப்பட்ட வழக்குத் தீர்ப்பு மன்றங்களில் (tribunals), வினிஸ்சய 'மஹாமாத்திர' (Vinischaha mahamathra) மன்றம் கடையிலும் 'ராஜனின்' அவை மேலுமாய் அமைந்திருந்தன. வழக்காறுகள்கொண்ட புத்தக விதிகளுக்கிணங்க (Book of Customs) நீதி வழங்கப் பட்டது. இம்மரபு விதிகளைக் குறிக்கும் சான்று பிற்காலத்தைச் சார்ந்திருப்பதால், இதில் குறிக்கப்பட்டிருக்கும் முறை, குடியாட்சிமுறை வழக்கிலிருந்த ஒரு தனிப்பகுதியில் கடைப் பிடிக்கப்பட்டதா, அல்லது நாடு முழுவதும் வழக்கிலிருந்ததா என்பது கூற இயலாது. கிரிமினல் சட்ட விதிகளுக்கிணங்க, கடுஞ்சோதனைகளும் அனுமதி பெற்றிருந்தன.

ஆயுதம் தாங்கிய எதிரிகளிடமிருந்து மக்களைக் காப்பது, நீதி வழங்குதலைப்போன்ற முக்கியக் கடமைகளுள் ஒன்று. இப் பணியைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கெனப் பெரும்படையொன்றை அரசன் தயாரிக்கவேண்டியிருந்தது. எனவே, இராணுவ நிருவாகத்தில் மிகுந்த அக்கறை கொண்டு, யானைப் படையை நிரந்தரமாக நிறுவி, இராணுவ நிருவாகப் பொறுப்புகளை, மகாமாத்திரரிடம் ஒப்புவித்தனர். அக் காலத்துப் படை நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது. 'காலாட்படை, குதிரைப் படை, தேர்ப்படை, யானைப்படை ஆகிய படைகளின் பட்டியலில் பிந்திய இதிகாசம், கடற்படை, பணியாள்கள், ஒற்றர்கள், உள் நாட்டு வழிகாட்டிகள் ஆகியோரையும் இணைத்துக் கூறும். சிந்து நதி டெல்டாவில் வாழ்ந்த திறமை மிக்க மாலுமிகளைக் கிரேக்க ஆசிரியர் குறிப்பர். கடற்பிரயாணத்தை மேற்கொண்ட மாசிடோனியர், தங்கள் முயற்சியில் தோல்வியுற்று, அம் மாலுமிகளைப் பதவியிலமர்த்திப் பிரயாணத்தைத் தொடர்ந்தனர் என்பதை அவ் வாசிரியர் குறிப்புகளிலிருந்து அறியலாம். மௌரியப் பேரரசை நிறுவிய மன்னன் கடற்படையை அமைப்பதற்கு முன்பே சிந்துவெளி டெல்டாவிலுள்ள மன்னர் சிறு கடற்படைகளை வைத்திருந்தனர் என நம்புவதற்கு இடமுண்டு.

கி. மு. நான்கு அல்லது ஐந்தாம் நூற்ருண்டில், இந்தியப் போர்வீரர்களின் போர்த்திறமையை விளக்கும் கிரேக்கக் குறிப்

புகள் மிகச் சொற்பமெனினும், கிடைத்திருப்பது நாம் பெற்ற நற்பேறே. பகுத்தி உடையணிந்த இந்தியக் காலாட்படையினர், நீண்ட விற்களையேந்தி, இரும்பு முனை பொருந்திய நாணல் அம்புகளை உபயோகித்து வந்தனர். வீரர் சிலர் ஈட்டியையும் தாங்கியிருந்தனர்; இரு கைப்பிடிகளுள்ள வாளையும், பதனிடப் படாத எருமைத் தோலினாலாகிய கவசத்தையும் கொண்டிருந்தனர். குதிரைப்படையினரின் உடைமைகளும், காலாட்படையினருடைய உடைமைகளைப் போன்றனவே. தேர்கள், குதிரைகளாலும் மூர்க்கமான கழுதைகளாலும் இழுத்துச் செல்லப்பட்டன. தேர்களிலிருந்த அறுவருள் வில்லாளர் இருவரும், கேடயந்தாங்குபவர் இருவரும், தேரோட்டிகள் இருவருமாவார்கள். இதிகாசக் கவிஞர், படைப்பிரிவுகளை 'அட்செளகிணிகள்' (Akshu-hinis) என்றும், 'வாகினிகள்' (Vahinis) என்றும் பல பெயரிட்டு வழங்குகின்றனர். இதைத் தவிரப் பல வகையான போர் அணிகளையும் (வியூகம் - Vyuha), சதக்னி (Satagni-நூறு ஆள்களைக் கொல்லவல்ல கருவி) உட்பட பல்வேறு எறிபடைகளையும் குறிப்பிடுகின்றனர். சமண நூலாசிரியர், அஜாதசத்துருவால் கையாளப்பட்ட 'மஹாசிலாகண்டகம்' (Mahasila kantaga), 'ரத்தமுசலம்' (Ratha musalam) போன்ற கருவிகளையும் குறிப்பிடுகின்றனர். இவற்றுள் முந்தியது பெருங்கற்களைச் சுழற்றியெறியக்கூடிய 'கவண்' போன்ற கருவி என்றும், பிந்தியதுகதை பொருத்தப்பட்ட தேர் என்றும், குறுக்கும் நெடுக்குமாக விரைந்து சென்ற இது பலரைக் கொன்று குவிக்கக்கூடியது என்றும் அறிகிறோம்.

ஆசிய நாட்டின் மற்ற மக்களைக்காட்டிலும் இந்தியர் போரில் வல்லவர் எனக் கிரேக்க நூலாசிரியர் சான்று பகர்வர் பிற நாட்டிலிருந்து படையெடுத்து வந்தோரை எதிர்த்து நிற்க இந்திய வீரரால் இயலாமைக்கு, இந்தியக் குதிரைப் படை வீரரின் பலவீனமே காரணமாயிற்று. பழங்கால இந்தியப் படைத் தலைவர்கள், யானைப்படைகளின்மீது மிக்க நம்பிக்கை கொண்டிருந்தமையால், குதிரைப்படை அமைப்பில் மிகுந்த கவனம் செலுத்தவில்லை.

சிறந்த அவை, பெரும்படை, சீரிய அலுவலர் பலர் ஆகியோரைப் பராமரிப்பதற்குப் பொருள் இன்றியமையாததாயிற்று. வலிமையற்ற அரசர்கள் தங்களை வெற்றி கண்டாரைத் திருப்தி செய்வதற்காக மிகுந்த பொருள்களைத் திறையாகச் செலுத்தினர்கள். பல மில்லியன்களைக் கருவூலங்களில் சேர்த்து வைக்க மாமன்னர் பலர் விரும்பினர். வரி வசூலிப்பது அரசாங்கத்திற்கு

மிக முக்கியமாயிற்று. கருவூலங்களை நிரப்புவதற்கு மன்னர் நூதனமான உபாயங்களைக் கையாள ஆரம்பித்தனர். வேதச் செய்யுள்களில் மக்கள் மனமுவந்து அளித்த 'பலி' (Bali) முக்கிய வருமானம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. 'பலிக்ரித்' (Balikrit) என்பது வேதகால குடிமகன் இசைத்த பலியைக் குறிக்கும் தோத்திரத்தைச் சுட்டும் சொல்லாகக் கருதப்படுகிறது. அதர்வ வேதத்தைச் சார்ந்ததெனக் கருதப்படும் பகுதியொன்றில், 'சுல்கம்' (Sulka) என்னும் சொல்லையும் அறிஞர் சிலர் கண்டு உரைப்பர். 'யாக' என்னும் சங்கத்தைக் குறித்த சொல், பிராமண இலக்கியங்களில் உயர்ந்த அரசாங்க அலுவலன் ஒருவனைக் குறிக்கும் 'பாகதுக' (Bhaga-dugha) என்னும் சொல்லிலிருந்து கிடைக்கிறது. அறுவடையான தானியத்தில் மன்னன் பங்கு என்னும் பொருள்படும் 'பாக' என்பது, நாளடைவில் அரசாங்க வருமானங்களில் முக்கியமானதாயிற்று. இதனின்று மன்னனுக்கு 'ஷட்பாகின்' (Shadbhaginஆறில் ஒரு பங்கிற்கு உரிமையாளன்) என்ற பெயரும் ஏற்பட்டது. அறுவடைக்களங்களில் 'பாகம்', கிராம அதிகாரிகள் அல்லது மன்னனின் பணியாள்களால் அளந்தும், அல்லது தானியங்களை மதிப்பிட்டும் சேகரிக்கப்பட்டது. வரி வசூலிப்போரில் 'கிராம போஜகன்' (Gramabhojaka) அல்லது கிராமத்தலைவன், முதன்மையானவன். அமைச்சர்களும் இப் பதவியை வகிப்பதுண்டு. மனமுவந்து மக்களால் அளிக்கப்பட்ட பலி, நாளடைவில் அரசாங்கத்தாரால் கடுமையுடன் கோரப்படும் வரியாயிற்று. எனவே, 'பலியை' வசூலிப்பவர்களை ஆள் விழுங்கி வேதாளங்களாகக் கருதும் வழக்கம் ஏற்பட்டது. அரசனுக்குரிய பிற வரிகள் 'பாற்பணம்' (Milkmoney) என்பது மற்றொன்று. 'பாற்பணம்' மன்னனுக்கு வாரிசு பிறந்ததும், குடி மக்களால் செலுத்தப்படுவது. இவற்றைத் தவிர, வணிகர், பிற வரிகளையும் சுங்கங்களையும் செலுத்தி வந்தனர். 'கட்டாயப் பணிகளையும்' குடிமக்கள்மீது மன்னன் சுமத்தி வந்தான். காடுகளையும், காலி மனைகளையும், தன்னிச்சைப்படி ஜாரி செய்வதற்கு மன்னனுக்குரிமையுண்டு.

அரசனற்ற நாடுகள், அல்லது குடிமக்களைப்பற்றிய செய்திகள், பெரும்பாலும் பௌத்த கிரேக்கச் சான்றுகளிலிருந்து கிட்டுகின்றன. வடமொழி இதிகாசங்களிலும் சில அரசியல் நூல்களிலும், சமய நூல்களிலும் சில குறிப்புகள் காணப்படுகின்றன. நாணயங்களும் கல்வெட்டுகளும் அதிகமாகப் பயன்படுவதில்லை. 'சங்கம்' (Sangam) அல்லது 'கணம்' (Gana) என்னும் சொற்கள் குடியாட்சியைக் குறிப்பவை. பொருளாதாரச் சங்கங்களையும், சமயக் குழுக்களையும் குறிப்பதற்கும், இச் சொற்களே பயன்படு

கின்றன. முடியாட்சிகளைப் போலக் குடியாட்சிகளும் ஒரே அமைப்பைக் கொண்டவையல்ல. சில, மரபினரின் சிறு குழு ஆட்சிகளாகவும் (ஆலிகார்க்கி), மற்றும் சில, மக்களாட்சிகளினுடையன என்றும் குறிக்கப்படுகின்றன. சில, பல இனத்தினரை உள்ளடக்கியிருந்தன. மற்றும் சில, ஒரு குலம் அல்லது சில நகரங்களுக்கு மட்டிலும் உரியனவாய் இருந்தன. பிற ஆட்சிக்குட்படாத தனி இறைமை பொருந்திய நாடுகளாய்ச் சில விளங்கின. ஓரளவு தல நிருவாக உரிமை பெற்று விளங்கியபோதிலும் அண்டையிலுள்ள பெருமன்னனுக்கு அடிபணிந்து வாழ்ந்தன சில. ஆயினும், யாவற்றிற்கும் பொதுவான சில கூறுகளும் காணப்படுகின்றன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு 'பரிஷத்' அல்லது அவை உண்டு. இவ்வவை 'சமஸ்தகாரம்' (Samasthagara) அல்லது கூரை வேய்ந்த கூடமொன்றில் கூடிற்று. இளைஞரும் முதியோரும் இதில் கலந்துகொண்டனர். இனக்கூட்டங்களில் கையாளப்பட்ட செயல்முறை, பிரச்சினைகளை வாக்கெடுத்துத் தீர்மானிப்பதன்று. பிரச்சினைகளை ஏகமனதாக நிறைவேற்றியோ, அல்லது நடுநிலையாளர் குழுவொன்றின் பரிசீலனைக்கனுப்பியோ தீர்ப்பது வழக்கம். தலைநகரிலுள்ள மத்திய அவை நீங்கலாக, மாநிலத்தின் முக்கியப் பகுதிகள் யாவற்றிலும் தல அவைகளும் இருந்தன. குடிமக்கள் 'மகல்லகர்' (Mahallakas) அல்லது முதியோருக்கு மிக்க மரியாதை செலுத்தி, அவர்களுடைய மதியுரைகளுக்குச் செவிமடுப்பதைக் கடமையெனக் கொண்டார்கள். ஆட்சித்துறை, தலைவர் ஒருவரையோ அல்லது பலரையோ கொண்டிருந்தது. ரோமானிய 'கான்ஸல்' களையும் (Consuls) கிரேக்க 'ஆர்க்கன்' (Orchon)களையும் ஒத்த இவர்களுக்கு முறையே 'ராஜன்' (Rajan) 'கணராஜன்' (Gana Rajan) அல்லது 'சங்க முக்கியன்' (Sangamukhya) என்ற பெயர்கள் வழங்கிவந்தன. ராஜன், சங்கமுக்கியன் ஆகியோர் மகல்லகராகவோ அல்லது அவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவராகவோ இருக்கலாம். 'ராஜன்' என்னும் விருது, மாநிலத்திலுள்ள எல்லாத் தலைவர்களுக்கும் தாராளமாகவழங்கப்பட்டிருக்க வேண்டும். 'லிச்சாவி' மரபினருள், 7,707 'ராஜர்'கள் இருந்ததாகக் கூறப்படினும், ஏடு ஒன்றில் 500 ராஜர்களேயிருந்ததாகவும், சமண நூல் ஒன்றில் ஒன்பதே ராஜர்கள் இருந்ததாகவும் குறிப்புகள் காணப்படுகின்றன. புத்தசமய விளக்க நூல் ஒன்று, ராஜர்கள் முறை வைத்துப் பணியாற்றினார்கள் என்னும் செய்தியை அறிவிக்கிறது. ஆட்சித்துறைத் தலைமைப் பதவிக்குகந்த முதிய குடி மக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு தொகையாய் இருந்திருக்கக் கூடும்.

ராஜனைத் தவிர 'உபராஜன்' (Uparajan-துணைக்கான்ஸல் என்னும் பெயர் கொண்ட வேறு அலுவலர்களும், 'சேனாதிபதி' (தளபதி), 'பாண்டாகாரிகர்' (பொக்கிஷதார்) முதலிய பணியாளரும் இருந்தனர். விரிஜியன் நாட்டில் கிரிமினல் சட்டத்தை அமுல் நடத்துவதற்கெனப் படிப்படியாக அலுவலர் பலர் இருந்தனர் என்னும் கர்ண பரம்பரைச் செய்தியுமுண்டு. அவர்கள், 'வினிஸ்சய மஹாமாத்திரன்' (Vinischaya Mahamathra-முடிவு கூறும் தண்டல் நாயகன்), 'வியவகாரிகன்' (Vyavaharika-சட்டமறிந்த நீதிபதி), 'சூத்திரதாரன்' (Sutradhara-சட்டக்காவலன்), 'அஷ்டகுலிகன்' (Ashtakulika-எட்டுக் குலங்களின் பேராள்), 'சேனாபதி' (Senapathi-தளபதி), 'உபராஜன்' (Uparajan-துணைக் கான்ஸல்), 'ராஜன்' (Rajan-கான்ஸல்) என்பவர்கள். இச் சான்று பிற்காலத்தைச் சார்ந்திருப்பதால், எவ்வளவில் இம் முறைகள் கையாளப்பட்டன என்பதை அறிய இயலவில்லை.

## சமூக வாழ்க்கை
## (Social Life)

இந்தியா முழுவதும் ஆரிய மயமானதும், சமூக வாழ்க்கையிலும் பல மாறுதல்களேற்பட்டன. கங்கைச் சமவெளியில் அனுமதிக்கப்படாத பழக்கங்கள் சில, சரஸ்வதி ஆற்றிற்கு வடதிக்கிலும், நருமதைக்குத் தெற்கிலும் நற்பழக்கங்களென ஏற்றுக் கொள்ளப்பட்டன. மேற்கோளாகப் பெண்களுக்குத் தென்னிந்தியாவில் அளிக்கப்பட்ட சில சலுகைகள் மத்திய இந்தியச் சகோதரிகளுக்கு மறுக்கப்பட்டன. தெற்குப்பகுதியில், மனைவி கணவனுடன் உண்பதற்கு அனுமதிக்கப்பட்டாள். உறவினருக்குள் மணமுடிப்பதில் வடக்கில் பல தடைகளிருந்தன. தெற்கில் அத்தகைய தடைகள் இல்லை. விதவை விவாகமும், பாலர் மணமும் கங்கைச் சமவெளியிலும் காணப்பட்டன. விதவைகளை எரித்தல் புராதன சாத்திர வல்லுநர்களால் ஆமோதிக்கப்படவில்லை. தென்மேற்கில் உடன்கட்டையேறும் வழக்கம் நடைமுறையிலிருந்திருக்க வேண்டும். இதிகாசத்தில் தன்னைத் தானே பலியிட்டுக்கொண்ட பஞ்சாபைச்சேர்ந்த மத்திரா இளவரசியைப்பற்றிய செய்தி கிட்டுகிறது. ஆராய்ச்சியாளர் இந்தியத் தளபதியின் மனைவியொருத்தியை அவள் தோழிகள் பூச்சரங்களால் அலங்கரித்து, விவாக மணைக்கு அழைத்துச் செல்வது போலச் சிதையை நோக்கி அழைத்துச் சென்றதை விவரிக்கின்றனர். ஒரு பெண்ணைப் பலர் மணந்துகொள்ளும் வழக்கத்தையும் இதிகாசங்கள் குறிக்கின்றன. பொதுவில் இப் பழக்கம் ஏற்படவில்லையென்பதால், இவை மிக அரிய சம்பவங்கள் என்றே கூறலாம்.

கிரேக்க குறிப்புகள், புத்த சமயச் சொற்பொழிவுகள், இதிகாசக் கதைகள் ஆகியவைகளிலிருந்து நமக்குக் கிட்டும் பெண்ணின் உருவகம், சாத்திர நூல்களில் காணப்படுவதனின்றும் மாறுபட்டுக் காணப்படுகிறது. தர்ம சூத்திரங்கள் பெண்களைத் திக்கற்றவர் என்றும், உறவினரான ஆடவரின் உதவியை எதிர்நோக்கியிருப்பவரென்றும், தேக்கி வைக்கப்பட்ட முதல் என்றும், வயது நிரம்பப்பெருதவரின் சொத்துப்போன்றவரென்றும் பலவாறு சித்திரிக்கின்றன. அலெக்ஸாந்தருடன் விஜயம் செய்த கிரேக்கர், வீழ்ந்துபட்ட உறவினனின் ஆயுதமேந்தி, ஆடவர்களுடன் சரிநிகர் சமானமாக நின்று போரிட்ட வீராங்கனைகளையே கண்டதாகச் செய்தி கிட்டுகிறது. இதிகாச இலக்கியத்தில், மூதாட்டியொருத்தி, சோம்பிக்கிடக்கும் மகனைத் தட்டியெழுப்பி, 'ஒரு கணமாயினும் ஒளி விளக்கைப்போலச் சுடர் வீசி எழு! வாழ்க்கை நீடிப்பதற்கெனப் பயனற்ற பொருளைப் போலக் கொலையில் நாட்டங்கொள்ளாதே!' என அறிவுரை கூறி அனுப்பிய சம்பவம் சித்திரிக்கப்படுகிறது. மாதர்களுக்குக் கல்வியறிவு மறுக்கப்படவில்லை. மாதர்களுள் சிலர், தருக்கத்திலும் அறிவிலும் கல்வியிலும் சிறந்து விளங்கினர் என்பதை அறிகிறோம். அரச குமாரிகளுள் சிலர் கவிதை புனைவதில் சிறந்து விளங்கினரென்றும், அவர்தம் கவிதைகளில் சில 'தேரி காதை' (Theri gatha) அல்லது 'சகோதரிகளின் தோத்திரப் பாடல்கள்' என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ளன என்றும் புத்த நூல்கள் குறிக்கின்றன. இதிகாசக் கதைகள் சிலவற்றில் 'ஸ்வயம்வரம்' (Svayamvara) அல்லது கணவனைத் தானே தேர்ந்துகொள்ளல் என்னும் வழக்கமும் குறிக்கப்பட்டுள்ளது. பிரசித்திபெற்ற மன்னன் ஒருவன், தன் மகள் மனத்திற்கிசைந்த மணாளனைத் தேர்ந்துகொள்ளும் உரிமையளிக்கவும், அவனையே மணமுடித்து வைப்பதாகவும் வாக்களித்த செய்தி காணப்படுகிறது. பெண்களைப் பூட்டிவைக்கும் வழக்கமும் சில குடும்பத்தினரிடையில் காணப்படுகிறது. இதிகாசக் கதைகளில் பெரும்பாலும் ஒதுங்குமிடங்களிலிருந்து முகத்திரையைக் களைந்து, சுதந்தர வாழ்க்கை நடத்திய பெண்டிரைக் குறித்த செய்திகள் பல காணப்படுகின்றன. தேசீய விழாக்களிலும் தேசத்திற்குத் துன்பம் விளையும் நேரங்களிலும், பெண்டிர் திரளாகக் கலந்து கொண்டனர் என்பது தெரியவருகிறது. 'பெண்களைக் கொல்லலாகாது' என இதிகாசப்புலவர் குறிப்பர். 'மனையாட்டிக்கு மணாளனின் உரிமையில் சம பங்குண்டு' என்பர் மற்றொருவர். மேலும் அவர் கூறுவதாவது:

'துன்பத்தாலும் துயரத்தாலும் நாங்கள் அவதியுறுங்கால் அவர்கள் தாயெனப் பரிந்து ஆறுதல் உண்டாக்குவார்கள்.'

சாதாரண மக்கள் பெரும்பாலும் கூரைவேய்ந்த எளிய குடிசைகளிலேயே வாழ்ந்து வந்தார்கள். தீயினின்று பாதுகாத்துக்கொள்வதற்காக மண் பூசிய சுவர்களை எழுப்புவதுமுண்டு. மன்னர் அரண்களால் பாதுகாக்கப்பட்ட புரங்கள் (பூர்-Pur) அல்லது நகரங்களிலும் வாழ்ந்தனர். இவற்றைச் சுற்றிலும் உயர்ந்த சுவர்களும் பலமான அரண்களும், காவலாளிகளுக்கெனக் கோபுரங்களும், அகன்ற வாயில்களும் அமைந்திருந்தன. நகரங்களில் உல்லாசப் பொழுதுபோக்கிற்கெனப் பூங்காக்களும், தண்ணீர் தெளிக்கப்பட்டும், விளக்குகள் ஏற்றப்பட்டும் காணும் ஒளிமிக்க வீதிகளும், கூட்ட மன்றங்களும், வணிகக் கூடங்களும், தொழிற்கூடங்களும் நிறைந்திருந்தன. ஆறு நகரங்களின் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. அவை: 'சம்பா' (பகல்பூர் அண்மையில்), ராஜகிருஹம் (பாட்னு மாவட்டம்), 'சிராவஸ்தி' (சாகேத-மகதம்), சாகேதம் (அயோத்தி), கௌசாம்பி (அலகாபாதுக்குச் சமீபம்) காசி என்பவை. புத்தர் காலத்தில் இவை யாவும் சிறந்து விளங்கின. இப் பட்டியலில் தட்சசீலம் இடம் பெறவில்லை; சிறப்பெய்தாத காரணத்தாலோ, அல்லது வடமேற்கிலிருந்து தொலைவிலுள்ளதாலோ இடம் பெறுதிருக்கலாம். சாக்கிய முனிவர் இறந்த பிறகே, 'பாடலிபுத்திரம்' நிருமாணிக்கப்பட்டது. முடியாட்சி இல்லாத நாடொன்றின் தலைநகரம், ஆரணியங்களால் சூழப்பட்டுக் கரடுமுரடான படல் கட்டுப் போன்ற நகரம், 'கிளை நகரம்' என்று உறுதியாகக் கூறப்பட்டுள்ளது.

பிராமண சூத்திரங்களில் கூறியுள்ளபடி மன்னனது இருப்பிடம், படாடோபமற்ற-மரத்தாலாகிய சிறு கட்டடம். பௌத்த நூல்கள், கந்தர்வலோகத்திலுள்ள கற்கட்டடமென்று சித்திரிக்கின்றன. ஏழு மாடி அடுக்குகளைக்கொண்ட கட்டடங்கள் (சப்த-பூமக-பிரசாத-Sapta-bhumaga-prasada) என்றும் அவை வருணிக்கின்றன. ஒருவர் கருத்துக்கிணங்க, முற்காலக் கட்டடங்கள் யாவும், மரத்தாலோ, செங்கற்களாலோ ஆனவை. சிதைந்த கிராமமொன்றில் கிடைத்த பொருள்களைக்கொண்டு கல் தச்சர்கள் வீடு கட்டினரெனச் சில நூல்கள் குறிப்பிடுகின்றன. இதிகாசங்களில் சித்திரிக்கப்படும் மன்னர் மனைகள், கற்களாலும் பல உலோகங்களினாலும் கட்டப்பட்ட கூரைகளையுடைய உன்னத மாளிகைகளாகும்.

அரண்மனைகளின் உள் வாயிலில் உள்ள பூக்களும் செயற்கை நீரூற்றுகளும் கொண்ட விளையாட்டு மைதானங் களில் பெண்டிர் களிப்புடன் விளையாடி வந்தனர். இளவரசிகள், பொம்மைகளை (பஞ்சலிக-Panchalika) வைத்தும், பந்துகளைக் (கந்துக-Kanduka) கொண்டும் விளையாடினார்கள். பந்து மட்டை கொண்டு (வித-Vita) பந்தைத் தரையில் உருட்டியும், உயரத் தில் வீசியும் விளையாடினர். இசை, நடனம், பாட்டுப்போன்ற பொழுதுபோக்குகளை மாதர் மேற்கொண்டனர். ஒவ்வோர் அரண்மனையிலும் நாட்டிய சாலை அமைக்கப்பட்டிருந்தது. கிரேக்க ஆசிரியர், 'ஆடவர்களும் நாட்டியத்திலும், இசையிலும் நாட்டங்கொண்டிருந்தார்கள்' எனக் கூறுவர். தோட்டம், வேட்டை, போர்களைச் சித்திரிக்கும் கதைகள், சுற்றிலும் ஆச னங்கள் சூழப்பட்ட அரங்கங்களில் நடைபெறும் போட்டிகள் ஆகியவைகளே போர் வீரர்களின் முக்கியப் பொழுதுபோக்கு களாகும். பழங்காலச் சொக்கட்டான் ஆட்டம் போன்ற ஒரு வகை விளையாட்டும், மிருக ப்போட்டிகளும், கழைக்கூத்தாட் டங்களும நடைபெற்றன என நூல்கள் குறிக்கின்றன.

சிந்து வெளி மக்கள் பருத்தியாலான தளர்ந்த உட்சட்டை யையும், தலையில் முண்டாசும், கழுத்தைச் சுற்றி அங்கவத்திர மும் அணிந்திருந்தனர். ஆடவர்களும் காதணிகள் அணிவதும், தாடிக்குச் சாயம் பூசிக்கொள்வதும் வழக்கம். குடைகளும் செருப்புகளும் உபயோகத்திலிருந்தன. செல்வக் குடும்பத்தைச் சார்ந்த பெண்டிர், தலையணியாகிய தங்கத்தாலாகிய நட்சத்தி ரங்களையும், அபூர்வமான கல்லிழைத்த வளைகளையும், பல கழுத் தணிகளையும் அணிந்துகொள்வது வழக்கம். அதே போன்று கங்கைப்பகுதியில் வாழ்ந்த பெண்டிரும், ஒட்டியாணங்களையும், கழுத்தணிகளையும், சிறுமணிகள் பொருந்திய தண்டைக்கொலுசு களையும் அணிவது வழக்கம். மஞ்சள் அல்லது சிவப்பு நிறமுள்ள பட்டு அல்லது 'லினன்' போன்ற துணிகளாலாகிய பகட்டான ஆடைகளையும் அவர்கள் அணிந்திருந்தார்கள்.

ஆதி இதிகாச காலப் போர்வீரர், மாமிச உணவை உட் கொள்ளுவதில் எவ்வித அருவருப்பும் கொள்ளவில்லை. பிந்திய இதிகாச காலத்தில் க்ஷத்திரியர் கையாண்ட மிருகக் கொலை கொடுமை நிறைந்ததென்றும், பேய்க்குணமென்றும் கருதப்பட் டது. 'குற்றமற்ற பசுவைக் கொல்லாதே' என்பது போன்ற நீதியுரைகளும், உயிர்வாழ் இனங்களுக்குப் பதிலாக உணவுப் பொருள்களைக்கொண்டு உருவங்களமைப்பதும், சேதன உயி ரினங்களிடம் வளர்ந்துவரும் கருணை மனப்பான்மையை விளக்கு

கின்றன. வடமேற்கு எல்லைப்பகுதியிலுள்ள இந்தியரின் உணவு, குறைந்த அரிசிச் சோறும் சமைக்கப்பட்ட மாமிசமுமாம் என நேரில் கண்ட கிரேக்கர் குறித்துள்ளனர். இவற்றை மேஜையின்மீது தங்கத் தட்டுகளில் வழங்கினர். சமய விழாக்களிலன்றிப் பிற நேரங்களில் மது அருந்தும் வழக்கம் காணப்படவில்லை. மேலைச்சிந்து வெளியில் வாழ்ந்த மக்கள், 'லாசிடேமானியப் பொதுவிருந்தை' (Lacedaemonian common meal)ப் போலக் கூட்டாகச் சோறுண்ணும் பழக்கமுடையவர்கள். வேட்டையாடுவதில் கிட்டிய மிருகங்களே விருந்திற்கான பண்டங்களாயின.

சமுதாயக் கட்டுப்பாட்டு விதிகள் வலுப்பெற்றன. எனினும், இதிகாசத் தத்துவ ஞானிகள் பின் வருமாறு கூறுவார்கள்: 'சாதி வேறுபாடுகள் இல்லை. அகிலம் முழுவதும் பிரம்மத்திடமிருந்து (Brahma) பிறந்ததால், புனிதத் தன்மை வாய்ந்தது. யாவற்றிலும் சிறந்த அதே சத்தியால் சிருட்டிக்கப்பட்ட மனிதரும், தம் செய்கைகளின் அடிப்படையில், பல சாதிகளாய்ப் பிரிந்தனர். சாதி விட்டுப் பிற சாதியில் மணமுடிப்பது வழக்காறுகளுக்கு முரணானது என இக்கால இறுதியில் மதிக்கப்பட்டு வந்ததெனக் கிரேக்க ஆசிரியர் இயம்புகின்றனர். தத்துவ ஞானி ஒருவனுக்கே சாதிக் கட்டுப்பாடு இல்லை. மேற்சாதியினர் அல்லது இருபிறப்பாளருக்குத் தகாததெனச் சில உணவு வகைகளின் மீது தடை விதித்து, இவற்றை உட்கொள்ளுவதால் சாதியின் தூய்மை கெடும் என்ற கொள்கையும், பிராமண சாத்திர வல்லுநர் கற்பிக்க முயன்றனர். கடைவகுப்பைச் சார்ந்த ஆடவர், பெண்டிர், பாலர்களால் தீண்டப்பட்டுத் தூய்மை கெடுவதால், அசுத்தமானவர் என்றும் கருதப்பட்டு வந்தனர். 'யவனர்' (Yavanas) போன்ற புதிய சாதியினரின் நிலையை உணர்த்துவதற்கெனக் 'கலப்புச் சாதி'யைப் (Mixed Caste) பற்றிய கொள்கைகளும் உருவாக்கப்பட்டன. எனினும், இத் திருமணங்கள சட்டபூர்வமாக ஆமோதிக்கப்பட்டன. சட்ட நீதிகள் முழுமையான மதியுரைகளாய் விளங்கினவேயன்றி, அவற்றைத் தவருமல் கையாள வேண்டுமென்ற உறுதியற்றுத் தென்படுகின்றன. இந்திய மன்னனுக்குங் கிரேக்கத் தலைவர்களுக்குமிடையே ஏற்பட்ட திருமண ஒப்பந்தங்களைக் கிரேக்க வரலாற்றுசிரியர் குறிப்பர். சிந்து சமவெளியின் கீழ்ப்பகுதியில் வாழ்ந்த பிராமணரின் அரசியல் முயற்சிகளையும் போர்த்திறமைகளையும் கிரேக்க நூலாசிரியர் எடுத்துரைக்கின்றனர்.

கங்கைச் சமவெளியில் அரசைக் கைப்பற்றிய நாவிதக் குலமொன்றையும் இவ் வாசிரியர் குறிப்பிடுகின்ருர். புராண நூலா

சிரியர் க்ஷத்திரியர் சூத்திர குலப்பெண்களை மணந்த செய்திகளையும், சூத்திரர் அரசெய்திய செய்திகளையும் குறிப்பிடுவர். சாதி விட்டுப் பிற சாதியில் மணமுடிக்கும் வழக்கமும், தொழிலையும் சாதியையும் மாற்றிக்கொள்ளும் வழக்கமும் இருந்தன என்பதைக் குறிக்கும் சான்றுகளும் புராணத்தில் காணப்படுகின்றன. இதிகாசகால மன்னனொருவன் பிராமணப் பெண்ணொருத்தியை மணக்கிருன். க்ஷத்திரிய மன்னனொருவன், பிராமணரின் அந்தஸ்திற்கு உயர்த்தப்படுகிருன். பாண்டுகளுக்கும் பாஞ்சால நாட்டுத் தலைவர்களுக்குமெதிராக, பிராமணப் போர் வீரனொருவன் கௌரவரை அழைத்துச் சென்ருன். க்ஷத்திரிய மன்னனொருவன், வேடன் ஒருவனை நண்பனெனக் கூறி மார்புறத் தழுவிக்கொள்வதற்கு அஞ்சவில்லை. முனிவர் பலருக்கும் பணியாற்றும் வழக்கமுள்ள சவரப்பெண் ஒருத்தியிடமிருந்து உணவை அவன் ஏற்கிருன்.

நான்கு வருணங்கள் (Varnas) வழக்கிலிருந்தமைக்குப் புத்த நூலாசிரியர் சான்று பகர்கின்றனர். இவர்களைத் தவிர, கடைநிலை யெய்திய பல இனங்களும், இழிவாகக் கருதப்படும் தொழில்களும் (ஈனச்சாதி, ஈனச்சிற்பம்—Hinajathi and Hinasilpa), மலைச் சாதியினரும், அடிமைகளும், தீண்டத் தகாதோரும் காணப்படுகின்றனர். பிறப்பால் இறுமாப்படைவதையும், அயல் சாதியில் மணங்கொள்வது அயல் சாதியினருடன் புசிப்பது குறிப்பாக அடிமைப் பெண்கள் தீண்டத்தகாதவரோடு உறவாடுதல் ஆகியவைகளின்மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளையும் கிரேக்க நூலாசிரியர் குறித்துள்ளனர். க்ஷத்திரியர்களையே இவர்களும் போற்றுகின்ருர்கள். இதிகாசக் கவிஞரைப் போல, நன்னடத்தையே சாதியினடிப்படையென்றும், பிறப்போ அல்லது சடங்குகளின் புனிதத் தன்மையோ ஒருவனை உயர்சாதியினனுக்க இயலாதென்றும் புத்த நூலாசிரியரும் அறிவிக்கின்றனர். இதிகாச நூலாசிரியரைப்போலவே, திருமண விஷயங்களிலும், சமபந்தி போஜன முறைகளிலும் (Commensality), தொழிலை மாற்றிக் கொள்வதிலும் உள்ள விதித் தளர்வுகளைக் குறிப்பிடுகின்றனர். பிராமணர் அரசகுலப் பெண்களை மணந்தனர். இளவல்களும், புரோகிதரும், எளியோரும் ஒருங்கிருந்து உண்டு, ஒருவரையொருவர் சார்ந்த இனங்களில் திருமணத் தொடர்பும் கொண்டனர். பிராமணரும் க்ஷத்திரியரும் வாணிகத்தையும் இழி தொழில்களையும் மேற்கொண்டனர். நெசவாளிகள் வில்லாளிகளாயும் மாறினுர்கள். நூல் வாயிலாகத் தொழிலாளிகளும் வணிகரும் பரம்பரைத் தொழில்களையே விரும்பினரென்று அறிந்

தாலும் சமுதாயப் பிரிவினைகளும், பொருளாதாரத் தொழில் முறைகளும் ஒருங்கே தொடர்புடையனவாய் இல்லையென்றே கூறலாம்.

## பொருளாதார நிலை
(Economic condition)

புழுதி நிறைந்த நகர வாழ்க்கையைவிட நாட்டுப்புறங்களில் வாழ்வதையே பெரும்பாலான மாந்தர் விரும்பினர். நாட்டுப்புற மக்களுள் விவசாயிகளும், பண்ணை நடத்துவோரும் அதிகமாயிருந்தார்களெனினும், தச்சர்களும் கொல்லர்களும் குயவர்களும் நிறைந்த தொழிற்கிராமங்களைப்பற்றிய விவரங்களும் கிடைக்கின்றன. நகரங்களில் வணிகரும் ஆட்சியாளரும் அதிகமாகக் குடியேறினர்.

'உழவு தொடங்குவதற்கான சடங்கு, தலைவாயில் சடங்கு' போன்று கிருஹ்ய சூத்திரத்தில் காணப்படும் சிறுசடங்கு முறைகள் உழவுத்தொழிலின் தலையாய தன்மையை விளக்குகின்றன. கிராமங்களில் வசித்த உழவர் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டிலும் அதிகமாய் இருந்தது. கிராமங்கள் தன்னுட்சி நடத்தி வந்தன. அரசனின் ஆணைக்குட்பட்ட இக் கிராமங்களிலிருந்து முன்னரே குறித்தபடி சில வரிகளைப் பெற்றதுடன், இவ்வரிகளை வசூலிப்பதற்கான அலுவலரையும் கிராமத் தலைவரையும் நியமிக்கும் உரிமையை மன்னன் பெற்றிருந்தான். உழு நிலங்களின் மேல் மன்னனுக்கிருந்த உரிமை, விளைபொருளின் ஒரு பகுதி என்பது விதி, வசூலிக்கும் வரியை அரசாங்கத்திற்களிக்கவோ அல்லது தான் விரும்பும் பிறருக்குத் தானமாகக் கொடுக்கவோ செய்யலாம். அரசாங்க ஊழியர்களும், விவசாய மனையாள்களின் (கிருஹபதி-Grihapathi) உரிமைகளைப் பறிக்காமல் மிக்க எச்சரிக்கையுடன் நடந்துகொண்டார்கள்.

இனத்தினர் கூட்டமாக நிலப்பயிரிடும் பழக்கத்தை வடமேற்கிந்தியாவில் கண்டதாக 'நியார்க்ஸ்' (Nearchos) குறிப்பிடுகிறார். ஒவ்வொருவனும் விளைபொருளில் தனக்குத் தேவையானவற்றை எடுத்துக்கொண்டு, சோம்பலைத் தவிர்ப்பதற்காக எஞ்சியவற்றை எரித்துவிடுவது வழக்கம். கங்கை வெளியில் விளை நிலம், பல சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் குடும்பத்தலைவன் ஒருவன் வசமிருந்தது. அவன் தனதுபகுதியைப் பயிரிட்டதோடு வேலியிடுதல், கிராமத் தலைவனுடைய யோசனைகளுக்கிணங்கி நீர்ப்பாசன வசதி செய்துகொள்ளுதல் ஆகிய வேலைகளிலும் ஒத்துழைத்தான். பொதுவில்

நிலப்பகுதிகள் அளவில் சிறியவை என்றாலும், பிராமணர்களால் பயிரிடப்பட்ட பெரும்பண்ணைகளும் ஆங்காங்கே இருந்தன வென்பது தெரியவரும். பண்ணைகள் பெரும்பாலும் கூலியாள் களின் உதவியுடன் பயிரிடப்பட்டன. பயிர்த்தொழிலுக்கென அடிமைகள் அமர்த்தப்படுவதில்லை; அடிமைகள் எடுபிடி வேலைக் கென்றே அமர்த்தப்பட்டார்கள்.

விளை நிலப் பகுதிகளுக்குச் சொந்தக்காரரான குடும்பத் தலை வராகிய கிராமச் சமூகத்தினர், சிறுநிலக்கிழாரென வருணிக் கப்படுவர். சமூகத்தின் உறுப்பினர் என்பதைத் தவிர, நிலத் தின்மீது இவர்களுக்குத் தனியுரிமையிருந்ததா என்பதும் தெளி வற்ற செய்தியாயிருக்கின்றது. தென்பீகாரிலும், அயோத்தி யிலும் நில விற்பனையும், நிலத்தைக் கொடையாக வழங்குவதும் காணப்படுகின்றன. எனினும், குறிக்கப்பட்ட செய்திகள், புரோகிதருக்கும் பிரபுகளுக்கும் சொந்தமான பண்ணைகளைக் குறிக்கின்றனவேயொழிய, கிராம சமூகத்தினரான சாதாரண உறுப்பினரைச் சார்ந்த சிறுநிலப் பகுதிகளைக் குறிப்பதில்லை.

பொதுவில் கிராமக் குடியானவர் மனநிறைவு கொண்டிருந் தனர். ஆடவரும் பெண்டிரும் பொதுநலத்திற்காக உழைக்கும் மனப்பாங்குடையவர். கூட்டு முயற்சியின் விளைவாக நீர்த் தேக்கங்களும், பாசனக் கால்வாய்களும் உருப்பெற்றன. கடுமையாய் உழைத்தும், பஞ்சத்தின் கொடுமையின்றி அவர் களால் வாழ முடியாது. அடிக்கடி இத் துன்பம் நேர்வதில்லை; அவ்வாறு நேரும்போதும் பிறஇடங்களுக்குப் பரவவொண்ணாது தடுப்பு முறைகள் கையாளப்பட்டன.

விவசாயிகளோடு ஆடுமாடுகளைப் பராமரிக்கும் மாட்டுப் பண்ணை நடத்துவோரும், கிராம சமூக உறுப்பினராயிருந்தனர். நகரங்களையும், நாட்டுப்புறங்களையும் விடுத்து 'கோஷா' (Ghosha) என்னும் மாட்டுப்பண்ணைகளிலேயே இவர்கள் வசித்துவந்தார் கள். ஆடு மேய்ப்பவர் சிலர், காடுகளிலும் மலைகளிலும் ஆநிரைகளை மேய்த்துத் திரிந்தனர். அரசனுக்குச் சொந்த மான கால்நடைகளைப் பாதுகாப்பதற்கும், கிராமத்தினரின் ஆடுமாடுகளை விளைநிலங்களுக்கப்பால் ஓட்டிச் சென்று மேய்ப் பதற்கும், மந்தை மேய்ப்பவர்கள் அமர்த்தப்பட்டார்கள்.

நாட்டு, நகர்ப்புறங்களில் கைத்தொழில் செய்வோரும் காணப்படுகின்றனர். சிற்பிகள், தந்த வேலை செய்வோர், சித் திரம் தீட்டுவோர் உட்படப் பல ரகத் தொழிலாளிகள் காணப்

படுவார்கள். சில துறைகளில் தனித் தேர்ச்சிபெற்று விளங்கிய வர் பலர் உண்டு. பரம்பரைத் தொழிலை மேற்கொள்ளும் வழக்கம் தொழிலாளிகளிடம் காணப்பட்டதால், தொழில் நுணுக்கமறிந்தவர் ஒரு குலத்தைச் சார்ந்தவராகவும், ஒரே பகுதியில் வாழ்வோராகவும் காணப்படுகின்றனர். தொழில்களில் சிறப்பு வாய்ந்த பதினெட்டுத் துறைகளுக்கெனச் சங்கங்கள் (Sreni, Puga) அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு சங்கமும், முறையே, பிரமுகர் (Pramukha-தலைமைத் தொழிலாளர்), 'ஜ்யேஷ்டகர்' (Jyesthaka-மூத்தோர்), 'சிரேஷ்தின்' (Sreshthin-தலைவர்) போன்றவர்களது தலைமையில் அமைந்திருந்தது. சில சமயங்களில் 'மகாசிரேஷ்தின்' (Mahasreshthin) அல்லது பெருந்தலைவர், 'அனுசிரேஷ்தின்' (Anusreshthin) அல்லது உப தலைவர் போன்ற பெயர்களும் காணப்படுகின்றன. சங்கப் பணியாளர் யாவரினும் உயர்ந்த 'பண்டகாணிகார்' (Banda-ganika) என்னும் அலுவலர், மாநிலப் பொருளாளராகவும், சங்கங்களின் (சிரேணிகர்) கூட்டுத் தலைவர்களாகவும் விளங்கினார்கள்.

வாணிகரிடையிலும், மாலுமிகளிடையிலும் 'சங்க முறை' முழுமையாகப் பரவவில்லை. சிலவற்றிலுள்ள 'ஜியேஷ்டகர்' (Jyeshthaka-முதியோர்) அல்லது 'சார்த்தவாகர்' (ஒட்டகைக் கூட்டத் தலைவர்) என்பவர்கள் சிரேஷ்தினுடன் கூட்டுச் சேர்ந் திருந்தார்கள் என்பது தெரியவருகிறது. ஆயினும், தலைவர், அல்லது முதியோருக்குக் கீழ்ப்படிந்து நடந்தனர் என்பதற்கான தெளிவான ஆதாரமில்லை; பெரும்பாலாரான வணிகர் வியா பாரத்தைத் தாமே நடத்தி வந்தனர்.

'பாலி நூல்கள்' (Pali-texts) வருணிக்கும் காலத்தில மாலு மிகள், வணிகர்கள் ஆகியவர்களின் முயற்சிகளை அளவிட்டுக் கூற இயலாது. பரந்து கிடக்கும் பாலி நூல்கள் எழுந்த காலத் தையும் திட்டமாக அறியக்கூடவில்லை. பர்மா, மலேயாக் கரை யோரங்களையும் (Suvarnabhumi-சுவர்ணபூமி,) கொழும்பு, (தாமிர பரணி-Tamra-parni) பாபிலோன் (பவேரு-Baveru) நோக்கி மேற்கொள்ளப்பட்ட கடற்பிரயாணங்களையும், வாணிக நோக் குள்ள பிற பிரயாணங்களையும் பற்றிய குறிப்புகள் கிடைக்கின் றன. மாலுமிகள் அதிகமாகச் சிந்து, கங்கை, அதன் கிளை நதி கள் ஆகியவைகளில் குறுக்கும் நெடுக்குமாகப் பிரயாணம் செய் தார்கள். 'பிருகுகச்ச' (Brigukachcha), 'புரோச்சு' (Broach), 'சூர்பாரக' (Surparaka) 'சொபாரா-பம்பாயின் வடக்கிலுள்ளது (Sopara-North of Bombay), தாமிர லிப்தியுட்பட (Tamralipthi)

மேற்கு வங்காளத்திலுள்ள தாம்லுக்கு (Tamluk in West Bengal) முக்கியமான துறைமுகங்களாய் விளங்கின. ஆற்றுக்கரைகளிலுள்ள தங்குமிடங்களில் 'ஸஹஜாதி' (Sahajathi–மத்திய இந்தியா), யமுனைக் கரையிலுள்ள கௌசாம்பி, பனாரஸ், சம்பா (பகல்பூர் அருகில்), பிற்காலத்தில் கங்கைக்கரையிலுள்ள பாடலிபுத்திரம், சிந்து நதிக்கரையிலுள்ள 'பட்டல' (Pattala) ஆகியவைகளை முக்கியமாகக் குறிப்பிடலாம். பனாரஸ், சிராவஸ்தி ஆகியவை தரை மார்க்கங்களுக்குக் கேந்திர ஸ்தானங்களாய் விளங்கின. கங்கை வெளியின் முக்கியத் தொழில், வாணிக நகரங்களைத் தட்சசீலம் வழியாக, மத்திய, மேற்கு ஆசியாவுடன் பெருவழியொன்று இணைத்தது. மற்றொன்று, தென் பீகாரிலுள்ள ராஜகிருஹத்தில் தொடங்கி, அயோத்தியிலுள்ள சிராவஸ்தி வழியாகக் கோதாவிரிக் கரையைச் சென்று அடையும். பிறிதொன்று, இராஜபுதனப்பாலைவனம் வழியாகச் சிந்து சமவெளியின் கீழ்ப்பகுதியிலுள்ள 'சௌவீரம்' (Sauvira) என்னும் துறைமுகத்திற்கும், மேற்குத் தக்காணத்தில் நருமதையின் முகத்துவாரத்திற்கு அருகிலும் அழைத்துச் சென்றது. இவ்வழி, கடப்பதற்குக் கடினமானதாயிருந்து வந்தது. துணிவுள்ள வணிகரை, தரை மார்க்கமாக, வழி காட்டிகள், நட்சத்திரங்களின் உதவி கொண்டு, வழி தவறிவிடாது அழைத்துச் சென்றார்கள்.

பட்டு, மஸ்லின், பூவேலைப்பாடமைந்த உடைகள், தந்தம், ஆபரணங்கள், தங்கம் ஆகியவை முக்கிய வாணிகப் பொருள்களாம். பண்டமாற்றுமுறை வழக்கொழிந்துவிடவில்லை. எனினும், பரிவர்த்தனைக்கு நாணயங்களைப் பயன்படுத்தும் வழக்கம் ஏற்பட்டு வந்தது. 145 கிரெயினுக்குச் சற்று அதிக எடையுள்ள தாமிர 'கர்ஷபணம்' வழக்கிலிருந்த நாணய அளவை. வெள்ளி நாணயப் புழக்கமும் இருந்தது. தட்சசீல மன்னனான அம்பி, அலெக்ஸாந்தருக்கு முத்திரையிடப்பட்ட இருநூறு வெள்ளி நாணயங்களைப் பரிசாக அளித்தான். 'புராண அல்லது தரண' (Purana or Dharana) என்னும் வெள்ளி 'கர்ஷபணம்' 58 கிரெயினைவிடச் சற்று அதிக எடையுள்ளது. அது வேதகால நூல்களில் காணப்படும் 'நிஷ்க' அல்லது 'சதமான' என்னும் நாணயத்தைப்போல பத்தில் ஒரு பங்கு மதிப்புடையது. எடையும், நாணய மதிப்புகளும், ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறாகக் காணப்படுகின்றன.

## சமயம்
## (Religion)

சமய நோக்கில், மகத எழுச்சியின் தொடக்கக் காலம் இந்திய வரலாற்றில் மிக முக்கியமானது. பிராமண சமயத்துள் பல பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. பழைய கருத்துகள் மாறின. புதிய கருத்துகள் புத்துயிருட்டின. பழக்கமான சடங்கு முறைகளும், கருத்துகளும் மேல் சாதியினரின் ஆதரவைப் பெற்றிருந்தன. அன்பு நெறிகளும் கடவுட்கொள்கையில் நம்பிக்கையும் உரம் பெற்று வளரத் தொடங்கின. மிருக பலியிலும் மலட்டுச் சடங்குகளிலுமுள்ள நம்பிக்கைகளும் குறையத் தொடங்கின. மனம் திறந்து சிந்திக்கும் வழக்கம், உபநிடதங்களின் உதயத்தை முனனறிவித்தன. பிராமண சமயம் வேரூன்றியிருந்த புனிதப் பகுதிகள் நீங்கலாக, ஆன்மிகத் துறைத் தலைமைப் பதவி, புரோகித நீதி சாத்திர வல்லுநர், பலியிடுவோர் ஆகியவர்களிடமிருந்து துறவிகளிடமும் உண்மை அறிவைத் தேடி அலைவோரிடமும் மாறியது. இவர்கள் உலகப் பற்றை அறவே நீக்குவதையும், உயிரினங்களுக்குத் தீங்கு இழையாமையையும் மிகவும் போற்றி வளர்த்தார்கள்.

வழக்கிலிருந்த 'ஸீயஸ் ஆம்பிரியஸ்' (Zeus Ombrios-மழை, புயற்கடவுள்) வழிபாட்டைக் கிரேக்கர் குறிக்கின்றனர். இதிலிருந்து வடமேற்கு இந்தியாவில், வேதகாலத்து மழைக் கடவுளாகிய இந்திரன், பர்ஜன்யன் ஆகியோரை ஏத்தி வழிபடும வழக்கமிருந்து வந்ததென்பது தெரிய வரும். 'கிருஹ்ய சூத்திரங்களில் காணப்படும் சடங்கு முறைகளில் இக் கடவுளர் பெருமதிப்புடன் விளங்குவது குறிப்பிடத்தக்கது. பௌத்த 'சுத்தந்தசு' (Suttandas) என்னும் நூலிலும், 'பர்ஜன்ய'னைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது, வடகிழக்கிலுள்ள நிலையை இது குறிப்பதாகக் கொண்டாலும், அங்கு இந்திரனுக்குப் பதிலாகச் 'சக்கரர்' என்னும் கடவுள், பிரம்மாவுடன் இணைந்து கடவுளரின் தலைமைப் பதவிக்கு உயர்த்தப்பட்டுக் காணப்படுகிறார். பிராமண இலக்கியங்களில் 'வைஸ்ரவணன், குமரன் (Vaisravana, Kumara), 'கார்த்திகேயன்' (Kartikeya) என்னும் கடவுளும், தாயான துர்க்கையின் பல தோற்றங்களாகவும், சிவனாரின் துணைவியாகவும், உமா-ஹைமவதி வாசினி (Uma-Haimavathi, Vasini) போன்ற தேவதைகளும் காணப்படுகின்றார்கள். மூலிகைகளையும், நீரையும், மரங்களையும் உறைவிடமாகக் கொண்டுள்ள சிறு தேவதைகளும், தெய்வீகம் பொருந்திய கடவுளருடன் காணப்படுகின்றார்கள். வைஸ்ரவன் வழிபாடு, யக்ஷப் பண்பாட்டின் செல்வாக்கை விளக்கும்; யக்ஷப் பண்பாட்டிற்கு மக்களிடமிருந்த நன்மதிப்பை இதிகாச, பௌத்தச் சான்றுகள் விளக்குகின்றன. 'குர்ட்டியஸ், ஸ்டிராபோ' (Curtius, Strabo) முதலானோர், தாவரம், 'கங்கை' போன்ற நீர்த் தேவதைகளை

வழிபடும் வழக்கத்தைக் குறிப்பிடுகின்றனர். கேட்பதையெல்லாம மறுக்காது வழங்க வல்ல 'கல்பவிருக்ஷம்' (Kalpa Vriksha) என்னும் மரம், சமண இலக்கியங்களுட்பட்ட பல இலக்கியங்களில் புகழ்ந்துரைக்கப்படுகிறது.

தேவருட்பலர், இப்போது மனித வர்க்கத்தினராக்கப்பட்டு, நடையுடை பாவனைகளில் மனிதரைப் போன்று விளங்குவர். மனித இனத்தினராக மாறும்போது, அவரது அன்றுட வழிபாட்டிற்கான உருவங்களும் கோயில்களும் பெருகின. சிந்து சமவெளியின கீழ்ப்பகுதியில் வாழ்ந்த பண்டைய மக்கள், சிலைகளைப்பற்றி அறிந்திருந்தார்கள். உருவங்களைப் பற்றிய குறிப்புகள் இங்குமங்குமாக வேத நூல்களிலும் காணப்படுகின்றன. ஆரிய இனமொன்று உருவத்தை வழிபட்ட செய்திக்கு முதற்சான்ருகக் 'குர்ட்டியசின்' வரலாற்றுக் குறிப்பு விளங்குகிறது. 'ஹிராகிள்ஸின்' (Herakles) உருவமொன்று அலெக்ஸாந்தரை எதிர்த்த பௌரவச் சேனையின் முன்பு எடுத்துச் செல்லப்பட்டது. இக்கால இறுதியில் அரசெய்திய மௌரியரால் சிவன், ஸ்கந்தன், விசாகன் என்பவரின் உருவங்கள் கண்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டு, விலையும் கூறப்பட்டதென்று 'பதஞ்சலி' என்பார் கூறுவர். 'சதபத பிராமணத்தில்' பண்டைக் கோவில்களைப் பற்றிய குறிப்புகளுண்டு; ஆயினும், அவை சில வழிபாட்டுக்கென அமைக்கப்படவில்லை. இதிகாசங்களில் கடவுளருக்கெனப் புனிதமான கோயில்கள் உணடென்பதைக் குறிக்கும் தெளிவான குறிப்புகள உண்டு.

கடவுளர் சிலருக்கு உயிர்ப்பலியிடுவதும் வழக்கிலிருந்ததெனினும், உயிரினங்களின் மீது இரக்கங்கொள்ளும் மனப்பாங்கு வளர்ந்து வந்ததென நம் இலக்கியக் குறிப்புகள் சான்று பகர்கின்றன. மலைக்குகைகளில் 'பெருயானைகளைச் சிங்கம் சிறைபிடித்தாற்போல', கிரிவிரஜக் கோட்டையில் நரபலிக்கெனத் தேக்கிவைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான மன்னரை, கிருஷ்ணனல் தூண்டப்பட்டு பாண்டுபுத்திரர்கள் விடுவித்தார்களென்று மகாபாரதம் கூறும். உயிர்ப்பலிக்குப் பதில பிண்டங்களைப் பலியாக அளிக்கலாம் என, கிருஹ்ய சூத்திரங்கள அனுமதிக்கின்றன. மனிதனுக்குத் துணையாய் நிற்கும் மிருகங்களின் மாமிசத்தைப் பிராமணர் புசிப்பதில்லை எனக் கிரேக்க, இலத்தீன் ஆசிரியர் மொழிகின்றனர். பசுவினிடம் அதிக இரக்கங் கொள்ளும் வழக்கம் வளர்ந்தமைக்குச் சான்ருகும் இந்தியக் குறிப்புகளை, வெளிநாட்டினரின் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. அஹிம்ஸை அல்லது துன்புறுத்தாமைக் கொள்கை, துறவிகளாலும் நாடோடி ஞானிகளாலும் மிக்க கவனத்தோடும் ஊக்கத்தோடும் எடுத்துரைக்கப்பட்டுக் கிழக்கிந்தியப் பகுதிகளில் மக்களின் பேராதரவைப் பெற்றுவந்தது. கி. மு. 326-ல்

அலெக்ஸாந்தரைத் தொடர்ந்து தட்சசீலம் சென்ற 'ஒனெசிகிரிட்டோஸ்' (Onesikritos) என்பவரின் குறிப்புகளிலிருந்து அந்நகரில் வாழ்ந்த துறவிகளைப்பற்றிய தெளிவான செய்திகள் கிடைக்கின்றன.

இக் காதத்துச் சமயக் கருத்துகளில் 'சமுசாரம்' (Samsara) 'கர்மம்' (Karma) அல்லது இல உலகின் செயலைப் பொறுத்து மறுபிறப்பு, ஆவி கூடுவிட்டுக் கூடு மாறுவது போன்ற கொள்கைகளுக்கு முதலிடம் வழங்கவேண்டும். 'ஆக்கல், அழித்தல், மறுபிறப்பு ஆகிய முத்தொழிலும் இடையறுது நிலைபெற்றதோர் இயற்கை இணைப்பில், இயங்குவதன் விளைவே 'அகிலம்,' எனக் கருதப்படலாயிற்று. ஒவ்வொரு ஜீவனும், முற்பிறப்பில் தான் செய்த கர்மங்களை இப் பிறப்பில் அனுபவிக்க நேரும் என்ற 'கர்ம விதிவினை' என்னும் திட்டத்துள் இவ் வியக்கம் செயற்படும்.

'ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆநிரைக் கூட்டத்தில், கன்று தன் தாயைக் கண்டுகொள்வதுபோல, முற்பிறப்பின் செயல்கள், எளிதில் தம் கர்த்தாவைக் கண்டுகொள்கின்றன.' பத்தனது நம்பிக்கையும் (பத்தி-Bhakti), விதி கர்த்தாவான (The Ordainer), ஈஸ்வரன்-தாத்திரி (Iswara-Dhatri) பரம்பொருளின் கருணையும் (பிரசாத-Prasada) கர்ம விதி வினையை மாற்றியமைக்க வல்லவை. இப் புதிய கருத்துகளைப் பிறருடன் பிற்கால 'பாகவதர்களான' (Bhagavatas) 'வாசுதேவர்களும்' (Vasudevakas) பரப்பி வந்தார்கள். வாசுதேவனிடம் பத்தியை வளர்ப்பதையும் இவர்கள் போதித்தார்கள். கிருஷ்ணன், தேவகி புத்திரன் என்று வழங்கப்பட்ட வாசுதேவனை, ஆரண்யகப் பகுதியொன்றில் காணப்படும் 'விஷ்ணுவாகவும்', 'நாராயணனுகவும்' கொள்வது மரபு. வேள்வி நடத்தும் ஆசானுக்களிக்கும் ஊதியத்தைவிட நன்னடத்தையே பயன் அளிக்க வல்லது என்று பிரகடனம் செய்த சூரியகுல குருவின் சீடனுக நாராயணனைச் 'சாந்தோக்கிய உபநிடதம்' (Chandogya-Upanishad) வருணிக்கிறது. மதுரையைச் சார்ந்த (Mathura) யாதவ குலத்தின் 'சாத்வதன்' (Satvata) அல்லது 'விருஷ்ணி' (Vrishni) பிரிவிலுதித்த இளவலாகவும், மகத நாட்டில் நரபலிக்கு முற்றுப்புள்ளியிட்டவராகவும், கௌரவ நாட்டில் பெண்ணினத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு வஞ்சம் தீர்த்துக்கொண்டவராகவும், இதிகாசங்கள் அவரை வருணிக்கின்றன. கருணாமூர்த்தியிடம் (பிரசாத) பிரியத்துடன் நம்பிக்கை (Bhakti) கொள்வது, 'நிஷ்காம கர்மம்' (Nishkama Karma-பலனை எதிர் நோக்காது செயல் புரிதல்) போன்ற கோட்பாடுகளை அவர் போதித்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. அவரது வழியைப் பின்பற்றியவர்களின் கோட்பாடுகள், மகாபாரத இதிகாசத்தின் ஆருவது சருக்கத்தின் பகுதியான 'பகவத்கீதையில்' (Bhagavad Gita) விளக்கப்படுகின்றன. வாசுதேவ பத்தர்களைப் 'பாணினி' (Panini) என்பவர்

அறிந்திருந்தார். கி. மு. 4ஆம் நூற்றாண்டில், மதுரை (Mathura) நாட்டுச் சூரசேன மன்னர்களிடையே மிக்க ஆதரவு பெற்றிருந்த 'இந்திய ஹிராகிள்ஸ்' (Herakles) வழிபாட்டினராக வாசுதேவ பத்தர்களைக் கொள்ளலாம்.

சமயப் போட்டியிடும் வகுப்பினரும் தோன்றினர். இவர்களுள் பிற்காலத்தில் சிவ பாகவதர்கள் (Siva Bhagavatas) மகேஸ்வரர்கள் (Mahesvaras) அல்லது 'பாசுபதர்கள்' (Pasu-patas) என்று வழங்கப்பட்ட சிவபத்தர்கள் முக்கியமானவர்கள். பிற்கால உபநிடதமொன்றில் (ஸ்வேதாஸ்வதர-Svetasvatars) 'அகிலத்திற்குத் தலைவன் சிவன்' (ஈசன், அல்லது ஈசானன்-Isa or Isana) 'பகவத்' (Bhagavat) அல்லது புனிதமானவன், நம்புவோருக்கு வணங்குதற்குரியோன்' என விளக்கம் காணப்படுகிறது. அவனைச் சரண் புகுவதால் அறியாமை நீங்கும்; பாசம் அறுபடும்; நிரந்தர அமைதி பெறக்கூடும்.

அவரவர்களுக்குரிய தனிக்கொள்கைகளைக் கொண்டிருந்தாலும், புதிய ஆஸ்திக சமயப் பிரிவினர், பிராமண சமயத்தினின்று முற்றும் வேறுபடவில்லை. பிற்கால இலக்கியங்களிலும் இதிகாசங்களிலும், பாகவதர்களின் கடவுளரும், பாசுபதர்கள் அல்லது சில பாகவதர்களின் கடவுளரும், பிராமண சமயத்தின் தலைமைக் கடவுளினின்றும் உதித்தவர்கள் என்னும் கொள்கையை வலியுறுத்திச் சமயப் பிரிவினரை ஒன்றுகூட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாகத் 'திரிமூர்த்தி' (Trimurthi) கோட்பாடு, பிற்காலங்களில் முழு வளர்ச்சியுற்றுக் காணப்படுகிறது.

கிழக்கிந்தியப் பகுதிகளில், நாடோடிகளாய்த் திரிந்த ஆசாரியர்களும் காணப்படுவார்கள். இவர்கள் 'கர்மவினை'க் கோட்பாடுகளிலும் 'கூடுவிட்டுக் கூடு பாயும்' கோட்பாட்டிலும் நம்பிக்கை கொண்டிருந்தபோதிலும், வேத புரோகிதர், வேதங்கள் ஆகியவற்றின் தலைமைத் தன்மையை ஏற்க மறுத்து, பிராமணச் சடங்குகளில் அதிக இடம் பெற்றிருந்த இரத்த பலியை இடித்துக் கூறி, கடவுள் தத்துவத்தையும் மறுத்து, அதன் விளைவான ஆண்டவனது கருணையுள்ளக் கோட்பாட்டையும் எதிர்த்தார்கள்; 'கர்மம்', 'சமுசாரம்' ஆகியவைகளிலிருந்து விடுபடுவதற்குச் சிறந்த மார்க்கம் நன்னடத்தையே எனப் போதித்தார்கள். அஹிம்ஸை அல்லது உயிரினங்களைத் துன்புறுத்தாமையும் நன்னடத்தைப் பட்டியலில் அடங்கும்.

நாடோடிகளான இவ்வாசாரியர்களுட்சிறந்தோர், பாகவதர்களின் தலைவரைப் போலப் பிராமணப் புனித பூமியையடுத்துள்ள நிலப்பகுதியைச் சார்ந்த க்ஷத்திரிய குலக்கொழுந்துகள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுள் ஒருவரான

வர்த்தமான மகாவீரர் வடபீஹாரிலுள்ள வைசாலி நகரின் சுற்றுப் புறத்திலுள்ள 'குந்தபுரம்' அல்லது 'குந்த கிராமத்'தைச் (Kundapura or Kundagrama) சார்ந்த 'ஞாத்திரிக' (Jnatrika) குலத்துதித்தவர். மற்றொருவரான கௌதம புத்தர், நேப்பாளத் தரையிலுள்ள 'ரும்மிந்தை' (Rummindei)க்கருகிலுள்ள கபில வஸ்துவைச் சார்ந்து சாக்கிய குலத்துதித்தவர்.

## மகாவீரரும் சமணமும்
(Mahavira and Jainism)

மகாவீரரின் தந்தையாரான சித்தார்த்தர், குந்தபுரத்தைச் சேர்ந்த ஜினத்திரிக குலத்தலைவர். தாயாரான 'திரிசலை' (Trisala) மகதம், வைசாலி நாட்டு அரசர்களின் உறவினரான க்ஷத்திரிய குலப் பெண்டிர். மகாவீரரின் இளமை வாழ்க்கையைப்பற்றிய தெளிவான செய்திகள் இல்லை. சுவேதாம்பர சமணர் (வெள்ளை ஆடையினர்) பரம்பரைச் செய்திக்கிணங்க, அவர் 'யசோதரை' என்னும் மாதை மணந்தார்; சில காலம் பத்தியுடன் இல்வாழ்க்கை நடத்தி, முப்பதாவது வயதில் உலகைத் துறந்தார்; கிழக்கிந்திய நாடுகளில் அவதூத முனிவராய் அலைந்து, பன்னிரண்டு ஆண்டுவரை கடுந்தவம் புரிந்தார். 'கோசாலர்' (Gosala) என்னும் ஆண்டியொருவருடன் ஆறு ஆண்டுகளைக் கழித்தார். கோசாலர், பிற்காலத்தில் இவரைப் பிரிந்து 'ஆஜீவகர்' (Ajivika) என்னும் சமயப் பிரிவினருக்குத் தலைவரானார். தவமியற்றத் தொடங்கிய பதின்மூன்றாவது ஆண்டில் கிழக்கிந்தியாவிலுள்ள பிரசித்தி மிகப்பெறாத 'ஜிரும்பிக கிராம'த்திற்கு (Jrimbhikagrama) வெளியிலுள்ள, 'ரிஜு பாலிக' (Rijupalika) நதியின் வடகரையிலமர்ந்து, 'கேவல ஞானம்' (Kevala Jnana) என்னும் உயர்ந்த ஆன்மஞானம் பெற்றார். இதற்குப்பின் அவருக்குக் 'கைவல்யர்' (Kevalin-'எல்லாமறிந்தவர்') 'ஜினர்' (Jina-வென்றவர்), 'மகாவீரர்' (பெருவீரர்) எனப் பல பெயர்கள் வழங்கலாயின. 'நிர்க்கிரந்தர்' (Nirgranthas-தளைகளை நீக்கியவர்) என்னும் சமயப் பிரிவிற்கு அவர் தலைவராயினர். பிற்காலத்தில் அவர்கள் 'ஜைனர்' (Jainas-சமணர்) என்றும், 'ஜினரின் சீடர்கள்' என்றும் வழங்கப் படலானார்கள். மகாவீரர், முப்பது ஆண்டுகள் சமயத்தைப் பரப்பும் பணியிலீடுபட்டு, எழுபத்திரண்டாம் வயதில் தென் பீகாரிலுள்ள 'பாவா' என்னுமிடத்தில் உயிர் நீத்தார். மௌரியருக்கு 215 ஆண்டுகளுக்கு முன்னும், விக்கிரமனுக்கு 470 ஆண்டுகளுக்கு முன்னும், இச்சம்பவம் நடைபெற்றிருக்கவேண்டும் எனக் கூறப்படுகிறது. பொதுவில் கி. மு. 528இல் இச் சம்பவம்

நிகழ்ந்திருக்கவேண்டுமெனக் கருதப்படுகிறது. இக்கால அறிஞர் சிலர், கி. மு. 468-ல் இச் சம்பவம் நடைபெற்றிருக்கக் கூடும் எனக் கருதுவர். சமண முனிவரான 'ஹேமசந்திரர்' மகாவீரரின் மரணத்திற்கும் சந்திரகுப்த மௌரியன் ஆட்சியேற்பதற்கும் இடையிலுள்ள காலம் 155 ஆண்டுகள் என்றும், 215 ஆண்டுகளல்ல என்றும் குறிப்புகள் அளித்துள்ளார். இக் குறிப்பை ஆதாரமாகக்கொண்டு மகாவீரரின் மரணகாலம் கி. மு. 468 எனக் கருதப்படுகிறது. பழமைவாய்ந்த புத்த நூல்களுள் சில, மகாவீரர் புத்தருக்கு முன்பு மரணமடைந்தார் எனத் திட்டமாக மொழிகின்றன. இச் செய்திக்கும், கி. மு. 468-க்கும் முரண்பாடுகள் மிகுதி. கி. மு. 528 எனும் நாட்குறிப்பும் குழப்பம் நிறைந்ததாகவே காணப்படுகிறது; முதலாவதாகச் சந்திரகுப்தர் அரசெய்திய 155 ஆண்டுகளுக்கு முன் மகாவீரர் நிருவாணமெய்தினர் என்னும் ஹேமசந்திரரின் கூற்றுக்கு இது முரணாயிருக்கிறது. மேலும், சில சமண நூல்கள் மகாவீரர் சித்தியடைந்த நாள் விக்கிரமன் பிறப்பதற்கு 470 ஆண்டுகளுக்கு முன்னது என்றும், அவன் அரசெய்திய நாளிலிருந்து இதைக் கணக்கிடலாகாது என்றும் கூறுகின்றன. விக்கிரம சகாத்தம் கி. மு. 58-இல் தொடங்கும். சித்தியான செய்தி, சமணர் கருத்திற்கிணங்க இதற்கு ஒவ்வாதது. எனவே, கி. மு. 523, சமண பரம்பரைச் செய்திகளுடன் முழுதும் கருத்து ஒற்றுமைகொண்டதென ஏற்பதற்கில்லை. சமண ஆசிரியர் சிலர், விக்கிரமன்பிறந்து பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின்னரே, விக்கிரம சகாத்தம் தொடங்கிற்று எனக் கூறி, புத்தரின் பரிநிருவாண நாளைச் சிங்களக் குறிப்புடன் (கி. மு. 544) பிணைத்துச் சமணர் கூறும் மகாவீரரின் நிருவாண காலத்தை உறுதிப்படுத்த முயலுவர். (58 + 18 + 470 = 546 கி. மு.) இச் செய்தி, பரம்பரைச் செய்திகளினடிப்படையில் எழுந்ததன்று. இறுதி ஜினர் அல்லது தீர்த்தங்கரரது (Jina or Tirthankara) முடிவை, சகர் ஆட்சிக்கு 470 ஆண்டுகளுக்கு முந்தியது என்றும், இதை விக்கிரமனது வெற்றிக்கு 470 ஆண்டுகளுக்கு முன்னதாகக் கொள்ளவேண்டுமேயன்றி, அவன் பிறப்பதற்கு 470 ஆண்டுகளுக்கு முன்னதாகக்கொள்வது முறையன்று என்றும் மேருதுங்கர் அறிவிப்பர். புத்தநிருவாணச் செய்தியான 486 கி.மு.வை, சமண ஜினத்திரிகரின் மரணகாலமாகக் கருதப்படும் கி.மு. 528 ஓரளவு ஒட்டியிருப்பது மனச் சமாதானமேற்படுத்தும். அவ்வாறு கருதமுற்படும்போது, புத்தருக்கு ஞானோதயம் ஏற்பட்ட சின்னாள்களுக்குப்பின் மகாவீரர் இறந்திருக்க வேண்டுமென்றும் பரிநிருவாணத்திற்கு இது நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முந்தியது என்றும், புத்த இலக்கியங்கள் குறிப்பிடுமளவிற்கு அப்போது புத்தரின் புகழ் ஓங்கியிருக்க முடியாதென்றும் தெரியவரும். 'அஜாதசத்துரு' அரசெய்திப் பதினறு ஆண்டுகளுக்குப்பின், அண்டையிலுள்ளோருடன் அவர் போர் தொடங்கிய நாளில் மகாவீரர் மரணமெய்தினர் எனச் சில சமண சூத்திரங்கள்

இ—8

அறிவிக்கின்றன. சிங்கள வரலாற்று ஏட்டுச் செய்தியினடிப் படையில், அஜாதசத்துரு அரியணையேறிய எட்டு ஆண்டுகளுக்குப் பின் புத்தர் மரணமடைந்தார் எனக்கொண்டு, சமண சமயத் தலைவர் அதற்கு எட்டு ஆண்டுகளுக்குப்பின் மரண மடைந்தார் என்பது ஏற்படும். இக்கருத்திற்கிணங்க-கி.மு. 478-ல் தீர்த்தங்கரர் இறந்தார் என்பது ஏற்படும். உள்நாட்டுச் செய்தி யடிப்படையில் கி. மு. 486 என்பதும் சிங்களக் குறிப்பிற்கிணங்க, கி. மு 536 என்பதும் ஏற்படும். கி. மு. 478 என்னும் கால நிரு ணயம் ஹேமசந்திரரின் குறிப்புகளையொட்டி அமையும். இக் கருத்திற்கிணங்க, சந்திரகுப்த மௌரியன் ஆட்சியேற்ற காலம் கி. மு. 323 என்பது ஏற்படும். இது உண்மையையொட்டியதே. மகாவீரரைப் பொறுத்தவரையில் கால நிருணயம் மாறுபடும். புத்த சமய இலக்கியங்கள், ஜினத்திரிக மகாவீரரது மறைவிற் குப் பின்னும் புத்தரை வாழவைக்கின்றன. அஜாதசத்துரு அர செய்திப் பதினறு ஆண்டுகளுக்குப்பின் தீர்த்தங்கரர் மரண மடைந்தார் என்னும் சமணச் செய்தி, புத்த பரம்பரைச் செய்தியை ஓரளவு ஒத்திருப்பதாகக் கொள்ளலாம். இம் முடி வெய்துவதற்குச் சம்பாவைக் கூனிகன் ஆளத் தொடங்கிய காலத்தைச் சம்பாவின் வைசிராயாக அவன் பதவியேற்ற நாளை அடிப்படையாகக்கொண்டு சமணரும், ராஜகிருஹத்தில் அஜாத சத்துரு அரியணை ஏறிய நாளை அடிப்படையாகக்கொண்டு புத்த இலக்கியங்களும் கணக்கிடுகின்றன என்பதை நினைவிலிருத்திக் கொள்ளவேண்டும்.

மகாவீரர் புதியதொரு சமயத்தைத் தொடங்கவில்லை என் றும் 'வாழ்வென்னும் ஆற்றிற்குப் பாலம் அமைப்போராய் விளங் கிய' இருபத்துநான்கு தீர்த்தங்கரர் வரிசையில் இறுதியானவர் என்றும் சமணர் நம்புவர். மகாவீரருக்குச் சற்று முந்திய இருபத்துமூன்றும் தீர்த்தங்கரராய் விளங்கிய 'பார்சுவர்' (Parsva) வரலாற்றில் முக்கிய இடம் பெற்றிருந்தது தெரிய வரு கிறது. வாரணசியின் இளவலாய் விளங்கிய அவர், தம் சீடர் களுக்குத் 'தீங்கிழையாமை, உண்மை, பற்றின்மை, திருடாது விலகி நிற்றல்' ஆகிய நான்கு விரதங்களைப் போதித்தார். இவற்றுடன் 'பிரமசரியம்' (Brahmacharya) அல்லது 'கற்பு' என் னும் விரதத்தையும், மகாவீரர் இணைத்தார்; ஆடைகளுட்பட்ட புறப்பொருள்கள் யாவற்றையும் துறந்தாலன்றித் தளைகளை நீக்கி முழுச்சுதந்தரம் பெற இயலாது என்றும் கூறினர். 'நன்னம் பிக்கை, நல்லறிவு, நன்னடத்தை' ஆகிய முப்பெரு வழிகளைக் கடைப்பிடிப்பதால், ஜீவன்கள், கூடு விட்டுக் கூடுமாறும் அவஸ்தையிலிருந்து விடுபட்டுப் புனிதமானதும், நிலையானதும், சமணரின் குறிக்கோளாய் விளங்குவதுமாகிய சித்த (சித்திசில- Sidhasila) நிலையெய்தலாகும். உயரிய ஆக்கச் சக்தியொன் றிற்குச் சமணத்தில் இடமில்லை. தாவரங்கள், உலோகங்கள், தண்ணீர் ஆகியவைகளையும், பறவைகளையும் மிருகங்களையும்

போல உயிருள்ளவைகளாகக் கற்பித்துத் துன்புறுத்தாக் கொள்கைக்கு அதிக ஏற்றம் அளித்தனர் சமணர்.

மகாவீரரின் ஆதி போதனைகள், 'பூர்வங்கள்' (Purvas) என்று வழங்கப்படும் பதினான்கு பழம்பெரு நூல்களில் குறிக்கப் பட்டுள்ளன எனச் சுவேதாம்பரப் பிரிவைச் சார்ந்த சமண பரம் பரைச் செய்திகள் கூறுகின்றன. கி. மு. நான்காவது நூற்றாண் டின் இறுதியில், தென்பீகாரில் கடும்பஞ்சமொன்று ஏற்பட்ட தால், சமணருள் முக்கியமானவருள் பெரும்பகுதியினர். 'பத்திர பாகு' என்பவரது தலைமையில் சென்று மைசூர் இராச்சியத்தை அடைந்தனர். பாடலிபுத்திரத்தில் எஞ்சி நின்ற சமணர்கள், மூலப்புனித நூல்களிலுள்ள வழக்கொழிந்து மறைந்துவரும் சமயக் கருத்துகளை உயிர் பெற்றெழச் செய்யும் நோக்கத் துடன் அவையொன்றைக் கூட்டினார்கள். சமணக்கோட்பாடு களில் முதன்மை பெற்றுச் சிறப்புடன் விளங்கும் பன்னிரண்டு 'அங்கங்கள்' (Angas) இதன் விளைவாகத் தொகுக்கப்பட்டன. கி. பி. ஐந்து அல்லது ஆறுவது நூற்றாண்டில் குஜராத்திலுள்ள 'வல்லபி' என்னுமிடத்தில் கூடிய அவையொன்று, இறுதியாக வழக்கிலிருந்த சமயக் கருத்துகளைத் திரட்டி, எழுதி வைத்தது. முழுமைபெற்ற விதித்திரட்டு, அங்கம், உபாங்கம், மூலசூத்திரம் என்னும் பல பகுதிகளைக்கொண்டது.

வடநாடு திரும்பிய பத்திரபாகுவின் சீடர்கள் தங்கள் வட நாட்டுச் சோதரர் இயற்றிய சமய விதிகளை ஏற்க விரும்பவில்லை. மகாவீரரின் விதிகளுக்கு மாறாக, வெள்ளையாடை அணிந்திருந்த வடநாட்டுச் சமணர் சுவேதாம்பரர் (Svethambaras-வெள்ளை ஆடை அணிவோர்) என வழங்கப்படலாயினர். சீரிய ஜினத் திரிக குருவின் ஆணைகளை அணுவும் பிசகாது கடைப்பிடித்து, ஆடையுட்படப் புறப்பொருள்கள் யாவற்றையும் துறந்து நின்ற சமணர்களுக்குத் திகம்பரர்(Digambaras-திருவாண சமணர்-ஆகா யத்தை உடையாகக்கொண்டவர்) என்னும் பெயர் உண்டா யிற்று. சமண சமயம், இவ்விரு பகுதிகளாகக் கி. பி. முதல் நூற்றாண்டிலேயே பிரிந்திருக்கவேண்டும். மகாவீரருக்குச் சற்று முந்திய தீர்த்தங்கரரான பார்சுவரின் காலத்திலேயே பிற்காலச் சுவேதாம்பர சமண பரம்பரைக்கு வித்திட்டது எனக் கருதும் அறிஞர் சிலர் சமயப் பிளவு, கி. பி. முதலாவது நூற்றாண் டிற்கு முன்னரே ஏற்பட்டிருக்க வேண்டுமெனக் கருதுவர்.

## கௌதம புத்தர்

மகாவீரரின் காலத்தில் மற்றுமொரு நாடோடி மதபோதகர் வாழ்ந்தார். அவர் ஐக்கிய மாகாணத்திற்கு வடக்கிலுள்ள பஸ்தி மாவட்டத்தில் உள்ள நேப்பாள தரையைச் சேர்ந்த கபில வஸ்துவின் சாக்கிய குலத்தைச் சார்ந்தவர். கௌதம கோத்

திரம் (Gotra) அல்லது குலத்தைச் சார்ந்த பெயர் சித்தார்த்தர் என்பது. அவர் இங்கு நாம் கைக்கொண்டிருக்கும் கால வரன் முறைப்படி, கபிலவஸ்துவிற்கு அருகிலுள்ள லும்பினிக் கிராமத்தில் கி. பி. 566-ல் பிறந்தார். அவரது பிறப்பிடம் அசோக மௌரியன் எழுப்பிய 'ரும்மிந்தைத் தூண்' (Rummindei Pillar) சின்னத்தால் பிரசித்திபெற்று விளங்குகிறது. கபிலவஸ்துவின் அரசன் அல்லது பிரபு எனக் கருதக்கூடிய சுத்தோதனனுக்கும் சாக்கியப் பேரரசிலுள்ள தேவதகம் (Devadaha) என்னும் சிறு நகரத்தின் இளவரசியான மாயாதேவிக்கும் உதித்தவர். பேறு காலத்திலேயே மாயாதேவி இறந்ததால், சிறுவரான சித்தார்த்தர் அவருக்கு அத்தையான 'பிரஜாபதி' கௌதமியால் வளர்க்கப்பட்டார்; பத்தகச்சானை, யசோதரா, சுபத்திரகா, பிம்பா அலலது கோபா என்று மரபையொட்டிய பல பெயர்களால் வழங்கப்படுகிற பெண்ணொருத்தியைப் பதினாறும் வயதில் மணந்தார். ஆசிரியர் சிலர் இவளை மாயாதேவியின மைத்துனி என்று கருதுவர். மணமுடித்தபின், சித்தார்த்தர் அரண்மனையின் ஆடம்பர வாழ்க்கை நடத்திவந்தார். இறுதியில், மூப்பின் சிந்தனையும், பிணி, மரணம் ஆகியவைகளின் எண்ணங்களும், உலக வாழ்வின் பயனற்ற தன்மையை விளக்கின. விருப்பு வெறுப்புகளற்ற தனிமையின் சலனமற்ற புனிதத் தன்மை சித்தார்த்தரை மிகவும் கவர்ந்தது. 'இராகுலன்' என்னும் ஆண்மகவொன்றையடைந்த அவர், இல்வாழ்க்கையையும் வீட்டையும் துறக்கச் சித்தமாயினர். இருபத்தொன்பதாம் வயதில் பெருந்துறவறத்தைச் (Great Renunciation) சித்தார்த்தர் மேற்கொண்டார்; வீட்டைத் துறந்து ஆறு ஆண்டுகளுக்கு, இரு சமய குருக்களிடம் உபதேசம் பெற்றும், 'பாட்னு' ராஜகிருஹம், கயைக்கு அருகிலுள்ள உருவில்வம் (Uruvilva) போன்ற பல இடங்களில் சுற்றியலைந்து வாழ்ந்தார்; உருவில்வத்தில் மிகவும் கடுமையான தவம் புரிந்தும், தமது குறிக்கோளையடைவதற்கு அது பயனற்றதெனக் கண்டார்; நைரஞ்சனு (இக் கால லீலாஜன்) ஆற்றுக்கால்வாயொன்றில் நீராடி, இக்கால 'போத்கயா' என்னுமிடத்திலுள்ள, 'பிம்பல்' அல்லது அரசமரத்தினடியில் அமர்ந்தார். இறுதியில் இங்கு அவர்க்கு உயர்ந்த ஞானமும் உள்ளொளியும் கிட்டின. அன்று முதல் 'புத்தர்' அல்லது 'ஒளி பெற்றவர்' என்றும் 'ததாகதர்' (Tathagata-உண்மையை அறிந்தவர்) என்றும் 'சாக்கியமுனி' அல்லது சாக்கிய வம்சத்தைச் சேர்ந்த முனிவர் என்றும் பல பெயர்கள் வழங்கலாயின.

ஒளி பெற்ற புத்தர், வாரணாசியின் அருகிலமைந்த சாரநாத்து என்னுமிடத்திலுள்ள மான் பூங்கா (Deer Park) என்னுமிடத்தில் தம் கொள்கைகளைப் போதிக்கத் தொடங்கினர்; நாற்பத்தைந்தாண்டுகள் அயோத்தி, பீகார், அதையடுத்த பகுதிகளிலுள்ள மக்களுக்கும் மன்னருக்கும் தாம் கண்ட பேருண்மையை ஊரூராய்த் திரிந்து பரப்பினர்; புத்த பிட்சுகளுக்

கெனச் சங்கம் அமைப்பதற்கு வித்திட்டுத் துணை நின்ற அரசரிடமிருந்தும் மக்களிடமிருந்தும் மடங்களையும் தோப்புத் துரவுகளையும் பரிசாகப் பெற்றார்.

புத்தரால் மதமாற்றமடைந்தவருள் ஒருவரும் அவர்தம் உறவினருமான தேவதத்தர், சிறிது காலத்திற்குப்பின் சாயத்திலிருந்து விலகி, மற்றுமொரு சமயப்பகுதியைத் தொடங்கினார். இச் சமயப் பிரிவு, அயோத்தி, மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளில் குப்தர் கால இறுதி வரை வழக்கிலிருந்தது. அவர் ஐக்கிய மாகாணத்தின் கோரக்பூர் மாவட்டத்தைச் சார்ந்த இக் காலக் 'காசியா' (Kasia) என்னும் குசி நகரத்தில் தமது எண்பதாவது வயதில் மரணமடைந்தார் எனக் கூறப்படுகிறது அவர் மரணமெய்திய (பரி நிருவாணம்) நாளைப் பற்றிய கருத்து, சிக்கல்கள் நிறைந்த பிரச்சினை. புத்தரின் பரிநிருவாணத்திற்கும், பிரியதரிசினர் (அசோகர்) முடி சூடிக்கொண்ட நாளுக்கும் இடையில் 218 ஆண்டுகள் இடைவெளியுண்டு என்னும் சிங்கள மரபுச் செய்திக்கு விலையுண்டெனில், பரிநிருவாண நாள் கி. மு. 486 இலிருந்து அதிக வேற்றுமையுடையதாய் இருக்க இயலாது. காண்டன் 'புள்ளி ஏடும்' இந் நாளிலிருந்து தொடங்கும். 'வினை வினைக்குரிய காரணம்; வினையை ஒறுத்தல், துக்கத்தை அழிப்பதற்குரிய சீரிய வழி' ஆகிய நான்கு 'பேருண்மைகளை' (ஆரிய சத்தியம்) புத்தர் தம் சீடர்களுக்குப் போதித்தார். அவ் வழி, வழக்கமாகச் சிற்றின்ப அனுபவத்தை நாடுவதிலோ அல்லது தம்மைத் தாமே வருத்திக்கொள்ளும் ஒழுக்கத்தை மேற்கொள்வதிலோ இல்லை. 'சீரிய எண்வகை வழி' (Noble eight fold Path) என்னும் 'நடுவு நிலை வழி' (Middle-path) ஒன்றே ஏற்றது. 'எண்வகை வழிகள்' பின் வருவன: 'நல்ல நோக்கங்கள், நல்லாசைகள், உண்மை பேசுதல், நன்னடத்தை, நல்லொழுக்கை, நன் முயற்சி, நற்கவனம், நற்சிந்தனை.' 'நிருவாணத்திற்கும், முழு ஒளி பெறுவதற்கும், உயரிய ஞானம் பெறுவதற்கும், மன அமைதி பெறுவதற்கும், நல்லுணர்வை அருளுவதும் கண்களைத் திறப்பதுமான' உயரிய வழி இதுவேயாகும். 'நிருவாணம்' என்னும் சொல்லின் நேர்முகப் பொருள், 'துறத்தல்' என்பதாகும். தீவிர ஆவலை அறவே ஒழித்து, பல்வகையான வாழ்க்கையில் நாட்டங்கொள்ளாது, வாழ்க்கையில் ஆசையால் வினையும் இன்னல்களைக் களைவதே நிருவாணம். ஆயினும், அது இவற்றை அறவே நீக்குவது மட்டுமன்று; ஆசைகள் யாவற்றையும் அறவே நீக்கிய ஒருவனால் அடையப்படும் சமாதி நிலையுமாகும்.

மரணமடைவதற்குச் சற்று முன் சீடர்களுக்குப் புத்தர் விடுத்த இறுதி ஊக்க-உரையில் பின்வருமாறு கூறினார்: 'இகப் பொருள் யாவும் அழியும் தன்மையுடையவை. உங்களுடைய விடுதலைக்குச் சிரத்தையுடன் (அப்ரமத) பாடுபடுங்கள்.

ஆன்ம விடுதலைக்குப் பாடுபடுவதில், ஒழுக்கப் போதனைகளைக் (சீலங்கள்) கையாளுவது முதன்மை பெறும். ஒழுக்கப் போதனைகளாவன: உயிர்ப்பலியைக் கைவிடுதல், திருடாமை, தன்னடக்கம், பொய் சொல்லாமை, இகழாமை, போகவாழ்வைத் துறத்தல், செல்வம் தேடி அலையாமை, இரத்தப் பலியிட்டு வேள்வி நடத்துதலை நீக்குதல், சூரியன் பிரமன ஆகியோரை வழிபடாதிருத்தல், பிற கூடாவொழுக்கங்களைக் கைவிடல், மனத்தை ஒருநிலைப்படுத்துதல்(சமாதி), இறுதியாக 'பிரஞ்ஞை' (Prajna) அல்லது 'உள்ளொளி பெருக்குதல்' ஆகிய நெறிகள், முடிவில் 'சம்போதி'யையும் (Sambodhi—ஒளி பெறுதல்) 'நிருவாண'த்தையும் (Nirvana) அளிக்கவல்லவை.

மற்ற இந்தியக் குடி மக்களைப் போலவே பௌத்தர்களும் நாட்டில் நிலவியிருந்த சமயக் கருத்துகளை—குறிப்பாகப் பிராமண இந்துக்கள், சமணர்கள் ஆகியோரது குறிக்கோள்களுட்பட-'சமுசாரம்' (கூடு விட்டுக் கூடு மாறுதல்), 'கர்மம்' (முற்பிறப்பின் வினையறுத்தல்) ஆகிய கருத்துகளையும் பகிர்ந்து கொண்டார்கள்; சமணரைப போலவே வேதங்களின் தலைமைத் தன்மையை ஏற்க மறுத்தார்கள்; இரத்தப்பலியிடுவதை நிந்தித்தும், தலையாய ஆக்கச் சத்தியொன்றுண்டு என்பதை மறுத்தும் வந்தார்கள். உயர்ந்த ஞானம் பெற்ற குருமார்களுக்கு வணக்கம் செலுத்துவது மிக்க பலனைத் தரும் என அவர்கள் கூறினார்கள். சமணரைப் போல, நிலைபெற்றிருத்தலையோ அல்லது ஜீவனின் அழிவற்ற தன்மையையோ அவர்கள் ஏற்கவில்லை. ஆடைகளைக் களைந்தெறிவது கடுந்தவமியற்றுவது போன்றவைகளும் போக வாழ்க்கையைப் போன்று பயனற்றவையே என்றும் அவர்கள் கருதி வந்தார்கள். மகாவீரர் சீடரோவெனில், தாவரங்கள், உலோகங்கள், தண்ணீர், காற்று முதலியவற்றிற்கும் உயிர் உண்டு எனக் கூறி, அஹிம்சைக் கொள்கையை மிகவும் ஏற்றி உரைத்தனர். ஆடைகள் உட்பட்ட புறப்பொருள்கள் யாவும், ஆன்மஞானம் பெறுவதற்குத் தடையாய் நிற்பவை எனக் கருதி, இலட்சிய மனிதன் பல கட்டுப்பாடுகளுடன் வாழ வேண்டுமென்றும், சோதனைகளையும் துன்பங்களையும் அவன் பொருட்படுத்தலாகாது என்றும், எத்தகைய சலுகையையும் அவன் விரும்பலாகாதென்றும் கூறி வந்தார்கள். சமண முனிவர்கள் புத்தபிட்சுகளினின்றும் தீர்க்கதரிசிகளினின்றும் வேறுபட்டார்கள். சமணர், பழங்கடவுளரையும் பிராமணரையும் வழிபடுவதை அறவே கைவிடவில்லை.

## புத்தசமய இலக்கியங்கள்
(Buddhist Scriptures)

புத்தசமயப் பிரிவினரின் பரம்பரைச் சமயச் செய்திகள் யாவும் புத்தரது மறைவிற்குப்பின். 'தர்மங்களை'யும் (Dharma-சமயக்கோட்பாடுகள்), 'விநயங்'களையும் (Vinaya-சங்கத்தின் விதிகள்) தொகுப்பதற்கென, ராஜகிருகம் என்னுமிடத்தில் அவையொன்று கூடிற்று என்பதை அறிவிக்கின்றன. ஒரு நூற்றாண்டிற்குப்பின் வைசாலி நாட்டுப் பிட்சுகளுள் சிலர், பத்துப் பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, ஒழுங்குமுறை விதிகளைச் சற்றுத் தளர்த்த வேண்டுமென எண்ணங்கொண்டு, சமயப் பூசலைக் கிளப்பினர். வைசாலியில் கூடிய இரண்டாம் அவையொன்று, பத்துப் புறச் சமய விதிகளையும் கண்டித்துச் சமய விதிகளையும் திருத்தியமைத்தது. அசோக மௌரியர் காலத்தில், அவரது பேராதரவு பெற்று 'திஸ்ஸாமொக்கலிபுத்தர்' (Tissa Moggaliputta) என்னும் அறிவிற்சிறந்த பிட்சு ஒருவர், புத்தரின் மறைவுக்கு 236 ஆண்டுகளுக்குப்பின், பாடலிபுத்திரத்தில் மூன்றும் அவையொன்றைக் கூட்டினார். புறச்சமயக் கருத்துகளை மீண்டும் கண்டித்து, இம் மூன்றும் அவை இறுதியாகச் சமயக்கோட்பாடுகளைத் தொகுத்தளிக்க முற்பட்டது. பாடலிபுத்திரத்தில் கூடிய இச் சபை, எல்லாப் பௌத்தர்களின் பேராள்களையும் கொண்டதன்று; 'விபஜ்ஜவாதிகள்' (Vibhajjavadins) என்னும் பிரிவினரை மட்டிலுமே கொண்டிருந்தது. கனிஷ்கனின் பேராதரவில் கூடிய நான்காம் அவை, சமய நூல்களுக்கு விரிவான விளக்கவுரைகளை (Upadesa Sastras, Vibhasha Sastras-உபதேச சாத்திரங்களும், விபாஷ சாத்திரங்களும்) தயாரித்தது. இச் சபையிலும் புத்தசமயப் பிரதிநிதிகள் யாவரும் இடம் பெற்றிருக்கவில்லை. வட இந்தியாவிலுள்ள 'ஈனயான' (Hinayana-ஹீனயான) பௌத்தர் மட்டிலும் நான்காம் அவையில் நிறைந்திருந்தனர்.

முந்திய கால அவைகளைப்பற்றிய பரம்பரைச் செய்திகளை அறிஞர் யாவரும் ஏற்பதில்லை. முதலிரண்டு சபைகளைப்பற்றிய முரணற்ற பரம்பரைச் செய்திகளும், புறச்சமயிகளான பிட்சுகளுக்கெதிரான அசோகரின் தடைவிதிகளும் பரம்பரை ஏட்டுச் செய்திகளில் ஓரளவு உண்மையிருப்பதாக எடுத்துக்காட்டுகின்றன. இப்போது வழக்கிலிருந்துவரும் விதிகள், முதற்சபையிலோ அல்லது இரண்டாவது சபையிலோ தொகுக்கப்பட்டிருக்கவேண்டுமென்பதில்லை, 'கதாவத்து' (Kathavatthu) என்னும் நூலொன்று கி. மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்

பதில் ஐயமில்லை. அசோகரின் கல்வெட்டுகளில் சமய நூல்களிலிருந்து மேற்கோள்களும், புனித நூல் வல்லுநரான அறிஞர்களைக் குறிப்பதும், கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வெட்டெழுத்துச் சாசனங்களிலுள்ள சில பகுதிகளும் காணப்படுவதால் மௌரிய, சுங்க மரபினர் ஆட்சிக் காலங்களுக்கு முன்பே, சமயக் கோட்பாடுகளும் விதிகளுமடங்கிய நூல்கள் நிலவின என்பது விளங்கும். ஆயினும், வழக்கிலிருந்து வரும் நூல்களுடன் ஒப்பிட்டுப் பண்டைய நூல்களைக் குழப்பத்திற்கிடமின்றிக் குறிக்க இயலாது. சிங்கள மரபுச் செய்திகளுக்கிணங்க, புனித நூல்களும், விளக்கவுரைகளும் 'வட்டகமனி அபயர்' (Vattagamani Abhaya) என்னும் மன்னர் ஆண்டுவந்த கி. பி. முதலாம் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும். கி.பி. 5-ம் நூற்றாண்டில், பாஷ்யங்களிலிருந்து (விளக்கவுரை) பிரிக்கப்பட்ட நூல்கள் 'பாலி' (Pali) என வழங்கப்படலாயின. 'பாலி' என்பது இந் நூல்களில் ஆளப்படும் மொழியைக் குறிக்கும் என்பதற்கான சான்று எதுவும் முற்கால இலக்கியங்களில் இல்லை. இம் மொழி 'மகதானம் நிருத்தி' (Magadhanam Nirutti) அல்லது 'மகதநாட்டு மக்களின் மொழி' என்று வழங்கப்பட்டு புத்தசமயம் தோன்றி வளர்ந்த நாள்களில் மகத நாட்டில் வழக்கிலிருந்து, அசோக மௌரியர் காலத்தில் வழக்கொழிந்து மறைந்திருக்க வேண்டும். அசோக மன்னர் தம் கல்வெட்டுகளில் பயன்படுத்திய மொழி வேறு வகையானது.

'பாலி'ச் சமயத் தொகுதி' 'சுத்த, விநய, அபிதம்ம, (Sutta, Vinaya, Abhidhamma) என்ற மூன்று 'பிடகங்கள்' அல்லது பகுதிகளில் அடங்கும். சுத்த பிடகத்தில், 'சுதஸ், சுதந்தஸ்' (Suthas, Suthantas) அல்லது சமயப்பிரசங்கங்களின் சாரம், ஐந்து 'நிகாயங்களில்' (Nikayas) கூறப்பட்டுள்ளது. இரண்டாவது பிடகத்தில் புத்த சங்க விதிகளும், மூன்றுவதில் தத்துவ ஞான தர்க்கங்களும் காணப்படுகின்றன. சுத்த பிடகத்தின் ஐந்தாவது நிகாயத்தில் 'தம்மபதம்' அல்லது சகோதர சகோதரிகளின் தோத்திரப்பாடல்களும் (தேரகாதையும் தேரிகாதையும்-Theragatha and Therigatha), மிகுபுகழ் பெற்ற ஜாதகக் கதைகளும் (Jathakas) அடங்குகின்றன. வழக்கிலிருந்து வரும் ஜாதக விளக்கவுரைகள் மௌரிய வமிசம் ஆட்சிப்பீடம் ஏற்ற பல நாள்களுக்குப் பின்னரே தோன்றியிருக்க வேண்டும். மூலக் கதைகள், நெடு நாளைக்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும். கி. மு. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் எழுந்த பதிவுச்சிற்பங்களில் (Basrelief) ஜாதகக் கதைக் கருத்துகள், சிற்பிகளால் கையாளப்பட்டுள்ளன. முதலாவது நூற்றாண்டில், இரண்டாம் நூற்றாண்டைக்

காட்டிலும் கருத்துகள் அதிகமாய் வழங்கியிருக்க வேண்டும். பிற்கால இதிகாசங்கள் வளர்வதற்கு ஜாதகக் கதைகள் முன்னோடிகளாய் விளங்கின. மகதப் பேரரசின் எழுச்சிக் காலங்களில் இதிகாசங்கள் உருவாகிக்கொண்டிருந்தன எனக் கொள்வதற்கான அறிகுறிகளும் உண்டு.

## காப்பியங்களின் எழுச்சி
## (The Beginnings of Epic Poetry)

வேத இலக்கியங்களில் வீரர்களைத் துதிக்கும் 'புகழ்ப்பாக்களும்' இளவல்கள் முனிவர்கள் ஆகியோரைக் குறித்த கதைகளும் காணப்படுகின்றன. புகழ்ப்பாக்களைப் பாடுவதும் (Gathanarasamsi-காதாநர்சம்ஸி), கதை சொல்லுவதும் (ஆக்கியானம்-Akhyana) 'ராஜசூயம்' (முடிசூட்டு விழா) போன்ற பெருவேள்விகளும் அசுவமேதம் (குதிரை வேள்வி) போன்ற வேள்வியின் போது, ஆசாரியர் ஒருவர் 'பரிபிலவ ஆக்கியானம்' (Pariplava akhana-சுற்றிவரும் பிரசங்கம்) என்னும் பிரசங்கத்தையும், பண்டைய மன்னர்களைக் குறித்த கதைகளையும் கையாளுவதுண்டு. இவரைத் தொடர்ந்து க்ஷத்திரிய வீணையிசை வாணர் (Vina-gathin) வீணையுடன் இசைத்து வேள்வித்தலைவனை நாயகனாகக்கொண்டு அவனுடைய வீரச்செயல்களைக்குறித்த பல பாக்களைப்பாடுவது வழக்கம். அத்தகைய வேள்விநடத்திய மன்னர், குரு, கோசல நாடுகளில் பலரிருந்தனர். வேத இலக்கியங்களில் சிறந்து விளங்கும் பாக்களும் கதைகளும் கௌரவ குலத்தினரான 'பரீட்சித்து, ஜனமேஜயன்' போன்றவர்களையும், இட்சுவாகு, கோசல மரபினரான, (ஹரிச்சந்திரன்) பர அத்னரன் போன்ற மன்னர்களையும் நாயகர்களாகக்கொண்டு, அவர்தம் வீரச்செயல்களையும் வள்ளன்மையையும் புகழ்ந்துரைப்பது வியப்பன்று. ராஜசூயவேள்வியில் இட்சுவாகு மன்னன் ஹரிச்சந்திரனின் ஆக்கியானத்தைக் கூறுவது முக்கியச்சடங்குகளுள் ஒன்றாய் விளங்கியது. இவ் வேள்வியில் இடம் பெற்ற மற்றுமோர் ஆக்கியானம், கௌரவ நாட்டைக் குறித்தது. இக் கதைகளின் மதிப்பைப் புத்த சமய இலக்கியங்களும் புகழ்ந்து பேசுகின்றன. மன்னர்கள், போர்கள், பயங்கரச் சம்பவங்கள் நிறைந்த கதைகளைப் பிராமணரும், துறவியர் சிலருங்கூடப் பிரசாரம் செய்வதைப் புத்தர் கடுமையாகக் கண்டித்தார். வேத இலக்கியங்களில் இடம் பெறாத இட்சுவாகு, கௌரகுல வீரர் சிலரையும், பாக்களும் கதைகளும் புகழ்ந்துரைக்கின்றன. இட்சுவாகு குலத்தைச் சார்ந்த தசரதன், அவன் குமாரன் இராமன் ஆகியோரின் வரலாற்றுக் கதையொன்று ஜாதகக் கதைகளில்

குறிக்கப்படுகின்றது. இச் சம்பவம் கி.பி. இரண்டாம் நூற்றுண்டின் பதிவுச் சிற்பமொன்றிலும் காணப்படுகிறது. பாண்டு குலத்தினரைப் பற்றிய மற்றுமொரு கதையும் ஜாதக இலக்கியங்களில் குறிக்கப்படுகிறது. கி.பி. 4 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த கிரேக்க ஆசிரியர், இந்திய ஹீராகிள்ஸ், பாண்டியர் ஆகியோரைக் குறித்த செய்தியைத் தெளிவற்ற கதையொன்றில குறிக்கின்றனர். இலக்கண ஆசிரியரான பாணினியார், காத்தியாயனர், பதஞ்சலியார் ஆகியோரும் இதைக் குறிப்பர். இராம கதையிலுள்ள கிஷ்கிந்தைச் சம்பவம் பற்றிப் பதஞ்சலியார் அறிந்திருந்தார். ஆயினும், இராமனுடைய வீரச்செயல்களும், பாண்டுவின் வெற்றிகளும், எக்காலத்தில் முழுமை பெற்ற வீர காவியங்கள் அல்லது இதிகாசங்களாய் வடிவெடுத்தன என்பதைக் கூற இயலாது. வான்மீகியார், பராசரரின் புதல்வரான வியாசர் ஆகிய இராமாயண, மகாபாரத இதிகாசங்களின் ஆசிரியர்களைப்பற்றிய குறிப்புகள், பிற்கால வேத, உபவேத இலக்கியங்களில் காணப்படுகின்றன. இராமாயண இதிகாசத்தைப் பற்றிய முற்கால நிருவயக் குறிப்பு, கிறிஸ்தவ சகாத்தத்தின் முதல் நூற்றுண்டுகளில் எழுந்த சமண, புத்த இலக்கிய நூல்களில் காணப்படுகின்றன. அக் காலத்தில் அவ் விதிகாசத்தில் 12,000 செய்யுள்களே அடங்கியிருந்தன. இராமாயணம் இப்போதுள்ளதில் பாதியளவு உடையதாகவே இருந்தது. 'கிருஹ்ய சூத்திரத்தில்' அஸ்வலாயனரால் (Asvalayana) மகாபாரதம் முதலில் குறிப்பிடப்படுகிறது. பாணினி, 'அஷ்டாத்தியாயி' என்னும் நூலிலும் இக் காவியத்தைக் குறிப்பர். அக் காலத்தில் மகாபாரதம் இப்போதுள்ளதிற காற்பங்கு அளவு உடையதாகவே இருந்தது. 100,000 செய்யுள்கள் அடங்கிய முழு மகாபாரதம் குப்தர் காலத்துக் கல்வெட்டு ஒன்றில் முதலாவதாகக் காணப்படுகிறது. கி. பி. 6 ஆம் நூற்றுண்டில் இவ்விரு காவியங்களின் சிறப்பும் தொலைவிலுள்ள கம்போடியா வரையிலும் பரவியிருந்ததென்பது தெரியவருகிறது. இரண்டிலும் போலிக் காவியக் கற்பனைச் செய்திகள் பல காணப்படுகின்றன. இவை பிற்காலங்களிலேயே சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். கலப்படமற்ற காவியம் கிரிவிரஜத்தைத் தலைநகராகக்கொண்ட மகத இராணுவ அரசொன்றையே குறிக்கும்; பாடலிபுத்திரத்தைப்பற்றிய குறிப்பெதுவுமில்லை. ஹர்யங்க – சைசுநாக அரசர்களின் ஆட்சிக்காலத்திற்குப் பிறகே ஆதிகாவியங்கள் தோன்றியிருக்க வேண்டுமென எண்ணுவதற்கிடமுண்டு. கோதாவிரிக்கப்பாலுள்ள தென்னிந்திய வருணனை தெளிவாய் இல்லையெனினும், விரிவாகக் காட்பியங்களில் காணப்படுவதும்; புண்டரர், வங்கர் ஆகியோருடைய அரசுகளுக்கப்பாலுள்ள கிழக்கிந்திய வருணனையும், புத்த நிகாயங்களிலும் வேத நூல்களிலும் காணக்கிட்டாத அளவில் விரிந்திருப்பதால், காப்பியங்கள் எழுந்த காலத்தை இதற்கும் முன்பாக அமைக்க இயலாது.

இரண்டு வடமொழிக் காப்பியங்களிலும், இராமாயணம் மகாபாரதத்திற்கு முன்னரே தோன்றியிருக்கக்கூடும். அஸ்வலாயனருக்கும், பாணினியாருக்கும், மகாபாரதம் தெரிந்ததைப் போல இராமாயணத்தைப்பற்றிய ஆதிக்குறிப்புகள் காணக் கிட்டவில்லை. காலத்தால் பிந்திய காப்பியம் ஜனமேஜெயனையும், மலையைக் கைகளால் தூக்கி நிறுத்திய விஷ்ணுவையும் (பெரும்பாலும், 'கிருஷ்ணன்' எனக் கருதலாம்) குறிப்பிடுகிறது. பிந்திய இலக்கியங்கள், யதுகுலத்தைச் சேர்ந்த வாசுதேவனையும், அவனுக்கு நெருங்கிய துணைவனும் நரனது அவதாரமாகக் கருதப்படுபவனுமாகிய அர்ஜுனனையும் குறிப்பிடுகின்றன.

அயோத்தியிலுள்ள 'பைசாபாது' (Fyzabad) மாவட்டத்தைச்சார்ந்த அயோத்திப் பட்டணத்தில், இட்சுவாகு குலத்துதித்த தசரதனின் மூத்த மகனான இராமன் என்பவனது கதையே, இராமாயணத்தின் கருவாய் அமைகிறது. வடபீகாரிலுள்ள விதேக நாட்டைச்சேர்ந்த ஜனகரின் மகளான சீதையை இராமன் மணந்தான். அரண்மனைச் சூழ்ச்சியொன்றால் வீடு இழந்த, இட்சுவாகு இளவல் பதினான்கு ஆண்டுகள் நாட்டிற்கு வெளியே வசிக்கவேண்டியதாயிற்று. அவன் மனைவியுடனும் உண்மையுள்ள சகோதரன் இலட்சுமணனுடனும் தக்காணத்திலுள்ள தண்டகாரணியத்தை அடைந்தான். அவர்கள் 'நாசிக்கு' எனக் கருதப்படும் கோதாவிரி நதிக்கரையிலுள்ள பஞ்சவடியை அடைந்து சின்னாள்கள் வாழ்ந்தார்கள். இப் பகுதியில் அமைதியாய் வாழ்ந்த தவசிகளுக்கு (முனிவர்களுக்கு)த் துன்பம் இழைத்த இராட்சதர்கள் (Rakshasa) அல்லது மனித மாமிசம் உண்ணும் கூட்டத்தலைவர்களுடன் விரோதம் வளர்ந்தது. இத் தலைவர்களுள் சிலர், பலம் பொருந்திய இலங்கை (Lanka) வேந்தனான இராவணனுக்கு உறவினர். இராவணன், தன் உறவினர்களுக்கு இழைக்கப்பட்ட தீங்குகளுக்குப் பழிவாங்கும் எண்ணத்துடன், இராமனுக்கு மனைவியான சீதையைக் கவர்ந்து தனது தீவிற்கு எடுத்துச் சென்றான். துக்கமடைந்த இட்சுவாகு இளவல்கள், தென்னிந்தியாவில் பல்லாரி மாவட்டத்திலுள்ள கிஷ்கிந்தைத் தலைவர்களான சுக்கிரீவன், அனுமன் முதலியோருடன் நட்புக்கொண்டு, கடலைக் கடந்து, இலங்கையை அடைந்தார்கள். இராட்சத மன்னனையும் அவன் உறவினருள் பெரும்பகுதியினரையும் கொன்று, இளவரசி சீதையை மீட்டார்கள். வனவாசகாலம் முடிந்தமையால், மனைவியுடனும் தம்பியுடனும் வீடு திரும்பிய இராமனை, அவனுக்கு மற்றொரு தம்பியான பரதன் (இவனுக்காக இராமன் தன் உரிமைகளை இழக்க வேண்டியிருந்தது.) வரவேற்றான். இதற்கிடையில் இராட்சத மன்னனொருவனால் நெடுங்காலம் சிறையிலிடப்பட்ட இளவரசியை மீண்டும் அழைத்துக்கொள்ளும் சீலத்தைப்பற்றி மக்கள் விவாதிக்கத் தொடங்கினார்கள். குடி மக்களின் நியாயமற்ற குற்றச்சாட்

டைத் தவிர்ப்பதற்கென, இந்திய மாதர்குலத் திலகமாய் விளங்கும் கற்புக்கரசியான மனைவியை இராமன் நாடு கடத்தவேண்டியதாயிற்று. இந்து சாத்திர விதிகளுக்கிணங்க, புதல்வர்களான குடி மக்களைத் திருப்தி செய்வதே அரசனது கடமையாயிற்று. சீலமிக்க அரசகுலமாது, வான்மீகி முனிவரின் ஆசிரமத்தில் இடம் பெற்று, லவ-குசர்கள் என்னும் இரட்டையரை ஈன்றாள். இவ் விரட்டையர், தாய் நாடு திரும்பி, தமக்குரிய பரம்பரைச் சொத்தான அரசைப் பெற்றனர்.

குரங்குகளும், மானிட மாமிசம் உண்ணும் அரக்கரும் நிறைந்த நாடுகளில், இளவலொருவனுடைய சாதனைகளைக் கூறும் இக் கதையில், எவ்வளவில் வரலாற்றுண்மைகள் அடங்கியுள்ளன எனக் கூறுவது மிகக் கடினமானது. மானிடரைக் குறிப்பனவல்ல என்றாலும், இராமன், சீதை என்னும் பெயர்கள் வேத இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. வேத இலக்கியங்களில் மிக்க புகழ் பெற்ற இட்சுவாகு, வைதேக வமிசத்தினரோடு இவர்களுக்கு எவ்விதத் தொடர்புமில்லை. இராவணன் என்னும் பெயர், பிராமண அப்பிராமண இலக்கியங்களில் காணப்படுவதில்லை. காப்பியங்களிலோ, அல்லது காப்பியங்களை அறிந்திருந்த கௌடில்யனது அர்த்தசாத்திரம் போன்ற நூல்களிலோ அன்றி, இப்பெயர்களை நாம் காண்பதரிது. தென்னிந்தியாவிலுள்ள தொன்மை வாய்ந்த கல்வெட்டுகளில் இட்சுவாகு குல மன்னர்களின் பெயர்கள் பிரதானமாகக் காணப்படுவதால், தொலைவிலுள்ள தென்னிந்தியாவில் இட்சுவாகு குலத்தினர் குடியேற்ற நாடுகளை யமைத்தனர் எனக் கருதுவதற்கு இடமுண்டு. எனினும், இட்சுவாகு குல மன்னரின் புகழைத் தெற்கில் அயோத்தியைச் சேர்ந்த மன்னர் ஓங்கச்செய்தனரா அல்லது இட்சுவாகு குலமரபினரெனத் தங்களைக் கூறிக்கொள்ளும் கபிலவஸ்துவைச் சார்ந்த சாக்கிய முனிவர் பரவச்செய்தனரா என்பது விவாதத்திற்குரிய செய்தி.

திருதராட்டிர விசித்திர வீரியரின் புதல்வர்களான கௌரவரைப் பாஞ்சாலர், கிருஷ்ணன் ஆகியோரது உதவியுடன் பாண்டவர் வெற்றி கண்ட செய்தி, மகாபாரதக் காப்பியத்தின் கருவாய் விளங்குகிறது. திருதராட்டிர விசித்திர வீரியரின் பெயர். 'யஜுர்வேத' 'காதகம்' (Kathaka) ஒன்றில் காணப்படும். இக் காப்பியத்தை 'வெற்றிக் கதை' (Tale of Victory—ஜயநாம இதிகாசம்-Jayanamaithihasa) எனக் கூறுவது வழக்கம் 'தைத்திரிய ஆரண்யகமும்', 'சாந்தோக்கிய உபநிடதமும்' வெற்றி கண்டவரின் கட்சியைச் சார்ந்த வசுதேவர் தேவகி ஆகி

யோரின் புதல்வனை கிருஷ்ணனை முதன்மையானவனாகக் கூறு கின்றன. தைத்திரிய ஆரண்யகம் இவனை விஷ்ணு என்றும், நாராயணன் என்றும் வழங்குகின்றது. சதபத பிராமணத்தி லும் யஜுர்வேத 'வாஜசேனயி'ப் பாடலொன்றிலும் அர்ஜுனன் என்னும் மற்றுமொரு வெற்றி வீரன் பெயரும் காணப்படுகிறது. 'சதபத பிராமணம்' அவனை இந்திரனென்றும் கருதும்; காப்பி யத்தில் அவன் இந்திரகுமாரனென்று வருணிக்கப்படுகிறான். ஆரண்யகம், வசுதேவ புத்திரனை கிருஷ்ணனை விஷ்ணுவாகக் கருதுவதுபோல, சதபத பிராமணம் அர்ஜுனனை இந்திரனாகக் கருதுகிறது. எனவே, ஆதியிலிருந்து அவன் பிராமணக் கட வுளைத்தவிர வேறில்லை என்னும் கருத்திற்கிடமில்லை. கௌர வரின் நாசம், சிரௌத சூத்திரச் செய்யுளொன்றிலும், சாந் தோக்கிய உபநிடதத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. கௌர வருக்கு முக்கிய எதிரிகளாகச் 'சிரிஞ்சயர்கள்' (Srinjayas) குறிப் பிடப்படுகின்றார்கள். இவர்களுக்கும் கௌரவருக்குமுள்ள பகை யைச் சதபத பிராமணம் குறிக்கிறது.

மகாபாரதக் கதைக்கிணங்க, இப்போது மீரட்டு மாவட்டத் திலுள்ளதோர் இடமெனக் கருதப்படும் கௌரவ நாட்டிலுள்ள அஸ்த்தினபுரமென்னும் நகரையாண்ட விசித்திர வீரிய மன்ன னுக்குத் திருதராட்டிரன், பாண்டு என்னும் மக்கள் இருவர் உண்டு. பிறவியிலேயே திருதராட்டிரன் குருடனாயிருந்ததால் பாண்டு அரசெய்தினான். மூத்த சகோதரனை திருதராட்டிரன் உயிருடனிருக்க யுதிட்டிரன், பீமசேனன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் என்னும் புதல்வர்களை விடுத்துப் பாண்டு உயிர் நீத்தான். திருதராட்டிரனுக்கு நூற்றுக்கதிகமான மக்களிருந் தார்கள். அவர்களுள் மூத்தவனுக்குத் துரியோதனன் என்பது பெயர். பாண்டு புத்திரர்கள், பாஞ்சால மன்னனுக்கு மகளான 'திரௌபதி'யை மணந்தார்கள். மூன்றும் இளவலான அர்ஜு னன், துவாரக, யாதவ நாட்டுக் கூட்டங்களில் சக்தி பொருந் திய தலைவனை கிருஷ்ணனின் சகோதரியான சுபத்திரையை மணந்திருந்தான். தந்தையின் நாட்டில் ஒரு பகுதியைப் பாண்டு புத்திரர் கேட்டுப் பெற்றனர். கௌரவ நாட்டிற்குத் தெற்கிலுள்ள காண்டவ வனம் (Khandava-forest) அவர்களுக் களிக்கப்பட்டது. இக்கால டில்லிக்கு அருகிலுள்ள அவ்வனத் தில் கம்பீரமான, 'இந்திரப்பிரஸ்தம்' என்னும் நகரை அவர்கள் நிருமாணித்தார்கள். தனது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கு முயன்று வந்த சக்தி வாய்ந்த மகத மன்னனை ஜராசந்தனைக் கிருஷ்ணனது தூண்டுதலால் பாண்டவர் முரியடித்தனர். ஜரா சந்தன் நூற்றுக்கணக்கான இளவல்களைச் சிறை பிடித்து, பயங்

கரமானதொரு வேள்வியில் பலியிடுவதற்கெனக் கிரிவிஜக் கோட்டையில் அவர்களைச் சிறையிலிட்டிருந்தான். எல்லாத் திக்குகளிலும் வெற்றி வாகை சூடிய பாண்டவர், பேரரசு அமைக்கும் நோக்குடன், ராஜசூய வேள்வியொன்றை நடத்த முற்பட்டனர். சாம்ராச்சியப் பதவியடைவதற்கு 'ராஜசூயம்' இன்றியமையாததொரு சடங்காய் விளங்கியது. சோதரரின் செழுமை திருதராட்டிரன் மக்களின் பொறாமையைத் தூண்டியது. அவர்கள் பாண்டவருள் மூத்தவனான யுதிட்டிரனைச் சூதாட அழைத்து, அவனைத் தோற்கச் செய்து, திரௌபதியை அடிமை கொள்ள முயன்றார்கள். திரௌபதி, அரசவைக்கு இழுத்து வரப்பட்டு, பொறுக்கவொண்ணாத அவமரியாதைகளுக்குட்படுத்தப்பட்டாள். இதையடுத்துப் பாண்டவர் பதின்மூன்று ஆண்டுகள் வனவாசம் செய்ய நேரிட்டது. வனவாசம் முடிந்ததும், பாண்டவர் ஐவரும் நாட்டைத் திரும்பக் கேட்டு ஏமாற்றமடைந்தனர். போட்டியிடும் சகோதரரிடையே குருக்ஷேத்திரம் என்னுமிடத்தில் பெரும்போர் நிகழ்ந்தது. பீஷ்மர், துரோணர், கர்ணன் உள்ளிட்ட பெருவீரர்கள் நிறைந்த கௌரவப் படை அழிக்கப்பட்டது. பாஞ்சாலரையும் சிரிஞ்சயர்களையும் துணைவர்களாகக்கொண்ட பாண்டவர்களுக்கும் பெருஞ்சேதம் விளைந்ததெனினும், இழந்த நாட்டை அவர்கள் மீண்டும் பெற்றார்கள்.

குருக்ஷேத்திரப் போரைப்பற்றிய தெளிவான குறிப்புகள் வேத இலக்கியங்களில் காணப்படவில்லை. கௌரவருக்கும், சிரிஞ்சயருக்குமிடையில் வளர்ந்த பகையைப்பற்றியும், கௌரவருக்கு நேர்ந்த ஆபத்துகளைப் பற்றியும், இறுதியில் குருக்ஷேத்திரத்திலிருந்து வெளியேறும் நிலை அவர்களுக்கு நேர்ந்தமையையும், சில பிராமணங்களிலும், உபநிடதங்களிலும், சிரௌத சூத்திரச் செய்யுள்களிலுமுள்ள குறிப்புகளிலிருந்து அறியலாம். 'பாண்டு' என்ற பெயர் வேத இலக்கியங்களில் காணப்படுவதில்லை. அர்ஜுனன், பரீக்ஷித்து ஜனமேஜயன் ஆகியோரைப்பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. இவர்களுள் முதலிருவரைப் பிற்கால வேத நூல்கள் கடவுளராகவே உருவகப்படுத்துகின்றன. 'பாண்டு' என்னுமொருவரலாற்று அறிவிற்கெட்டிய குலமிருந்துவந்ததென்பது, அத்தகைய பெயருடையவர்கள் தாலமியின் (Ptolemy) காலத்தில் பஞ்சாபின் ஒரு பகுதியை ஆண்டுவந்தார்கள் என்ற அவருடைய குறிப்புகளிலிருந்து தெளிவாகும்.

கௌரவரும், பாண்டவரும் போர் வீரருக்குரிய கடமைகளை அடிக்கடி மறந்துவிடுகின்றனர் எனக் காப்பியச் செய்யுள்களைப்

பாடும் பாணர் குறிப்பர். பிளவு மனப்பாங்குள்ள புத்தரின் அத்தானை தேவதத்தரை அஜாதசத்துருவின் அடாத செயல்களுக்குக் காரணமாயிருந்தவர் எனப் புத்த ஆசிரியர்கள் குறிப்பதுபோல, பாண்டவரின் நேர்மையற்ற செய்கைகளுக்குக் கிருஷ்ணனே காரணமெனக் கௌரவ நாட்டைச் சேர்ந்த நூலாசிரியர் குறித்துள்ளனர். புராண நூலாசிரியர், 'பேய்களை வஞ்சித்தவர்' எனப் புத்தரையும் குறை கூறுவர். கிருஷ்ணனை வழிபட்டுவந்த பாகவதர்கள், சீலத்தில் குறைந்தவர்களெனச் சங்கராச்சாரியர் காலத்திலும் கருதப்பட்டு வந்தார்கள். கௌரவ நாட்டுப் பாணர்களும் யாதவ குலத்தலைவனை 'பிரத்தியன்' (குலத்திற்கப்பாற்பட்டவன்) எனக் குறித்தமையை இங்கு நினைவு கொள்வது பொருந்தும். பகவத்கீதையைத் தோற்றுவித்த 'தர்மம்' (புலனடக்கம்), 'தியாகம்' (பற்றின்மை). 'அப்ரமதம்' (விழிப்புத்தன்மை) ஆகிய உயரிய கடமைகளைக் கி. பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்றில் உணர்த்திய கவிஞருக்கும் தங்கள் தலைவர் மற்றும் உற்ற நண்பர்களின் கொடுஞ்செயல்களெனப் பாக்களிலும் காப்பியங்களிலும் சித்திரிக்கப்பட்டிருப்பது தெரியாதிருந்ததெனும் கூற்றைக் கேட்பது வியப்பாகவே தோன்றும். போர்களை விவரிக்கும் இலக்கியங்களில், யவனர், சகர் பற்றிய குறிப்புகள் காணப்படுவதால் பிற்காலங்களில் இவற்றைப் பரிசீலனை செய்து விரித்தெழுதியிருக்கவும் கூடும்.

மகாபாரதம் ஒரு 'வெற்றிக்கதை' மட்டுமன்று. அதைப் பழங்கதைகளின் தொகுதி (பூர்ணசம்ஹிதை-Purna-samhitha) என்றும், அழகிய மாதர்கள், கற்புடைய மனைவியர், பேருள்ளம் படைத்த மன்னர், பத்தியிற்சிறந்த முனிவர் ஆகியோரது வரலாறு (இதிவிருத்த-Itivritta) என்றும் கூறலாம். சகுந்தலை, சாவித்திரி, நளன், சிபி ஆகியோரைப்பற்றிய அழகிய கருத்துமிக்க கதைகள் அதில் காணப்படுகின்றன. இவற்றுடன் அதில் அம்பை, விதுலை ஆகியோரைப்பற்றிய வீரம் செறிந்த பாடல்களுமுண்டு. மானிட முயற்சிகளின் குறிக்கோள்களான அறம் (Dharma), பொருள் (Artha), இன்பம் (Kama) ஆகிய முப்பேற்றையும் (திரிவர்க்கம்) அளிக்கவல்ல தர்ம சாத்திர நூல் என இக்காப்பியத்தின் முதற்சுருக்கம் கூறும். 'வீடு' (Mokha) பெறும் வழியையும் விளக்கவல்ல சாத்திரமென்றும் மனித குலத்திற்கு முத்தியளிக்க வல்ல நூலென்றும் தன்னை இந் நூல் கூறிக்கொள்ளும். காப்பியத்தின் சமயச்சார்புள்ள செய்யுள்களடங்கிய 'பகவத் கீதை' அல்லது 'இறைவனின் தோத்திரம்' (Song of the-Lord) என்னும் பகுதி இந்துக்களின் ஆஸ்திகக் கொள்கையின் அடித்தளமாய் விளங்கிவருகிறது.

# 7. மௌரியப் பேரரசு

## (The Maurya Empire)

### சந்திரகுப்த மௌரியன்

### (Chandraguptha Maurya)

கி. மு. 326 ஆம் ஆண்டு இந்தியாவிற்குப் பெருஞ்சோதனைக் காலமாயிருந்தது. மகதம், அதன் சுற்றுப்புறங்கள் ஆகியவற்றை ஆண்ட பேரரசனை, அவன் மக்கள் வெறுத்தும் ஏளனமாக எண்ணியும் வந்தார்கள். ஐந்து கிளைகளைக்கொண்ட சிந்து நதி பாயும் நிலப்பகுதியை மாசிடோனிய நாட்டினரும், மேற்கிலிருந்து விஜயம் செய்த மற்றும் சிலரும் ஆக்கிரமித்து, அப்பகுதியை வளர்ந்துவரும் தங்கள் பேரரசுடன் நிலையாக இணைத்துக்கொள்ளும் வாய்ப்பினை எதிர்நோக்கியிருந்தனர். படையெடுத்து வந்தோரின் மாபெருந்தலைவர் அலெக்ஸாந்தர், மெசபட்டோமியாவிலுள்ள 'பாபிலோனுக்கு'த் திரும்பிச் சென்றதும், கி.மு. 323இல் அங்கு மரணமடைந்ததும் உண்மையான செய்திகள். பஞ்சாபின் மேற்குப்பகுதியை ஆட்சி செய்வதற்கென அலெக்ஸாந்தரால் நியமிக்கப்பட்ட பிலிபோஸ் என்னும் சத்ரபர் (Satrap) கி.மு. 324இல் அகால மரணமடைந்தார். கி. மு. 321ஆம் ஆண்டிலும், கி.மு. 323ஆம் ஆண்டிலும், மாசிடோனியப் பேரரசைப் பங்கிட்டுக்கொள்வதற்கெனக் கூடிய எஞ்சிய படைத்தலைவர்கள், இந்திய எல்லையில் வெற்றி கண்ட நாடுகளை விட்டுச் செல்ல மனமில்லாதிருந்தார்கள். சிந்து நதியின் கிழக்கிலமைந்த நாடுகளின் சீரியல் ஆட்சியை இந்திய மன்னர்களிடமே ஒப்படைக்க வேண்டியதாயிற்று. சிந்து நதிக் கப்பாலுள்ள சத்ரபங்களை மாசிடோனியக் கவர்னர்களே ஆண்டு வரத் தொடங்கினார்கள். 'யூடிமாசு' (Eudemos) என்னும் அலுவலர், பிலிப்போஸ் கொலையுண்டதற்குப்பின் பஞ்சாபின் மேற்குப் பகுதியிலுள்ள இராணுவத் தளத்தின் பொறுப்பேற்றார். அலெக்ஸாந்தரைத் தொடர்ந்து கிரேக்க அரசெய்திய சந்ததியார்களிடையில் ஒற்றுமையின்றி இந்திய நாட்டிலுள்ள படைத் தலைவர் பலர், மாசிடோனியாவிற்கு மீண்டும் அழைக்கப்பட்டனர். ஒற்றுமையின்மையையும், வலிமையற்று இளைத்த அந்

தியப் படைத்தலைமையையும் நல்ல தருணமாகக்கொண்டு 'அடிமைத்தளையென்னும் நுகத்தடியைத் தந்தையர் நாட்டின் கழுத்திலிருந்து நீக்கவல்ல' தலைவனொருவனை இந்திய மக்கள் கண்டார்கள். கி.மு. 326இல் மாசிடோனிய மன்னன் பஞ்சாபை விட்டு நீங்கு முன்னரே, இந்திய எல்லையில் அந்நியராட்சியை மக்கள் வெறுக்கத் தலைப்பட்டார்கள். சிந்து சமவெளியின் கீழ்ப்பகுதியில், அங்குள்ள பிராமணர்களால் தூண்டப்பட்டுக் கிளர்ச்சியொன்று தோன்றிற்று. கிளர்ச்சி முற்றும் நசுக்கப்பட்டது. அந்நியரின் கவனம், கிளர்ச்சியைத் தூண்டியவர்கள்மேல் திரும்பிற்று; பழி வாங்கும் படலம் ஆரம்பமாயிற்று. கர்ணபரம்பரைச் செய்திக்கிணங்க, தட்சசீலத்தைச் சேர்ந்த சாணக்கியன் அல்லது கௌடில்யன் என்னும் பிராமணன், பிரசித்தி பெற்ற பழிவாங்குவோனொருவனை அரசனாக்கினான். 'அந்நியராட்சியால் நெடுங்காலமாக அவதியுற்ற புவியன்னை, பராக்கிரமம் மிக்க இம் மன்னனைச் சரண் அடைந்து புகலிடம் தேடிக்கொண்டாள்.

இளைஞனான இப் புதிய இந்தியத் தலைவனது பெயர் சந்திரகுப்தன் என்பது. அலெக்ஸாந்தருடன் சண்டையிட்டுத் திரும்பிய இவன், இழிகுலத்தைச் சார்ந்தவன் என்றும், புகழ்மிக்க எதிர்காலத்தை அறிவிக்கும் நிமித்தங்களைக் கண்டு அரச பதவியெய்தும் ஆசை கொண்டான் என்றும் 'ஜஸ்டின்' (Justin) என்பவர் வருணிப்பர். மாசிடோனிய மன்னனைச் சந்தித்த செய்தி, 'புளுடார்க்கு' (Plutarch), ஜஸ்டின் என்னும் இருவராலும் கூறப்படுகிறது. இக்கால நூலாசிரியர் சிலர், ஜஸ்டின் நூலில் காணப்படும் 'அலெக்ஸாண்டிரம்' (Alexandrum) அலெக்ஸாந்தர் (Alexander) என்னும் சொல்லிற்குப் பதிலாக 'நந்தம்' (Nanda) என்று திருத்தியமைக்கின்றனர். இத்தகைய ஊகங்களை நாம் ஏற்பதற்கில்லை. மௌரியச் சான்றுகளை ஆராய்வதற்கு முற்படும் கவனக்குறைவுள்ள மாணவனை இத்தகைய செய்திகள் குழப்பமடையச் செய்கின்றன.

இளந்தலைவன், மௌரிய குலத்தைச் சார்ந்தவன் என இந்திய நூலாசிரியர் கூறுவர். கிரேக்கர் இதையே 'முரையஸ்' (Mories) எனக் குறிப்பதாகக் கொள்ளலாம். சந்திரகுப்தனின் தாயாய் அல்லது பாட்டியாயும், நந்தகுல மன்னனொருவனின் மனைவியாயும் கருதப்படும் 'முரா' என்பவளின் பெயர் திரிந்து 'மௌரிய' என்னும் குலப்பெயர் உண்டாகியிருக்க வேண்டுமெனப் பரம்பரைச் செய்தியொன்று கூறும். இடைக்காலக்

கல்வெட்டுகள் மௌரியர்களைச் சூரிய குலத்தைச் சேர்ந்த க்ஷத்திரியர்களெனக் கூறுகின்றன. பண்டைய புத்த நூலாசிரியரும், இவர்களை க்ஷத்திரியர் என்றும் புத்தர் காலத்தில் நேப்பாளத்துக்கருகிலுள்ள ரும்மிந்தைக்கும் கோரக்பூர் மாவட்டத்திலுள்ள 'கசாய்'க்கும் இடையிலுள்ள சிறு குடியரசான 'பிப்பலிவனத்தை' (Pipphalivana) ஆண்ட மரபினர் என்றும் கூறுவர். 'முத்திராராக்ஷஸம்' (Mudrarakshasa) என்னும் வடமொழி நாடகத்தில் சந்திரகுப்தனுக்கு வழங்கப்பட்டிருக்கும் 'விரிஷல' (Vrishala) என்னும் கேலிப்பெயரிலிருந்து, இவனைச் சூத்திர வகுப்பைச் சார்ந்தவன் எனக் கொள்வது முற்றும் விரும்பத்தக்கதன்று. பிராமண சாத்திரங்களில் கூறப்பட்டிருக்கும் விதிமுறைகளைப் புறக்கணித்து அரசு நடத்தும் க்ஷத்திரியர் பிறரையும் 'விரிஷல' என்னும் சொல்லால் குறிப்பதுண்டு. பிற்காலத்தில், சமணத்திற்குச் சந்திரகுப்தன் அதிகச் சலுகையளித்ததும், பிராமண விதிகளை இவன் புறக்கணித்தான் என்பதற்கான சான்று.

கி.மு. 4ஆம் நூற்றுண்டில், மௌரிய வமிசம் மிகவும் நசித்துப் போயிற்றென்றும், சந்திரகுப்தன் மயில்களைப் பழக்குவோர், நாடோடிகள், வேடர்கள் கூட்டத்தில் வளர்ந்தானென்றும் தெரிவிக்கும் கர்ண பரம்பரைச் செய்திகளுண்டு. இவன் இளமையில் பஞ்சாபில் அலெக்ஸாந்தரைச் சந்தித்தான். துடுக்கான இவனது பேச்சைக் கேட்டு வெகுண்ட அலெக்ஸாந்தர், இவனைக் கொல்லும்படி கட்டளையிட, உயிரைக் காத்துக்கொள்ளும் பொருட்டுச் சந்திரகுப்தன் ஓட வேண்டியதாயிற்று. இவன் புகலிடம் தேடிச் செல்லும், தட்சசிலவாசியொருவனோடு நட்புக் கொண்டானென்பது கூறப்படுகிறது. 'சாணக்கியன்' என்றும், கௌடில்யன்' என்றும் வழங்கப்படும் தட்சசில வாசி, பாடலிபுரத்திற்கு முதலில் சென்று, நந்த மன்னனால் அவமதிக்கப்பட்டு, விந்தியமலைக் காடுகளில் புகுந்து, அங்குச் சந்திரகுப்தனைச் சந்தித்தான்; புதையலொன்றில் கிடைத்த பணத்தைக்கொண்டு, இளமௌரியனுக்குத் துணையாகப் பெரும்படையொன்றைத் திரட்டினான். கிரேக்க, இலத்தீன் நூலாசிரியர் கௌடில்யனைக் குறிப்பிடுவதில்லை. அலெக்ஸாந்தரின் கூடாரத்திலிருந்து வெளிப்பட்ட சந்திரகுப்தன், சிங்கம், யானை போன்ற மிருகங்களுடன் போரிட்டான் என அவ்வாசிரியர்கள் குறிப்பது, விந்தியமலைக் காடுகளில் அவன் வாழ்ந்ததைக் குறிக்கும். சந்திரகுப்தன் படை திரட்டிய விவரமும் அவர்களால் அறிவிக்கப்படுகிறது. அப் படையினரைத் திருடர் கூட்டத்தைச் சார்ந்தவர்களென இக் கால வர

லாற்று ஆசிரியர் சிலர் குறிப்பர். சந்திரகுப்தனின் எழுச்சியை விரித்துரைத்தற்கு உரிய சான்ருய் விளங்கும் ஜஸ்டின், படையினரைக் குறிக்கும்போது 'கூலிப் படைவீரர்' என்றும், 'கொள்ளைக் கூட்டத்தினர்' என்றும் குறிப்பது கவனித்தற்குரியது. சமண பரம்பரைச் செய்திகளும், ஊதியம் பெறும் வீரர்களைக் கொண்ட படையாகவே, சந்திரகுப்தனின் படையைக் கருதுகின்றன.

இவன் படை திரட்டி முடிந்ததும், தனது இறைமையை ஆதரிக்குமாறு இந்தியர்களை வேண்டினன். மற்றுமொரு கருத்திற்கிணங்க, வழக்கிலிருக்கும் ஆட்சியை வேரறுக்குமாறு இந்தியர்களைத் தூண்டினன் என்பதும் கூறப்படும். அதற்குப் பிறகு (Deinde-thereafter) அலெக்ஸாந்தரின் படைத்தலைவர்களுடன் போரிடச் சித்தமானன்; அவர்களுடன் தீவிரமாகச் சமர் செய்தான். அலெக்ஸாந்தரின் படைத்தலைவனன செல்யூக்கஸ் (Seleukos) என்பவன் புகழ் பரவத் தொடங்கும் நேரத்தில் சந்திரகுப்தனும் அரசெய்தினன். கி. மு. 321இல் ஏற்பட்ட 'திரிபரதீசோசு' (Triparadeisos) உடன்படிக்கைக்கிணங்கவும், பின் கி.மு. 312 இல் ஏற்பட்ட உடன்படிக்கையாலும், அலெக்ஸாந்திரியப் பேரரசின் பாபிலோனியச் சத்ரபத்தைத் தனது பங்காகச் செல்யூக்கஸ் பெற்ருன். செல்யூக்கஸ் தன் வாழ்க்கையில் முதலடி வைக்கத் தொடங்கும்போது, சந்திரகுப்தன் அரசெய்தியிருந்தமையால், சந்திரகுப்தனது முடி சூட்டுவிழா, உறுதியாகக் கி. மு. 306 இலோ அல்லது கி. மு. 321-க்கு முன்னரோ நடைபெற்றிருக்க வேண்டும்; கி. மு. 321-க்கு முன்பும் நடைபெற்றிருக்கக் கூடும். ஈழநாட்டுப் பௌத்த பரம்பரைச் செய்தியின் அடிப்படையில் கி.மு. 544இல் புத்த பிரான்'பெருமரணம்' எய்தியிருக்க வேண்டுமென்பதை ஏற்ருல், பரிநிருவாணத்திற்கு 162 ஆண்டுகளுக்குப்பின் கி. மு. 382இல் சந்திரகுப்தனின் முடிசூட்டு விழா நடைபெற்றிருக்கக்கூடும். கந்தோனியர் (Cantonese) செய்தியடிப்படையில் கி. மு. 486 இல் புத்தர் பெருமரணமெய்தினர் எனக் கொள்ளும்போது, கி. மு. 324 இலிலேயே சந்திரகுப்தன் முடி சூடியிருக்க வேண்டும் என்பதும் ஏற்படும். முன்னர் குறிக்கப்பட்டிருக்கும் தேதி, கிரேக்கச் சான்றுகளுக்கு முரணுய் இருப்பதால், அக் கருத்தை ஏற்பதற்கில்லை. கி.மு. 324, கிரேக்கச் சான்றுகளையொட்டி அமைந்துள்ளது.

சமணப் பரம்பரைச் செய்தியொன்று, கி.மு. 313இல் சந்திரகுப்தன் முடிசூடிக்கொண்டான் எனக் கூறும். சிங்கள, பர்மா நாட்டுப் பௌத்த நூலாசிரியர், சந்திகுப்தன் அரியணை ஏறி 55

அல்லது 56 ஆண்டுகளுக்குப் பின் [ (24+27 (or 28) +4)=55 or 56] அசோகரது முடி சூட்டு விழா நடைபெற்றதெனக் கூறும் செய்திக்குச் சமணர் கூறும் செய்தி முற்றிலும் முரணாகக் காணப் படுவதால், அதை நம்புவதற்கில்லை. சந்திரகுப்தன், இருபத்து நான்கு ஆண்டுகள் அரசு செலுத்தினன் என்னும் பௌத்த நூலாசிரியர்களின் கருத்தைப் புராணங்களும் ஒப்புக்கொள்ளு கின்றன. சந்திரகுப்தனின் ஆட்சிக்காலம் 28 ஆண்டுகள் என ஈழநாட்டுப் பௌத்தநூலாசிரியரும், 27 ஆண்டுகள் எனப் பர்மா நாட்டுப் பௌத்த நூலாசிரியரும் கூறுவதைச் சிறிது குறைத்து, ஆட்சிக்காலம் 25 ஆண்டுகள் எனப் புராணங்கள் குறிக்கின்றன. பிந்துசாரனின் ஆட்சிக்கும், அசோகரது முடி சூட்டு விழா விற்கும் இடையிலுள்ள காலம் கணக்கிடப்படுவதில்லை. ஆசிரியர் 'ஸ்மித்து' க் (Smith) கூறுவது போல, 137 ஆண்டுகள் மௌரிய ராட்சி நீடித்ததெனப் புராணங்கள் கூறுகின்றன. வாயு புராணத்தில் மொத்த ஆட்சிக் காலம் 133 ஆண்டுகள் என்றே குறிக்கப்படுகிறது. அசோகரது முடி சூட்டுவிழாச் சடங்கு தொடங்கி நாலாண்டு இடைக்காலத்தை இப்புராணம் புறக் கணித்திருக்கக்கூடும். அப் பேரரசனின் பதின்மூன்றும் 'குகைக் கல்வெட்டு' (Rock Edict) ஒன்றில் யவன மன்னர் சிலர் உயிருடனிருப்பதாகக் குறிக்கப்படுகிறது. முதன்முறையாக, ஒழுக்க விதிகளைக் கற்பாறைகளில் செதுக்கும் வழக்கத்தை முடி சூட்டிக்கொண்ட பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் அசோகர் கடைப்பிடித்திருக்க வேண்டும். கி. மு. மூன்றும் நூற்றாண்டுக்கிடையில் செல்வாக்குப் பெற்றுவந்த பாக்திரிய (Bactria) நாட்டு 'முதலாம் டயோடோட்டசை'ப் (Diodotos-I) பற்றிய குறிப்பெதுவும் யவன மன்னர்கள் பட்டியலில் காணப் படவில்லை. அசோகரால் குறிக்கப்பட்டுள்ள மன்னருள் 'சைரீன்' (Cyrene) நாட்டு 'மகசு' (Magas) - தலைசிறந்த ஆராய்ச்சியாளர் களின் கருத்திற்கிணங்க—கி. மு. 258-க்குப் பின் இறந்திருக்க முடியாது. அவனுக்குப்பின் பட்டமெய்திய 'அழகன் டெமிட் ரியசு' (Demetrios) கி. மு. 58இல் மரணமடைந்ததாகச் செய்தி கிட்டுகிறது. பதின்மூன்றுவது குகைக் கல்வெட்டில் உள்ள அதிகப்பட்சக் காலத்தைக் கி. மு. 258 என்று கொள்ளும் போது அசோகரின் முடி சூட்டு விழா, கி. மு. 269-க்குப்பின் நடந்தேறி யிருக்க முடியாது. பௌத்தச் செய்திகளுக்கிணங்க, (269+55) கி. மு. 324 -க்குப் பின்னும், புராணச் செய்திகளுக்கிணங்க, அசோகருக்கு முன் இருந்த இடைக்காலம் உட்பட 269+25+24 +(4)=318+ (4) = கி. மு. 322-க்குப் பின்னும் சந்திரகுப்தன் அரசு செய்திருக்க முடியாதெனக் கொள்ளலாம்.

கி. மு. 326இல் அலெக்ஸாந்தரது கூடாரத்தை விட்டு வெளியேறிய இந்திய அரசிளங்குமரனை சந்திரகுப்தன், சிறு சம்பவமொன்றால் அரச பதவியை அடைய வேண்டும் என்னும் உறுதி பெற்றான் என, அம் மன்னனின் எழுச்சியைக் கூறும் ஜஸ்டின் (Justin) என்பார் விவரித்துள்ளார். புதிய ஆட்சியும், அரச மாற்றமும் ஏற்பட்ட செய்திகளுக்கும், சந்திர குப்தன் மாசிடோனியப் படைத்தலைவருடன் போரிடத்தொடங் கியதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்பது, கிரேக்கர் உபயோகித்திருக்கும் ' டீண்டே ' (Deinde — அதற்குப் பிறகு சின்னாள்களுக்குப்பின்) என்னும் சொல்லிலிருந்து தெளிவாக விளங்கும். இவ் விரு நிகழ்ச்சிகளுக்கும் சிறிது இடைக்காலம் இருந்திருக்கவேண்டும். அரசியல் மாற்றம் ஏற்பட்ட சின்னாள் களுக்குப் பிறகே போராட்டம் தொடங்கியிருக்க வேண்டும்.

'முத்திராராட்சசம்' (Mudrarakshasa) என்னும் வடமொழி நூலில், மிலேச்சத் தலைவர்களை (Mlechcha)-காட்டுமிராண்டி களை)யும் படைகளையும அழித்த செய்தி குறிப்பிடப்படுகிறது. இச் செய்தி, உள்நாட்டில் நடைபெற்ற அரசகுலப் புரட்சியை ஒத்திருக்கிறது. சிந்து மாகாண மாசிடோனியக் கவர்னர், கி. மு. 321 இலேயே சிந்து நதிக்கப்பால் வெளியேற்றப்பட்டபின், அவருக்குப்பின் வேறொருவர் நியமிக்கப்படவில்லை. அலெக் ஸாந்தரைத் தொடர்ந்து பதவியைக் கைப்பற்றிய சந்ததியார் கள், கிரேக்கப் படைத்தலைமையுடன் கூடியபேரரசனின்படைத் தலைமையின்றி இந்திய மன்னர்களை எதிர்க்க இயலாதெனக் கி. பி. 321ஆம் ஆண்டிலேயே அறிவித்தார்கள். அரசியலில் புதிய சூழ்நிலை ஏற்பட்டதன் விளைவாகவே, மாசிடோனியக் கவர்னரைச் சிந்துவெளிக்கப்பால் விரட்டியதும், இந்திய மன் னர்களை மதிக்கும் பழக்கம் ஏற்பட்டது எனக் கூறலாம். சிந்து நதியின் கிழக்குப்பகுதியில் கி.மு. 321ஆம் ஆண்டிலேயே கிரேக்க இராணுவ ஆதிக்கம் அழிக்கப்பட்டது. அம்பி, போரசு அல்லது மாசிடோனிய ஆட்சியை ஏற்ற எந்தச் சிற்றரசனாலும் இந் நாசவேலை நடைபெற்றிருக்க வழியில்லை. அந்நியராட்சியி னின்று தாய்நாட்டை விடுவிக்க இவர்கள் முயன்றிருந்தால் சந்திரகுப்தனைப் புகழ்ந்துரைக்கும் ஜஸ்டின், இச் சிற்றரசர் களைத் 'தாய்நாட்டை விடுவித்த வீரர்கள்' எனக் கண்டிப்பாகப் புகழ்ந்திருப்பார். மேலும் கி. மு. 321லேயே அம்பி, போரஸ் ஆகி யோர் கிரேக்கரை அழித்தோ அல்லது விரட்டியோ இருந்தால் சந்திரகுப்தருடன் போரிட்டதாக ஜஸ்டினால் கூறப்படும் கிரேக்க வீரர் எங்கிருந்து முளைத்தனர் ?' என்ற கேள்வி பிறக்கும். பாபி லோனிய, திரிபரதீசோஸ் (Triparadeisos) உடன்படிக்கைகளில்

சந்திரகுப்தனின் பெயர் காணப்படுவதில்லை. கி. மு. 317 வரையிலும் மேற்குப் பஞ்சாபில் பதவியிலிருந்த யவனப் படைத் தலைவனை யூடிமசைக் குறித்தும் இத்தகைய மௌனம் சாதிக்கப்படுகிறது. இவ் வலுவலனும், மற்றும் இந்தியச் சிற்றரசர் பலரும் இருந்தபோதிலும் சிந்து சமவெளியின் கீழ்ப்பகுதியிலோ, அல்லது உள் நாட்டிலுள்ள சமவெளிகளிலும் பிற மேட்டுப்பாங்கான இடங்களிலுமோ கி. மு. 321-ல் சந்திரகுப்தனது செல்வாக்குப் பரவுவதைத் தடை செய்திருக்க வழியில்லை.

கர்ண பரம்பரைச் செய்திகளுக்கிணங்க, நந்த அரசனின் நேர்மையற்ற அரசை ஒழிப்பதில் 'கௌடில்யன்' அல்லது 'சாணக்கியன்' சந்திரகுப்தனுக்குப் பேருதவியாய் இருந்தான் என்றும், பின்னர்ச் சந்திரகுப்தனின் அமைச்சனுயுமிருந்தான் என்றும் நாம் அறிகிறோம். நந்தனின் தலைநகரைத் தாக்கும் முயற்சி தோல்வியுற்றதெனக் கூறப்படுகிறது. மறுமுறை இள மௌரியன் எல்லைப்புறங்களிலிருந்து தொடங்கி, வெற்றி பெற்றான் எனக் கூறப்படுகிறது. 'பத்ரசாலன்' (Bhadrasala) என்னும் தளபதியின் தலைமையில் நடத்திச் செல்லப்பட்ட நந்தனின் படை, பெருநாசமுற்றுத் தோல்வியுறவே, சந்திரகுப்தன் பாடலிபுத்திர அரசைக் கைப்பற்றினான்.

மாளவமும் கத்தியவாரும் முதல் மௌரியனின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. சமணர் குறிக்கும் கி. மு. 313 பரம்பரைச் செய்தி அடிப்படையில் உண்மையெனின், சந்திரகுப்தன் அவந்தியைக் (மாளவம்) கைப்பற்றிய நாளை அது குறிப்பதாகக் கொள்ளலாம். மாளவத்திற்கு மேற்கில், சந்திரகுப்தனின் ஆட்சி சௌராஷ்டிரம் வரையிலும் பரவியிருந்தது. அங்குப் புஷ்யகுப்தன் (Pushyaguptha) என்னும் வைசிய குல அலுவலன் (ராஷ்ட்ரீய) இருந்தான். தமிழில் உள்ள பரம்பரைச் செய்திகளிலிருந்து 'வம்ப மௌரியர்' தெற்கில் திருநெல்வேலி மாவட்டம் வரையிலும் பரவியிருந்தனர் என்பது தெரியவரும். 'வம்பமௌரியரை'க் கொங்கு நாட்டைச் சார்ந்தவரென்றும் பிற்காலத்தவர் என்றும் அறிஞர் சிலர் குறிப்பர். திருநெல்வேலி வரையிலும் செல்வாக்கைப் பரப்பிய மௌரியரை முற்காலத்தவர் எனக் கொண்டாலும், சின்னாள்களுக்குப்பின் அவர்கள் திருநெல்வேலியிலிருந்து திரும்பியிருக்கவேண்டும். சந்திரகுப்தனின் பேரரான அசோகர் காலத்தில் மௌரியர் ஆதிக்கம் மைசூரிலுள்ள 'சித்தலதுர்க்கம்' (Chitaildrug) வரையில் பரவியிருந்ததென்பது தெளிவு. மேலும், பாண்டியப் பேரரசின் எல்லையில் அடங்கிய திருநெல்வேலி மாவட்டம், அசோகர் கல்வெட்டுகளில் எல்லைப்புற அரசெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்திரகுப்தனது ஆட்சிக்கால இறுதியில், மௌரியப் பேரரசு வடமேற்கில் மேலும் விரிந்தது. பாபிலோனிய நாட்டு

அரச பதவியை அடைந்த அலெக்சாந்தரின் படைத்தலைவன் 'செல்யூக்கஸ்' மத்திய தரைக்கடலிலிருந்து சிந்து நதி வரையிலும் தன் செல்வாக்கை வளர்த்து, சிந்து நதியின் கிழக்குப் பகுதியிலுள்ள பிரதேசங்களையும் கைப்பற்ற எண்ணி னன். இம் முயறசியில் தோற்ற அவன், சந்திரகுப்தனுடன் உடன்படிக்கை செய்துகொண்டதால், ஆசிரியர் சிலர் கருத்துக் கிணங்க, 'பரோப்பனிசதை' (Parcopanisadai-காபூல்); ஆரிய (Aria-ஹீரட்டு), அரக்கோசியா (Arachosia-கண்டஹார்), ஜிட் ரோசியா (பலுச்சிஸ்தான்) போன்ற இடங்களை, 500 யானைகளை மட்டிலும் பெற்றுச் சந்திரகுப்தனுக்குக் கொடுக்கவேண்டிய தாயிற்று. அசோகர் கல்வெட்டுகளிலிருந்து 'காபூல்' பள்ளத் தாக்கின் பகுதியொன்று மௌரியப் பேரரசில் அடங்கியிருந்தது தெரியவருகிறது. மண ஒப்பந்தம் ஒன்றினல் இவ் வுடன் படிக்கை உறுதிபெற்றது. பாடலிபுத்திர அரசவைக்குக் கிரேக் கப் பிரதிநிதியொருவன் அனுப்பப்பட்டான்.

சமண பரம்பரைச் செய்திகளுக்கிணங்க, சந்திரகுப்தன், மகாவீரரின் சமயத்தைத் தழுவியிருக்கவேண்டும். அரசைத் துறந்து, இறுதி நாள்களை மைசூருக்கருகிலுள்ள 'சிரவண பெல் கோலா'வில் (Sravana Belgola) இவன் கழித்தானென்பது கூறப் படுகிறது. மௌரிய வமிசத்தின் முதலரசன் வேள்விச் சடங்கு களைக் கைவிடவில்லை. சமணரின் 'அஹிம்சை' அல்லது விலங் கினங்களுக்குத் தீங்கிழையாமை என்னும் கொள்கையை இவன் முழுதும் கடைப்பிடித்ததாகக் கூறவியலாது எனக் கிரேக்கர் அறிவிக்கின்றனர். வேட்டையாடுவதில் இவனுக்கு விருப்பம் அதிகம். இப் பழக்கத்தை இவன் மகனும் கொண்டிருந் தான். எட்டாம் கல்வெட்டு (Rock Edict) ஒன்றில் இவன் பேர ரான அசோகரும் 'இப் பழக்கத்தைப்பற்றிய குறிப்பைக் குறித் துள்ளார். கி. பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஹர்ஷன் (Harsha) சைவனுய் இருந்தபோதிலும், புத்தருக்கும், புத்த நீதி போத கருக்கும் மிக்க மரியாதை செலுத்தியதைப் போலச் சந்திர குப்தனும் தன் வாழ்நாளின் இறுதியில் சமணத்தில் விருப்பம் கொண்டிருக்கக்கூடும்.

## பிந்து சாரன்
## (Bindu Sara)

கிரேக்கரால் 'அமித்ரகாதன்' (Amitraghata-எதிரிகளை வீழ்த்துபவன்) என வழங்கப்படும் சந்திரகுப்த மௌரியன் பிள்ளையான பிந்துசாரன், அவனைத் தொடர்ந்து அரியணை ஏறி னன். கி. மு. 326-க்கு முன் சந்திரகுப்தன் அரியணை ஏறியிருக்க இயலாதென்பதாலும், பிராமண, புத்த நூலாசிரியர்கள் சந்திர குப்தனது ஆட்சிக்காலம் இருபத்துநான்கு ஆண்டுக்காலம் என

ஐயமற மொழிவதாலும், புதிய மன்னன், கி. மு. 302-க்கு முன்னர் அரியணை ஏறியிருக்க இயலாது. இவன் மைந்தரான அசோகர் தம் பதின்மூன்றாவது கல்வெட்டில் குறித்திருப்பதுபோல, மகசு (Magas) என்னும் அரசன், உண்மையில் கி. மு. 258-ல் மரணமடைந்திருப்பின், பிந்துசாரனது ஆட்சி கி. மு. 269-க்கு முன் முடிவடைந்திருக்கவேண்டும். அவனது ஆட்சிக் காலத்தைத் தெளிவாக அறிந்து கூறுவது கடின முயற்சியாய் இருந்து வருகிறது. புராணச் செய்திகளுக்கிணங்க, அவன் இருபத்தைந்து ஆண்டுகள் அரசு செலுத்தியிருக்கவேண்டும். பர்மியச் செய்திகள், அவன் இருபத்தேழு ஆண்டுகள் அரசு செலுத்தியதாகக் கூறுகின்றன. சிங்களச் செய்திகளின் அடிப்படையில் அவனது ஆட்சி இருபத்தெட்டு ஆண்டுக்காலம் நீடித்திருக்க வேண்டும். கந்தோனிய (Cantonese)ச் செய்தி அடிப்படையில் உள்ள கி. மு. 486 என்னும் பரிநிருவாணச் செய்தியை ஏற்கும் போது, பிந்துசாரன் கி. மு. C. 300 முதல் கி. மு. 273 வரை அரசாண்டிருக்கவேண்டும்.

தந்தை விட்டுச் சென்ற சாம்ராச்சியத்தைச் சிதைவுறாமல் பிந்துசாரன் காப்பாற்றி வந்தான். தட்சசீலத்தில் தோன்றிய கிளர்ச்சியொன்றை அவன் அடக்கியதாகப் பரம்பரைச் செய்தி கூறும். புதிய பகுதிகளை வென்று அவன் பேரரசுடன் இணைத்த செய்தியைக் குறித்த தெளிவான சான்றுகள் இல்லை. வடஇந்தியாவில் பெரும்பகுதியும், தக்காணமும், தெற்கில் மைசூர்ப் பகுதியிலுள்ள 'சித்தலதுர்க்கம்' (Chitaldrug) வரையிலுமுள்ள நிலப்பகுதியும் பேரரசு எல்லைக்குள் அடங்கியிருந்தன. பூரி (Puri) யின் பெரும்பகுதியையும், மற்றும் கஞ்சத்தையும் (Ganjam) அதன் சுற்றுப்பகுதிகளையும் உள்ளடக்கியிருந்த கலிங்கம் (Kalinga) சுதந்தர நாடாகவே விளங்கியது.

வெளிநாட்டு விவகாரங்களில் பிந்துசாரன் மேற்கிலுள்ள கிரேக்க நாடுகளுடன் தன் தந்தை கொண்டிருந்த நெருங்கிய தொடர்பைப் போற்றி நடந்தான். 'தைமாக்கசு' (Deimachos) என்னும் கிரேக்கத் தூதுவனை அவைக்கு அழைத்துக் கொண்டதுடன், சிரிய நாட்டு மன்னன் செல்யூக்கஸ் நிகேட்டாரின் புதல்வன் முதலாம் ஆண்டியோக்கஸ் சாட்டர் (Antiochos-Soter) என்பவனுடன் இவன் பரிமாறிக்கொண்ட கடிதங்களைப்பற்றிய விநோதச் செய்திகள் வழங்கி வருகின்றன.

ஆடவர்—பெண்டிர் ஆகிய இருபாலாருமடங்கிய மக்கள் இவனுக்குப் பலருண்டு. அவர்களுள் ஒருவரான அசோகர் தட்சசீலம், உஜ்ஜயினி ஆகிய இடங்களில் அரசப் பிரதிநிதியாய்ப் பணியாற்றினர். பேரரசன் நோயுற்ற செய்தி கேட்டு, அசோகர் உஜ்ஜயினியை விடுத்துப் பேரரசின் தலைநகரான பாடலிபுத்

திரத்தையடைந்தார் என்ற பரம்பரைச் செய்தியுண்டு. அவர் தந்தை இறந்ததும், பாடலிபுத்திர அரசைக் கைப்பற்றி, மூத்த சகோதரனையும் கொன்றார். பேரரசன் அரசியர் பலருக்கு உதித்த 99 சகோதரர்களையும் அசோகர் கொன்றதாகவும் செய்தியுண்டு. அசோகர் ஆட்சி தொடங்கிப் பதினான்கு ஆண்டுகளுக்குட்படாத ஐந்தாம் கல்வெட்டு ஒன்றில், தம் சகோதரர்களின் அந்தப்புரங்கள் தமக்கு மிகுந்த கவலையளிப்பதாக அசோகர் குறித்துள்ளார். இதை ஆதாரமாகக்கொண்டு சகோதரர்களைக் கொன்ற செய்தி தவறானது என வாதிடுவோரும் உண்டு. எனினும், அசோகரது முடி சூட்டுவிழா நெடுநாள்களுக்குப் பின்னரே நடைபெற்றதென்பதை நினைவு கொள்வதும் அவசியம். அரசிற்குப் போட்டியிருந்திருக்கவும் கூடும். அரசேற்றுப் பதின்மூன்று ஆண்டுகட்குப் பின்னும், சகோதரரின் அந்தப்புரங்கள் இருந்தன என்று ஐந்தாம் கல்வெட்டு ஐயமின்றிக் கூறியபோதிலும் சகோதரர் யாவரும் அக் காலத்தில் உயிருடனிருந்தனர் என அக் கல்வெட்டுக் கூறுவதற்கில்லை. பரம்பரைச் செய்தியையும் முற்றிலும் உண்மையெனக் கொள்ள இயலாதெனினும், மிகைப்படுத்திய கூற்றாகக்கொண்டாலும், ஆட்சிக்குப் போட்டியிருந்ததென்பதும், இதன் விளைவான போரில் மூத்த சகோதரன் மடிந்தானென்பதும் நம்பத்தகாத செய்திகளாகத் தோன்றவில்லை. உறவினருடன் நெடுங்காலத்திற்கு எதிர்நோக்கியிராத வகையில் நடந்துகொள்ள வேண்டிய நிலையை அசோகரது நான்காம் கல்வெட்டு எடுத்துரைக்கிறது. கலிங்கப்போரின் இரத்தப்பெருக்கு அசோகரது உள்ளத்தில் ஏக்கத்தையுண்டாக்கிக் கருணையைத் தட்டியெழுப்பிய பிறகே, உறவினரிடம் கொண்ட குரோத மனப்பான்மை அவரது உள்ளத்தைவிட்டு அகன்றது.

## அசோகர்
(Asoka)

ஏறக்குறைய கி. மு. 273இல் பிந்துசாரனது ஆட்சி முடிவடைந்திருக்கலாம் என்பது ஊகிக்கப்படுகிறது. சின்னாள்களுக்குப் பின்—பரம்பரைச் செய்தியின்படி நாலாண்டுகளுக்குப்பின்—அடுத்த மன்னர் பாடலிபுரத்தில் முடி சூட்டப்பட்டு, கி. மு. 232 அல்லது அதற்குச் சமீபமாக, முப்பத்தைந்து-முப்பத்தேழு ஆண்டுகள் அரசு செலுத்தினபின் மரணமடைந்தார். பிற்காலக் கல்வெட்டுகளும், 'மாஸ்கி-கல்வெட்டும்' (Maski-Edict), இலக்கியங்களும், புதிய மன்னரை அசோகர் எனக் குறிக்கின்றன. அவருடைய கல்வெட்டுகள் அவரைத் 'தேவானாம்பிய-பியதசி' (Devanampiya-Piadasi) என்று வழங்குகின்றன. அவர் முன்னோர்களும், வழிவந்தோரும், சமகாலத்தவரும், 'தேவானாம்பிய' அல்லது 'கடவுளால் நேசிக்கப்படுபவர்' என்னும் விருதை அவ

ரைப் போலச் சூடியிருந்தனர், 'பியதசி' (பிரியதரிசின்)அல்லது (பியதசனு) 'அன்பு கனிந்த பார்வையுடையவர்' என்னும் விருதை, அவர்தம் பாட்டனுன சந்திரகுப்தனும் சூடியிருந் தான். 'பியதசனு' என்னும் சொற்றொடர் இலக்கியத்திலும், புகழ்பெற்ற தட்சசீல அராமியக் கல்வெட்டிலும் காணப்படும். கல்வெட்டு, பாட்டனுன சந்திரகுப்தனைக் குறிக்காவிடினும், அசோகரது ஆட்சியைக் குறிக்கிறது.

அசோகரது ஆட்சியின் ஆரம்ப நிலையைக் குறித்து நாம் அறிந்தது மிகவும் குறைவு. முன்னோரின் போர் தொடுக்கும் முறையை அசோகரும் கையாண்டார். தட்சசீலத்தில் தோன்றிய கிளர்ச்சியைத் திறமையோடு அசோகர் அடக்கிய செய்தியை இலக்கியம் வாயிலாகவும், முடி சூடிய எட்டு ஆண்டு களுக்குப் பின் கலிங்கரை முரியடித்த செய்தியைக் கல்வெட்டு ஒன்றிலிருந்தும் அறிகிறோம். ஆப்கானிஸ்தானத்தின் பெரும்பகு தியையும், தமிழகம் நீங்கலாக இந்தியா முழுவதையுமுள்ளடக்கி யிருந்த மௌரியப் பேரரசு, கலிங்கத்தின் இணைப்பிற்குப் பின் முழுமை பெற்றது. காபூல் பள்ளத்தாக்கிலும், சுற்றுப்புறங்களி லுள்ள மலைப்பாங்கான பகுதியிலும் வாழும் யோன, காம்போஜ, காந்தார நாட்டிலிருந்து, கோதாவிரி-கிருஷ்ணு நதிகளின் வட்டமான பள்ளத்தாக்கிலுள்ள ஆந்திர நாடு வரையிலும், மைசூருக்கு வடக்கிலுள்ள 'இசைலா' (Isila), ஆஹரா (Ahara) மாவட்டம் வரையிலும், மேற்கில் சொபாரா (Sopara), கிர்னர் (Girnar) பகுதிகளிலிருந்து கிழக்கில் 'தௌலி', ஜௌகதா வரை யிலும், மௌரியப் பேரரசு பரவியிருந்தது. வடமேற்கு எல்லை யில் சிரிய நாட்டுக் கிரேக்கமன்னன் இரண்டாம் ஆண்டியோகசு (Antiochos-II) அரசெல்லையிலும் மேற்கு ஆசியாவிலும், தெற்கில் தமிழக மன்னர்களான சோழ, பாண்டிய, சத்திய புத்திர, கேரள புத்திர மன்னர்களின் ஆட்சியெல்லை வரையிலும், மௌ ரியப் பேரரசு பரவியிருந்தது. பரம்பரைச் செய்தியின் உண்மையை ஏற்போமாயின், காஷ்மீரம், நேப்பாளம் ஆகிய ஒதுக்குப்புறப் பள்ளத்தாக்குகளும்; 'புண்டரவர்த்தனம்' (Pundravardhana-வடக்கு வங்காளம்), 'சமதாதம்' (Samatata-கிழக்கு வங்காளம்) போன்ற ஏரிக்கரைகளும் இப் பேரரசில் அடங்கியிருக்க வேண்டுமெனக் கொள்ளலாம். ஹசாரா மாவட் டத்திலுள்ள 'மான்செஹ்ராவிலும்' (Mansehra in Hazara District), டேராடூன் மாவட்டத்திலுள்ள (Kalsi in Dehra Dun District), நேப்பாளத்தரையிலுள்ள 'ரும்மிந்தை' நிகாலி சாகர் என்னும் இடங்களிலும் (Nigali Sagar and Rummindei in the Nepalese Tarai), வடக்கு பீகாரிலுள்ள சம்பரான் மாவட்டத்தைச்

சார்ந்த 'ராம்பூர்வ' என்னுமிடத்தில் (Rampurva in the Champaran District of North Bihar) கண்டெடுக்கப்பட்டுள்ள அசோகரின் கல்வெட்டுகள், பரம்பரைச் செய்தியை உறுதிப்படுத்தும் வகை செய்கின்றன. அசோகரின் கல்வெட்டுகள் வங்காளத்தில் கண்டெடுக்கப்படவில்லை. வடக்கு வங்காளத்திலுள்ள 'மஹாஸ்தானத்'தில் (Mahasthan) கண்டெடுக்கப்பட்ட தொன்மையான 'பிராமி' வெட்டெழுத்தொன்று, புண்டர நகரம் (Pundra Nagar) என்னும் வளம் கொழித்த நகரத்தைக் குறிப்பிடுகிறது. இந் நகரம் கிறித்து சகாத்தத்திற்கு முன்பு தழைத்தோங்கியிருக்கக்கூடும்.

கலிங்கப்போர், அசோகரது வாழ்க்கையின் திருப்பு முனையாய் அமைந்து, இந்திய வரலாற்றிலும், கீழ்நாடுகள் முழுவதிலும் புரட்சிகரமான மாறுதலை விளைவித்தது. துன்பமும் இரத்தப் பெருக்கும் நிறைந்த போர்க்களம், அசோகரது உள்ளத்தை உருக்கி, துக்கமிகுதியையும் தவற்றை உணர்ந்து வருந்தும் நிலையையும் ஏற்படுத்திற்று. 'தர்ம' (ஒழுங்கு, பத்தி) விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் எண்ணமும் அசோகரது மனத்தில் நிறைந்தது; அயல் நாட்டுக் கொள்கையிலும் திடீரெனப் பெருமாறுதலை ஏற்படுத்திற்று. அவர், படுகொலையும் மக்களை நாடிழக்கச் செய்வதும் நிறைந்த இராணுவ நடவடிக்கை என்னும் கொடுந்தொழிலை உதறிக் களைந்து, 'தர்ம விஜயம்' (Dharma Vijaya) அல்லது 'அறத்திறல் வெற்றி' (Conquest by Piety) என்னும் புதியதோர் அன்பு நெறியை வில்லம்புகளுக்குப் பதிலாகத் தம் ஆயுதமாக உபயோகிக்கத் தொடங்கினர்.

பண்டைய இந்து அரசர்களைப்போல, தெய்வங்களிடமும் பிராமணர்களிடமும் அசோகருக்குப் பத்தியிருந்த தென்பது ஐயத்திற்கிடமின்றித் தெரியவரும். கல்ஹணரின் (Kalhana) காஷ்மீர ஏட்டை (Chronicle of Kashmir) நம்புவதானல், சிவனை அசோகர் விரும்பி வழிபட்டதாகக் கருதலாம். கலிங்கப் போருக்குப்பின், புத்த சமயக் கருத்துகள் அசோகரை அதிகமாய்க் கவர்ந்தன. அவர் புத்த சமயத்தைச் சாதாரணமாக வழிபடத் (Upasaka–உபாசகர்) தொடங்கினர். எனினும், அச் சமயத்தில் சில நாள்கள் வரை அவர் கருத்து வேருன்றவில்லை. சிறிது காலத்திற்குப்பின், அவர் அறிஞர் சிலரால் 'போத்கயா' (Bodh-Gaya) என்று வழங்கப்படும் 'சம்போதி' (Sambodhi) க்குச் சென்று, அங்குள்ள புத்த சங்கத்தினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். புனித புத்தருக்கு விவேகமளித்த அப்

புண்ணிய பூமியின் தொடர்பினாலும், புத்தர் வழி நிற்கும் சீலர்களின் சேர்க்கையாலும், அசோகருக்குச் சமயத்திலும் அறநெறியிலும் உண்டான பத்தி நன்ருக உரமுற்று வளர்ந்தது. அசோகர் முன்னோர்கள் கடைப்பிடித்த 'உல்லாசப் பிரயாணங்களை' (விஹார யாத்திரை) வெறுத்து, புத்தசமய இலக்கியங்களை ஆழ்ந்து படித்து உணர்ந்து, 'அறநெறி பரப்பும் நோக்கமுள்ள தல யாத்திரைகளை' (தர்ம-யாத்திரைகள்) மேற்கொண்டார்; இத்தகைய யாத்திரைகளின் மூலம், பல பகுதிகளில் வாழ்ந்த மக்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு, அறநெறியையும், பத்தி மார்க்கத்தையும் (Morality and piety) அவர்களுக்கு எடுத்துரைத்து, அவற்றில் அவர்களுக்கிருந்த ஐயப்பாடுகளையும் கேட்டறிந்தார். யாத்திரைகள் அளித்த விளைவுகளைக் கண்டு அரசகுலப் பிரசாரகர் களிப்பெய்தினர். வழக்கிடுவோர், பண்டிதர், போர் வீரர், திறமை மிக்க வேடுவர் கூட்டத்தில் அரசரைக் காண்பது அரிதாயிற்று. அறநெறியை எடுத்தோதும் 'ஆண்டவர் நேசரை' (Beloved of the Gods) பாமரரிடையே காண்பது எளிதாயிருந்தது. அவர், 'சுவர்க்கமென்பது மறையோர்களின் தனியுரிமையன்று,' என மக்களுக்கு எடுத்துரைத்தார். தொன்மை வாய்ந்த ஒழுக்க நெறிகளை ஊக்கத்துடன் கடைப்பிடிப்பதால், பிறப்பாலும் பிற சூழ்நிலைகளாலும் தாழ்ந்தவனும் 'பேரின்ப வீட்டை' அடையலாம் எனக் கூறினர். அவர் 256 இரவுகளைச் சுற்றுப்பிரயாணத்தில் கழித்தபின், தெய்வத் தொடர்பற்றிருந்த இந்திய மக்களுக்கும், அதையொட்டி அமைந்திருந்த பகுதி (ஜம்பூத்வீபம்) வாழ் மக்களுக்கும், தெய்வீகத் தொடர்பு ஏற்பட்டதென மனவமைதி பெற்ருர். பத்தாண்டுகளுக்கொருமுறை மன்னரின் 'தர்மயாத்திரைகள்' நடைபெற்று வந்தன. முடி சூடிய பத்தாண்டுகளுக்குப்பின் ஒருமுறையும், இருபதாண்டுகளுக்குப் பிறகு மற்ருெரு முறையும் இத்தகைய பிரயாணங்களை அவர் மேற்கொண்டார் என்பது தெரியவருகிறது. அவர் இரண்டாவது பிரயாணத்தின்போது, சாக்கிய முனிவரின் பிறப்பிடத்திற்கும் அவர்தம் முன்னோரின் பிறப்பிடத்திற்கும் விஜயம் செய்து, இப்புண்ணிய பூமிகளில் பணிந்து வணங்கினர்.

பரந்த பேரரசின் தொலைப்பகுதிகளில் வாழ்ந்த குடிமக்கள் யாவருக்கும் 'புத்த தர்மம்' என்னும் அறநெறி உரித்தாக வேண்டுமென விரும்பிய போதிலும், அவ்வாறு நடைபெறச் செய்வது இயலாதென்பதையும் அசோகர் உணர்ந்தார்; முடியேற்ற பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் அல்லது முதல் தர்ம விஜயம் முடிந்த இரண்டு ஆண்டுகளுக்குப்பின், ரஜுகர்(Rajukas -மாவட்ட நீதிபதிகள் அல்லது சர்வேஅதிகாரிகளெனக்கொள்ளலாம்), 'பிரதேசிகர்' (Pradesikas-மாகாணங்களில் காவலராயும் வரி வசூலிப்பவராயும் பணியாற்றி வந்தோர்), 'யுக்தர்கள்'

(Yuktas-குமாஸ்தாக்களும், செயலாளரும்) போன்ற அரசாங்க அலுவலர்களையும், அசோகர் பயன்படுத்தினர். அறநெறிகளடங்கிய புதுப்பிரதிகளைத் தயாரிக்குமாறு அவ்வலுவலர்களுக்கு உத்தரவிட்டு, அவற்றை வெளியிடுவதோடு, ஐந்தாண்டுகட்கு ஒரு முறை பிரயாணங்களை மேற்கொண்டு, நல்லொழுக்கப் போதனைகளில் ஈடுபட வேண்டுமென்றும், அம்மன்னர் கட்டளையிட்டார்; இவற்றுடன் அவர்களுக்கு இயற்கையாக உரிய அலுவல்களையும் கவனித்து வருமாறும் பணித்தார்; மீண்டும் எழுதப்பட்ட விதிகளையும் அறிக்கைகளையும், கற்பாறைகளிலும் கற்றூண்களிலும் செதுக்கிவைக்குமாறு உத்தரவிட்டார். புதிய 'அறநெறித் தூண்களும்' (தர்மஸ்தம்பங்கள்) எழுப்பப்பட்டன. மன்னரின் இப்புதிய ஆணைகளை நிறைவேற்றுவது அலுவலரின் சத்திக்கு மீறியதெனத் தென்பட்டது. ஓராண்டு காலத்திற்குள் சமயப் பணிக்கெனத் தனிப்பட்ட அலுவலர் சிலரை நியமிக்க வேண்டிய தேவையையும் அசோகர் உணர்ந்தார். இதற்கிணங்க, 'தர்ம மகாமாத்திரர்' அல்லது சமயப் பொறுப்புள்ள உயரிய அலுவலர் அமர்த்தப்பட்டனர். பேரரசின் தலைநகரிலும், எல்லைப்புறங்களிலும், மலைச்சாதியினர் வாழ்ந்த இடங்களிலும், குறிப்பாக மேற்கு, வடமேற்குப் பகுதிகளிலும் இவ்வலுவலர் நியமிக்கப்பட்டனர். தோட்டி முதல் தொண்டைமான் வரையிலும், இல்லறத்தான் முதல் துறவி வரையிலும், வாழ்க்கைத் துறைகளில் பலவற்றைக் கையாண்டவர்களையும் சந்தித்து, அவர்தம் செய்தொழிலிலும் சமயக் கருத்துகளிலும் இவ்வலுவலர் அக்கறை செலுத்தத் தொடங்கினர். இவ்வலுவலர் மேற்கொள்ளும் முயற்சிகளையும், அதற்கு மக்களிடம் கிட்டிவரும் ஆதரவையும் அவ்வப்போது குறித்து மன்னருக்குச் செய்தி அறிவிப்போரும் நியமிக்கப்பட்டனர். குறிப்பாகக் கிராமிய மக்களின் பொது நலனும், சீலமும், 'ரஜுகர்' என்னும் பேரரசரின் பேராள்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. பேரரசு எல்லைக்கப்பாலும் அறநெறியைப் பரப்புவதற்கெனத் தூதுவர்கள், மற்ற மன்னர்களின் அவைகளுக்கனுப்பப்பட்டார்கள்.

அடங்காப்பிடாரிகளான மலைச்சாதியினரையும், அல்லற்படுத்தும் அண்டைப் பகுதியினரையும், ஆயுத வலிமையினால் துன்புறுத்தி அடக்கியாளும் பழங்கால முறைகளைக் கைவிட்டு, சமாதானத்தையும், சகிப்புத் தன்மையையும் அடிப்படைகளாகக் கொண்ட 'சீலத்தினால் வெற்றி' (Conquest by Morality) என்னும் புதிய கொள்கை உருவாக்கப்பட்டது. 'போர் முரசொலியின்' (பேரிகோஷம்-Bherighosha) ஆரவாரம் குறைந்து, அறநெறியின் மெல்லோசை (தர்ம கோஷம்-Dharma ghosha) தொடங்கிற்று. தாம் மட்டிலும் இவ் வறவழி நின்றதோடு அமையாது, மக்களையும் சந்ததியார்களையும் நாடு பிடிக்கும் ஆசையை வெறுத்தொதுக்குமாறும், கருணை காட்டுவதிலும் அன்புத் தண்டனைகளிலும் ஆவல் கொள்ளுமாறும் ஊக்குவித்து, சீலத்தால் அடையும்

வெற்றியொன்றே நிலையானதென்றும் அவர்களுக்கு அறிவுறுத்தினார். பிம்பிசாரனின் ஆட்சிக்காலத்திலிருந்து மகதத்தை ஆண்ட மன்னர்களின் மண்ணாசைக் கொள்கை முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டது. 'தர்ம-விஜய'க் கோட்பாடு, அதிசயிக்கத்தக்கபலனளித்ததென்றும், இதனுதவியால் அண்டையிலுள்ள கிரேக்கரையும், தமிழரையும், சிங்கள நாட்டினரையும் ஆன்மிகத்துறையில் தாம் கவர்ந்து வெற்றி கண்டதாகவும் அசோகர் அறிவித்துள்ளார். சம காலத்தில் கிரேக்க நாட்டையாண்ட மன்னர் பட்டியல் பின்வருமாறு: (ஆண்டியோகசு (Antiochos II-சிரிய நாட்டுத் தியோஸ் கி. மு. 261–246). (தாலமி Ptolemy-II, எகிப்து நாட்டு பிலடெல்பசு கி. மு. 285—247), ஆண்டிகோனசு (மாசிடோனியக் கொனேத்தசு கி.மு.276-239), மகசு (சைரீன் நாட்டு, C. கி. மு. 300—258), அலெக்ஸாந்தர் (எபிரஸ் நாட்டு கி. மு. 272—254), அல்லது சிலர் கருத்திற்கிணங்க கோரிந்த நாட்டு C. கி. மு. 252—241), இவ்வரசர் சிலருக்குச் சொந்தமான பகுதிகள் சிலவற்றில் அறச்சாலைகளை அசோகர் ஏற்படுத்தினார். மேற்கு ஆசியாவில் புத்த சமயம் பரவி வளர்ந்து, 'மனிக்கியர்கள்' (Manichaeans) போன்ற பிற்காலச் சமயப் பிரிவினர் ஆட்கொண்டதென்பதில் ஐயமில்லை. துன்புறுத்தாமைக் கொள்கை கிரேக்கரை வயப்படுத்தவில்லை. செய்த தவற்றை நினைந்து வருந்துவாராயினும், தண்டனையளிக்கும் உரிமை பெற்றிருந்த அசோகரது கண்டிப்பான ஆட்சி மறைந்ததும், காபூல் பள்ளத்தாக்கிலும், பஞ்சாபு கங்கை வெளிகளிலும் மீண்டும் கிரேக்கர் கூடிப் படையெடுத்து இம் மாகாணங்கள் யாவற்றையும் குழப்பத்திலாழ்த்தினர்.

தெற்குத் திசையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மிக்க பலனளித்தன. சிங்கள நாட்டிற்குச் சென்ற தூது கோஷ்டிக்கு அசோகரின் மகனாகவோ அல்லது சகோதரனாகவோ கருதப்படும் மகேந்திரன் தலைமை தாங்கினான் எனப் பரம்பரைச் செய்திகள் வழங்கி வருகின்றன. தீபகற்பப் பேரரசையாண்டுவந்த 'தேவனாம்பியதிசர்' (Devanampya Tisa) சமய மாறுதலேற்றார். அவருடைய குடிமக்களும் அவரைப் பின்பற்றினார்கள். சிங்கள நாட்டுப் பரம்பரைச் செய்திகள், சுவர்ண பூமிக்கும் (Suvarna-bhumi) சமயத் தூதுவர் அனுப்பப்பட்டனர் எனக் கூறுகின்றன. சுவர்ண பூமி என்னும் நிலப்பகுதியில், பர்மாவின் கீழ்ப்பகுதியும் சுமத்திராவும், அதையடுத்துள்ள சிறு தீவுகளும் அடங்குகின்றன.

## அசோகரின் அறநெறி
## (Asoka's Dharma)

கல்வெட்டொன்றில், புத்தரிடத்திலும், தர்மத்திலும் (புத்தரின் கொள்கைகள்), சங்கத்திலும் (பிட்சுகளின் கூட்டம்) தமக்குள்ள நம்பிக்கையை அசோகர் எடுத்துரைக்கிறார்; புத்தரை 'பகவத்' என வழங்குகிறார். இச்சொல், இந்துவால் மனத்திற்கினியானைக் குறிப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. அசோகர் புத்தபிரான் அவதரித்த இடத்திற்கும், தெளிவு பெற்ற இடத்திற்கும் யாத்திரைகள் சென்று, முற்கூறப்பட்ட இடத்தில் பிரார்த்தனை செலுத்தினார்; புத்தபிரான் திருவாய் மலர்ந்தருளிய சொற்கள் யாவும் புனிதமானவை என அறிவித்தார். புத்தரின் கொள்கைகளை விளக்குவதில் மிகுந்த கவனம் செலுத்தி, அக்கொள்கைகள் நிலை பெற வேண்டுமென்றும் எண்ணினார். மத மாற்றத்திற்கு ஓராண்டிற்குப்பின் பௌத்த சோதரரின் சங்கத்திற்கு அவர் செய்த விஜயம், அவரது உள்ளத்தில் நீங்கா இடம் பெற்று, சங்கத்துடன் அவர் நெருங்கிய தொடர்பு கொள்ளும் வகை செய்தது. அவர் கொள்கைகளை உண்மையாக விளக்கம் செய்ய வேண்டிய தேவையைச் சமயக்குரவருக்கு நன்கு வற்புறுத்தினார்; சோதரரின் உதவிக்கென அலுவலர்களையும் நியமித்தார்; சமய சங்கங்களின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கென அரும்பாடு பட்டுப் பிளவு மனப்பான்மையைக் களைவதற்கும் முயன்றார். நீதி நூல்களைத் தொகுப்பதற்கென, அசோகரது ஆட்சியில் அவைகள் கூடின என்றும் பரம்பரைச் செய்திகள் உண்டு. புத்த சமய 'இலக்கியங்களிலும்' சங்க ஒழுங்கு முறைகளிலும் அசோகர் மிக்க கவனம் செலுத்தி வந்தார் என்பதை விளக்கும் சமகாலச் சான்றுகள் பல உண்டு.

புத்த சமயத்தில் பற்று மிக்க கொண்டிருந்த போதிலும் பிற சமயங்களை அசோகர் வெறுக்கவில்லை. நற்செய்கைக்கு அடிப்படையென அவர் கருதிவந்த கொள்கைக்குப் புறம்பான பழக்கங்களையும், நிறுவனங்களையும் அவர் அழிக்க முற்பட்ட செய்தி உண்மையென்பது தெரியவரும். எல்லாச் சமயங்களின் சாரமும் 'நற்பண்பு' என அசோகர் முழுதும் நம்பினார். தெய்வங்களையும் பிராமணரையும் அயல் சமயத்தினரையும் அவர் தமக்கு நண்பர்களாகவே மதித்து வந்தார். 'தேவர்களின் நேசர்' (Beloved of Devas) என்றும் தம்மை அவர் கூறிக்கொள்வதுண்டு. பிராமணரை அவமதிக்கும் போக்கைக் கண்டித்து, அவர்களுக்கும் கோசாலரின் சீடரான ஆஜீவகருக்கும் தானதருமங்கள் வழங்கி வந்தார். நிர்க்கிரந்தர் (Nirgranthas) என்னும் சமணர் உட்பட,

நாட்டிலுள்ள சமயப் பிரிவினர் பலரிடமும் பரிவுகாட்ட வேண்டு மெனத் தர்ம மகாமாத்திரருக்குப் பணித்தார். கூட்டம் (சமவாயம்) கூடுவதையும் நா காப்பதையும் (வாசோகுதி) குறிப் பாக வற்புறுத்தி, மற்றப் பிரிவினரைக் கிலேசமுறச் செய்யும் சுடுசொற்களின் தீமையையும் விளக்கி, மக்களை எச்சரித்தார்.

புத்த போதனையின் உண்மையறிந்தும், புத்த தலங்களில் வழிபடுவதால் ஏற்படும் நற்பலனை உணர்ந்தும், புத்த சமய 'மும் மணிகளில்' (Buddhist trinity) நம்பிக்கை தெரிவிப்பதன் அவசி யத்தையும், புத்த சங்கங்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு அவற்றின் ஒற்றுமைக்குப் பாடுபடவேண்டிய அவசியத்தையும் உணர்ந்தும், அசோகர், தம் கருத்துகளைப் புறச்சமயத்தினரும் பின்பற்றவேண்டுமென வலியுறுத்தவில்லை. 'சம்போதி' அல்லது திருவாணத்தைப் பரிசாக அவர் மக்களுக்கு எடுத்துரைக்க வில்லை. 'சுவர்க்கத்தை'யும் தேவருடன் இரண்டறக் கலப்பதை யுமே அவர் இறுதிப் பரிசெனக் கூறி வந்தார். உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் வேற்றுமையின்றிச் சுவர்க்க பதவி அடையலாம். ஒரு பிரிவினரின் கோட்பாடுகளைப் பின்பற்றுவதாலோ, அல்லது மக்களின் ஆதரவு பெற்ற சடங்கு முறைகளை (மங்களப்) பின் பற்றுவதில் ஆர்வம் கொள்வதாலோ அடைய இயலாத சுவர்க்கப் பதவியைப் பின்வரும் தொன்மை வாய்ந்த (பொராணபகிக்-Porana Pakiti) கொள்கையைக் கடைப்பிடிப்ப தால் அடையலாகும். அக் கொள்கை வருமாறு: 'பெற்றோருக் கும் முதியோருக்கும் கீழ்ப்படிதல்; விலங்குகளிடம் உறுதியான அன்பு கொள்ளல்; உண்மை பேசுதல் ஆகிய ஒழுக்க முறைக் கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும்.

'இதைப் போலவே மாணுக்கன் ஆசிரியரிடம் பணிவாக நடத்தல் வேண்டும்; உறவினரிடம் நன்முறையில் நடந்து கொள்ளுவதும் அவசியம்.'

கற்றூண் ஆணைகளில் குறிக்கப்பட்டிருப்பதாவது: 'ஒழுக்க முறையில் பற்றும், கவனமான ஆராய்ச்சியும், மறுப்பின்றிக் கீழ்ப்படிதலும், பாவத்திற்கு அஞ்சுவதும் பேருக்கமும் இன்றி இகவுலகிலும் பரவுலகிலும் மகிழ்வு எய்துவது மிகக் கடினம்.'

ஆன்ம சோதனையையும் கற்றூண் கல்வெட்டுகள் புகழ்ந்து பேசுகின்றன. வாழ்நாள்களின் இறுதியில் தியானமும், சிந் தித்தலும் ஒழுக்க முறைகளைவிட மிக்க பலனளிக்க வல்லவை என்பதை அசோகர் உணர்ந்திருக்க வேண்டும். ஒழுக்க முறை

களின் தேவையை ஆட்சி தொடங்கிய காலங்களில் அவர் மிகவும் உணர்ந்திருந்தார் என்பதை அறிகிறோம்.

ஒழுக்க முறையை மக்கள் பின்பற்றுவதற்குத் தாம் ஓர் எடுத்துக்காட்டாய் இருக்கவேண்டுமென்பதை அசோகர் உணர்ந்தார்; அன்பு கொள்ளல், தாராள மனப்பான்மை, சகிப்புத்தன்மை ஆகிய பண்புகளைத் தமக்குள்ளே வளர்த்துக் கொண்டார்; விலங்கினங்களைக் கொல்வதையும் வதைப்பதையும் அறவே நீக்கியும், தடை செய்தும், மக்களுக்கும் விலங்குகளுக்கும் குணமளிக்க வல்ல வைத்தியசாலைகளை அமைத்தும் அன்பென்னும் பண்பை வளர்த்துக்கொண்டார். வேட்டையாடுதலைக் கைவிட்டதுடன் அரசமாளிகையில் சமையலறையில் விலங்குகள் கொல்லப்படுவதையும் நிறுத்தினார். சடங்குகளின் நிமித்தம் விலங்குகளைக் கொன்று பலியிடும்வழக்கத்தையும் நீக்கி உயிர்ச்சேதத்தையும் ஒழுங்கின்மை வளர்ச்சியையும் கட்டுப்படுத்துவதன் பொருட்டு, திருவிழாக் காலங்களில் கூட்டங்கூடுவதையும் (சமாஜம்) தடை செய்தார்; விலங்கினங்களுக்கும் மனிதருக்கும் பயனளிக்க வல்ல மருந்து மூலிகைகளைப் பயிராக்கி வளர்த்தார். நீர்த்தேக்கங்களைக் கட்டியும், மரங்களையும் தோப்புகளையும் உண்டாக்கியும் அசோகரின் அலுவலர்கள் வழிப்போக்கர்களுக்கு வசதியளித்து வந்தார்கள். எல்லைப்புற மாகாணங்களில் கொடுமைகள் நேராவண்ணம் தடுப்பதற்குத் தலைநகரிலிருந்து தனிப்பட்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். சிரமணருக்கும் (Sramanas) பிராமணர்களுக்கும் பொருள் தானம் செய்வதற்கெனப் புனித யாத்திரைகள் மேற்கொள்ளப்பட்டன. இப் புனித யாத்திரைகளின்போது தாராள மனப்பாங்கும் சகிப்புத் தன்மையும் காணப்பட்டன. பௌத்தரல்லாத சமயப்பிரிவினருக்கும் வசிப்பதற்கான குகைகள் (பள்ளிகள்) தானமாக வழங்கப்பட்டன. எல்லாச் சமயப் பிரிவினருக்கும் நன்கொடை வழங்குவதற்கெனத் தனிப்பட்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். கொடை வழங்கும் இப் பழக்கத்தைக் கைக்கொள்ளுமாறு அரசிகளும் மன்னர்களும் ஊக்குவிக்கப்பட்டார்கள். அரசிகளுள் ஒருத்தியான 'கருவகி' (Karuvaki) என்பாள் மன்னருடன் ஒத்துழைத்தாள் என்பது தெரியவருகிறது.

'பள்ளிகளைப்' (Cave-dwellings) பற்றிய குறிப்பு மன்னரின் மற்றுமொரு சாதனையை வெளிப்படுத்துகிறது. பல காலஞ் சென்று கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் பாடலிபுரத்திற்கு விஜயம்

செய்த பிரயாணிகள், கட்டடக்கலையின் கம்பீரத்தையும் அசோகரது முன்னேற்றத்தையும் கண்டு வியப்பெய்தினார்கள். கோவில்கள், மடாலயங்கள், பல நினைவுச்சின்னங்கள் ஆகியவைகளுடன் அழகான மாளிகையொன்றையும் அவர் எழுப்பினார் எனப் பரம்பரைச் செய்திகள் அறிவிக்கின்றன. அவர் சாக்கிய முனிவரின் முன்னோனெனக் கருதப்படும் கொனகமானனின் ஸ்தூபி (Stupa of Konakamana) ஒன்றைப் பெரிதாக்கினார். அறநெறிகளைத் தாங்கிய கற்றூண்களையும் (தர்ம–ஸ்தம்பங்கள) மெருகிடப்பட்ட அக் கற்றூண்களின் சிறப்பையும், அவை தாங்கி நிற்கும் சிற்பங்களின் கலையழகையும் இக்காலக் கலை விமரிசகர்கள் மிகவும் புகழ்ந்துரைக்கின்றார்கள்.

## அசோகரின் குணநலன்
(Asoka's Character)

இந்திய வரலாற்றில் மிகச்சிறந்து விளங்கும் பெரியார்களுள் அசோகர் ஒருவர்; குடிமக்களைத் தம் புதல்வர்களெனவே எண்ணி ஆன்மிகத்துறையிலும் ஒழுக்கத்திலும் அவர்கள் தலை சிறந்துவிளங்கவேண்டுமெனக் குன்றாத ஆர்வத்துடன் சலியாது உழைத்தார். அவரது ஊக்கத்தையும், திறமையையும், நிருவாக அறிவையும் சந்தேகிப்பதற்கில்லை. பரந்ததும் மக்கள் நிறைந்ததுமான பேரரசை ஆண்டுவந்த வலிமை பொருந்திய எதிரியொருவனுடன் திறமையோடு போரிட்டு அழித்து வெற்றி கண்ட அவரது அரசியலறிவு போற்றத்தக்கது. சின்னாள்களுக்குப்பின், மூவுலகையும் ஆன்மிகத்துறையில் வெற்றிகாணும் நோக்கத்துடன் தூதரையனுப்பி, கங்கை வெளியில் நிலவிய சமயப் பிரிவொன்றை உலகமெங்கும் பரப்ப வழிவகுத்தார். ஒற்றுமை, சகிப்புத்தன்மை, தீங்கிழையாமை ஆகிய பண்புகளைக் கடைப் பிடித்தும், பிறருக்கு எடுத்துரைத்தும் அசோகர் பணியாற்றினார். பேரரசின் பெருமன்னரெனினும், வெற்றி பெற்றும் போரை அறவே வெறுத்தும், பொறுமையும் சாந்தமும் நிறைந்த அறக் கொள்கையையும் பின்பற்றினார். அசோகரது நேர்மைக்கும் சத்தியத்திற்கும், அவருடைய வள்ளன்மையையும் சகிப்புத் தன்மையையுமே ஈடாகக் கூறலாம். திக்கற்ற அரசின் மக்களுக்குத் தாம் இழைத்த கொடிய துன்பத்தை அவர் நேர்மையுடனும், உண்மையுடனும் வருணித்துள்ளார். மௌரிய மன்னரின் சீலமும் ஒழுக்கமும் அவர் பின்வந்தோர்க்கு உயரிய வழிகாட்டிகளாயமைந்தன. அரசியல் அலுவலர்களைச் சமயப் பிரசாரகர்களாக அமர்த்தியதும், வேட்டையாடுவதையும் ஆயுதப் பயிற்சியையும் நிறுத்தியதும், வடமேற்கு தெற்கு மாகாணங்

களிலுள்ள மூர்க்கரான மலைச்சாதியினரைச் சமயப்பிரசாரகரின் மென்கரங்களில் ஒப்புவித்ததும், போர் முரசொலியை அறவே நிறுத்திச் சமயவாதிகளின் சாந்தக் குரலை நாடெங்கும் பரப்பியதும், பேரரசு கொள்கையைக் கடைப்பிடித்தொழுகிய அசோகரின் முன்னோர்களின் கொள்கைக்கு முற்றிலும் முரணான துணிகரமான அருஞ்செயலேயாகும். செல்யூக்கஸ் நிகேட்டாரின் படைகளைப் புறமுதுகிட்டோடச் செய்த மௌரியப் படை, அசோகர் இறந்த சில ஆண்டுகளுக்குப் பின் பாக்திரியச் சிற்றரசர்களின் தாக்குதல்களிலிருந்து நாட்டைக் காப்பாற்றும் வலிமையிழந்து நின்றதில் வியப்பேதுமில்லை.

## பிற்கால மௌரியப் பேரரசர்கள்
## (The Later Imperial Mauryas)

புராணச் செய்தியை உண்மையெனக் கொள்வோமாயின், அசோகரையடுத்து அவர் மகன் குணாளன் அரசு கட்டிலேறினான். காஷ்மீர ஏடுகள் குணாளன் பெயரைக் குறிப்பதில்லை. அப் பள்ளத்தாக்கில் 'ஜலௌகன்' (Jalauka) என்பவன் அசோகருக்குப் பின் அரசு செலுத்தினான் என அவை குறிக்கின்றன. அசோகருக்குப் பின் மௌரிய அரசு சிதைந்து உள்நாட்டுப் பகுதியை மக்களுள் ஒருவனும், வடமேற்குப் பகுதியைப் பெற்றுச் சுதந்தரமாக மற்றொருவனும் ஆட்சி செலுத்தியிருக்கக் கூடும். கல்வெட்டுகளில் காணப்படும் 'திவாரா' (Tivara) என்னும் மகனுக்குச் சிதைந்த பேரரசு பகுதிகளில் பங்கு கிட்டவில்லை என எண்ணலாம். குணாளனையடுத்து அவன் புதல்வர்கள் அரசெய்தினார்கள். அவர்களுள் ஒருவனான் 'பந்துபாலிதன்' (Bandhupalita) என்பவனைப் புராணங்கள் குறிக்கின்றன. 'சம்பதி' அல்லது 'சம்பிரதி' (Sampadi or Sampradi) என்னும் மற்றொருவனைப்பற்றிய குறிப்புகள் பண்டைய பிராமண, சமண, பௌத்த இலக்கியங்கள் யாவற்றிலும் காணப்படுகின்றன. சமண இலக்கியங்கள் அவனைப் பாடலிபுத்திர உஜ்ஜயினி நாட்டு மன்னன் என்றும், சமணத்தைப் போற்றும் வள்ளலென்றும் குறிப்பிடுகின்றன. 'பாகவத புராணம்' நீங்கலாகப் பிற புராணங்கள் சம்பிரதியைக் குணாளனுக்கு மகனெனக் கூறுவதில்லை. குணாளனுக்கும் சம்பிரதிக்கும் இடையிலுள்ள அரசர் பலருள் 'தசரதன்' என்பவன் வரலாற்றுச் சிறப்புப் பெற்று விளங்குகிறான். அசோகரையடுத்த அவன் மகதத்தை ஆண்டுவந்தான். பீகாரிலுள்ள நாகார்ச்சுன குன்றத்தில் அவன் விட்டுச்சென்ற மூன்று கல்வெட்டுக் குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் அவன் 'மதிப்புக்குரிய ஆஜீவகர்களுக்கு'ப் பல சமணப் பள்ளிகள் எடுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தசரதனுக்கும் சம்பிரதிக்கும் பிறகு 'சாலிசுகன்' (Salisuka) என்பவன் அரசெய்தினன் எனக் கூறப்படுகிறது. 'கார்கி சங்கிதை' (Gargi Samhita) என்னும் வானநூல் ஒன்று அவனைக் கொடியவன் எனவும், சண்டையிடும் மனப்பாங்குள்ளவனெனவும் குறிக்கிறது. தூய்மையைப்பற்றி வாய்ப்பந்தலிடும் நேர்மையற்ற அம் மன்னன், மக்களை இரக்கமின்றித் துன்புறுத்தினன். தேவவர்மன், சதம்தானசு, பிருஹத்ரதன் (Devavarman, Satamdhanus, Brihadratha) ஆகியோர் சாலிசுகனைப் பின்தொடர்ந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. மரபின் இறுதி மன்னன் 'பிருஹத்ரதன்', புஷ்யமித்திரன் என்ற படைத்தலைவனால் கொல்லப்பட்டான். அப் படைத்தலைவன் தொடங்கி வைத்த புதிய வமிசத்தைப் புராணங்கள் 'சுங்க குலம்' என வழங்குகின்றன.

பிற்கால மௌரியராட்சியில், பேரரசு சிறுகச்சிறுகக் குறுகி வந்தது. காஷ்மீரம் கைவிட்டுப்போனதையும், பீராரை இழந்ததையும் காஷ்மீர் வரலாற்று அறிஞரான கல்ஹணரும் (Kalhana) வடமொழி நாடகமான 'மாளவிகாக்கினிமித்திரம்' இயற்றிய காளிதாசரும் குறிப்பிடுவர். கி.மு. 3 ஆம் நூற்றாண்டின் இறுதியில் காபூல் பள்ளத்தாக்கை, 'சுபாகசேனன்' என்னும் மன்னன் ஆண்டுவந்தான். 'இந்தியரின் மன்னன்' என்ற விருதை அவன் சூடியிருந்ததால், சிந்து சமவெளியும் அந் நாட்டெல்லைக்குள் அடங்கியிருக்கக்கூடும். பிற்கால மௌரியர் பட்டியலில் அவனது பெயர் காணப்படாமையால், மௌரியப் பேரரசின் சிதைவிற்குப் பின் வடமேற்கு எல்லையில் தலைதூக்கிய அரசகுலமொன்றைச் சார்ந்தவனென அவனைக் கருதலாம். மௌரிய அரசகுலத்துடன் தொடர்பு கொண்டவனாயினும், பாடலிபுத்திரத்தை ஆண்டுவந்த மன்னருடன் கிட்டிய உறவு அவனுக்கில்லை. கிரேக்க வரலாற்று ஆசிரியர் அவனுக்களிக்கும் கௌரவத்தை எண்ணும்போது, அவன் சுதந்தர மன்னனாய் இருந்திருக்கக் கூடுமேயன்றித் தட்சசீலக் கவர்னரென மட்டும் அவனைக் கருதுவது பொருந்தாது. சிதைவுறும் நிலையிலிருந்த மௌரியப் பேரரசின் சூழ்நிலை அன்னியர் படையெடுப்பிற்கு அழைப்பு விடுத்தது. சந்திரகுப்த மௌரியனின் சமகாலத்தவனான முதல் செல்யூக்கஸ் நிகேட்டாரின் கொள்ளுப்பெயரனும், அசோகரின் சமகாலத்தவனான இரண்டாம் ஆன்டியோகசு - தியோசின் பெயரனுமான மாபெருமூன்றும் ஆன்டியோகசு (Antiochos III, the Great, கி. மு. 223-187) இந்திய நாட்டின்மீது படையெடுத்து, சுபாகசேனனிடமிருந்து பல யானைகளைப் பெற்றான் எனப் 'பாலிபியுசு' (Polybius) என்னும் வரலாற்று ஆசிரியர் குறிப்பர். 'கார்கி

சங்கிதை'ச் செய்தியை ஏற்போமாயின், கிரேக்கப்படை பாடலி புத்திரத்தையும் தாக்கிற்று என எண்ணுவதற்கிடமுண்டு.

அசோக மௌரியர் மேற்கொண்ட புதிய திட்டங்களால், பிராமணர்கள் தங்கள் செல்வாக்கை இழக்க நேரிட்டதென்றும், அவர்கள் ஒன்றுகூடிச் செய்த கிளர்ச்சி, மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பெரிதும் காரணமாயிற்று என்றும் அறிஞர் சிலர் கருதுவர். இதற்குமாறாக, பிராமணரது நலனில் அவர் மிகுந்த அக்கறைகொண்டிருந்ததும், இக் குலத்தவருக்கும், பௌத்த சமண ஆஜீவகர்களுக்கும் அசோகர் பரிவு காட்டி நன்கொடைகள் வழங்கி வந்ததும் நாமறிந்த செய்திகள். 'கல்ஹணர்' என்னும் பிராமண வரலாற்றாசிரியர் அசோகரது பத்தியையும் வள்ளன்மையையும் புகழ்ந்து பேசுவதோடு, அசோகரின் புதல்வர்களுள் ஒருவனுக்கும், இந்துப்பிராமணர்களுக்குமிடையிலுள்ள நட்புரிமைகளையும் குறிப்பிடுகிறார். 'பாணர்' (Bana) என்னும் பிராமண நூலாசிரியர், மௌரிய குல இறுதி மன்னனான 'பிருஹத்ரதனை' வீழ்த்திய படைத்தலைவனை 'அனாரியன்' (Anarya—இழிவானவன்—ஆரியனல்லாதவன்) எனக் குறிப்பர்; புராண நூலாசிரியர் சிலர் மௌரியரை 'அசுரர்' (அரக்கர்) என்றும் கூறுவர். குறிப்பாக, 'கார்கி சங்கிதை' என்னும் நூல் சாலிசுகளின் கொடுங்கோன்மையைச் சித்திரிக்கிறது. பிராமணர் மௌரியரால் துன்புறுத்தப்பட்டனர் என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் இல்லை. பிராமணனொருவன் இறுதி மௌரியனிடம் படைத்தலைவனாய் இருந்தான் என்ற செய்தியும் குறிப்பிடத் தக்கது. 'அசுரர், அரக்கர், சுரத்வேஷி] அல்லது கடவுளரின் விரோதி' ஆகிய அடைமொழிகள் மௌரியருக்கு மட்டுமன்றி, புத்தரால் ஏளனம் செய்யப்பட்ட சமயத்தவர் யாவருக்கும் உபயோகிக்கப்பட்ட செய்தியும் கவனித்தற்குரியது. புராணங்கள் அறிவிக்கும் இக் கருத்திற்குச் சமகாலக் கல்வெட்டுச் செய்திகள், முற்றிலும் முரணாய்த் தென்படுகின்றன. இக் கல்வெட்டுகள் அசோகரையும், பின் வந்தவர்களுள் கல்வெட்டொன்றை விடுத்துச் சென்ற அவர் மகன் ஒருவனையும், 'தேவனாம்பிரிய' அல்லது 'கடவுளரின் நேசன்' (எதிரி அல்லன்) எனக் குறிப்பிடுகின்றன.

மௌரியரின் வீழ்ச்சிக்குரிய உண்மைக் காரணம் சற்று ஆராய்ந்த பின்னரே புலப்படும். முடி சூடிய எட்டு ஆண்டுகளுக்குப்பின், கலிங்கப் போரை வெற்றியுடன் முடித்த அசோகர், இராணுவ நடவடிக்கைகளை அறவே நீக்கி, போர்களில் ஈடுபடாமல் நிற்குமாறு சந்ததியார்களையும் வேண்டிக்கொண்டார்.

சின்னூல்களுக்குப்பின் வேட்டையாடும் பழக்கமும் கைவிடப்பட்டது. அசோகராட்சியின் பிற்பகுதி முழுவதும்—இருபத்தொன்பது ஆண்டுகள் — இராணுவத்தினர் அலுவலெதுவுமின்றி வாளாவிருந்தனர். பேரரசரே பெருமையுடன் பின்வருமாறு கூறுவார்: 'சத்தியத்தை நான் கடைப்பிடிக்கத் தொடங்கியதும், யுத்தபேரிகை முழக்கம், சத்தியத்தின் குரலாய் மாறியது' நூலாசிரியரான பாணர் சித்திரிப்பதுபோல, படையினரின் முன்னிலையில், படைத்தலைவனுன புஷ்யமித்திரன் அரசனை வீழ்த்தியது, 'பிருஹத்ரத'னுக்குப் படையினரிடம் எவ்விதத்தொடர்புமில்லை என்பதை ஐயமின்றி உணர்த்துகிறது. இவன் முன்னோர்கள், போர்க்களத்திற்குப் படைகளை நடத்திச் சென்ற தளபதிகளாய் விளங்கியதால், படையினரது அன்பையும் மதிப்பையும் பெற்று விளங்கினர்கள். பிந்துசாரன், அசோகர் ஆகியோரது ஆட்சிக்காலங்களிலும் எல்லைப்புற மாகாணக் கவனர்களை அடக்கியாள்வது மிகவும் கடினமாய் இருந்தது. பரம்பரைச் செய்திகளுக்கிணங்க, அமைச்சர்களின் கொடுங்கோன்மை தட்சசீல மக்களை இருமுறை கிளர்ச்சி செய்யத் தூண்டிற்று. இத்தகைய கொடுமைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனேயே 'தர்ம மகா மாத்திரர்' (உயரிய அலுவலர்) என்னும் அலுவலர்கள் மூன்று அல்லது ஐந்தாண்டுகளுக்கொருமுறை, 'அனுசம்யானம்' அல்லது யாத்திரைகளை மேற்கொள்ளுமாறு அசோகரால் உத்தரவிடப்பட்டார்கள். வலிமைமிக்க மன்னர் மறைந்ததும், மத்திய அரசு வலியிழந்து நின்றது. எல்லைப்புற மாகாணங்கள் பேரரசினின்றும் பிரிந்தன. அரசகுலத்தினர் சிலர், மக்களைக் கொடுமைப்படுத்தியும், மற்றும் சிலர் தன்னுரிமை பெற்று ஆட்சி தொடங்கியும், பேரரசின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்தினர். சீர்குலைந்த இச் சூழ்நிலை, இந் நாட்டின்மீது மீண்டும் படையெடுக்குமாறு கிரேக்கரைத் தூண்டிற்று. வீழ்ச்சிப்படலத்தின் இறுதிச் சடங்கு புஷ்யமித்திரனுல் நிறைவேற்றப்பட்டது.

# 8. மகதப் பேரரசின் சீர்குலைவும் மத்திய ஆசிய, ஈரானியப் படைத் தாக்குதல்களும்

## (The Disruption of the Magadhan Empire and Incursions from Central Asia and Iran)

### மௌரியப் பேரரசர்களின் பின் வந்தோர்

### (Successors of The Imperial Mauryas)

மௌரிய வீழ்ச்சிக்குப்பின் இந்திய வரலாறு சிறிது ஒற்றுமை யிழக்கிறது. வடக்கெல்லையிலுள்ள வெள்ளிப் பனிமலைச் சிகரங் களிலிருந்து வட கர்நாடக வங்காளப் புற்சமவெளி வரையிலும் ஓரே பேரரசு நிலவிய காலம் இனியுமில்லை. நாட்டின் வடமேற் கெல்லையிலுள்ள ஏரிகள் வழியாக அன்னியப்படையினர் புகுந்து, காந்தாரம் (வடமேற்கு எல்லை), சாகாலம் (மத்திய பஞ்சாபின் வடபகுதி) முதலிய பல பகுதிகளிலும் வலிமையுள்ள அரசுகளை நிறுவினர். தெற்கிலுள்ள மாகாணங்களுக்கும் மகதப் பேரரசின் ஆதிக்கத்தினின்றும் விடுபட்டெழுந்து வடக்குப் பகுதியிலுள்ள பேரரசு கிளைகள் போல, ஆற்றலும் பேரெழிலும் கொண்டு விளங்கின. புதியதொரு குலத்தினர் மத்திய தேசம் அல்லது மேல் கங்கைச் சமவெளியில் மௌரியரது செல்வாக்கைப் பெற் றனர். தெற்கிலிருந்தும் வடமேற்கிலிருந்தும் பொங்கிவரும் படைகளை எதிர்த்துப் போராடி நாட்டைக் காப்பாற்றுவது இவர்களுக்கு மிகக் கடினமாய் இருந்தது.

மௌரியரையடுத்து, மகதத்தையும் அதன் சுற்றுப்புறங்களை யும் ஆண்டுவந்த மன்னர் குலத்தைச் 'சுங்கர் குலம்' எனப் புரா ணங்கள் அறிவிக்கின்றன. சுங்கரது பேராட்சியை, 'பார்ஹுட்' (Barhut) கல்வெட்டுச் சிறப்பாக எடுத்துரைக்கிறது. 'பரத்து வாஜ' (Bharadvaja) குலத்தைச்சார்ந்த பிராமணரெனச் சுங்க ரைக் கருதுவது மரபு. அயோத்தியில் கண்டெடுக்கப்பட்ட கல் வெட்டொன்றிலிருந்தும், இலக்கிய நூல் வாயிலாகவும், இக்குலத் தைத் தோற்றுவித்தவன் 'புஷ்யமித்திரன்' என்பதை அறி

கிறோம். அயோத்திக் கல்வெட்டைப்பற்றிய கருத்து வேற்றுமைகள் அதிகம். இவனது குடும்பப் பெயரைப் 'பெய்ம்பிகா' (Baimbika) என அறிவிக்கும் சிறந்த நூலொன்றும் உண்டு. மௌரியப் பேரரசருள் கடைசி மன்னனிடம் இவன் படைத் தலைவனுய்ப் பணியாற்றினன் என்றும், படையினர் கண்ணெதிரில் அம் மன்னனை வீழ்த்தினன் என்றும் கூறுவர். பிற்கால மௌரியர் கொடுங்கோலர்களாய் இருந்தமையாலும், கிரேக்கப் படையெடுப்புகளை எதிர்த்து நின்று மகதப்படையின் கௌரவத்தைக் காப்பாற்ற இயலாதவர்களாயிருந்ததாலும், இக்குல மாறுதலை மக்கள் விரும்பி ஏற்றனர்கள் என்று கருத இடமுண்டு.

தொடக்கத்தில் இப் புதிய மன்னனது அரசு, தெற்கில் நருமதை ஆறுவரையிலும் பரவியிருந்தது. வடமேற்கு எல்லை தெளிவற்றிருந்ததெனினும், ஜாலந்தர் வரையிலும், பஞ்சாபில் உள்ள சயால்கோட்டுவரையிலும் பரவியிருந்ததெனப் பரம்பரைச் செய்திகள் அறிவிக்கின்றன. பாடலிபுத்திரத்திற்கு அரசன் விஜயம் செய்வதுண்டு. இக் காலக் கிழக்கு மாளவத்திலுள்ள 'பெஸ்நகரம்' (Besnagar) அல்லது 'விதிசை'யில் (Vidisa) அக்கினிமித்திரன் அவை கூட்டினன் என்றும், இந்நகரம் பாடலிபுத்திரத்திற்குப் போட்டியாய் வளர்ந்து வந்ததென்றும் அறிகிறோம்.

விதர்ப்ப நாடு (Vidarbha) அல்லது பேராருடன் (Berar) அக்கினிமித்திரன் போரிடும் நிலையேற்பட்டது. அவன் எதிரியை அடிபணிய வைக்கும் முயற்சியில் வெற்றிபெற்றான். வடமேற்கில் பேராபத்தொன்று காத்திருந்தது. கி.மு. மூன்றும் நூற்றுண்டு இறுதியில் கிரேக்கர் மீண்டும் படையெடுக்கத் தொடங்கினர். சிரிய நாட்டு மாபெரிய ஆன்டியோகஸ் என்னும் கிரேக்க மன்னன் . காபூல் பள்ளத்தாக்கில் புகுந்து, இந்திய மன்னன் சுபசேனனிடமிருந்து பல யானைகளைப் பற்றிக்கொண்டான். ஆன்டியோகஸின் மருமகனை பாக்டிரிய இளவரசன் டெமெட்ரியஸ் (Demetrios) மாமனது வழிபற்றிப் பஞ்சாபிலும், சிந்து சமவெளியின் கீழ்ப்பகுதியிலும் வெற்றி கண்டு, தனது செல்வாக்கைப் பரப்பினன். இவனுக்குப் பின்வந்த மெனண்டரும் (Menander) பெருவெற்றிகள் அடைந்தான் எனக் கூறப்படுகிறது. கிரேக்கரின் போர்த்திறனைப் பதஞ்சலியார், காளிதாசர், கார்கி சங்கிதையின் நூலாசிரியர் ஆகியோர் சித்திரிக்கின்றனர். 'தீமையும் வீரமும் நிறைந்த காட்டுமிராண்டிகள்' அயோத்தியிலுள்ள சாகேதத்தையும் சித்தூருக்கருகிலுள்ள மத்தியமிகத்தையும் வென்று, பாடலிபுத்திரத்தையும் பயமுறுத்தினர்

கள். அக்கினிமித்திரன் புதல்வன் வசுமித்திரன், பொங்கி யெழும் படையெடுப்பைத் தடுத்தான். சிந்து நதிக்கரையில் யவனர்களை இவன் முறியடித்ததாகக் கூறப்படுகிறது. 'சிந்து' என்னும் சொல், சிந்து நதியைக் குறிப்பதாகவோ, அல்லது மத்திய இந்தியாவிலுள்ள சிற்றோடையொன்றைக் குறிப்பதாகவோ இருக்கலாம். வெற்றி கண்ட இளவரசனின் பாட்டனார், வெற்றியைப் பறைசாற்றும் வகையில் அசுவமேத வேள்விகள் இரண்டைச் செய்து முடித்தார். இவ் வேள்விகள் இரு நோக்குடையவை. ஆரியாவர்த்தத்தை எல்லைப்புறங்களிலிருந்து தொடங்கிய மூர்க்க மிலேச்சரிடமிருந்து காப்பாற்றவல்ல புதிய பேரரசு ஒன்று மௌரியப் பேரரசின் சாம்பலிலிருந்து முளைத்தெழுந்தது என்பதை இவ் வேள்விகள் முதலில் விளக்கின. இரண்டாவதாக, நீண்ட குப்தராட்சியில் சிகரத்தை எட்டிய புதிய பிராமண இயக்கமொன்று பிறந்த செய்தியையும் இது வலியுறுத்திற்று.

முப்பத்தாறு ஆண்டுகள் அரசு செலுத்திய பின் புஷ்யமித்திரன் உயிர்நீத்தான் என்பதைப் புராணச் செய்தி வாயிலாக அறிகிறோம். (இந் நூலில் நாம் கையாண்டு வரும் கால வரன் முறைப்படி இதைக் கி. மு. 187-151 எனக் குறிக்கலாம்.) அவனைத் தொடர்ந்து அவன் மகனான 'அக்கினிமித்திரன்' அரியணை ஏறினான். இந்திய நாட்டின் தலைசிறந்த நாடக நூலாசிரியராகிய காளிதாசர் எழுதிய புகழ்பெற்ற நாடகக் கதாநாயகனாய் இவ் விளவல் விளங்குகிறான். இவனுக்குப் பின் இக் குல வரலாறு தெளிவற்றுக் காணப்படுகிறது. கிழக்கு மாளவத்தில் இக் காலம் பெஸ்நகர் (Besnagar) என வழங்கப்படும் 'விதிசை' அரசியல் கேந்திரமாய் விளங்கியது. இந் நாட்டு மன்னர், எல்லைப்புறங்களிலுள்ள கிரேக்க மன்னர்களுடன் அரசியல் தொடர்புகொண்டிருந்தனர். இக் குலத்தின் வலிமை நாளடைவில் குன்றிவந்தது. மேற்கு ஐரோப்பிய 'சைல்டெரிக்குகளும், சைல்பெரிக்குகளும்' (Childerics and Chilperics) அரண்மனைக் கரோலிங்கியப் பிரபுக்களின் கைப்பாவைகளாய் இருந்ததைப்போலச் சுங்ககுல மன்னர், பிராமண அமைச்சர்களின் கைப்பாவைகளாய் இருந்தனர். இதன் விளைவாகக் கண்ணுவர் என்னும் அமைச்சர் குலத்தவர், வசுதேவன் (கி.மு. 75) என்னும் தலைவனின் ஆதரவில் இணைந்து, வலிமையிழந்து வரும் சுங்கரையும், ஆங்காங்கே ஆட்சி புரிய அனுமதித்து, விரைவில் முன்னேற்றமடைந்து வந்தனர். கி. மு. 40 அல்லது 30-ல் சுங்கரும் கண்ணுவரும், தெற்கில் எழுந்த அரசு ஒன்றின் ஆணைக்குட்படுத்தப்பட்டனர். 'விதிசை' நகரை உளளடக்கிய கிழக்கு மாளவம், தெற்குப் பேரரசின் எல்லைக்குளளடங்கிற்று. சுங்க, கண்ணுவகுல மன்னர்

சிலர், தம் பெயரைத் தொடர்ந்து 'மித்திர' (Mitra) என்னும் விருதையும் இணைத்துச் சித்தியர் (Scythian) படையெடுப்புக் காலம் வரையிலும், மகதத்தையும் கங்கை யமுனை வெளியையும் ஆண்டுவந்தனர்.

## சாதவாகனர்கள்

சுங்கர், கண்ணுவர் ஆகியோரின் ஆட்சிகளுக்கு முற்றுப் புள்ளியிட்ட தென்னிந்திய மன்னரைப் புராணங்கள் ஆந்திரர் எனக் குறிக்கின்றன. கோதாவிரி, கிருஷ்ணா நதிகளின் முகத் துவாரத்தில் வாழ்ந்த தெலுங்கு பேசும் மக்களுக்கு இப் பெயர் வழங்கி வருகிறது. சம காலக் கல்வெட்டுகளில் இக் குல மன்னர் சாதவாகனர் எனக் குறிக்கப்பட்டுள்ளனர். இக் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டிருக்கும் 'சாதவாகன மாவட்டம்' என்பது சென்னை மாகாணக் கன்னடப்பகுதியென்றும், பல்லாரியை அடுத்து இது அமைந்துள்ளது என்றும் அறிவிக்கப்படுகிறது. இந்திய நாடோடிக் கதைத்தொகுதிகளில் மிக்க சிறப்பு வாய்ந்த 'சாலிவாகனன்' என்னும் மன்னனைப்பற்றிய குறிப்பு, சாதவாக னர் குலப்பெருமையை நினைவூட்டுகின்றது. தக்காணப் பேரர சர்கள் பலரைக்கொண்ட புகழ்பெற்ற இக் குல மன்னர்களின் மாபெருஞ் செயல்கள் யாவும், பழங்கதைக் கதாநாயகனாய் விளங்கும் சாலிவாகனனுக்குச் சூட்டப்படுகின்றன.

'சிமுகன்' தோற்றுவித்த இக் குலத்தின் சிறப்பிற்கு முதல் சாதகர்ணி என்பவன் பெரிதும் காரணமெனக் கருதலால், முதல் சாதகர்ணியைச் சிமுகனின் மகனென்றும் அல்லது மருமகனென் றும் கருத இடமுண்டு. வலிமை பெற்ற மேற்குத் தக்காண மகாராட்டிரப் படைத்தலைவருடன் உறவு கொண்டு அரியணை ஏறியதும் குதிரை யாகமொன்றும் நடத்தினான். முதல் சாத கர்ணி மரணமடைந்த சின்னாள்களுக்குப் பின், சித்தியர் படை யெடுப்புச் சாதவாகனர் செல்வாக்கை அழித்தது. சகர் (சித்தி யர்), யவனர் (கிரேக்கர்), பஹ்லவர் (பார்த்தியர்) ஆகியவர் களை வென்றவன் எனப் பெருமை கொள்ளும் கௌதமி புத்திர சாதகர்ணி, மங்கிவரும் பெருமையை அதிவிரைவில் மீட்டு, சாதவாகனர் ஆட்சியை நிலைநிறுத்தினான்; வடக்கிலுள்ள மாள வத்திலிருந்து தெற்கிலுள்ள கன்னடநாடு வரையிலும் பரந்த பேரரசு ஒன்றையும் நிறுவினான். 'வசிஷ்டி புத்திர புலுமாயி' (Vasishthi-Putra Pulumayi) என்னும் அவன் மகன் கோதாவிரிக் கரையிலுள்ள 'பிரதிஸ்தானம்' அல்லது 'பைதான்' (Pratishthana or Paithan) என்னுமிடத்திலிருந்து ஆண்டுவந்தான். இந் நகர், நைசாம் டொமினியனிலுள்ள அவுரங்காபாது மாவட்டத்திலுள்

ளது. 'வைஜயந்தி' (வடக்குக் கனரா), 'அமராவதி' (குண்டூர் மாவட்டம்) ஆகிய இரு புதிய நகரங்கள், சாதவாகனர் ஆட்சியில் சிறப்புற்று விளங்கின. புலுமாயியின் சகோதரனெனக் கருதப்படும் 'வசிஷ்டி புத்திர சாதகர்ணி' என்னும் மன்னன், சமகாலத்தவனான ககசத்திரபன் உருத்ரபன், முதலாம் உருத்திரதாமனின் மகளொருத்தியை மணந்தானெனக் கூறப்படுகிறது. இத் திருமணத்திற்குப் பின்னும் உருத்திரதாமன் தென்பகுதிகளின்மீது படையெடுத்து உறவினரையும் வெற்றிகண்டான் எனக் கருதப்படும் ஸ்ரீயஞ்ஞ சாதகர்ணியின் காலத்தில் சாதவாகனர் மீண்டும் தலையெடுத்தனர். இக் குல மன்னரில் இவனே இறுதியானவன். பிற்காலப் பாமினிப் பேரரசைப்போல, இம் மன்னனுக்குப்பின் சாதவாகனரின் பேரரசும் வீழ்ந்து சிதறியது. மகாராட்டிர மேற்பகுதியிலுள்ள நாசிக்கைச் சார்ந்த 'அபிரசரும்' (Abhiras of Nasik), பேரரரைச் சார்ந்த 'வாகாடகரும்' (Vakatakas of Berar), கிருஷ்ண, கோதாவிரி மாவட்டங்களைச் சார்ந்த இட்சுவாகு (Ikshuvakus) குலத்தினரும், சாலங்காயனரும் (Salankayanas) காஞ்சிப் (சென்னை அருகில்) பல்லவரும் (Pallavas), வட கனராவிலுள்ள வைஜயந்தி அல்லது பனவாசியிலுள்ள (Banavasi) கடம்பரும் (Kadambas) சாதவாகனரைத் தொடர்ந்து தக்காணப் பகுதிகளை ஆண்டுவந்தனர்.

## கலிங்கத்துக் காரவேலன்

சாதவாகன எழுச்சிக்குத் தொடக்கத்தில் போட்டியாகத் தக்காணத்திலுள்ள கலிங்கம் விளங்கியது. அசோகரின் மரணத்திற்குப்பின், மகத ஆதிக்கத்தினின்றும் விடுபட்டு,வியக்கத்தக்க ஆற்றலும் பேரார்வமும் உடைய 'காரவேலன்' என்பவனது தலைமையில் சிறப்புமிகப் பெற்று விளங்கியது; 'சாதகர்ணி' என்னும் பெயர்கொண்ட சாதவாகன முதல்வனொருவனைக் காரவேலன் மீட்டிருக்கவோ அல்லது தொழுது போற்றியிருக்கவோ கூடும். 'பிருகஸ்பதி மித்திரன' என்னும் பெயருடைய மன்னனொருவன் அவ்வமயம் மகதத்தை ஆண்டுவந்தானென்றும், அவ்வாட்சியில் மகதத்தைக் காரவேலன் சீர்குலைத்திருக்க வேண்டுமென்றும் நம்புவதற்கிடமுண்டு. பிருகஸ்பதியைப் 'புஷ்யமித்திரன்' என அறிஞர் சிலர் கருதுவர். ஆனல், இக் கருத்திற்குப் போதிய ஆதாரமில்லை. தெற்கே கோதாவிரி ஆற்றுக்கப்பாலும், கலிங்க மன்னன் வெற்றியடைந்தானெனக் கூறப்படுகிறது. எரி நட்சத்திரம் போன்று அமைந்த அவனுடைய வாழ்நாளுக்குப்பின் அதிவிரைவில் அவன் அமைத்த பேரரசும் மிக விரைவாய்ச் சரிந்தது.

## தமிழகம்
### (The Tamil Country)

வேங்கடமலைகளுக்கப்பாலுள்ள இந்திய நாட்டின் தென் பகுதி 'தமிழ்நாடு' அல்லது 'திராவிடநாடு' எனப் பெயர் பெறும். பல சிறு அரசுகள் இப் பகுதியில் அடங்கியிருந்த போதிலும் சோழ, பாண்டிய, கேரள அரசுகள் முதன்மை பெற்று விளங்குகின்றன. இக் காலத் தஞ்சை திருச்சி மாவட்டங்களையும் சுற்றுப்புறங்களையும் சோழ மன்னர்கள் ஆண்டுவந்தார்கள். 'ஏலாரா' (Elara) அல்லது ஏலேலே சிங்கன் என்னும் சோழ இளவரசன் ஒருவன், சிங்களத்தை வென்றதாகவும், அருஞ் செயல்கள் பல புரிந்ததாகவும், நீதி வழங்குவதில் நிகரற்றவனென்றும் கர்ணபரம்பரைக் கதைகள் பல விளக்குகின்றன. வாணிகத்திலும் கல்வியிலும் பாண்டியர் சிறந்து விளங்கினர். மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களும், தெற்குத் திருவிதாங்கூர் பகுதிகளும் பாண்டியர் வசமிருந்தன. கி.மு. முதல் நூற்றுண்டில் ரோமானியப் பேரரசர் 'அகஸ்டசி'ன் அவைக்குப் பாண்டிய மன்னனொருவன் தூதுவரை அனுப்பிவைத்தான். பாண்டிய அரசெல்லைக்கு வடக்கிலும் மேற்கிலும், மலபார், கொச்சி, வட திருவிதாங்கூர்ப் பகுதிகளை உள்ளடக்கிய கேரள நாடு அமைந்திருந்தது.

## கிரேக்கர் மீண்டும் படையெடுத்தல்
### (Renewed Incursions of the Greeks)

மாபெரு மௌரியராட்சி வீழ்ந்தபின் எழுந்த அரசியல் குழப்ப நிலை, அன்னியரை வரவேற்பதாயிற்று. போரில் ஆர்வமிக்க பாக்டிரிய சிரிய நாட்டுக் கிரேக்கரின் படையெடுப்புகளை முன்னர்க் குறித்தோம். செல்யூக்கஸின் பேரரசில் அடங்கிய பார்த்திய-பாக்டிரிய சத்ரபர்கள் கிளர்ச்சி செய்து, தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொண்டதால், இச் சத்ரபங்களை இழந்த பேரரசு வலிமை குன்றிநின்றது. புரட்சியின் விளைவாக எழுந்த இப் புதிய கிரேக்க மாகாணங்களிலிருந்து, போர் வீரர் பலர் எழில் மிக்க பஞ்சாபு சமவெளியின் மீது படையெடுத்தனர்.

தொடக்கத்தில், பாக்டிரியா இப் படையெடுப்புகளில் மிகுந்த ஆர்வமுடையதாய் இருந்தது. பாக்டிரிய மன்னன் யூத்திடீமஸ் (Euthydemos), மகன் டெமெட்ரியஸ் (Demetrios) ஆப்கானிஸ்தானம், சிந்து, பஞ்சாபு ஆகிய மாகாணங்களின் பெரும்பகுதியை வென்று, புதிய நகரங்களைத் தோற்றுவித்தும், பழைய நகரங்களைப் புதுப்பித்தும், அந் நகரங்களுக்குத் தனது பெயரையோ அல்லது தந்தையின் பெயரையோ சூட்டினுன்.

இவனுக்குப் போட்டியாக, யூக்ரடைடீஸ் (Eukratides) என்பவன் இந்திய எல்லைப்புறங்களைக் கைப்பற்றித் தன் எதிரிக்கு உள் நாட்டு மாகாணங்கள் சிலவற்றை விடுத்துச் சிக்கலானதொரு சூழ்நிலையையும் ஏற்படுத்தினான். பின் தோன்றிய டெமெட்ரிய ஸின் பரம்பரையைச் சார்ந்த மெனாண்டர் (Menander) என்னும் மன்னன், 'சாகலா' (Sakala) என்னுமிடத்தைத் தலைநகராகக் கொண்டு சிறப்பாக ஆண்டுவந்தான். 'சாகலா' என்பது பஞ்சாபிலுள்ள 'சயால்கோட்' (Sialkot) எனக் கருதப்படுகிறது. வடமேற்கிலுள்ள 'பஜௌர்' (Bajaur) பகுதியும் இவனது நாட் டெல்லைக்குள் அடங்கியிருக்க வேண்டும். அண்மையில் இப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்று, மெனாண்டர் ஆட்சியேற்ற ஐந்தாண்டுகளுக்குப் பின் நிறுவப்பட்டதாகக் கருதப்படுகிறது. 'பீயஸ்' ஆற்றிற்கப்பாலும் தன் செல்வாக்கை இவன் அதிகரித்ததாகக் கூறப்படுகிறது. 'அன்டியால்கிடாஸ்'



டெமெட்ரியஸின் நாணயம்

(Antialkidas) என்னும் மற்றுமொரு கிரேக்க மன்னன் காந்தாரத் திலுள்ள தட்சசீலத்தை (ராவல்பிண்டிக்கருகில்) ஆண்டுவந் தான். விதிசை மன்னன் அவைக்கு இவன் தூதுவரை அனுப்பி வைத்தான். இவர்களைப் போன்ற பிற்காலக் கிரேக்க இளவரசர் களும், அவர்களைச் சார்ந்தவர்களும், சூழ்நிலைகளின் விளைவாக, நாளடைவில் பௌத்தம், வைணவம் ஆகிய சமயங்களைக் கடைப்பிடிக்கலானார்கள். சிந்து சமவெளியிலும், ஆப்கானிஸ் தானப் பகுதிகளிலும் நிலவிய கிரேக்க அரசியலாதிக்கம், கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் ஆண்டுவந்த யூக்ரடைடீஸின் காலத் துப் பார்த்தியத் தலைவனான முதலாம் 'மித்திரடேடஸ்' (Mithradates I) என்பவனால் அச்சுறுத்தப்பட்டது. கி. பி. முதல் நூற்றாண்டில் பஞ்சாபிலும், எல்லைப்பகுதிகளிலும் கிரேக்கராதிக் கம் முற்றிலும் மறைந்ததெனலாம். ஹெர்மியூஸ் (Hermaios) என்பவனே கிரேக்க மன்னருள் இறுதியாகக் கூறப்படுபவன். இந்துகுஷ் தொடருக்குத் தெற்கில் பார்த்திய, குஷான அரசு களுக்கு இவன் இடமளித்தான்.

## சாகரும் பார்த்தியரும்
## (The Sakas and Parthians)

வடமேற்கிந்தியப் பகுதியில் கிரேக்கரை வென்ற வெளி நாட்டினர் சாகர், பஹ்லவர் அல்லது யூ-ச்சி அல்லது பார்த்தியர், குஷானர் என்ற மூன்று பெரும்பகுதியினராவர். மத்திய ஆசிய நாட்டினரான சாகரை, யூ-ச்சி என்ற வகுப்பினர் தெற்கு நோக்கி விரட்டினர். சாக மன்னன் தெற்கு முகமாகச் சென்று, 'கை-பின்' (Ki-pin) என்னுமிடத்தை ஆண்டதாகச் சீன நாட்டு வரலாற்றுக் குறிப்பெழுதுவோர் கூறுவர். காபூல் நதியின் வடக்குக் கிளைகளின் கரையில் கை-பின் அமைந்திருந்ததெனக் கூறப்படுகிறது. கிறித்தவ சகாத்தத் தொடக்கத்தில், காரக்ஸை யாண்டுவந்த இசிடோர் (Isidore of Charax) என்னும் மன்னனது ஆட்சியில், 'சாகர்' தெற்கு ஆப்கானிஸ்தானத்தில் குடியேறி யிருந்தனர். 'சாகஸ்தானம்' (Sakasthanam) எனப் பெயர் பெற்ற அப் பகுதிக்கு இக் காலத்தில் சிஸ்தான் (Sistan) என்னும் பெயர் வழங்கி வருகிறது. நாளடைவில் சிந்து சமவெளியிலும் மேற்கிந்தியாவிலும் இவர்கள் தங்கள் செல்வாக்கைப் பரப்பினுர் கள். இப் பகுதிகளைக் கி. பி. முதலிரண்டு நூற்றுண்டுகளில் கிரேக்க யாலுமிகளும் புவியியல் வல்லுநரும் 'சித்தியா' எனப் பெயரிட்டு வழங்கினர். கி. பி. முதல் நூற்றுண்டில், இந் நிலப் பரப்பின் பெரும்பகுதி பார்த்தியர் வசமாயிற்று. பல சித்தோ-பார்த்திய (Sytho-Parthian) மன்னர்களின் பெயர்களையும் மாகாணக் கவர்னர்களின் பெயர்களையும், கல்வெட்டுகளிலிருந்தும் நாணயங்களிலிருந்தும் அறியலாம். ஆதியில் தோன்றிய ஆட்சியாளருள் மாவஸ், மோவா அல்லது மோகா (Maues, Moa or Moga) என்பவனைத் தட்சசீலத்திற்கருகிலுள்ள சுக்ஷ (Chuksha) நாட்டுக் கவர்னர்கள் தங்கள் தலைவனுக ஏற்றுர்கள். மாவஸின் பின் போந்தவர்களான முதல் ஆஸெஸ் (Azes I), அஸிலிசஸ் (Azilises), இரண்டாம் ஆஸெஸ் (Azes II) ஆகியோருக்குப் பின், இந்திய எல்லைப்பகுதிகளின் இறைமை 'கொண்டோபர்னஸ்' (Gondophernes) என்னும் பார்த்தியன் வசமாயிற்று. அறிஞர் சிலர் கி.மு. 58ஆம் ஆண்டிலிருந்து தொடங்கும் விக்கிரம சகாத்தத்தை முதல் ஆஸெஸ் ஆட்சியிலிருந்து கணக்கிடுவர். ஆயினும், இக் கருத்தை உறுதியானதென ஏற்பதற்கில்லை. இந்தியப் பரம்பரைச் செய்திகளுக்கிணங்க இச் சகாத்தம், இந்திய மன்னனொருவனுலேயே தொடங்கப்பட்டிருக்க வேண்டும். மாளவ மரபினரால் (Malava tribe) பின் போந்தவருக்கு வழங்கப்பட்டுக் குப்தர் காலத்திற்குப்பின், சாகர் குலத்திற்கு எமனுய் விளங்கிய புகழ்பெற்ற விக்கிரமாதித்தனுக்கு வழங்கப்பட்டது.

ஆஸெஸ் என்னும் பெயர்கொண்ட மன்னனொருவனுடன் தெற்கு ஆப்கானிஸ்தானத்தை ஆண்டுவந்த 'ஸ்பாலிரைசஸ்' (Spalirises) என்ற அரசனொருவன் தொடர்புகொண்டிருந்தான் என்பதை அறிகிறோம். 'ஸ்பாலிரைசஸ்', 'ஓனுன்ஸ்' (Vonones) என்பவனின் வழித்தோன்றலாய் இருக்கக்கூடும். அர்சேக்ஸ் (Arsakes) மரபினருள் ஓனுன்ஸை அடையாளம் கண்டுகொள்வது, குழப்பமிக்க பெரும்பிரச்சினையாகவே இருந்துவருகிறது. சாக பஹ்லவ மன்னர்கள் பல மாகாணங்கள் அடங்கிய பேரரசை ஆண்டுவந்தார்கள். ஆட்சிப் பிரிவுகளை ஆண்டுவந்த கவர்னர்களுக்குச் 'சத்ரபர்' (க்ஷத்திரபர்) என்றும் 'மகா சத்ரபர்' (மகா க்ஷத்திரபர்) என்றும் பெயர்கள் வழங்கிவந்தன. ஆப்கானிஸ்தானத்திலுள்ள கோர்பந்து பஞ்ச்ஷீர் நதிகள் கூடுமிடத்திலுள்ள 'கபிசா'வில் சத்ரபகுலமொன்றும், மேற்குப் பஞ்சாபிலுள்ள தட்சசீலத்தில் மற்றொன்றும், யமுனைப் பள்ளத்தாக்கிலுள்ள 'மதுரா'வில் பிறிதொன்றும், மேற்குத் தக்காணத்தில் நான்காவதும், மாளவத்திலுள்ள 'உஜ்ஜயினி'யில் ஐந்தாவதொன்றுமாகச் சத்ரப குலத்தவர் ஆண்டுவந்தனர். மேற்குத் தக்காண, மேற்கிந்தியப் பகுதிகளை ஆண்டுவந்த சத்ரப ஆட்சியாளர், சாகரின் கிளையெனக் கருதக்கூடிய 'க்ஷகராத' (Kshaharata) இனத்தைச் சார்ந்தவர். முந்திய சாதவாகனரின் வீழ்ச்சிக்குப்பின் தமக்கென அரசொன்றை அமைத்து 'நாகபாணன்' என்பவனது தலைமையில் மிக்க வலிமைபெற்று விளங்கினர். சாதவாகனரின் இழந்த பெருமையை மீட்ட கௌதமிபுத்திர சாதகர்ணி, இவர்களை இறுதியாக வென்றான். உஜ்ஜயினி சத்ரபர்கள் 'சாஷ்தனு' பிரபுவின் (ஸ்வாமின்) வழித்தோன்றல்கள். பூகோள ஆசிரியரான 'தாலமி' இவர்களைத் 'தியாஸ்தேன்ஸ்' (Tiastanes) எனக் குறிப்பர். கி. பி. 130 முதல் 150 வரையிலும் அரசு செலுத்திய சாஸ்தனுவின் பெயரனை 'உருத்திரதாமன்' இப் பூமியைஆண்ட முற்காலச் சாக மன்னருள் தலைசிறந்தவன். சாதவாகனருடன் திருமணத் தொடர்புகொண்டபோதிலும் தெற்குப் பகுதியிலுள்ள அண்டை வீட்டினரை இவன் வென்று வந்தான். உருத்திரதாம அரசவைக் கவிஞரின் கூற்றை உண்மையென ஏற்றால், தெற்கில் கொங்கணத்திலிருந்து (Konkan), வடக்கில் சிந்து, மார்வார் வரையிலும் இவனது பேரரசு பரவியிருந்ததென்பது தெரியவரும். உருத்திரதாமனுக்குப் பின்வந்தோர் அவனைப்போலன்றி, வலிமை குன்றியவராகவேயிருந்தனர். உள்நாட்டுப் பூசல்கள் நிறைந்திருந்தன. 'ஆபிர'த் (Abhira) தலைவர்கள் நாளடைவில் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். கி. பி. நான்காம் நூற்றுண்டில் கங்கை வெளியில் உயிர்த்தெழுந்த இந்தியப் பேரரசு மாளவம், கத்தியவார்ப்

பகுதிகளில் வழக்கிலிருந்த சத்ரபர் ஆட்சிக்குச் சாவுமணியடித்தது. சமுத்திரகுப்தன், இரண்டாம் சந்திரகுப்தன் ஆகியோரது போர் முரசு, மானவப் பீடபூமியெங்கும் ஒலியெழுப்பிச் சாகரையும் ஆபிரரையும் ஒருங்கே அழித்தது.

## பார்த்தியரின் வீழ்ச்சியும் குஷானர் வெற்றியும்
(Fall of the Parthians and the Kushan Conquest)

சாஷ்தனுச் சத்ரபருக்கு நேர்ந்த இறுதி அழிவுக்குப் பல நாள்களுக்குமுன், வடமேற்கில் வாழ்ந்த சாக-பஹ்லவப் பேரரசர்களுக்கு மற்றுமொரு வகையான மாறுதலேற்பட்டது. இரண்டாம் ஆஸெஸைத் தொடர்ந்து வடமேற்குப் பகுதியில் பேரரசெய்தியதாகக் கருதப்படும் கொண்டோபர்னஸின் வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் நிறைந்திருந்தன. கொண்டோபர்னஸின் செல்வாக்கு மிகுந்திருந்ததென்பதும், இந்திய முறைகளை அவன் கடைப்பிடிக்கும் எண்ணமுடையவனாய் இருந்தான் என்பதும் நாணயச் சான்றுகளிலிருந்து அறியலாகும். புனித தாமஸ் (St. Thomas) என்னும் கிறித்தவத் துறவியுடன் அவன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்ததாகப் பரம்பரைச் செய்தி கூறும். சந்ததியாருக்கு நிலையான அரசை அவன் விட்டுச் செல்லவில்லை. கி. பி. முதல் நூற்றாண்டில் பார்த்திய மன்னர்கள், ஒருவரோடொருவர் சண்டையிட்டு வந்ததாக அக்காலத்துக் கிரேக்க மாலுமியொருவன் கூறுவான். கி.மு. 165-ல் சீன எல்லைப்புறத்தில் பல காலம் வாழ்ந்துவந்த நட்டாசியாவைச் சார்ந்த, யூ-ச்சி என்னும் நாடோடி வகுப்பினர், அவ்வெல்லைப்புறத்திலிருந்து துரத்தப்பட்டு ஆக்ஸஸ் (Oxus) பள்ளத்தாக்கில் குடியேறியிருந்தனர். பார்த்தியரிடையே நிலவிய ஒற்றுமையின்மையை அவர்கள் பயன்படுத்தத் தவறவில்லை. ஐந்து பிரிவினராய் வாழ்ந்த யூ-ச்சி இனத்தினரின் குறுநில அரசுகளை, கியூ-த்ஸியூ-கியோ (Kiew-tsiew-Kio) அல்லது குஜுலா-காசா-காட்பிசிஸ் (Kujula-Kasal Kadphises) அல்லது முதலாம் காட்பிசிஸ் என்னும் குஷானத் தலைவன் ஒன்றுகூட்டினான். பார்த்தியர்களைத் தாக்கிய காட்பிசிஸ் காபூலையும், கைபின்னையும் கைப்பற்றி இந்திய எல்லைப்பகுதிகளின் தனிப்பெருந் தலைவன் ஆயினன். இவனால் வெளியிடப்பட்ட செப்பு நாணயங்கள், ரோமானியத் 'தினாரி'யை (Denarrii) மிகவும் ஒத்திருக்கின்றன. குறிப்பாக, பேரரசன் கிளாடியஸின் (Emperor Claudius, கி. பி. 41-54) நாணயங்களைப் போன்று இவை காணப்படுவதால் கி. மு. முதல் நூற்றாண்டு மத்தியில் இவன் ஆண்டுவந்திருக்கக்கூடும். காபூல் அல்லது அதன் அண்மையிலுள்ள வேறு பகுதியொன்றைக் கி. பி. 92-க்கு

முன்னர் யூ-ச்சியினர் கைப்பற்றினர் என்னும் சீனக்குறிப்பு ஒன்றை ஆதாரமாகக்கொண்டு, கால நிருணயம் முடிவு செய்யப்படுகிறது (Terminus ad Quem).

கியூ-த்ஸி-கியோ அல்லது குஜுலா காட்பிசிஸ் என்பவனை யடுத்துப் பட்டமெய்தியவன் யென்-கேயோ-சென் (Yen-Kao-Chen) அல்லது 'விமா-காட்பிசிஸ்'-II என நாணயச் சான்றுகளி லிருந்து அறியலாம். இந்திய உள் நாட்டுப் பகுதிகளை வென்ற மையைச் சீன வரலாற்றுக் குறிப்புகள் அறிவிக்கின்றன. அவன் சைவ சமயத்தைத் திரும்பி ஏற்று, நாணயங்களில் தன்னை 'மஹீஸ்வரன்' (Mahisvara) எனக் கூறிக்கொண்டான்.

அவன் காலத்துத் தங்க நாணயங்களிலிருந்து, நாட்டின் செல்வ மிகுதியையும், செழிப்பையும் நன்கு அறியலாம். ரோமானியப் பேரரசன் 'டிராஜ' (கி.பி. 98-117) என்பானது அவைக்கு இந்தியத் தூதுவர் விஜயம் செய்தனர் என்பதை அறிகிறோம். இத்தூதுவர் குஷாணப் பேரவையைச் சார்ந்தவராய் இருக்கக் கூடும். ஆயினும், இவர் இரண்டாம் காட்பிசிஸால் அனுப்பப்பட்டவரா அல் லது பின் போந்த கனிஷ்கனால் அனுப் பப்பட்டவரா என்பது தெளிவற்றிருக் கிறது.

கனிஷ்கன்
(பிரிட்டிஷ் அரும் பொருட்காட்சிச் சாலையி லுள்ள நாணயமொன்றி லிருந்து)

## முதலாம் கனிஷ்கன்

'விமாகாட்பிசிஸின் (இரண்டாம் காட்பிசிஸ்) சந்ததியாகக் கனிஷ்கனை எண்ணுவது மரபு. கி. பி. 78-இல் தொடங்கும் சாக சகாத்தத்தைக் கனிஷ்கன் தொடங்கினன் என அறிஞர் பலர் கூறுவர். இந்திய முறையில் கணக்கிடப்படும் இச் சகாத்தத்தைச் சாக மன்னன் ஒருவன் தொடங்கினனெனப் பரம்பரைச் செய்தி கூறும். சித்திய மன்னருள், புதியதோர் ஆண்டைத் தோற்றுவித்தவன் கனிஷ்கன் ஒருவனே என்பதும் அறியலாகும். அவன் பின்வந்தோர் அவ் வாண்டைப் பல தலை முறைகளாகப் பயன்படுத்தித் தனித்தவொரு சகாத்தத்தையே உருவாக்கினர். கனிஷ்கனைச் சாக வமிசத்தைச் சேர்ந்தவ னெனக் கருதுவதைக்காட்டிலும், குஷானிய வமிசத்தைச் சேர்ந்தவன் என்பதே மிகவும் பொருந்தும். 'குஷானியர்' என்னும் குலப்பெயர் கிளைச்சாதியினர் யாவரையும் உள் ளடக்கி விவரிக்கும் ஒரு சொல்லாகவே இந் நாட்டில் கருதப்பட் டது. கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதியில், குஷானிய மன்னன்

ஒருவனுக்கும், 'பான்-சவோ' (Pan-Chao) என்னும் பெரும் படைத்தலைவனொருவனுக்கும் நிகழ்ந்த போர் ஒன்றைச் சீன வரலாற்று ஆசிரியர் குறிப்பர். பாஞ்சவோவுடன் பொருத குஷானிய மன்னனை, இரண்டாம் காட்பிசிஸ் என அடையாளம் கொள்ளும் அறிஞர் பலருண்டு. 'யென்-கேயோ-சென்' அல்லது இரண்டாம் காட்பிசிஸைப்பற்றிய சின வரலாற்றுக் குறிப்புகளில் இச் செய்தி இடம் பெறுவதில்லை. சீன அரசின் அனுமதி பெற்ற வரலாற்று ஆசிரியன் கனிஷ்கனது பெயரையே குறிப்பதில்லை. அந் நாட்டுடன் கனிஷ்கன் போர் தொடுத்தது உண்மை. சீன அரசர் ஒருவர் அல்லது பலர் பிணையாகக் கனிஷ்கனது அவையிலிருந்தனர் என 'யுவான்-சுவாங்' (Hiuen-Tsang) கூறுவர். 'பான்சவோவின்' காலத்தவனுகக் கனிஷ்கனைக் கருதும்போது, சாக சகாத்தத்தை அவன் தொடங்கியதாகக் கொள்வதில் தவறேதுமில்லை. இரண்டாம் காட்பிசிஸ், இச் சகாத்தத்தைத் தோற்றுவித்தான் என்றும், கனிஷ்கன் கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவன் என்றும் கூறும் மற்றுமொரு கருத்து ஏற்பதற்குரியதாய் இல்லை. இரண்டாம் காட்பிசிஸின் காலத்திலேயே அவன் தொடங்கியதாகக் கூறப்படும் ஆண்டு, நகர்ப்புறங்களில் வழக்கிலில்லை. ஆல்பிருனி உட்பட, மற்ற நூலாசிரியர்கள் கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் ஒரு சகாத்தம் தோன்றியதாகக் குறிப்பதில்லை. கனிஷ்கன் பெருமையுடன் அவன் குலத்தினரின் பெருமையும், இந்திய சகாத்தங்களின் பட்டியலளிக்கும் கீவன் (Khivan) அறிஞரின் உள்ளத்தில் பசுமரத்தாணிபோலப் பதிந்திருந்தது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் ஒரு புதிய சகாத்தம் கனிஷ்கனல் தொடங்கப்பட்டு அவன் பின்வந்தோரால் நிலை நாட்டப்பட்டிருக்குமெனில் இவ்வறிஞரின் கவனத்திற்கப்பாற்பட்டதாக அந் நிகழ்ச்சி இருக்கக்கூடுமென்பதை நம்புவதற்கு இடமே இல்லை.

கனிஷ்கனது பரந்த பேரரசிற்குப் 'புருஷபுரம்' அல்லது 'பெஷாவர்' தலைநகராய் இருந்ததென, யுவான்-சுவாங் கூறுவர். 'காந்தாரம்' சூ-விஹாரம் (Sue-Vihar) ஆகிய பகுதிகளிலிருந்து அயோத்தி, வாரணசி வரையிலும் உளள பரந்த நிலப்பகுதியைக் கனிஷ்கன் ஆண்டுவந்தான் என்பதைக் கல்வெட்டுச் சான்றுகளிலிருந்து அறியலாம். காஷ்மீரமும் இதிலடங்கியிருந்ததென்பதைக் கல்ஹணரின் குறிப்பிலிருந்தும், சாகேதம், பாடலிபுத்திரம் ஆகிய நாடுகளுடன் சண்டையிருந்து வந்ததென்பதை வேறு நூலாசிரியர்களிடமிருந்தும் அறியலாம் சீனத்துடன் போர் நிகழ்ந்ததென்றும், அப் போரில் குஷானிய மன்னர் கிழக்குத் துருக்கிஸ்தானத்தில் சில வெற்றிகளை அடைந்தனரென்றும் யுவான் சுவாங் குறிப்பிடுவார். வடக்கிலுள்ள வலிமைமிக்க அண்டை வீட்டானிடம் கனிஷ்கன் முயற்சிகள் பலிக்க

வில்லை. பரம்பரைச் செய்திகளுக்கிணங்க, வடபகுதி மட்டிலும் அடிபணியாது நிமிர்ந்து நின்றது

போர்த்திறமையொன்றைமட்டிலும் பாராட்டி, கனிஷ்கனைப் பிற்காலத்தவருக்கு நினைவுகூர வேண்டுவதில்லை. அவன் விட்டுச் சென்றிருக்கும் நினைவுப் பொருட்சின்னங்களும், சாக்கிய முனிவரின் சமயத்திற்கு அவன் ஆற்றியிருக்கும் தொண்டும், அவனது பெரும்புகழுக்கு முக்கிய காரணங்களாய் விளங்கி வருகின்றன. பெஷாவரில் கனிஷ்கன் எழுப்பியுள்ள 'சைத்தியம்' (Chaithya) இன்றும் மக்களின் கவனத்தைக் கவர்ந்து, வியப்பூட்டுகின்றது. அரசனது ஆணைக்கிணங்க உருவாக்கப்பட்ட சிற்பங்களுள் அரசனது முழு உருவச்சிலையும் ஒன்ருய் விளங்குகின்றது; புத்த சமய நூல்களை ஆராய்ந்து அவற்றுக்கு விளக்கம் தயாரிக்கும் எண்ணத்துடன் 'பேரவை' ஒன்றைக் கூட்டிய அரசனென, புத்த சமய வரலாறு இம் மன்னனைப் புகழ்ந்துபேசுகின்றது. கல்வெட்டுகளும், நாணயங்களும், புத்த சமயத்தில் மன்னனுக்குள்ள பெரும்பற்றிற்கு நற்சான்று பகர்கின்றன. ஆட்சி தொடங்கியதிலிருந்து கனிஷ்கன் இச் சமயத்துடன் தொடர்பு கொண்டிருந்த செய்தியைப் பெஷாவர் நகரப் பெட்டகக் கல்வெட்டுகள் (Peshawar casket-Inscriptions) கூறுகின்றன. கனிஷ்கனது அவையை அலங்கரித்த பெரியார்களுள் 'அசுவகோஷர்' (Asvagosha) மிகச்சிறந்து விளங்கினுர். தத்துவ ஞானியாரும், கவிஞரும் நாடகாசிரியருமான அசுவகோஷர், புத்த சரிதமும் மற்றும் பல அரிய நூல்களும் இயற்றினுர்.

## முதலாம் கனிஷ்கனின் வாரிசுகள்
(Successors of Kanishka-1)

கனிஷ்கனது ஆட்சி இருபத்துமூன்று ஆண்டுகளுக்கு நீடித்திருந்தது. கனிஷ்கனைத் தொடர்ந்து அரியணை ஏறியவன் 'வாசிஷ்கன்' (Vasishka). குறுகிய கால ஆட்சிக்குப் பின் ஹவிஷ்கன் (Havishka) என்பவன் வாசிஷ்கனைத் தொடர்ந்து அரசெய்தினுன். அசுவகோஷரின் பரம்பரைப் போஷகனது பேரரசைப் போல, ஹவிஷ்கனின் பேரரசும் பரந்திருந்தது. மேற்குக் காபூலில் 'வார்டாக்' (Wardak) என்னுமிடத்தில், அறிக்கை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனின்று ஹவிஷ்கனது பேரரசு மேற்கு முகமாய் விரிந்ததென்றும் எண்ணக்கூடும். மதுரா, குஷானப் பேரரசின் முக்கிய நகரமாய் விளங்கி வந்தது. இவன் முன்னேர்களில் தலைசிறந்தவனுல் எவ்வாறு பெஷாவர் அலங்கரிக்கப்பட்டதோ, அவ்வாறே, மதுராவிலும் ஹவிஷ்கன் பல சின்னங்களை எழுப்பினுன். ஹவிஷ்கனுக்கு உதவியாகவோ அல்லது போட்டியாகவோ, கனிஷ்கன் என்ருெருவன் இருந்தான் என்பது தெரியவருகிறது. ஆராக் (Ara) கல்வெட்டில்

குறிப்பிடப்பட்டிருக்கும் இவன், 'வஜேஷ்கன்' (Vajheshka) அல்லது வசிஷ்கன் என்பவனுக்குக் குமாரன் என்றும், மாபெரு மன்னன போன்ற விருதுகளுடன, முன்னோர்கள் கொண்ட 'மன்னர் மன்னன்' 'தேவகுமாரன்' (தேவபுத்திரன்) என்னும் விருதுகளேயும் 'கெய்சரா' (Kaisara) 'சீசர்' (Caesar) என்னும் நவீன விருதுகளேயும் சூடியிருந்தான். கல்ஹணரது வரலாற்று ஏடுகளில் 'ஹஷ்கன், ஜுஷ்கன்' என்பவர்களைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இக் குறிப்புகள் ஹவிஷ்கன், வஜேஷ்கன், அவன் மகன் ஆகியவர்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இவர்கள் காஷ்மீரத்தில் மூன்று பெருநகரங்களை எழுப்பித் தங்கள் பெயரையும் அந் நகரங்களுக்குச் சூட்டினார்கள். இங்குக் குறிக்கப்பட்டிருக்கும் கனிஷ்கன் வாசிஷ்கனுக்கு முன்னோனாகவும் இருக்கலாம். கல்ஹணரால் குறிக்கப்படும் மன்னனும் 'ஆரா'க் கல்வெட்டில் குறிக்கப்பட்டிருப்பவனும் ஒருவனே எனக் கொள்வதே மிகவும் பொருந்தும்.

கனிஷ்க சகாத்த ஆண்டு 67 முதல் 98 வரையிலும் அரசு செலுத்திய முதலாம் வாசுதேவன், குஷானிய வமிசத்தினரின் தலைசிறந்த இறுதி மன்னனாய் விளங்குகிறான். அவனுடைய கல்வெட்டுகள் பெரும்பாலும், மதுரா அல்லது அதன் சுற்றுப்புறங்களிலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவனுடைய நாணயங்களில் சிவபிரானது உருவம் பொறிக்கப்பட்டுள்ளதேயன்றி, ஈரானியக் கடவுளர் உருவங்கள் காணப்படுவதில்லை. நாளடைவில் வடமேற்கு மாகாணங்களுடன் அவனுக்குத் தொடர்பற்றுப் போயிருக்கக்கூடும். வடமேற்கில், குஷானிய ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பாரசீக சசானியரின் ஆட்சி பெரிதும் காரணமாயிருந்தது. கி. பி. மூன்றும் நூற்றுண்டில் யூ-ச்சியினரை எதிர் நோக்கியிருந்த நான்கு தனி அரசுகளைப்பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. பேரரசு சிதறத் தொடங்கிய உண்மையை இவை குறிப்பதாகக் கொள்ளலாம். தேவகுமாரனின் இறைமையை இவ்விராச்சியப் பகுதிகள் ஏற்றுமிருக்கலாம். யமுனை நதிப் பள்ளத்தாக்கில் குஷானியரைத் தொடர்ந்து நாகர் ஆட்சி செலுத்தலாயினர். மதுரா, பதுமாவதி (பதம் பாவேய), பிரயாகை (அலகாபாது), குப்தருடன் இணைந்து மத்திய-இந்தியப் பகுதிகளில் சில, சாகேதம் (அயோத்தி), மகதம் (தெற்குப் பீகார்) முதலிய இடங்கள் நாகர் ஆட்சியிலிருந்தன என்பது அறிவிக்கப்படுகிறது. கி. பி. நான்காம் நூற்றுண்டினிடையில், குப்தப் பேரரசர்கள் நாகர்களை அடி பணிய வைத்தார்கள். பொலிவிழந்த தேவகுமாரன் இந்திய எல்லைப்புறத்தின் சிறு பகுதியொன்றில் ஆண்டுவந்தான். விரைவில் குப்தப் பேரரசின் இணையற்ற வலிமையை அவன் உணர்ந்தான்.

# 9. மௌரியப் பேரரசுக் காலப் பண்பாடும், கிரேக்கர் சித்தியர் படையெடுப்புக் கால நாகரிகமும் (c. கி. மு. 324-கி. பி. 320)

## (Civilisation in the Era of Mauryan Imperialism and of Graeco–Scythian invasions) (c. 324 B. C.-A. D. 320)

### அரசியலமைப்புகள்

இக் காலத்தில் இந்துகுஷ் மலையிலிருந்து கோதாவிரி, கிருஷ்ணா நதிப் பள்ளத்தாக்குகள் வரையிலும், பரந்த சாம்ராச்சியங்களைக் காண்கிறோம். எனினும், பேரரசு ஆட்சி முறை அல்லது கோனாட்சி முறை மட்டிலுமே வழக்கிலிருந்ததாகக் கொள்வது தவறாகும். மேற்பார்வையாளர், நாட்டில் நடக்கும் சம்பவங்களை விசாரித்தும், பார்வையிட்டும் அறிந்த செய்திகளை மன்னனுக்கோ அல்லது அரசனில்லாத நாடுகளில் மாஜிஸ்டிரேட்டுகளுக்கோ அறிவிப்பர் என, மேற்பார்வையாளரின் நடவடிக்கைகளைக் குறிக்கும் கிரேக்க வரலாற்று ஆசிரியர் கூறுவர். மாஜிஸ்டிரேட்டுகளின் ஆட்சி நடைபெற்ற அரசனற்ற நாடுகளும் மன்னராட்சி நடைபெற்ற நாடுகளுடன் இருந்தன. தனியாட்சி நிலவிய சில நகரங்களையும் 'அரியன்' (Arrian) என்பார் குறிப்பிட்டுள்ளார். இக் கால இறுதியில் சுய ஆட்சி பெற்ற கூட்டத்தினரும் இருந்தனரென்பது நாணயச் சான்றுகளிலிருந்து தெரியவரும். அத்தகைய நாடுகள் 'கணம்' (Gana) என்ற பெயரால் வழங்கப்பட்டனவெனினும், 'சங்கம்' (Sanga) என்ற பெயரும் அவற்றிற்கிருந்து வந்தது.

இந் நாட்டைப் பொறுத்தவரையில் முடியாட்சி என்றுமே வழக்கிலிருந்தது ; நம் கவனத்திலிருக்கும் காலமும் அதற்கு விலக்கன்று. பல பகுதிகளிலும், மரபிலுதித்த முடி தரித்த மன்னனுடன் மற்றுமொருவனையும் துணை அரசனாகவோ அல்லது

உதவியாளனாகவோ கொள்ளும் வழக்கம் காணப்படுகிறது. இத்துணைவன் அரசமரபிலுதித்தவனாய் அல்லது துணை வேந்தனாய்க் காணப்படுகிறான். இவனைப் 'புவராஜன்' அல்லது 'யுவமகாராஜன்' (இளவரசன்–துணை வேந்தன்) என்ற பெயரால் வழங்குவது மரபு. சில இடங்களில் இவனுக்கும் அரசனுக்குரிய விருதுகள் பல சூட்டப்பட்டுள்ளன. அரசியல் நூல்கள் இத்தகைய ஆட்சிகளை 'துவைராஜ்யம்' (Dvairajya) அல்லது 'இரட்டையாட்சி' எனக் கூறுகின்றன.

## அரசபதவியைப் பற்றிய கருத்துகள்
(Ideas of Kingship)

அரச பதவியைப்பற்றிய கருத்துகள் சற்று மாறுதலடைந்து காணப்படுகின்றன. இக் காலத் தொடக்கத்தில் 'மன்னன் மனிதப் பிறவி' என்ற கருத்தும், மானிடனெனினும் தெய்வங்களால் நேசிக்கப்பட்டு அருள் பெற்றவன் என்ற கருத்தும் நிலவி வந்தன. உதாரணமாக, அசோகர் தம்மைத் 'தேவனாம்பிய' அல்லது 'ஆண்டவநேயன்' எனக் கூறிக்கொண்டார். 'தெய்வீக மன்னன்', 'தெய்வம் போன்ற அரசி' என்ற சிலவிருதுகள், கிரேக்கரால் புகுத்தப்பட்டன. கிறித்தவ சகாத்த முற்பகுதியில், பார்த்திய மன்னனொருவன் 'தேவ விரதன்' (Deva-vratha) என்னும் விருதைச் சூடியிருந்தான். பெண் தெய்வமெனக் கருதப்பட்ட ஓர் ஆற்றின் புதல்வனான புராண நாயகனுக்கும், போர்க்கடவுளான கார்த்திகேயனுக்கும், இப் பெயர் வழங்கி வந்தது. இதிலும் குஷானியப் பெருமன்னர், 'தேவபுத்திரன்', (கடவுளின் குமாரன்) என்னும் விருதையும் சூடி வந்தனர். மன்னரைக் கடவுளாகக் கருதும் வழக்கம் முற்றிலும் நிறைவேறி வந்ததென்பது கண்கூடு. மன்னனது தெய்விகத் தன்மையைக் குறித்த கருத்துகள் வளர்ந்தன. குறிப்பாக அந்நியராட்சி நிலவிய பகுதிகளில் இக் கருத்துகள் மிகவும் அதிகமாய் நிலவி வந்தன. 'தேவபுத்திரன்' என்னும் விருதில் கிரேக்க சீன ஆதிக்கங்களைத் தெளிவாகக் காணலாம்.

சித்திய 'தேவகுமாரன்' முன்னோர்களான அரசர்களும் வலிமையற்ற பொம்மைகளாய் இல்லை. பேரரசும், பெரும்படைகளும், செழிப்புமிக்க நிலப்பகுதிகளின் சீர்பெருகு செல்வமும் இவர்களிடம் அமைந்திருந்தன. சந்திரகுப்தன், அசோகர், காரவேலன் கௌதமி புத்திரன் உள்ளிட்ட மன்னர்பலர் விட்டுச் சென்றிருக்கும் பத்திரங்களிலிருந்தும், கிரேக்க நூலாசிரியர்களின் குறிப்புகளிலிருந்தும், மன்னர்கள் தலைமை தாங்கிப் படைகளைப் போர்க்களத்திற்கு நடத்திச் செல்வது வழக்கமென்பதை

அறியலாம். நீதி வழங்குதல், அறிக்கைகளை ஆராய்ந்து மீண்டும் விடுத்தல், முக்கிய அலுவலர்களை நியமித்தல், வரிகளை நீக்குதல் அல்லது குறைத்தல், அரசாங்க அலுவல்களில் பொதுவில் பெரும்பங்கு கொள்ளுதல் ஆகிய வேலைகளையும் அரசர்கள் கவனித்து வந்தார்கள். அரசாங்க அலுவல்களில் மிக முக்கிய மானவை அவர்கள் வசமிருந்தன. இத்தகைய அதிகாரங்களை யும், எல்லையற்ற செல்வத்தையும் பெற்றிருந்த மன்னரை, இக் காலங்களில் வழங்கிவரும் வரையறுக்கப்பட்ட அதிகார முடைய மன்னர்களைப்போலக் கருதலாகாது. அக் காலத்து இந்து மன்னர்களை எல்லையற்ற அதிகாரம் பெற்ற வல்லாட்சி யாளர்கள் என்று கருதுவதும் தவறாகும். தொன்மையான சில விதித் தொகுப்புகளை அக் காலத்து வலிமைமிக்க மன்னனும் மதித்து நடந்துவந்தான். அரசின் முக்கிய அமிசமாகக் (பிர கிருதி) குடிமக்கள் விளங்கினார்கள். நாட்டுக்குத் தலைவன், குடிகளைத் தன் மக்களாகக் (பிரஜா) கருதி, அவர் தம் நலன் பேணுவதைக் கடமையாகக் கொண்டிருந்தான். மக்களுக்குத் தான் செலுத்தவேண்டிய கடனை நல்லாட்சியொன்றினாலன்றி ஈடுசெய்ய இயலாதென்பதை அவன் நன்குணர்ந்திருந்தான். நலச் சுய ஆட்சி, சட்டமியற்றுதல், கிராமப் பகுதிகளில் நீதி வழங்குதல் ஆகிய பல அலுவல்களில் மக்களுக்குப் பங்கு கொள் ளும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருந்தன. நகர்ப்புறங்களிலும் அரசியல், பொருளாதார, சமூக, சமயக் குழுக்கள், சுய நிருவாக உரிமை பெற்று விளங்கியதால், ஆட்சித்துறையின் மேன்மை தங்கிய தலைவரின் அதிகாரத்திற்கு அமைதி நிலவிய காலங் களில் ஆணையிடும் உரிமை பெற்றிருந்தன. இறுதியாகத் தலை நகரிலும், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த மாகாணப் பகுதி களிலும் அமைச்சர் குழுக்கள் (மந்திரி பரிஷத், மதி சச்சிவ) இருந்தன. ஆய்வுரை வழங்கும் உரிமை பெற்ற இக் குழுக்களை நெருக்கடியான காலங்களில் தவறாமல் கலந்தாலோசிக்கும் வழக்கமிருந்தது.

## அரசியலைப்பற்றிய இலக்கியம்
## (Literature on Polity)

இக் காலத்து ஆட்சி முறைகளை நன்குணர்ந்து அறிவதற்குக் கல்வெட்டுகள், கிரேக்க உரோமானிய ஆசிரியரின் வரலாற்றுச் செய்திகளடங்கிய ஏடுகள், குறிப்பாக மெகஸ்தனீஸின் நூல் 'ராஜ சாத்திரம்' அல்லது 'அர்த்த சாத்திரம்' எனப் பெயர் பெற்ற அரசியல் இலக்கியம் ஆகிய மூன்று வகையான சான்று களை நன்கு ஆய்தல் வேண்டும். அரசியற்கலையைப்பற்றிய அரிய குறிப்புகள் சட்டம் அல்லது புராணத் திரட்டுகளில் பொதிந்து

காணக்கிடக்கின்றன. சில தனி நூல்களும் உண்டு. சந்திரகுப்த மௌரியனுக்கு அமைச்சனெனப் பரம்பரைச் செய்திகள் கருதி வரும் கௌடில்யன் எழுதிய நூலான 'அர்த்த சாத்திரம்' தனி நூல்களுள் தலைசிறந்து விளங்குகிறது. 'பாணர்' என்னும் வட மொழி நாடக ஆசிரியர் காலத்திற்கு (கி. பி. ஏழாம் நூற்றாண்டு) முன்பும், சமணரின் 'நந்தி சூத்திரங்கள்' (கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்பு) தோன்றுவதற்கு முன்பும் 'அர்த்த சாத்திரம்' தோன்றியிருக்கவேண்டும். இப்போது நமது ஆய்விற்கு வரும் நூலை, முற்றிலும் மௌரிய காலத்து நூலாகக் கொள்வது மனச்சான்றுக்கு ஒவ்வாது. 'சீனப் பட்டம்' (Chinapatta–சீன நாட்டுப் பட்டுத்துணி), வடமொழி இலக்கியங்களில் அதிகமாகக் குறிக்கப்படுகின்றது. 'நாகார்ஜுன கொண்டா'க் கல்வெட்டு களே முதன் முறையாகச் சீனத்தைக் குறிக்கின்றன. முற்கால மௌரியப் பேரரசெல்லைக்கு அப்பால் சீனம் இருந்தது. 'வடமொழி' அல்லது 'சம்ஸ்கிருதம்' ஆட்சி மொழியாய் இருந்த தென்னும் குறிப்பும் கவனத்திற்குரியது. மௌரியர் காலத்தில் வடமொழி, ஆட்சி மொழியாய் வழக்கிலில்லை என்பதுதெளிவு. நிறை, நாணயங்கள் முதலியவைகளைப்பற்றிய குறிப்புகளடங் கிய பகுதியில் 'தினேரியஸ்' (Dinarius) என்பதைப்பற்றிய குறிப் பெதுவும் இல்லாமையால், பல ஆண்டுகளுக்குப்பின் அரசு செலுத்திய 'குப்தர்' காலத்து நூலாகவும் கொள்வதற்கில்லை. குப்தர் காலத்தில் எழுதப்பட்ட சமண சமய இலக்கியங்களில் கிட்டும் செய்தியும் இக் கருத்தை உறுதிப்படுத்துவதா யமைகின்றது.

## மௌரியர் ஆட்சி முறை
(Maurya Administration)

இக் காலத்து ஆட்சிமுறை வரலாற்றை இரு தலையங்கங் களில் ஆராய்ந்து அறியலாம். அவை முறையே, (1) மௌரிய ராட்சி முறை (2) மௌரியரின் பின் போந்த கிரேக்க, சித்திய, இந்தியச் சந்ததியாரின் காலத்து ஆட்சிமுறை என்பவை.

மௌரிய மன்னன் தெய்விகச் சத்தி பெற்றிருப்பதாகக் கூறவில்லை என்பதை முன்னர்க் குறித்தோம். அசோகர் குடிகளை மக்களாகக் கருதி, தாயொருத்தி தன் மகவை நற்றுதிகளிடம் ஒப்புவிப்பது போல, அவர்களை அலுவலரிடம் ஒப்புவித்தார். இச் செயல்களில், அரசியலில் தந்தை மனப்பாங்கு என்னும் குறிக்கோள் விளக்கம் பெறுகிறது. தாம் மேற்கொள்ளும் எவ் வகை முயற்சியும் உயிரினங்களுக்குத் திரும்பச் செலுத்தும் கடன் எனக் குறிப்பொன்றில் அறிவிக்கிறார். கைவசமுள்ள

கௌடில்யனது நூலான அர்த்த சாத்திரம், மௌரியர் காலத்திற்குப்பின் எழுந்ததென்றாலும், பழங்காலக் குறிப்புகளையும் கையாண்டு வருமாறு அறிவிக்கிறது. தனக்கு மகிழ்ச்சியூட்டுபவைகளை மன்னன் சிறந்தன என்று எண்ணக்கூடாது. மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் யாவற்றையும் மன்னன் சிறந்தனவெனக் கொள்ள வேண்டும். மக்களிடம் தந்தையைப் போல அன்பு செலுத்துமாறும் மன்னனுக்கு ஆய்வுரை வழங்கப்படுகிறது.

அரசனுக்களிக்கப்பட்ட அதிகாரங்கள் விரிவானவை. போரிலும் நீதி வழங்குவதிலும், மன்னன் பங்கு கொண்டான் என்பதை மெகஸ்தனீஸின் நூலின் வாயிலாக அறிகிறோம். வழக்கு விசாரணைகளின் போது, வழக்கமாக, அவயங்களுக்குச் சமனமூட்டும் நேரம் நெருங்கினாலும், குறுக்கீடுகளை மன்னன் விரும்புவதில்லை. முக்கிய அலுவலர்களை அமர்த்துவது, பொதுக்கொள்கைகளைத் தீர்மானிப்பது, ஆணைகளைப் பரிசீலனை செய்து வெளியிடுவது, அலுவலருக்கும் மக்களுக்கும் வழிகாட்டியாகச் சட்டங்களைத் (சாதனம், தர்ம நியமம்) தொகுப்பது ஆகிய வேலைகளை அரசன் நேரில் கவனித்து வந்தான். தொலைப் பகுதிகளிலுள்ள அலுவலரின் நடவடிக்கைகளைக் கண்காணித்து, அவ்வப்போது மன்னனுக்கு இரகசியமாகச் செய்தி அறிவிப்போரும், சுற்றுப்பிரயாண நீதிபதிகளும் இருந்தார்கள். இவர்களோடு, அரசியல் கடிதப் போக்குவரத்துக் கொள்வதற்கெனப் பல சாலைகள் அமைக்கப்பட்டு, பத்து 'ஸ்டேடிய' (Stadia)த்திற்கு ஒரு தூண் வீதம் கற்றூண்கள் நடப்பட்டிருந்தன.

ஆட்சியெனும் பெருஞ்சுமையை ஒருவனே தாங்குவது அருமையாயிருந்தது. அரசனுக்குத் துணையாக, ஆய்வுரைவழங்கும் குழுவொன்று இருந்தது. 'பரிஷத்' அல்லது 'மந்திரி-பரிஷத்' என்னும் பெயர் கொண்ட இக் குழுவின் அமைச்சரை நெருக்கடி நேரங்களில் கலந்தாலோசிப்பது வழக்கமாயிருந்தது. நாட்டின் திருவாக அலுவல்களைக் கவனிப்பதற்கெனத் தேர்ச்சி பெற்ற அலுவலர் (நியாய) பலர் நியமிக்கப்பட்டிருந்தனர். 'மாவட்ட அலுவலர்' (அக்ரோநோமாய்), 'நகர-கமிஷனர்கள்' (அஸ்திநோமாய்), இராணுவ நிருவாக அலுவலர்கள் என மூன்று வகையான பணியாளரைக் கிரேக்க நூலாசிரியர் குறிக்கின்றனர். அசோகர் கல்வெட்டுகளில் 'ரஜுகர்', பிரதேசிகர் என்னும் அலுவலரின் பெயர்கள் காணப்படுகின்றன. ரஜுகர்,' ஜனபதங்கள்' அல்லது நாட்டுப்புற வாசிகளின் நலன்களையும், 'பிரதேசிகர்', பிரதேசம அல்லது மாவட்ட நலனையும், 'மகாமாத்

திரர்' அல்லது உயரிய அலுவலர், நகர நிருவாகம் முதலிய சில்லறை வேலைகளையும் (நாகால வியோகலக) கவனித்துவந்தனர். இவர்களைத் தவிர 'யுக்தர்' என்னும் குமாஸ்தாக்களும், 'லிபிகாரர்' அல்லது எழுத்து வேலை செய்வோரும், 'படிவேடகர்' அல்லது செய்தி அறிவிப்போருமாகிய சிறு அலுவலர் பலரும் இருந்தனரென்பதை அறியலாம். அர்த்தசாத்திர நூலிலும் அலுவலர், யுக்தரென்றும் மகாமாத்திரர் என்றும் பெயரிட்டு வழங்கப்படுகின்றனர். 'தீர்த்தர்' என்னும் உயர்பதவியினர் பதினெண்மரை அர்த்தசாத்திரம் குறிக்கும். 'மந்திரி' (முதலமைச்சன்), புரோகிதன் (ஆசான்), 'யுவராஜா' (பட்டத்துக்குரியவன்), 'சேனபதி' (படைத்தலைவன்) ஆகியோர் இவர்களுள் முதன்மையானவர். 'அத்தியக்ஷகர்' அல்லது அரசாங்கத்துறைக் கண்காணிப்பாளர் என்னும் ஒருவகை அலுவலரையும் அரசியல் இலக்கிய நூல் குறிக்கும். சாதி இன, தேசிய வேற்றுமை பாராட்டாமல், அலுவலர் அமர்த்தப்பட்டனர். வைசியரும், யவனரும் நாட்டின் சிறந்த பதவிகளில் அமர்த்தப்பட்டனர்.

மன்னன் நீதித்துறையின் தலைவனாயும் விளங்கி வந்தான். நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் 'ரஜுகர்', 'மகாமாத்திரர்' போன்ற அலுவலர் தனிப்பட்ட வழக்குத் தீர்ப்பு மன்றங்களுக்குத் தலைமை தாங்கினர். அந்நிய நாட்டினர் எடுத்துச் சென்ற வழக்குகளையும் கேட்டு நீதி வழங்க வல்ல நடுவரைப்பற்றிய குறிப்புகளைக் கிரேக்க நூலாசிரியர் அளிப்பர். கிராமப் பகுதிகளில் கிராமத்தலைவனும் முதியோரும் சிறு வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்தனர். நடைமுறைகளிலும், நீதிநிருவாகத்திலும் அசோகர் பல மாறுதல்களைப் புகுத்தினார் என்பது தெரிய வருகிறது. ஒருமைப்பாட்டை நிலை நிறுத்தியபோதும், ரஜுகருக்குப் போதிய உரிமையளித்து, இடையூறின்றிச் செவ்வனே நீதி வழங்கும் வாய்ப்பளித்தார். எல்லைப்புற மாகாணங்களிலுள்ள நீதிபதிகளிடம் மன்னர் திருப்தியற்றிருந்தார். தண்டனை விதித்தொகுப்பின் கடுமையைக் கிரேக்கர் குறித்துள்ளனர். கலிங்கத்துக் குடிமக்கள் நீதியற்ற சிறைத்தண்டனைகளையும் சித்திரவதைகளையும் அனுபவிக்க நேர்ந்ததெனப் பேரரசர் சில கல்வெட்டுகளில் குறித்துள்ளார். கலிங்கத்திலும் மற்ற மாகாணங்களிலும் தோன்றிய திருவாக ஊழல்களைக் கட்டுப்படுத்துவதற்கெனப் பேரரசர் அல்லது அவருடை பிரதிநிதிகள், ஐந்து அல்லது மூன்று ஆண்டுகட்கொருமுறை, இயற்கையில் மென்மையும் கருணையும், உயிரினங்களின் புனிதத் தன்மையில் நம்பிக்கையுமுள்ள அலுவலர்களை முறை வைத்து அப் பகுதிகளுக்கு அனுப்பி வந்தனர்.

படைகளையும் மன்னன் தலைமை தாங்கி நடத்தினன். அலெக்ஸாந்தரின் படைவீரரைச்சந்திரகுப்தன் நேரில் எதிர்த்தான். கலிங்கப்போரின் பயங்கர விளைவுகளை அசோகர் நேரில் கண்டார். மௌரியராட்சியின் இறுதியிலேயே, சேனுதிபதியொருவன் அரசனைவிட மேம்பட்டு விளங்குவதையும், படையினர் அவனுக்கிணங்கிக் கீழ்ப்படிவதையும் காண்கிறேம். 600,000 காலாள்களையும், 30,000 குதிரைப்படையினரையும், 9,000 யானைகளையும், பல தேர்களையும் சந்திரகுப்தனது இராணுவம் கொண்டிருந்ததெனப் 'பிளினி' என்னும் உரோமானிய ஆசிரியன் சித்திரித்துள்ளான். மன்னனது உயிரைக்காப்பதற்கென, ஆயுதம்தாங்கிய உடற்கட்டமைந்த பெண்டிர் அமர்த்தப்பட்டிருந்தனர். இராணுவக் கண்காணிப்பிற்கென முப்பது அங்கத்தினரடங்கிய அவையொன்று இருந்தது. ஐந்து பேராள்களையுடைய ஆறு பிரிவுகளாக இவை பணியாற்றி வந்தன. கடற்படை, போக்குவரத்து, பொருள் சேகரித்தல், காலாட்படை, தேர்கள், யானைகள் எனத் துறை ஒவ்வொன்றும், ஒவ்வொரு பிரிவினரால் மேற்பார்வையிடப்பட்டு வந்தது. இராணுவ நிருவாகத்திலும், நீதித்துறையிலும், அசோகர் புதிய பல மாறுதல்களைப் புகுத்தியிருக்க வேண்டும். அவர் போர்களை இகழ்ந்ததோடு வேட்டையாடுவதையும் ஒழித்தார். நாடெங்கும் போர் முரசொலி நின்று, தர்ம கீதம் (சமயப் பிரசங்கம்) ஒலிப்பதாகக் கல்வெட்டொன்றில் மிக்க மகிழ்ச்சியோடு அசோகர் குறித்துள்ளார். இச் சூழ்நிலையில் இராணுவத்தினர், மனவெழுச்சி மங்காமலும், திறமை குன்றுமலும் விளங்கியிருந்தால், அதைப் பேராச்சரியமானதொரு செய்தியாகவே கருத வேண்டும்.

இராணுவ, சிவில் நிருவாகச் செலவுகள் மிகுதியாய் இருந்திருக்க வேண்டும். கிராமங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட முக்கிய வரிகளான 'பாகம்', 'பலி' ஆகியவைகளை அசோகர் கல்வெட்டு ஒன்று குறிக்கிறது. விளைபொருளில் மன்னனுக்கென அளிக்கப்பட்ட ஆறில் ஒரு பகுதி 'பாகம்' எனப்படும். சில சமயங்களில் இது நான்கில் ஒரு பகுதியாகவோ அல்லது எட்டில் ஒரு பகுதியாகவோ காணப்படுகிறது. குறிப்பிட்ட அலுவலர் சிலருக்கு ஊதியமளிப்பதற்கெனத் தனிப்பகுதிகளில் வசூலிக்கப்பட்ட அதிகபட்ச வரியைப் 'பலி' என விமரிசகர் சிலர் கூறுவர். நான்கில் ஒரு பகுதியை வரியாகச் செலுத்துவதோடு, குடியானவர் நில உபயோகத்திற்கெனத் திறை செலுத்தியும் வந்தனர். இந்திய நாடு முழுவதும் மன்னனுக்குச் சொந்தம். எனவே, தனி மனிதன் நிலச்சொந்தக்காரனுக இருக்க வகையில்லை என்னும்

கொள்கை நில உபயோக வரியை நன்கு விளக்கும். இவ்வுபரி வரியைப் 'பலி' என ஆதியில் குறித்திருக்கலாம். நீர்ப்பாசன வசதிகளை மேற்பார்வையிட்டு, நிலங்களை அளந்தும் பணியாற்றிய 'அக்ரோநோமாய்' நிலவரிகளை வசூலித்து வந்தான். ஆயரிடமிருந்து ஆடுமாடுகளும் வணிகரிடமிருந்து திறைப்பணமும் குறிப்பிட்ட சில சேவைகளும் அரசினருக்குரியவைகளாய் விளங்கின. நகரங்களில் பிறப்பு இறப்பு வரிகளும், தண்ட வரியும், விற்பனை வரியும் அரசாங்கத்திற்கு வருவாயளிக்கும் முக்கிய சாதனங்களாயிருந்தன. அர்த்த சாத்திரம், நாட்டுப்புறங்களிலும், அரண்சூழ்ந்த நகரங்களிலும் (ராஷ்டிரம், துர்க்கம்) விதிக்கப்பட்ட வரிகள் வேற்றுமைகளைக் குறிப்பதோடு, 'சமஹர்த்திரி' (Samahartri), 'சன்னி தாத்திரி' போன்ற உயர்ந்த ரெவின்யூ அதிகாரிகளையும் குறிக்கின்றது. மௌரிய காலக் கல்வெட்டுகளில் இத்தகைய அதிகாரிகளைப்பற்றிய குறிப்பு எதுவுமில்லை. இந்தியச் சமுதாயத்தின் ஏழாம் வருணத்தைச் சித்திரிக்கும் கிரேக்க நூலாசிரியர் இவ்வருணம் அரசருக்கு ஆய்வுரை வழங்குவோரையும் மதிப்பிடுவோரையும் உள்ளடக்கும் எனக் குறிப்பதோடு, நாட்டிலுள்ள கருவூலங்களையும் அக் கருவூலங்களை மேற்பார்வையிடுவோரையும் குறிக்கின்றன.

வருவாயில் பெரும்பகுதி இராணுவ நிருவாகத்திற்கெனச் செலவிடப்பட்டது. தொழில் நிபுணர்களும் வாழ்க்கைக்குத் தேவையான பொருளைக் கருவூலங்களிலிருந்து பெற்றார்கள். இராணுவத்தினருக்குத் தேவையான கவசங்களையும், உழவருக்கும் மற்றத் தொழிலாளிகளுக்கும் தேவையான கருவிகளையும் இவர்கள் செய்து முடித்தார்கள். பாடலிபுத்திரத்தைச் சுற்றியமைந்துள்ள மாச்சுவர்களையும் கோபுரங்களையும் எழுப்புவதற்கும், சூசா, இக்படானா நாட்டு அரச சின்னங்களைக்காட்டிலும் வனப்புமிக்க கம்பீரமான அரண்மனைகளை அமைப்பதற்கும், இத்தொழில் நிபுணர்களின் சேவை பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென்பது தெளிவு. அசோகர் காலத்து ஒற்றைக்கல் தூண்களையும், பிற நினைவுச் சின்னங்களையும் இத் தொழில் வல்லுநர்களே அமைத்திருக்க வேண்டும்.

இடையரும் வேடரும், நாட்டிலிருந்து கொடிய விலங்குகளையும் பறவையினங்களையும் விரட்டுவதற்கென அரசாங்கத்தினரிடமிருந்து தானியத்தை ஊதியமாகப் பெற்றனர். அரசாங்க உதவி பெற்றவர்களுள், மற்றுமொரு வகுப்பினர் தத்துவஞானியராவர். 'சிரமணரும' (முனிவர்), 'பிராமணரும்' இவ்வகுப்பைச் சார்ந்தவராயிருந்தனர். நீர்ப்பாசனத்திற்கும், மற்றும் மக்க

ளுக்குப் பயனுறும் வகைகளிலும் அரசாங்கப் பணம் பேரளவில் செலவிடப்பட்டது. மௌரியராட்சியின் முற்பகுதியில் உருவாக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களில் கத்தியவாரிலுள்ள 'சுதர்சன' ஏரி முதன்மையானது. மௌரிய குல ஸ்தாபகரின் ஊழியனான புஷ்ய குப்தன் என்னும் வைசியன் இவ்வேரியை வெட்டினான். அசோகர் காலத்தில், யவனராஜனான துஷாபன், இவ்வேரிக்குரிய வாய்க்கால்களை அமைத்தான். முதல் மௌரியனின் அலுவலர்கள், நல்ல பாதைகளையும், மைல் கற்களையும் அமைத்திருந்தார்கள். நிழல் தரும் மரங்களையும், நீரூற்றுகளையும், புகழ்பெற்ற அவன் பெயரர் அமைத்திருந்தார். மக்களுக்கும், பிற உயிரினங்களுக்கும் தேவையான மருத்துவ மனைகளையும், அசோகர் கட்டுவித்தார்.

பரந்த பேரரசைத் திறமையாக ஆளும் நோக்கத்துடன், நாட்டைப் பலர் சிறு மாகாணங்களாகவும, ஒவ்வொரு மாகாணத்தையும் பல மாவட்டங்களாகவும் பிரித்திருந்தனர். மாவட்டங்கள் 'ஆகரம்', 'விஷய' அல்லது 'பிரதேச' எனப் பல பெயர்களால் வழங்கப்பட்டன. ஒவ்வொரு மாகாண நிருவாகத்தையும் கவனிப்பதற்கென 'வைசிராய்' அல்லது 'கவர்னர்' என்னும் அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தார் அரசகுல இளங்கோக்களும், மன்னர் அவையினரும் இப் பதவிகளுக்குத் தகுதியுள்ளவரெனக் கருதப்பட்டனர். உள் நாட்டுப் பகுதியை ஆண்டு வந்தோர் அல்லது நிருவகித்து வந்தோரும், 'ராஜா' என்னும் பட்டத்தைச் சூடிக்கொள்வது வழக்கமாயிருந்தது. அலுவலன் ஒருவன் இப் பட்டத்தைச் சூடியிருந்தான் என்பதைச் சான்றுகளைக்கொண்டு அறியலாம்; இவ்வாறு பெரும்பாலாரான அலுவலர் இவ்விருதைச் சூடியிருக்கக்கூடும். இவ் விருது, படைமானியத் தலைவனைக் குறிப்பதாகக் கருதலாம். ஆட்சியின் முற்பகுதியில், அலுவலருக்கு வாரிசுரிமை வழங்கப்படவில்லை என்ற பொதுக்கருத்து நிலவி வருகிறது. கத்தியவார், சௌராஷ்டிரப் பகுதிகளைப் பொறுத்த வரையிலும் வாரிசுரிமை இல்லையெனத் திட்டமாகக் கூறலாம். மாநிலப்பகுதியை நிருவகித்த அலுவலர், 'ராஜன்' என்ற பெயர் கொண்டதும், அசோகர் காலத்தில் ரஜுகருக்குத் தன்னாட்சியுரிமை வழங்கியதும், பிளவு சக்திகளை வளர அனுமதித்ததோடு, பேரரசின் சிதைவுகளுக்கும் காரணங்களாயமைந்தன. மௌரியராட்சியின் முற்பகுதியில் மாநிலக் கவர்னர்களின் மீது கடுமையான கண்காணிப்பிருந்து வந்தது. அரசகுலத்தைச் சார்ந்த வைஸ்ராய்களுடன், 'மகாமாத்திரர்' என்னும் சிறந்த அலுவலரும் அமர்த்தப்படடனர், இவர் அனைவரும் மன்னருடன் நேரடித் தொடர்பு கொண்டவர்.

கடமையில் தவறும் மகாமாத்திரர்களைச் கண்காணிப்பதற்கெனத் தலைநகரிலிருந்து அலுவலர் சிலர் அனுப்பப்பட்டனர் என்பதும் தெரியவருகிறது. இவர்களைத் தவிர, மத்திய அரசைச் சார்ந்த ஒற்றர் படையும் (மாஜிஸ்டிரேட்டு மேற்பார்வையாளர், பட்டிவேடகர்) இருந்தது. பேரரசு எல்லைக்குள் நடைபெறும் செய்திகள் யாவற்றையும் அவ்வப்போது அரசருக்கு அறிவிப்பதும், மற்ற அலுவலர்களைக் கண்காணிப்பதுமாகிய பணிகளை இவர்கள் மேற்கொண்டிருந்தார்கள். தாம் உணவருந்திக்கொண்டிருந்தாலும், அந்தப்புரத்திலிருந்தாலும், தனியறையில் வீற்றிருந்தாலும், பசுப்பட்டியிலிருந்தாலும், பல்லக்கிலோ அல்லது பூங்காவிலோ இருந்தாலும் எந்நேரத்திலும் எங்கிருந்தபோதும்-மக்கள் நலனைப்பற்றிய செய்திகளைத் தமக்கு அறிவிக்கவேண்டுமென அசோகர் கட்டளையிட்டிருந்தார்.

மௌரிய மத்திய அரசின் ஆதிக்கம் எல்லாத் துறைகளிலும் காணப்படுவதால், தனியார் முயற்சிக்கும் தன்னாட்சிக்கும் இடமில்லையெனக் கருதத்தோன்றும். தன்னாட்சி பெற்ற கூட்டத்தினர் இருந்தனர் என்பது தெரியவருகிறது. பண்டை நூலாசிரியர் இந் நாட்டில் தன்னாட்சி பெற்று விளங்கிய நகரங்களைக் குறிப்பிட்டுள்ளனர். தலைநகரிலும், நிருவாக வேலைகளைக் கவனிப்பதற்கென அங்கத்தினர் முப்பதின்மர் அடங்கிய குழுவொன்று இருந்தது. இராணுவ நிருவாகத்தைப் போல, இக் குழுவும் ஐந்து அங்கத்தினர் கொண்ட ஆறு கிளைக்குழுக்களாய்ப் பிரிந்து, பணியாற்றி வந்தது. இயந்திரக்கலை, அந்நிய நாட்டினரைக் கவனித்தல், பிறப்பு இறப்பு ஏடுகளைத் தயாரித்தல், வியாபாரம், பண்டமாற்று, அளவைகளும் எடைகளும், உற்பத்திப் பொருளை மேற்பார்வையிடுதல், சுங்கம் முதலிய வரிகளை வசூலித்தல் ஆகிய துறை ஒவ்வொன்றிற்கும் சிறு குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இந்திய இலக்கியங்களில் நகர மேற்பார்வையாளரை (Nagaradhyaksha, Nigamapradhana)ப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு துறையிலும் தலைவர் (மிக முக்கிய), அத்யக்ஷன் அல்லது ஆட்சித்துறைத் தலைமை அதிகாரி, துணை அலுவலர் நால்வருடன் தன் வேலைகளைக் கவனித்து வருவான். இக் குறிப்புகள் அரசாங்க அலுவலருக்குரிய பரிட்சைகளைப்பற்றிய செய்தியறிவிக்கும் கௌடில்யனது அர்த்த சாத்திரத்தில் காணப்படுகின்றன. 'நகரகன்' (Nagaraka) அல்லது நகர் காவலன் என்ற அதிகாரியொருவன், மௌரியர் காலத்திலிருந்தான் என்பதை அசோகரின் கலிங்கக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. நகர் காவலனின் பணிகளைப் பின்வரும் அதிகாரமொன்றில் குறிப்போம்.

## மௌரியருக்குப் பின் நிலவிய ஆட்சி முறை
## (Administration in the post Maurya Period)

கோனாட்சியைக் குறித்த கருத்துகள் மாறுதலடைந்தபோதி லும், மக்களை மகிழ்ச்சியுறச் செய்வதைத் தன் கடமையென மன்னன் மதித்து வந்தான். கிரேக்க சித்தியரின் ஆட்சிக்குட் படாத பகுதிகளில், அசோகர் காலத்து அரசு முறை வழக்கி லிருந்து வந்தது. ஆட்சி இயல் (அர்த்தவித்யா) கறபதற்குரிய கலையாய் இருந்தது.

இளவல்களுக்குத் தேவையான பயிற்சிகள், உயர் பதவி களில் அமர்த்தப்படுவதற்கான யோக்கியதாம்சங்கள், அமைச் சர்களை வகைப்படுத்துவதற்கான விதிமுறைகள், நகர்ப்புற மற்றும் நாட்டுப்புற மக்களின் நலன் பேணுவதற்கான வழி வகைகள், அருவருக்கத்தக்க 'கர' (அதிக வரி) 'விசிஷ்டி' (கட்டாய உடலுழைப்பு) 'பிரணய' (அன்பளிப்பு) மற்றும் வழக்க மான 'பலி', 'சுக' 'பாக' போன்ற வரிகளைக் கட்டுப்படுத்துவது; இவைபோன்ற ஆட்சி இயல்புகளை வற்புறுத்தும் கல்வெட்டுச் சான்றுகளிலிருந்து, ஆட்சி இயலுக்களிக்கப்பட்டிருந்த சிறப்பை உணரலாகும்.

ஆட்சி முறையில் புதுமைகள் பெரும்பாலும் வடமேற்கு இந்தியாவிலேயே புகுத்தப்பெற்றன. இப் பகுதியை, அந்நியர் கள் தொடர்ந்து ஆண்டுவந்தார்கள் என்பதை நாமறிவோம். மாகாண ஆட்சியில் ஏற்பட்ட புதுமை குறிப்பிடத்தக்கது. தட்ச சீலம், மதுரா, உஜ்ஜயினி போன்ற இடங்களில், பாரசீக மரபை யொட்டி 'சத்ரபர்' என்னும் அலுவலர் அமர்த்தப்பட்டனர். இவ் வலுவல் பரம்பரைச் சொத்தாக, வாரிசுகளுக்கு வழங்கப் பெற்றது. கிரேக்க மரபையொட்டி 'மெரிடார்க்' (Meridarch) 'ஸ்டிராட்டகாசு' (Strategos) என்ற அலுவலர்களுமிருந்தனர் என்பதற்கான சான்றுகளும் உண்டு. மாகாண ஆட்சியாளருக்கு ஆலோசனை கூறுவதற்கென குழுக்களுமிருந்தன.(Mati Sachiva). பிறர், பெரிதும் இராணுவ ஆட்சி முறைகளையே கையாண்டனர். சாதவாகன மன்னர்கள் 'மகாசேனபதி' (Mahasenapathi) என் னும் மாவட்ட அதிகாரிகளை நியமித்திருந்தனர். அவ் வதிகாரி கள் இராணுவ ஆட்சியியலையே பின் பற்றியிருந்தனர்.

பல பகுதிகளில் இராணுவ ஆட்சிமுறை ஏற்பட்டிருந்த போதிலும், தல ஆட்சி நிறுவனங்கள முற்றிலும் வழக்கொழிந்து விடவில்லை. பல சான்றுகளிலிருந்து, 'நிகமசபைகள்' (Nigama Sabha) என்ற நகரக் குழுக்களும், 'நகராட்சதர்சர்' (Nagara-

Kshadarsa) என்னும் நீதிபதிகளும், செயல்பட்டதாக அறிகிறோம். இவற்றை மௌரியர் கால நகரசபைகளுடனும் 'நகலவியோ காலக' (Nagala Viyohalaka) ர்களுடனும் ஒப்பிடலாகும். கிராமங்களில், கிராமத் தலைவனும், பிற அலுவலர்களும் ஆட்சி செலுத்தினர். கிராமச் சபைகள், மன்னனுக்கும் மக்களுக்குமிடையே, நிருவாகத் தொடர்பேற்படுத்தின.

## சமுதாய நிலை

இந்து சமுதாய அமைப்பின் இரு முக்கியக் கூறுகளான 'வருணம்' (சாதி), 'ஆசிரமம்' (சமய அடிப்படையிலுள்ள பல நிலைகள்) ஆகியவை மௌரியராட்சிக் காலத்தின் இறுதியில் உறுதி பெற்றுவிட்டன. சாதிவிட்டு மணம் செய்துகொள்ளவும், சாதித் தொழிலன்றிப் பிற தொழிலை மேற்கொள்ளவும் எவரும் அனுமதிக்கப்படவில்லையெனக் கிரேக்க நூலாசிரியர்கள் அறிவிக்கின்றனர். 'படை வீரன்' உழவுத்தொழிலை ஏற்க முடியாது. அதைப் போலவே, கைத்தொழில் செய்து வாழும் மரபைச் சார்ந்தவன், தத்துவ ஞானியாக மாறிவிட இயலாது. ஆனால், தத்துவபோதகர் (Sophist) எந்தப் பிரிவையும் சார்ந்தவராக இருக்கலாம் எனச் சில நூலாசிரியர்கள் குறிப்பிடுவார்கள். தத்துவ ஞானிகள் எளிமையாக வாழ்ந்தனர். படிப்பிலும், தத்துவ விசாரணைகளிலும் தங்கள் முழு நேரத்தையும் கழித்து வந்தனர். அவர்களில் சிலர் காய் கனிகளை உண்டு, மரவுரி தரித்துக் காடுகளில் வசித்தனர் (Bylobioi). இந்து சமுதாய ஆசிரம நிலைகளில் ஒன்றான 'வானப்பிரஸ்த'த்தில் கூறியுள்ள முறைப்படி அவர்தம் வாழ்க்கை அமைந்திருந்தது. குடும்ப வாழ்க்கை நடத்தியவர்கள் (கிரஹஸ்தர்) மற்றும் நாடோடித் துறவிகளைப்பற்றிய செய்திகள் அசோகரின் கல்வெட்டுகளில் காணக் கிடைக்கின்றன. இவ்வாறு, நான்கு படிகளைக் கொண்ட 'ஆசிரமம்' முறை மௌரியராட்சியின் முற்பகுதியிலேயே வேரூன்றிவிட்டது.

பல்வேறு சமயக்கோட்பாடுகள் தோன்றியமையாலும், அந்நியர் பலர் நாட்டில் குடியேறியமையாலும், சாதி முறைக் கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்ந்தன என்று கூறலாம். இந்திய அரசகுலத்தினர், அந்நிய ஆட்சியாளருடன் திருமணத் தொடர்புகொண்டார்கள். சாதவாகனச் சான்றிலிருந்து, அம்மரபைச் சார்ந்த மன்னன் ஒருவன், நான்கு சாதிகளும் இணைவதைத் தடுக்கப் பெருமுயற்சி செய்தான் என்றும் தெரியவருகிறது. அதே மன்னனைப் பிராமண குலத்தினருக்கும்

தாழ்ந்த குலத்தினருக்கு வாழ்வளித்தவன் என்றும் சான்றுகள் புகழ்ந்துரைக்கின்றன. 'வைசிய' 'சூத்திர'ப் பிரிவினர்களையே 'தாழ்ந்த குலம்' என்னும் அடைமொழி குறிக்கிறது. வைசியரும் சூத்திரரும், உழவு, ஆடு மாடு வளர்த்தல், வாணிபம் ஆகிய தொழில்களை மேற்கொண்டிருந்தனர் எனக் கௌடில்யரின் அர்த்த சாத்திர நூல் சித்திரிக்கின்றது. கிரேக்கச் சான்றுகளில் கிடைக்கும் செய்திகளினடிப்படையில், வைசியர், சூத்திரர் என்னும் பிரிவினருக்குள்ளிருந்த இடைவெளி மிகவும் குறைந்து விட்டதென்றே நம்ப வேண்டும். அதற்கு மாறாகத் தொழிலடிப் படையில் உழவர், இடையர், வணிகர் ஆகிய பிரிவினருள் வேற்றுமை வளர்ந்ததெனக் கூறவேண்டும். வனவாசிகளாகிய ஞானியரையடுத்து, மருத்துவர் கௌரவமிக்க புதுச் சாதியின ராகத் தலைப்பட்டனர். 'மேற்பார்வையாளர்' 'ஆலோசகர்' என்னும் அலுவலர்களும், செல்வாக்குப்பெற்ற புதுச் சாதியின ராக உருப்பெற்றனர். பாலி மொழியிலுள்ள மதக்கோட்பாடு களில் குறிக்கப்பெறும் 'குல' (Kula) என்பவரே 'அமாத்யர்' (Amatya) என்னும் ஆலோசகராவார்கள். மெகஸ்தனீசு (Megasthenes) வாழ்ந்த காலத்தில் இந்திய மக்கள், ஞானியர், உழவர், இடையர், வேடர், வணிகர், தொழிலாளிகள், படை வீரர், அமாத்யர் என்ற ஏழு சாதியினராகப் பிரிக்கப்பட்டிருந் தனர். சட்டத் தொகுதிகளிலுள்ள செய்திகளுக்கு முரணாகக் கிரேக்க ஆசிரியன் தான் கண்டவற்றைத் திரித்துக் கூறினான் என்ற ஐயப்பாட்டிற்கு இடமில்லை. நான்கு வருணச் (சதுர் வர்ண) சமூகத்தை மீண்டும் நிலை நிறுத்துவதற்குச் சிறந்த மன்னனாகிய கௌதமபுத்திர சாதகர்ணி முயன்றான். 'துவிஜ ரையும்' (பிராமணர்), 'அவரையும்' (தாழ்ந்த வகுப்பினர்) அரச னின் பாதுகாப்பிற்குரியவர் என்று கருதி வந்தானென்பதும், கருவமிக்க க்ஷத்திரியரை அவன் அடக்கி வைத்தானென் பதும் நாமறிவோம். படைச்சாதியினரைக் கௌதமிபுத்திரன் வெறுத்ததற்குரிய காரணங்கள் புலப்படவில்லை. 'மானவ தர்ம சாத்திர' (Manava-dharmasasthra) ஆசிரியர், யவனர், சாகர், பஹ்லவர் ஆகியோரைச் சாதியில் குறைந்த க்ஷத்திரியர் எனக் குறிப்பதாலும், க்ஷத்திரிய வகுப்பில் இத்தகையோர் அதிக மாகக் கலந்திருந்தமையாலும், கௌதமி புத்திரன் இவர்களை வெறுத்திருக்கக்கூடும். யவன, சாக, பஹ்லவரிடம் கௌதமி புத்திரன் மிக வெறுப்புற்றிருந்தான் என்பது நன்கு தெரிந்ததே. சாதிமுறை விதிகளை இரக்கமின்றி அமுல் நடத்துவதும் கடின மாகவே இருந்தது. சாதவாகனர் சாகரை மணந்தனர்.

முற்காலத் துரோணுசாரியைப்போல பிராமணர், படைத் தலைவராயும் அரசராயும் விளங்கினர்.

கிரேக்க நூல்களிலிருந்தும், சமகாலக் கல்வெட்டுகளிலிருந்தும் பெண்டிர் நிலையைப்பற்றிய சில குறிப்புகளை நாம் அறியலாம். இச்சைகளைக் கட்டுப்படுத்தி வாழ்ந்த பெண்டிர் சிலர், தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் கூறப்படுகிறது. மணமான பெண்டிர் தம் கணவரைப் போலப் புனித காவியங்களைப் படித்துணரும் வாய்ப்பின்றியிருந்தனர். அரசர்களிடையிலும், பிரபுக்களிடையிலும் பெண்டிர் பலரை மணந்துகொள்ளும் வழக்கமிருந்தும் வந்தது. மன்னரைப் பெண்டிர் சிலர் பாதுகாத்து வந்தனரென்றும், ஒருத்தி குடிபோதையிலிருந்த அரசனெருவனைக் கொன்று, அதற்குப் பரிசாக அவன் பின் போந்தானை மணந்தாள் என்ற நூதனமான கதையையும் நாம் கேள்வியுறுகிறோம். பயனற்றதும் சாதாரணமானதுமான சடங்கு முறையில் பெண்டிர் அதிகக் கவனம் செலுத்தினரென அசோகர் குறித்துள்ளார். கல்வெட்டுகளில் காணப்படும் 'ஓலோதான' (Olodhana) போன்ற சொற்கள் பெண்டிரைத் தனியே பிரித்து வைக்கும் பழக்கத்தைக் குறிப்பனவாய் அமைகின்றன. பெண்டிரைக் காப்பதற்கென மகளிர் நல அலுவலர் இருந்தனரென்பதும் தெரியவரும். அசோகரின் இளைய மனைவியாகிய காருவாகி வழங்கிய கொடைகளை அறிவிக்கும் ஏடுகளிலிருந்து, கணவன் ஈடுபடும் சமயச் சடங்குகளில் மனைவிக்கும் பெரும்பங்கு உண்டு என்பது நன்கு விளங்குகிறது. பத்திமிக்க விதவையின் வாழ்நாள்கள் எவ்வாறு அமைந்தன என்பதை விளக்கும் செய்திகள் நாசிக்கு கல்வெட்டில் காணப்படுகின்றன. உண்மை, அறக்கொடை, பொறுமை, உயிரினங்களிடம் மதிப்பு, தவநோக்கு, தன்னடக்கம், புலனடக்கம், இச்சை ஒழித்தல் போன்ற சீரிய நெறிகளைக் கடைப்பிடித்து, அரசத் துறவியின் மனைவியென (ராஜரிஷி வது-Rajarishibadhu) 'கௌதமி பாலஸ்ரீ' என்னும் கைம்பெண் அரசி வாழ்ந்தாள் என அக் கல்வெட்டுச் செய்தி அறிவிக்கும். தாய் சொல் துறக்காத தனயனென அவள் மகன் புகழ்ந்து பேசப்படுகிறுன். 'மதிப்பிற்குரியவர் என்றாலும், சுதந்தரப் பெறுவதற்குப் பெண்டிர் உரியவரல்லர்' என நீதி சாத்திர வல்லுநர் கூறுவர். எனினும், மகவுகளின் சார்பில் நாட்டு நிருவாகத்தை ஏற்று நடத்திய அரசகுலப் பெண்டிர் பலர் வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர்.

அடிமைகளை அமைத்துக்கொள்ளும் பழக்கம் வேரூன்றியிருந்தது. நீதி சாத்திரங்களும், அரசியல் நூல்களும் இப் பழக்கத்தை ஆதரிப்பதோடு, கல்வெட்டுகளிலும் இவற்றைப் பற்றிய தெளிவான குறிப்புகள் காணப்படுகின்றன. அடிமைகளுக்கும், கூலி வேலை செய்வோருக்குமுள்ள வேற்றுமைகளைக்

குறிப்பிட்டு யாவரையும் அன்புடன் நடத்துதல் வேண்டுமென அசோகர் வற்புறுத்துகிறார். மெகஸ்தனீஸின் குறிப்பை நம்பி, 'அரியன்' பின்வருமாறு கூறுகிறார்: 'இந்தியர் யாவரும் சுதந்தர முள்ளவர்; அவர்களுள் அடிமையென்று எவருமில்லை.' மெகஸ் தனீஸை மேற்கோளாகக்கொண்டு இந்தியர், அடிமைகளை அமைத்துக்கொள்வதில்லை என 'ஸ்டிராபோ' (Strabo) கூறுவர். பாடலிபுத்திர அரண்மனை வழக்கங்களைச் சித்திரிக்கும் இவ்வா சிரியர், அரசரைப் பாதுகாப்பதற்கென அடிமைப் பெண்களை அமர்த்தும் பழக்கமிருந்ததையும் குறிப்பர். தாய்தந்தையரிட மிருந்து விலை கூறி இவ்வடிமைகளை வாங்குவது வழக்கம். பெண் களை விலைக்கு வாங்குவதும் கொடுப்பதும் வழக்கிலிருந்தன. இனிமையான ஒயின் (Wine), உலர்ந்த அத்திப்பழம் ஆகிய பண்டங்களையும், தத்துவ ஞானியரையும் விலைக்கு வாங்கி அனுப்புமாறு, 'அமித்திரகேதஸ்' (Amithirochates) அல்லது பிந்து சாரன், ஆண்டியோக்கஸ் மன்னனை வேண்டிக்கொண்டதாக வும், தத்துவ ஞானிகள் கிரேக்க நாட்டில் விலை கூறப்படுவ தில்லை என ஆண்டியோக்கஸ் பதிலளித்ததாகவும், 'ஹேஜே சாந்தர், ஆதிநேயஸ்' (Hegesander and Athenaios) போன்ற நூலாசிரியர் குறிப்பிடுகின்றனர். பிந்துசாரன் ஆட்சியில் வேறு பழக்கமிருந்ததென்பது இதனின்று தெளிவாக அறியப்படும். 'ஒனிசிகிரி டோஸ்' (Onesikritos) என்னும் நூலாசிரியர், சிந்து சமவெளி கீழ்ப்பகுதியில் அடிமைகள் இல்லையெனக் கூறியுள் ளார். இந்திய அரசியல் நூல்களில், ஆரியன் ஒருவனை எக்கால மும் அடிமையாக வைத்திருக்கக் கூடாது என்று கண்டிருப்பதை அவன் அறிந்திருக்கவும் கூடும்.

இந்தியரின் பழக்கவழக்கங்களையும் நடைமுறைகளையும் சித்திரிக்கும் கிரேக்க, இலத்தீன் நூலாசிரியர், அவர்கள் கட்டுப் பாடான எளிமை வாழ்க்கை நடத்தினர் என்று கூறுவர். உழவர், அமைதியும் கண்ணியமும் உடையவராயிருந்தனர். திருட்டுத்தொழில் மிகச்சொற்ப அளவிலிருந்தது. இந்தியன் எவனையும் பொய்யன் என்று கிரேக்கர் குறிப்பதில்லை. வேள்வி கள் நடத்துகின்ற நேரங்களிலன்றிப் பிற சமயங்களில் இந்தியர் மது அருந்துவதில்லை. அரிசிக்கூழ் அவரது முக்கிய உணவுப் பொருளாக இருந்தது. அவர் சட்டங்கள் எளிமையானவை. வாக்குறுதிகள மற்றும் வைப்பு நிதிகளைப்பற்றிய தகராறுகள் அவர்களிடமில்லை. இதற்கென முத்திரைகளையும், சாட்சிகளை யும் அவர்கள் தேடவில்லை. பரிவர்த்தனைகளை நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்டு நடத்தினர். வீடுகளையும் பிற சொத்துகளையும் எவ்விதப் பாதுகாப்புமின்றி விட்டுச் செல்லும் வாய்ப்பிருந்தது. எழுதும் வகையறியாத இந்தியர்கள், நினை வாற்றலை நம்பியே வாழ்ந்தனர் என்றும் இந் நூலாசிரியர் குறித் திருக்கின்றனர். முரண்பாடுடைய இச் செய்தி சற்று மிகை

யானது என்பது ஐயமில்லை. மக்கட்பகுதிகளைச் சித்திரிக்கும் கிரேக்கச் சான்றுகளிலேயே இம் முரண்பாடு வெளிப்படு கின்றது. மேற்கோளாக, படைவீரர், ஓய்வு நேரங்களைக் குடித்து மகிழ்வதில் செலவிட்டுச் சோம்பேறிகளாய் வாழ்ந்தனர் என ஸ்டிராபோ (Strabo) கூறுகின்றார். ஞானியர் கூடியுள்ள பேரவை யொன்றைச் சித்திரிக்கும் அதே நூலாசிரியர், ஞானியர் தங்கள் கருத்துகளை எழுதித் தெரிவிக்கின்றனர் என்ற முரணான செய்தி யையும் கூறுவர். மற்றுமொரு பகுதியில், நியாக்கசுவை (Nearchus) மேற்கோளாகக் காட்டி, இந்தியர் நெருக்கமாக நெய்யப்பெற்ற துணியின்மேல் எழுதுவர் என ஸ்டிராபோ கூறு கின்றார். மரப்பட்டைகளின்மேல் இந்தியர் எழுதுவது வழக்கம் என கர்டியஸ் (Curtius) என்னும் நூலாசிரியன் கூறுகின்றான்.

## விளையாட்டுகளும் நேரப்போக்கும்

உத்சவங்கள் மற்றும் 'ஸமாஜ்' திருவிழாக்களையும், உற்சாக மிக்க மக்கள் கூட்டங்களையும், இக்காலத்திய கல்வெட்டுகள் அதிகமாகச் சித்திரிக்கின்றன. அவ்வமயங்களில் ஏராளமான பரிசுகளைத் தாராளமாக வழங்கி, மக்கள்பால் தாம் கொண் டுள்ள அன்பை வெளிக்காட்டுவதற்கு மன்னர்கள் விழைந் தனர். இத் திருவிழாக்களில் இசை, வாத்திய இசை, நாட்டியம் ஆகிய கலைகள் அதிகமாக இடம் பெற்றிருக்கவேண்டும். 'சமாஜ்'த் திருவிழாக்கள், பெரிதும் பிரம்மன், பசுபதி, சிவன் அல்லது சரஸ்வதி போன்ற கடவுளரை மையமாகக்கொண்டே நடைபெற்றிருக்க வேண்டும். பல்வேறு பகுதிகளைச்சார்ந்த மல்லர்கள் இவ் விழாக்களில் கூடி மல்யுத்தங்கள் நடத்துவது ஒரு முக்கிய நிகழ்ச்சியாக இருந்தது. 'ஏலியன்' (Aelian) என் னும் நூலாசிரியன், நரர்கள் பங்கெடுத்ததோடு, இத்தகைய யுத்தங்களில் யானைகள் போன்ற மிருகங்களும் பங்கு கொண்டன என்று கூறுவர். பாடலிபுத்திரத்தில் நடைபெற்ற எருதுகள் மற் றும் குதிரை பூட்டிய தேரோட்டப் பந்தயங்களையும், இந் நூலா சிரியர் சித்திரிக்கின்றார். இத்தகைய போட்டிகளில் காயமுற்ற மனிதரும் மிருகங்களும் அதிகமாக உண்டு. இவ் விரத்தம் சிந் தும் அபாயகரமான போட்டிகளைத் தடை செய்து, அசோகன் கல்வெட்டொன்றில் ஆணையிட்டிருக்கிறான். கண்ணுக்கு விருந் தான பிற நிகழ்ச்சிகளை அவன் அனுமதித்திருக்கிறான். 'சௌபி கர்' அல்லது 'சோபாளிகர்' நடத்திய நாடகங்களைப் பதஞ்சலி என்னும் நூலாசிரியன் குறிப்பிடுகிறான். நாடகச் செய்திகளை அவையோருக்கு மெய்போலவே நடிகர் தோன்றச் செய்தனர். பிறந்ததிலிருந்து இறக்கும் வரை மக்களின் வாழ்க்கையில் ஏற் படவிருக்கும் ஏற்றத்தாழ்வுகளை வரும்பொருள் உரைத்துவந்த 'கிரந்திகர்களை'யும் அவன் சித்திரிக்கிறான். பல கெடுதல்களை விளைவிக்கக்கூடியது என்று தெரிந்தும், 'சொக்கட்டான்' விளை

யாட்டை மக்கள் அதிகமாக விரும்பினர். எட்டு அல்லது பத்து சதுர வரிசைகளைக்கொண்ட பலகைகளைக்கொண்டு நடத்தப் பெற்ற இவ் விளையாட்டை பௌத்த நூலாசிரியர்களும் குறிப்பிடு கின்றனர். இதிலிருந்து தற்காலத்தில் நிலவிவரும் "செஸ்" (Chess) விளையாட்டு உதித்ததென்று கூறுவர். சமண இலக்கிய மான "சூத்திரக்ருதாங்கம்" (Sutrakritanga) இவ் விளையாட்டிற்கு "அஷ்டபதம்" (ashtapada) என்னும் பெயர் சூட்டி அதைப் பற்றித் திட்டவட்டமாகக் கூறுகிறது. "ஹர்ஷசரிதம்" என்னும் நூலியற்றிய பாணன் காலத்திலும், "ஹரவிஜயம்" என்னும் நூல் யாத்த ரத்னாகரன் (கி. பி 9-ம் நூற்றாண்டு) காலத்திலும் இவ் விளையாட்டை மக்கள் மிகவும் விரும்பினர் என்று நம்புவதற் கிடமுண்டு.

## உழவரின் நிலை

சமுதாயத்தின் மேல் மட்டத்திலிருந்த அறிஞர், செல்வந்தர் நீங்கலாக உள்ள சாதாரண மக்களை உழவர், இடையர், வேட்டு வர், வணிகர், தொழிலாளிகள் என்னும் முப்பெரும் பிரிவுக ளாகக் கொள்ளலாகும். இவர்களில் உழவரே அதிகமாக இருந் தனர். மௌரியராட்சித் தொடக்கத்தில் இவர் நிலை கடினமாக இல்லை. இவர்களுக்குப் போரில் பங்கு பெறுவதிலிருந்தும் பொதுநலப்பணியிலிருந்தும் விதிவிலக்களிக்கப்பட்டிருந்தது என்றும், அவர்கள் தம் நேரம் முழுவதையும் பயிரிடுவதிலேயே செலவிட்டனர் என்றும் கிரேக்க நூலாசிரியர்கள் வாயிலாக அறிகிறோம். இவ் வகுப்பினரைப் பொது நல ஊழியர்களாகக் கருதினார்கள். எனவே, போர்கள் நிகழ்ந்தபோதும், கலகங்கள் தோன்றிய நேரத்திலும் இவர்களுக்கு எவ்விதத் துன்பமும் இழைக்கப்படவில்லை. நிலத்திற்கு எவ்வித விபத்துகளும் நேரா திருந்தமையால், மக்களின் தேவைக்கேற்ப விளைபொருள்கள் பயிராக்கப்பட்டு, மக்களின் சுக வாழ்விற்குப் பெரும் வாய்ப் பிருந்தது. நகர்ப்புறங்களிலிருந்து நெடுந்தொலைவில் குடியான வர் வசித்து வந்தனர். விளைபொருள்களில் ஒரு பகுதியை அரசாங்கத்திற்குச் செலுத்தியதோடு, கல்வெட்டுகளில் காணப் படும் 'பலி'யுடன் ஒப்பிடக்கூடிய நில உபயோகத்திற்கெனத் திறையும் செலுத்தி வந்தனர்; நெருக்கடியான காலங்களில் மனமுவந்து அரசாங்கத்திற்குப் பெருந்தொகைகளையும் பரிசாக வழங்கினர். இத்தகைய 'மொத்த வருவாய்கள்' மிகக் குறை வாகவே காணப்படுகின்றன. பரிசுத் தொகைகளையும், உபரி வரி (Cell) களையும், கட்டாயச் சேவையையும் எதிர் நோக்கா மல், சில பொதுநல வேலைகளைத் தான் மேற்கொண்டு நிறை வேற்றியதாகச் சகமன்னன் ஒருவன் குறித்துள்ளான். இந்திய நாட்டின் சில பகுதிகளில் நாட்டுப்புற மக்களின் நிலை சற்றுக் கடினமாய் இருந்ததென்பதும் தெரியவரும். இப் பகுதிகளில் வாழ்ந்த வாடகர் க்ஷேத்திரர் (Vatakas, Kshetras) போன்றவருக்

குச் சலுகைகள் (பரிஹாரங்கள்) வழங்கப்பட்ட செய்தியைச் சாதவாகனரும் அவர்தம் சந்ததியாரும் விட்டுச் சென்றிருக்கும் பதிவேடுகளிலிருந்து அறியலாகும். தோட்டங்கள், வடல்கள் ஆகியவற்றையொட்டி வழங்கப்பட்ட இச் சலுகைகள், உரிமை பெற்ற சில வகுப்பினருக்கு அல்லது தனி நபருக்கு அரசகுலத்தினரால் வழங்கப்பட்டன. இதிலிருந்து சில பகுதிகளில் வாழ்ந்த எளிய குடியானவனது கடுமையான வாழ்க்கை நிலை தெரியவரும். 'சலுகை பெற்ற அக்கழனிகளிலும் அரசாங்க அலுவலர் நுழைவதற்கு அனுமதியில்லை. அவர்களால் அதைப் பறிக்கவும் இயலாது. மாவட்டக் காவலர் அப் பகுதியைச்சார்ந்த விவகாரங்களில் தலையிடவும் வகையில்லை. பல்லவர் காலத்துப் பதிவேடு ஒன்று சலுகைகளை விரித்துரைக்கிறது. 'பிராமணருக்குச் சொந்தமான பூமிக்குக் 'கர' (உபரி வரி) என்னும் வரி வசூல் இல்லை. பாலும் மோரும் அவர் மன்னனுக்கு அளிக்க வேண்டுவதில்லை. உப்பு, சீனியென்ற தொல்லைகளும் அங்கில்லை; புற்களையும் மரங்களையும் அங்கிருந்து அப்புறப்படுத்த இயலாது; காய் கறிகளையும் பூக்களையும் அவர்கள் எவருக்கும் அளிப்பதுமில்லை.

வெள்ளம், தீ, வெட்டுக்கிளி ஆகியவைகளால் நாட்டுப்புறங்களில் பெருஞ்சேதம் விளைவது இயற்கை. சிந்தனையாளர் பலர் ஆண்டுத் தொடக்கத்தில் கூட்டங்கூட்டிப் பருவகாலங்களையும், நன்மை பயக்கும் பருவக்காற்றுகளையும், தீமை விளைக்கும் கொடிய வியாதிகளையும்பற்றி முன்னறிவித்து மக்களுக்கு எச்சரிக்கை செய்யும் வழக்கமிருந்ததென்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். பூச்சிகளால் பயிர்களுக்கு நாசமேற்படுங்கால், மக்களுக்குத் தானியங்கள் வழங்குவதற்கெனக் களஞ்சியங்கள் அமைக்கப்பட்டிருந்தன. துன்பம் நேரும் வேளைகளில் உணவுப் பொருள்களையும் பயிரிடுவதற்குத் தேவையான விதைகளையும் மக்களுக்கு வழங்குவது அரசினரின் கடமையாக அர்த்த சாத்திர நூலாசிரியர் குறிப்பிடுகின்றனர். இத்தகைய இன்மைக் காலங்களை முன்னறிந்து அவ் வேளைகளில் மக்களுக்குத் தேவையான உதவி புரிவதற்கென அரசாங்கம் தகுந்த முன்னேற்பாடுகளைச் செய்யத் தவறுவதில்லையெனக் கிரேக்க நூலாசிரியர் விரித்துரைப்பர். குடியானவரின் பயிர்களை அழிக்கும் கொடிய மிருகங்களையும் பறவைகளையும் வேட்டையாடிக் கொல்வதற்கென இடையரும் வேட்டுவரும் கூடாரமிட்டும், சிறு குன்றுகளின் மீதும் வாழ்ந்தும் வந்தனர். பொறிகளைவைத்து வேட்டையாடியும், மிருகங்களைக் கொன்றும் நாட்டை இவர்கள் பாதுகாத்து வந்தார்கள். உழவருக்குத் தேவையான கருவிகளைத் தொழிலாளர் ஆக்கித் தந்தனர். உபகாரத் தொகை வழங்கியும், வரி விலக்கு அளித்தும், அரசாங்கம் இவர்களைப் பாதுகாத்து வந்தது. இச் சலுகைகளுக்குப் பதிலாக அரசாங்கத்திற்குத் தேவையான பல பணிகளில் இவர்கள் பங்கு கொண்டிருந்தார்கள்.

## வாணிகமும் கடற்பிரயாணமும்
(Trade and Navigation)

மன்னரும், தன்னாட்சி பெற்ற நகரங்களும், குடியானவர் செலுத்திய வரிப்பணத்தையே வருவாய்க்குப் பெரிதும் நம்பியிருந்தனர். அரசினரின் வருவாயில் பெரும்பகுதி வணிகரிடமிருந்தும் கிடைத்து வந்தது. 'பலி', 'பாகம்' ஆகியவைகளோடு 'சுல்கம்' என்பதும் முக்கியமானதொரு வரியாய் இருந்து வந்ததென, இக் காலத்துப் பதிவேடுகள் குறிப்பிடுகின்றன. சிரியா, எகிப்து, மற்றும் மேற்குப் பகுதியிலுள்ள கிரேக்க நாடுகளுடன் மௌரியராட்சியில் இந்தியா தொடர்பு கொண்டிருந்தது. அந்நியர் பலர் தலைநகரில் வசித்து வந்தனரென்றும், அவரது நலன் பேணுவதற்கென நகராட்சி ஆணையாளரடங்கிய சிறப்புக் குழுவொன்று இருந்ததென்றும் நாம் அறிவோம். இவ் விந்தியர் யாவரும் அரசியல் தூதுவராய் இருந்திருக்கக்கூடும். கி. மு. முதல் நூற்றாண்டிலேயே, இந்திய–ரோமானியப் பேரரசுகளிடையே வாணிகத் தொடர்பு ஏற்பட்டிருந்தது. கிறித்துவ சகாத்தத்தின் முதல் நூற்றாண்டில், சீனா, கிரேக்க நாடுகள், ஈழம், கடல் கடந்த இந்தியா ஆகிய இவற்றுடனும் வாணிகத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன எனக் கல்வெட்டுகளிலிருந்தும், இலக்கியக் குறிப்புகளிலிருந்தும் நாமறிவோம். 'நாகார்ஜுன கொண்டா'க் கல்வெட்டுகளிலும், 'மிலிந்த பான்ஹோ' (Milinda Panho-மிலிந்தரின் கேள்விகள்) என்ற நூலிலும் இதைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

இந்திய மாலுமிகளின் நெஞ்சுறுதிக்கும் திறமைக்கும் பண்டைய இலக்கிய நூலாசிரியர் சான்று பகர்கின்றனர். அரேபிய வளைகுடாவைக் காத்துவந்த காவலாளியொருவன், இந்திய மாலுமியொருவனைச் சிறைப்பிடித்து, 'இரண்டாம் யூர்கெட்டிஸ்' (Euergetes II, கி. மு. 145-116) அவைக்கு அழைத்துச் சென்ற செய்தியொன்று நூலாசிரியர் ஒருவரால் குறிக்கப்படுகிறது. மரக்கலமொன்றில் தனித்துக் குற்றுயிரோடு இந்திய மாலுமி காணப்பட்டான் எனக் காவலாளி மன்னனுக்குரைத்தான். இந்தியன் பேசிய மொழி அவர்களுக்கு விளங்கவில்லை. கிரேக்க மொழி பயிற்றுவிக்கப்பட்ட பின், இந்திய நாட்டிலிருந்து தான் வெளியேறிய செய்தியையும், வழி தவறி தனித்து எகிப்தை அடைந்த வரலாற்றையும் இந்திய மாலுமி எடுத்துரைத்தான். அவனுடனிருந்தவர் யாவரும் பசியால் மடிந்தனர். தாய் நாட்டிற்குத் தன்னை மீண்டும் அனுப்புவதாயின், அரேபிய வளைகுடாவிற்கு வரும் கடல் மார்க்கத்தைக் காட்டிக் கொடுப்பதாகவும் அம் மாலுமி கூறினான். அவனுடன் அனுப்பப்பட்டவருள் சைஸிகசின் யூடாக்ஸஸ் (Eudoxus of Cyzicus) என்பவனும் ஒருவன். 'விலையுயர்ந்த இரத்தினங்களையும், வாசனைப் பொருள்களையும் இந்திய நாட்டிலிருந்து அவன் பெற்றுத் திரும்பினான். 'சியூவி

(Suevi) நாட்டு மன்னன் ஒருவன், ஸ்பானியக் கவர்னர் ஒருவனுக்கு இந்தியர் பலரைப் பரிசாக அளித்தான் என மற்றொரு நூலாசிரியர் குறிப்பர். வாணிக நோக்குடன் கடற்பிரயாணத்தை மேற்கொண்ட இவ் விந்தியர், புயல் காரணமாக ஜெர்மனி நாட்டிற்குப் புகலிடம் தேடிவந்தவர் என்பதும் கூறப்படும்.

கி. மு. மூன்றும் நூற்றாண்டு மௌரிய மன்னன் ஒருவன், மேலை நாடுகளிலிருந்து வரும் உலர்ந்த அத்திப்பழங்களையும் மதுரமான மதுவையும் (wine) மிக விரும்பினான் என்பது தெளிவு. கிழக்கிலுள்ள பெருவணிகத் தலங்களில் சிறந்து விளங்கிய புரோச்சு (Broach) நகர மன்னனுக்கு விலையுயர்ந்த வெள்ளிப் பாத்திரங்களும், இசைபாடும் சிறுவர்களும், அந்தப்புரத்திற்கென அழகிய பெண்களும், மதுரமான மதுவும், மெல்லிய துணிகளும், தேர்ந்த வாசனைப் பசைகளும், கி. பி. முதல் நூற்றாண்டில் அனுப்பப்பட்டன. மேலை நாட்டினரும், கங்கைச் சமவெளியின் கீழ்ப்பகுதியிலுள்ள மெல்லிய மஸ்லின் துணியுட்பட, பல போகப் பொருள்களை ஏற்றுமதி செய்தனர். இப் பொருள்களுக்கு விலையாக ஏராளமான பொற்காசுகள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டன என்று 'பிளினி' என்பார் கூறுவர். கி. மு. நான்காம் நூற்றாண்டு முதல், பாடலிபுத்திர நகராட்சி அலுவலர், வர்த்தக, வாணிகப் பரிவர்த்தனைகளை மேற்பார்வையிடுவதற்கெனக் குழுவொன்றை அமைக்கவேண்டிய தேவையை உணர்ந்தனர்; அக் குழுவினர் எடைகளையும் அளவைகளையும் மேற்பார்வையிட்டு வந்ததோடு காலத்திற்கேற்ப விலை பொருள்களை அரசினரின் அனுமதியோடு விலை கூற வேண்டுமென்றும் விதித்தனர். 'ஹிப்பாலஸ்' என்பவன் நெடுந்தூரக் கடற்பிரயாணத்தை மேற்கொள்ளும் வழி காட்டியதும், கி. பி. முதல் நூற்றாண்டில் மேலை நாட்டிற்கும் இந்தியாவிற்கும் இடையேயுள்ள வாணிகத் தொடர்பு பெருகிற்று. வடவிந்தியாவிலுள்ள பெருநதிகள் வாணிகப் பெருக்கத்திற்கு மிகவும உதவி அளித்தன. நாவாய்களைக் கட்டுவித்து வாணிகப் பொருள்களை எடுத்துச் செல்வதற்குக் கூலி பெற்று உபயோகிக்க மௌரிய மன்னர் அனுமதித்தனர். தக்காணப் பகுதிகளில் செய்திப் போக்குவரத்துச் சற்றுக் கடினமாய் இருந்தது. நன்கமைந்த சாலைகள் இன்மையால் தக்காணத்தின் பல பகுதிகளிலுமுள்ள வாணிகப் பொருள்களைப் 'பெய்தான்', 'தகாரா' (Paithan and Tagara) முதலிய இடங்களிலிருந்து புரோச்சுத் (Broach) துறைமுகத்திற்கு மிக்க பிரயாசையுடன் பாரவண்டிகளில் ஏற்றிச் செல்லவேண்டியிருந்தது.

## பரிவர்த்தனைச் சாதனம்
## (Medium of Exchange)

வெளிநாட்டு வாணிகத் தொடர்பு, இந் நாட்டிற்குள் மிகுதியான நாணயங்களை அனுமதித்தது, ரோமானிய நாணயங்கள்

இந்திய நாட்டிற்குக் கொள்ளை போவதாக 'பிளினி' கூக்குர லிடுவதை முன்னர்க் குறித்தோம். இரண்டாம் காட்பிசிஸின் காலந்தொட்டுக் குஷானப் பேரரசு நாணயம் வெளியிடத் தொடங்கியதற்கு, ரோமானிய நாட்டிலிருந்து ஏராளமான தங்கம் இந் நாட்டில் வந்து குவிந்ததே காரணமென அறிஞர் பலர் கூறுவர். மௌரியர் காலத்திற்கு முன்பிருந்தே, இந் நாட்டில் வெள்ளி, செம்பு நாணயங்கள் தயாரிக்கப்பட்டுப் புழக்கத்திலிருந்தன. பொன்னுலாகிய 'நிஷ்கம்' (Nishka) பரி வர்த்தனைச் சாதனமாக உபயோகப்பட்டதெனினும், தொடக் கத்தில் நாணயமாகப் பயன்படுத்துவதற்குரிய இயல்புகள் எவற்றையும் பெற்றிருக்கவில்லை. முப்பத்திரண்டு 'ரதிகளைக்' (ratis) கொண்ட (58·56 கிரெயின்) வெள்ளி நாணயமொன்றை 'மானவ-தர்ம சாத்திர' (மனுநீதி) நூல் ஆசிரியர் 'புராணம்' அல்லது 'தரணம்' (Purana or Dharana) எனக் குறிப்பர். எண்பது ரதிகள்கொண்ட (146·4 கிரெயின் செப்பு நாணயம்), 'கார்ஷா பணம்' (Karshapana) என்னும் பெயரால் வழங்கியது. சிறு மதிப்புள்ள 'காகணி' (Kakani) என்னும் செப்பு நாணயங்களும் வழக்கிலிருந்தன. 'கார்ஷாபணம்' என்னும் பெயர், தென் னிந்தியாவிலுள்ள தங்க, வெள்ளி நாணயங்களுக்கும் வழங்கி வந்தது. வழக்கிலிருந்த பழைய வெள்ளி நாணயமான (Porana-பொராண) 'நிலக்கா பணத்திற்கும்' (கார்ஷாபணம்), உருத் திர தாமனுல் வெளியிடப்பட்ட பழைய கார்ஷா பணத்தைப் போன்று நான்கில் மூன்று பங்கு எடையுள்ள புதிய நாணயத் திற்கும், பௌத்த விளக்கவுரையாளர் வேற்றுமை கண்டு உரைப்பர். பழைய 'காாஷா பணத்தின்' மதிப்பு, சிலவிடங் களில் இருபது 'மாஷங்கள்' (Mashas) என்றும், மற்றும் சில இடங் களில் பதினறு 'மாஷங்கள்' என்றும் அறிகிறோம். வழக்கிலிருந்த மேற்குச் சதரப மன்னர்கள் வெளியிட்ட வெள்ளி நாணயங்கள் முப்பத்துநான்கு, அல்லது முப்பத்தாறு கிரெயின் எடையுள் ளவை. முப்பத்தாறு கிரெயின் எடையுள்ள பழைய கார்ஷா பணத்திற்கு, நூற்று இருபத்து நான்கு கிரெயின் எடை யுள்ள 'சுவர்ணம்' (Suvarna) மாற்று மதிப்பாய் இருந்தது. எனவே, மாற்று மதிப்பு விகிதம் 1·35 எனலாம். வெள்ளி, தங்கம் ஆகியவைகளின் மாற்று மதிப்பு விகிதம் சற்றேறக்குறைய 1·10 எனலாம்.

## தொழில்கள்
(Industry)

பாடலிபுத்திர நகராட்சிக் குழுக்களில் ஒன்று, உற்பத்திப் பொருளகளை மேற்பார்வையிட்டு வந்தது என்பதிலிருந்து,

மௌரியராட்சியில் உற்பத்தித் தொழில் மிகச்சிறந்து விளங்கிய தென்பது தெளிவு. ஆறுகளைக் கடப்பதற்கான நாவாய்களும், உழவுத்தொழிலுக்கு வேண்டிய கருவிகளும், படைக்கலன்களும் உற்பத்தி செய்யப்பட்டன என்பதைக் கிரேக்க நூலாசிரியர் குறிக்கின்றனர். பொற்சரிகை வேலைப்பாடுடையனவும் இரத்தினங்கள் இழைத்தனவுமான உடைகளும், செல்வந்தர் அணியும் பூ வேலைப்பாடுடைய மஸ்லின் ஆடைகளும், அவர்தம் பணியாளர்கள் தாங்கிவந்த குடைகளும், ஸ்டிராபோ என்பவரால் குறிக்கப்படுகின்றன. கி பி. முதல் நூற்றாண்டில் உரோமானிய நாடுகளுக்கு இந்திய மஸ்லின் துணிகள் பெரிதளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. கங்கை வெளியின் கீழ்ப்பகுதியில் உயர்ந்த ரக மஸ்லின் தயாரிக்கப்பட்டுவந்தது. அவ் வுயர்ந்த ரகத் துணிகள் அப் பகுதியின் பெயராலேயே வழங்கப்பட்டு வந்தன. கிழக்கு வங்காளம், கங்கை நதியின் வண்டற்பகுதி ஆகிய இடங்களில் உற்பத்தியான வெள்ளிய மிருதுவான 'தூகூலா' (dukula) என்னும் துணி, கௌடில்யனது அர்த்த சாத்திரத்தில் புகழ்ந்து பேசப்படுகிறது. வடக்கு வங்காளத்தில் தயாரிக்கப்பட்ட ஒருவகைத் துணி கறுப்பு நிறமுள்ளதாயும், பவழம் போல வழுவழுப்புள்ளதாயும் இருந்தது. வாணிகத்திற்குப் பெயர் பெற்ற தென்னிந்திய நகரங்களிலிருந்தும் ஏராளமான பட்டுத்துணிகள் ஏற்றுமதியாயின. வடமேற்கு, பருத்தித் துணிக்கும் பட்டு நூலுக்கும் பெயர்பெற்று விளங்கிற்று. அகதிப் பெண்டிர் பலருக்கு நெசவுத் தொழில் வேலை வாய்ப்பளித்தது. வீட்டிலிருந்து வெளியேற இயலாத நிலையிலிருந்த பெண்டிருக்கென விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நெசவாளரும், பிற கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்தோரும் 'சிரேணிகள்' (Srenis) என்னும் பொருளாதாரக் கூட்டுச் சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டிருந்தனர். 'சிரேணிகள்' அல்லது சங்கங்கள், இக்காலத்தில் பல இருந்தன என்பது தெளிவாகத் தெரியவரும். சாதவாகனர் காலத்துப் பதிவேடுகளில் நெசவாளர், கன்னார், வாணியர், மூங்கில் வேலை செய்வோர், தானியம் விற்பவர், நீரின் சத்தியால் இயங்கும் இயந்திர வேலை செய்வோர் ஆகியோரது 'சிரேணிகள்' குறிப்பிடப்படுகின்றன. இச் சங்கங்கள் இக்கால வங்கிகளைப்போல இயங்கி வந்தன.

## சமயம்
## (Religion)

மௌரியப் பேரரசையும் அதன் பிற்காலங்களில் நிலவிய சமயக் கருத்துகளையும் நன்கு அறிந்துகொள்வதற்குக் கிரேக்க இலத்தீன் ஆசிரியர்களின் நூல்களையும், கல்வெட்டுகள், நாண

யங்கள் ஆகியவற்றையும், பதஞ்சலியின் 'மகாபாஷ்யம்' (Maha-bhashya) என்னும் நூலையும், ஏனைய பிற்கால நூலாசிரியர்களின் குறிப்புகளையும் நன்கு ஆய்தல் வேண்டும். வேதகாலக் கடவு ளரை வணங்கி வழிபடும் பழக்கம் இருந்து வந்தது. 'ஜீயஸ் ஆம்பிரியஸ்' (Zeus Ombries) என்ற பெயரில் இவர் வழிபட்ட மாரிக் கடவுள், வேதகால இந்திரன் அல்லது பர்ஜன்யனைக் குறிப்ப தாகக் கொள்ளலாம். சாதவாகனர் ஆட்சிக் காலத்திலும், இந்தி ரனையும் வருணனையும் போற்றி வழிபடும் வழக்கமிருந்தது. அக் கடவுளரோடு பல்வேறு துணைக்கடவுளரையும் வழிபட்டு வந்த னர். இத்துணைக் கடவுளர் காவிய கால முதலே மக்களின் உள்ளங்களில் இடம் பெற்றிருந்தனர். மேற்கோளாகப் பண் டைய நூலாசிரியர், கங்கை ஆற்றைத் தெய்வமெனப் போற்று வதைக் கூறலாம். மாசிடோனியப் போர் வீரனை எதிர்த்து நின்ற பேரரசின் படைக்கு முன்பாக, 'ஹீராகிள்சின்' (Herakles) சிலையொன்று எடுத்துவரப்பட்டதாகக் குவின்டஸ் கர்ட்டியஸ் (Quintus Curtius) என்னும் நூலாசிரியர் குறித்துள்ளார். சூரசேனருடனும் மதுராநகருடனும் இந்திய ஹீராகிள்ஸ் இணைத்துப்பேசப்படுவதால், 'வசுதேவன்' அல்லது 'சங்கர்ஷண' னுடன் ஹீராகிள்சை ஒப்பிட்டுப் பேசுவது பொருந்தும். சிவன், ஸ்கந்தன், விசாகன் ஆகியோருடைய உருவச் சிலைகள் மௌரி யர் காலத்தில் கண்காட்சியாக வைக்கப்பெற்று விலை கூறப் பட்டனவெனப் பதஞ்சலியார் கூறுவர். குஷானியர் காலம் வரையிலும் ஸ்கந்தனும் விசாகனும் மக்களிடம் நன்மதிப்புப் பெற்று விளங்கினர் என்பது தெளிவு. ஹுவிஷ்கனின் நாணயங் களில் இக் கடவுளரின் சின்னம் பொறிக்கப்பட்டிருப்பது இதற்குத் தக்க சான்று. பல புதிய சமயக் கருத்துகளைத் தோற்றுவித்த அசோகரும் தம்மைத் 'தேவனும்பிய' அல்லது 'கடவுளரின் நேசன்' எனக் கூறிக்கொள்வதில் மிக்க பெருமை கொண் டிருந்தார்.

இக் காலத்தில் பல வேள்விகள் மேற்கொள்ளப்பட்டன என்பது தெளிவு. மௌரிய மன்னர் அமைதிக் காலங்களில் வேள்வி நடத்துவதற்குப் பவனி வருவது வழக்கமென 'ஸ்டிராபோ' (Strabo) குறித்துள்ளார். இவ்வாறு மன்னர் வெளி வருவது அக் காலங்களில் மிகக் குறைவு என்பது கவனத்திற் குரியது. தனியார்களும் வேள்வி நடத்தினார்கள். அவ் வேள்வி களுக்கெனத் 'தத்துவ ஞானி'களின் உதவி கோரப்பட்டது. பொதுவில், குடிப்பழக்கமில்லாத இந்தியர், இவ் வேள்விக் காலங்களில் நன்றாகக் குடிப்பது வழக்கம். வேள்விகளுக்கென உயிர்ப்பலியிடுவதை அசோகர் தடை செய்ய முயன்றார்.

வேள்விகளுக்கு நன்னெறி முறையில் புதிய விளக்கம் கொடுத்து அவற்றை ஆன்மிக உயர்வுக்குரிய செயல்களாக மாற்றுவதற்கு வைணவச் சீர்திருத்தவாதிகள் முயன்றூர்கள். புஷ்யமித்திரன், சிமுக-சாதவாகனன் சிவக்கந்தவர்ம பல்லவன் ஆகிய மன்னர்களாட்சியில், பிராமண சமயம் மீண்டும் தலையெடுத்தது. 'அசுவமேதம்', 'வாஜபேயம்' போன்ற வேள்விகள் இளவல்களால் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டன.

இக் காலத் தொடக்கமுதல், கருத்து வேற்றுமைகள் நிறைந்த ஆஜீவகம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களுடன் பிராமணச் சமயம் போட்டியிடவேண்டியதாயிற்று. சமூகத்தின் சில பிரிவினரிடையில்—குறிப்பாக அயோத்தி, பீஹார், ஒரிஸ்ஸாப் பகுதிகளில்—இச் சமயத்தினருக்கு நன்மதிப்பிருந்தது. மௌரிய குலத்தினரான சந்திரகுப்தனும், சம்பிரதியும் சமணர்களெனக் கர்ண பரம்பரைச் செய்திகள வழங்கி வருகின்றன. பிராமண நாடக ஆசிரியன் ஒருவன், முதல் மௌரிய மன்னனை 'விரிஷலன்' (Vrishala) எனப் பெயரிட்டு வழங்குவதிலிருந்து, இறுதி நாள்களில் ஆஸ்திக-பிராமண சமயத்தை விடுத்துச் சந்திரகுப்தன் சமணத்தைத் தழுவியிருக்கலாம் என்று எண்ணுவதற்கு இடமுண்டு. சமனத்தைத் தழுவிய மன்னர்களுள் கலிங்கத்துக் காரவேலன் ஒருவன் என்பது ஐயமின்றி விளங்கும். ஆருகதரும், சித்தரும், முனிவரும், முற்றும் துறந்தவரும் இவனுக்கு அன்பு நெறியைப் போதித்த போதிலும், இவர்கள் யாவரையும் இறைஞ்சி வணங்கிக் கல்வெட்டுகளின் தொடக்கத்தில் இவனை உயர்த்திப் பேசியபோதிலும், இரத்த வெறி கொண்டு இவன் அண்டை வீட்டாருடன் போரிடடுவந்தான் என்ற செய்தி விந்தையிலும் விந்தையாய் விளங்கி வருகின்றது. கிறித்துவ சகாத்தத்தின் முதல் நூற்றுண்டுகளில், 'ததிகர்ணன்' (Dadhikarna) போன்ற பாம்புகளை வழிபடும் நாகப் பண்பாட்டுடன், மதுரா நகரில் சமணமும் வேரூன்றியிருந்தது. போட்டியாய் எழுந்த ஆஜீவகர்களுக்கும், மற்றப் பிரிவினரைப் போல அசோகரும் தசரதனும் பல பள்ளிகளை வழங்கினர். கர்ண பரம்பரைச் செய்திக்கிணங்க, பிந்துசாரனும் ஆஜீவகர்களை ஆதரித்தான்.

அசோகரின் பேராதரவைப் பெற்ற பௌத்த சமயம், அப்பேரரசின் பெருமுயற்சியால் உலகப் புகழ் பெற்றதென்பதை நாம் நன்கறிவோம். மெனந்தரின் பேராதரவு பெற்றதோடு கனிஷ்கனையும் புத்த சமயம் கவர்ந்து அணைத்துக்கொண்டது. கனிஷ்கனின் பௌத்த சமயக் கொள்கைகள், நன்னெறிகள் நிறைந்த எளிமையான அசோகரின் சமயத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தது. மனிதப் பிறவியெடுத்து நான்கு பேருண்மைகளையும் மக்களுக்களித்த ஆசான், தெய்வீகத் தன்மை பெற்றதுமன்றி, 'தேவாதி தேவன்' (கடவுளரின்

கடவுள்) என்றும் புகழ்ந்து பேசப்படுகிருன். வைணவர் அல்லது பாகவதரின் பரம்பொருளான இறைவன், மீண்டும் மீண்டும் மானிடப் பிறவியெடுத்து மனிதரின் துயர் துடைத்து, உண்மை ஞானத்தை அவர்களுக்கு ஊட்டுவதுபோல, புத்தரும் ஓர் அவதார புருஷர் என இவர்கள் கருதி வந்தார்கள். புத்தரின் உருவச்சிலைகள உருப்பெற்று எழுந்தன. பிராமண சமயத தேவதைகளுக்குப் பூஜை வழிபாடுகள் நடத்துவதுபோல, புத்த சிலைகளையும் வழிபடலாயினர். புத்தரின் உருவச் சிலைகளோடு 'தியானி' (Dhyani) புத்தரின் சிலைகளும், போதிசத்துவர்களின் சிலைகளும் உருப்பெற்றன. புதிய மாறுதல்கள் அடங்கிய சமயம் 'மகாயானம்' அல்லது 'பெருவழி' என்று வழங்கப்பட்டது. தொன்மையான புத்த சமயம் 'ஈனயானம்' என்ற பெயரில் வழங்கி வந்தது. சாதவாகனர் காலத்தில் வாழ்ந்துவந்த 'நாகார்ஜுனர்' என்னும் அறிஞர், இப் புதிய சமயக் கருத்து களை உருவாக்கினுர் எனக் கூறப்படுகிறது. கிறித்துவ சகாத்தத் தின் முற்பகுதியில் சீனத்திற்கும், மத்திய, கிழக்கு, தெற்கு ஆசியப் பகுதிகளுக்கும் பௌத்தம் பரவிற்று. காஷ்மீரம், காந்தாரம், சீனம், சிலாதம், தொசாலி, அபராந்தம், வங்கம், வனவாசி, யவனம், தமிலம், பலூரம், சிங்களத் தீவு ஆகிய பல பகுதிகளிலும் புத்த சமயக் கொள்கையைப் பரப்பிய புத்த பிட்சுகளின் பட்டியல், நாகார்ஜுன கொண்டாக் கல்வெட்டு களில் காணப்படுகிறது. சீனத்தில் புத்த சமயத்தைப் புகுத்திய பெருமை, 'கஸ்யப மதங்கர்' (Kasyapa Matanga) என்ற முனி வரைச் சாரும். புத்த இலக்கியங்கள் கி. மு. இரண்டாம் நூற் ருண்டிலேயே, யூ-ச்சி தலைவனெருவனுல் சீனுவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்ற செய்தியை உறுதிப்படுத்தும் சான்று கள் உண்டு.

சமயத் தொண்டில் மிகவும் ஈடுபாடுடைய மற்றுமோர் இந்திய சமயப் பிரிவு, 'பாகவத மதம்' அல்லது 'வைணவம்' எனப்படும். கி.மு. இரண்டாம் நூற்றுண்டில் இந்திய எல்லையி லுள்ள கிரேக்கரிடையில் இது பரவியது. தட்சசீல மன்னன் அன்டியாஸ் கிடாசின் தூதுவன், 'ஹிலியொடொரஸ்' (Heliodoars)'பெஸ்நகரில்' தெய்வத்துள் தெய்வமாகிய வாசுதேவனின் பெருமையை அறிவிக்கும் வகையில் கருடக் கற்றூண் ஒன்றைச் சமைத்தான். 'சங்கர்ஷண' வசுதேவப் பண்பாடு, அல்லது கிருஷ்ணனையும் அவனுடைய தம்பியையும் வழிபடும் வழக்கம், மத்திய இந்தியாவிலும் தக்காணத்திலும் இருந்து வந்தது என் பது அக் காலத்துப் பதிவேடுகளிலிருந்து நன்கு அறியக் கிடக் கிறது. இதற்குப் போட்டியாகச் சைவ வழிபாடு, இரண்டாம் காட்பிசிஸ் வசுதேவன் போன்ற குஷானிய மன்னரின் டே ராதரவுபெற்றிருந்தது.கொண்டேபெர்னசின்காலத்தில்வெளி நாட்டிலிருந்து வந்த கிறித்துவ சமயம் இந்திய எல்லைப்புறங்

களில் பரவிற்றெனக் கூறப்படுகிறது. நாநய (Nanaia), மித்திர (Mithra) அல்லது 'மிஹிர' (Mihira-சூரியன்), 'மாவோ' (Mao-சந்திரன்), பாரோ (Pharo-அக்கினி) முதலிய பாபிலோனிய, ஈரானிய, அந்நிய நாட்டுத் தெய்வங்களைக் குஷானியப் பேரரசு மக்கள் வழிபட்டார்கள் என்பதை நாணயச் சான்றுகளிலிருந்து நன்கறியலாம். 'மாகிய' சமயக் குருமார்களின் தளரா முயற்சியால், 'மிசிரனை' வழிபடும் வழக்கம் மக்களின் பேராதரவைப் பெற்றிருந்தது.

## இலக்கியப் படைப்புகள்
### (Literary Activity)

நடைமுறையில் வழக்கிலிருந்துவரும் எந்த இலக்கிய நூலையும் மௌரியராட்சியில் தோன்றியதெனத் திட்டமாகக் கூறுவது அருமை. 'கௌடில்யனின் அர்த்தசாத்திரம்' பத்திரபாகுவின் 'கல்பசூத்திரம்', பௌத்த 'காதாவத்து' ஆகிய முப்பெரு நூல்கள் மௌரியராட்சியில் வாழ்ந்துவந்த பெரியார் சிலர் எழுதியன வாகக் கூறப்படும். இக் கருத்து எல்லாராலும் ஏற்கப்படுவதில்லை. புஷ்ய மித்திரன் காலத்தவராகக் கருதப்படும் 'பதஞ்சலியார்' முன்பிருந்த பல நூல்களைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார். அவர் குறிப்பவைகளுள் பல, மௌரியர் காலத்திற்கும் முன்பாகவே எழுந்தவை எனினும், சில, மௌரியர் காலத்திலுதித்தவை யாகவும் காணப்படுகின்றன. பாண்டு காவியம், பதஞ்சலியாரின் கவனத்திலிருந்தது. நாடகமாய் அமைந்த 'கம்ஸவதம்' (Kamsa-vadha-கிருஷ்ணன் கம்ஸனைக் கொல்லுதல்) 'பலி பந்தம்' (வாமன ரூபனான விஷ்ணு பலிச்சக்கரவர்த்தியைக் கட்டுதல்) ஆகிய பகுதிகளைப் பதஞ்சலியார் குறித்துள்ளார் யவக்கிரித, யயாதி, வாசவதத்தா முதலிய பலரைப்பற்றிய 'ஆக்கியானங்களை' (Akahyanas) அல்லது கதைகளையும், 'வாரருச காவியம்' (Vara-rucha Kavya) என்ற நூலையும் பதஞ்சலியார் குறிப்பிடுவார். வெல்வதற்கியலாத அசோகர், கீழைச் சிந்துசமவெளியின் தத்தாமித்திரன் (டெமிட்ரியசாய் இருக்கலாம்) என்றும் யவனத் தலைவன் ஆகியோரைப்பற்றிய குறிப்புகள் மகாபாரதத்தில் காணப்படுவதால், இவ் வீரகாவியத்தின் சில பகுதிகள், மௌரியர் காலத்திலோ அல்லது பிற்காலத்திலோ தோன்றியிருக்க வேண்டும் என எண்ணுவதற்கு இடமுண்டு. இதற்கு உடன் பிறப்பான இராமாயண காவியத்திலும் யவன சாகரடங்கிய கலவைகளைப்பற்றிக் குறிப்பிடப்படுவதால் இக் காவியத்தின் சில பகுதிகளும், கிரேக்க சித்திய சகாத்தத்திலேயே தோன்றியிருக்கக்கூடும். யவனர், சாகர், பரதர், பஹ்லவர் ஆகியோரைக்

குல முறைகளைச் சரிவரக் கடைப்பிடிக்காததாலும் பிராமணரை அசட்டை செய்வதாலும், இழிகுல க்ஷத்திரியர் எனக் குறிக்கும் மானவ தர்ம சாத்திரமும் இக்காலத்திலேயே தோன்றியிருக்கக் கூடும்.

பாணினியின் இலக்கணச் சூத்திரங்களுக்கு விளக்கவுரையாகப் பதஞ்சலியார் அமைத்த 'மகாபாஷ்யம்' (Mahabhashya) என்னும் நூலும் நாம் ஆராய்ந்துவரும் காலத்திலேயே எழுந்தது. சர்வவர்மன் 'காதந்திரம்' (Katantra) அல்லது 'கலாபாகம்' என்னும் மற்றுமோர் இலக்கண நூல், சதாவாகனர் காலத்து நூலெனப் பல்லாண்டுகளாகக் கூறப்படுகிறது. குணாட்டியரின் 'பிருகத் கதை'யும் இக் காலத்ததெனக் கொள்ளலாம். 'ஹல' (Hala) என்னும் சாதவாகன மன்னனொருவன் எழுதியதாகக் கூறப்படும் காதா சப்தசதி (Gatha Sapthasati )என்னும் நூல் பிற்காலத்திலேயே தோன்றியிருக்கக்கூடும். கவிஞரும் நாடகாசிரியரும் தத்துவ ஞானியருமான 'அஸ்வகோஷரின்' (Asvaghosha) தலைசிறந்த இலக்கியம் குஷானியர் காலத்தில் தோன்றியது. சரகன், சுஸ்ருதன், நாகார்ச்சுனன், குமாரலதன், ஆரியதேவன் உட்படப் பல மேதைகளும் இக் காலத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

புத்த சமய நூல்கள், பாலி மொழியில் கி.மு. முதல் நூற்றுண்டில் எழுதப்பட்டதெனக் கூறப்படும். 'மிலிந்த பன்ஹ' அல்லது 'மெனந்தரின் கேள்விகள்' என்னும் சிறந்த நூலும், நம் கவனத்திலிருக்கும் காலத்திலேயே எழுந்திருக்கக்கூடும். விமலசூரி பௌமா சார்யன் கர்கன் (Garga the Paumachariya of Vimalasuri) எழுதியுள்ள வானசாத்திர நூலும், 'திவ்யாவதான,' 'லலிதவிஸ்தார' ஆகிய நூல்களின் பகுதிகளும், 'சத்தர்ம புண்டரீகம்' என்னும் நூலும் இக் காலத்திலேயே தோன்றியிருக்கவேண்டும்.

## கிரேக்க-ரோமானியர் செல்வாக்கு
## (Greek and Roman Influence)

நாம் ஆராய்ந்து வரும் காலத்து இந்தியா பல நூற்றுண்டுகளாகக் கிரேக்க-ரோமானிய உலகுடன் தொடர்பு கொண்டிருந்தது. மகதம், மாளவம் ஆசிய நாட்டு மன்னர்கள் கிரேக்கத் தூதுவர்களை ஏற்றும், இந்தியத் தூதுவர்களைக் கிரேக்க நாட்டிற்கனுப்பியும் வந்தார்கள். ஏதென்சு நகர அறிஞர் கூட்டங்களிலும், அலெக்ஸாந்திரியச் சந்தைகளிலும், இந்திய தத்துவ ஞானியரும், வணிகரும், வீரமிக்க மறவரும் காணப்பட்டனர். மௌரியகுல முதல்வன், கிரேக்கத் தலைவனொருவனுடன் திருமணத் தொடர்பு கொண்டிருந்தான். கிரேக்கத் தத்துவ ஞானியைத் தன்னவைக்கு அழைத்துவர அவன் மகன் (பிந்து

சாரன்) மிக விழைந்தான். மௌரிய மரபில் மூன்றுவதாக அரியணை ஏறிய, புகழ் பெற்ற அசோகர், வளமிக்க மாகாண மொன்றின் திருவாகத்தையும், நீர்ப்பாசனத் திட்டமொன்றை நிறைவேற்றும் பொறுப்பையும் யவனத் தலைவனொருவனிடம் ஒப்படைத்தார். கிறித்துவ சகாத்த முற்பகுதியில், குஷாணி யருள் தலைசிறந்த மன்னன் கிரேக்க எஞ்சினியர்களின் சேவையை நாடினன் என்பது தெரிய வருகிறது. இந்திய நாணய வெளியீட்டு முறைகளிலும், சிற்பக் கலையிலும் கிரேக் கரின் கலைப்பண்பு மிளிர்வது கண்கூடு.

கிரைஸோஸ்டம் நகர டயன் (Dion of Chrysostom) என் னும் திறமைமிக்க பேச்சாளர், கிரேக்கக் கவிஞரான ஹோமரின் (Homer) காவியத்தை இந்தியர் இசைத்துத் தமது மொழிக்கே உரிய வகையில் வடித்து, பிரியாமின் (Priam) துயரத்திலும், அண்ட்ரோமக்கே, ஹெக்யூபா (Andromache, Hecuba) ஆகி யோரின் புலம்பல்களிலும், கண்ணீரிலும், ஹெக்டர், அக்கிள்ஸ் (Hector, Achilles) ஆகியோரின் வீரச் செயல்களிலுமுள்ள சுவைகளை மிக உணர்ந்து அனுபவித்தனர் எனக் குறிப்பர். இக் குறிப்பு மகாபாரதம் என்னும் வீரகாவியத்தையே சாருமென்று லும், கிரேக்கக் காவியத்தின் மொழி பெயர்ப்பு ஒன்றும் இருந் திருக்கக் கூடும் என்பதையும் நம்மால் மறுக்க இயலாது. கிரேக்க ரின் விஞ்ஞான அறிவை இந்திய நூலாசிரியர்கள் மிகஉணர்ந்து பாராட்டுகின்றார்கள். நூலாசிரியர் ஒருவர் கிரேக்கரை முனிவர்க ளென (Rishis-Sages) வழிபடும் வழக்கமிருந்ததாகவும் குறிப்பர். புரோச்சு அரசரவைக்கு மேலைநாட்டு இசைவாணர் அழைக்கப் பட்டனர். இதைப் போலக் கிரேக்க நூலாசிரியரும், இந்திய முனிபுங்கவரை மிகவும் வியந்து பாராட்டியுள்ளனர். கிரேக்க மன்னரும், அரசியலறிஞரும் இந்தியத் தத்துவ ஞானிகளின் கருத்துகளைக் கவனத்துடன் செவிமடுத்தனர். இந்தோ-கிரேக்க மன்னர்களுள் சிறந்த 'மெனுந்தர்', புத்தசமயக் கோட்பாடு களை ஆர்வத்துடன் கவனித்துப் புத்தச் சமயச் சார்புள்ள நாண யங்களையும் வெளியிட்டான். கிரேக்க அரசாங்கத் தூதுவர் ஒரு வர், வாசுதேவனைப் போற்றும் வகையில் 'கருடத்தூண்' (Garuda column) ஒன்றை எழுப்பினர். கிரேக்க நன்கொடையாளர் (Meridarchs?) புத்த விஹாரங்களையும் நினைவுச் சின்னங்களையும் எழுப்பினர் எனக் கரோஷ்டிக் (Kharoshti) கல்வெட்டுகள் செய்தி அறிவிக்கின்றன. 'ஆக்ஸிரின்கஸ்-பாப்ரி' (Oxyrhnchus-Papyri)யில் எகிப்து நாட்டுக் கிரேக்கர்மீதுள்ள இந்தியப் பண்பாட்டின் செல்வாக்கு விரித்துரைக்கப்பட்டுள்ளது.

# 10. குப்தப் பேரரசு
## (The Gupta Empire)

### குப்த அரசின் எழுச்சி
### (The Rise of Gupta Power)

இந்திய நாட்டை வெற்றி கண்ட சித்தியருக்குத் தக்காணத்தில் முதன்முறையாக முட்டுக்கட்டையிடப்பட்டது. 'க்ஷகராதர்' குலத்தை வேரறுத்ததோடு, சாதவாகன குலத்தைச்சார்ந்த கௌதமி புத்திர சாதகர்ணி, சாகர், யவனர், பஹ்லவர் ஆகியோரையும் நசுக்கினன். வடக்கில் அந்நியராதிக்கம் செல்வாக்குடனேயே விளங்கியது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் 'தேவபுத்திரன்' புகழ் மங்காமல் அரசு செலுத்தி வந்தான். மேற்கு இந்தியப் பகுதியிலும் வலிமை பொருந்திய சத்ரபனுன முதல் உருத்திரதாமனின் ஆட்சியில் சகரின் ஆதிக்கம் மீண்டும் வலுப்பெற்றது. கி.பி. 230 இல் யூச்சிகளின் செல்வாக்கு மறைந்துவிடவில்லை எனச் சீனச் சான்றுகள் அறிவிக்கின்றன. யமுனைப் பள்ளத்தாக்கில் நாகரின் எழுச்சி வடக்கில் வாழ்ந்துவந்த சித்தியரை, இந்திய வடமேற்கு எல்லைப்பகுதிகளுக்குத் துரத்தியது. எனினும், உருத்திரதாமனின் சந்ததியார்கள் சிறப்புமிக்க மாளவத்தையும் கத்தியவாரையும் தொடர்ந்து ஆண்டுவந்தார்கள். பிற்காலச் சித்திய மன்னர் கொடுங்கோலராயிருந்தனர். கி. பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமண வரலாற்று ஆசிரியர் கொடுங்கோலருள் ஒருவனைப் 'பரகளத்திர காமுகன்' (Parakalathra kamuka பிறர் மனைவியை இச்சிப்பவன்) எனக் கூறுகிறுர். இதிகாசமியற்றிய கவிஞர் ஒருவர், சகரும் மற்ற 'மிலேச்ச மன்னரும்' (Mlecha-பண்பற்றவர்) கலியுகத்தில் நேர்மையற்ற ஆட்சி நடத்துவர் என எச்சரிக்கிறுர். நான்கு வருணத்தவரும் தத்தம் கடமையில் தவறி நடப்பர் என்றும், நாடு பாலைவனமாக மாறிவிடும் என்றும் அக்கவிஞர் கூறுவர். பண்பற்ற கூட்டத்தினரால் துன்புறுத்தப்பட்ட புவியன்னை, முன்பு வலிமைமிக்க சந்திரகுப்தன் புயங்களில் அமர்ந்திருந்தாள்; இப்போதும் வேறு குலத்துதித்த சந்திரகுப்தன் நிழலில் தஞ்சமடைந்தாள்.

## முதலாம் சந்திரகுப்தன்

இப் புதிய வமிச அரசருள் மூன்றுமனுக அரசெய்தியவ னெனக் கல்வெட்டுகள் கூறும் முதலாம் சந்திரகுப்தன், முதன் முறையாக 'மகாராஜாதிராஜா' (Maha Rajadhiraja) அல்லது 'மாமன்னருள் தலைசிறந்தவன்' என்னும் பட்டத்தைச் சூடிக் கொண்டான்; நேப்பாளப் பகுதிகளுட்பட பீகார்ப் பிரதேசத்தில் ஆட்சி செலுத்திய லிச்சாவி வமிசத்தினருடன் பிம்பிசார மௌரியனைப் போலத் திருமண உறவு கொண்டு தனது செல் வாக்கை வலுப்படுத்திக்கொண்டான். லிச்சாவி அரசகுமாரி யான 'குமாரதேவி' கணவனுக்குப் பெரும்புகழையும் செல்வாக் கையும் தேடிக் கொடுத்தாள். அவள் கணவனுன சந்திரகுப் தனின் இறுதிக் காலத்திற்குள் குப்தப் பேரரசு அலகாபாது, அயோத்தி, தெற்குப் பீகார் வரையிலும் பரவியிருந்தது. இப் பகுதிகளை அக்குலத்தவர்கள் ஆண்டுவந்தார்களென்பதைப் புராண வாயிலாக அறிகிறோம். அப்போது கங்கைச் சமவெளி யில் நாகராட்சி சீர்குலையவில்லை. கி. பி. 320இல் தொடங்கும் குப்த சகாத்தம், முதலாம் சந்திரகுப்தனுடன் தொடங்குவதாகக் கூறப்படுகிறது. அரச குலத்தினரையும் அமைச்சர்களையும் அவை கூட்டி, இளவல் சமுத்திரகுப்தனைப் பேரரசில் தனக்கு வாரிசாக நியமித்து அறிவித்தது, சந்திரகுப்தனின் முக்கிய வேலைகளுள் ஒன்று.

## சமுத்திரகுப்தன்
### (Samudra Gupta)

குப்த அரசருள் தலைசிறந்து விளங்குபவன் சமுத்திரகுப்தன். அவனது ஆட்சியின் வரம்பை அறுதியிட்டுக் கூற இயலாது. அவன் கி. பி. 320-க்குச் சற்றுப்பின் அரியணை ஏறி, கி.பி.380-க்கு முன் மரணமடைந்திருக்கக்கூடும். கி. பி. 380 ஆம் ஆண்டில் அவனையடுத்து இரண்டாம் சந்திரகுப்தன் அரியணை ஏறியிருக்க வேண்டும். பரம்பரைச் செய்தி ஏடுகளிலும் அவனைப்பற்றிய குறிப்புகள் காணப்படும். 'ஆரிய-மஞ்சு-ஸ்ரீ-மூல 'கல்பம்' (Arya-manju-Srimula-kalpa) என்னும் ஜாவானிய நூலிலும், 'தந்திரிகா மண்டகம்' (Tandrikamandaka) என்னும் ஜாவானிய நூலிலும், சமுத்திரகுப்தனின் பெயர் காணப்படுகிறது. சிங்கள யாத்திரி கரின் வசதிக்காக, புத்த-கயாவில் விஹாரம் கட்டுவதற்கென அனுமதி கோரி, ஈழமன்னன் 'ஸ்ரீ மேகவர்மன்' (வண்ணன்) (Sri Meghavarma) சமுத்திரகுப்தனுக்கனுப்பிய தூதுவரைப் பற்றிய செய்தியைச் சீன நூலாசிரியர் வாங்-ஹியூன்-சி (Wang-hiuen-tse) குறித்துள்ளார். அவனது ஆட்சியைப்பற்றிய விரிந்த

தெளிவான குறிப்புகள் அலாகாபாது தூண் கல்வெட்டு ஒன்றில் காணப்படும் அரிசேனன் இயற்றிய புகழ்மாலையிலும், மத்திய மாகாணங்களில் 'ஈரான்' என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றிலும் காணப்படுகின்றன. அவன் காலத்தில் எழுந்தவை எனக் கூறப்படும் சில செப்பேடுகள் போலியானவை என அறிஞர் சிலர் கருதி வருகின்றனர். சமுத்திர

சமுத்திரகுப்தன்

குப்தனால் ஏராளமான நாணயங்களும் வெளியிடப்பட்டன. அவனது ஆட்சியைப்பற்றிய சில முக்கியக் குறிப்புகள் நாணயச் சான்றுகளிலிருந்தும், சமுத்திரகுப்தனின் பின்வந்தவரின் பிற ஏடுகளிலிருந்தும் அறிய வருகின்றன.

அரிசேனனின் புகழ்மாலை பல இடங்களிலும் சிதைந்திருப்பதால், அதில் கூறப்பட்டிருப்பவைகளைத் தொடர்ச்சியாகப் பின்பற்றுவது மிகக் கடினம். அச்சுதனால் ஆளப்பட்ட அண்டையிலுள்ள 'அகிச் சத்திரா' (ரோகிலகண்டு), நாகசேனனால் ஆளப்பட்ட 'பதுமாவதி' (மத்திய இந்தியா) போன்ற பகுதிகளைக் குப்தப் பேரரசன் வென்றான். கோட்டா (Kota) குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவனைக் கைப்பற்றி அப் பெருமையில் திளைத்து, புஷ்பபுரம் (Pushpa) அல்லது பாடலிபுத்திரம் என்னும் நகரத்தில் கவலையின்றி அமர்ந்தான். 'புஷ்பபுரம்' அல்லது பாடலிபுத்திரத்தை இக் காலத்தில் 'கோட்டா' வமிசத்தினர் ஆண்டுவந்த செய்தியையும், குப்த மன்னன் அவர்களை வெற்றி கண்ட செய்தியையும் நமக்குக் கிடைத்திருக்கும் சிதைவுற்ற கல்வெட்டிலிருந்து அறிய இயலவில்லை. மேலும், சில குறிப்புகள்,

கோட்டா குலத்தினர் ஆண்டுவந்த பகுதி 'சிராவஸ்தி' அல்லது அதற்கும் வடக்கிலுள்ள பகுதியென்று அறிவிக்கின்றன. குறிப்பிலுள்ள மற்றுமொரு வாசகம் நாகசேனன், அச்சுதன் ஆகியோருடன் மேலைக்கங்கைவெளி அல்லது ஆரியாவர்த்தத்தையும் சுற்றுப்புறங்களையுமாண்ட மன்னர்களையும் குறிப்பிட்டு, அம் மன்னர் அனைவரும் கருணையின்றி அழிக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கின்றது. உருத்திரதேவன், மதிலன், நாகதத்தன், சந்திரவர்மன், கணபதி நாகன், நந்தின், பாலவர்மன் ஆகிய மன்னர் பலரும் இப் பட்டியலில் அடங்குவர். இம் மன்னர்களை இன்னும் அடையாளம் கண்டுகொள்ளும் வகை ஏற்படவில்லை. கங்கை-யமுனை நதிகளின் இடையிலுள்ள வண்டற்பகுதியில் அமைந்த 'புலாண்ட்ஷார்' (Bulandshar) மாவட்ட மன்னன் என மதிலனை அறிஞர் சிலர் கருதுவர். நாணயச் சான்றுகள் கணபதி-நாகனை மத்திய இந்தியாவிலுள்ள நார்வார் பெஸ் நகர்ப்பகுதிகளையாண்டவன் என்று விளக்குகின்றன. சந்திரவர்மனை அடையாளங் கண்டுகொள்வது கடினமெனினும், அவன் கவனித்தற்குரியவன். மேற்கு வங்காளத்தில் 'பாங்குரா' (Bankura) மாவட்டத்திலுள்ள 'சுசுனியா' (Susunia) என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்றில், சிம்மவர்மனின் புதல்வனெனக் கூறப்படும் சந்திரவர்மன் என்ற பெயருடையவனுடன் அவனை அடையாளங்கொள்வது பொருந்துமெனக் கூறப்படுகிறது. கிழக்கு வங்காள பரித்பூர் (Faridpur) மாவட்டக் 'கொத்தவாலி பத'ப் பர்காணத்தில் (Pargana) உள்ள பிரசித்தி பெற்ற சந்திரவர்மன் கோட்டத்திலும் (Chandravarman kot) அவன் பெயர் காணப்படுகிறது. அவன் தகப்பனுன சிம்மவர்மன், நரவர்மனின் தந்தையான மாண்டஸோர் (Mandasor) இளவல் ஒருவனேயென்றும், புஷ்கரணம் என்பது மார்வாரிலுள்ள 'பொகார்ண' (Pokarna)மே என்றும் துணிவுள்ள நூலாசிரியர் சிலர் கூறுவர். சமுத்திரகுப்தனின் கல்வெட்டிலுள்ள சந்திரவர்மன், மாண்டஸோர் நரவர்மனின் சகோதரனும் ராஜபுதன மன்னனும் ஆவதோடு டில்லிக்கருகிலுள்ள இரும்பினுலான மெகரௌலி வெட்டெழுத்துகளில் பொறிக்கப்பட்டிருக்கும் பெருமன்னனுன சந்திரன் அவனே என்றும் சிலர் கருத்துரைப்பர்; சந்திரவர்மனின் பதிவேடு கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கருகிலேயே, 'பங்குரா' மாவட்டத்தில் 'பொகரன்' (Pokaran) என்னும் பெயர் கொண்ட இடமொன்றிருப்பதை மேலே கூறப்பட்ட அறிஞர்கள் அறிந்திருக்கவில்லை. மாண்டஸோர் குடும்ப வரலாற்று ஏடுகளில் சந்திரவர்மன் அல்லது மார்வார் பகுதிப் பொகார்ணு சந்திரவர்மன் என்னும் பெயருடைய இளவல் ஒருவன் காணப்படுவதில்லை என்பதை அவ்வறிஞர்கள் முற்றிலும் மறந்துவிடுகின்ருர்

கள். மெகரௌலிக் கல்வெட்டில் காணப்படும் 'சந்திரன்' 'சந்திரவர்மன்' என வழங்கப்படவில்லை. மேலும், அவனை இந்திய நாடு முழுவதும் வென்ற பேரரசன் என அக் கல்வெட்டுக் குறிக்கும். சமுத்திர குப்தனின் கல்வெட்டுக் குறிப்பு களில், சிறப்பற்ற சிற்றரசர்களின பட்டியலில் காணப்படும் சந்திரவர்மனுடன், பெருவெற்றி வீரனை சந்திரனை அடையா ளங்கொள்வது பொருந்தாது.

குப்தப் பெருமன்னன், விந்தியப் பகுதியில் வாழ்ந்த வன-அரசர்களை வென்று, அவர்களைச் சேவகராக மாற்றினன் என் பது குறிக்கப்படுகிறது. முந்தியப்பகுதி ஒன்றில் சமுத்திரகுப் தன் தென் இந்தியாவின்மீது படையெடுத்துத் தக்காண மன்ன ரனைவரையும் சிறைப்பிடித்து, மீண்டும் விடுதலை செய்தான் என்றசெய்தியைக் குறித்தோம். மகாநதிப்பள்ளத்தாக்கின் மேற் பகுதியிலுள்ள கோசல நாட்டு மகேந்திரன் அடர்த்தியான காடு களையுடைய மகாகாந்தார (Mahakanthara) வியாக்கிர-ராஜன்; அல்லது வேங்கை மன்னன் குரள (Kurala) நாட்டு மந்தராஜன், கோதாவிரி மாவட்ட பித்தாபுரம் அல்லது பிஸ்தபுர (Pishtapura) மன்னன் மகேந்திரகிரி, சென்னை மாகாணத்தின் வடபகுதியி லுள்ள கோட்டூர் (Kottura) சுவாமிதத்தன், அதே பகுதியிலிருப் பதாக ஊகிக்கப்படும் ஏரண்ட பள்ள தமனன், செங்கற்பட்டு மாவட்டக் காஞ்சி நகர்ப் பல்லவ மன்னன், அவமுத்த நாட்டு நீலராஜன், கோதாவிரி-கிருஷ்ண நதிகளுக்கு இடைப்பட்ட வேங்கி நாட்டுச் சாலங்காயன குல மன்னன் ஹஸ்திவர்மன், நெல்லூர் மாவட்டத்தைச் சார்ந்ததென நம்பப்படும் பலக்க நாட்டு உக்கிரசேனன், விசாகப்பட்டின மாவட்டத்தைச் சார்ந்த தேவராட்டிர நாட்டுக் குபேரன், வட ஆர்க்காட்டிலிருப்பதாக நம்பப்படும் குஸ்தலபூர் நாட்டுத் தனஞ்சயன் ஆகிய மன்னர் கள், சமுத்திரகுப்தனுல் கைது செய்யப்பட்டு விடுதலையளிக்கப் பட்டவர்களுள் சிலராவர்.

தென்னிந்திய மன்னர்களை விடுவித்த செய்தியிலிருந்து நருமதை, மகாநதி ஆகிய நதிகளுக்குத் தெற்கிலுள்ள பகுதி களைக் குப்தப் பேரரசுகளுடன் இணைத்துக்கொள்வதற்கு எவ் வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெளிவு. பேரரசு எல்லை விஸ்தரிப்பு என்னும் கண்கொண்டு நோக்கும் போது, சமுத்திரகுப்தனின் ஆற்றல்மிக்க படையெடுப்பினுல், புராணங்களில் குறிக்கப்பட்டிருக்கும் குப்தப் பேரரசுடன், ரோகில்கண்டு, கங்கை-யமுனை ஆறுகளின் இடைப்பகுதி, கிழக்கு மாளவப்பகுதி, வங்காள மாவட்டங்களில் பெரும்பகுதி

பேரரசுடன் இணைந்த செய்தி ஈரான் கல்வெட்டுகளில் உறுதிப் படுத்தப்படுகின்றது. நேரடி ஆட்சி நடத்திய பகுதிகள் நீங்கலாகக் குப்தப் பெருமன்னனின் ஆதிக்கம் மிகவும் பரவியிருந்தது. அவனுடைய அலுவலர்களின் நேர் ஆட்சியில் இருந்த பகுதி எல்லைகளுக்கப்பாலுள்ள மக்களும் மன்னரும, இப்பெரு மன்னனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள். 'சமதாத' மன்னரும் (கிழக்கு வங்காளம்), 'தவாக' (Davaka-அஸ்ஸாமிலுள்ள நௌகாங் அருகில்), காமரூபம் (மேற்கு அஸ்ஸாம்), நேபாளம், கர்த்திரிபுரம் (கார்வாலும், ஜலந்தரும்) கிழக்கு, மத்திய பஞ்சாபிலுள்ள மலைச்சாதியினர் (மாளவம், மேற்கிந்தியா) குறிப்பாக மாளவர், யௌதேகர், மத்திரகர், அபிரர், சனகனிகர் ஆகியவர் அவனுக்கு அடிமைகளாய் இருந்தார்கள். குஷானிய குலத்தினனை 'தேவகுமாரன்', சகத்தலைவர் பலர், சிங்கள நாட்டினர், மற்றும் கடல் கடந்த நாட்டு மக்கள், திறை, பரிசு, பத்தியுடன் அளிப்பதற்குரிய பொருள்கள் யாவையும் கொண்டு, குப்தப் பேரரசன் அடிபணிவதற்கென விரைந்தனர். இராணுவ வெற்றிகள் முடிந்தபின் வாகை சூடி, புகழ் வாய்ந்த அசுவமேத வேள்வியொன்றைப் பேரரசன் செய்து முடித்தான்.

வெற்றி வாகை சூடி இராணுவ வெற்றிகள் காரணமாகப் புகழடைந்த அம் மன்னன், பிற துறைகளிலும் போற்றுதற்குரிய செயல்களை மேற்கொண்டு செய்து முடித்தான். வீழ்ந்து பட்டோருக்கு இரக்கம் காட்டும் அவனது தன்மையையும் புத்திக்கூர்மையையும், கவி வன்மையையும், இசைப் புலமையையும் அவைக்கவிஞர் புகழ்ந்து பேசுகின்றனர். சில நாணயங்களில், கை வீணையுடன் அம் மன்னனது உருவம் பொறிக்கப்பட்டிருப்பது அவனுக்கு இசைக்கலையிலிருந்த புலமையை விளக்கும். கவிஞராலும் அறிஞராலும் சூழப்பட்டிருந்த அவன் சபையில், போர்க்கவிஞரான ஹரிசேனர் மிகச் சிறந்து விளங்குகிறார். மன்னனைப் போலவே சகல கலைகளிலும் அவர் வல்லவராய்க் காணப்பட்டார். பராக்கிரமத்தின் அடிப்படையில் உலகனைத்தும்வெல்வதென்னும் குறிக்கோளை உள்ளத்தில் வைத்துச் சமுத்திரகுப்தன், அசோக மௌரியர் ஆகிய இருவரும் வாழ்ந்தனர். அசோகரது எண்ணத்தில், போரை அறவே விடுத்து, பழங்கால இந்திய நன்னெறியையும், புத்தரின் தனிப்போதனைகளையும் ஊக்கத்துடனும் திறமையுடனும் உலகறியச் செய்வதே, 'பராக்கிரமம்' எனத் தோன்றியது. இராணுவப் பலத்தையும் அறிவையும் பெருக்கி, ஆரியாவர்த்தத்தின் அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்துவதும், புண்ணிய பூமியை அல்லற்படுத்தும் அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து நாட்டை விடுவித்து, சமயம், கலை, இலக்கியம் ஆகிய துறைகளில் தொன்மைவாய்ந்த இந்தியப் பண்பாட்டை மிளிரச்

செய்வதும் 'பராக்கிரமம்' எனக் குப்த பெருமன்னன் நெஞ்சம் எண்ணியது.

## இரண்டாம் சந்திரகுப்த விக்கிரமாதித்தியன்
(Chandra Gupta II Vikramaditya)

சந்திரகுப்தனையடுத்து, இரண்டாம் சந்திரகுப்தன், 'விக்கிரமாதித்தியன்' என்னும் விருதுடன் அரியணை ஏறி, c. கி. பி. 380 முதல் 413 வரை அரசு செலுத்தினான் எனச் சமகாலத்துக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. காலம் வரையறுக்கப்படாத இலக்கியமொன்றில் காணும் குறிப்புகளிலிருந்தும் கி. பி. ஒன்பது பத்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டுச் செய்திகளிலிருந்தும், சமுத்திரகுப்தனின் மகன் 'இராமகுப்தன்' அவனையடுத்து அரியணை ஏறினான் என்றும், சகர் குலத்துக் கொடுங்கோலனிடம் தன் மனைவி துருவ தேவியை அடைக்கலமாக அனுப்ப இசைந்தான் என்றும், இக்கால நூலாசிரியர் சிலர் ஆராய்ந்து கூறுவர். சக மன்னனைக் கொன்று அரசியின் கௌரவத்தை இராமகுப்தனின் சகோதரன் சந்திரகுப்தன் காப்பாற்றினான் என்றும், சகோதரனை அரியணையிலிருக்கச் செய்தான் எனவும், துருவதேவியை மண முடித்துவைத்தான் என்றும் செய்திகள் அறிவிக்கப்படுகின்றன. இக் கதையில் காணப்படும் செய்திகளின் வரலாற்றுத் தொடர்புகளை நிச்சயிக்க இயலவில்லை. சமகாலத்துக் கல்வெட்டுகளில் இராமகுப்தன் என்னும் பெயர் காணப்படுவதில்லையாதலால் இக் கதையைப் பிற்காலத்தில் முளைத்தெழுந்ததாகவே கருத வேண்டும். பெண் வேடம் பூண்ட சந்திரகுப்தன் வேட்கை மிகுந்த சகமன்னனை அழித்தான் என்ற செய்திக்குக் கால நிருணயம் செய்யக்கூடிய வகையில், பாணரது இலக்கியமே முதலாவதாகச் சான்று கூறும். இங்கு இராமகுப்தனைப்பற்றியோ அல்லது துருவதேவியைப்பற்றியோ எவ்விதத் தகவலுமில்லை. எனவே, அத்தகைய செய்திகளைப் புறம்பானவைகளாகவே கருத வேண்டிய நிலையிலுள்ளோம். இக் கதையிலுள்ள செய்திகளை உறுதிப்படுத்தும் சமகாலச் சான்றுகளை எதிர்நோக்கியே தீர்மானிக்கலாம்.

'உலகை வெற்றி காண்பது' என்ற முன்னோனது அடிச்சுவட்டைப் பின்பற்றி இரண்டாம் சந்திரகுப்தனும் செயலாற்றினான். இராணுவ நடவடிக்கைகளைக் கையாண்டும், சாத்துவிக முறைகளைக் கடைப்பிடித்தும் இக் குறிக்கோளில் வெற்றி காண அவன் விழைந்தான். ஐரோப்பிய வரலாற்றில் 'பூர்பன்களும்' (Bourbons) ஹாப்ஸ் பர்குகளும் (Hapsburgs) அரசியல் திருமணத் தொடர்புகளால் தங்கள் செல்வாக்கை வளர்த்துக் கொண்டதைப் போலக் குப்த மன்னரின் வெளிநாட்டு விவகாரங்களிலும் அரசியல் திருமணங்கள் பேரிடம் பெற்றிருந்தன.

இந்திய வரலாற்றிலும், பிற்காலத்தை மூர் வமிசத்தினர் இராஜ புத்திரர்களுடன் திருமணத் தொடர்பு கொண்டு தங்களை வலுப் படுத்திக்கொண்டதைப் போல, குப்த குலத்தின் பெருமைக்கு வித்திட்ட அரசன், லிச்சாவி குலத்தினருடன் கொண்ட தொடர்பும், சிற்றரசர்கள் அளித்த பெண்டிர் யாவரையும் பரிசாக ஏற்கும் சமுத்திரகுப்தனின் வழக்கமும், முளைத்தெழுந்த குப்தர் குலத்தை ஊட்டி வளர்த்தன. இம் முறையைத் தொடர்ந்து, மேற்கு மத்திய மாகாண நாகர் தலைவர்களுடன் உறவு கொள்ளும் வகையில், 'குபேர்நாகை' (Kubernaga) என்னும் இளவரசியை மணந்தும், தன் மகள் பிரபாவதியை இரண்டாம் உருத்திரசேனனுக்கு மணமுடித்துவைத்தும் தக்காணத்திலுள்ள வாகாடகருடனும் நட்புப் பூண்டான்; தன்னை இவ்வாறு வலுப்படுத்திக்கொண்டு அமைச்சன் வீரசேன சாபனும், தளபதி ஆம்ரகார்த்தவனும் பின்தொடர, கிழக்கு மாளவத்தின்மீது படையெடுத்துச் சென்றான். அடிபணிந்து நின்ற சனகானிகத் தலைவனை ஆட்கொண்டு, மேற்கு மாளவம், கத்தியவார்ப் பகுதியிலுள்ள சகராட்சியை வேரறுக்கும் நோக்கத்துடன் முன்னேறினான். பாணரின் ஹர்ஷசரிதம் என்ற நூலும் நாணயங்களும், இவன் முயற்சிகள் வெற்றி பெற்றமைக்குச் சான்று பகர்கின்றன.

இரண்டாம் சந்திரகுப்தனின் நாணயங்கள் பலவற்றில் இவனுக்கு விக்கிரமாதித்தியன் என்ற விருதுப் பெயர் காணப் படுகிறது. கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுப் பதிவேடுகளுள் சில, இவனை உஜ்ஜயினி, பாடலிபுத்திர நகரங்களின் வேந்தனெனக் கூறுகின்றன. படையெடுத்துச் சென்று, சகரின் தலைவனை அவனது சொந்த நாட்டிலேயே கொன்ற இவனது இணையற்ற வீரத்தைப் போற்றும் வகையில் 'சகசாங்கன்' (Sakasanka), 'சாகாரி' (Sakari) என்னும் விருதுகள் இவனுக்குச் சூட்டப்பட்டுள்ளன. வராகமிகிரர், காளிதாஸர் ஆகியோருட் பட்ட 'நவரத்தினங்களை'க்கொண்ட பேரவையையுடைய கற்பனைக் கதைகளிலுள்ள விக்கிரமாதித்தனே இரண்டாம் 'சந்திரகுப்தன்' எனக் கூறுவோர்சிலருண்டு. நவரத்தினங்களைப் பற்றிய கர்ண பரம்பரைச் செய்தி, காலத்தால் பிந்தியதும் ஒன்பதின்மரும் ஒரே காலத்தில் உயிருடனிருந்தனராவென் பதும் தெளிவற்றதுமான செய்தி. வராகமிகிரரை, ஆரிய பட்டருக்குப் பிற்காலத்தவராகவே கொள்ள வேண்டும். ஆரிய பட்டர் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்தவர். மல்லிநாதரது கருத்திற்கொப்ப, காளிதாசர், இரண்டாம் சந்திரகுப்தனின் சமகாலத்தவராய் இருக்கக்கூடும். சிறந்த இவ் விளக்கவுரையாசிரியர் இக் காலத்தில் வாழ்ந்த 'திந்நாகாசாரியன்' என்பவனைக் காளிதாசரின் சமகாலத்தவனெனக் குறிப் பிடுவர். இரண்டாம் சந்திரகுப்தன் காலத்தில் வாழ்ந்ததாகக்

கருதப்படும் கவனித்தற்குரிய மற்றுமோர் அறிஞன், பா-ஹியான் என்பான். பிரசித்திபெற்ற இச் சீன யாத்திரிகன், பாடலி புத்திரத்தின் சிறந்த அரண்மனையையும், அறச்சாலைகளையும்-மருத்துவமனைகளையும் கண்டு மிக்க வியப்பு எய்தினன். மத்திய தேசத்தில் வழங்கிய அரசு முறையையும், மக்களின், குறிப்பாகச் செல்வரின் உதார குணத்தையும் இவன் மிகவும் போற்றினன்.

## முதலாம் குமார குப்தனும் ஸ்கந்த குப்தனும்
## (Kumara Guptha I and Skanda Guptha)

இரண்டாம் சந்திரகுப்தனையடுத்து, மௌரிய அரசு கட்டிலேறிய முதலாம் குமார குப்தன் மகேந்திராதித்தியன் கி பி. 415 முதல் 455 வரை அரசு செலுத்தியிருக்கக்கூடும். வடக்கு வங்காளத்திலிருந்து கத்தியவார் வரையிலும், இமாலயத்திலிருந்து நருமதை (Nerbuddha) வரையிலும் பரந்த, முன்னோர் விட்டுச் சென்ற சாம்ராச்சியத்தை இவன் ஆண்டுவந்தான். இவனது ஆதிக்கம்தெற்கு முகமாகத்தக்காணத்திலுள்ளசதாராமாவட்டம் வரையிலும் பரவியிருந்ததென நாணயச் சான்றுகளிலிருந்து எண்ணலாம். சிறப்பு வாய்ந்த அசுவமேதமொன்றை நடத்தும் வாய்ப்பையும், அருஞ்சாதனைகள் பலவற்றால் இவன் பெற்றான். ஆயினும், இறுதிநாள்களில் இவன் மனவமைதி பெறவில்லை. நருமதைப் பள்ளத்தாக்கிலுள்ள 'மேகலா' என்னும் பகுதியில், புஷ்யமித்திர குலத்தினர், செல்வமும் செல்வாக்கும் மிகப்பெற்றுப் பேரரசன் ஒருவனை, ஓர் இரவு முழுவதும் கட்டாந்தரையில் படுத்துறங்கச் செய்யுமளவிற்குப் பேரரசன் கௌரவத்திற்குப் பங்கம் விளைத்தனர். இவ்வவல் ஸ்கந்தகுப்தனின் பெருமுயற்சியால் குப்த குலத்திற்கு ஏற்பட்ட சாதகமான நிலையைக் கண்ணுறும் பேறு கிட்டாது, மன்னன் மடிந்தான்.

வெற்றிபெற்ற இளவலை வெல்வதற்கரிய ஹூணர்கள் எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள். இவர்களை விரட்டியடித்துப் பேரரசின் பகுதிகளை மீட்பதில் முதலில் வெற்றிகண்டு, அப்பகுதிகளை அவற்றிற்கென நியமிக்கப்பட்ட படைகாப்பாளரிடம் ஒப்புவித்தான். அரச பதவியளிக்கும் அதிருஷ்ட தேவதை, பிற மன்னர்களை விடுத்து, இவனை நாயகனாகத் தேர்ந்தெடுத்தாளெனக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. இவ்வாசகத்தின் முழு விளக்கம் காண்பதரிதாயுள்ளது எனினும், பேராபத்துக் காலத்தில் இவனது அபாரத் திறமையையும பராக்கிரமத்தையும் பாராட்டி, போட்டியாளர் பலரிருந்தும், இவன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும் ஏழாம் நூற்றாண்டில் இதைப் போலவே ஹர்ஷன் தேர்ந்தெடுக்கப்பட்டதும் நினைவுகூரத்தக்கது.

பண்பற்ற ஹூணரை வென்று பெருமையடைந்த ஸ்கந்த குப்தன், 'விக்கிரமாதித்தியன்' என்னும் விருதைச் சூடிக்கொண்டான். 'கதாசரித்சாகரம்' (Kathasaritsagara) என்னும் நூலில், மகேந்திராதித்தியன் மகனெனச் சித்திரிக்கப்படும் இவனுடைய சாதனைகள், மிகவும் சுவையுடன் நினைவுகூரப்படுகின்றன. ஸ்கந்த குப்தனின் ஆட்சி கி. பி. 457-இல் முடிவடைந்திருக்கக் கூடும்.

## குப்தப் பேரரசின் இறுதிக்காலம்
(The Last days of the Gupta Empire)

இனிக் குறிக்கப்படும் காலத்து வரலாறு தெளிவற்றது. குப்த அரசின் ஆதிக்கம் நருமதைப் பள்ளத்தாக்கின் ஜபல்பூர்ப் பகுதியில் கி. பி. 528-இல் ஏற்பட்டதென்றும், வடக்கு வங்காளத்தில் கி. பி. 543—544 வரையிலும் இருந்ததென்றும் கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. குமார குப்தன் என்பவன் கி.பி. 473—474-இல் ஆண்டுவந்தானெனவும், புத்த குப்தன் என்பவன் கி. பி. 476-77 முதல் 495வரை அரசு செலுத்தினானெனவும், வைன்ய குப்தன் என்பவன் கி. பி. 508-இலும் பானு குப்தன் என்பவன் கி. பி. 510-11-இலும் ஆண்டுவந்தனரென்பதும் நம்பப்படுகின்றன. முதலாம் குமார குப்தனின் மகன் புருகுப்தன், புருகுப்தனின் மகன் நரசிம்ம குப்தன் (பாலாதித்தியன்), நரசிம்ம குப்தன் மகன் குமார குப்தன் தெளிவற்ற இக் காலத்தில் ஆட்சி செலுத்திய குமார குப்தன் மகன் விஷ்ணு குப்தன் ஆகிய நால்வரைப்பற்றிய குறிப்புகளை, பிதரி (Bhitari) நாளாந்தா முத்திரை பெற்ற கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. ஹூணக் கொடுங்கோலனை வென்றவனே நரசிம்மபாலாதித்தியன் என்றும், கி. பி. 533-34-இல் இவனது செல்வாக்கு நசித்திருக்கக்கூடுமென்றும் கூறப்படுகின்றது. 'பாலாதித்தியர்' பலர் இருந்ததால், அவர்களுள் குறிப்பாக இவனை அடையாளம் கண்டுகொள்வது மிகக் கடினமான முயற்சி. மற்றுமொரு கருத்து விளக்கம், குப்த குலத்தைப் போட்டியிடும் கூறுகளாகப் பிரித்து, பிதரி, நாளந்தா முத்திரையிட்ட கல்வெட்டுகளில் குறிக்கப்படுவோர் ஒரு கிளையினரே என்று கூறும். கி. பி. 473-74-இல் அரசு செலுத்திய குமார குப்தன், புருகுப்தன், பானுகுப்தன் ஆகியோர் மற்றொரு கிளையினராவர். இக்கால ஆராய்ச்சியின் பயனாகப் புதகுப்தனைப் புருகுப்தன் மகனென்று நாமறிவதாலும், அவனது ஆட்சியில் நடைபெற்ற செய்திகள்யாவும் ஐயத்திற்கிடமின்றி அறியக்கிடப்பதாலும், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் குப்தப் பேரரசு பிளவுபட்டதாகக் கூறப்படும் செய்திக்கு ஆதாரமெதுவுமில்லை. நரசிம்மனின் மகனை குமாரனைக் கி. பி. 473-74-ல் அரசு செலுத்திய குமார குப்தனைக் கருதும் மற்றுமோர் வகம் ஏற்கத் தகுந்ததாகத் தென்படுகிறது. புருகுப்தன்,

அவன் மகன் நரசிம்மன் (கி. பி. 467-73-இல்) ஆகியோருக்கு அளிக்கப்பட்டிருக்கும் மிகக்குறுகிய ஆட்சிக்காலம் ஒன்றே இக்கருத்தை ஏற்பதற்குத் தடையாய் நிற்கும். மறுக்கவியலாத தடையென இதைக் கொள்ள வேண்டுவதில்லை. பேரரசின் இறுதிக் காலங்களில் இத்தகைய மிகக்குறுகிய ஆட்சிகள் இருப்பது இயற்கை என்பதைப் பிற உதாரணங்களிலிருந்து நாமறிவோம்.

புதகுப்தனின் (476-495) ஆட்சிக்காலம் வரையிலும் குப்தப் பேரரசு ஒருமையுடன் இருந்து வந்ததென்பதைக் கல்வெட்டுகளிலிருந்து நாம் நன்கறிவோம். மேற்கு எல்லைப்பகுதிகளுள் சிலவற்றை, அக் காலத்தில் இழந்திருக்கக்கூடும். புத்த குப்தனுக்குப் பின் தோரமானன், மிகிரகுலன் (Miharagula) ஆகியோரின் தலைமையில் ஹூணர் படையெடுத்து, கிழக்கு மாளவத்திலுள்ள ஈரான் வரையிலும் இந்திய நாட்டிலுள்ள பல பகுதிகளைக் கைப்பற்றினர். இவ்வாறு முன்னேறிய ஹூணர், பாலாதித்தியன் என்றபெயர்கொண்ட மன்னன் ஒருவனது ஆட்சியில், அம் மன்னனால் தடை செய்யப்பட்டனர். ஈரான் பகுதியில் நடைபெற்ற புகழ்வாய்ந்த போரின் வெற்றி வீரனான பானு குப்தனே பாலாதித்தியன் என்பது நம்பப்படுகிறது. கி. பி. 533-534-க்குள் ஆற்றலும் மேன்மையடைவதில் பேரவாவும் கொண்ட மேற்கு மாளவப் பகுதியிலுள்ள மாண்டஸோர் தலைவன் யசோதர்மனால் ஹூணர் ஆதிக்கம் இறுதியாக வேரறுக்கப்பட்டது. வெற்றியைத் தனது செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கு யசோதர்மன் பயன்படுத்திக்கொண்டான். கி. பி. 543-44 வரையிலும், சந்தேகத்திற்கிடமின்றி, வடக்கு வங்காளத்தில் குப்தராதிக்கம் நிலைபெற்றிருந்ததென்னலாம். 'குப்தன்' என்று முற்றுப்பெறும் பெயருடைய மற்றொரு மன்னன் பிற்காலங்களில் பிரமபுத்திரா நதிக்கரைகளில் போரிட்டு வந்தான் என்பதை அறிகிறோம். மாளவம், மகதம் ஆகிய பகுதிகளை ஆண்டுவந்த மற்ற குப்த இளவல்கள் கி. பி. ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், தானேசுவரம், கன்னோசி (Kanausi) என்னும் இடங்களில் எழுந்த 'புஷ்யபூதி' (Pushyaphuti) குலத்தினருடன் இணைந்தனர். 'பிற்காலக் குப்தர்களாகிய' இவர்கள், ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தங்கள் பேரரசு வன்மையைவிளக்கும் சில விருதுகளைச் சூடி, ஆதித்திய சேனன் என்பவனது ஆட்சியில் குலப்பெருமையை ஓரளவு மீட்டனர். எட்டாம் நூற்றாண்டில் கன்னோசி நாட்டு யசோவர்மனுக்கும் (Yasovarman) கௌட (Gauda) குலத்தைச் சார்ந்த பெயரற்ற மன்னன் ஒருவனுக்கும் மகதத்தில் பெரும்போர் நிகழ்ந்தபோது குப்தராட்சி முழுவதும் மறைந்திருக்கவேண்டும்.

# 11. ஹூணர்களை எதிர்த்துப் போராட்டமும், கன்னோசி, காஷ்மீரம், கௌடம் இவற்றின் எழுச்சியும்

## ஹூணர்கள்

ஸ்கந்த குப்தன் மிக வீரமாக முயன்ற போதிலும், புஷ்ய மித்திரனின் எழுச்சியாலும் ஹூணர்களின் தொடர்ந்த படையெடுப்புகளாலும் அடைந்த அதிர்ச்சியினின்றும் குப்தப் பேரரசு தன் முழு வலிமையுடன் ஒரு சிறிது காலமே நிலைபெற்று விளங்க முடிந்தது. வாரிசு உரிமையின்படி அமைந்திருந்த அதிகார முறை பிளவுச் சக்திகள் வளர்ந்திருக்க வகை செய்தது. இப் பிரிவு உணர்ச்சி குறிப்பாகத் தொலைவிலுள்ள மாகாணங்களில் அதிகம் வெளிப்படலாயிற்று. முரட்டுச் சாதியினரின் தாக்குதலால் மத்திய ஆட்சி வலுவிழந்தபோது இப் பிரிவினைச் சக்தி கிளைத்தெழுந்தது. குப்தப் பேரரச வமிசத்திலுங்கூடப் பல வீனமும் பிரிவு மனப்பான்மையின் சின்னங்களும் தோன்ற ஆரம்பித்தன. உண்மை விசுவாசமுள்ள சிற்றரசுகள் எவ்வளவு முயன்றும் சாம்ராஜ்யத்தை அதை எதிர்நோக்கியுள்ள அழிவினின்றும் காப்பாற்ற இயலவில்லை. நமக்கு எட்டும் வரையில் குப்த வமிசத்தின் கடைசி அரசனாய் விளங்கியவன் புதகுப்தன் என்பது தெரிகிறது. அவன் இயன்ற வரையில் சாம்ராஜ்யத்தின் பெரும்பகுதியில் ஒற்றுமையை நிலை நிறுத்தினான். அவன் காலமான பின்னர், சமுத்திரகுப்தன் காலத்திலிருந்த குப்த ஆட்சிக்கு அடி பணிந்திருந்த சியால்கோட், கிழக்கு மாளவம் ஆகிய பகுதிகளில் ஹூணர்கள் பாதுகாப்பாகத் தங்கித் தங்கள் ஆதிக்கத்தை வலுப்படுத்தினார்கள்.

ஹூணர் என்பவர் மிகவும் கொடுமை வாய்ந்த முரட்டுக் கூட்டத்தினர். அவர்கள் ஐந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து மத்திய ஆசிய ஸ்டெப்பிப் புல்வெளிகளினின்றும்கூட்டம் கூட்டமாய்க் கிளம்பி, மேற்கில் ரோமானிய சாம்ராச்சியத்தின் வலிமைமிக்க பகுதிகள் சிலவற்றிலும், இந்தியாவில் குப்த சாம்

ராச்சியத்திலும் பரவினார்கள். அவர்கள் படையெடுப்பை முதற் கண் தடுத்து நிறுத்தியவன் ஸ்கந்த குப்தன். ஆயினும், அப்பெருமன்னன் இம் மண்ணுலக வாழ்க்கையை நீத்தவுடன் அவர்கள் மீண்டும் தங்களது படையெடுப்பைத் தொடர்ந்தார்கள். ஐந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஹூணர்களின் ஆட்சி, தோரமானன் அவன் புதல்வன் மிகிரகுலன் இவர்களுடைய ஊக்கமும் வலிமையும் காரணமாக எல்லாத் திசைகளிலும் மிக விரைவாகப் பரவலாயிற்று. பின்னர்க் கூறப்பட்ட மிகிரகுலன் என்பவனைப்பற்றிக் கல்வெட்டுகளிலிருந்தும் நாணயங்களிலிருந்தும் அறிவது தவிர, யுவான்-சுவாங், கல்ஹணர் என்பாரின் குறிப்புகளாலும் அறிய வருகின்றது. இவ் விருவரும் மிகிரகுலனது கொடிய ஆட்சிக்குச் சான்று கூறுகின்றனர். காஸ்மாஸ் இண்டிகோ பெலஸ்டஸ் (Cosmos Indikopleustes) என்னும் (புத்த) பிக்குக் குறிப்பிட்டுள்ள கொல்லாஸ் (Gollas) என்னும் வெள்ளை ஹூண மன்னன் இவனே என்று உணரப்படுகிறான். மேலும், சாங்-யுங் என்னும் சீனநாட்டு யாத்திரிகர் கி. பி. 52-ல் சந்தித்த காந்தாரநாட்டு ஏதா (Yetha) மன்னன் இவன் என்று கொள்வாரும் உண்டு. கல்கிராஜாவைப் (Kalkiraja) பற்றிய ஜைனக் கதைகளில் இம் மன்னனுடைய அருஞ்செயல்களைப் பற்றிய செய்தி பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் ஊகிக்கப்படுகிறது. மத்திய இந்தியாவில் ஹூணர்களின் ஆட்சி பரவுவதைக் குப்தப் பேரரசின் விசுவாசமுள்ள சிற்றரசர்கள் தடுத்து நிறுத்தியதாகத் தோன்றுகிறது. முடிவில் அவர்களுடைய அரச ஆதிக்கத்தை மாண்டசோர் (Mandasor) அதிபனான யசோதர்மன் சிதற அடித்தான். இதன் பின்னரும் ஹூணச் சிற்றரசர் பலர் இந்தியாவின் வடமேற்கிலும் மாளவத்திலும் சிறுசிறு பகுதிகளில் தொடர்ந்து ஆட்சி செய்து வந்தனர். இவர்கள் ஆங்காங்கு ஆண்டுவந்த சுதேசச் சிற்றரசர்களுடன் நீண்ட போர்களை நடத்திவந்தார்கள். முடிவில் இவர்கள் இராஜபுத்திர வமிசத்தினருடன் கலந்துவிட்டார்கள். ஆரியாவர்த்தத்தில் புதிதாக ஆதிக்கம் பெற முயன்றவர்களான யசோதர்மன், மௌகாரிகள் (Maukharis) புஷ்யபூதி, பால வமிசத்து மன்னர்களும், பண்டு யவனர்களும், சக பஹ்லவர்களும் நாட்டைச் சூறையாடியது போன்ற அழிவுச் செயலை மேற்கொண்ட இந்த நாகரிகமற்ற முரட்டுச் சாதியினரை எதிர்ப்பதில் அதிக வெற்றி கண்டார்கள் என்பது வெளிப்படை.

## யசோதர்மன்

ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டவர்களுள் மிகவும் முற்பட்டவன் சைவ சமய மன்னனான யசோதர்மன். அவனுடைய

அருஞ்செயல்களைப்பற்றி மாண்டசோர் குறிப்புகளில் காணலாம். ஒரு சமயம் இப் பூவுலகத்தை அறவழியினின்றும் நீங்கிய கொடிய மன்னர் துன்புறுத்தியபோது இம் மன்னன் பாதுகாப்பு அளித்ததாக இக் குறிப்புகளின் மூலம் இவன் உரிமைகொண்டாடுகிறன். மேலும், இவன் ஒரு பெரிய சாம்ராட்டு அல்லது 'சக்கரவர்த்தி' என்றும், எல்லோரையும் வென்றடக்கிய குப்த மன்னர்களாலும் ஹுணத் தலைவர்களாலும் ஆதிக்கத்துட்படுத்த முடியாதிருந்த பகுதிகள் பலவற்றிலும் இவன் தன் அதிகாரத்தைப் பரப்பியதாகவும் கூறுவர். பிரமபுத்திரா நதி முதல் கிழக்கு மலைத்தொடர்கள் வரை உள்ள சுற்றுப்பகுதிகள் பனி படிந்த இமயமலைப்பகுதி முதல் மேலைக் கடற்கரை வரையிலும் உள்ள பகுதிகள் ஆகிய பிரதேசங்களை ஆண்டுவந்த சிற்றரசர்கள் இவனுக்குத் திறை செலுத்தி இவன் ஆட்சியை ஒப்புக்கொண்டுள்ளார்கள். எவருக்கும் அடிபணிந்தறியாத ஹுண மன்னன் மிகிரகுலனும் யசோதர்மனை அடிபணிந்து வணங்கும் படி வற்புறுத்தப்பட்டான், இப்பேரரசனுடைய சாதனைகளைக் குறைத்து மதிப்பிடும் மனப்பான்மை அறிஞர் சிலரிடம் இருந்து வந்தது. ஆயினும் சகர்களை ஒழித்த உஜ்ஜயினி நாட்டுப் பேரரசனும், காளிதாசனை ஆதரித்தவனுமான பேரரசன் விக்கிரமாதித்தன் இவனே என்று கருதும் ஆசிரியர்களும் குறைவில்லை. இவ்வாறு கூறும் ஆசிரியர்கள், இம் மன்னனுக்கு விக்கிரமாதித்தியன் என்ற பட்டம் உண்டு என்று கூறுவதற்கான இவன் காலத்து ஆதாரம் ஒன்றுமில்லை என்பதையும், இவனுல் வெல்லப்பட்ட அயல் நாட்டினர் ஹுணர்களே அன்றிச் சகர் அல்லர் என்பதையும் இவனுடன் நெருங்கிய தொடர்புடைய நகரம் தாசபுரம் என்னும் மண்டசோரே தவிர உஜ்ஜயினி அன்று என்பதையும், மறந்துவிடுகின்றுர்கள். இவனுடைய முன்னேர்களைப்பற்றியோ, அன்றிச் சந்ததியார்களைப் பற்றியோ நாமறிவது மிகக்குறைவு. நைகமா என்று வழங்கப்பட்ட ஒரு குடும்பத்தினர், விந்திய மலைக்கும் சிந்துவுக்கும் (ஒரு கடல் அல்லது மத்திய இந்தியாவிலுள்ள ஒரு சிற்றுறு) இடைப்பட்ட பிரதேசத்தின் அரசப்பிரதிநிதி பதவி வகித்து வந்தனர். மாளவ நாட்டின் பகுதிகளை யசோதர்மன் காலத்திற்குச் சிறிது பின்னர் மைத்திரர்களும் காலசூரிகளும் குப்தர்களும் ஆண்டு வந்தார்கள். குப்த பரம்பரையின் நாணய முறைப்படி தங்கள் நாணயங்களைக் காலசூரிகள் வெளியிட்டதையும், அவர்களின் விருதுப் பெயர்களைப் போன்ற பெயர்களை இவர்கள் தாங்கியதையும் நோக்குங்கால் மாளவ நாட்டை ஆண்ட குப்தர்களுக்கும் இவர்களது ஆட்சிக்கும் இடைப்பட்ட கால அளவு மிகவும் குறைவென்பது தெளிவாகின்றது.

கி. பி. ஆரும் நூற்றுண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் சிறந்திருந்த அரச பரம்பரையினருள் கங்கைச் சமவெளியிலாண்ட மௌகாரிகளும் தக்காணத்தில் ஆட்சி செய்த சாளுக்கியர்களும் முக்கியமானவர்கள். சாளுக்கியர்களைப்பற்றிய சரித்திரம் பின்னர் மற்றொரு பகுதியில் கூறப்படும்.

## மௌகாரிகள்

மௌகாரிகள் தங்களைப் புராணப் புகழ் பெற்ற அசுவபதியின் வழித்தோன்றல்களெனக் கூறுகின்றார்கள். மிகு பழங்காலத்திலிருந்தே இவர்கள் மகதத்தையும் இராஜபுதனத்தையும் ஆண்டுவந்த குறுநிலத் தலைவர்களாய் விளங்கினார்கள் என்றும் கருதப்படுகிறது. இவ் வமிசம் ஈசானவர்மன் தலைமையில் சிறப்பெய்தியது. அவனே முதன்முதலாக 'மகா ராஜாதிராஜன்' அல்லது 'மன்னர்களுக்கு மன்னன்' என்னும் புகழ்பெற்றான். கி. பி. 545இல் அவன் ஆட்சிக் காலத்துக் குறிப்பிலிருந்து அம் மன்னன் ஆந்திரர்களையும் சுலிகர் அல்லது கௌடர்களையும் வென்றான் என்பதை நாம் அறிகிறோம். ஆந்திரர்களும் சுலிகர்களும் விஷ்ணுகுண்டின் முதலிய மேற்குக் கிழக்குத் தக்காணத்தை ஆண்டுவந்த சாளுக்கிய குலத்தினரின் மரபைச் சார்ந்தவர்களாய் இருந்திருக்கலாம். கடற்கரைக்கு அருகிலுள்ள பகுதியை ஆண்ட கௌடர்கள், கர்ண சுவர்ணத்தின் (மேற்கு வங்காளம்) சசாங்கனுக்கு முன்னோர்களாய் இருந்திருக்கலாம். சசாங்கன் என்பான், தானேசுவர ராஜ்யவர்த்தனனுக்கு வைரி என்றும், கி. பி. எட்டாம் நூற்றுண்டில் ஆண்டுவந்த கன்னோசி நாட்டு யசோவர்மனுக்குப் போட்டியானவன் என்றும் கூறப்படுகிறது. ஈசானவர்மன் பிற்காலக் குப்தனுடன் போரிட்டான். இக் குமார குப்தன் இதே பெயருடைய மூன்றும் அல்லது நாலாம் மன்னனாய் இருக்கக்கூடும். குமார குப்தனின் மைந்தனை மௌகாரி மன்னன் பெருமித நடையுடையதும் ஹூணப்படையினரை வீசியெறிந்ததுமான யானைப்படையைக் கலக்கியடித்தானெனப் புகழப்படுகிறான். வட இந்தியாவில் சிதைந்துபோன அரச பரம்பரையை மீண்டும் நிலைநாட்டவேண்டும் என்று கனவு கண்ட ஸ்கந்தகுப்தனும் யசோதர்மனும் இடைவிடாமல் எவ்வாறு அயல்நாட்டுப் படையெடுப்பாளர்களுடன் போரிட்டார்களோ, அவ்வாறே மௌகாரிகளும் போர் நடத்தினார்கள் என்பது நன்கு புலனாகிறது. ஈசானவர்மனுக்குப் பின்னர் ஸர்வவர்வன் அவந்திவர்மன், கிரகவர்மன் என்ற மூவர் தொடர்ந்து ஆட்சி புரிந்தனர். பின்னர்க் கூறப்பட்ட கிரகவர்மன் என்பான், அவந்திவர்மனின் மகனாவான். தானேசுவரத்துப் புஷ்யபுத்தி வமிச மன்னனும் புகழ் சிறந்த ஹர்ஷனுக்குச்

சகோதரனுமான பிரபாகரவர்த்தனன் மகள் இராஜ்யஸ்ரீயை இவன் மணந்தான். ஆயினும், இத் திருமண உறவு மௌகாரி களை மாளவநாட்டுக் கொடிய மன்னன் விளைத்த அழிவினின்றும் காப்பாற்ற இயலவில்லை. இம் மாளவ நாட்டு மன்னனை ஹர்ஷ னுடைய கல்வெட்டுகளால் தேவகுப்தன் என்று அறியலாம் விதவையான இராஜ்யஸ்ரீ கன்னோசியில் சிறை வைக்கப்பட் டாள். பிரபாகரவர்த்தனர் மூத்த மகனும் கிரகவர்மனுக்கு மைத்துனனுமான இராச்சியவர்த்தனன் கிரகவர்மன் மரணத் திற்குப் பழிக்குப்பழி வாங்கினன். ஆயினும், கௌட நாட்டு மன்னன், சசாங்கனின் போலிப் பணிவினால் ஏமாறிப்போன இராச்சியவர்த்தனன் தனியாகப் பிரிக்கப்பட்டுப் படையிழந்து கொல்லப்பட்டான். விதியின் இச்செயலால், தானேசுவர இராச்சியமும் மௌகாரி அரசும் தங்கள் மன்னர்களை இழந்து தவித்தன.

## ஹர்ஷன்

இத்தகைய தருணத்திலேதான் கன்னோசி அரசியல் அறி ஞர்கள் தங்கள் தலைசிறந்த தலைவர் பந்தி (Bhandi)யின் அறி வுரைப்படி இராச்சிய வர்த்தனன் இராஜ்யஸ்ரீ என்பவர்களுக்கு உடன்பிறப்பான ஹர்ஷனுக்கு முடிசூட்ட முன்வந்தார்கள். இவ்வாறு ஹர்ஷன் முடிசூடி வடவிந்தியாவில் குப்தர் காலப் பெருமையை மீண்டும் நிலைநாட்டவும், தன் பரமவைரிகளும் ஒப்புக்கொள்ளும்படி வடவிந்தியா முழுவதற்கும் சிறந்த அர சாட்சி ஏற்படவும் நல்விதி அமைந்தது. இந்தப் பெருஞ்சம் பவம் கி. பி. 606இல் ஏற்பட்டது. இதுவே ஹர்ஷ சகாத்தத்தின் ஆரம்பமாகும். ஹர்ஷன் அரியணை ஏறத் தயக்கம் காட்டியதைப் பாணர், யுவான் சுவாங் இருவரும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு இவன் மறுதளித்ததைச் சிலர், இவன் கன்னோசி அரியணைக்கு உரிய வாரிசு அல்லன் என்பதையும், கன்னோசி தன் தமக்கை யின் கணவனது மௌகாரி மரபினருக்கு உட்பட்டதென்பதை யும், அதன் வம்சம் இன்னும் அற்றுவிடவில்லை என்பதையும் உணர்ந்துதான் ஹர்ஷன் அவ்வாறு செய்தான் என்றும் கருது கின்றனர். ஆனால், இந்த விளக்கம் தன் தமையன் வகித்த பதவியை ஹர்ஷன் அடைய ஏன் மறுக்கவேண்டுமென்பதைத் தெளிவாக்கவில்லை. மேலும், ஹர்ஷனுக்கு உடனடியாக முற் பட்ட காலத்தில் கன்னோசி ஆட்சிக்கு நிச்சயமாக உரிமையான மரபினர் யார் என்பது, பாணர் அல்லது சீன எழுத்தாளர்கள் குறிப்பிலிருந்து அறியவொண்ணாததாயுள்ளது. யுவான்-சுவாங் கூறும் விவரங்களால், கொலை செய்யப்பட்ட மன்னனது ஆட்சிக் குள் கன்னோசி அடங்கியிருந்ததாகக் கருத இடமளிக்கின்றன.

கன்னோசியின் தலைசிறந்த அரசியல்வாதி பந்தியாவன். இவன் தானேசுவர அரசவையில் முக்கியமானவன். இவன் மௌகாரிகள் அவையைச்சார்ந்தவன் அல்லன். ஆயினும் இவன் விதவையாக்கப்பட்ட மௌகாரி இராணி கன்னோசியில் சிறை செய்யப்பட்டதையும், குப்தப் பெருமகன் சூழ்ச்சியால் அவள் தப்பிச் சென்று விந்திய மலைச்சாரலில் உள்ள காட்டை அடைந்ததையும் விவரித்துள்ளான். கன்னோசி மன்னனான ஹர்ஷன் தன் விதவையான சகோதரியின் துணைகொண்டு தன் நாட்டை ஆட்சி செய்தான் என்பது, அவளுக்குக் கன்னோசியின் மீதுள்ள உரிமையைத் தெரிவிப்பதாய் உள்ளது என்று பொருள்படும்படி பான்சி கூறுகிறது. ஆயினும், கன்னோசி அவன் கணவனது நாட்டின் ஒரு பகுதியாய் இருந்திருப்பின் மட்டுமே இக் கூற்றுச் சாத்தியமெனக் கொள்ளலாம். அக் காலத்து உண்மை வரலாறு தெளிவாக உணரப்பட வேண்டின், புதிய சான்றுகள் கிடைக்க வேண்டும். ஹர்ஷன் தன் சகோதரன், தன் மைத்துனன் இவர்களுடைய நாட்டின் ஆட்சிப் பொறுப்புக்குத் தலைமை பூண்டான் என்பது மட்டும் தெற்றென விளங்குகின்றது. அவ்வாறு இருந்தும் இராஜபுத்திர சீலாதித்தியன் என்ற அடக்கமான பெயர் தாங்குவதோடு ஹர்ஷன் முதற்கண் அமைவு கொண்டான். புகழ்பெற்றதும் சிவ வழிபாட்டில் ஈடுபட்டதுமான புஷ்யபூதியின் மரபைச்சார்ந்தது ஹர்ஷனின் வமிசம். இக்குடும்பத்தினர் தானேசுவரத்தை ஆண்டுவந்தனர். ஹர்ஷனுடைய தந்தை பிரபாகரவர்த்தனன் காலத்தில் இவ் வமிசம் சிறப்புற்றோங்கியது. பிரபாகரவர்த்தனன் பிற்காலக் குப்தமன்னன் வழித்தோன்றிய சிற்றரசனின் மகனாயிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. இவன் 'மகா ராஜாதிராஜா' என்னும் பட்டம் பூண்டு ஹூணர்களாகிய மான் கூட்டத்திற்கு எதிராகச் சிங்கம் போன்று விளங்கினான். முன்னரே கூறப்பட்டபடி, இவன் தன் மகள் இராஜ்யஸ்ரீயை மௌகாரி மன்னன கிரகவர்மனுக்கு மண முடித்தான். இத் திருமண உறவினால் சூரிய குலமும் சந்திர குலமும் போலச் சிறந்து விளங்கிய மத்திய தேச (மேல் கங்கைச் சமவெளி) அரச குடும்பங்கள் இரண்டினிடையும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. பிரபாகரவர்த்தனனுக்குப் பின்னர் அரசு கட்டிலேறிய இராச்சிய வர்த்தனன் காலத்தில் தானேசுவர அரசுக்கு ஏற்பட்ட சோதனைகள் முன்னர்க் கூறப்பட்டன. ஹர்ஷன் அரசெய்தியதும் துன்பக் கடலில் நீந்திக் கரையேற வேண்டியதாயிருந்தது. முதலில் கன்னோசிச் சிறையினின்றும் தப்பி ஓடிய தன் சகோதரியும் மௌகாரி இராணியும் கிரகவர்மனின் விதவையுமான இராஜ்யஸ்ரீயைக் காப்பாற்ற வேண்டியிருந்தது. தனக்கு முன் ஆட்சி எய்திய தன் தமையன் மரணத்திற்குப் பழி வாங்கும் பொறுப்பும் அவனுக்கு ஏற்பட்டது. மேலும், தான் அடைந்த இரு நாட்டு அரசியலையும் ஒழுங்குறச் சமைக்கும்

பணியும் ஏற்பட்டது, இத்தகைய நிலையில் ஹர்ஷன் முதலில் சாதித்தது காமருபம் என வழங்கப்பட்ட இக்கால அஸ்ஸாம் பிரதேசத்தையாண்ட பாஸ்கரவர்மன் என்ற துணிவு கொண்ட மன்னனுடன் செய்துகொண்ட இராச்சிய உறவாகும். இவன் தன் பரம வைரியான கௌட மன்னனின் பின் அணிகளைத் தாக்கும் வாய்ப்புப் பெற்றவன் என்பதை உணர்ந்துகொண்ட ஹர்ஷன் இவ்வாறு செய்தான். மாளவ மகதநாட்டு அதிபனும், பிற்காலக் குப்தவமிசத்தைச் சேர்ந்தவனுமான மாதவகுப்தன் என்பவனுடன் நட்புறவு கொண்டது, ஹர்ஷனின் அடுத்த நடவடிக்கையாகும். மாதவகுப்தன் உடன் துணை வர ஹர்ஷன் தன் சகோதரியை 'விருவிரைவிலேயே மீட்டான். அதே சமயம் பந்தியைக் கௌட நாட்டு மன்னன்மீது பாயுமாறு ஹர்ஷன் பணித்தான். ஹர்ஷன் இடைவிடாது, 'ஐந்து இந்தி'களுடன் (Five Indies) ஆருண்டுக் காலம் போர் நிகழ்த்தினனென்பது கூறப்படுகிறது. கௌட நாட்டு மன்னன் சசாங்கன், ஹர்ஷனைக் கி. பி. 619 வரை குன்ரு வலியுடன் எதிர்த்தான், ஆயினும், ஹர்ஷன் உள் நாட்டில் தனது வலிமையை நிலைபெறச் செய்து, கி. பி. 612இல் பெரும்புகழ் எய்தினன். அவன் படையை மிகவும் பெருக்கி யானைப்படையின் எண்ணிக்கையை 60,000மும், குதிரைப்படையின் எண்ணிக்கையை 100,000முமாக உயர்த்தினன்.

618-627 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்தியாவின் பெரிய அளவில் கலவரங்கள் நிரம்பியிருந்தனவெனச் சீன நாட்டுச் சரித்திர ஆசிரியர்கள் குறித்துள்ளார்கள். அக்காலத்தில் சீலாதித்தியன் நாட்டின் நான்கு திசைகளிலும் உள்ள அரசர்களைத் தண்டித்ததாகப் புகழப்படுகிருன். அவன் குறிப்பிட்ட எந்தப் போர்களில் ஈடுபட்டான் என்பதைப்பற்றித் திட்டவட்டமாகச் சீன சரித்திரக்காரர்கள் குறிப்புகளாலும் அல்லது ஹர்ஷன் 632-ல் வெளியிட்ட சாசனங்களாலும் விளக்கமாகக் காண முடியவில்லை. ஆனல், சாளுக்கிய மன்னனின் குறிப்புகளிலிருந்து 634-க்குச் சற்று முற்பட்ட காலத்தில் ஹர்ஷன் தன் படைகளுடன தெற்கு நோக்கி நருமதை நதி வரை வந்ததாகவும் அவன் மேலும் முன்னேருதபடி வாதாபி சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலகேசியால் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் காண்கிறேம். புரோச்சுப் பிரதேசக் கூர்ச்சரத் தலைவர்கள் குறித்துள்ளதிலிருந்து இரண்டாம் தாதா என்பவன் துணையுடன் வல்லபி நாட்டு அரசகுமாரன் ஒருவன் ஹர்ஷனைப் புறமுதுகு கண்டானென்பது உணரப்படுகிறது. யுவான் சுவாங் கி. பி. 614-இல் வல்லபிக்கு விஜயம் செய்த போது அந்நாட்டை ஆண்ட துருவபட்டன் மணவினை மூலம் ஹர்ஷனுடன் நட்புப் பூண்டிருந்தான். தெற்குப்பீகாரில் நாளந்தாவில் கி. பி. 641இல் சீலாதித்தியன் (ஹர்ஷன்) தானே மகத நாட்டு மன்னன்

எனப் பட்டம் தரித்துச் சீன நாட்டுடன் அரசியல் தூதர்களைப் பரிவர்த்தனை செய்துகொண்டான். பரம்பரைச் செய்தி ஒன்றிலிருந்து ஹர்ஷன் வங்காளத்தின் வடபகுதிக்குத் தன் படையை அனுப்பினன் என்பது தோன்றுகிறது. கடைசியாகக் கர்ண சுவர்ணன் ஆட்சி செய்த கௌட நாட்டை ஹர்ஷனுக்குக் கூட்டாளியான பாஸ்கரவர்மன் வெற்றி கொண்டான் என்பது நிதனப்புரி நகரினின்றும் வெளியிடப்பட்ட ஒரு சாசனத்தால் தெரிகின்றது. இச் சம்பவம் நடைபெற்றது எப்பொழுது என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஹர்ஷனின் வன்மை வாய்ந்த எதிரியான இரண்டாம் புலகேசி ஒரு வேளை கி. பி. 642இல் இறந்திருக்கக்கூடும். அதற்கு அடுத்த ஆண்டில் ஹர்ஷ சக்கரவர்த்தி கஞ்சம் படையெடுப்பை மேற்கொண்டிருக்கலாம். இவை தவிர, ஹர்ஷன் பனி நிறைந்த துஷார சைலத்திற்குப் படையெடுத்து அங்கிருந்து திறைப்பணம் பெற்றான் என்பதற்கான இலக்கியச் சான்றுகளும் உள்ளன. மேலும், அந்தச் சான்றுகள் மூலமே அவன் காஷ்மீரத்திற்குப் படையெடுத்துச் சென்று, அங்கிருந்து புத்தபிரான் நினைவுச் சின்னமான புனிதப் பல்லைக் கொண்டு வந்ததையும், சிந்து நாட்டிற்குச்சென்று அந் நாட்டு மன்னனின் அரசியல் உடைமைகளைக் கைப்பற்றியதையும் அறிகிறோம். இச் சம்பவங்கள் எல்லாம் ஹர்ஷனது ஆட்சியில் எப் பகுதிக்கு உரியவை என்பதை அறிந்துகொள்வதற்கு வழியில்லை.

ஹர்ஷனது இராச்சியப் பரப்பைப்பற்றி மாறுபட்ட பல விதக் கருத்துகள் நிலவி வருகின்றன. நிச்சயமாக அவனது ஆட்சியின் எல்லையில் பழைய அரசான தானேசுவரம் (கிழக்குப் பஞ்சாபு), கன்னோசி (கங்கை தோவாப்), அகிச்சத்ரா (Ahichchatra) (ரோகில்கண்டு), சரஸ்வதி (அயோத்தி), பிரயாகை (அலகாபாது) என்பவை அடங்கியிருந்தன. சீனச்சான்று இவனது ஆட்சியில் கி. பி. 641 முதல் மகதமும் ஒரிஸாவும் சேர்க்கப்பட்டன என்று கூறுகின்றது. ஜாலந்தர் அதிபன் உதிதனும் கிழக்கு மாளவ நாட்டு மன்னன் மாதவகுப்தனும் இவனுக்குத் திறை செலுத்தி இவன்கீழ்ச் சிற்றரசர்களாய் இருந்தார்கள் என்று தோன்றுகிறது. ஹர்ஷ சக்கரவர்த்தியின் படைகள், வடக்குப் பனி வரையிலிருந்து நருமதை நதி வரையிலுள்ள பிரதேசத்தையும், கிழக்கில் கஞ்சம் முதல் மேற்கில் வல்லபி வரையில் அநேகமாக வட விந்தியா முழுவதையும் வென்றடக்கி வாகை சூடினது. பிரமபுத்திரா நதிக்கு அப்பாலிருந்த காமரூப நாட்டு மன்னன் ஹர்ஷனுக்குத் துணைவனாவான். அவனுக்கும் ஹர்ஷனுக்கும் நிலவிய உறவு பற்றிச் சீன எழுத்தாளர் ஒருவர் குறிப்பிடும் சம்பவத்தினின்றும் உணரலாகும். அக் குறிப்புக் கீழைநாட்டுக் காமரூப மன்னன் வலியுடையவனேயாயினும் ஹர்ஷனுடைய படை வலிமையை நன்கு மதித்ததோடு அவனை என்றுமே எதிர்க்கத் துணியவில்லை என்று கூறுகின்றது.

ஹர்ஷனுடைய வலிமைமிக்க எதிரிகளான தக்காணச் சாளுக்கியர்கள், ஹர்ஷனது பேராற்றலுக்கும் 'உத்தராத்பதா' என்று வழங்கப்பட்ட வடவிந்தியாவில் ஹர்ஷன் பெற்றிருந்த ஆதிக்கத்திற்கும் சான்று பகர்கின்றனர்கள். வடவிந்தியாவில ஆண்ட சமகால அரசர்களின்மீது ஹர்ஷன் செலுத்திவந்த ஆதிக்கம் அவனுடைய 'இன்னிசை முரசம்' என்பதிலிருந்து புலனாகும். இம் முரசை அவனன்றி வேறு மன்னர்கள் பயன்படுத்தக் கூடாதென்று தடை விதிக்கப்பட்டிருந்தார்கள். வடவிந்தியா முழுவதையும் ஹர்ஷன் தான் நியமித்த பிரதிநிதிகள் மூலம் ஆட்சி செய்தான் எனபது குறிப்பிடப்படவில்லை. பெரும்பரப்புகளை வன்மைவாய்ந்த தலைவர் பலர் ஆண்டனர். அவர்கள் பெயரளவில் ஹர்ஷனின் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டார்கள். தொலைவில் உள்ள காஷ்மீரம், சிந்து, வல்லபி, காமரூப நாட்டு மன்னர்கள் ஹர்ஷனது வலிமை கண்டு அஞ்சி நடந்தார்கள். காமரூப மன்னன் வலிமைமிக்க தன் துணைவனாகிய ஹர்ஷனது விருப்பத்திற்கு மாறாக எந்தச் சீன யாத்திரிகனையும் தன் தலைநகரில் நிறுத்தி வைக்கத் துணிவு கொண்டதில்லை. ஹர்ஷசரித்திரத்தின் ஒரு பகுதிக்குக் கூறும் விளக்கம், கன்னோசி நாட்டுச் சக்கரவர்த்தி குமாரராஜாவை (பாஸ்கரவர்மன்) அரியணையில் அமர்த்தியதாகக் கொள்ளப்படுகின்றது. இக் கூற்றுக்குச் சான்று பகர்வது போலப் பிறிதொரு பகுதியில் காணப்படும் செய்தியில் லோகபாலர்கள் என்னும் குறுநில மன்னர்கள் இவனது ஆணையின்படியே தங்களது ஆட்சிப் பதவியைப் பெற்றது காணப்படுகின்றது. காஷ்மீர் நாட்டு மன்னன் புத்தரின் நினைவுச் சின்னமான புனிதப்பல்லை அளிக்கும்படி வற்புறுத்தப்பட்டான். பிரபாகரவர்த்தனனால் ஏற்கெனவே பங்கப்படுத்தப்பட்ட சிந்து நாட்டு மன்னன், ஹர்ஷனால் அரசியல் உடைமைகள் பறிக்கப்பட்டான் என்பதை பாணரது கூற்றினால் உணர்கிறோம். வல்லபி நாட்டு மன்னன் ஒரு சமயம் முன்னேறி வந்த கன்னோசிப் படைகளின் முன் நிற்க ஆற்றாமல் பின்வாங்கினான். பின்னர் அவன் மகளை மணக்க ஒப்புக்கொண்டு ஹர்ஷன் அவையை அடைந்தான்.

ஹர்ஷனின் தலைநகரான கன்னோசிக்கு மேற்புறம் கங்கை நதி பாய்ந்தோடியது. எங்கும் உயர்ந்த கட்டடங்கள் அமைந்து நன்கு பாதுகாக்கப்பட்ட நகரம் என்று அதை யுவான் சுவாங் விவரித்துள்ளார். நகர் எங்கும் வனப்புமிக்க சோலைகளும் தெளிந்த நீர் நிறைந்துள்ள வாவிகளும் காணப்பட்டன. பல நாட்டு அரும்பண்டங்கள் அங்குச் சேகரிக்கப்பட்டிருந்தன. அந் நகரவாசிகள் சுகமாய் வாழ்ந்தார்கள். பெருஞ்செல்வக்

குடும்பங்கள் பல நெருங்கி உறைந்தன. மக்கள், பண்புமிக்க தோற்றத்துடன் பளபளக்கும் பட்டாடை அணிந்திருந்தார்கள். அவர்கள் கல்வியிலும் கலைகளிலும் சிறந்து விளங்கினார்கள்.

கி. பி. 643இல் நடைபெற்ற கஞ்சம் படையெடுப்பிற்குப் பிறகு நெடுநாள்வரை ஹர்ஷன் வாழவில்லை. அவன் ஆட்சியின் பிற்பகுதியில் சீனத் தூதர்களை வரவேற்று, சீன நாட்டுடன் நெருங்கிய அரசியல் உறவுகொண்டு விளங்கினான். அக் காலத்திலேதான் அவன் யுவான் சுவாங்கைச் சந்திக்கநேர்ந்தது. அச் சமயம் அந்தச் சீன நாட்டு நிபுணர் புத்தர்பிரானுடன் சம்பந்தப் பட்ட புனிதத் தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டிருந்தார். அவருடைய குறிப்புகளிலிருந்து கன்னோசி நாட்டு மாவேந்தன் புத்த மதத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தான் என்பதும், ஆயினும் இளமை நாளில் மேற்கொண்டிருந்த சைவ சமயத் தொடர்பு முற்றிலும் அற்றவனாய் இல்லை என்பதும் அறியப்படுகின்றன. ஹர்ஷன் தன் நாட்டின் எப்பகுதியிலும் புலால உணவு உட்கொள்ளப்படுவதையும் உயிரினங்கள் வதைக்கப்படுவதையும் தடை செய்திருந்தான். நாட்டின் பல பகுதிகளில் இளைப் பாறும் விடுதிகளையும் புத்த மடங்களையும் நிறுவிப் பேரளவில் தான தருமம் நடைபெற வகை செய்தான். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் 'மோக்ஷப் பரிஷத்' என்னும் பேரவை அவன் ஆட்சிக் காலத்துக் குறிப்பிடத்தக்க சிறந்த அமிசமாகும்.

கி. பி. 643 இல் சீன யாத்திரிகர் இரண்டு பெரிய 'மோக்ஷப் பரிஷத்' சபையைக் கண்டு அவற்றில் கலந்துள்ளார். அச் சபைகளுள் ஒன்று கன்னோசியிலும் மற்றொன்று பிரயாகை (அலகாபாது) தரும சாலையிலும் நடைபெற்றன. கன்னோசி அவை மஹாயானப் பிரிவின் மேன்மைகளை நன்கு வெளிப்படுத்தும் நோக்குடனும் சீனச் சட்ட நிபுணரின் சேவையை நன்கு பயன் படுத்தும் நோக்குடனும் கூட்டப்பட்டது. அச் சபையில் அரசர் இருபதின்மரும் ஆயிரக்கணக்கான பௌத்தப் பெரியார்களும், வைதிக, ஜைனக் குருமார்களும் கலந்துகொண்டார்கள். உயர்ந்த ஒரு கோபுரத்தின்மீது வைக்கப்பட்ட பொன்னாலான புத்த உருவச்சிலை, யாவரையும் கவரக்கூடிய காட்சியாய் விளங்கியது. சாக்கிய முனிவரின் உருவச்சிலை தாங்கிய ஊர்வலம், பல யானைகள் முன் செல்லச் சபை வாயிலை வந்தடைந்தது பிரயாகையில் கூடிய மாபெருங்கூட்டத்தில் ('ஐந்து இந்தி'களின்) தொலைவான பகுதிகளிலிருந்து அழைக்கப்பட்ட 500,000 பேருக்கு மேற்பட்டவர் கலந்து கொண்டனர். அவர் அனைவரும் அரசனிடம் வெகுமதி

பெறும் நோக்குடன் கூடினர். சீன நாட்டு யாத்திரிகர்களும் இருபது நாட்டு மன்னர்களும் பின்வர ஹர்ஷன் அவ்விடத்தை வந்து அடைந்தான். புத்தர், ஆதித்தியதேவர் (சூரியன்), ஈஸ்வர தேவர் (சிவ) என்பவர்களுடைய உருவச் சிலைகள் அடுத்தடுத்த நாள்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டன. ஒவ்வொரு நாள் பிரதிஷ்டையின் போதும் விலையுயர்ந்த பொருள்கள் தானமாக வழங்கப்பட்டன. இவ்வாறு மன்னன் ஐந்தாண்டுகளாகத் திரட்டிய செல்வம் முழுவதும் தானமாக அளிக்கப்பட்டது. பின்னர் ஹர்ஷன் பழைய உடை அணிந்து, பல திக்குகளிலுமிருந்து வந்து குழுமியிருந்த போதிசத்துவர்களுக்கு வணக்கம் செலுத்தினன்.

ஹர்ஷன் கி. பி. 646 அல்லது 647இல் இறந்திருக்கக்கூடும். பண்டைய இந்திய நாட்டுப் பெருமன்னர்களுள் இவன் தலை சிறந்தவன் என்பது உறுதி. குழப்பமிக்க ஒரு காலத்தில் சிதறுண்ட இரண்டு இராச்சியங்களை ஆளும் பொறுப்பை ஏற்கும் படி நேர்ந்த இம் மன்னன் வடநாட்டின் பெரும்பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டி, 'நேர்மையும் தயாளமும் மிக்கவன், கடமையில் தவறாதவன்' என்ற நிலையான புகழையும் எய்தினன். இடைவிடாமல் போர் நடவடிக்கை மேற்கொண்ட இம் மன்னனுக்கு மத்திய தேசத்தில் குப்த மன்னர்கள் மூன்று தலைமுறையாக நிலைநாட்டியதும், பாஹியானால் புகழ்ந்து பேசப் பட்டது போன்றதுமான அமைதியான ஓர் அரசியலுக்கு அடிகோலப் போதிய அவகாசம் கிட்டவில்லை என்பதில் வியப் பொன்றும் இல்லை. ஆயினும் அது இம்மன்னனிடம் காணப்பட்ட ஊக்கக் குறைவினால் ஏற்பட்டது என்று கருத இயலாது. தளரா ஊக்கமுடைய இம் மன்னன், நீதியை எங்கும் நிலைநாட்டப் பெரு முயற்சி செய்தான். அடிக்கடி தனது சாம்ராச்சியம் எங்கும் தானே நேரில் சென்று, சோதனை செய்து தீயர்களைத் தண்டிப்பதிலும் தக்கோர்களுக்கு வெகுமதி நல்குவதிலும் சிறிதும் காலந் தாழ்த்தியது இல்லை. இவை தவிர, மேலும், ஒரு பெரிய நோக்கமும் இவன் கொண்டிருந்தான். குப்த மன்னன் ஒருவனின் பேரன் என்ற முறையில் சமுத்திரகுப்த மன்னனின் சீரிய நோக்கமான வடவிந்தியாவையும் தென்னிந்தியாவையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவரும் முயற்சியைப் புதுப்பிக்க எண்ணினன். தனது எண்ணம் வீண் என்பதை ஹர்ஷன் கண்டு கொண்டான். ஆனால், கன்னோசியின் புகழை மேலும் சிறப்புறச் செய்த செயலால் இவனுக்குப் பின்னரும் அது சீர் குன்றாமல் விளங்கி வந்தது. அப்புகழ்மிக்க நகரை வென்று 'மகோதயஸ்ரீ' அல்லது கன்னோசியை வென்றவர் என்ற புகழ் அடைவதே

தம் வாழ்க்கையின் பயன் என்று கருதி இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள மன்னர் முயன்றனர். ஹர்ஷன் இலக்கியங்களிலும் கலைவளர்ச்சியிலும் தனக்கிருந்த ஆர்வத்தை வெளியிட்டான். இது ஹரிசேனர் புனைந்துரைத்த மன்னர்களுள் ஒருவனை நினைவுகூரும்படி செய்கின்றது. தனது வாழ்க்கையின் பிற்பகுதியில் ஹர்ஷன் தனை அறியாமலே அசோகர் உதாரணத்தைப் பின்பற்ற முயன்றுள்ளான். சீன யாத்திரிகரான யுவான் சுவாங் ஹர்ஷனுடைய சீரிய பண்புகளை வானளாவப் புகழ்ந்து போற்றியுள்ளார். சாதி மத வித்தியாசமின்றி எவருக்கும் தாராள மனப்பான்மையையும், வள்ளல் தன்மையையும் காட்டிய ஹர்ஷனிடம் மதச்சகிப்பும், தெய்வநெறியும் நிறைந்திருந்தன என்று கூறுகிறார். ஹர்ஷன் சிறந்த தளபதி; உயரிய ஆட்சியாளன். இவற்றினும் மேலாக, அவன் மதத்திற்கும் கல்விக்கும் சிறந்த ஆதரவாளனாய் விளங்கினான். அவன் தனது பேரவையில் பாணர், மயூரர், திவாகரர், யுவான்-சுவாங் போன்ற சிறந்த அறிஞர்களையும், ஞானிகளையும் அமர்த்தியிருந்தான். ஒரு வகையில் அவன் சந்திரகுப்தனைவிட அதிர்ஷ்டசாலி என்று கருத வேண்டும். ஏனெனில், அம்மன்னனின் சிறந்த படைப்புகளான இலக்கிய இரத்தினங்கள் பலவற்றை நாம் இன்றும் பெற்றுள்ளோம்.

## ஹர்ஷனுக்குப் பின் கன்னோசியின் நிலை

ஹர்ஷன் கி. பி. 646ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது 647ஆம் ஆண்டின் தொடக்கத்தில் காலமானான். வலிமைவாய்ந்த அவன் மறைவுக்குப் பின்னர் மத்தியப் பிரதேசத்தில் ஒழுங்கீனமும் பிரிவினைச்சத்தியும் தலைவிரித்தாடத் தொடங்கின. இந்த மத்திய தேசத்தில் கி. பி. 836 வரை வெற்றிகரமாக வென்றடக்கப்படாமலிருந்த பகுதி மேல்கங்கைச் சமவெளியாகும். கி.பி. 836இல் பிரதிஹார வம்சத்தைச் சார்ந்த முதலாம் போஜன் இப் பிரதேசத்தின் பெரும்பகுதியை 'மஹோதயா' அல்லது கன்னோசியைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செலுத்தினான். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செலுத்திய பின்னர் ஹர்ஷன் தன் சாம்ராச்சியத்தைத் தன் வாரிசுகளுக்கு விட்டுச் சென்றான். அவர்கள் தங்கள் உடைமையைப் பாதுகாத்து வைத்துக்கொள்ளச் சிறிது காலம் முயன்றிருக்க வேண்டும். யசோவர்மன், இந்திரராஜா போன்ற அரசர்கள், வீழ்ந்த பேரரசை மீண்டும் நிலை நிறுத்தவும் ஹர்ஷன் காலத்துப் பெருமையைக் கன்னோசி மீண்டும் பெறச்செய்யவும் அரும்பாடு பட்டார்கள். ஆனால், மத்திய தேசத்திற்கு அப்பால் வசித்து

வந்த போர் ஆற்றல்படைத்த சிலர் ஹர்ஷனது நாட்டைப் பெறுவதைத் தம் அரசியற் பெருநோக்கமாகக் கொண்டிருந்தனர். அவ்வனைவருடைய நோக்கமும் கன்னோசியின் மீதே இருந்தது. போர் வெறி பிடித்த ஆசியரின் நாட்டம் பாபிலோனியாவின் மீது இருந்ததுபோன்றும், உரோமானியப் பேரரசைக் கவரவேண்டுமென்று டியூடன் மிராண்டிகள் விரும்பியதை ஒப்பவும், பைசானடியன் சாம்ராச்சியத்தை உட்கொண்டு ஏப்பமிடவேண்டுமென்று மத்திய காலததில் தென்கிழக்கு ஐரோப்பியர் விருப்பியது போனறும், இந்தியாவில் எட்டாம் ஒன்பதாம் நூற்றுண்டில் கிளைத்தெழுந்த அரச வமிசத்தினர் 'மஹோதயஸ்ரீ'யைப் பெற விரும்பினர். கி. பி. 646 முடிவிலிருந்து கி.பி 836வரை மேலைகங்கைச் சமவெளியின் சரித்திரம் உள்நாட்டுக் குழப்பமும் வெளியார் படையெடுப்புமாய் இருந்து ஹர்ஷனது ஆட்சி பிரதிஹாரர் கைக்கு மாறிய பின்னர் முடிவுற்றது. பத்தாம் நூற்றுண்டில் பிரதிஹாரர்களின் கை ஓய்ந்த பின்னர் மீண்டும் பழைய நிலை ஏற்பட்டது. மற்றுமொரு முறை குழப்ப நிலை ஏற்பட்ட பின்னர், காஹதவாலர் என்னும் புதிய வமிசத்தினர் தோன்றலாயினர். அதே சமயத்தில் ஆப்கானிஸ்தானததில் ஒரு சூறவளி தோன்றி இந்தியாவெங்கும் வீசத் தொடங்கியது. காஹதவாலர்களின் வலிமை கி. பி. 1194இல் சந்தவார்ப் போர்க்களத்தில் தவிடுபொடியாயிற்று. பின்னர் மிக உயர்ந்த கன்னோசியின உயிர்த்துடிப்பு மரண அமைதியுற்றது.

## ஹர்ஷனுக்குப்பின் சாம்ராச்சிய அவா உற்றோர்

ஹர்ஷனுக்கு ஒரு மகன் இருந்தான் என்பது சந்தேகத்திற்கிடமானது. அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவளை வல்லபி நாட்டுத் துருவபதனுக்கு அவன மணமுடித்திருந்தான. ஹர்ஷன் மரணத்துடன் ஒன்றிய குப்தர் ஆண்டு 326–330இல் துருவபதன் மகன் நான்காம தரசேனன் எனபான் 'பரமபட்டாரக ராஜாதி ராஜா பரமேஸ்வர சக்கரவர்த்தி' என்னும் பட்டங்கள் வகித்தான். கன்னோசி மன்னனுக்கு வாரிசாகவும் மேற்கு இந்தியாவின் மன்னனாகவும் தன்னை அவன கருதினன் என பதில் ஐயம இல்லை. ஏனெனில், ஹர்ஷன் அவன் தாய்வழிப் பாட்டன. ஹர்ஷன் ஆட்சிக்குப் போலி உரிமை கொண்டவர்களுள் ஒருவன் கிரகவர்மனின உடன்பிறந்தவன்; மற்றவன் ஹர்ஷன் அவையில் அமைச்சனுயிருந்த அருச்சுனன் அல்லது அருணுஸ்வன் எனபான். இவர்களுள் பின் கூறப்பட்ட அருச்சுனன, கங்கைச் சமவெளியில் சில பிரதேசங்களைக் கைப்பறறிக் கொண்டு வாங்-ஹியூன்-ட்ஸி (Wangh-hiuen-tse) என்பார் தலைமையில் வந்த தூதுகோஷ்டியினருடன் கைகலந்தான். திபெத்திலிருந்தும் நேபபாளத்திலிருந்தும உதவி பெற்ற சீனக் கோஷ்டியினர் தம் பகைவனைச் சிதற அடித்தனர். மேலும்,

*அந்தச் சீனத்தலைவன் காமரூபத்தின் அரசகுமாரன் 'பாஸ்கர வர்மன்' என்பவனிடமிருந்து ஏராளமான ஆடு மாடுகளையும் பிற பொருள்களையும் பெற்றதோடு நாட்டாசைகொண்ட அந்த அமைச்சனையும் சீனாவிற்குக் கொண்டுசென்றான்.*

ஹர்ஷனுக்குத் துணைவனான மாதவகுப்தனின் மகன் ஆதித்தியசேனன் கி. பி. 672இல் மத்தியதேசத்தின் மாபெரு மன்னனாய் விளங்கினான். கீழை நாட்டுச் சீன யாத்திரிகர் அவனைச் 'சூரிய சேனை' (Sunarmy) என்று வழங்கினர். அஸ்வசேனன் தான் பட்டமெய்திய செயலை ஒரு பெரிய அஸ்வமேத யாகம் செய்து கொண்டாடினான். தன் காலத்துச் சிறந்த அரச குடும்பங்களுடன் திருமண உறவு பூண்டு நிலையை வலியுறுத்தினான். இவன் மாளவ மகதநாட்டுப் 'பிற்காலக் குப்த' வமிசத்து வழித்தோன்றலாய் விளங்கியதோடு தன் மகளையும் மௌகாரி மன்னனான போகவர்மனுக்கு மணம் செய்வித்தான். போகவர்மன் மனைவிக்குப் பிறந்த இவன் பேர்த்தி நேப்பாள நாட்டுச் சிவதேவனுக்கு இராணியும் ஜெயதேவனுக்கு அன்னையுமாவாள். இந்த ஜெயதேவன் காமரூபத்தின் பகதத்த குடும்பத்து ஹர்ஷதேவனின் மகளாகிய ராஜ்ய மதியை மணந்தான்.

ஆதித்தியசேனனுக்குப்பின் குப்தர் மூவர் ஆட்சி பெற்றனர்; அவர்கள் தேவகுப்தன, விஷ்ணுகுப்தன், இரண்டாம் ஜீவிதகுப்தன் என்பவராவர். எட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மகத அரியணை கௌட மன்னனின ஆதிக்கத்தில் இருக்கக் காண்கிறோம். இக் கௌட மன்னனை இரண்டாம் ஜீவிதகுப்தன் என்றாவது அல்லது வேறு எந்தப் பிற்காலக் குப்த மன்னன் என்றாவது கொள்வது இயலாததாய உள்ளது. ஏனெனில், அக் காலத்துக் கலவெட்டுகளின்படி ஈசான வர்ம மௌகாரி காலத்தில் (ஆறாம் நூற்றாண்டின் மத்தியில்) பிற்காலக் குப்தர்களின் வழியினா பிரயாகை அல்லது அலகாபாதுடன் சம்பந்தப்பட்டதாகக் காண்கிறது இதற்கு மாறாகக் கௌடர்கள் கடலிடைப் பகுதியில் பாதுகாப்பு நாடியதாகக் காணப்படுகிறது. அடுத்த நூற்றாண்டில் 'பிற்காலக் குப்தர்கள்' மகத நாட்டு மன்னர்கள் என்று கூறப்படுவதைக் காணகிறோம். அதே சமயம் கௌடர்கள் கர்ண சுவர்ணவைத் தங்கள் தலைவராகக் கொண்டுள்ளமை காணப்படுகிறது. பிற்காலக் குப்த கவிஞரொருவர் குப்தனைக் கௌடனை என்று கூறியுள்ளார். ஆனால், அந்தப் பெயர் பிற்காலக் குப்த வமிசத்தினருக்கு அமைந்ததெனத் தெரியவில்லை. கௌட மன்னர் தமது ஆட்சியை மேற்கு முகமாக விஸ்தரித்தனர் என்றும், இதுவே முடிவில் ஆதித்தியசேன மரபினர் முடிவிற்குக் காரணமாகும் என்ற கூற்று உண்மையென்றும் தோன்றுகிறது.

ஆயினும், மகத நாட்டை எவ்வித இன்னலுமின்றிக் கௌடர்கள் நீண்ட காலம் ஆட்சி செய்தார்கள் என்பதுமில்லை. யசோவர்மனது திறமைமிக்க ஆட்சியின் பயனாகக் கன்னோசி இராச்சியம் மீண்டும் தலைதூக்கியது. இம் மன்னன் சந்திர வமிசத்தைச் சேர்ந்தவன் என்று கூறிக்கொண்டான், இவனுடைய அரும்பெருஞ் செயல்களை வாக்பதிராஜா என்பான், பிராகிருத மொழியில் இயற்றிய கௌடவாகோ (Gaudavaho) என்னும் நூலில் விவரித்துள்ளான். யசோவர்மனது தீரவாழ்க்கை ஹர்ஷனை நினைவுகூரும்படி செய்கின்றது. யசோவர்மன் கௌட மன்னன்மீது படையெடுப்பை மேற்கொண்டு அவனைப் போரிட்டுக் கொன்றான். வங்காளத்திலும் கிழக்கிலும் மத்திய பிராந்தியங்களிலும் ஆட்சி பெற்றிருந்த வங்கர்களை அடுத்தபடியாகக் கீழ்ப்படியும்படி செய்து, தென்திசை நோக்கிச் சென்று, நருமதையைச் சேர்ந்தான். அந் நதிக்கரையில் சிறிது காலம் தங்கிப் பின்னர் இராஜபுதனம், தானேசுவரச் சமவெளி வழியாகத் தன் தலைநகர் வந்தடைந்தான். ஹர்ஷனைப் போன்று இவனும் சீன நாட்டினருடன் தூதுவர் மூலம் உறவு கொண்டான் (கி. பி. 731). பவபூதி வாக்பதராஜா என்னும் பெருங்கவிஞர்களை இவன் ஆதரித்தான் முடிவில் காஷ்மீர நாட்டு மன்னன் லலிதாதித்தியன் என்பானுடன் பகைமை பூண்டு அந்த வடநாட்டு வைரியுடன் நேர்ந்த போரில் இந்த ஒப்பற்ற மன்னன் அழிவுற்றான்.

## காஷ்மீரம்

இச் சமயத்தே காஷ்மீரம் இந்தியச் சரித்திரத்தில் கங்கைச் சமவெளி மன்னர்களுக்குத் தீராப் போட்டியாய் முளைத்தது. அசோகர், கனிஷ்கன், மிகிரகுலன் என்பவர்களின் ஆட்சியின் கீழ்க் காஷ்மீரப் பள்ளத்தாக்கு இருந்து வந்தது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் துர்லபவர்த்தனன் என்பவனால் ஸ்தாபிக்கப்பட்ட கார்க்கோட வமிசத்தினர் ஆட்சியில் முன்னணி அரசாய் அது வலுப்பெற்றது. ஏதோ ஒரு வகையில் இந்த வமிசத்தினர் சீன நாட்டின் அரசியல் ஆதிக்கத்தை அங்கீகரித்துள்ளனரென்பது தோன்றுகிறது. துர்லப வர்த்தனன் பேரப்பிள்ளைகளான சந்திராபீடன், முக்தாபீட லலிதாதித்தியன் என்னும் இருவரும் சீனச் சக்கரவர்த்தியின் அனுமதிபெற்றே அரசுரிமை எய்தினர். லலிதாதித்தியன் பெருநோக்கங்கள் கொண்ட கன்னோசி நாட்டு யசோவர்மனைப் புறங்கண்டதைப்பற்றி முன்னரே கூறப்பட்டது. காஷ்மீர நாட்டுச் சரித்திர ஆசிரியரான கல்ஹணர், இம் மன்னன் பெரும்படையுடன் தொலை நாடுகளுக்குச் சென்றதாகப் புகழ்ந்து கூறுகின்றார். இவனுடைய வெற்றிப் பிரதாபங்களை ஒரு காவியத் தலைவனுடைய வெற்றிக்குரிய பரணியாகப் பாடியுள்ளார். திபெத்து நாட்டில் பெற்ற வெற்றியையும் சிந்து தீரத்தில் தார்துகளையும் (Dards) துருக்கியர்களையும்

வென்றதையும், கௌட மன்னன் ஒருவனைப் படுகொலை புரிந்ததையும் கல்ஹணர் தமது சரித்திரக் குறிப்பில் மிக முக்கியமானவை என்று கூறுகின்றார். லலிதாதித்தியன் பல கோவில்களை எடுப்பித்தமைக்காகப் புகழ்ந்து பேசப்படுகின்றான். அவன் எடுப்பித்த கோவில்கள் எல்லாவற்றிலும் மார்த்தாண்டர் (Martanda) கோவில் முதன்மை பெற்று விளங்கியது.

ஜயபீட விநயாதித்தியன் கௌட மன்னர்களையும் கன்னோசி அரசர்களையும் வெற்றி கண்டு, தன் பாட்டன் லலிதாதித்தியனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினான். அவனும் கல்வியைப் பெரிதும் ஆதரித்தான். அவனது அவையை க்ஷீரஸ்வாமின் (Kshirasvamin) உத்பாதர், தாமோதர குப்தர், வாமனர் முதலிய பேரறிஞர் பலர் அலங்கரித்தனர். ஆனால், அவன் அளவுக்கு மீறிய வரிச்சுமையை மக்கள்மீது திணித்துத் தன் பெயருக்கு இழுக்குத் தேடிக்கொண்டான். கி. பி. 855இல் அவனது வமிசம் முடிவுற்றதும் உத்பால வமிசத்தினர் தோன்றினர்.

இந்தப் புதிய வமிசத்தின் ஸ்தாபகன் அவந்தி வர்மன், தன் அமைச்சன் சுய்யன் (Suyya) உதவியுடன் பாசனத் திட்டங்கள் பல நிறைவேற்றிப் பெரும்புகழ் பெற்றான். அவந்தி வர்மன் மகன் சங்கரவர்மன், அடுத்தபடி அரசு கட்டிலேறினான். அவன் காஷ்மீர நாட்டின் எல்லையைப் பல திக்குகளிலும் விரிவடையச் செய்தான். இதன் மூலம் அவன் கன்னோசிச் சக்கரவர்த்தி முதலாம் போஜனுடனும் உதபாண்டபுரம் அல்லது 'உண்ட்' என வழங்கப்பட்ட நாட்டு மன்னனுடனும் போரிட நேர்ந்தது. மேலும், அவன் கூர்ச்சரர்களிடமிருந்து பஞ்சாபின் சில பகுதிகளையும் தன் வசமாக்கிக்கொண்டான். அவனுக்கு முன் ஆண்ட வமிசத்து மன்னனான ஜயாபீடனைப் போன்று அவனும் மக்களின்மீது தாங்கொணா வரிச்சுமையை விதித்துத் துன்புறுத்தினான்; உரசா என வழங்கப்பட்ட இக்கால ஹஸாரா மாவட்டத்து மக்களுடன் போரிட்டு மடிந்தான். இதன் பின்னர்க் குழப்பமிக்க காலம் தொடர்ந்தது. அவன் விதவையான இராணி சுகந்தா, பொம்மை மன்னர் பலர் பெயரால் நாட்டை ஆள முயன்றாள். ஆனால், தங்களை நாட்டின் உண்மை ஆட்சியாளராகச் செய்துகொண்ட தந்திரிகள் (Tantrins) என்ற இராணுவக் கூட்டத்தினரின் பேரெதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது. இந்தத் தந்திரிகளைப் படை மானியத் தலைவர் கீழ்ப்படியும்படி செய்தனர். முடிவில் பிராமணர்களைக் கொண்ட ஒரு சபையினர் தம் இனத்தைச் சேர்ந்த யசஸ்கரன் (Yasaskara) என்பவனை அரியணையில் அமர்த்தினர். யசஸ்கர வமிசத்தினருக்குப் பின் பரவகுப்த வமிசத்தினர் ஆட்சி பெற்றனர். பரவகுப்தன் மகனும் அவனுக்குப் பின் அரசு செய்தியவனு

மான க்ஷேமகுப்தன் ஆட்சிக் காலத்தில் உண்மையில் நாடாளும் பொறுப்பை ஏற்றவள். தன் தாய்வழி உறவுப்படி உதபாண்ட புரம் ஷாகி வமிசத்தைச் சேர்ந்தவளும், லோகரா நாட்டுத் தலைவன் ஒருவன் மகளுமான அவள் இராணி திட்டா (Didda) என்பவள், முதலில் திட்டா, பொம்மை அரசர்களின் பெயரால் ஆட்சி செய்து, முடிவில் தானே ஆட்சியைக் கைப்பற்றினாள். தான் பெற்ற அரசாட்சியை அவள் கி. பி. 1003 வரை வகித்திருந்து, பின்னர்த் தன் மருகனும் லோகரா வமிசத்தை ஸ்தாபித்தவனுமான சங்கிராமராஜாவுக்கு மாற்றினாள். இத் தருணத்தில் பயங்கரப் படையெடுப்பாளன் ஒருவன் தோன்றினான். உதபாண்டபுரம் ஷாகி அரசு, மிக்க தீரத்துடன் அப் பகையை எதிர்த்து வீழ்ச்சியுற்றது. அதற்குக் காஷ்மீர நாட்டிடமிருந்து உதவி கிடைத்தும பயனற்றதாய்ப் போயிற்று. அதிருஷ்டவசமாக, சங்கரராஜனுடைய நாடு முகமது கஜினியின் தாக்குதலைத் தாங்கி அழிவினின்றும தப்பிப் பிழைத்தது. ஆயினும், உள்நாட்டுப் பூசல்களால் வலுவிழந்த அந் நாட்டினால் வடஇந்தியப் பொது விவகாரங்களில் வெற்றியுடன் தலையிட இயலவில்லை. வரவர அது பெருமை குன்றிய சிற்றரசாய் மாறி, முடிவில் கி பி. 1339இல் மகமதியர்கள் வசமாயிற்று.

## வங்காளமும் பால (Pala) சாம்ராச்சியமும்

லலிதாதித்தியன், விநயாதித்தன் ஆட்சியின் போது காஷ்மீரத்திற்கும் கௌட நாட்டிற்கும் போர் ஏற்பட்டது. கௌடர் என்னும் பெயர் மேற்கு, வடமேற்கு வங்காளத்தில் வாழ்ந்த மக்களையும் அதே பெயருடைய நாட்டு மக்களையும் குறிக்கும். ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் கௌட நாடு, கன்னோசி நாட்டிற்கும் காஷ்மீர நாட்டிற்கும் போட்டியாய் அரசியல் வானில் தோன்றியது. கௌடம் பற்றிய குறிப்புகள் பாணினி சூத்திரங்கள், கௌடில்ய அர்த்த சாஸ்திரம், சில புராணங்கள் ஆகிய பழைய நூல்களில காணப்படுகின்றன. கிழக்கு, மத்திய வங்காளம் அடங்கிய வங்க நாடும் இதற்குச் சற்றுக் குறையாத பழம்பெருமையுடையதாய் விளங்கியது. அது பற்றிய விவரங்கள் தர்ம சூத்திரங்களிலும் இதிகாசங்களிலும் காணப்படுகின்றன. மௌரிய மன்னர்களும் குப்த மன்னர்களும் சிறந்திருந்த காலத்தில் வங்கம் மகத சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாய் விளங்கியது என்பது தெரியவருகின்றது. அவர்களது ஆட்சியில் அது அடங்கியிருந்தபோதிலும், ஓரளவு சுயாட்சி பெற்றதாகவே இருந்து வந்தது. குப்த பேரரசர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர், வங்கத்தின் பகுதிகளைக் குறுநில மன்னர் பலர் ஆண்டனர். அவர்களுள் தர்மாதித்தியன், கோபசந்திரன், சமாசாரதேவன் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் தங்கள் உரிமையை நிலைநாட்டினார்கள். அவர்களுள் கோபசந்திரன் பெருவலி கொண்டவன். அவனது ஆட்சியின்கீழ் வங்கத்தின்

மேற்குப் பகுதியும் கிழக்குப்பகுதியும் அடங்கியிருந்தன. அவன், அல்லது அவனுக்குப் பின் உடன் ஆண்ட கௌடர் வலிமை மிக்க ஆட்சியாளராய் வெளிப்பட்டனர். கி. பி. 554-க்குச் சற்று முற்பட்ட காலத்தில் அவர்கள் ஈசானவர்ம மௌகாரியுடன் எதிரிட்டுக் கடல் சூழ்ந்த பகுதிகளில் தஞ்சம் புகுந்தார்கள். அடுத்த நூற்றாண்டில் அவர்கள் போர்ப்பலம் மிகுந்த கர்ண சுவர்ண நாட்டை (மூர்ஷிதாபாது மாவட்டமென இப்பொழுது பொதுவாகக் கருதப்படுகிறது.) உடைமை கொண்டவர்களாகக் காண்கிறோம். தங்கள் அரசனான சசாங்கன் தலைமையில் அவர்கள் பேரவாக்கொண்ட புஷ்யமித்திர வமிசத்தினருடன் போரிட்டார்கள். இராச்சியவர்த்தனன் கொலையுண்டதுபற்றியும், அதைப் பழிவாங்க அவன் சகோதரனும் அவனுக்குப்பின் பட்டமெய்தியவனுமான ஹர்ஷன் நடத்திய போர் பற்றியும் முன்னரே கூறப்பட்டது. கி. பி. 619 வரையில் கௌட மன்னர் வலிமை அசைக்க முடியாததாய் இருந்தது. அவருடைய ஆட்சித்தலைமை தெற்கே கஞ்சம்வரை ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தது. இதற்குப் பின்னர்க் கி. பி. 169-க்கும் 763-க்கும் இடைப்பட்ட காலத்தில் சசாங்கன் மரித்ததாகத் தோன்றுகிறது. அவன் மரணத்திற்குச் சிறிது காலத்திற்குப்பின் அவன் தலைநகரம் ஹர்ஷனின் துணைவனும் காமரூப மன்னனுமான பாஸ்கரவர்மன் வசமிருந்ததை நாம் காண்கிறோம். ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியின் மத்தியில் கிழக்கு இந்தியாவை மகதநாட்டை ஆண்ட பிற்காலக் குப்தர்களும், கிழக்கு வங்காளக் கடக (Khadga) வமிசத்தினரும் பங்கிட்டுக்கொண்டனரென அறிஞர் சிலர் கூறக் காண்கிறோம்.

கடக மரபினரின் சரித்திரம் இன்னும் நன்கு தெரியவில்லை. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிழக்கு வங்காளத்தையும் கன்னோசி மன்னன் யசோவர்மன் தன் ஆட்சிக்குட்படுத்தினான். வெற்றிகொண்ட மன்னர் பலரும் இவ்வழி நடந்தனர். நாடெங்கும் அராஜரிகமும் (Matsyanyaya) வலியோர் எளியோரை விழுங்கும் செயலும் நடைபெற்று முடிவில் பல்வேறு பிரிவு மக்கள் ஒன்றுகூடிக் கோபாலன் என்ற தலைவனை அரியணையில் அமர்த்தினார்கள். இவன் சிதறுண்ட நாட்டில் அமைதியை ஏற்படுத்தினான்.



சமாசார தேவன் வெளியிட்ட காசுகள்

கோபாலன் ஆட்சி, புகழ்பெற்ற பாலவமிசத்தினரின் ஆட்சியைத் தொடங்கிவைத்தது. இவர்கள் சூரிய குலத்தினர் என்றும் வருண குலத்தின் வழித்தோன்றல்கள் என்றும் தங்களைத் தங்கள் ஆட்சியின் கடைநாள்களில் வழங்கிக்கொண்டார்கள். வங்காளம் அதுவரை கண்டறியாத வளமான ஆட்சியாகப் பாலர்கள் ஆட்சி அமைந்தது. அவர்தம் காலச் சரித்திரக் குறிப்புகள் இந்த வமிசத்தில் முதற்கண் ஆண்ட மன்னர்களை வங்கபதி (Vankapati) என்றும், கௌடேஸ்வரர் (Guadesvara) என்றும் விவரித்துள்ளன. இவற்றினின்றும் இம் மன்னர்கள் கிழக்கு வங்காளம், மேற்கு வங்காளம் ஆகிய இரு நாடுகளையும் ஒருசேர ஆண்டார்கள் என்று கொள்ளக்கிடக்கிறது. வங்காளத்தை ஆண்ட மன்னர்களுள் தலைசிறந்தவன் கோபாலன் மகனாகிய தர்மபாலனாவான். அவன் அரியணை ஏறிய சம்பவம் பெரும்பாலும் கி. பி. 752-லிருந்து 794-க்குள் நடைபெற்றிருக்க வேண்டும். அவன் ஆட்சி செய்த ஏறக்குறைய முப்பத்திரண்டாண்டுகளுக்குள் வங்கத்தை வடஇந்தியாவின் திலகமாகச் செய்து, பாடலிபுரத்தின் பழம்பெருமையை மீண்டும் நிலைநாட்டப் பெரிதும் பாடுபட்டான். நிச்சயமாக அவன் அரசியல் நாட்டத்தை மௌரியர்களும் குப்தர்களும் ஆண்ட கீழ்ப்பகுதியை நோக்கிச் சாயும்படி செய்தான். இந்திரராஜனையும் வேறு பகைவர் பலரையும் வென்றதோடு கன்னோசியை வெற்றி கொண்டு அண்டை நாடுகளின் அனுமதியுடன் தன் கைப் பொம்மையான சக்கராயுதன் என்பவனை அவன் அதிபனாக்கினான். மற்றும் சில சரித்திரக் குறிப்புகள் அவன் வடக்கில் இமயமலை முதல் தெற்கில் கோகர்ணம் வரையிலுள்ள பகுதி முழுவதையும் ஆட்சி செய்ததாகக் கூறுகின்றன. ஆனால், கங்கையாற்றுப்பகுதிகளில் (Doab) அவன் பெற்ற வெற்றிகள் அற்ப வாழ்வு உடையவையே. கி. பி. 772-க்கும் 794-க்கும் இடையுள்ள காலப்பகுதியில் தக்காண ராஷ்டிரகூடர்கள் கௌட மன்னனைக் கங்கைக்கும் யமுனைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தினின்றும் விரட்டியடித்ததாகக் கூறிக்கொள்கின்றார்கள். அதே நேரத்தில் கன்னோசி நாட்டுப் பொம்மை அரசனாகிய சக்கராயுதனை இரண்டாம் நாகபட்டன் தலைமையில் மேற்கு இந்திய பிரதிஹாரர்கள் விரட்டியடித்துவிட்டு, ஹர்ஷன் ஆண்ட பிரதேசத்தின் அதிபர்களாகக் கி. பி. 836 அல்லது அதற்கு முன் 833இல் விளங்கினார்கள் என்பது உறுதி.

தர்மபாலன் கி. பி. 794-க்குச் சிறிது காலத்திற்குப் பின்னரோ, அல்லது கி. பி. 839-க்கு முன்னரோ இறந்திருக்க வேண்டும். அவன் மகனும் அவனுக்குப் பின்னர் ஆட்சிபெற்ற

வனுமான தேவபாலனும் தன் தந்தையைப் போலப் பேராசை உடையவன். அவன் கூர்ச்சரப் பிரதிஹாரர்களுடன் மீண்டும் போரைத் தொடங்கினான். அவனுடைய படைவீரர்கள் அண்டை நாடுகளான ஒரிஸ்ஸா, அஸ்ஸாம் ஆகியவற்றை வென்றதோடல்லாமல், ஹூணர்களையும் வென்றார்கள். வட நாட்டில் ஆதிக்க விருப்பங்கொண்ட மன்னர் அனைவரும் ஹூணர்களை வெல்ல முயலுவதை ஒரு கொள்கையாகக் கொண்டிருந்தனர். அவனுடைய ஆஸ்தானப் புலவர்கள் அவன் இமய மலை முதல் சேது வரையுள்ள நிலப்பரப்பை ஆட்சி செய்தானெனப் புகழ்ந்துள்ளார்கள். ஒரு கல்வெட்டில், அடக்கமான முறையில் காணப்படும் வாசகம், வடக்கில் காம்போஜம் முதல் தெற்கில் விந்தியமலை வரை அவன் ஆட்சி வியாபித்திருந்ததாகக் கூறுகின்றது. நகராகரம் அல்லது ஜலலாபாதின் வீரதேவன் என்னும் அந்தண மன்னனுடன் கொண்டிருந்த தொடர்புகளிலிருந்து அவன் இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புற நாடுகளுடன் ஒருவிதத் தொடர்பு கொண்டிருந்தான் என்று எண்ணுவதற்கு இடமளிக்கின்றது. பின்னர் அவன் தெற்குப் பீஹாரில் விளங்கிய நாளந்தாவில் போதகர் பதவியினை (Abbot) ஏற்றான்; மேலும், தேவபாலன் சுவர்ணத்வீபம் அல்லது சமுத்திரமன்னன் பாலபுத்திர தேவனின் அரசியல் தூதரைத் தன் அவையில் ஏற்றான்; தன் பாடலிபுத்திரத்தைவிட மாங்கீரையே வெற்றிப் படை வீடாக விரும்பினார். சுமார் நாற்பது ஆண்டுக்காலம் ஆட்சிசெய்து வங்காளத்தைப் புகழ் ஏணியின் உச்சியில் ஏற்றிய பின்னர், அவன் மரணமடைந்தான். வங்கம் அவன் காலத்தில் பெற்ற புகழை அவனுக்குப் பின்னர் ஆண்ட எவர் காலத்திலும் என்றும் பெற்றதில்லை.

தேவபாலனுக்குப் பின்னர் பால வமிசம் வலிமை குன்றி அழிவுற்றதாகத் தோன்றுகிறது. தேவபாலனுக்குப் பின்வந்தவன் அவன் மருமகன் முதலாம் விக்கிரகபாலன். அவன் மத விஷயங்களில் ஈடுபாடுடைய வன்மையற்ற மன்னன். அவன் தன் மகன் நாராயண பாலனுக்காக முடி துறந்தான். மாங்கீரின் பெருமை நாராயண பாலனது ஏழாண்டு ஆட்சிக்குப் பின்னும் நீடித்து வந்தது. அவனது ஆட்சிக் காலத்தைக் கி.பி.852-க்குப் பின்னர் அல்லது கி பி. 898-க்கு (மகேந்திரபாலன் ஆட்சி ஐந்தாவது ஆண்டு) முன்னர் என்று கொள்ள வேண்டும். இதற்குப் பின்னர்ப் பாலர்கள் சரித்திரத்தில் அந்தப் புகழ்மிக்க கோட்டையைப் பற்றிய பிரஸ்தாபம் இல்லை. கி.பி. 837 ஆம் ஆண்டு பிரதிஹாரர் குறிப்பு ஒன்று கக்கா என்ற தலைவன் கௌடர்களை மாங்கீரில் புறமுதுகிட்டு ஓடச்செய்து வெற்றி பெற்றுப் புகழ்

எய்தியதாகக் கூறுகிறது. பிரதிஹாரர்களின் முன்னேறி வரும் படையினர் கையில் பாடலிபுரம் சிக்கியது என்றும், அடுத்தது மாங்கீரின் முறையாய் இருந்தது என்று தள்ளிவிடுவதற்கில்லை. மகேந்திரபாலன் ஆட்சியின் ஐந்தாம் ஆண்டளவில் அதாவது, கி.பி. 898-க்கு முன்பு—வடக்கு வங்காளமும் பிரதிஹாரர் ஆட்சியுடன் இணைக்கப்பட்டது. அரை நூற்றாண்டிற்கும் கூடுதலான (குறைந்தது ஐம்பத்துநான்கு ஆண்டுகள்) நாராயணபாலன் ஆட்சியின் பிற்பகுதியில் இராச்சியத்தின் இழந்த பகுதிகள் சில மீட்கப்பட்டன. இரண்டு மூன்று தலைமுறைகளுக்குப் பின்னர், இரண்டாம் கோபாலன் அல்லது இரண்டாம் விக்கிரகபாலன் காலத்தில் பாலர் வலிமை மறுபடியும் ஆட்டங்கண்டது; இதற்குக் காம்போஜர்கள் ஒரு வேளை காரணமாய் இருக்கலாம். ஆனால், குடும்பத்தின் இழந்த பெருமையை முதலாம் மகிபாலன் திரும்பப் பெற்றான். மகிபாலன் பதினொன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சி செய்தானென்பது தெரியவருகிறது.

கி.பி.1026ஆம் ஆண்டுச்சாசனம் ஒன்று முதலாம் மகிபாலனைக் கௌடநாட்டு அதிபனாகக் கூறுகின்றது. வங்காளத்தின் சில பகுதிகள் பிரதேசத் தலைவர்கள் வசமாயின. அவற்றுள் சில, பால மன்னனின் (அதிபன்) தலைமையை ஒப்புக்கொண்டிருக்க வேண்டும். இப் பிரதேச வமிசங்களில் தென்மேற்கு வங்காளச் சூரர்களையும், கிழக்கு வங்காளச் சூரர்களையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இலக்கியங்களிலும் சாஸனங்களிலும் சூர மன்னர் பலரைப்பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அவர்களுள் முக்கியமானவன் ஆதிசூரன் (Adisura). இவன் பெயர் வங்க பரம்பரைக் கதைகளில் புகழ் பெற்றதாய் உள்ளது. இவன் காலத்து வேறு ஆதாரக் குறிப்புகள் இல்லாதவரை இவனைச் சரித்திர புருஷனாகக் கொள்வது கடினம்.

கி.பி. 1023 அளவில் இந்தியாவின் தொலைத்தெற்கில் உள்ள தமிழ்நாட்டுப் பேராவல் மிக்க மன்னன் முதலாம் இராஜேந்திர சோழனின் படையெடுப்பின் முழு வேகத்தையும் வங்காள மன்னர்கள் தாங்க வேண்டியதாயிற்று. இராஜேந்திர சோழனுடைய படைகள் தென்மேற்கு வங்காளக் கிழக்குப் பிராந்திய மன்னன் கோவிந்த சந்திரன் படைகளுடனும் வாளோடு வாள் கலந்தன. அவன் மகிபாலனை வென்றதாகவும் புகழப்படுகிறான். அறிஞர் சிலர், புகழ்மிக்க காங்கேய தேவகாலசூரி என்பவனே மகிபாலன் நாட்டின்மீது படையெடுத்தான் என்று கூறுகின்றனர். ஆயினும், இச் செய்தி, சந்தேகத்திற்கிடமானது. ஏனெனில், படையெடுத்தவன் காங்கேய தேவனே என்று குறிப்பிட இயலாது.

மகிபாலனுக்குப் பின் அவன் மகன் நரபாலனும், பேரன் மூன்றாம் விக்கிரகபாலனும் முடி புனைந்தனர். மத்திய இந்தியாவில் விளங்கிவந்த சேதி நாட்டுப் பெருமன்னன் கர்ணகால சூரியுடன் இவ்விரு மன்னரும் போரிட்டனர். சேதிநாட்டு மன்னன் மகள் யவனஸ்ரீயை மூன்றாம் விக்கிரகபாலன் மணம் புரிந்தான். இவனுக்கு மற்றொரு மனைவி இராஷ்டிரகூட வழியில் வந்தவள். இவன், இரண்டாம் மகிமபாலன், சூரபாலன், இராமபாலன் என்னும் மைந்தர் மூவரைப் பெற்றிருந்தான். இரண்டாம் மகிபாலன் வலிமையற்றவனாய் விளங்கினான். பால சாம்ராஜ்யம் தன் உதவிக்கு வேறு மாகாணங்களிலிருந்து வந்த இராணுவப் பெருஞ்செல்வர் துணையை மிகுதியாக நாடவேண்டியதாயிருந்தது. குறுநிலத் தலைவர் பலர் ஒன்றுசேர்ந்து மன்னனுக்கு எதிராகக் கலகம் விளைத்தனர். தாற்காலிகமாகப் பாலர்வசம் வந்த வடக்கு வங்காளத்தில் கைவர்த்தத் (Kaivarta) தலைவன் திவ்வோகாவின் கை ஓங்கியிருந்தது. திவ்வோகாவின் காலத்திற்குச் சிறிது பின்னர் அவன் மருமகன் பீமன் அரசபதவி ஏற்றான். ஆனால், இரண்டாம் மகிபாலனின் இளைய சகோதரனை இராமபாலன் என்பவன் இராஷ்டிரகூடர்களின் உதவி பெற்றது காரணமாக, பீமனைத் தோற்கடித்தான். இவன் மீண்டும் தன் குலத்தவரின் நிலையை மேன்மையுறச் செய்தான். இராமபாலனுக்குப் பின் அவன் மகனும் மூன்றாம் கோபாலன் இரண்டாம் மகனாகிய மதனபாலனும் ஆட்சி செய்தனர். முடிவில் தக்காணத்துக் கன்னட நாட்டு வமிசத்தைச் சேர்ந்த விஜயசேனன் என்பவனால் பாலர்களின் ஆதிக்கம் அழிவுற்றது. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்குள் வங்காளம் முழுவதிலும் சேனர்களின் ஆட்சி நிலைபெற்றது.

அதீசர்—Atisa
L. A. வாடலின்—'திபெத்து நாட்டில் புத்தமதம்' என்ற நூலிலிருந்து பிரதிசெய்யப்பட்டது—ஹைஃபர்

சரித்திரப் புகழ்பெற்ற பாடலிபுரத்தினின்றும் ஆணை பிறப்பித்த கடைசி இந்து மன்னனை அளித்தது பாலவமிசமே. மௌரியர்களையும் குப்தர்களையும் போன்று இந்தியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் தோன்றிய தங்கள் சாம்ராச்சியத்தை

ஆரியவர்த்த அரசுகளுள் முன்னணி எய்தும்படி உயர்த்தியவர்கள் இவர்களே. இவர்கள் தங்களுக்கு முன் ஆட்சி செலுத்திய கீர்த்தி வாய்ந்த பேரரசர்களைப் போன்று தங்கள் காலத்தனவும் தாங்கள் உணர்ந்திருந்தனவுமான உலகின் பல பாகங்களிலிருந்த வல்லரசுகளுடன் அரசியல் உறவு பூண்டார்கள். இவர்கள் மதத்தையும் பண்பாட்டையும் இந்தியாவில் வளர்த்ததோடு வெளிநாடுகளில் அவை பரவுவதற்கும் ஆதரவு அளித்தார்கள். உத்தண்டபுரம், விக்கிரகசீலம் ஆகிய பல்கலைக் கழகங்களின் தோற்றத்திற்கும் பால வமிசமே காரணமாகும். தீமாணர் (Dhimana), வீடபாலர் (Vitapala) போன்ற பெருங்கலைஞர்களின் அருஞ்செயல்களும், பண்டித தர்மபாலர், அதீச தீபங்கரர் போன்ற மதபோதகர்களின் சாதனைகளும், சக்கரபாணி, சந்தியாகரர் போன்ற விற்பன்னர்களின் மேதையும் நிரம்பப் பெற்றது பாலர்களின் காலம்; இது என்றும் நினைவுகூரத்தக்க ஒரு சகாத்தமாய் விளங்கியது. பாலமன்னர்கள் புத்தமதத்தில் பற்றுள்ளவர்களாயினும், மத விஷயங்களில் சமரசமாய் விளங்கினார்கள். மகாதேவ நாராயண வழிபாட்டினருக்குத் தாராளமான கொடை வழங்கியுள்ளார்கள். தங்கள் ஆட்சிக்காலம் முழுமையும் பாலவமிசத்து மன்னர்கள் அந்தண அமைச்சர்களின் துணையை நாடி வந்தார்கள். இந்தச் சந்ததியார் ஆட்சியின் இறுதிக்காலத்தில் கைவர்த்தத் தலைவர்கள் பொருளிலும் பதவியிலும் உயர்வடைந்ததை நோக்குங்கால், உண்மையில் திறமை உடையவர்களுக்குச் சாதிசமய வேறுபாடின்றி வாழ்க்கையில் வெற்றி கிட்டும் என்பது தெளிவாய் விளங்குகின்றது.

## பிரதிஹார சாம்ராச்சியம்

இந்து தேச சரித்திரத்தில் நீண்ட ஆட்சி பெற்றிருந்த வமிசங்களுள் பால வமிசம் ஒன்று. ஆனால், கங்கை நதியிடைப் பிரதேசத்தில் பாலர்களது ஆதிக்கம் குறுகிய வாழ்வுடையது. தர்மபாலனின் சிற்றரசர்கள் கன்னோசியை நீண்ட நாள் ஆளவில்லை. கி. பி. 836 சமயத்தில் மகோதயத்தில் (கன்னோசி) பிரதிஹார வமிசத்தினரின் ஆட்சி வலுவடையத் தொடங்கியது. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முடிவிற்குள் இப் புதிய வமிசத்தினரின் ஆட்சி எல்லாத் திசைகளிலும் பரவியது. பஞ்சாபில் பெஹோவாவிலிருந்து (Pehova) மத்திய இந்தியாவில் தேவகிரி (Dogarh) வரையிலும், கத்தியவாரில் உனா முதல் வடக்கு வங்காளம் பாகார்ப்பூர் வரையிலுமுள்ள அகன்ற பிரதேசத்தில் பிரதிஹார மன்னர்களின் ஆணை ஒப்புக்கொள்ளப்பட்டது.

இராமாயண காவியத்தில் புகழ்ந்து கூறப்பட்டுள்ள சூரிய குல க்ஷத்திரியவமிசத்து இலக்குமணன் (இராமனுக்கு இளவல்) வழி வந்தவர்களாக இவர்களைப் பிரதிஹாரர் காலத்துச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. இது தவிர, அரிச்சந்திரன் என்ற அந்தணன் வழித்தோன்றல்களாகவும் இவர்கள் கூறப்படுகிறார்கள். இக்கால அறிஞர்களிடையே நிலவிவரும் கருத்துப்படி இவர்கள் ஆறும் நூற்றாண்டிலிருந்து இந்து தேச சரித்திரத்தில் முக்கியப் பங்குகொண்ட கூர்ச்சர மரபினருள் ஒரு கிளையினர் என்பது தோன்றுகிறது. கூர்ச்சரர்கள் பஞ்சாபு, மார்வார், புரோச்சு என்னும் பகுதிகளில் தங்கள் ஆட்சிப் பீடங்களை ஏற்படுத்தினார்கள். ஏழாம் நூற்றாண்டில் இவர்களைப்பற்றிய செய்திகளை பாணரின் ஹர்ஷ சரித்திரத்திலும், யுவான்-சுவாங் தஸ்தாவேஜுகளிலும் இரண்டாம் புலகேசி வெளியிட்ட ஐஹோல் கல்வெட்டுகளிலும் காணலாம். உஜ்ஜயினியில் இராஷ்டிரகூடர்கள் எட்டாம் நூற்றாண்டின் இடையில் நடத்திய ஒரு யாகத்தில் கூர்ச்சரத் தலைவர்களுள் சிலர் பிரதிஹாரர்களாய் (வாயிற்காப்போர்) இராஷ்டிரகூட மன்னர்களுக்குப் பணி புரிந்ததாகக் கூறப்பட்டுள்ளனர். பிரதிஹாரர் என்ற பட்டம் இவ்வாறு தோன்றியிருக்கக்கூடும் என்பது பொருந்துமாயினும், பிற்காலப் பழங்கதைகள், இராமன் தம்பியான இலக்குமணன் வனவாச காலத்தில் இராமனுக்கு வாயிற்காப்போனாய் இருந்ததை இவர்களோடு சம்பந்தப்படுத்திக் கூறுகின்றன. உஜ்ஜயினிக்கருகில் இருந்த அவந்தியுடன் இவர்களைச் சம்பந்தப் படுத்திக் கூறியது பொருத்தமற்றதென்று தள்ளவும் இயலாது. ஏனெனில், ஜைன ஹரிவமிசக் கூற்றின்படி இவ்வமிசத்தைச் சார்ந்த கீர்த்திமிக்க வத்ஸராஜன் அவந்தியை ஆண்டானென்பது தெரிகிறது. ஆனால், அறிஞர் சிலர், இவ்வாசகத்திற்கு வேறு விதமாகப் பொருள் காண்கின்றனர். வத்ஸராஜன் வமிசத்தை ஏற்படுத்தியவர் எட்டாம் நூற்றாண்டின் மத்திய காலத்தை சேர்ந்தவராகக் கொள்ளப்படும் முதலாம் நாக பட்டராவர். சிந்துவிலிருந்த அராபியர்களாலும் தக்காணத்திலிருந்த இராஷ்டிரகூடர்களாலும் சிதைவுறும் என்று தோன்றிய கூர்ச்சரர்களின் செல்வாக்கை மீண்டும் உயர்த்த இவர் பெரிதும் பாடுபட்டார். நாகபட்டரின் பேரமருமகனான வத்ஸராஜின் சாம்ராஜ் அல்லது சக்கரவர்த்தி என்ற பதவியைப் பெற்றானென்றும், வங்காளம்வரை தன் வெற்றியை நிலைநாட்டினான் என்றும் இவன் கூறிக்கொண்டாலும், தக்காணத்து இராஷ்டிரகூட மன்னன் துருவன் இவனைத் திக்குத் தெரியாத காட்டிடை ஏகும்படி விரட்டிவிட்டான். அவன் மகன் இரண்டாம் நாகபட்டன் தொடக்கத்தில் சில வெற்றிகளைப் பெற்றான்.

சிந்துவிலிருந்து ஆந்திரா வரையிலும் மேற்கில் கத்தியவாரைச் சார்ந்த ஆனர்த்தா (Anartha) முதல் கிழக்கில் வங்காளம் வரையிலும் தன் ஆதிக்கத்தைப் பரப்பியதாக இவனைப்பற்றிப் புகழ்ச்சியாகக் கூறப்படுகிறது. வங்காள நாட்டு மன்னன் தர்ம பாலனை வெற்றி கண்டதும் கன்னோசியிலிருந்த பொம்மை அரசன் சக்கராயுதனை அரியணை நீக்கியதும் இவனுடைய அருஞ்செயல்களில் சிறந்தனவாகப் பேசப்படுகின்றன. ஆயினும், மூன்றும் கோவிந்தன் என்னும் மன்னன் ஆட்சியில் வலிமைபெற்ற இவனுக்குப் பரம வைரிகளான இராஷ்டிரகூடர் களிடம் பெருந்தோல்வியுற்றான். இரண்டாம் நாகபட்டனின் பேரனான முதலாம் போஜன் ஆட்சிக்காலத்தில் பிரதிஹாரர் களின் வலிமை மீண்டும் புத்துயிர் பெற்றது. கி. பி. 836இல் முத லாம் போஜன் கன்னோசிமன்னனாகமுடிசூட்டப்பட்டான். இவன் தனது ஆணையை வடக்கில் பெஹோவாவரையிலும் தெற்கில் விந்தியமலைவரையிலும் பரப்பினான். ஆனால், இவனது ஆதிக் கத்தை மேலும் பரவவொட்டாதபடி காஷ்மீர நாட்டுச் சங்கர வர்மனும், துருவதாரவர்ஷன் என்னும் புரோச்சைச் சார்ந்த இராஷ்டிரகூடத் தலைவனும் தடுத்துவிட்டனர். இவன் கிழக் கில் அதிக வெற்றி பெற்றான். வங்க நாட்டுக் கௌடர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். இவனுக்குப்பின் ஆட்சி செய்தவர் காலத்தில் பிரதிஹார சாம்ராச்சியம் வடக்கு வங்காளத்தில் பாகர்புரம் (Paharpur) வரையிலும் பரவியது. போஜனது இராச்சியத்திற்குச் சுலைமான் என்னும் வணிகன் விஜயம் செய்து இவனது குதிரைப்படையின் வலிமைபற்றியும், இவனது நாட்டில் நிலவிய அமைதிபற்றியும் மிகப் பாராட்டி யுள்ளான்.

போஜனின் மூத்த மைந்தனான முதலாம் மகேந்திரபாலன் தன் தகப்பனது இராச்சியத்தைப் பேணியதுடன், அதைக் கிழக்கில் பரவும்படியும் செய்தான். கல்வியை ஆதரிப்பதில் இவன் ஹர்ஷனையும் யசோவர்மனையும் ஒத்திருந்தான். இராஜ சேகரர் என்ற புலவர் இவன் சபையை அலங்கரித்தார்.

மகேந்திரனுக்குப்பின் இரண்டாம் போஜன் மகிபாலன், விநாயகபாலன் என்ற மைந்தர் இருவரும் ஆட்சி செய்தனர். அறிஞர் சிலர், மகிபால பிரதிஹாரனே விநாயகபாலன் என்று கருதுகின்றனர். ஆனால், அவ்விருவர் காலமும் மாறுபட்டுள்ளது. கி.பி. 914 வரை மகிபாலன் சௌராஷ்டிரம் அல்லது கத்திய வாரின்மீது தன் ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தான். அதற்கு அடுத்த ஆண்டில் அல் மசூதி (Al Masudi) அவனது நாட்டிற்கு

வந்து அவனுடைய குதிரைகளையும் ஒட்டகங்களையும் பற்றிக் கூறியுள்ளான். கி. பி. 917இல் கங்கை ஆற்றிடைப் பிரதேசம் பிரதிஹார மன்னன் ஆட்சியின்கீழ் இருந்து வந்தது. வடக்கில் குளுதாவிலிருந்து (Kuluta) தெற்கில் கேரளம் வரை நெடுந் தொலைவிலுள்ள இந்தியப் பிரதேசங்களை வென்றதாக இராஜ சேகரன் கூறிக்கொள்கிருன். ஆனுல், தக்காண இராஷ்டிரகூட மன்னன் மூன்றும் இந்திரன் இவனுக்கு எதிரியாகி, இவனை நன்கு முரியடித்து, இவனிடமிருந்து கன்னோசியைப் பற்றிக் கொண்டான். ஆனுல், சந்தல்லா (Chandalla) அரசன் ஒருவனது துணைகொண்டு இவன் இழந்த ஆட்சியைத் திரும்பப் பெற்ற தாகத் தோன்றுகிறது. பிரபல நாடகாசிரியரான க்ஷேமீஸ்வரர் (Kshemisvara) பிரதிஹார மன்னனுக்காகத் தீட்டிய 'சண்ட கௌசிகம்' என்னும் நாடகத்தில் கருநாடர் என்ற இராஷ்டிர கூடர்களை இவன் வென்றதை வலியுறுத்தியுள்ளார். ஆயினும், இராஷ்டிரகூடர்களிடம் பெற்ற தோல்வியின் விளைவுகளிலிருந்து பிரதிஹார சாம்ராச்சியம் விடுபட்டதாகத் தோன்றவில்லை.

இதன் பின்னர்ப் பட்டத்திற்கு வந்த மன்னர்கள் மேல் கங்கைச் சமவெளிப் பிரதேசம், இராஜபுதனத்தின் சில பகுதி கள், மாளவம் இவற்றின்மீது நிலையற்ற ஆட்சி பெற்றிருந்தார் கள். ஆனுல், இவர்களின் சிற்றரசர்களுள் குறிப்பாகச் சாந்த லர்கள் இவர்களது திறமையின்மையைத் தங்கள் அனுகூலத் திற்குப் பயன்படுத்திக்கொண்டார்கள். கூர்ச்சரத்தில் சாளுக் கியர்கள் சுய ஆட்சி பெற்றுர்கள். அதே போன்று மாளவத்தில் பமராரர்களும், யமுனைக்கும் நருமதைக்கும் இடைப்பட்ட பிர தேசத்தில் சாந்தலர்களும் சேதிகளும் சுய ஆட்சி பெற்றுர்கள். பதினென்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில் எல்லோருக்கும் மேலான வலிமை பெற்ற பகைவன் ஒருவன் தோன்றினுன். கி. பி. 1018இல் இராச்சியபால பிரதிஹாரனிடமிருந்து கன்னோசி யைக் கஜினி மாமூது பறித்துக்கொண்டான். பதினென்றும் நூற்றுண்டின் தொடக்ககாலம் வரை பிரதிஹார வமிசத்தினர் ஒரு சிறு பிரதேசத்தைத் தொடர்ந்து ஆண்டிருக்கலாம் என்று எண்ணுவது சாத்தியமாகத் தோன்றுகின்றது. ஆனுல், அவர் கள் சாம்ராச்சியம் மறைந்துபோய் அவர்கள் குறுநில மன்னர் களின் பதவிக்குத் தாழ்த்தப்பட்டார்கள்.

வலிமையுற்றிருந்த காலத்தில் ஷாகியர்கள் அராபியப்படை யெடுப்பாளரிடமிருந்து இந்துஸ்தானத்தைப் பாதுகாப்பது பிரதி ஹாரர்களின் பொறுப்பாக இருந்தது. பத்தாவது நூற்றுண்டின் இறுதியில், இந்திய வடமேற்கு எல்லையைப் பாதுகாக்கும்

பணியை "ஷாகியர்" என்ற புதிய மரபினர் ஏற்க வேண்டியதாயிற்று. இப் பொறுப்பை ஏற்று அம் மரபினர் இந் நாட்டிற்குச் சிறந்த தொண்டாற்றினர். அம் மரபினரின் தோற்றம், வரலாறு ஆகியவைகளை இங்குச் சுருக்கமாக எடுத்துரைப்பது பொருத்தமுடையது. காபூல் பள்ளத்தாக்கிலும் அதையொட்டிய சிந்து நதி வரையுள்ள கீழ்த்திசைப் பகுதிகளிலும் இந்தியப் பண்பாட்டில் தோய்ந்து வளர்ந்த அந்நியர் குடியேறி இருந்தனர். அல்பிருனி (Albiruni) அவர்களைக் கனிஷ்கரின் மரபினர்களெனக் கருதுகிறார். 'துருக்கஷாகியர்' என்னும் பெயர் அவர்களுக்கு வழங்கி வந்தது. கி.பி. 9-ம் நூற்றாண்டின் மத்தியில் இம் மரபைச் சார்ந்த 'லகதூர்மான்' என்ற அரசனை, பார்ப்பன சாதியைச் சார்ந்த 'கல்லார்' என்னும் அமைச்சன் பதவிநீக்கம்செய்தான். 'ராஜதரங்கிணி' என்னும் நூல் புகழ்ந்துரைக்கும் 'லல்லியஷாகி' இவனே என்றும் கூறுவார்கள். லல்லியஷாகியின் மரபினர் இந்துக்களென்பதால் அவர்களுக்கு 'பிராமண ஷாகியர்' அல்லது 'ஷாகியர்' என்ற பெயருண்டாயிற்று. கி. பி. 870-ம்ஆண்டில் 'சுபாரித் யாகூப்' என்பவன், ஷாகியரின் தலைநகரான காபூலைக் கைப்பற்றினன். இதனால் ஷாகியர் 'உதபாண்டபுரம்'(ஓஹிந்து) என்ற புதிய தலைநகரை ஏற்படுத்திக்கொண்டனர். இத் தலைநகர் அட்டாக் (Attok)கிலிருந்து, பதினைந்து மைல்கள் தொலைவிலுள்ள சிறு கிராமமாகும். அது, சிந்து நதியின் தென்கரையிலமைந்திருந்தது. இந்து ஷாகியருக்கு காஷ்மீரை ஆண்டுவந்த அரச குலத்தினருடன், அரசியல் மற்றும் திருமணத் தொடர்புகளும் உண்டு. மகா ராசாதிராச பரமேசுவர ஷாகி ஸ்ரீ பீமதேவன் என்னும் அரசர், காஷ்மீர நாட்டின் புகழ்மிக்க அரசியாக விளங்கிய 'திட்டா' என்பவளின் (Didda) தாய்வழிப் பாட்டனாராவார். இக் குல முக்கிய மன்னர்களில், அடுத்து அரசெய்தியவன் 'ஜயபாலன்' பல விருதுகளைச் சூடியிருந்த இம் மன்னன், கீழ்த்திசையில் கிழக்கு ஆப்கானிஸ்தானத்திலுள்ள லாம்கானிலிருந்து, பஞ்சாப் மாகாணத்திலுள்ள சர்ஹிந்து வரையிலும், தெற்கில் மூல்டான் வரையிலும் பரவியிருந்த பேரரசை ஆண்டான். ஜயபாலனது வரலாறு அத்தியாயம் XIII-ல் கூறப்படவிருக்கிறது.

# 12. சாதவாகனர் வீழ்ச்சியிலிருந்து இராஷ்டிரகூட ஆதிக்க முடிவு வரையில் தக்காணத்தின் சரித்திரம் —காஞ்சி, கர்நாடகச் சாம்ராச்சியங்களின் எழுச்சி

## சாதவாகனருக்குப்பின் ஆண்டவர்கள்

கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் முடிவில் ஆட்சி செலுத்திய கௌதமி புத்திர ஸ்ரீயக்ஞ சாதகர்ணியே அவ் வமிசத்துக் கடைசிப் பெருவேந்தன். அவன் இறந்த பின் சாதவாகன சாம்ராச்சியம் சிதறுண்டு போகத்தொடங்கியது. மஹாராஷ்டிரப் பிரதேசத்திலுள்ள நாசிக்குப்பகுதி ஆபிர மன்னன் ஈசுவரசேனன் வசமானதாகத் தோன்றுகின்றது. பேராரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாகடகர்கள் அதிகாரம் பெற்றுர்கள். 'சுடுகுலானந்த' என்னும் அடைமொழி பெற்ற சாதகர்ணி வழியினர் ஒருவரது கையில் மேற்குக் கன்னட மாவட்டங்கள் சிக்கின. பேரரசு வமிச சாதவாகன சாதகர்ணிகளிலிருந்து வேறுபடுத்தி அறிந்துகொள்வதற்காக இம்மரபினர் சுடு சாதகர்ணிகள் என்று சில சமயங்களில் குறிப்பிடப்படுகின்றனர். வடக்குக் கன்னடத்திலுள்ள வைஜயந்திபுரம் அல்லது பனவாசி என்னும் புகழ்மிக்க நகரத்தையே இவர்கள் தங்கள் தலைநகரமாகக் கொண்டார்கள். இப்பழைய அரச வமிசத்தினர், கிருஷ்ணு நதியின் முகத்துவாரத்தில் அமைந்த ஆந்திர தேசத்தைச் சில காலம் ஆண்டு வந்தனர். பின்னர் இட்சுவாகுகளும், ஆனந்த கோத்திர மரபின் மன்னர்களும், பிரகத்பலாயனர்களும், சாலங்காயனர்களும் ஆட்சி பெற்றுர்கள். சாலங்காயனர்களுக்குப் பின்னர் விஷ்ணுகுண்டினர்கள் என்பவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினுர்கள். இரண்டாம் நூற்றுண்டிலிருந்தே சாலங்காயனர் குறுநில மன்னராய் ஆட்சி செய்து வந்துள்ளனர். சாதவாகனப் பேரரசர்கள் வீழ்ச்சியுற்றதும் இவர்கள் தங்கள் சுய ஆட்சியை நிலை நாட்டியிருக்க வேண்டும். நான்காம் நூற்றுண்டில் இவர்கள் வட

நாட்டுச் சக்கரவர்த்தியான சமுத்திர குப்தனுடன் போர் தொடுத்தார்கள். இதே சமயம் தென்னிந்தியாவில் காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு மற்றோர் ஆட்சி தோன்றியது. காஞ்சி என்பது, சென்னைக்கு அருகில் இப்போதுள்ள காஞ்சீபுரத்தைக் குறிக்கும். இவர்கள் கிருஷ்ணா நதியின் முகத்துவாரத்தில் தெற்கு ஆந்திரப் பகுதியிலும் கன்னட மாவட்டங்கள் சிலவற்றிலும் தங்களது ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தார்கள். இவர்களே பல்லவர்கள். சமுத்திரகுப்தனின் புகழ்மிக்க திக்குவிஜயத்தின் போது விந்தியப் பிராந்தியப் பரப்பில் ஆட்சி பெற்றிருந்த முக்கியமான வமிசத்தினர்கள் தக்காணத்தின் மேற்குப் பகுதியிலாண்ட வாகடகர்களும், காஞ்சியில் அரசாண்டிருந்த பல்லவர்களுமாவார்கள். குப்த வெற்றியாளர் வாகடகர்களுடன் நேராகப் போரிட்டதாகத் தோன்றவில்லை. ஆயினும், வியாக்கிரராஜா என்ற ஒரு தலைவனைச் சமுத்திரகுப்தன் தோற்கடித்தான். இவன் வாகாடக வமிசத்துக் குறுநில மன்னனை வியாக்கிரதேவனாய் இருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. ஆனால், சமுத்திரகுப்தனுக்குப் பின்னர்ப் பட்டமெய்திய இரண்டாம் சந்திரகுப்தன், தன் அண்டை அரசினரான வாகாடகர்களுடன் நேரிடையான தொடர்பு கொண்டு, தன் மகள் பிரபாவதியை அவர்கள் மன்னன் இரண்டாம் உருத்திரசேனனுக்கு மணமுடித்தான். வாகாடகர்களும் தங்கள் பங்கிற்குக் கோதாவிரிக்கு அப்பாலிருந்த பல அரச குடும்பத்தினர்களுடன் திருமண உறவு கொண்டார்கள். உருத்திரசேனனுக்கும் பிரபாவதிக்கும் பிறந்த வழித்தோன்றல்கள், பல தலைமுறைகள் வரையில் தக்காணத்தில் விஷ்ணுகுண்டினர்கள், அவர்களுடைய எதிரிகளும் சமகாலத்தவருமான வாதாபி சாளுக்கியர்கள், நாசிக்கு அல்லது மாளவ நாட்டுக் காலசூரிகள் அல்லது காடசூரிகள் ஆகிய இவர்களது எழுச்சி வரையில் ஆட்சி செலுத்தி வந்தார்கள்.

## மஹா பல்லவர்கள்

வாகாடக இராச்சியத்திற்குத் தெற்கில் பல்லவர்களின் அரசு அமைந்திருந்தது. ஆதி பல்லவ வேந்தர்களுள் ஒருவனை விஷ்ணுகோபனைக் கி. பி. நான்காம் நூற்றாண்டின் மத்தியில் சமுத்திரகுப்தன் சிறைப்பிடித்துப் பின்னர் விடுதலை செய்தான். பல்லவ வமிச மன்னருள் பலர் 'விஷ்ணுகோபன்' என்னும் பெயர் தாங்கியுள்ளனர். எனவே, பண்டைய பிராகிருத மொழி ஏடுகளில் 'நீதி வழுவா வேந்தர்க்குவேந்தன்', அஸ்வமேத யாகம் புரிந்தவன் என்று புகழ்ந்து போற்றப்படும் சிவஸ்கந்தவர்மனுக்கும் சமுத்திரகுப்தனின் காலத்துப் பல்லவ மன்னனுக்கு

யிடையேயுள்ள தொடர்பு என்னவென்பது தெரியவில்லை. காஞ்சீபுரம் மட்டிலுமன்றித் தெலுங்கு, கன்னட மாவட்டங்களின் பெரும் பகுதிகளையும் தம் ஆட்சிக்கு உட்படுத்தியிருந்த பல்லவ மன்னர் பலரைப்பற்றிய செய்திகளைச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. அவர்களுள் பலருடைய தலைமை ஆட்சியைக் கிழக்கு தெற்கு மைசூர் கங்ககுல மன்னர்களும் வைஜயந்தி மன்னர்களான சுடுசாதகர்ணிகளை அரசியல்தவிர்த்த முறகாலக்கதம்பர்களும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். சிம்மவர்மன் எனப் பெயர் தாங்கிய பல்லவ மன்னன் ஒருவன், கி. பி. 436இல் அரசு கட்டில் ஏறியது லோகவிபாகத்தின (Lokavibhaga) மூலம் நமக்குத் தெரிகிறது.

சிம்மவிஷ்ணு காலத்திலிருந்து பல்லவ வமிச சரித்திரம் தெளிவாகத் தெரிய வருகின்றது. இவன் கி. பி. ஆரும் நூற்ருண்டின் பிற்பகுதியில் ஆட்சியெய்தியிருக்கவேண்டும். இவன் சோழர்

மாமல்லபுரத்திலுள்ள கல் ரதங்கள்

களின் நாட்டைக்கைக்கொண்டதாகவும், தன் அண்டை அரசர்களான தென்பிராந்தியத்தினரையும் இலங்கை வேந்தனையும் வென்றதாகவும் பாராட்டப்படுகின்ருன். இவனுக்குப் பேரனுன நரசிம்மவர்மனும் இலங்கையை வென்றதாகக் கூறப்படுகின்றது. சிம்மவிஷ்ணு வைணவன். இவனையும் இவன் மனைவியர்

இருவரையும் குறிப்பிடும் அழகிய உருவச்சிலைகள் மாமல்லபுர வராகக்குகையில் காணப்படுகின்றன. சிம்ம விஷ்ணுவிற்குப் பிறகு இவன் மகன் முதலாம் மஹேந்திரவர்மன் ஆட்சிக்கு வந்தான். இவன் ஆட்சியில் பல்லவர்களுக்கும் அவர்களின் வட நாட்டுப் பகைவர்களான வாதாபிச் சாளுக்கியர்களுக்கும் தென்னாட்டு ஆதிக்கம் பற்றிய பெரும்போர்கள் தொடங்கின. பல தலைமுறைகள் வரையில் இந்தப் பகைமை நீடித்தது. சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலகேசி, பல்லவ மன்னர்களின் பெருமைகளைத் தன் படைகள் எழுப்பிய துகளில் மூழ்கடித்து காஞ்சி மதில்களுக்குப் பின் மறையும்படி செய்தான். ஆனால், மகேந்திர வர்மனின் மகனும் அவனுக்குப் பின் பட்டமெய்தியவனுமான முதலாம் நரசிம்மவர்மன், பல போர்களில் புலகேசியை முரியடித்து அவனது தலைநகரமான வாதாபியை முற்றுகையிட்டான். புலகேசியின் மகன் முதலாம் விக்கிரமாதித்தன் காலத்தில் இப் பகைமை மீண்டும் தொடர்ந்தது. விக்கிரமாதித்தன் நரசிம்மவர்மன் வமிசத்தை அழித்ததாகவும் கூறிக்கொண்டான். ஆனால், பல்லவர்களின் ஆதாரங்கள் சாளுக்கிய மன்னனின் படையெடுப்பு முதலில் முரியடிக்கப்பட்டதாகக் கூறுகின்றன. முதலாம் விக்கிரமாதித்தனுக்குக் கொள்ளுப்பேரனான இரண்டாம் விக்கிரமாதித்தன் தலைமையில் தோல்விகளால் மனந்தளராது மீண்டும் சாளுக்கியர்கள் பல்லவ நாட்டின்மீது படையெடுத்து வெற்றி கொண்டார்கள். இச் செயல் கி. பி. எட்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் நடைபெற்றது. பல்லவர்களின் அரசனான நந்திவர்ம பல்லவ மல்லனை அவர்கள் முரியடித்துக் காஞ்சி நகரைக் கைக்கொண்டார்கள். இப்பொழுது பல்லவர்கள் வடக்கிலும் தெற்கிலும் உள்ள பகைவர்களால் அச்சுறுத்தப்பட்டார்கள். பாண்டியர்கள் காவிரிக்கரை வரை முன்னேறி, க்ஷீணித்து வரும் காஞ்சி சாம்ராச்சியத்துடன் பயங்கரப் போர்கள் பலவற்றில் ஈடுபட்டார்கள். சோழ மன்னன் ஆதித்தியன் அபராஜித பல்லவனைத் தோற்கடித்துப் பல்லவ ராச்சியத்தைக் கைப்பற்றி இதற்கு முடிவு கண்டான்.

காஞ்சிப் பல்லவர்களின் சகாத்தம் இந்திய சரித்திர அரசியல் துறையிலும் பண்பாட்டுத்துறையிலும் அழியா நினைவு கூரத்தக்கது. பெண்ணையாற்றிற்கும் துங்கபத்திரா நதிக்கும் தெற்கே முதற்பெரு சாம்ராச்சியத்தை இவர்கள் நிறுவித் தங்கள் படை வலியை இலங்கை வரையில் பரப்பினார்கள். இவர்களது ஆட்சிக்காலத்தில் வைணவ சமய ஆழ்வார் பலரும் சைவ சமய நாயன்மார்களும் சிறந்தோங்கியிருந்தார்கள். பல்லவர்களது ஆட்சியில் காஞ்சி நகரம் பிராமண சமயக் கல்விக்கும்

புத்த சமயக் கல்விக்கும் கேந்திரஸ்தானமாய் விளங்கியது. 'விசித்திர சித்தன்' (அபூர்வ மனத்தினன்) என்னும் புகழ் பெற்ற அடைமொழி கொண்ட முதலாம் மகேந்திரவர்மன், குகைக்கோயில்கள் அமைக்கும் முறையை முதன் முதலாக ஏற்படுத்தியதுடன், 'மத்தவிலாசப் பிரகாசினி' என்னும் நகைச் சுவை நிரம்பிய பரிகாசச் சித்திர நூலொன்றையும் எழுதினன். புதுக்கோட்டைச் சமஸ்தானத்தில் கண்டறியப்பட்ட பல்லவக் குகைக்கோயில் ஓவியங்கள் அவனுடைய ஆட்சிக் காலத்தவை என்று கொள்ளப்படுகின்றன. அவன் மகன் நரசிம்மவர்ம மாமல்லன் தன் பெயரை மாமல்லபுரத் துறைமுக நகருக்கு வழங்கினன். அங்குப் பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட இரதங்கள் என வழங்கும் புகழ் பெற்ற கற்றளிக் கோயில்கள் அவன் காலத்திற்குரியனவாகும். இரண்டாம் நரசிம்மவர்மன் அல்லது இராஜசிம்மன் என்னும் விருதுப்பெயர் பூண்ட பிற்காலப் பல்லவ மன்னன் காஞ்சிக் கைலாசநாதர் ஆலயத்தை நிருமாணித்தான்.

## முற்காலச் சாளுக்கியர்கள்

காஞ்சிப் பல்லவர்களின் தீராப் பகைவர்களான சாளுக்கியர்கள் கி. பி. ஆரும் நூற்ருண்டில் கன்னட மொழி பேசப்படும் பிரதேசமான கர்நாடகத்தில் ஆதிக்கம் பெற்று விளங்கினுர்கள். இக் காலப் பம்பாய் ராச்சிய பீஜப்பூர் மாவட்டத்துப் பாதாமியில் விளங்கிய வாதாபியைத் தங்கள் முதல் தலைநகராகக் கொண்டார்கள். சுடுசாதகர்ணிகளைப் போன்றும் வைஜயந்திபுரிக் கதம்பர்களைப் போன்றும் இவர்கள் மாளவிய கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்றும், ஹரிபுத்திரர்கள் என்றும் வழங்கப்படுகின்றுர்கள். பிற்காலத்தில் இவர்கள் தங்களைச் சந்திரகுலத்தவர்கள் என்று கூறி வந்தார்கள். இவர்கள் வமிசத்து ஒரு கிளையினரின் சில கல்வெட்டுச் சான்றுகள் இவர்களது பூர்வ குடியேற்றம் அயோத்தி என்று குறிப்பிடுகின்றன. மற்றுமொரு பழங்கதை இவர்களது வமிசத்தின் பெயரை, பிரமதேவனின் 'சுளுகு' (அதாவது நீரை ஏற்பதற்காகக் குவித்தகை) என்றதுடன் சம்பந்தப்படுத்திக் கூறுகிறது. இக் கால எழுத்தாளர் சிலர், உண்மையில் சாளுக்கியர்கள் சாபாஸ் (Chapas) மற்றும் தொடக்கத்தில் கூர்ச்சர மரபினருடனும் தொடர்பு கொண்டதாக ஊகிக்கின்றனர். ஆனல், இந்த ஊகத்திற்குச் சாதகமாகக் கூறுவதற்கு ஆதாரம் சிறிதும் இல்லை. கல்வெட்டுகள் சாளுக்கியர்களையும் கூர்ச்சரர்களையும் வேறுபடுத்தியே கூறுகின்றன. அந்தக் குலத்திற்குரிய காரணப்பெயர் நிச்சயமாகத் தென்னுட்டினதாகவே உள்ளது.

வாதாபி மரபினரின் உண்மை ஸ்தாபகன் முதலாம் புலகேசி. இவன் பட்டமெய்தியதை விளக்கும் வகையில் அஸ்வமேத யாகம் ஒன்று செய்தான். இவன் மைந்தர்களான முதலாம் கீர்த்திவர்மனும் மங்களேசனும் சாம்ராச்சியத்தின் எல்லையைப் பல திசைகளிலும் விரிவாக்கினர்கள். இவர்கள் தங்கள் அண்டை அரசர்களான கொங்கண மௌரியர்களையும், வைஜயந்திக் கதம்பர்களையும், வடக்கு மகாராட்டிர மாளவக் காலசூரிகளையும் வென்றார்கள். இவ் வமிசத்தின் மிக்க புகழ் பெற்ற வேந்தனும் கீர்த்தி வர்மனுக்கு மகனுமான இரண்டாம் புலகேசியால் கதம்பர்களின் தலைநகரம் தரை மட்டமாகியது. கி. பி. 609 முதல் 642 வரையில் நீடித்த அரசாட்சியில் இரண்டாம் புலகேசி தன் ஆட்சியை மகாராஷ்டிரத்தில் வேரூன்றும்படி செய்ததுடன், நதிக்கரையிலிருந்து காவிரி நதிக்கு அப்பாலும் தக்காணம் முழுவதையும் வென்று, கீர்த்தி வாய்ந்த கௌதமி புத்திர சாதகர்ணியின் சாதனைகளை நினைவு கொள்ளும்படி செய்தான்; கன்னோசி மன்னனை ஹர்ஷனின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தினன்; காஞ்சி மகேந்திரவர்மனின் செருக்கையடக்கித் தலை குனியச் செய்தான்; கோதாவிரி மாவட்டத்திலுள்ள பிஸ்தபுரத்தைத் தன் ஆட்சியுடன் இணைத்து, தன் இளைய சகோதரன் குப்தவிஷ்ணுவர்த்தனன் ஆட்சியின் கீழ் அமைத்தான். கி. பி. 641இல் இவன் இராச்சியத்திற்கு விஜயம் செய்த யுவான்-சுவாங், இம் மன்னன் தன் குடிகளுக்கு விளைவித்திருந்த அச்சத்தைப்பற்றியும் இவன் குடிகளின் பழி வாங்கும் குணத்தைப்பற்றியும் சான்று பகர்ந்துள்ளார். சரித்திர வல்லுநர் சிலர், இம் மன்னன் பாரசீக மன்னருடன் கடிதங்களையும் சன்மானங்களையும் பரிவர்த்தனை செய்து கொண்டதாகக் கூறுவர். ஆயினும், அவர் கூற்று ஐயத்திற்கு இடமற்றது என்று கொள்ள இயலாது. இம் மன்னனுடைய இறுதிநாள்கள் இன்பமாய் இல்லை. முதலாம் மகேந்திரவர்மன் குமாரனும் முதலாம் நரசிம்மவர்மனுமான பல்லவ வேந்தன், தன் தந்தை அடைந்த துன்பத்தைத் துடைப்பதற்காகப் புலகேசியுடன் போரிட்டு, அவனை அறவே முரியடித்து, அவனது தலைநகரமான வாதாபியையும் அழித்தான்.

இரண்டாம் புலகேசியின் மகன் முதலாம் விக்கிரமாதித்தன் ஆட்சியில் சாளுக்கியர் மீண்டும் வலுப்பெற்றனர். இவன் தன் தென்னாட்டுப் பகைவர்களுடன் போரை மீண்டும் தொடங்கினன். இவன் கொள்ளுப்பேரனை இரண்டாம் விக்கிரமாதித்தன் இவன் ஆற்றலிலும் மேம்பட்டு விளங்கியதோடு, பல்லவர்களின் தலைநகரத்தினுள்ளும் நுழைந்தான். சாளுக்கிய அரச வமிசத்தின் ஒரு சிறிய கிளையைச் சேர்ந்த சாளுக்கியத் தலைவன் ஒருவன், தென் கூர்ச்சரத்தில் ஆட்சி செய்து வந்தான். அவன் தஜிகர்களுடன் (Tajikas) செய்த போரில் சிறப்புற்றான். இந்தத்

தளபிகர்கள் சிந்து நாட்டு அராபியர்கள் என்பது கூறப்படுகிறது. கி. பி. 753 அல்லது ஏறக்குறைய அந்தக் காலத்தில் இரண்டாம் விக்கிரமாதித்தன் மகனும் அவனுக்குப் பின் ஆட்சி எய்தியவனுமான அரசன் தந்தி—துர்க்கன் என்பவனுல் தோற்கடிக்கப்பட்டான். கர்நாடகத்திலும் மகாராஷ்டிரத்திலும் அடுத்த சாம்ராச்சியமான இராஷ்டிரகூடர் ஆட்சியைத் தோற்றுவித்தவன் இவனே.

## இராஷ்டிரகூடப் பெருவேந்தர்கள்

காவிய புருஷனுகிய யாதவ வமிசத்துக் கிருஷ்ணனுக்கு நெருங்கிய நண்பன் சாத்தியகி. தாங்கள் அவன் வழிவந்தோர்களே என்று இராஷ்டிரகூடர் தங்களுடைய பிற்கால தஸ்தாவேஜுகளில் கூறிக்கொள்கின்றுர்கள். அறிஞர் சிலர், இவர்கள் தெலுங்கு நாட்டு ரெட்டிகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறுகின்றனர். மகாராஷ்டிரத்திற்குத் தங்கள் பெயரைச் சூட்டிய க்ஷத்திர வமிசத்தின் ஒரு கிளையினர்கள் இவர்கள் என்று வேறு சிலர் கருதுகின்றனர். அசோகர் காலத்திலேயே இவர்கள் மன்னர்களாய் விளங்கி வந்தார்கள். மற்றுமொரு கொள்கையினர். இவர்கள் இராஷ்டிரம் அல்லது மாகாணப் பொறுப்பேற்றிருந்த தலைவர்களின் வாரிசுகள் என்று கூறுகின்றனர். கீழைத் தக்காணச் சாளுக்கியர்களின் பல குறிப்புகளில் இராஷ்டிரகூடர்கள் குடும்பிகள் (Kutumbins) அல்லது ஆந்திர நாட்டு விவசாயிகள் என்று பல இடங்களில் குறிக்கப்படுகின்றுர்கள். இவர்கள் கன்னட தேசத்தைச் சேர்ந்தவர்கள் என இணைத்துக் கூறப்படுகின்றுர்கள். இவர்களுடைய பதிவுகளே இவர்களை லட்டாலூர் (Lattalur) பரம்பரைத் தலைவர்கள் என்று கூறுகின்றன. லட்டாலூர் என்பது நிஜாம் இராச்சியத்திலுள்ள லாட்டூர் (Latur) என்பதுடன் ஒருசேரக் கருதப்படுகிறது. இராஷ்டிரகூடர்கள் திராவிட நாட்டுப் பயிர்த்தொழிலாளர் என்றும், இவர்கள் சாளுக்கிய மன்னர்களிடமிருந்து மாகாணக் கவர்னர் பதவியைப் பரம்பரை உரிமையாகப் பெற்றுப் பின்னர் ஒரு சாம்ராச்சியத்தை நிறுவினுர்கள் என்றும் கூறும் செய்தி நம்பத்தகாததென்று கூற இயலாது. அஹமது நகர முஸ்லீம் சுல்தான்களிடம் ஊழியம் செய்துவந்த மகாராஷ்டிர தேஷ்முக்குகள், பிற்காலத்தில் இவ்வாறே ஒரு சாம்ராச்சியத்தை அமைத்தார்கள்.

இராஷ்டிரகூடர்கள் ஸ்தாபித்த சாம்ராச்சியம் தன் உச்ச நிலையில் தெற்கில் கூர்ச்சரம் வடக்கில் மாளவம் பாகல்கண்டிலிருந்து தெற்கில் தஞ்சாவூர் வரையிலும் பரந்திருந்தது. இவர்களின் முன் ஆட்சியாளர்களான சாளுக்கியர்கள், கன்னேசிச் சக்கரவர்த்தி ஒருவரின் படையெடுப்பைத் தடுத்து மட்டும் நிறுத்தினுர்கள். ஆனுல், இவர்களே, கங்கை ஆற்றிடை நிலப்

பகுதியிலும் உள் நுழைந்து கன்னோசி நாட்டு முதலாம் போஜன் பேரனை மஹிபாலப் பிரதிஹாரனது ஆட்சிப் பீடத்தையே தாக்கினார்கள் என்பது கூறப்படுகிறது. ஆனால், கிழக்குத் தக்காணத்தில் கோதாவிரி, கிருஷ்ணா நதிகளின் முகத்துவாரப் பகுதிப் பிராந்தியங்கள் முழுவதும் இவர்களது ஆதிக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. பின்னர்க் கூறப்பட்ட பகுதி, சாளுக்கிய மரபினரின் சிறிய கிளை வழியினர்களால் தொடர்ந்து ஆளப் பட்டு வந்தது. அராபிய நூலார் இராஷ்டிரகூடர்களை அவர்கள் காலத்தினர்களில் முதன்மையானவர்கள் என்றும், பால்ஹரன் (Vallabharaja) என்ற மாங்கீர் (Mankir) நாட்டுப் பெரிய மன்னனாகிய மானிய கேடம் அல்லது மால்கெட் (Malkhed) நாட்டு இராஷ்டிரகூட மன்னனை உலகப் பெருஞ்சக்கரவர்த்திகள் நால்வருள் ஒருவன் என்றும் உயர்த்திக்கூறியுள்ளனர்; சீனச் சக்கரவர்த்தி, பாக்தாத் காலிபு, கான்ஸ்டாண்டிநோப்பிள் பெருமன்னர் இவர்களுக்கு இணையாக இம் மன்னனை வைத்து எண்ணுகின்றனர். இராஷ்டிரகூடர்கள் கல்வி ஆதரவாளர்கள் முதலாம் அமோகவர்ஷன் என்னும் மன்னன் ஒருவன், புகழ் மிக்க நூலாசிரியன். பெரிய கட்டடங்களையும் இவர்கள் கட்டியுள்ளார்கள். இவர்களுள் இரண்டாம் மன்னனும் தந்திதுர்க்கனுக்கு அம்மானுமான முதலாம் கிருஷ்ணன், எலலோராவிலுள்ள புகழ் பெற்ற 'கைலாச'க் கோயிலைச் சமைத்தான். முதலாம் கிருஷ்ணனுக்குப் பின் ஆட்சி செய்த இராஷ்டிரகூட மன்னர்களது கால சரித்திரத்தின் சுவை நிரம்பிய பகுதி, அவர்கள் கன்னோசிப் பிரதிஹார மன்னர்களுடன் நடத்திய போர்களை ஒட்டியதாய் உள்ளது. வாதாபி சாளுக்கியர்கள் காஞ்சிப் பல்லவர்களுடன் நடத்திய போர்களால் அமைந்த சரித்திரச் சுவைக்கு ஒப்பாக இதைக் கூறலாம். முதலாம் கிருஷ்ணனின் இளைய மகன் துருவன், வத்ஸராஜப் பிரதிஹாரனைத் தோற்கடித்தும், தர்மபாலன் என்று கருதப்படும் கௌட மன்னன் ஒருவனைக் கங்கை ஆற்றிடைப் பகுதியினின்றும் வெளியேற்றியும் உள்ளான். துருவனுக்கு மகனும் அவன் பின்னர் அரசு எய்தியவனுமான மூன்றாம் கோவிந்தன் ஆட்சியில் இராஷ்டிரகூடர்கள் வெல்வதற்கரியவர்களானார்கள். அவர்கள் காஞ்சிப் பல்லவ மன்னரிடமிருந்து திறை பெற்றார்கள்; தங்கள் அரச குமாரன் ஒருவனைத் தென்கூர்ச்சரத்து அரியணையில் அமர்த்தினார்கள். வத்ஸராஜன் மகன் இரண்டாம் நாகபட்டன் இவர்களிடம் தோல்வியுற்றான். வங்க நாட்டுத் தர்மபாலனும் அவன் கீழ் அடங்கிய சிற்றரசனான சக்கராயுதனும் இவர்களின் அடிபணிந்தனரென்பது கூறப்படுகின்றது. அடுத்த மன்னனாகிய முதலாம் அமோகவர்ஷன், நீண்டகால ஆட்சி (கி. பி. 815-877) பெற்றான். இவன் தன் தலைநகரை நிஜாம் இராச்சியத்திலுள்ள மானிய கேடம் அல்லது மால்கெட்டுக்கு மாற்றினான். இவன் கோதாவிரி கிருஷ்ணா முகத்துவாரத்திலுள்ள வெங்கி நாட்டுச் சாளுக்கியர்

களுடன் போரில் ஈடுபட்டிருந்தமையால், தன் தகப்பனுடைய வடநாட்டு வெற்றிச் செயல்களைத் தொடர்ந்து முடிக்க இயலவில்லை. ஆனால், இவன் காலத்தில் இராஷ்டிரகூடர்கள் கன்னோசி அரசன் முதலாம் போஜனின் தென்னாட்டு விஸ்தரிப்பைத் தடை செய்வதில் வெற்றி பெற்றார்கள். இவன் தெற்கில் மிகுந்த புகழ் பெற்றிருந்த மன்னர்களுடன் திருமண உறவு கொண்டு இராஷ்டிரகூட மன்னர்களின் நலனைப் பாதுகாத்தான். முதலாம் அமோகவர்ஷனின் கொள்ளுப்பேரனான மூன்றும் இந்திரன், புகழ் மிக்க தன் முன்னோர்களான துருவன், மூன்றும் கோவிந்தன் என்பவர்களின் செயலைப் பின்பற்றி கன்னோசி பிரதிஹார மன்னன் மகிபாலனை முறியடித்து அவர்களது தலைநகரைத் தற்காலிகமாகக்கொண்டு அவர்கள் ஆட்சியை முடிவுறச் செய்தான். இவன் மருமகனான மூன்றும் கிருஷ்ணன், இவ் வழி மனனர்களுள் கடைசிச் சிறந்த மன்னனாவான். பாகல்கண்டு ஜூராவிலிருந்து காவிரித் தீரத் தஞ்சாவூர் வரையில் இவன் அரசு விரிந்திருந்தது. கி.பி. 973இல் வாதாபிச் சாளுக்கியர்களின் வழி வந்தோன் என்று கூறிக் கொண்டவனும் மூன்றும் கிருஷ்ணனின்கீழ்ச் சிற்றரசு செலுத்தியவனுமான இரண்டாம் தைலன் (Taila) என்பவனால் இராஷ்டிரகூட வமிசம் தோற்கடிக்கப்பட்டு வீழ்ச்சியுற்றது.

## பிற்காலச் சாளுக்கியர்கள்

நிஜாம் ராச்சியத்திலுள்ள கல்யாணி அல்லது கல்யாண வமிசச் சாளுக்கியமரபை ஏற்படுத்தியவன் இரண்டாம் தைலன். இவன் வழியினர் ஆதித்தியன் வழிவந்த சோழமன்னர்களுடன் அடிக்கடி போரிட்டனர். இச்சோழ மன்னர்கள் பல்லவ மன்னன் அபராஜிதனை முறியடித்தவர்கள். இராஜராஜன், அவன் மகன் இராஜேந்திர சோழன் ஆட்சியின்கீழ்ச் சோழர் வலிமை மிக விரைவில் வளர்ந்தது. சோழர்களும் சாளுக்கியர்களும்தெற்கில் கடும்போர்களில் ஈடுபட்டிருந்தபோது வடவிந்திய அரச வமிசங்கள் கஜினி அல்லது கஸ்னவின் முகம்மது சுல்தானாகிய புகழ்மிக்க ஹம்மிராவின் (Hammira) படையெடுப்புக்கு ஆற்றாது வீழ்ந்துபட்டன. ஐந்து நதித்தீரத்திலும், கங்கை பிரமபுத்திரா இரட்டை நதித்தீரத்திலும் இஸ்லாமியர்களின் கொடி பறக்க விடப்பட்டது. கஜினிப் படையெடுப்பாளரின் படைகள் கத்திய வாரின் உட்பகுதியுள் நுழைந்து, சோமநாதர் கோயிலைக் கிட்டின. இந்திய வரலாற்றின் புதியதொரு சகாத்தம் ஆரம்பமாகின்றது.

# 13. பழைய இந்து சாம்ராச்சியங்களின் மறைவு

## அராபியர்களின் வருகை

ஆசியாவின் மேற்கில் அரேபியா என்னும் ஒரு பெரிய நாடு இருக்கிறது. பாறைகளும் பாலைவனங்களும் நிறைந்த அந்த நாட்டில் இங்குமங்குமாகப் பாலைவனச் சோலைகளும் வளமிக்க பள்ளத்தாக்குகளும் காணப்படுகின்றன. அவ்விடங்களில் மட்டும் உறுதி உடைய மக்களுள் சிறுபான்மையினர் வாழ்கின்றனர். மேலைக்கடலுக்கு மிகவும் அருகில் இந் நாட்டில் புனித நகரமான மெக்கா உள்ளது. இந் நகரிலேதான் கி. பி. 570இல் 'கடவுள் ஒருவரே' என்ற மதத்தைப் போதித்த பெருமதத்தாபகர் பிறந்தார். அவர் மக்களிடம் எல்லையற்ற ஊக்கத்தை வளர்த்து, அவர்களை வீறு கொண்டு எழச்செய்தார். அந்தத் தீர்க்கதரிசியின் பின்வந்தோர் காலிப்புகள் என வழங்கப்பட்டார்கள். அவர்கள் கி. பி. 632 முதல் இஸ்லாமியப் பெரியார்களுக்குத் தலைமை தாங்கி, இஸ்லாமியப் படைகளை எல்லாத் திக்குகளிலும் நடத்திச் சென்று, ஈரான் முதல் ஸ்பெயின் வரையிலுள்ள நாடுகளில் இஸ்லாமியக் கொடியை உயர்த்தினர்கள். முதலிலிருந்தே அராபியர்களுக்கு இந்தியாவின் வளமான மேற்குத்துறைகளின் மீதும் வடமேற்கு எல்லைப்புற நாட்டின்மீதும் ஒரு கண் இருந்தது.

இரண்டாம் புலகேசியின் காலத்திலேயே பம்பாய்க்கு அருகிலுள்ள தானவுக்குக் கி. பி. 637இல் ஒரு படை அனுப்பப்பட்டது. தொடர்ந்து தேபால் வளைகுடாவிலுள்ள (சிந்து) புரோச்சுக்கு ஒரு படை அனுப்பப்பட்டது. கி. பி. ஏழாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தெற்கு ஆப்கானிஸ்தானத்திலுள்ள ஸரான்ஜிப்பகுதி அராபியர் வசமாயிற்று. அடுத்தது பலுச்சிஸ்தானத்திலுள்ள மக்ரான். பின்னர், கனிஷ்கன் வழிவந்தவனுகக் கருதப்படும் காபூல் ஷாவின்மீது அராபியர் தாக்குதல் நடத்தினர். அதனுடன் அவர்கள் ஹெல் மண்டு நதியின் மேற்குப் பள்ளத்தாக்கிலுள்ள ஸாபூலின் ராட்பில்லையும் அதன் அண்டை மாவட்டங்களையும் தாக்கினுர்கள்; பின்னர்க் கூறப்பட்ட பகுதி வீரமாக

எதிர்த்துப் பின் (கி.பி. 870) பணிந்தது. காபூல் நாட்டின் துருக்கி ஷாகிய மன்னர்கள், ஒன்பதாம் நூற்றுண்டு வரையில் தீராத ஆபத்தில் இருந்துவந்து, முடிவில் கள்ளாரால் அப்புறப்படுத்தப் பட்டார்கள். கள்ளார், உதபாண்டபுர வமிசத்தை ஏற்படுத்திய இந்து ஷாஹிய வமிசத்து லல்லியா என்று கருதப்படுகிருன். (உதபாண்டபுரம் ஸிந்து பிரதேச வைகண்ட், 'ஒகிண்ட்' அல்லது 'உண்ட்' என்பது.)

இதற்கிடையில் அராபியர்கள் பலுசிஸ்தானத்து வெற்றியைத் தொடர்ந்து சிந்துவைக் கைப்பற்றினுர்கள். பிரபாகர வர்த்தனனும் அவன் மகனுன புகழ்மிக்க ஹர்ஷனும் வெற்றி கண்ட பகுதிகளில்ஒன்ருக இதைப் பாணரின் வரலாற்றுக் குறிப்பில் காணலாம். யுவான் சுவாங் காலத்தில் இதன் ஆட்சிபீடத்தில் சூத்திரவமிசத்தினர் வீற்றிருந்தனர். பின்னர், 'சாச்' (Chach) என்ற அந்தண குடும்பத்தாரின் கைக்கு இது மாறியது. சாச்சின் மகன் தாஹர் (Dahar) அல்லது தாஹிர் (Dahir) என்பான் அரியணையில் வீற்றிருந்தபோது தேபால் கடற்கொள்ளையரின் செயலால் சினமுற்ற ஈராக்குக் கவர்னர் ஆல்ஹாஜாஜ் என்பவன் சிந்துவின்மீது பல படையெடுப்புகளை நிகழ்த்தினுன். முதற்கண் இப்படையெடுப்புகளைத் தாஹிர தடுத்து நிறுத்தி விட்டான். அதனுல், இந்து மன்னனைத் தண்டிக்கும் பணியைத் தன் மருமகனும் மாப்பிள்ளையுமான முகமதுபின் காசிம் என்பவனிடம் ஒப்படைத்தான். இந்த இளைய சேனுதிபதி தேபாலை முற்றுகையிட்டு, நேரன் (Nerun) முதலிய சில நகரங்களையும், நன்கு பாதுகாக்கப்பட்ட சில பகுதிகளையும் கைப்பற்றி, சிந்து நதியின் மேற்குக்கரை வரை படையெடுத்தான். புத்த குருமார் சிலர், விரோதம் கொண்ட தலைவர் சிலர் ஆகிய இவர்களுடைய துரோகச் செயலால் இவனது வேலை எளிமையாயிற்று. இந்தத் துரோகிகளின் துணைகொண்டு முகமது தாஹிருக்கும் தன்னுடைய படையினர்க்கும் இடையிலுள்ள பெரிய நீர்ப்பரப்பைத் தாண்டி, இந்து மன்னருடன் ராவர் (Raor) என்னுமிடத்தில் (கி.பி. 712) போர் தொடுத்தான். தாஹிர் மிக்க உறுதியுடன் எதிர்த்தான். ஆயினும், அவன் தோற்கடிக்கப் பட்டுக் கொல்லப்பட்டான். அவனுடைய விதவை இராணியின் ஆவேசமான எதிர்ப்பிற்குப்பின் ராவர்க்கோட்டை வீழ்ச்சியுற்றது. இதன் பின்னர் இந்தப் படையெடுப்பாளர் பஹ்மனபாது, ஆலர் (Alor) என்னும் நகரங்களுக்கு முன்னேறினதும் அவை கீழ்ப்படிந்தன. அடுத்து மூல்தானின் முறையாயிற்று. இவ்வாறு கீழ்ச்சிந்து சமவெளி முழுவதையும் அராபியர் தம் வசமாக்கினர். ஆயினும், அவர்கள் அதனுடன் அமையவில்லை. முகமது

பின் காஸிம் காலத்திலிருந்தே அண்டைப் பிராந்தியங்களின் மீது சிறு சிறு படையெடுப்புகள் நடந்து வந்தன. பின் வந்த கவர்னர் ஜுனைடு அல்லது ஜுனுய்டு என்பவன், மேலும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டான். (Junaid of Judayd)மர்மாட்-அல்-மண்டல் (மார்வார்) (Marmadal, Mandal மண்டர்? வீரம்காம்? அருகில்) தனுஜ், பார்வாஸ் (புரோச்சு) உஜ்ஜயின், மாலிபா (Malibah—மால்வா, பஹாரிமாட்) அல் பயிலமான் (Al Bailaman-வல்லமண்டலா?) அல் ஜர்ஸ்) (al jurz, Gunash) ஆகியவற்றின் மீது பலத்த படையெடுப்புகள் நடத்தப்பட்டன. இந்திய சாசனங்களின்படி இப்படையெடுப்பாளர்களால் கைவசப்படுத்தப்பட்ட பகுதிகளில் சிந்து, கட்ச், சௌராஷ்டிரம் அல்லது கத்தியவார், சவோட்டகம் (Chavotak—மேற்கு ராஜபுதனம் அல்லது கூர்ச்சரத்தின் சிற்றரசு), தெற்கு ராஜபுதனம் அல்லது மாளவத்திலிருந்த ஒரு மௌரியச் சிற்றரசு, பீன்மால் அல்லது புரோச்சுச் சுற்றுப்புறத்திலுள்ள கூர்ச்சரப்பகுதி ஆகிய இவைகள் அடங்கும் எனக் காணப்படுகிறது. அராபியர்களின் முன்னேற்றம் தெற்கில் சாளுக்கியர்களாலும், கிழக்கில் பிரதிஹாரர்களாலும், வடக்கில் கார்க்கோடர்களாலும் தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால், கி.பி. 962இல் அல்படிஜின் (Alptigin) என்பவனால்கஜினி இராச்சியம் அமைக்கப்பட்டதும் புதிய ஒரு திருப்பம் ஏற்பட்டது.

## உதபாண்ட ஷாஹிய வமிசத்தினரின் வீழ்ச்சி

அல்படிஜின் முதலில் மத்திய ஆசியாவின் 'சமனிட்' (Samanid) மன்னர்களின் அடிமையாய் இருந்து வந்தான். ஆனால், ஊக்கம் நிறைந்த அத்தலைவன் காபூல் ராச்சியத்தின் ஒரு பகுதியை வென்று, கஜினியில் தன் சுயஆட்சியை ஏற்படுத்தினான். அவன் கி. பி. 963இல் இறந்தான். கி. பி. 977 இல் அவனது ஆட்சி அவனுக்கு மாப்பிள்ளையான சபக்டிஜின் கைக்கு மாறியது. அச்சமயம் லாம்கான் அல்லது லாஹ்மன் முதல் காங்கரா வரையிலுள்ள பகுதியினர், வைகண்டைச் (Waihand) சேர்ந்த(உதபாண்டபுரம்) இந்து ஷாஹியவமிசத்து ஜெயபாலன் (Jaipal) ஆட்சியை ஒப்புக்கொண்டிருந்தனர். 'புனிதப்போர்' நடத்தும் பணியில் கஜினிசுல்தான் தன் அரசின் பகுதிகளை ஆக்கிரமித்து வருகிறான் என்பதை இந்து மன்னன் பிரயாணிகளின் செய்தியால் அறிந்தான். இந்த ஆக்கிரமிப்புகளுக்கு முடிவு காண்பதற்காக அம் மன்னன் கஜினி வரையில் முன்னேறிக் கஜினிக்கும் லாம்கானுக்கும் இடையிலுள்ள 'கூஸக்' (Ghuzak) என்னுமிடத்தில் தன் பகைவனைச் சந்தித்தான். பனிப்புயல் காரணமாக ஜெயபாலன் சிறுமைப்படும்படி ஒரு சமாதானம் செய்துகொண்டான். இதை அவன் விரைவில் மீறினபடியால்,

சுல்தானின் கோபத்திற்கு ஆளானன். சுல்தான் அவனது நாட்டில் புகுந்து, வாளாலும், நெருப்பாலும் பெருஞ்சேதம் விளைத்து, தன் பகைவனின் ஆட்சிக்குட்பட்ட லாம்கான் சுற்றுப்புறப் பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொண்டான். கி. பி. 977 இல் சபக்டிஜின் இறந்ததும் அடுத்த ஆண்டில் அவன் மகனை புகழ்மிக்க கஜினியின் கைக்கு ஆட்சி மாறியது. கி.பி. 100 இல் இப் புதிய சுல்தான் பெஷாவர் நகருக்கருகில் ஜெயபாலனை நன்கு முரியடித்தான். இந்த அவமானத்தை ஆற்ருத ஜெயபாலன், தீக்குளித்து உயிர்விட்டான். அவன் மகன் ஆனந்தபாலன் (கி.பி. 1002 அல்லது 1003இல் பட்டமெய்தினன். கி.பி. 1006 இல் மூல்தானை முகமது கைப்பற்றினன். எனினும் அந்த நகரத்தைத் தீர்மானமாகக் கீழ்ப்படியும்படி செய்வது கி. பி. 1010 வரையில் தள்ளிவைக்கப்பட்டது. கி. பி. 1009 இல் பிரம்மானந்த பாலன் தலைமை தாங்கிநடத்திய ஆனந்தபாலன் படையை வைகண்டு போரில் முகமது முரியடித்துப் பின்வாங்கிய படைகளை பீமநகர் வரையில் துரத்திச் சென்ருன்.

ஆனந்தபாலன் உப்பு மலைப்பிராந்தியத்தில் (Nandana) இருந்துகொண்டு எதிர்ப்பைத் தொடர்ந்து நடத்தி வந்தான். அவனுக்குப் பின்னர் இந்த எதிர்ப்பைத் திரிலோசனபாலன் நடத்தினன். அவனுக்கு உறுதுணையாகக் காஷ்மீர மன்னன் சங்கிராமராஜா உதவினன். முடிவில் அவன் காலிஞ்சர் மன்னர் சாந்தலருடனும் மத்திய இந்திய மன்னர்களுடனும் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளும்படி வற்புறுத்தப்பட்டான். ஆனல், அவன் மறுபடியும் ராம் கங்கா என்றும் சிலரால் கருதப்படும் ரூஹட் (Ruhid) நதிக்கரையில் தோற்கடிக்கப்பட்டான். கி.பி. 1021—1022 இல் அவன் கொலை செய்யப்பட்டான். கி. பி. 1026 இல் அவனுக்குப் பின் பட்டம் பெற்ற அவன் மகன் பீமன் கொலை செய்யப்பட்டதும், அந்த வமிசம் முடிவுற்றது. இந்தப் படையெடுப்பாளர்களை முழு மூச்சுடன் எதிர்த்தும் தங்கள் இரத்தத்தை நீர்போலப் பெருக்கியும் புகழ்பெற்ற இந்த வமிசத்து அரசர்களின் தீரத்தை அல்பருனியும் கல்ஹணரும் ஒருசேரப் புகழ்ந்துள்ளனர்.

பஞ்சாபில் பெற்ற வெற்றி மாலைகளுடன் முகமது அமையவில்லை. கி. பி. 1014 இல் அவன் தானேசுவரத்தை வென்ருன்; தொடர்ந்த பல ஆண்டுகளாகக் காஷ்மீரப் பள்ளத்தாக்கைக் கைப்பற்ற வீண் முயற்சி செய்தான். மதுராவில் உள்ளகோயிலையும் அவன் எரித்தான். கி. பி. 1018இல் கன்னேசியை முற்றுகையிட்டுச் சூறையாடிப் புகழ்பெற்ற பிரதிஹார வமிசத்தினரை

வேரற்றுப் போகும்படி செய்தான். 1022—1023 இல் குவாலிய ரும் காலிஞ்சரும் பணிந்ததை அவன் ஏற்றுக்கொண்டான். கி. பி. 1025 இல் கத்தியவாரிலுள்ள சோமநாதத்தின் மீது அவ னது புகழ்மிக்க படையெடுப்பை மேற்கொண்டான். 1026 இல் அழியாப் புகழ் பெற்ற சோமநாதபுர ஆலய-வீழ்ச்சி பஞ்சாபில் ஹிந்து ஷாஹிய வமிசத்து வீழ்ச்சியோடு உடன் நிகழ்ந்தது. நான்காண்டுகளுக்குப் பின்னர்ச் சுல்தான் மரணமடைந்தான்.

முகமதுவின் படையெடுப்புகள் யாவும் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் நடைபெற்றன. கடினமான அவன் படை யெடுப்புகளின் நிரந்தரமான விளைவுகள் பஞ்சாபு, சில வட மேற்கு எல்லைப்புறப் பகுதிகள், இந்து ஷாஹியர் இராச்சியத் தைச் சேர்த்துக்கொண்டதும் இந்தப் படையினரிடமிருந்த அஞ்சாமையைக் குலைத்ததுமாகும். பிரதிஹார மன்னர்களின் பரம்பரைச் சொத்தைத் தங்களிடையே பகிர்ந்துகொள்ள முயன்ற இராஜபுத்திர மன்னர்களின் மனத்தில் தீவிரமான எண்ணத்தையும் முகமதுவின் படையெடுப்புகள் விளைவித் திருக்க வேண்டும். கி. பி. 1030-க்கும் 1192-க்கும் இடைப்பட்ட காலத்தில் அதாவது மகமது மரணமடைந்ததிலிருந்து அரசியல் வானில் மகமது கோரி தோன்றும் வரை இந்தியாவின் உள் நாட்டுப் பகுதிகளை ஆண்டுவந்த இந்து மன்னர்கள், அந்நியர் படையெடுப்புகளின் தொல்லை இன்றி இனிது வாழ்ந்தார்கள். கஜினிச் சுல்தான்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிற்சில சமயங்களில் சில பகுதிகளின் மீது படையெடுத்துத் துன்பம் விளைத்தார்கள். ஒரு சமயம் அவர்களுள் பெருந்தலைவன் ஒருவன் காசி வரையில் படையெடுத்து அந்தப் புனித நகரை அழித் தான். இருப்பினும் அவர்களால் பெரிதாக ஒன்றும் சாதிக்க இயலவில்லை. அவர்களது மூர்க்கமான படையெடுப்புகளால் விளைந்த பீதி மட்டும் நிலையான விளைவுகளை ஏற்படுத்தியது.

## விக்கிரமாதித்த மரபை மீண்டும் தோற்றுவித்தல்

பதினொன்றும் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் பன்னிரண் டாம் நூற்றுண்டின் பெரும்பகுதியிலும் நிலவிய நிலைமை, ஆறும் நூற்றுண்டில் நிலவிய நிலைமையை ஒவ்வாமலிருக்க வில்லை. புத்தகுப்தனுக்குப் பின் குப்த சாம்ராச்சியம் வீழ்ந்தது போல, பழமையான பிரதிஹாரர்கள், பாலர்களின் வமிசமும் சிதறுண்டு வீழ்ச்சியுற்றன. இந்துஸ்தானத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு, குப்த வமிசத்துச் சிற்றரசர்களின் பணியாயிற்று. இவர்கள் தனித்தனி சுய ஆட்சியை அங்கு ஏற்படுத்தியிருந் தார்கள். ஹூணர்களின் படையெடுப்பை விரட்டியடித்துத் தன் குடும்ப எதிரிகளைத் துரத்திய அவன் பேரனுடைய தீர உதாரணத்தையும் பின்பற்றிப் புதிதாக ஆட்சி அமைத்த மன்னர்களிடையே ஊக்கம் பிறந்திருக்கவேண்டும். சேதி

நாட்டுக் காங்கேய தேவன், மாளவ நாட்டுச் சிந்துராஜா, கல்யாண திரிபுவன மல்லன் ஆகிய இவர்கள் தங்களைப் புதிய விக்கிரமாதித்தர் அல்லது சாகசாங்கர் என்று கூறிக்கொண்டார்கள். இப் புதிய எழுச்சியின் வேகத்தைத் தெரிந்துகொள்ளும் வகையிலேதான் கோழை நெஞ்சங்கொண்ட பிரதிஹார மன்னன் இராச்சிய பல்லவன் கச்சபகாத (Kschchapahata) தலைவனும் 'வித்தியாதர தேவனுக்கு ஊழியம் செய்ய ஊக்கமுடையவனுல்' கொலை செய்யப்பட்ட செய்கையும் திருப்புவன மல்லன் ஆறும் விக்கிரமாதித்தன் சக சகாத்தத்தை ஒழித்து ஒரு புதிய தேசீய சகாத்த அடிப்படையில் கணக்கிட முயன்றதும் நன்கு வெளிப்படுத்துகின்றன. ஆனல். பிரதிஹார மன்னர்களின் பிரதிநிதித்துவங்கொண்ட இராச்சிய-பாலன் விவகாரமும் தன் சகோதரனுக்கு எதிராகப் போரிட்ட திரிபுவன மல்லன் விவகாரமும் இந்து மன்னர்களின் பலவீனத்தை வெளிப்படுத்துகின்றன. அவர்கள் தங்களுக்குள்ளேயே பகை பூண்டு, போர்களை விளைத்து வலிமையற்று, நாட்டின நெருக்கடிச காலங்களில் ஒருமனப்பட்டுச் செயலாற்ற முடியாதவர்களானுர்கள். மேற்கு, மத்திய ஆசியப் பகுதிகளில் அக் காலத்தில் ஊக்கமூட்டிச் செயலாற்றும்படி தூண்டிய புதிய வேகத்தின் விளைவுகள் இந்துக்களுக்கு இல்லாமல்போயிற்று.

கூர்ச்சரத்தின் சாளுக்கிய அல்லது சோளங்கி மன்னன் முதலாம் பீமன் புனித சோமநாதர் கோயிலுக்குச் செல்லும் வழியைத் தடுத்து நிறுத்த முடியாமல்போயிற்று. படையெடுப்பாளர்கள் திரும்பிச் சென்றதும் துருக்கியர்களால் அழிக்கப்பட்ட கோயிலைப் புதுப்பிக்க முயன்ருன்; முன்னர் மரத்திலுைம் செங்கற்களாலும் அமைத்த கோயிலுக்குப் பதிலாகக் கற்கோவிலொன்று கட்ட ஆரம்பித்தான். அவனுடைய படைத்தலைவர் விமலர், விமலவஸாகி என்ற கீர்த்தி வாய்ந்த ஆபுமலைச் சமணக் கோயிலைக் கட்டினுன். பீமனுக்குப் பின்வந்தோர் குறிப்பாகச் சித்தார்த்த ராஜபாலன் என்பவர்கள் - காலத்தில் இன்னும் பல கோயில்கள் கட்டப்பட்டன. படையெடுப்பாளர்களைத் தடுத்து நிறுத்துவதில் முதலாம் பீமனைவிட மிக்க திறமை பெற்றவர்களாய் விளங்கியவர்கள் இரண்டாம் மூலராஜனும், சோளங்கியும், விரதவல வாகேலனும் (Viradavala Vaghela) ஆவார்கள். விரதவலனின் உத்தியோகஸ்தர்களான வஸ்துபாலனும் தேஜபாலனும் சதுரஞ்சகிர்ணரிலும் ஆபுவிலும் கோவில்களைக் கட்டித் தங்கள் பெயர் நிலைத்திருக்கும்படி செய்துள்ளார்கள். நாள் செல்லச்செல்லத் துருக்கிய ஆக்கிரமிப்பால் ஏற்பட்ட பகைமை உணர்ச்சி ஒரு சிறிதளவு மங்கியது. கூர்ச்சர மன்னன் அருச்சுனன் ஆர்மஸ் நாட்டு முஸ்லீம் கப்பல் சொந்தக்காரன் ஒருவன் கட்டிய மசூதிக்கு மானியம் அளித்ததுடன் சில பண்டிகைகள் நடைபெறப் பண உதவியும் அளித்

தான். சோமநாதபுரத்து முஸ்லீம் சாதியினர் பராமரிப்பில் உபரியாகும் தொகை புனித மெக்கா, மெதினு நகரங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று கட்டளையிட்டிருந்தான். கி. பி. 1297இல் கூர்ச்சரம் டில்லிச் சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் வசமாயிற்று.

சபக்டிஜின் காலத்தில் மாளவ நாட்டுப் பரமாரர்களின் ஆட்சி புகழ்பெற்ற முஞ்சன் வசமிருந்தது. இவன் கவிஞர் பலரை ஆதரித்தான். தக்காணத்துச் சாளுக்கிய மன்னன் இரண்டாம் தைலன் இவனது அதிகாரத்தைச் சிதைத்தான். இவனுக்குப்பின் பட்டமெய்திய இவன் சகோதரன் சிந்துராஜன், தன்னை நவசாகசாங்கன் அதாவது புதிய சாகசாங்கன் அல்லது விக்கிரமாதித்தியன் என்று வழங்கிக்கொண்டான். இவனுக்குப் பின் ஆண்டவனும் இவன் மகனுமான போஜன், துருஷ்கர் அல்லது துருக்கியர்களை வென்றதாகக் கூறிக்கொள்கிறன். கூர்ச்சர ராஜதந்திரிகள் பல கோயில்கள் கட்டியதன்மூலம் தங்கள் பெயர்களை நிலைத்திருக்கும்படி செய்தது போலவே, இவனும் கல்விக்கு ஆதரவு அளித்துத் தன் பெயரை நிலை பெறும்படி செய்தான். இவன் நாவன்மை படைத்த கலைஞன். பல விஷயங்களைக் குறித்தும் இவன் நூல்கள் எழுதியுள்ளான். அவற்றில் செய்யுள்கள், கவிகள், அரசியல், தத்துவம், வான சாத்திரம், சிற்பக்கலை இவை அடங்கும். சம்ஸ்கிருதக் கல்வி அபிவிருத்திக்காக ஒரு கல்லூரியை ஏற்படுத்தினன். கோயில்கள் கட்டுதல், சம்ஸ்கிருத மொழி வளர்த்தல் ஆகியவை இவனுடைய சாதாரணத் திட்டங்களின் ஒரு பகுதியாகத் தோன்றுகின்றது. இந்தச் செயலைப் பெரிக்கிளிஸ் முயற்சியுடன் ஒப்பிடலாம். பாரசீகர்களின் படையெடுப்புகளுக்குப் பின் அழிந்துபோன கிரேக்கக் கோயில்களையும் கிரேக்க மொழிப் பண்பையும் சீர்தூக்கியமைக்கப் பெரிக்கிளிஸ் முயன்றதைப் போலவே இவனும் சம்ஸ்கிருத மொழியையும் அழிந்துபோன கோயில்களையும் சீர்படுத்த முயற்சி செய்தான். போஜனைப் பின்பற்றி அவனுக்குப் பின்வந்த இந்து அரசியலார் செயலாற்றினர். சிறப்பாக விஜயநகர மன்னர்கள் போஜனின் உதாரணத்தைப் பின்பற்றினுர்கள்.

ஜெஜாகபுக்தி அல்லது பண்டல்கண்டு சந்தலர்கள் தங்கன், கண்டன், வித்தியாதரன் ஆகியவர்களின் தலைமையில் உதபாண்ட ஷாஹிகளுக்கு உதவ முயன்றுர்கள். ஆனுல் அவர்களது முயற்சி பயனற்றுப்போயிற்று. இந்தியப் படையினரின் மதிப்பைத் திரும்பப் பெறும்பொருட்டு வித்தியாதரன் மாளவ

நாட்டுப் போஜன் காலசூரி அரசன் இவர்களுடன் சேர்ந்து பல சீரிய திட்டங்களை வகுத்திருந்தான். ஆனால், அவன் வமிசத்தாரின் வலிமை விரைவிலேயே குன்றியது. பதினொன்றும் நூற்றாண்டு முடிவு ஆண்டுகளில் கீர்த்திவர்மன் மற்றும் சந்தலன் காலத்தில் ஒரு புதிய எழுச்சி இருந்தது. ஆனால், அவனுக்கும் பின்வந்த மன்னர்கள் அவனைப்போன்ற ஆற்றல் பெற்றிருக்க வில்லை. அவர்களுள் ஒருவனான பரமர்த்திதேவன் டில்லி ஆஜ்மீரை ஆண்ட சௌக வமிசத்து மூன்றாம் பிருதிவிராஜனிடம் தோல்வியுற்றான். கி.பி. 1202இல் குத்புதீன் ஐபெக்கு என்பவன் சாந்தலர்களின் வலிமையைச் சிதற அடித்தான். தங்கள் காலத்துக் குஜராத்து மாளவநாட்டு அரச வமிசத்தினரைப் போன்று சந்தல அரசர்களும் புனருத்தாரணம் செய்வதில் ஊக்கம் காட்டி கஜுரகோவில் (Khajuraho) கோவில் கட்டினார்கள். கீர்த்திவர்மன் சபையை அலங்கரித்த கிருஷ்ணமிஸ்ரர் போன்று புலவர்களை ஆதரித்தார்கள்.

காலசூரி மன்னர்களான காங்கேயதேவனும், அவன் மகன் இலக்ஷ்மிகர்ணனும் அரசியல் விஷயத்தில் மிக முக்கியமான பங்கு கொண்டார்கள். முன்னரே கூறியபடி காங்கேயதேவன் விக்கிரமாதித்தன் என்ற பட்டம் வகித்துத் தன் பாதுகாப்பில் புனித நகரங்களான அலகாபாது, காசி ஆகியவற்றையும் வைத்துக் கொண்டான். இலக்ஷ்மிகர்ணன் தென்தோவாபு பகுதிகளைத் தன் ஆட்சியின்கீழ் கொண்டு ஹர்ஷன், முதலாம் போஜன் என்பவர்கள் காலத்துப் புகழைத் திரும்பப்பெற முயன்றான்; திருமண உறவுகள்மூலம் வங்காள மன்னர்களுடன் நட்புரிமை கொண்டு கலிங்கம்வரை தன் படையெடுப்பை நடத்தினான். அவன் மட்டும் நீண்டநாள் வாழ்ந்திருந்தால், வடவிந்தியாவின் சிதைந்த அரசியலைச் சீர்படுத்தித் துருக்கர்களின் முன்னேற்றத்திற்குத் தகுந்த தடை செய்திருப்பான். ஆனால், கூர்ச்சரம், மாளவம், பந்தல் கண்டு தக்காண மன்னர்கள் அவனுடன் பகைமைகொண்டு, ஒன்றுசேர்ந்து அவனை மாய்த்தார்கள். அவனுடைய மகனும் பேரனும் ஆட்சி செலுத்திய காலத்தில் காலசூரிகள் இன்னமும் போதிய வலிமை பெற்றிருந்தார்கள். ஆனால், மத்திய தேசத்து (மேல் கங்கைச் சமவெளி) ஆதிக்கம் மிகுவிரைவிலேயே புகழ்மிக்க காகதவால (Gahadavala) வமிசத்தினர் கைக்கு மாறியது.

காகதவால மரபின் ஸ்தாபகன் சந்திரதேவன். அவன் பதினொன்றும் நூற்றாண்டின் முடிவில் பட்டம் பெற்றான். அவன் பேரன் கோவிந்தசந்திரன், மத்திய தேசத்தின் உண்மையான

மன்னனும் அரை நூற்றுண்டுக் காலம் விளங்கினன். கி.பி. 1104 முதல் 1114வரை பட்டத்து இளவரசனும், பிறகு கி. பி. 1114 முதல் 1154 வரை அரசனும் விளங்கினன்; இக்காலத்து மத்தியப் பிரதேசம, பீஹார் இராச்சியங்களைக்கொண்டதொரு விலாசமான சாம்ராச்சியத்தை அமைத்தான். துருக்கியர் படையெடுப்புகளினின்றும் ஜெதவனம் (வடக்கு அயோத்தி), காசி முதலிய பௌத்த இந்து சமயப் புண்ணிய க்ஷேத்திரங்களையும் வெற்றிகரமாகப் பாதுகாத்தான். டில்லியிலும் ஆஜ்மீரிலும் தலை நகரங்கள் அமைந்த போட்டி அரசியலை மேற்கில் நான்காம் சௌகவமிசத்து விக்கிரக ராஜா என்பவன் தோற்றுவித்தான். டில்லி நகரம் தோமரத் தலைவன் ஒருவனால் பதினொன்றும் நூற்றுண்டின் மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருக்கக்கூடும். இவர்களிடமிருந்துதான் புகழ்பெற்ற இத் தலைநகரைச் சௌகர்கள் பெற்றிருக்கவேண்டும். நான்காம் விக்கிரகராஜனின் மருமகனை மூன்றும் பிருதிவிராஜன் என்பவன் கோவிந்தன் சந்திரனின் பேரனாகிய ஜெயசந்திரனுடன் (ஜெயசந்த்) கை கலந்தான். சௌகர்களுக்கும் காகதவாலர்களுக்கும் இடையே ஏற்பட்ட பகைமை இவ்விரு வமிசத்தினரையும் வலியிழக்கும்படி செய்தது. ஆப்கானிஸ்தானத்திலுள்ள கூர்ப் பிரதேசத்தில் வலிமை பெற்று வந்த புதியதொரு பெரு வெள்ளம் இவர்களை அடித்துக்கொண்டு போயிற்று.

## பிற்காலப்பாலர்கள், சேனர்கள் ஆட்சியில் வங்காளம்

கால சூரிகளாலும் முற்கால காகதவாலர்களாலும் ஒரு நூற்றுண்டுக் காலத்திற்கு மேலாக மத்தியதேசம் வடமேற்கிலிருந்து ஏற்பட்ட பல தொடர்ச்சியான படையெடுப்புகளினின்றும் பாதுகாக்கப்பட்டது. கிழக்கு இந்தியாவின் வமிசங்கள் பல வகையான இன்பதுன்பங்களை அடைந்து வந்தன. பாலர் ஆட்சி, கி. பி. 1026-க்குப் பின்வரை கௌட வமிசத்துப் பால சக்கரவர்த்திகளின் பெயரைத் தொலைவிலுள்ள காசியிலும் பரப்பி, மக்களிடை ஓர் ஆவேசத்தை ஏற்படுத்தியது. பின்னர்ப் பல ஆண்டுகளாகப் பால வமிசத்தினர் சேதிநாட்டுப் பெருவேந்தன் இலக்ஷ்மிகர்ணனுடன் திருமண அடிப்படையில் உறவு கொண்டனர். கௌட சாம்ராச்சியத்திற்கு ஏற்பட்ட பெரியதொரு தீங்குடன் இலக்ஷ்மிகர்ணன் மறைவும் பெரும்பாலும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தது. வடக்கு வங்காளத்தில் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பம் ஒன்று பாலர்களை வரேந்திரியிலிருந்து (Varendri) விரட்டியது, தர்ம பால வமிசத்தினரின் வலிமை இராஷ்டிரகூடர்களின் துணையுடன் இராமபாலனால்

மீண்டும் உயிர்பெற்று விளங்கியது. ஆனால், புத்துயிர்பெற்ற இவ்வமிசம் நீண்டகாலம் நிலைபெற்றிருக்கவில்லை. தக்காணத்தி லிருந்து வந்த புதிய வமிசத்தினன் விஜயசேனனால் வங்காளத் தில் இது வீழ்ச்சியுற்றது. உள நாட்டுத் தலைவர்களுக்கும் வெளி நாட்டு இராணுவத் தலைவர்களுக்கும் ஏற்பட்ட சண்டை, வங்காளத்தில் பின்னவரது வெற்றியில் முடிவடைந்தது.

வெற்றி பெற்றவன் சேனவமிசம் என்ற புதிய வமிசத்தை ஏற்படுத்தினான். இப் புதிய மன்னனின் முன்னோர்கள் தக்கா ணத்திலுள்ள கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மேற்கு வங்காளத்தில் சிறிய அரசு ஒன்றை ஏற்படுத்தினார்கள். சமந்த சேனன் காலத்தில் அது முக்கியம் பெற்றது. சமந்தசேனன் தென்னாட்டு உறவினர்களுடன் சிறிது தொடர்பு வைத்திருந்த தாகத் தோன்றுகிறது. அவனுக்குப்பின் பட்டம் பெற்றவன் ஹேமந்த சேனன். ஹேமந்த சேனன் மகன் விஜயசேனன், புகழ்மிக்க சூரர்களுடன் நட்புறவு கொண்டு, தன் வமிசத்துச் சுய ஆட்சியை நிலைநாட்டினான். பாலவமிசத்து வழித்தோன்ற லான கௌட மன்னனையும், வட பீகார், அஸ்ஸாம், ஒரிஸ்ஸா மன்னர்களையும் அவன் அடி பணியச் செய்தான்; மேற்கு வங் காளத்தில் விஜயபுரம் என்ற புதிய நகரை உருவாக்கினான். இது சேன வமிசத்தினரின் தலைநகரமாகியது. யாதவர்களிடமிருந்து வென்றதாகக் கருதப்படும் கிழக்கு வங்காளத்து விக்கிரமபுரம் அவர்களது இரண்டாவது தலைநகரமாய் விளங்கியிருக்கலாம். சேனமன்னன் அடிக்கடி இந் நகருக்கு விஜயம் செய்து இதைச் சிறப்பித்துள்ளான்.

விஜயசேனன் மைந்தனும் அவனுக்குப்பின் ஆட்சி பெற்ற வனுமான பல்லால சேனன் வங்கநாட்டுப் பழங்கதைகளில் குலினிஸம் என்ற பிரபு வமிசத்தைத் தோற்றுவித்ததாகப் புக ழப்படுகிறான். மேலும், புகழ்பெற்ற தனசாகரம், அற்புத சாக ரம் என்னும் இரண்டு நூல்களை எழுதிய ஆசிரியனும் இவனே என்று கூறப்படுகிறது.

கி. பி. 1178-1179, அல்லது கி. பி. 1184-85இல் பல்லாலன் மகன் இலக்ஷ்மணசேனன் ஆட்சிக்கு வந்ததாகக் கருதப்படு கிறது. வேறு அறிஞர் சிலர், அவன் பட்டம் பெற்றதை இன் னும் முன்னதாகக் கூறுவதுடன் கி. பி. 1119இல் ஆரம்பித்த இலக்ஷ்மணசேன சகாத்தத்தைத் தொடங்கியவனும் அவனே என்றும் கருதுகின்றனர். கலிங்கத்தில் உள்ள ஒரு மாவட்டத் திற்கு இராஜப்பிரதிநிதி அல்லது இராணுவ அதிகாரியாய்

இருந்து அவன் ஆட்சி செய்வதில் அனுபவம் பெற்றதாகத் தோன்றுகிறது. அவன் பட்டத்திற்கு வந்ததும் பெரிய வெற்றியாளனாகவும் கல்வி ஆதரவாளனாகவும் புகழ்பெற்றான். தெற்குப் பெருங்கடல் வரையில் அவன் வெற்றி கொண்டதாகவும், காமரூபத்தை அடிபணிய வைத்ததாகவும், காசி மன்னனைத் தோற்கடித்ததாகவும் தன்னைக் கூறிக்கொள்கிறான். அக்காசி மன்னன், கன்னோசியின் காகதவால மன்னனேயன்றி வேறல்லன். அவன் சபையை அலங்கரித்த புலவர்களுள் மிக்க புகழ்படைத்தவர் கீதகோவிந்தம் இயற்றிய ஜெயதேவரும், பவனதூத ஆசிரியர் தோயி (Dhoyi)யும் ஆவர். பின் கூறப்பட்ட நூலில் சேன வமிசத்துத் தலைநகர் பற்றிய சுவையான வருணனை காணப்படுகிறது. காகதவாலர்கள் அமைத்த அணைச்சுவர் உடைக்கப்பட்டதும், முஸ்லீம்கள் படையெடுத்து உள் நுழைவதைச் சேன மன்னர்கள் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டார்கள். இலக்ஷ்மண சேனன் என்று கருதப்படும் இலக்ஷ்மணய்யராயன் என்பவன், முன்னேறிவரும் மாலிக்கு இக்தியாருதீன் மகமது கல்ஜீயின் படைகளின் வலிமைக்கு ஆற்றாது பன்னிரண்டாம் நூற்றாண்டின் முடிவில் அல்லது பதின்மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதியில் ஓடவேண்டியதாயிற்று. அவன் மக்கள் விஸ்வரூப சேனனும், கேசவ சேனனும் 'கார்க்க யவனர்'களுடன் அதாவது காபூல் பள்ளத்தாக்கிலிருந்து படையெடுத்த முஸ்லீம்களுடன் போரிட்டுப் பதின்மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதி வரையிலும் தங்களுடைய சுய ஆட்சியைக் கிழக்கு வங்காளத்தில் காப்பாற்றி வந்தார்கள்.

## பிற்காலச் சாளுக்கியர்களும் சோழர்களும்

கி. பி. 973 முதல் கி. பி. 1190 வரையில் சிறிது கால இடைவெளியுடன் சேனர்களின் தாயகமான கர்நாடகம் இரண்டாம் தைலனால் ஸ்தாபிக்கப்பட்ட சாளுக்கியக் குடும்பத்தினரின் ஆதிக்கத்தில் இருந்தது. கஜினித் துருக்கியர்களிடமிருந்து இந்தியாவின் வடமேற்கு வாயிலைக் காத்து வருவதில் ஷாஹி உதபாண்டர்கள் முயன்று வந்த நேரத்தில் சாளுக்கியர்கள் மாளவ நாட்டுப் பரமாரர்களுடனும் தஞ்சைச் சோழர்களுடனும் கடும் போர்களில் ஈடுபட்டிருந்தார்கள். தங்கள் முன் ஆட்சியாளர்களான இராஷ்டிரகூடர்களைப் போன்று அவர்கள் அந்நியப் படையெடுப்பாளர்களுக்கு நிச்சயமாக உதவினார்கள் என்று தோன்றவில்லை. முதலாம் இராஜராஜன், அவனது புகழ்மிக்க மகன் முதலாம் இராஜேந்திர சோழன் ஆகியவர்கள் தலைமையில் சோழர்கள் இக்காலச் சென்னை இராஜதானி முழுவதையும் தங்கள் ஆட்சிக்குட்படுத்தினார்கள். இராஜேந்திரனின் படைத்

தலைவர்கள் கங்கைக்கரை வரையில் தங்கள் படையை நடத்திச் சென்றார்கள். சோழக் கப்பற்படைத் தலைவர்கள், கடல் கடந்து, இலங்கை, நிக்கோபார்த்தீவுகள், மலேயாத் தீவுகளின் பகுதிகள், ஆர்ச்சிபிலாகோ என்னும் இடங்களிலெல்லாம் சோழ ஆதிக்கத்தை ஏற்படுத்தினார்கள். வங்காள மன்னன் முதலாம் மஹிபாலனை இராஜேந்திர சோழன் நன்றாக முரியடித்தான். தக்காணப் பீடபூமி முஸங்கி சாளுக்கியமன்னனையும் வென்றான். சாளுக்கியப் படையினரின் தன்மானத்தை ஓரளவிற்குச் சோமேசுவர ஆகவமல்லன் கொப்பம் போரில் காப்பாற்றினான். ஆயினும், முதலாம் இராஜேந்திர சோழ மன்னன் மகனிடம் கூடல் சங்கமத்தில் நடந்த போரில் கடுந்தோல்வி பெற்றான். பதினொன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டின் முதற்காலப் பகுதிவரை தக்காணத்து ஆதிக்கம், ஆகவமல்லன் இரண்டாம் மகன் ஆறாம் விக்கிரமாதித்தனுக்கும் முதலாம் இராஜேந்திர சோழன் மகளுக்கும் பிறந்த இராஜேந்திர சோழன் (III) முதலாம் குலோத்துங்கனுக்கும் இடையில் பங்கிடப்பட்டது. முன்னரே கூறப்பட்டபடி ஆறாம் விக்கிரமாதித்தன் 'சக' ஆண்டுக் கணக்கீட்டுக்குப் பதில் புதிய சகாத்தத்தை நிறுவினான். அவனுடைய உதாரணத்தைக் கூர்ச்சர மன்னன் சித்தராஜ ஜெயசிம்மனும் கௌட சேனர்களும் பின்பற்றினார்கள். ஆறாம் விக்கிரமாதித்தன் ஆட்சி இந்து சட்ட முறைக்கு விளக்கமாய் அமைந்தது. பெரிய சட்ட நிபுணரான விஞ்ஞானேஸ்வரர் ஒரு சட்டத் தொகுப்பை வெளியிட்டார். சாளுக்கியர் அரசவையில் செய்யுள் செய்வதும் போற்றப்பட்டது. நற்புகழ் பெற்ற பில்ஹணர், 'விக்கிரமாங்கதேவ சரித்திரம்' அல்லது 'விக்கிரமாதித்தனின் அருஞ்செயல்கள்' என்ற சரித்திரத்தை எழுதித் தம் ஆதரவாளனுடைய அருஞ்செயல்களை நினைவுகூரும்படி செய்தார். ஆறாம் விக்கிரமாதித்தன் மகனும் அவனுக்குப் பின் ஆட்சி பெற்றவனுமான மூன்றாம் சோமேஸ்வரனும் புகழ்மிக்க எழுத்தாளனாய் விளங்கினான்.

மூன்றாம் சோமேஸ்வரன் இறந்த சிறிது காலத்திற்குப் பின் கல்யாண சாளுக்கியர்களின் ஆதிக்கம் பிஜ்ஜல கால சூரியனாலும், அவன் மகனாலும் தாற்காலிகமாக மங்கும்படி செய்யப்பட்டது. கி. பி. 1190-க்குப் பிறகு கல்யாண சாம்ராச்சியம் மூன்று பிரிவுகளாகப் பிரிந்தது. அவற்றுள் ஒன்று, யாதவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட தேவகிரி இராச்சியம், காகதீயர்களால் ஆட்சி செய்யப்பட்ட வாரங்கல் அரசு, மூன்றாம் ஹொய்சலர்களால் ஆளப்பட்ட துவாரசமுத்திரம் ஆகும். இராஜேந்திர சோழ குலோத்துங்கனுக்குப் பிறகு சோழ சாம்ராச்சியமும்

க்ஷீணித்தது. சோழர்களது அரசின் தென்பகுதி பாண்டியர்களின் கைவசமாயிற்று; தாயகப் பகுதிகள் ஹொய்சலர், காகதீயர் முதலிய அரசர் சிலரின் போர்க்களமாயின. முதலாம் இராஜேந்திர சோழன் வெற்றி கொண்டதும் கோதாவிரிக்கும் கங்கைக்கும் இடைப்பட்ட நாட்டில் கலிங்கமும் ஒரிஸ்ஸாவும் கொண்ட கீழைக் கங்கர்களின் சாம்ராச்சியம் தோன்றியது.

## சோழ சாளுக்கியப் பெருமன்னர்களின் பின் ஆண்டவர்கள்

சுய ஆட்சி கொண்ட தேவகிரி யாதவ அரசு பில்லமன் என்பவனால் ஏற்படுத்தப்பட்டுத் தக்காணத்தில் முதன்மை வாய்ந்த அரசாக அவன் பேரன் சிங்கணனால் உயர்த்தப்பட்டது. கல்வி ஆதரிக்கப்பட்டது. பாஸ்கராசாரியாரின் வான சாஸ்திர நூல்களைக் கற்பிப்பதற்காக வானசாத்திரக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பிற்கால யாதவ மன்னர்கள் ஆட்சியிலேதான் புகழ்மிக்க ஹேமாத்திரி, போபதேவர் (Bopadeva), ஞானேஸ்வரர் என்பவர்களின் அழியாப் படைப்புகள் தோன்றின. கௌதமி புத்திரனும் இரண்டாம் புலகேசியும் முன்பு தக்காணத்தைக் காத்ததுபோலத் தேவகிரி மன்னர்கள் தக்காணத்தை வடநாட்டுப் படையெடுப்பாளரிடமிருந்து காப்பதில் போதிய வலிமை பெற்றிருக்கவில்லை. கி. பி. 1294இல் அல்லாவுதீன் கில்ஜியின் படைகள் தேவகிரியின்மீது பாய்ந்து, யாதவ மன்னன் இராமச்சந்திரனிடமிருந்து பெருந்தொகையை வற்புறுத்திப் பெற்றன. கி. பி. 1306—1307இல் மறுபடியும் மாலிக்காபூர் யாதவ நாட்டின்மீது படையெடுத்து, அதன் மன்னனை மிகுந்த திறைப்பணம் செலுத்தும்படி வற்புறுத்தினான். கி. பி. 1312இல் இராமச்சந்திரன் மகன் கொல்லப்பட்டான். அவன் மாப்பிள்ளை கி. பி. 1317இல் உயிருடன் தோலுரிக்கப்பட்டான். மகாராஷ்டிரத்தில் இந்துக்களின் ஆட்சி ஒரு முடிவுக்கு வந்தது. பதினேழாம் நூற்றாண்டுவரை அது தலையெடுக்கவில்லை.

இரண்டாம் புரோலராஜா தலைமையில் காகதீயர்கள் ஆதிக்கம் பெற்றார்கள். அவன் பேரனான கணபதி தெற்கில் காஞ்சிபுரம் வரையில் தன் ஆட்சியைப் பரப்பினான். கணபதியின் மகள் ருத்திரம்மாளின் ஆட்சியில் இராச்சியம் சிறந்தோங்கியது. வெனிஸ் நாட்டுப் பிரயாணியாகிய மார்க்கோபோலோ அவளைப் பாராட்டி எழுதியுள்ளார். பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவ் வமிசத்தினரின் ஆதிக்கம் டில்லிச் சுல்தான்களால் அழிக்கப்பட்டது.

விஷ்ணு வர்த்தனன், அவன் இரண்டாம் பேரன், வீரபல்லாலன் இவர்கள் ஆதிக்கத்தில் துவாரசமுத்திர ஹொய்சலர்களின் ஆட்சி பெருஞ்சக்தி பெற்றது. பிற்கால மன்னர்கள் தமிழகத்தின் ஒரு பகுதியைத் தங்கள் ஆட்சிக்குட்படுத்தினர்கள். இவ்வமிசத்தின் புகழ்பெற்ற கடைசி அரசன் மூன்றும் வீர பல்லாலன், அல்லாவுதீன் கில்ஜியின் தளகர்த்தன் கபூரிடம், பல தோல்விகளை அடைந்தான். கடைசியாகச் சற்றேறக் குறையக் கி. பி. 1342இல் உயிரிழந்தான்.

பதின்மூன்றும் நூற்றாண்டில் தமிழகத்தில் தலைசிறந்த அரசாயும் பன்னாட்டு வாணிகக் கேந்திரமாயும் விளங்கிய பாண்டிய இராச்சியம் பதினான்காம் நூற்றாண்டு ஆரம்பத்தில் கபூரால் வெல்லப்பட்டது. ஒரு சிறிது கால முஸ்லீம் ஆட்சிக்குப் பின்னர் அது விஜய நகர சாம்ராச்சியத்துடன் ஒன்றுபட்டு விட்டது.

அநந்தவர்மன் சோடகங்கன் ஆட்சியின்கீழ் ஒரிஸ்ஸா வலிமை பெற்ற இராச்சியமாய் விளங்கியது. அவன் சந்ததியார்கள் வங்காள முஸ்லீம் வெற்றியாளர்களிடமிருந்து தங்கள் அரசை ஓரளவு வெற்றியுடன் பாதுகாத்தார்கள். கி.பி. 1434இல் புகழ் பெற்ற கபிலேந்திரனால் கங்கை வமிசம் முடிவு எய்தியது. கி, பி. 1568 இல் முஸ்லீம்களால் ஒரிஸ்ஸா முடிவாக வெல்லப்பட்டது.

வடநாட்டு இராஜபுத்திர வேந்தர்களைப் போன்று தென்னிந்திய அரசர்களும் படையெடுப்பினரை ஒருமுகமாக ஒற்றுமைப்பட்டு எதிர்க்க இயலாமல், ஒருவர் பின் ஒருவராக வீழ்ச்சியுற்றார்கள். துங்கபத்திரா நதிக்கும் கிருஷ்ணா நதிக்கும் அப்பாலிருந்த இந்துக்கள் மட்டும் ஹரிஹரர், புக்கர் என்பவர்கள் தலைமையில் ஒன்றுபட்டுப் பல நூற்றாண்டுகளாக இந்தியாவின் தொலைத் தென்பகுதியில் தங்கள் சுய ஆட்சியைப் பாதுகாத்து வந்தார்கள்.

# 14. குப்தப்பேரரசர் அவர் சந்ததி யார்கள் கால இந்திய நாகரிகம்

## ஆட்சி முறை

குப்தர், அவர் சந்ததியார்கள் ஆட்சியில், கோனுட்சியற்ற அரசுகள் யாவும் சிறுகச்சிறுக மறைந்தன. ஆரும் நூற்றாண்டிற்குப்பின் கோனுட்சி முறை ஒன்றே வழக்கிலிருந்தது, நம் கவனத்திற்குரியதாகிறது. அரசபதவி பரம்பரைச் சொத்தாய் இருந்தது. அரசன் தனது வாரிசை நியமிக்கும் வழக்கமுண்டு. சில சமயங்களில் பிரபுக்களும் மக்களும் அரசனைத் தேர்ந்தெடுப்பது காணப்படுகிறது. 'பிரகிருதிகள்' (Prakrtis) அல்லது வங்காள அரசியல் உறுப்பினர்களால் கோபாலன் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அஸ்ஸாம் மக்கள் பிரம்மபாலனைத் தேர்ந்தெடுத்ததும் தேர்வு முறைக்கு உகந்த மேற்கோள்களாகும். இதைப் போல, தென்னிந்தியாவிலும் 'மூலப் பிரகிருதிகளால்' (Mula Prakritis) நந்திவர்மன் பல்லவ மல்லன் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் கூறலாம். குழப்பமிக்க காலங்களில் மன்னனைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு, பிராமணர் அல்லது பிரபுக்கள் கொண்ட அவைக்கு அளிக்கப்படும். தானேசுவரத்தில், 'பந்தி' (Bhanti) என்பவனைத் தலைவனுகக்கொண்ட பிரபுக்களின் குழாம், ஹர்ஷனுக்கு அரசை அளித்தது. காஷ்மீர் நாட்டு 'யசஸ்கரன்', பிராமணர் கூடிய அவையொன்றினுல்தேர்ந்தெடுக்கப்பட்டான். அரசவைப் பிரமுகர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து, குஜராத்தின் தலைவன் குமாரபாலனைத் தேர்ந்தெடுத்தார்கள். வாரிசுக்குரியவனை ஆட்சியிலிருப்பவர் அமர்த்தும் போதும், பிரபுக்களையும் மற்ற அரசவமிசத்தினரையும் சபையோர்கள் (Sabhyas) கலந்தாலோசிப்பது வழக்கம். இவ் வழக்கம் மிகத் தேவையென்பதும் உணரப்பட்டது. பெண் அரசெய்துவதில் தடையேதும் இருக்கவில்லை. இந்திய நாடெங்கும் இப் பழக்கமிருந்து வந்ததாகக் கூற இயலாதெனினும், காஷ்மீர், ஒரிஸ்ஸா, தெலுங்குப் பிரதேசங்களில் இவ் வழக்கமிருந்தது என அறியலாம்.

நம் கவனத்திலிருந்து வரும் காலத்தில், அரசபதவியின் தெய்விகத்தன்மை நாடெங்கும் ஏற்பட்டது. அலகாபாது தூண் கல்வெட்டு, சமுத்திரகுப்தனை, நான்கு திசைகளுக்கும் அதிபர்களான குபேரன், வருணன், இந்திரன், யமன் ஆகியோருக்குச் சமானமானவன் எனக் குறிப்பதோடு, படைப்பிற்கும் அழிவிற்கும் காரணபூதனை அறிவிற்கெட்டாத பரம்பொருள் என்றும், புவிமீது வாழும் கடவுளின் அவதாரமென்றும், இவ்வுலக வழக்கையொட்டி மானிடப் பிறவி எடுத்தவனைப்போல நடந்து வருகிறான் என்றும் சித்திரிக்கிறது. அக்காலத்து இலக்கியம், மன்னனை நீதியின் அவதாரமென்றும், உலக ரட்சகனை மஹாவிஷ்ணுவின் பேராள் என்றும் குறிப்பிடுகின்றது. இந்திய நாட்டுப் பகுதிகள் சிலவற்றில், மஹாவிஷ்ணுவை 'ஸ்ரீபிருதிவிவல்லபன்' (Sri Prithvi Vallabha) அல்லது அதிருஷ்டதேவதைக்கும் புவியன்னைக்கும் நேசமானவன் எனக் கூறுவதுண்டு. மன்னன் தெய்விகமானவன் என்ற கருத்திற்கு எதிர்ப்புகளும் தெரிவிக்கப்படுவதுண்டு. அரசனின் தெய்விகத்தன்மை என்னும் கருத்துப் பொய்ம்மை என, 'பாணர்' (Bana) என்னும் கவிஞர் அறிவிக்கிறார். 'மனித இயற்கைகளையுடையவராய் இருந்தாலும்' தங்களைத் தெய்வப்பிறவியென்றும் மனிதரைவிட உயர்ந்தவரென்றும் கருதிக் கடவுளருக்கே உரித்தான ஆடம்பரத்துடன் செயற்படுபவர்கள், மனித குலத்தின் வெறுப்புக்காளாகின்றனர்கள். இத்தகைய மாயவாழ்க்கையில் தங்களை ஈடுபடுத்தும் துணைவர்களை அவர்கள் மிகவும் விரும்புவார்கள். 'தெய்வப்பிறவி' என்னும் மாய எண்ணங்கொள்வதால், அதன் விளைவான தீய எண்ணங்களால் அவர்கள் வீழ்த்தப்படுகின்றனர்கள். மக்களுக்கு மன்னர் மிகவும் கடன்பட்டவர். அக்கடனை நல்லாட்சியின் மூலமாகவே தீர்க்க இயலும் என்னும் தொன்மையான கருத்து வழக்கிலிருந்தது. கடனையும் கடமைகளையும் சரிவரச் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் நிரம்பிய உள்ளறிவு பெற்றவனும், மனிதகுல நன்மையில் அக்கறையுள்ளவனும் நல்லரசனாவான். பாஹியான், யுவாங்-சுவாங் போன்ற சீன யாத்திரிகர்களும், சுலேமான் என்ற அராபிய வணிகரும், மார்க்கோ போலோ என்ற வெனிஸ் நகர யாத்திரிகரும், இரண்டாம் சந்திரகுப்தன், ஹர்ஷன், முதலாம் போஜன், உருத்திரம்மாள் (உருத்திராம்பா) ஆகியோர், மேற்குறித்த குறிக்கோளை நடைமுறையில் கடைப்பிடித்து நன்முறையில் ஆண்டுவந்தனர் என்பதற்கு நற்சான்று பகர்வர்.

இக்காலத்து மன்னர், நெஞ்சுறுதி படைத்த போர் வீரராயும், கொடிய மிருகங்களுடன் போரிடுவது போன்ற பயங்கர விளையாட்டுகளில் விருப்பமுடையவராயும் இருந்தனர். ஆயினும், இவர்களை முரட்டுப் படை வீரர்களாகவோ அல்லது

போர் வெறியர்களாகவோ கொள்வது தவறாகும். இக் காலத்துச் சிறப்புவாய்ந்த மன்னரின் அரிய குணங்களுள், கல்வி கேள்வி களில் அவர்கள் கொண்டிருந்த விருப்பமும், நுண்கலையில் அவர்களுக்கிருந்த பேரார்வமும் குறிப்பிடத்தக்கவை. பல கலை களில் வல்லமையுள்ள வடவிந்திய சமுத்திரகுப்தனும், 'விநோத விருப்ப'முடைய (விசித்திர-சித்தன்) தென்னிந்திய மகேந்திர வர்மனும், இத் துறைகளில் வழிகாட்டிகளாய் அமைந்தார்கள். திறமைமிக்க அவர்தம் சந்ததியார்களுள் பலர், அவர்தம் வழிகளைக் கடைப்பிடித்தனர்.

அரியணையில் அமர்ந்த ஆட்சியாளருள் பலர், புகழ் பெற்ற கவிஞராயும் கல்விமான்களாயும் விளங்கினர். கன்னோசியின் அரசன் ஹர்ஷன், காஞ்சி மகேந்திரவர்மன், மால்யகேட முதலாம் அமோகவர்ஷன், தாராநாட்டுப் போஜன், கல்யாண நாட்டு மூன்றாம் சோமேஸ்வரன், ஆஜ்மீர் மன்னனான நான்காம் விக்கிரகராஜன், வங்காளத்து பல்லால சேனன், வடகொங்கண நாட்டு அபரார்க்கன் என்னும் அரச நூலாசிரியர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். அவர்கள் விட்டுச்சென்றிருக்கும் நூல்களை இன்றும் மக்கள் படித்து வருகின்றார்கள். அவர்களுள், முற் காலத்தவர் நாடக நூலாசிரியராவர்; பிற்காலத்தவர், பல துறைகளில் ஆர்வமுடையவராகக் காணப்படுகின்றனர். பெரும் பாலாரான ஆட்சியாளரைப் பல்கலை வல்லுநர்கள் எனக் கூறுவது பொருந்தும். காலத்தால் பிந்திய மன்னருள் சிலர், சோதிட சாத்திரத்திலும், நீதி சாத்திரத்திலும் மிக்க ஆர்வங் கொண்டிருந்தனர்.

'அரசாங்க யந்திரத்தின் முக்கிய விசைகளை' மன்னர் நேர்முகமாகக் கையாண்டு வந்தனர்; நாட்டின் சட்டங்களைக் கடைப்பிடித்ததோடு, மக்களையும் எதிரிகளிடமிருந்து காப்பாற்றி வந்தனர். நீதி வழங்குவதோடு, படையினரைப் போருக்கு அழைத்துச் செல்வதும், நாட்டிற்குகந்த கொள்கைகளைத் தீர் மானிப்பதும், அவர்தம் கடமைகளேயாம். ஆட்சிப் பொறுப்பைத் தகுந்த உதவியின்றி ஏற்பதும் இயலாததாயிற்று. தனிச் சக்கர மொன்று இயங்குவது இயலாது. எனவே, மன்னருக்கு அமைச் சர்களின் உதவி தேவையாயிற்று. குப்தராட்சியின் முற்பகுதி யில், இச் செயலாளருள், 'மந்திரின்' (Mandri–அந்தரங்க ஆலோசனையாளர்), 'சந்திவிக்ரஹிகன்' (Sandhivigrahika-போர், சமாதானம் ஆகியவற்றிற்குப் பொறுப்புள்ள அமைச் சன்), அக்ஷபடலாதிக்கிருதன் (Akshabatladhikrita-பத்திரங் களைப் பாதுகாக்கும் அமைச்சன்) இருந்தனர். இராணுவ

நிருவாகத்திற்கென முக்கிய அலுவலர் சிலரிருந்தனர். இவர்களுள் 'மகாபலாதிக்கிருதனும்' (Mahabaladhikrita) 'மகா தண்டநாயகனும்' (Mahadandanayaka) முக்கியமானவர். என்றாலும், சிவில், இராணுவ அதிகாரிகளுள் அதிக வேற்றுமையில்லை. 'மந்திரின்' மகாபலாதிக் கிருதராகவோ அல்லது ஒருவரே 'அமாத்திய'ராகவும் (Amatya), 'மகாதண்டநாயக'ராகவுமோ பணியாற்ற இயலும். அமைச்சர் (சசிவ) பதவி பரம்பரையானது. 'குமார அமாத்தியர்' (Kumara Amatya) என்னும் பெயர்கொண்ட ஒருவகை அலுவலரிருந்தனர். அவர்கள், போர், சமாதானம் ஆகியவற்றிற்குப் பொறுப்புள்ள அமைச்சர்களாயும், படைத்தலைவர்களாயும், ஆலோசகர்களாயும், குறுநில ஆட்சியாளர்களாயும், மாவட்ட அதிகாரிகளாயும் பணியாற்றி வந்தார்கள். சிலர், மன்னனிடம் நேர்முகமாகவும், மற்றும் பலர், இளவல்கள் அல்லது மாகாணத் தலைவர்களின் கீழும் பணி புரிந்து வந்தனர். 'குமார அமாத்தியர்' என்னும் தொடரிலுள்ள 'குமார' என்னும் சொல், 'இளைய, பீன, சிக்க, அல்லது இம்மாதி' எனத் தென்னிந்திய மொழிகளில் வழங்கி வரும் சொற்களைப் போலுள்ளது. பொதுவில் கூறுமிடத்து இவனைப் 'பயிற்சியாளன்' (Cadet) எனக் கொள்ளலாம். தென்கோடியில் சோழராட்சியில் 'ஓலை நாயகம்' (Olainayagam) என்ற பெயருடைய முக்கிய அலுவலன் ஒருவன் இருந்தான். அரசனின் கட்டளைகள் இவனால் ஆமோதிக்கப்பட்டுச் செயலாற்றப்பட்டன. சின்னாள்களுக்குப் பின் சில துறைகளில் அரசாங்க இயந்திரத்தை விரிவுபடுத்தும் நிலை ஏற்பட்டது. குறிப்பாக வெளிநாட்டு விவகார அலுவலகத்தில், சில முக்கியப் பகுதிகளின் விவகாரங்களைக் கவனிப்பதற்கு, 'சந்திவிக்ரஹிகர்' (Sandhivigrahikas) சிலர் அமர்த்தப்பட்டனர். தக்காண மன்னர் சிலருடைய ஏடுகளில், 'கர்னாடக சந்திவிக்ரஹிகன்' (Karnataka Sandhivigrahika) என்ற அலுவலனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மற்றும் சில பதிவேடுகளில், 'மகாபிரதானன்' (Mahapradhana) என்னும் அலுவலனைப்பற்றிய குறிப்புகளும், மனுவின் 'சர்வாத்த சிந்தகன்' (Sarvartha Chintaka) மகாராட்டிரர் காலத்து 'முக்கிய பிரதானன்' (Mukhya Pradhana) ஆகியோரைப் போன்ற 'சர்வாதிகாரின்' (Sarvadhikarin) என்னும் மற்றுமோர் அலுவலனைப்பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. அமைச்சர்களின் எண்ணிக்கை அறுதியிட்டுக் கூறப்படவில்லை எனினும், மனுநீதி நூலுக்கிணங்க, எழுவர் அல்லது எண்மர் அமைச்சராய் சில நேரங்களில் இருந்திருக்கக்கூடும். மௌரியக் கல்வெட்டுகளில் காணப்படும் 'பரிஷ' (Parisha)

என்ற அவையைப்போல் 'மந்திரி பரிஷத்' என்னும் மத்திய அவை இருந்ததாகத் தெளிவாக அறியக்கூடவில்லை. அத்தகையதொரு நிறுவனம் இருந்திருந்தால், கல்வெட்டுகளில் முக்கியமானதோர் இடம் பெற்றிருக்கவேண்டும். சமுத்திரகுப்தனை அரசிற்கு உரியவனுக அறிவிப்பதற்கெனக் கூட்டப்பட்ட அவை (Sabhyas-சபை), அலகாபாது தூண் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சித்திரிக்கப்படும் அவையினர், தர்பாரிலுள்ள (Durbar) பிரதானிகளாகவும், மத்திய ஆலோசனைக் குழுவின் அங்கத்தினராகவும் இருக்கலாம். இந்து மன்னர்களின் பல அரசுகளிலும் முக்கியப் பங்கு கொள்ளும் அலுவலன், 'ராஜ-குரு' (Rajaguru) என்பான். புரோகிதன் அல்லது அரசகுரு, பிராமண காலத்து அரசவைகளின் முக்கிய அலுவலனுகக் காணப்படுபவன், புத்த சமயத்தைத் தீவிரமாகப் பின்பற்றும் மன்னர்களின் பதிவேடுகளில் காணப்படுவதில்லை.

மன்னனுலோ, அல்லது மத்திய அரசின் உயரிய அலுவலன் ஒருவனுலோ, அல்லது மாகாணங்களிலோ நீதி வழங்கப்பட்டது. மாவட்ட நீதிபதிக்கு, நீதி வழங்குவதில் துணையாக வணிக, தொழிலாளர் கூட்டப் பேராள்களான அப்பகுதிவாழ் தனவணிகரும் (சேத்ஸ்-Seths) 'காயஸ்தரும்' (Kayasthas) இருந்தனர். கிராமங்களில், 'கிராம அவை' அல்லது 'குழுவினரின்' உதவியுடன், அரசாங்க அலுவலர் நீதி வழங்கி வந்தனர். சில வழக்குகளில், பேரவை மட்டிலும் விசாரணை நடத்தி நீதி வழங்குவதுண்டு. தன்னுட்சி பெற்ற நிறுவனங்களில், அவைகளுக்கெனத் தனி மன்றங்கள் இருந்ததை இலக்கியம் வாயிலாக அறிகிறேம். சான்று, ஆய்வாளர் குழுவினரின் உதவியுடன் நியாயம் வழங்கும் முறை வழக்கிலிருந்ததாகவும், குறிப்பாகத் தென்னிந்தியாவில் இது அமுலில் இருந்ததாகவும் ஆராய்ச்சியாளர் சிலர் குறிப்பிடுகின்றனர். நீதி வழங்கும் முறையில் கடுஞ் சோதனைகளைக் கையாளும் முறையும் வழக்கிலிருந்து வந்தது.

அக் காலத்து இந்திய இராணுவத்தில், யானைப்படை, காலாட்படை, குதிரைப்படை ஆகிய பிரிவுகளிருந்தன. இரதங்களின் உபயோகம் நாளடைவில் குறைந்தது. மன்னர் சிலர்—குறிப்பாக இராஜபுதனப் பாலைவனப் பகுதிகளையாண்டு வந்தோர்—ஒட்டகப் படையையும் வைத்திருந்தனர். சில கடலோரப் பகுதிகளில் கப்பற்படையும் இருந்தது. இப் படையின் உதவிகொண்டு இந்துமகாசமுத்திரத்தில் சிதறிக்கிடந்த சில தீவுகளையும் கடலோரம் அமைந்த சில நாடுகளையும் கைப்பற்றினர். பல மாகாணங்களில் குறிப்பாகத் தெற்குப் பகுதிகளில்—உயர்ந்த ஜாதிக் குதிரைகள் இல்லையென்றும், இவற்றை அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று என்றும் கூறப்படுகிறது. தென்னிந்தியச் சீதோஷ்ண நிலையில்

இக் குதிரைகள் உயிரோடிருந்தது மிகக் கடினமென, மார்க்கோ போலோ குறிப்பிடுகிறார். இந்தியக் குதிரை பராமரிப்போரின் திறமையின்மையும் அவர் குறிப்பிட்டுள்ளார். படை வீரரைக் குறிப்பிட்ட சாதியிலிருந்து மட்டிலும் தேர்ந்தெடுப்பதில்லை. அக் காலத்துத் தலைசிறந்த படை வீரருள் சிலர் பிராமண வகுப்பினர். கி. பி. பதினோராம் நூற்றாண்டில், வடக்கு வங்காளத்தின் தலை சிறந்த தலைவர், கைவர்த்த (Kaivarta) இனத்தவர், தலப்படைகளும், நிலமானியப் படைகளும் அக் கால இராணுவப்பகுதிகளாய்க் காணப்படுகின்றன.

நிலவருமானத்தில் ஒரு பகுதியான 'பாகம்' (Bhaga) அல்லது அரசன் பங்கும் (ஆறில் ஒரு பகுதி), நாட்டுப்புற மக்களின் மீது விதிக்கப்பட்ட சில வரிகளும், துறைமுகங்கள், ஓடக்கரைகள், பாதுகாப்புள்ள தலங்கள் ஆகிய இடங்களிலிருந்து கிடைத்த சுங்கமும் அரசாங்க வருவாயில் பெரும்பகுதியை அளித்தன. அரசனது உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்ட சுரங்கம் மற்றும் நிலத்திலிருந்தும் சிற்றரசர் செலுத்திவந்த திறைப்பணத்திலிருந்தும் உபரி வருமானம் கிடைத்தது. வரிகளைப் பொருளாக வசூல் செய்வது வழக்கமெனினும், பணமாகச் செலுத்துவதும் அனுமதிக்கப்பட்டது. 'கட்டாயச் சேவையும்' (விஷ்டி) பழக்கத்திலிருந்தது. திபெத்தின் எல்லைப்புறங்களில் 'கார்வி' (Corvee) போன்ற 'பொட்டவிஷ்டி' (Bhotta-Vishti) அல்லது நிலத்தில் வேலைவாங்கும் நூதனமான பழக்கமிருந்தது. தேவையான நெருக்கடி நேரங்களில் அதிக வரி வசூலிப்பதும் உண்டு. இதற்குக் கோவில்களும் விதி விலக்கன்று. கொள்ளைக் கூட்டத்தினரின் தொல்லைகளிலிருந்து மக்களைக் காப்பதற்கென மத்திய அரசினரால் விதிக்கப்படும் தனி வரிகளை இதற்கு மேற்கோளாகக் கூறலாம். இடைக்காலக் கல்வெட்டுகளில் காணப்படும் 'மல்லகர'மும் (Mallakara) 'துருஷ்க-தண்டமும்' (Turushkadanda) இவ் வகையைச் சேர்ந்தவையெனக் கொள்ளலாம். தல அதிகாரிகளால் உபரி வரிகள் விதிக்கப்படுவதுமுண்டு.

அரசு நடத்துவதற்கு வசதியாக, நாடுகளும், பேரரசுகளும், புக்தி, தேசம், இராட்டிரம், மண்டலம் எனப் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. வடஇந்தியப் 'பகுதிகளில்' 'புக்தி'யென்பது சாதாரணமாக வழக்கிலிருந்தது. இச் சொல்லிற்கு, உபாரிகன் என்னும் அலுவலனது ஆட்சியிலுள்ள மாகாணம் அல்லது ஆட்சிப்பகுதி எனப் பொருள் கூறப்படுகிறது. 'புக்தி', 'விஷயங்களாகவும்' (Vishayas) 'மண்டலங்களாகவும்' பிரிக்கப்பட்டிருந்தது. 'விஷயாபதி' (Vishayapathi) என்னும் பதவிக்கு ('விஷயம்' அல்லது மாவட்டம் என்ற ஆட்சிப பகுதியின் தலைவர்) 'குமாரமாத்தியன்' அல்லது 'அயுக்தன்' என்ற அரசாங்க அலுவலனையோ, அல்லது 'மகாராஜன்' என்ற சிற்றரசனையோ நியமிப்பது வழக்கம். ஆட்சி செலுத்துவதில், விஷயாபதிக்குத்

துணையாகச் சங்கத் தலைவரும் பத்திரங்கள் எழுதுபவர்களுள் தலைமையானவரும், மற்றும் அப் பகுதி வாழும் பிரமுகரும் சில சந்தர்ப்பங்களில் உதவுவதுண்டு. இந்திய நாட்டின் தென் கோடியில், மிகப்பெரிய அரசுப் பிரிவு 'மண்டலம்', 'வளநாடு' (Valanadu) என்றும், நாடு (Nadu) அல்லது 'கோட்டம்' (Kottam) என்றும் பிரிக்கப்பட்டிருந்தது. அரசுப் பிரிவில் கடைப்பகுதி 'குர்ரம்' (கிராமத்தொகுதி) அல்லது 'கிராமம்' (பட்டி) எனப் பெயர் பெறுகின்றது. இவற்றுள் ஒவ்வொன்றும் கிராமத் தலைவனது ஆட்சியிலிருந்தது. அவனுக்கு உதவியாகப் பல அவைகள் (ஊர், மகாசபை) இருந்தன. கிராமத்தலைவனைப் போல நகர்ப்பகுதிகளில் 'நகரபதி' (Nagarapathi) என்னும் அலுவலனிருந்தான். சில கிராமங்களில் கிராமத்தார் அனைவரும் அவையில் இடம் பெற்றிருந்தனர். மற்றும் சில கிராமங்களில் பிராமணர்கள் அல்லது, இரகசியத் தேர்வு முறையில் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரமுகர்களைக்கொண்ட அவைகளிலிருந்தன. ஏரிகள், கோவில்கள், நீதி முதலிய ஒவ்வொரு துறையையும் கவனிப்பதற்கெனத் தனிக்குழுக்களைப் பேரவையினர் அமர்த்து வர். தனியாரைக்கொண்ட இந் நிறுவனங்களின் வேலைகளை மேற்பார்வையிடுவதற்கு அரசாங்க அலுவலர்களும் (அதிகாரி கள்) இருந்தார்கள். பட்டணங்களிலும், நகரங்களிலும் 'நகரபதி கள்' என்னும் பிரத்தியேக அலுவலர்கள் இருந்தார்கள். குப்தப் பதிவேடுகள் சில, நகரசபைகளைக் (பரிஷத்) குறிப்பிடுகின்றன.

## சமூக நிலைமைகள்
### (Social Conditions)

இக் காலத்தில் சமூக நிலைமைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டுவந்தன. இக் காலத்துக் கல்வெட்டுகள் பல, பிரசித்தி பெற்ற மன்னர் சிலரை, 'சாதி-சமயச் சண்டைகளைத் தீர்ப்பதில் ஈடுபட்டிருந்தனர்' (சாதிப்பிரிவினர், தம் பகுதியில் செயற் படுவதைக் கட்டாயப்படுத்தினர்) எனக் குறிப்பதிலிருந்து பல மாறுதல்கள் ஏற்பட்டு வந்தன என்பதை ஒருவாறு அறியலாம். இத்தகைய முயற்சிகள், எப்பொழுதும் வெற்றி பெறவில்லை. புரோகித, தொழில் வகுப்பைச் சார்ந்தவர்களும் படைவீரராகப் பணியாற்றுவதையும், படை வீரர் வணிகராய்ப் பணியாற்று வதையும் நாம் காணலாம். வைசியரும், சூத்திரரும் பேரரசுகளை ஆண்டுவந்தனர் என்பதும் தெரியவரும். திருமண விதிகள் மிகக் கடுமையாய் இல்லை. பலவகைச் சாதியினர், இனத்தினர், சமயத்தினர் ஆகியோரிடையில் கலப்பு மணம் நடைபெற்று வந்தது. படையெடுத்துவந்த அந்நியர்களும் சாதி வலையில்

அகப்பட்டுக்கொண்டதால் சில சிக்கல்கள் ஏற்பட்டன. நீதி சாத்திர நூல்கள், முந்திய காலத்தவரான அந்நியர் சிலரை இழிகுல க்ஷத்திரியரெனக் குறிப்பிடுகின்றன. குப்தரது வீழ்ச்சிக்குப் பின்வந்தோர் தமக்கெனத் தனியாட்சிகளையும் ஏற்படுத்திக்கொண்டனர். இப் புதிய ஆட்சியாளர்கள், முப்பத்தாறு இராஜபுத்திர குலப்பிரிவுகளாகக் கருதப்பட்டு, முற்கால க்ஷத்திரியர்களுக்குள்ள கௌரவத்தையடைந்தார்கள். இப் புதிய இராஜபுத்திர குலத்தினருள் ஹூணரும், பிரதிஹாரர் அல்லது பரிஹாரரும் குறிப்பிடத்தக்கராவர். முதன் முறையாக கி. பி. ஆரும் நூற்ருண்டில் சிறப்புற்ற கூர்ஜர வமிசத்தைச் சார்ந்தவர்களாகப் பிரதிஹாரரைக் கருதுவது, அறிஞர்களின் பொது வழக்கு. அந்நிய நாட்டு ஆட்சியாளரும், இந்து மதத்தைத் தழுவிய எல்லைப்புறவாசிகளும் இராஜபுத்திரர் என்றே வழங்கப்பட்டனர். ஆயினும், சமூகத்தில், அவர்கள் சற்றுக் கௌரவக் குறைவான கூஜர்கள் (Gujars) தாகி காசியர்கள் (Dhaki Khasiyas) போதியர்கள் (Bhotiyas) முதலிய பலவகையான இனத்தினராகக் கருதப்பட்டார்கள்.

மத்திய தேசத்திலுள்ள உயர் சாதியினர் (மத்திய இந்தியா) 'உயிரினங்களைக் கொல்வதில்லை; போதை தரும் மது அருந்துவதில்லை; வெங்காயம், உள்ளி ஆகிய பொருள்களை உண்பதில்லை' எனப் பாஹியான் குறிப்பிடுவர். இவர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட 'சண்டாளர்' மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு வாழ்ந்தனர். நகரங்களின் தலைவாயில்களில் நுழையும்போதும் சந்தைகளில் நுழையும்போதும், ஒரு கட்டையைத் தரையில் தட்டித் தமது வரவைத் தெரிவித்துப் பிறர் விலகிச் செல்லும் வகை செய்வதும் வழக்கம். இழிகுலத்தவர் இருந்தனரென, இந்திய-சீன ஏடுகளும், ஆல்பிரூனி எழுத்தும் சான்று பகர்கின்றன. இக்காலத்து இறுதியில் வடமேற்கிலுள்ள அந்நியரையும் இழிகுலத்தவர் எனக் கருதும் வழக்கமிருந்ததென, ஆல்பிரூனி குறித்துள்ளார். உள்நாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த இந்துக்கள், ஆல்பிரூனி குறிப்பதுபோல, அந்நியரை இழிகுலத்தவரெனக் கருதவில்லை என்பதை அறிகிறோம்.

இக் காலத்துப் பெண்டிர் நிலையைப்பற்றிய சுவையான சில குறிப்புகள் கிடைக்கின்றன. சில பகுதிகளில் உயர்குலப் பெண்டிர் அரசியலில முக்கியப் பங்குகொண்டிருந்தனர். குப்தர் காலத்தில் மன்னரின் பிரிய-மனைவியின் கௌரவம் மிக உயர்ந்திருந்தது. பிற்காலங்களில், காஷ்மீர், ஒரிஸ்ஸா, ஆந்திர நாடு ஆகிய இடங்களில் நேரடி ஆட்சி செய்த அரசிகளிருந்தார்கள்

என்பதற்குச் சந்தேகமற்ற சான்றுகள் கிடைக்கின்றன. இந்திய அரசியொருத்தி தன் சகோதரனது துணையுடன் அரசு நடத்தினுள் எனச் சீன நூலாசிரியர் குறிப்பர். பெண்டிர், சில மாகாணங்களில்-குறிப்பாக கன்னடப் பகுதிகளில்-மாகாணக் கவர்னராகவும், கிராமத் தலைவியராகவும் பணியாற்றி வந்தனர். பெண்டிரைப் பூட்டிவைக்கும் வழக்கம் இப் பகுதிகளில் இல்லையென்பது தெரியவரும். தக்காணத்திலுள்ள அரசகுலப் பெண்டிர், இசையிலும் நாட்டியத்திலும் வல்லவராய் இருந்ததோடு, பொது அரங்குகளிலும் தமது திறமையை வெளிப்படுத்தி, மக்களை மகிழ்வித்தனர். வடவிந்தியாவில், இராஜ்யஸ்ரீ என்னும் இளவரசி, தன் சகோதர மன்னன் பின் அமர்ந்து, மகாயான பௌத்தக் கொள்கைகளைப்பற்றிய சீன நாட்டு நீதி சாத்திர வல்லுநரின் விளக்கங்களைக் கேட்டுவந்தாள் என்பது கூறப்படுகிறது. இத்தகைய செய்திகளிலிருந்து, சில குடும்பங்களில் பெண்டிரைப் பூட்டிவைக்கும் வழக்கமில்லை என்பதோடு, உயர்குலப் பெண்டிர் நற்கல்வியிலும் நற்பண்புகளிலும் ஈடுபட்டிருந்தனர் என்பதும் தெரியவரும், 'சுயம்வரம்' அல்லது மணாளனைத் தானே தேர்ந்துகொள்ளும் வழக்கம் இருந்தது. எனினும், சில குறைபாடுகளும் இருந்தன. ஆடவர், பெண்டிர் பலரை மணந்துகொள்ளும் வழக்கமும் இருந்து வந்ததெனினும், ஆடவரைப் போலப் பெண்டிருக்கு அவ்வுரிமையில்லை. கணவரின் சிதையில் கைம்பெண்களையும் சேர்த்து எரிக்கும் வழக்கம், அரசகுலத்தினரிடையில் பொது வழக்காய் வளர்ந்து வந்தது.

## நாட்டின் நிலையும் மக்களின் பொது நிலையும்

இஸ்லாமிய, சீன யாத்திரிகர் விட்டுச்சென்றிருக்கும் குறிப்புகளிலிருந்து, குப்தர் காலத்திலும் அதற்குப் பிற்காலத்திலுமிருந்த நாட்டு நிலையையும், மக்களின் வாழ்க்கை முறைகளையும் குறித்த பல சுவையான செய்திகள் கிடைக்கின்றன. அந்நியர் குறிப்புகளிலிருந்து கிடைக்கும் செய்திகளை உறுதிப்படுத்தும் சமகாலக் கல்வெட்டுச் செய்திகளுமுண்டு. சற்றேறக் குறைய, கங்கைச் சமவெளியின் மேற்பகுதி எனக் கருதக்கூடிய 'மத்திய தேசத்தை'க் குறித்து இரண்டாம் சந்திரகுப்தன் காலத்தில் இந் நாட்டிற்கு விஜயம் செய்த 'பாஹியான்' என்னும் சீன யாத்திரிகரின் கருத்துகளடங்கிய ஏடுகளில் உள்ள செய்தி வருமாறு:—

'மக்கள் எண்ணிக்கை அதிகம். இவர் மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்தினர். வீடுகளைப் பதிவு செய்துகொள்ள வேண்டிய தேவையையோ, அன்றி மாஜிஸ்டிரேட்டுகளையோ, அல்லது அவர்தம் சட்டங்களையோ பின்பற்றவேண்டிய தேவையுமில்லை. சிரச்சேதம் அல்லது சித்திரவதைபோன்ற கடுமையான தண்டனைகளின்றி மன்னர் ஆண்டுவந்தனர்.

வெவ்வேறு வகுப்பினரும், பிரயாணிகளுக்கென இருக்கைகள், படுக்கைகள், உணவு, பானங்கள் ஆகியவைகளைக்கொண்ட அறச்சாலைகளைக் கட்டுவித்தனர். குறிப்பாகத் தென்பீகாரிலுள்ள நகரங்கள், செல்வச் செழிப்பிற்குப் பெயர் பெற்றிருந்ததோடு, நேர்மையையும், வாரி வழங்கும் தன்மையையும் கொண்ட மக்களையும் உடையனவாயுமிருந்தன. அப் பகுதியில் வாழ்ந்த முதியோரும், பிரபுக்களும் அறச்சாலைகளையும் நிறுவினார்கள். ஏழைகளும், திக்கற்றவர்களும், நோயாளிகளும் அந்நிலையங்களுக்குச் சென்று உதவி மிகப்பெற்றார்கள். மருத்துவர் நோய்களைப் பரிசோதித்தனர். பாடலிபுத்திர நகரத்தில் அழகிய பெருவிஹாரங்கள் இரண்டு இருந்தன. பல திக்கிலுமுள்ள மாணவரும் அறிவு தேடுவோரும், இங்கு விழைந்து வந்து, உலகோருக்குத் தாம் செய்யவேண்டிய கடமைகளை உணர்வதற்கு முயன்றனர்.

இரு நூற்றாண்டுகளுக்குப்பின் யுவான்-சுவாங் இந்நாட்டிற்கு விஜயம் செய்தபோது, முன்னொரு காலத்தில் செழிப்புற்றிருந்த நாட்டின் பெரும்பகுதி—குறிப்பாக, 'ஸ்வாத்' (Swat) பள்ளத்தாக்கும் கிழக்கிந்தியப் பகுதியும்—பாழடைந்து காணப்பட்டன. அவற்றை அழகுபடுத்திய மாளிகைகள் இடிந்து அழிவுற்றிருந்தன. இவ்வாறு பல பகுதிகள் பொலிவிழந்து நின்றபோதிலும், பொதுவில் நாட்டில் நல்லாட்சி நிலவிற்று. வரிச்சுமையும் கொடுங்கோன்மையும் நாட்டிலில்லை. கட்டாயச் சேவையும் நாட்டில் வழக்கிலிருந்ததெனலாம். வேலைக்குத் தகுந்த கூலி கொடுக்கும் பழக்கமே நிறைந்திருந்ததெனலாம். அடிமைகளை வேலை வாங்கும் பழக்கம் இக் காலத்தின் இறுதி வரை இருந்ததெனலாம். ஆற்றின் மூலமும் சாலைகளின் மூலமும் நடைபெற்ற போக்குவரவில், குப்தர் காலத்தைக்காட்டிலும் பாதுகாப்புச் சற்றுக் குறைவாய் இருந்ததெனலாம். கிரிமினல்-சட்டம் சற்றுக் கடுமையாய் இருந்தது. அறச்சாலைகளுக்கும் கல்வி நிலையங்களுக்கும் நன்கொடைகள் தாராளமாய் வழங்கப்பட்டன. பாடலிபுத்திர நகரம் அழிந்ததால், அங்கிருந்த புகழ் வாய்ந்த கல்வி நிலையங்களும் நசித்துப்போயின. எனினும், நாளந்தாவில், மாபெருங் கல்விப் பீடமொன்று உயிர்த்தெழுந்தது. அங்குப் புலமையும் திறமையும் வாய்ந்த ஆயிரக்கணக்கான சகோதரரிருந்தனர். இந்தியநாடு முழுவதற்கும், அவர்கள் எடுத்துக்காட்டாய் விளங்கினார்கள். தங்கள் ஐயப்பாடுகளை நீக்கிக்கொள்வதற்கென அந்நிய நாட்டு மாணவர்கள், இக் கல்வி நிலயத்தைத் தேடிவந்து புகழ்பெற்று விளங்கினார்கள். மேற்கிந்தியாவிலுள்ள 'வல்லபி' (Valabi), மற்றொரு சிறந்த பண்பாட்டுக் கருவூலமாய் விளங்கியது. நாளந்தா, வல்லபி ஆகிய இரண்டிடங்களிலுமுள்ள நிலையங்களையும், சீன நாட்டிலுள்ள தலைசிறந்த கல்வி நிலையங்களுடன் ஐ-ட்சிங் (I-tsing) ஒப்பிடுவர். புகழ்வாய்ந்த, திறமை பெற்ற புலவர் பலர் கூடி, அறிவிற்கு

எட்டியும் எட்டாமலுமிருக்கும் அரிய கோட்பாடுகளை நுணுகி ஆராய்ந்தனர். அவர்தம் சீரிய கருத்துகளைச் சான்றோர் மெச்சியதால், அவர்களது அறிவுத் திறன், நெடுந்தூரம் பரவியது என நாம் அறிகிறோம்.

பிற்காலங்களில், மற்றும் பல கல்வி நிலையங்கள் தோன்றின. உத்தண்டபுரம் (பீகார்), விக்கிரமசீலக் கல்வி நிறுவனங்களைப் பாலர் (Pala) குல மன்னர்களுள் முதலிருவர் ஏற்படுத்தினர் எனக் கூறப்படுகிறது. நற்கலைகள் பலவற்றிலும் வல்லவரான மாளவ மன்னர் போஜர் (Bhoja), தாரா (Dhara) என்னுமிடத்தில் வடமொழிக் கல்லூரியொன்றை ஏற்படுத்தினர் என்பது தெரியவரும். தக்காணத்திலுள்ள தேவகிரியின் யாதவகுல மன்னனான சிங்கணனின் (Singhana) ஆட்சியில் பாஸ்கராசாரியாரின் பெயரனொருவன், வானசாத்திரக் கல்லூரியொன்றை நிறுவினன். தென்கோடியில் பல்லவ மன்னர்கள் காஞ்சியிலும், பாகூரிலும் (Bahur) பல கல்வி நிலையங்களுக்கு ஆதரவளித்தார்கள். பாகூரென்பது, பாண்டிச்சேரிக்கருகில் இருந்திருக்கக் கூடும். அங்கு நிறுவப்பட்ட கல்லூரியில் வேதங்கள், உப வேதங்கள் (Vedangas), மீமாம்சை (Mimamsa), நியாயம், புராணங்கள், தரும சாத்திரங்கள் (கி. பி. 9-ஆம் நூற்றாண்டு) ஆகியவற்றைப் படித்துத் தேர்வதற்கான வாய்ப்புகளிருந்தன.

இந் நாட்டு மக்களின் உடை, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் குறித்த சுவையான சில செய்திகளை யுவான்-சுவாங் வெளியிடுகிறார். இந்தியரது உள்ளணியும், வெளி அங்கியும் தைக்கப்படுவதில்லை. தூய வெள்ளை ஆடை அணிவதில் இவர்களுக்கு விருப்பம் அதிகம். இடுப்பைச் சுற்றி அக்குள் வரையிலும் ஒரு துணியை வரிந்து கட்டி வலத்தோளை மூடாது விடுவது வழக்கம். பெண்டிர் இரு தோள்களையும் மூடி இறுக்கமில்லாமல் தரையில் புரளும் ஆடைகளை அணிந்தனர். உச்சந் தலையிலுள்ள உரோமத்தை மட்டும் முடியிட்டு, மிகுதியுள்ள உரோமத்தைத் தொங்கவிடுவது வழக்கம். பூமாலைகளைத் தலையில் சூடிக்கொள்வதும், அட்டிகைகளை உடம்பிலணிவதும் வழக்கம். இந்திய வடக்கெல்லையிலுள்ள குளிர்ப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள், உடம்புடன் ஒட்டிய ஜாக்கெட்டுகளையும் (Jackets), தாத்தாரிகளைப் (Tartars)போல அணிவது வழக்கம்.

மக்களின் ஒழுக்கத்தைக் குறிக்கும்போது, இந்தியர் ஆத்திரம் மிகுந்த சலன மனத்தையுடையவரெனினும், சீலமிக்கவர் என யாத்திரிகர் குறித்துள்ளார். நியாயமற்ற வழிகளில் அவர்

கள் எதையும் பெற்றுக்கொள்வதில்லை. நியாய வரம்பை மீறி யும், தங்களை வருத்திக்கொள்வதுமுண்டு. அவர் தம் வாக்கைத் தவறாது நிறைவேற்றுவர். பிறரை அவர் வஞ்சிப்பதில்லை.

நாட்டில் சுரங்கங்களும், தாவரங்கள் செழித்து வளர்வதற் கேற்ற நிலங்களும் மிகுதி. வெங்காயம், ஈருள்ளி (garlic) ஆகிய வற்றின் உபயோகம் மிகக்குறைவு. இவற்றை உண்பவர்களை ஜாதிப் பிரஷ்டம் செய்வதுமுண்டு. பால், நெய், சர்க்கரை, கற் கண்டு, அப்பம், கடுகெண்ணெயில் பொரித்த தானியம் ஆகிய பொருள்களை உண்டுவந்தனர். மீன், மாமிசம், மானிறைச்சி ஆகியவைகளை விசேட காலங்களில் புசிப்பதுண்டு. எருமை மாட்டிறைச்சியையும் மற்றும் சில பிராணிகளின் இறைச்சியை யும் இவர்கள் புசிப்பதில்லை. வீட்டு உபயோகத்திற்கான பாண் டங்கள் மண்ணாலானவை. சில பித்தளைப் பாத்திரங்களும் உப யோகத்திலிருந்தன. நோயாளிகள் பித்தளைக் கரண்டிகளை (Spoon) உபயோகித்தார்கள் என்பதும் கூறப்படுகிறது. தங்கமும் வெள்ளியும் அதிகமாகக் கிடைத்தன. நாணயங்கள் செய்வ தற்கு இவை பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. தங்க வெள்ளி நாணயங்களைத் தவிர, சோழிகளும், சிறு முத்துகளும் நாணயப் பரிவர்த்தனைக் கருவிகளாய்ப் பயன்படுத்தப்பட்டன. துறைமுகங்களிலிருந்து கிடைத்த விலையுயர்ந்த பலவகைப் பொருள்கள் வாணிக நோக்குடன் பண்டமாற்றுச் செய்யப் பட்டன.

சோழப் பேரரசு காலத்தில், சாதாரண மக்களின் வாழ்க்கை நிலையைச் சில தென்னிந்தியப் பதிவேடுகள் சித்திரிக்கின்றன. உயர் குடும்பங்களின் மாத வருமானம் ஆள் ஒன்றுக்கு ரூபாய் பதினாறு என்பதும், சாதாரணக் குடும்பத்தின் வருமானம் ஆள் ஒன்றுக்கு ரூபாய் எட்டு எனபதும் ஊகிக்கப்படுகின்றன.

## சமயம்

குப்தராட்சியைப் பிராமண சமய மறுமலர்ச்சிக் காலமெனக் கருதுவது மரபு. பிராமண சமயம், மன்னர்களின் பேராதரவு பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை. பல காலம் வழக்கொழிந்து மறைந்திருந்த சில சடங்குகளைத் தாம் உயிர்ப்பித்ததாக மன்னர் சிலர் பெருமை கொள்ளுகின்றனர். இக்கூற்றை முற்றிலும் நம்ப வேண்டுவதில்லை. நுண்ணறிவு படைத்த ஆய்வாளர் ஒருவர் கூறுவது போல, குப்தப் பேரரசு காலத்தை 'மறுமலர்ச்சிக் காலம்' என்று கொளவதைவிட மலர்ச்சியின் இறுதிக்காலம் எனக் கூறுவது மிகவும் பொருந்தும். கங்கைவெளியில் பிராமண

சமயத்தின் மீட்சி புஷ்யமித்திரன் காலத்திலேயே தொடங்கியது எனலாம். 'வாஜபேயம்','அசுவமேதம்' போன்ற பல வேதச் சடங்குகளைச் செய்து முடித்ததாகப் பெருமை கொள்ளும் அரச குலத்தினர் தென்னிந்தியாவில் அதிகமாகக் காணப்படுகின்றனர். சுங்கரின் வீழ்ச்சிக்கும் குப்தரின் எழுச்சிக்கும் இடைப்பட்ட காலத்தில், இந்திய வரலாற்று அரங்கில் நாயகர்களாய் விளங்கிய வடக்கிலுள்ள அரசியலறிஞர் சிலரும், அந்நிய ஆட்சியாளரும், சடங்கு முறைகள் மலிந்த வேதகாலச் சமயத்தைக் கடைப்பிடிக்கவில்லையெனினும், இந்து சமயத்தின் இருபெரும் பகுதிகளான சைவத்தையும், 'பாகவத சமயம்' அல்லது வைணவத்தையும் சார்ந்தவராய் இருந்தனர்.

குப்தர் காலத்துச் சமய வாழ்க்கையில் 'பத்தி நெறி'க்கு (அன்பை அடிப்படையாகக்கொண்ட தெய்வ நம்பிக்கை) மக்களிடம் மிக்க ஆதரவு இருந்ததென்பது கண்கூடு. மனித சகோதரரிடம் பாசம் இருந்ததால், தர்ம சிந்தனையுள்ள பலசெயல்களில் மக்கள் ஈடுபட்டதோடு, மற்றச் சகோதரரின் கருத்துகளையும் ஏற்று மதித்து நடந்தார்கள். 'பத்தி' என்பது, கடவுளைத் தனியொருவனாகக் கருதி, அவனிடம் கொள்ளும் எல்லையற்ற பிரேமையாகும். காப்பாற்றும் வல்லமையும், காருண்ய உள்ளமும் படைத்த தெய்வம் நம்பத்தகுந்தது. 'பகவத் கீதை', 'ஸ்வேதாஸ்தார உபநிஷத்து' (Svetasvatara-Upanishad) ஆகியவற்றில் விளக்கப்பட்டிருக்கும் சைவ சமயப் பிரிவுகளின் அடிப்படைக் கருத்து இதுவேயாகும்.

'சலனமற்ற, நிலையான மனத்துடன் (பத்தி யோகம்) தெய்வத்தைச் சிந்திப்பவன், தெய்வத்திற்கு அரும்பணி செய்தவனுவான். சமுசார சாகரத்தைக் கடந்த இவன் முத்திக்கும் பாத்திரமானவன்.

'சம்பு' அல்லது சிவபிரானிடம் எல்லையற்ற பிரேமை கொண்ட இரண்டாம் சந்திரகுப்தனின் அமைச்சன், உதயகிரியில் குகைக் கோயில் ஒன்றை அமைத்தான்.

வணங்கத்தகுந்த பிற தெய்வங்களின்மீதுள்ள பிரேமையால் அரச குலத்தினரும், அலுவலரும், புரோகிதரும், சங்கங்களும் ஆகிய சமூகப் பிரிவினர் பலரும், பெரிய தூண்களையும், அழகிய தலைவாயில்களையும், வியப்பூட்டும் சிலைகளையும், அற்புதமான கோயில்களையும், விஷ்ணு, புத்தர் ஆகிய கடவுளரின் பெயரால் கட்டுவித்தனர். சமயத் துறையில் நிலவிய பொறையுடைமையைக் கல்வெட்டுகளிலிருந்தும், பிற இலக்கியச் சான்றுகளி

லிருந்தும் அறியலாம். வைணவ மன்னர்கள் சைவரையும் பௌத்தர்களையும் அலுவலர்களாக அமர்த்திய செய்தியையும், சமணருக்குப் பிராமணரிடமும், பிராமணர்களுக்குத் தீர்த்தங் கரர், பௌத்தர் ஆகியவரிடமும் உள்ள பாசத்தையும் சான்று கள் நன்கு விளக்குகின்றன. கங்கைச் சமவெளியில் வாழ்ந்த மக்களின் உதார குணத்தையும் நேர்மையையும் பாஹியான் எடுத்து உரைப்பர். அம் மக்கள் தெய்வங்களின் சிலைகளை ஊர்-

புத்தர் (குப்தர் காலம்)

வலமாக எடுத்துச் செல்லுதல் போன்ற விழாக்கள் கொண்டாடு வதில் ஆர்வம் கொண்டிருந்ததோடு, தருமஞ் செய்வதிலும் ஈடு பட்டிருந்தார்கள். உயிரினங்களுக்குத் தீங்கிழையாமைக் கொள் கையை ஈன சாதியினர் நீங்கலாக யாவரும் கடைப்பிடித்தனர். போதை தரும் பானங்களைத் தவிர்த்து வருவது இத் துறையில் மக்களின் விருப்பத்தை அறிவதற்கு ஒரு கருவியாய்இருந்தது.

குப்தர்கள் கால இறுதியில் இருந்த சமயப் பிரிவுகளின் பட்டியல் ஒன்று, பாணரின் 'ஹர்ஷ சரித்திரத்தில்' காணப்படும். 'திகம்பரர்' (நிருவாண-சமணர்), 'சுவேதாம்பரர்' (வெள்ளை ஆடை அணிபவர்) ஆகிய சமணர்களையும், பாகவத, பாஞ்சராத்திர வைணவர்களையும், சௌகதர் அல்லது பௌத்தர்களையும், மாஷ்காரிகள் (Mashkarins) அல்லது ஆஜீவகரையும், சாக்கியம், உலகாயதம், வைசேஷிகம், வேதாந்தம், நியாயம் போன்ற பல தத்துவங்களைக் கடைப்பிடிப்போரையும் சமண இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

குப்தர் காலத்தில் அசங்கர் (Asanga), வசுபந்து, குமார ஜீவர், திக்நாகர் (Dignaga) என்போர் புத்த சமயத் தத்துவங்களில் வல்லுநராய் விளங்கினர். தொடர்ந்த நூற்றுண்டுகளில் புத்த சமயம் வலுவிழந்து வந்தது. வடமேற்கிலும் கிழக்கிலும் ஹூணரின் படையெடுப்பினுல் பல பௌத்த விஹாரங்கள் அழிந்தன. புத்தரைக் கடவுளாக்கி, வைணவத் தெய்வங்களின் பட்டியலில் நாராயண—விஷ்ணுவின் அவதாரமென அவரையும் சேர்த்துக்கொண்டதால், சாதாரண புத்த சமயிகளுக்கும், மற்ற பிராமண சமயத்தினருக்கும் வேற்றுமை காண்பது அரிதாயிற்று. புத்த, சைவ, வைணவ அரச குலத்தினரிடையில் கலப்பு மணம் கொள்ளும் வழக்கமிருந்தது. இதனுல், சீர்திருத்த சமயத்தைச் சார்ந்தவரை, ஆதி சமயத்தினர் தம்முள் அடக்கி வந்தமையைத் தெளிவாக அறியலாம். பிராமண மன்னர்களின் அவையில் பெரும்பதவி வகித்து வந்ததைப் போல, புத்த மன்னரின் அவையிலும் பிராமணப் பிரதானிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். பௌத்த சமயத் தந்திரப் பிரிவின் (Tantricism) வளர்ச்சிக்குப்பின் வஜ்ராயண வகைப் பௌத்தத்திற்கும் (Vajrayana type of Buddhism) சைவம், சத்தி உபாசகம் (Saktism) போன்ற சமயப் பிரிவுகளுக்கும், வேற்றுமை காண்பரிதாயிற்று. சீர்திருத்தத்தில் ஆர்வம் கொண்ட புனிதக்கவிஞர் பலர் தோன்றி, விஷ்ணு, சிவன் ஆகியோரது புகழ்பாடி, மகாயான புறச்சமயக் கூற்றுகளுக்குத் தகுந்த மறுமொழிகள் கூறி, ஆதி இந்து சமயத்திற்குச் சாதகமாக மக்களின் கவனத்தைத் திருப்பினர். ஒரு காலததில், இந்துஸ்தானம் முழுவதும் நிரம்பியிருந்த புத்த சமய நிறுவனங்களின் இறுதிச் சின்னங்களைப் பன்னிரண்டாம் நூற்றுண்டிலும், அதைத் தொடர்ந்த நூற்றுண்டுகளிலும் இந்நாட்டின் மீது படையெடுத்து வந்த அந்நியர் அழித்ததால், புத்த சமயம், பிறந்த நாட்டிலிருந்து விடுதலை பெற்று மறைந்ததெனலாம்.

சமணத்திற்கு வங்காளத்திலும், ஐக்கிய மாகாணங்களிலும், தென்னிந்தியாவின் கன்னடப்பகுதிகளிலும், பல காலம் மதிப்பிருந்து வந்ததெனலாம். ஏழாம் நூற்றுண்டிலும் வங்காளத்தில் இச் சமயம் தழைத்தோங்கியது என யுவான்-சுவாங்கு கூறுவர். எனினும், மேற்கிந்தியாவிலேயே இது மிகவும் வலுப்பெற்று விளங்கியது. வெள்ளேயுடை அணிந்த சமணரின் சமயவிதிகள், கி.பி. ஐந்தாம் அல்லது ஆறும் நூற்றுண்டுகளில் 'வல்லபி' என்னுமிடத்தில் கூடிய அவையொன்றில் நடந்த விவாதங்களின் விளைவாக எழுதி வைக்கப்பட்டன. மால்யகேத இராஷ்டிரகூடர் ஆட்சியிலும், வாதாபிச் சாளுக்கியர் ஆட்சியிலும், திகம்பர சமணம் சிறப்பெய்தியது. 'விநயாதித்தியன்' (கி. பி. 680–696) என்னும் சாளுக்கிய மன்னனுக்குத் திகம்பரரின் சமயகுரு ஒருவர், ஆன்மிக ஆலோசகராய் இருந்தார். இராஷ்டிரகூடர்களில் சிறப்பு வாய்ந்த 'அமோகவர்ஷன்' (கி.பி. 815–877) சமணத்தை ஆதரித்தான். 'அன்கில்வார' (Anhilvara) குமாரபால சாளுக்கியன் (1143 1172) கல்யாண நாட்டு பிஜ்ஜல-கால சூரியன் (Bijjala-Kalachurya, 1156-1167) ஆகியோரும், சமணத்திற்கு வணக்கம் செலுத்தினர். பின்னர்க் கூறப்பட்ட குமாரபால சாளுக்கியன், சமண சமய ஆசாரியர் ஹேமசந்திரரை மிகவும் ஆதரித்து வந்தான். ஆபு (Abu), கிர்ணுர் (Girnar), சத்ருஞ்சயம் (Satrunjaya) முதலிய பல இடங்களில் காணப்படும் அற்புத ஆலயங்கள் சிலவற்றைக் குஜராத்தின் அமைச்சர்களான விமலன், வஸ்துபாலன், தேஜபாலன் என்பவர்கள் கட்டியுள்ளார்கள்.

சமணம் பௌத்தம் ஆகிய இரு சமயங்களும், நாளடைவில் மக்களிடமுள்ள ஆதரவை இழக்கத் தொடங்கின. அவை மிக்க ஆதரவு பெற்றிருந்த பகுதிகள் யாவற்றிலும் சனுதன இந்து சமயம் ஆதரவு பெற்று வளரத்தொடங்கியது. 'மத்திய தேசத்தில்' புஷ்யமித்திர சுங்கன் காலத்திலிருந்து பிராமண சமயம் சிறப்புற்று விளங்கத் தொடங்கியது. குப்தர் ஆட்சி தொடங்கிய காலத்திலிருந்து எவ்வித இடையூறுமின்றிப் பேரரசர்களின் ஆதரவு அச் சமயத்திற்குக் கிடைத்து வந்தது. புத்த சமயத்தில் மிகவும் பற்றுள்ள ஹர்ஷனேயும், மகேசுவரன் அல்லது சிவபத்தன் என அரசாங்கப்பதிவேடுகள் குறிப்பிடுகின்றன. மத்திய-இந்திய மன்னர் பலர், பிராமண நீதி நூல்களுக்கிணங்கச் சமூகத்தை அமைப்பதற்கு முற்பட்டனர். எல்லேப்புற மாகாணங்கள் சிலவற்றில் மாறுபட்ட கருத்துடைய சமயங்கள் சில காலத்திற்கு நீடித்தன. பாலர் குல மன்னரும், ஒரிஸ்ஸா நாட்டுக் 'காராரும்' (Karas), மைசூரின் மேலேக் கங்கரும், புறச்சமயங்களுக்கு ஆதரவளித்தனர். வங்காளத்தில் சேனரும், ஒரிஸ்ஸாவில் கீழைக்கங்கரும், தெற்கு முனேயில் ஹொய்சலரும், பிற்காலத் தமிழ் மன்னர்களும் அளித்த பேராதரவால், வேத புராண சமயங்கள் இறுதியில் வெற்றியுடன் விளங்கின. தக்காணத்தில் ஆறும் விக்கிரமாதித்தன் காலம் வரையிலுல் பௌத்தம் நிலேத்

திருந்தது என்பதற்குரிய சான்றுகள் உண்டு. சமணத்தின் கௌரவம் 'பிஜ்ஜால' மன்னன் காலம் வரையிலும் குன்றுதிருந் தது. இராமானுஜரின் 'ஸ்ரீ வைஷ்ணவ' சமயக் கோட்பாட்டின் எழுச்சியும், பசவரின் (Basava) 'இலிங்காயதம்' அல்லது 'வீர சைவக்' கோட்பாட்டின் எழுச்சியும், விஷ்ணு, சிவத்தொண்டர் களின் பெருமதிப்பு பெறுவதற்குப் பெரிதும் உதவின. இவ் விரு தேவதூதர்களுக்கும் முன்னோடிகள் பலரிருந்தனர்.

## சிவ வழிபாடு

குப்தராட்சியின் முற்பகுதிகளில், உயரிய அனுவலர்கள் சிவ வழிபாட்டில் ஈடுபட்டிருந்தார்கள். பாசுபதர் அல்லது சைவ ஆசாரியர்களைப்பற்றிய குறிப்புகள், குப்தர் காலத்துப் பதிவேடு களிலும் அதற்குப் பிற்கால ஏடுகளிலும் காணப்படுகின்றன. இச் செய்திகளைக் கல்வெட்டுகளிலிருந்து அறிவதோடு, வராகமிஹி ரர், பாணர், மஹேந்திரவர்ம பல்லவன், யுவான்-சுவாங் ஆகி யோரின் இலக்கியங்களிலிருந்தும் அறியலாம். கி. பி. ஆறும் ஏழாம் நூற்றுண்டுகளில் வைணவத்திற்குப் பதிலாகச் சைவ சமயம் வடவிந்தியாவில் அரசியலங்கீகாரம் பெற்ற சமயமாய் விளங்கிற்று. மிஹிரகுலன், யசோதர்மன், சசாங்கன், ஹர்ஷன் போன்ற இந் நாட்டு மன்னரும் சைவ சமயத் தொண்டராயி னர். இக்காலத்துப் பாசுபத ஆசாரியர்களுள் தலைசிறந்து விளங்கிய 'உத்தியோதகரர்' வாத்ஸ்யாயனரின் நியாய சூத்திர விளக்கத்திற்கு உரை எழுதினர். எட்டாவது நூற்றுண்டில் மலை யாளக் கரையிலுள்ள கேரள நாட்டில் பிறந்த ஆசான் ஒருவர், கோடிக்கணக்கான இந்திய மக்களுக்குச் சிவபத்தி ஏற்பட வழி வகுத்தனர். சைவ சமயப்பிரிவு எதையும் இவர் குறிப்பாகப் பின்பற்றியவரல்லர். குப்தராட்சிக்குப் பின் இந் நாட்டில் தோன்றிய தலைசிறந்த இந்து ஞானியருள் ஒருவர், பிரசித்தி பெற்ற சங்கராசாரியராவர். சங்கரர், காலடியிலுள்ள அந்தணர் குலத்தில் பிறந்தவர். தீவிர வேதாந்தியான அவர் 'ஒருமை' (அத்வைதம்) என்னும் கொள்கையைப் பரப்புவதில் முனைந் தார். பாதராணரின் பிரம்மசூத்திரங்கள், பகவத்கீதை, உபநிட தங்கள் ஆகியவற்றிலுள்ள கருத்துகளினடிப்படையில், சங்கர ரின் கொள்கைகள் உருப்பெற்றன. அவர் சிறந்த அறிஞரா யிருந்ததோடு ஆற்றலும் மிகுந்தவர். அவரது நிருவாகத் திறமைக்கு அழியாப்புகழ் பெற்று விளங்கும் மைசூரிலுள்ள சிருங் கேரி மடம், கத்தியவாரிலுள்ள துவாரகை, ஒரிஸ்ஸாவிலுள்ள பூரி, இமாலயப் பனிச்சிகரங்களிலுள்ள பத்திரிநாத் ஆகிய இடங்களிலுள்ள மடாலயங்கள் சான்று பகர்கின்றன. இளமை யில் மரணமடைந்த அவர்தம் அரிய போதனைகளை, இந்திய

நாடெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் நினைவில் கொண்டுள்ளார்கள். சைவ நெறிகளையும், சித்தாந்தத்தையும் மக்

சிவன் அல்லது மகாதேவன் (ஜாவா)

களுக்கு எடுத்துரைத்த மகான்களுள் பலர் இந்தியாவின் வடக்கெல்லையிலுள்ள காஷ்மீர மாகாணத்தில் ஒன்பதாம் நூற்றுண்டு

அல்லது அதைத் தொடர்ந்த நூற்றாண்டுகளில் தோன்றினர். காஷ்மீரச் சைவ நெறியாளரைப்போல, தமிழ், கன்னட நாடு களில் நாயன்மார்களும் (Nayanars), வீர சைவர்களும் தோன்றி னார்கள். திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்தி, மாணிக்க வாசகர் என்பவர்கள் தமிழ்நாட்டுச் சைவ ஞானிகளாவார்கள். கன்னடப் பகுதியில் சைவ சமயத்திற்குப் 'பசவர்' அருந்தொண் டாற்றினார். இவரைப்பற்றி நாம் முன்னர்க் குறித்துள்ளோம். கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த கல்யாண நாட்டுக் காலசூர்யகுல பிஜ்ஜலன் என்னும் சமண மன்னனுக்கு அமைச்சராய்ப் 'பசவர்' பணியாற்றினார். கர்நாட கப் பிரதேச வீரசைவர், சமூகச் சீர்திருத்தத்தில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தனர். பெண்டிரின் விடுதலைக்கும், பழமைக்கு அடிமைப்படும் வழக்கத்தைத் தவிர்க்கவும் பசவரின் சீடர்கள் மிகவும் முயன்றார்கள்.

## வைணவ இயக்கம்

விஷ்ணுவை வழிபடும் முறையைக் கடைப்பிடிக்கும் ஆசாரி யர்கள், குப்தராட்சியின் முற்பகுதியிலுள்ள கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறார்கள். குப்தப் பேரரசர்களும், விஷ்ணுவை வழிபடும் வழக்கமுள்ளவர்கள். 'பாகவதர்', 'பாஞ்சராத்திரர்' என்னும் இரு வைணவப் பிரிவுகளை 'பாணர்' குறிப்பிடுவர். பாக வதர் என்பவர் வாசுதேவனை வழிபடுவோர் என்றும், 'பாஞ்ச ராத்திரர்' நாராயணனை வழிபடுவோர் என்றும் பாணர் கூறு கிறார். இராஜ்யஸ்ரீயைத் (ஹர்ஷனின் சகோதரி) தேடி விந்தி யக் கானகங்களில் அலையும் காட்சியைச் சித்திரிக்கும் போது, அவர் நூலில் இக் குறிப்புகளைக் காணலாம். வாதாபி சாளுக்கிய குல ஆதி மன்னருள் சிலர், பாகவத சமயத்தைத் தழுவினர்; பாதாமியிலுள்ள கல்லில் செதுக்கப்பட்ட சித்திரங்கள், கி. பி. ஆறும் நூற்றாண்டில் வைணவத்திற்குத்தக்காணத்திலிருந்த நன் மதிப்பை விளக்குகின்றன. தென்னிந்தியா-குறிப்பாகத் தமிழ கம்-விஷ்ணுபத்தர்களின் உறைவிடமாய் இருந்ததெனப் பாக வத புராணம் குறிக்கும். தமிழ் வைணவ ஞானியருள் ஆழ்வார் கள் முதன்மையானவர்கள். இவர்களுள் மிக்க பிரசித்தி பெற்ற வர்கள், கி. பி. ஏழாம் நூற்றாண்டு அல்லது எட்டாம் நூற்றாண் டில் வாழ்ந்திருக்கக்கூடும். வைணவத்தில் பத்தி மார்க்கத்தை ஆழ்வார்கள் போதித்தார்கள். அவர்களைப் பின்பற்றிய ஆசாரி யர்களுள் பலர், ஞானமார்க்கத்தைக் கடைப்பிடித்தனர். நாத முனி, யமுனாசாரியர், இராமானுஜர் என்பவர்கள் இவ் வாசாரி யர்களுள் முதன்மையானவர்கள். இராமானுஜர், சென்னைக்

கருகிலுள்ள கிராமமொன்றிலுள்ள அந்தண மரபிலுதித்தவர்; காஞ்சிபுரத்திலும் ஸ்ரீரங்கத்திலும் தம் கருத்துகளைப் பரப்பி வந்தார். சோழ மன்னனது வெறுப்பிற்கு ஆளாகியதால், மைசூர் இராச்சியத்தின் ஹொய்சலர் அவையில் அடைக்கலம் தேடிச் சென்றார்; கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் மரணமடைந்தார். இவர் சங்கரரின் 'அத்வைத'க் கொள்கைக்குப் போட்டியாக, பத்திமார்க்கமே முத்தியடைவதற்குச் சிறந்த சாதனம் எனக் கூறினார். இவர் தம் கருத்துகளைக்கொண்ட சமயக்கோட்பாடு 'விசிஷ்டாத்துவைதம்' அல்லது வரம்பிற்குட்பட்ட ஒருமைக் கொள்கை எனப் பெயர் பெறும். இராமானுஜரின் சீடர்களுக்கு 'ஸ்ரீ வைணவர்கள்' (Sri Vaishnavas) என்பது பெயர். இடைக்காலத்தில் தோன்றிய இந்திய நாட்டின் தலைசிறந்த சீர்திருத்தவாதிகள் இவர் தம் போதனைகளினால் ஊக்கம் பெற்றார்கள்.

இராமானுஜருக்குச் சிறிது காலத்திற்குப்பின் தோன்றிய 'மத்துவாசாரியர்' வேதாந்தத்தின் ஒரு பிரிவான 'துவைத'க் கோட்பாட்டை அருளிச் சென்றார்.

## வேதச் சடங்குகள்

பல காலமாக வழக்கொழிந்து மறைந்திருந்த வேதகாலச் சடங்குகளுக்குச் சில பகுதிகளிலேனும் மீண்டும் உயிர் கொடுப்பதற்குச் சமுத்திரகுப்தன் முயன்றுவந்தான். இம் முயற்சிக்குப் பேராதரவு காட்டி, ஸவரஸ்வாமியின் பூர்வ மீமாம்ஸை, பிரபாகரன், குமரில்லன் ஆகியோரின் 'கர்ம மீமாம்ஸை' என்பவை எழுந்தன. மகாயானத்தில் ஸவரனுக்கிருக்கும் அறிவை நோக்கும்போது, குஷானிய-சாதவாகன காலத்து நாகார்ஜுனனுக்குப்பின் போந்தவனாகவே இவனைக் கருத இயலும். பிரபாகரன், ஸவரனுக்குப்பின் போந்தவன் எனினும், சங்கரருக்குச் சற்று மூத்த குமரில்லனுக்கு முந்தியவன் என அறியலாம். மீமாம்ஸகர், 'கர்ப மார்க்கம்' அல்லது வேதச் சடங்குகளைச் செய்து முடிப்பதே விடுதலைக்கு வழி என்பதை மிகவும் தீவிரமாகப் போதித்து வந்தபோதிலும், சைவ வைணவ நாயன்மார்களும் ஆசாரியர்களும், இதர தெய்வங்களை வழிபட்டு வந்த மற்றப்பத்தர்களும், கடைப்பிடித்த பத்தி மார்க்கத்தைப்போல, மக்களிடம் மிகுந்த மதிப்புப்பெற்றிருக்கவில்லை. ஆதிச்சாளுக்கிய குப்தமன்னர் காலங்களுக்குப் பின் அசுவமேத வேள்விகளை மேற்கொண்ட மன்னர் குறைவு என்பது தெளிவு.

## இலக்கியம்

குப்தர் காலத்தில் 'அரசவைப்பாக்கள்' ஆர்வத்துடன் இயற்றப்பட்டன என்பது வெகுகாலத்திற்கு முன்னரே 'பூலர்' (Buhler) குறிப்பிட்டுச் சென்றுள்ளார். 'கவிராஜன்' அல்லது கவியரசன் என்ற பெயரைச் சூடிக்கொள்வதில் அரசனுக்கு ஆனந்தம் அதிகம். அறிஞருடன் கூடிப் பழகிய அவன், நற்கவிதைக்கும் செழுமைக்கும் இடையிலிருந்த இடரை நீக்கினான். வறுமையால் வாடிய கவிஞருக்கு அவன் வாரி வழங்கினான். அவனது அவையை அலங்கரித்தவர்களுள் 'ஹரிசேனர்' மிகச் சிறந்து விளங்கினார். அலகாபாது கற்றூணிலுள்ள புகழுரையை இயற்றியவர் இவரே. சமுத்திரகுப்தனின் மகன் இரண்டாம் சந்திரகுப்தன் அல்லது விக்கிரமாதித்தியன் தகப்பன் வழி பற்றி, 'வீரசேனபா' என்னும் கவிஞரை அமைச்சராகப் பெற்றிருந்தான். இதிகாசங்களை இயற்றிய அழியாப் புகழ்பெற்ற நூலாசிரியர்களை யடுத்து, வடமொழிக் கவிஞருள் இணையற்று விளங்கும் காளிதாசரை விக்கிரமாதித்தனுடனும், அக் காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் ஆசாரிய திக்நாகருடனும் இணைத்துப் பேசுவது மரபாயிருந்து வருகிறது. ஹர்ஷனது அவையை அலங்கரித்த ரவிகீர்த்தியும் 'காளிதாசர்', 'பாரவி' ஆகியோரின் சிறப்பை ஆமோதிக்கின்றனர். வல்லபி நாட்டு மன்னர் 'பட்டி காவியத்தின்' சிறந்த நூலாசிரியருக்கு ஆதரவளித்தனர். 'மிருச்சகடிகம்', 'முத்திராராக்ஷசம்', 'தேவிசந்திரகுப்தம்' ஆகிய புகழ்மிக்க நாடகங்களை இயற்றிய ஆசிரியர்களையும் குப்தர் காலத்தவர் எனக் கருதுவது மரபெனினும், இதில் ஐயப்பாடு முழுவதும் நீங்கியபாடில்லை. அரச கவிஞர்களான ஸ்ரீ ஹர்சன், மகேந்திரவர்மன், பாணர், மயூரர், பர்த்துருஹரி, சுபந்து ஆகியோரின் இலக்கியங்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் எழுந்தன. வருங்கால அரசர்களைக் குறிக்கும் புராணப் பகுதிகள் சில, குப்தர் காலத்தில் தோன்றியிருக்கக்கூடும். மகாபாரதத்தில் காணப்படும் இடைச்செருகல்களும் இக் காலத்தவை எனக் கருதப்படுகின்றன. விஞ்ஞானத்துறையில் ஆரியபட்டர், வராகமிஹிரர் என்னும் வானசாத்திர வல்லுநர்களை இக் காலம் உலகிற்கீந்தது. தசாம்ஸ முறையை வராகமிஹிரருக்கு நெடுங்காலத்திற்கு முன்பே இந்தியர் அறிந்திருந்தனர். 'பிருகஸ்பதி', 'நாரதர்' ஆகியோரின் நீதி நூல்களும், இக் காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டுமென அறிஞர் பலர் கருதி வருகின்றனர்.

குப்தருக்குப் பிற்காலத்திலும், நூலாசிரியர்களுள் ஆடவரேயன்றிப் பெண்டிர் பலரும் காணப்படுகின்றனர். அவர்களுள்

'சீலபட்டாரிகை' (Silabhattarika) என்பவள் குறிப்பிடத் தக்கவள்; 'கௌமுதி மகோற்சவம்' என்னும் நூலும் பெண்ணொருத்தியால் எழுதப்பட்டிருக்க வேண்டுமெனினும், அவளது

(விஷ்ணு வங்காளம்)

பெயரும்; அவள் வாழ்ந்தகாலமும் தெளிவாக அறியப்படவில்லை. ஆடவர்களுள் 'பவபூதி' என்பவரின் பெயர் பிரசித்தி பெற்று விளங்குகிறது. அவரும் வாக்பதி ராஜனும், கன்னோசி நாட்டு யசோவர்மனின் ஆதரவைப் பெற்றிருந்தனர். ஒன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் கன்னோசி அவையில், 'ராஜசேகரர்' வாழ்ந்து வந்தார்.

குப்தர் காலத்திற்குப் பின் எழுந்த வீரகாவியமும், நாடக இலக்கியமும், 'பாரவி', 'பவபூதி' என்பவர்களின் நூல்களைப் போலச் சிறப்புற்றிருக்கவில்லை. என்றாலும், பிற்காலத்தில், மாகன் ஸ்ரீ ஹர்ஷன், பட்டநாராயணர், க்ஷேமேஸ்வரர், கிருஷ்ணமிசிரர் என்னும் நூலாசிரியர்கள் நற்கவிதையும் சுவைமிக்க நாடகங்களும் ஆக்கித்தந்தார்கள். பர்த்துருஹரி மறைந்த நெடுங்காலத்திற்குப் பின், இசைக்காவியம் சிறந்து விளங்கத் தொடங்கியது. பன்னிரண்டாம் நூற்றுண்டில் ஜய தேவரால் இயற்றப்பட்ட 'கீத கோவிந்தம்' வடமொழி இசை நூல்களுள் தேனினும் இனிய தீஞ்சுவை தருவதாகும். கல்வி, இலக்கியத்துறையில் போற்றுதற்குரிய பல நூல்கள் இயற்றப் பட்டன. 'தண்டின்' இயற்றியுள்ள காதல் வசன நூல்களும் 'பஞ்சதந்திரம்' போன்ற நீதிக்கதைகளின் பிற்கால வெளியீடு களும், சண்டிதேவரின் நீதிநூல்களும், காமந்தகர், சோமதேவர் ஆகியோர் இயற்றியுள்ள அரசியல் ஆராய்ச்சி நூல்களும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கவை. குப்தருக்கும் பிற்காலத்தில் வரலாற்று இலக்கியங்கள் பல எழுந்தன. இத்தகைய நூல்களைக் குப்தர் காலத்திற்குமுன் காண இயலாது. பாணரின் 'ஹர்ஷ சரிதமும்' சந்தியாகரரின் 'இராமசரிதமும்' கல்ஹணரின் 'இராஜ தரங்கிணியும்' வரலாற்று இலக்கியங்களில்முதன்மையானவை. சங்கரர், இராமானுஜர் போன்ற இக்காலத்துத்தத்துவஞானிகள் கனிஷ்கன், சாதவாகனன் காலத்துப் பேரறிஞர்களுடன் ஒப்பிடக்கூடியவர்களாகவே உள்ளார்கள். வானசாத்திரத்தில் சிறந்து விளங்கும் 'பாஸ்கரர்' யாதவராட்சிக் காலத்தில் வாழ்ந்தவர். நம் கவனத்திலிருந்துவரும் இக் கால இறுதியில் தாரா நாட்டு போஜர், கல்யாணநாட்டு மூன்றும் சோமேஸ்வரர், காஷ்மீரத்து க்ஷேமேந்திரர் ஆகிய பல்கலை வல்லுநர் வாழ்ந்து வந்தனர். காவியம், பிரசங்கம், அரசியல், தத்துவம், வான சாத்திரம், கட்டடக்கலை, மருத்துவம், இரசவாதம், இசை, ஓவியம் ஆகிய பல துறைகளில் இம் மன்னர் பேரார்வம் கொண்டிருந்தனர்.

# 15. எல்லை விஸ்தரிப்பும், பண்பாடு பரவுதலும்

பண்டைக்கால முதல் இந்திய மக்கள் வெளிநாடுகளுடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார்கள். தெளிவற்ற வரலாற்றுக்கு முந்திய காலங்களிலும், புதிய, கற்கால மனிதர், தூரக் கிழக்குப் பகுதியுடன் தொடர்பு கொண்டிருந்தனர். தரை மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் திரளாக வெளியேறி, இந்தோ-சீனுவிலும், இந்திய ஆர்ச்சி பிலாகோவிலும் அவர்கள் குடியேறியிருந்தார்கள் என நம்புவதற்கும் இடமுண்டு. பிற்காலத்தில், இந்து சமவெளியில் தலைசிறந்த நாகரிகம் ஓங்கி வளர்ந்தபோது, மேற்கு ஆசியாவுடனும் மத்திய ஆசியாவுடனும் இந்தியா தொடர்பு கொண்டிருந்தது என்பதில் ஐயமேதுமில்லை. இந்திய நாகரிகத்தை உருவாக்கிய இரு முக்கிய மக்களினங்களுள் ஆரியரும், ஒருகால் திராவிடருங்கூட வெளிநாட்டிலிருந்து இங்குக் குடியேறியவர்களே. இதனுல், இந்திய நாட்டில் அவர்கள் குடியேறுவதற்கு முன்பு எந்தெந்த நாடுகளில் வசித்தார்களோ, அந்தந்த நாடுகளுடன் சிறிது காலமாவது தொடர்பு இருந்திருக்க வேண்டும். எனவே, இந்தியா பிற நாடுகளுடன் தொடர்பின்றிக் கிணற்றுத்தவளையாய் என்றுமே வாழ்ந்ததில்லை என உறுதியாகக் கூறலாம்.

வரலாற்று அறிவிற்கு எட்டிய காலம் முதல், இந்திய நாட்டைச் சுற்றிலுமுள்ள கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளிலுள்ள உலகநாடுகளுடன, இந்தியா தொடர்பு கொண்டிருந்தது. மேற்கில், பாபிலோனியா, எகிப்து, சிரியா ஆகிய நாடுகளுடன் வாணிகத் தொடர்பிருந்தது. தொன்மையான காலச் செய்திகளைப் பொறுத்த வரையிலும் மறைமுகச் சான்றுகளே நமக்குக் கிட்டுகின்றன. உதாரணமாக, வெளிநாடுகளில் கண்டெடுக்கப்படும் இந்தியப் பொருள்கள் அலலது அப்பொருள்களுக்கு வழங்கிவரும இந்தியப் பெயர்கள் ஆகியவைகளே நமக்கிருக்கும் ஆதாரங்களாகின்றன. மௌரியர் காலம் முதல் தக்க சான்றுகள் கிட்டுகின்றன. இவ் வாணிகத் தொடர்பைப்பற்றிய விரிவான செய்தி கி. பி. முதல நூற்ருண்டிலேயே நமக்குக் கிடைக்கிறது. இந் நூற்ருண்டின் பிற்பகுதியில், எகிப்து நாட்டில்

வாழ்ந்துவந்த கிரேக்க மாலுமி, செங்கடல், அரபிக்கடல் வழியாக இந்திய நாட்டிற்கு ஒரு பிரயாணத்தை மேற்கொண்டு, தன் அனுபவங்களைப் 'பெரிப்புளூஸ் ஆப் தி எரித்ரேயன் ஸீ' (Periplus of the Erythraen sea) என்னும் நூலில் குறித்தான். இந்தியாவுக்கும் மேலைநாடுகளுக்குமிடையில் நெருங்கிய வாணிகத் தொடர்பிருந்ததென்பதை இந் நூலிலிருந்து அறியலாம். பார்பரைக், பாரிகாசா முசிரிஸ், நெல்சிந்தா, பகாரா, கொற்கை, புகார் எனப் பல முக்கியத் துறைமுகங்கள் கடற்கரையிலிருந்தன. இந்தியாவில் தயாரான கப்பல்கள், மேலை நாட்டினரால் பெரிதும் விரும்பப்பட்ட பவழம், விலையுயர்ந்த இரத்தினங்கள், வாசனைத்திரவியங்கள், தைலங்கள், பருத்தி, மஸ்லின் துணிகள் முதலிய வியாபாரப் பொருள்களை ஏந்தி இத் துறைமுகங்களிலிருந்து புறப்பட்டுச் சென்றன.

உள்நாட்டு நகரங்களிலிருந்து துறைமுகங்களுக்குப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு ஏற்ற சாலைகள் பல இருந்தன. வாணிகத்திற்கென இந்தியர் சிலர் அரபிக்கடலிலுள்ள தீவுகளில் தங்கினர் என்பதும் 'சௌகாத்திரா' (Socotro) என்னும் தீவில் இந்திய வணிகர் குடியேறியிருந்தனர் என்பதும் அந் நூலிலிருந்து அறியலாகும்.

பெரிப்புளூஸ் நூலில் கிடைக்கும் செய்திகளோடு பிற்கால நூலாசிரியர்களின் குறிப்புகளும் கிடைக்கின்றன. மேற்கோளாக, பிளினி, 'போகப் பொருள்களை வாங்குவதற்கென ரோமாபுரி ஆண்டுதோறும் இந்திய நாட்டிற்கு ஒரு மில்லியன் செஸ்டர்களை அனுப்புகிறது,' என வருந்துகிருன். இந்திய நாட்டில் கண்டெடுக்கப்படும் ஏராளமான ரோமானிய நாணயங்கள், பிளினியின் கூற்றை மெய்ப்பிக்கின்றன. இந் நாணயங்கள் இந்தியப் பொருள்களைப் பெறுவதற்காக ரோமானியரால் அளிக்கப்பட்டு, வணிகர்களால் இந் நாட்டிற்கு எடுத்து வரப்பட்டிருக்கக் கூடும்.

ரோமானிய அரசவைகளுக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தூதுகோஷ்டிகள் இச் செய்தியை மேலும் உறுதிப்படுத்துகின்றன. கி. மு. 26இல், அல்லது அதற்குச் சற்று முன் பின்னுக, பாண்டிய அரசன், அகஸ்டஸின் அவைக்குத் தூது கோஷ்டி ஒன்றை அனுப்பினுன்; பிற்காலங்களில் ரோமானிய அரசவைகளுக்கு ஏழு தூது கோஷ்டிகள் அனுப்பப்பட்டன என்பதும் அறிகிறோம். ரோம் முதலிய மேலைநாடுகளுடன் நடைபெற்ற வாணிகம், அலெக்ஸாந்திரியா என்னும் முக்கியத் துறைமுகம்

வழியாக நடைபெற்றது. செங்கடற்கரை வரையிலும் கடல் மார்க்கமாக எடுத்துச்செல்லப்பட்ட வாணிகப் பொருள்கள், அலெக்ஸாந்திரியாவிலிருந்து தரைமார்க்கமாகவோ, அல்லது நைல் நதியின் வாய்க்காலின் மூலம் சிறு படகுகளிலோ எடுத்துச் செல்லப்பட்டன. இந்தியாவிலிருந்து மத்தியதரைக் கடற்கரைக்குத் தரைமார்க்கமொன்றும் இருந்தது. பாரசீகம் வழியாகச் சென்ற இத் தரைமார்க்கம், காஸ்பியன் கடற்கரை ஓரமாகச் சென்று சிரியாவையும், ஆசியா மைனரையும் அடைந்தது. மகா அலெக்ஸாந்தரின் படையெடுப்பிற்குப்பின் இத் தரை மார்க்கம் சிறப்புற்று விளங்கியது. கிறிஸ்து சகாத்தத்தின் முதல் நூற்றுண்டுகளில் பால்மிரா (Paulmyra-சிரியா நாடு) முக்கிய வாணிகத் தலமாய் விளங்கியது.

கி. பி. ஏழாம் நூற்றுண்டில் அராபியரின் ஆதிக்கம் வலுவடைந்தபோது கடல், தரை மார்க்கங்கள் அவர்தம் வசமாயின. அக் காலத்திலிருந்து அராபியர் இந்தியாவுடன் தொடர்ந்து வாணிகம் நடத்தினர். இவ் வாணிகத் தொடர்பைப்பற்றிய சுவையான குறிப்புகள் அராபிய வணிகரின் ஏடுகளில் காணப்படுகின்றன.

வாணிகவியலையும் வாணிகத்தையும், பண்பாடும் நாகரிகமும் தொடருமென்பது யாவரும் நன்கறிந்ததே. இந்திய சமயக் கருத்துகள் மேலை நாடுகளுக்குப் பரவியதைக் காண்கிறோம். அசோகர் மேற்றி ஆசியா, வடக்கு ஆப்பிரிக்கா, தென்கிழக்கு ஐரோப்பா ஆகிய இடங்களுக்குப் புத்த சமயத் தூதுவரை அனுப்பியதோடு அந் நாடுகளில் சமயக்கருத்துகள் நன்கு வரவேற்கப்பட்டன என்றும் அறிவிக்கிறர். அசோகர் கூற்றின் உண்மையைச் சோதிக்கவல்ல தனிப்பட்ட சான்றுகள் இல்லை. அசோகருக்குப் பின்னும் அலெக்ஸாந்திரிய மக்கள் புத்த சமயக் கருத்துகளில் அக்கறை கொண்டிருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. புத்த பிராமண சமயங்கள், இஸ்லாமிய கருத்துகள் தோன்றுவதற்கு முன், மேற்கு ஆசியாவிலுள்ள பல நாடுகளில் பரவியிருந்தன. இந்தியத் தத்துவங்களையும் இலக்கியங்களையும் மேலை நாட்டினர் அறிந்திருந்தனர் என்பதும் மறுக்கமுடியாத உண்மை. மேலைநாட்டுப் பண்பாடும் இந்திய நாட்டில் நுழைந்தது என்பதிலும் ஐயமில்லை. கிரேக்க, ரோமானிய வானசாத்திர அறிவும், இந்தியக்கலை, நாணயம் வெளியிடுதல் ஆகிய துறைகளில் கிரேக்க ஆதிக்கமும் விவாதத்திற்கிடமுள்ள செய்திகள். இந்தியப் பண்பாட்டை அராபியர் நன்கு நுகர்ந்து, வாணிகப் பொருளோடு மேலைநாட்டிற்கு எடுத்துச் சென்றனர். இந்திய மருத்துவ அறிவும், கணிதத் துறையில் வியப்பூட்டும் இந்தி

யத் தசாமிச முறையும், அராபியர் மூலம் உலகிற்கே உரிய பொதுச் சொத்துகளாயின. மத்திய ஆசியாவில் பண்பாட்டு ஆதிக்கம் வாணிகத் தொடர்பைவிட மிகுந்திருந்தது என்னலாம். அங்குத் தூதுவர்களின் பிரசாரத்தாலும், குஷானரின் அரசியல் ஆதிக்கத்தாலும், காஸ்பியன் கடலுக்கும் சீனச்சுவருக்கும் இடையிலுள்ள பரந்த நிலப்பகுதிகளில் குடியேறியிருந்த நாடோடி மக்களின் பொதுச் சமயமாகப் புத்த சமயம் சிறப்புற்று விளங்கியது. இக் காலத்தில் கோட்டான் (Kottan) என வழங்கப்படும் பகுதியைச் சுற்றிலும் இந்தியர் பலர் குடியேறியிருந்தனர். இப் பகுதியின் இயற்கை வளம் இப்போது முற்றிலும் மாறியிருப்பதால், ஒரு காலத்தில் இங்கு இந்தியக் குடியேற்ற நாடுகள் பல இருந்தன என்பதை நம்மால் எண்ணிப் பார்க்கவும் இயலாது. இப் பகுதி முழுவதும் சிதறிக் கிடந்த இந்தியக் குடியேற்ற நாடுகள் தக்ளமகான் (Taklamakan) பாலைவன மணலிற் புதைந்து கிடக்கின்றன. சர் ஆரல் ஸ்டெயின் என்பவரால் கடுமையான இந் நிலப் பகுதியில் மேறகொள்ளப்பட்ட புதைபொருளாராய்ச்சியின் விளைவாகப் பல புத்த விஹாரங்களும், ஸ்தூபிகளும், பிராமண புத்தசமயக் கடவுளரின் சிலைகளும், இந்திய மொழியிலும் வரிவடிவிலும் எழுதப்பட்ட பல பதிவேடுகளும் கண்டெடுக்கப்பட்டன. இப் பாலைவனத்தில் ஆராய்ச்சியை மேற்கொண்ட ஸர் ஆரல் ஸ்டெயின், பஞ்சாபு மாகாணத்தின் தொன்மையான நகரமொன்றில் தாம் வசிக்கும் உணர்ச்சியைப் பெற்றதாகக் கூறியுள்ளார். தொலைதூரத்திலுள்ள இந் நகரங்கள் இந்திய மயமாய் இருந்தன என்பதை எண்ணும் போதும் வியப்பு மேலிடுகிறது. இதற்கு நெடுங்காலத்திற்குப்பின் கி. மு. ஏழாம் நூற்றாண்டில் யுவான்-சுவாங் மத்திய ஆசியா வழியாக இந்திய நாட்டிற்கு வந்து திரும்பியபோது பரந்த நிலப்பகுதியில் பௌத்தமும் இந்தியக் கலாசாரமும் ஏற்றம் மிகுந்து வலுப் பெற்றிருந்ததைக் கண்டார். பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த சிறந்த மங்கோலியத் தலைவன் செங்கிஸ்கான் புத்த சமயப் பிரிவொன்றைக் கடைபபிடித்தான் என்பது நம்பப் படுகிறது.

மத்திய ஆசியாவிலிருந்து புத்த சமயம் சீனத்திற்குப் பரவியது. இன்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அந் நாட்டில் அச் சமயத்தைக் கடைப்பிடித்து வாழ்கின்றார்கள். முற்காலச் சீனப் பண்பாட்டின்மீது பௌத்தமும் இந்தியக் கலாசாரமும் கொண்டிருந்த ஆதிக்கத்தைச் சித்திரிப்பது மிகக்கடினம். புதியதொரு சமய மாற்றத்தை ஏற்ற அந் நாட்டில் இயற்கையான ஆர்வம் மிகுந்தது. இந்திய புத்த சமயத்தினரின் சமயக்

கருத்துகளையும், சடங்கு முறைகளையும் நேரில் அறிந்துகொள்ளும் பொருட்டும் பௌத்தச் சிலைகளையும் இலக்கியங்களையும் சேகரிக்கும் பொருட்டும் சீனத் துறவியர் பலர் தரை மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் பயங்கரமான பிரயாணங்களை மேற்கொண்டு, சாரிசாரியாய் இந்திய நாட்டை நோக்கி விரைந்தனர். நூருயிரக்கணக்கான பௌத்த இலக்கியங்கள் இந்திய நாட்டினின்றும் எடுத்துச் செல்லப்பட்டுச் சீனமொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. சீனர் வடமொழியையும் பாலி மொழியையும் கற்றதோடு, இந்தியப் புலவர்களையும் சீன நாட்டிற்கு அழைத்து, பௌத்தப் புனித நூல்களின் மொழி பெயர்ப்பென்னும் கடுமையான வேலையில் தங்களுக்குத் துணையாக ஈடுபடுத்தினர்கள். நூற்றுக்கணக்கான இந்தியப் புலவர்கள் சீனுவில் தங்கி, இப் புனிதத் திருப்பணிக்குத் தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்தார்கள். சீனத்தில் பௌத்த இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகள் சில கிடைக்கின்றன. அவ் விலக்கியங்களின் மூலப் புத்தகங்கள் இந்திய நாட்டிலும் கிடைப்பதில்லை என்பது வியப்புக்குரிய செய்தி! சீனத்துடன் ஏற்பட்ட இச் சமயத் தொடர்போடு அரசியல், வணிகவியல் தொடர்புகளும் கடல் மார்க்கமாக நெடுங்காலத்திற்கு முன்னரே ஏற்பட்டிருந்தன.

சீனத்திலிருந்து கொரியாவிற்கும், கொரியாவிலிருந்து ஜப்பானுக்கும் பௌத்தம் பரவியது. இவ் விரு நாடுகளிலும சென்ற ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக மககளின் வாழ்க்கையைச் செப்பனிட்டுப் பௌத்தம் இன்றும் இருந்து வருகிறது.

திபெத்து இவ் வடக்கு நாடுகளுக்கும், இந்தியாவிற்கும் இடையில் சிறு நாடாய் இருந்து வருகிறது. இன்றிருப்பதுபோலப் பிரிவுபட்டுத் தனித்ததொரு பகுதியாய் திபெத்து இருந்ததில்லை. சீனத்திலிருந்து நேப்பாளத்திற்குச் செல்லும் பெருவழியொன்று திபெத்து மூலமாகச் சென்றது. கி.பி. ஏழாம் நூற்றுண்டில் அது வலிமை பெற்ற நாடாய் விளங்கியது. அப்போது 'சிராங்ஸான்-காம்போ' (Srong Tsan Gampo) என்னும் சிறந்த அந் நாட்டு மன்னனொருவன் (கி. பி. ஏழாம் நூற்றுண்டு) பௌத்தத்தைத் திபெத்தில் புகுத்தினுன். சீனத்திலிருந்தும் நேப்பாளத்திலிருந்தும் இளவரசிகளை அவன் மணந்திருந்தான். அவ் விளவரசிகள் அவனைப் புதிய சமயத்திற்கு மாற்றியிருக்கக்கூடும். புதிய சமயக் கருத்துகளோடு இந்திய வரி வடிவங்களையும் அவன் புகுத்திஞன். இவ் வரி வடிவங்கள் கோட்டான் (Khottan) பகுதியில் வழக்கிலிருந்தன. திபெத்தில் புதிய நாகரிகமும் பண்பாடும் தோன்றி வளர்வதற்கு வழிவகுக்கப்பட்டது. சீன நாட்டினரைப்

போலத் திபெத்தியப் பௌத்தர்களும் பேரளவில் இந்தியா விற்கு விஜயம் செய்து, மிகவும் அருகிலேயே இந்தியா இருந்த மையால், புத்த சமயத்தின் பிறப்பிடமான இந்தியாவோடு நெருங்கிய தொடர்பேற்படுத்திக் கொண்டார்கள். வங்காளத்துப் பாலர் குலமன்னரும், திபெத்தில் புத்தசமயச் சீர்திருத்தத்திற்கு உதவியதால், இவ் விரு நாடுகளுக்குமிடையே நெருங்கிய உறவு ஏற்பட்டது. நாளந்தா விக்கிரமசீலா, ஆகிய கல்விக்கூடங்களில் திபெத்தியத் துறவிகள் கல்வி கற்றார்கள். இந்திய பௌத்த பிட்சுகளும் திபெத்திற்கு விஜயம் செய்தார்கள். கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த அதிச, தீபங்கரர் (Atisa Dipankara) என்னும் புத்த பிட்சு, நயபாலன் (Nayapala) ஆட்சியில்—கி. பி. பதினோராம் நூற்றாண்டில்—திபெத்திற்கு விஜயம் செய்தார். இன்றும் அவரது நினைவு திபெத்தில் பசுமையாய் உள்ளது. நூற்றுக் கணக்கான புனிதப் புத்த சமய நூல்கள் திபெத்திய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. அவற்றுள்ளிரண்டு—தஞ்சூர் (Tanjur), கஞ்சூர் (Kanjur) என்பன—இன்றும் வழக்கிலிருக்கின்றன.

கடல் கடந்து பிரயாணம் செய்யும் முயற்சி தூரக்கிழக்கில் அதிகமாய்ப் பலனளித்தது. வங்காளக் குடாக்கடலைக் கடந்து இந்தோ-சீனவும், மலேய ஆர்ச்சிபிலாகோவும் அமைந்திருந்தன. அங்கு நிரம்பியிருந்த ஆதிவாசிகளிடம் உலக வாசனைத் திரவிய வாணிகம் ஏகபோக உரிமையாய் இருந்து வந்தது. வளமிக்க அப் பகுதிகளின் தாதுப் பொருள்கள் நிரம்பியிருந்தது. இந்தியரின் கவனத்தைக் கவர்ந்தது. இந்தியாவின் கீழ்க்கரையில் கங்கையிலிருந்து குமரிமுனை வரை பல துறைமுகங்கள் இருந்தன. பெரிப்புளூஸ் என்னும் நூலில் இத் துறைமுகங்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இந் நூலின் ஆசிரியர் தூரக் கிழக்கு நாடுகளைக் 'கிரைஸி' (Chryes) அல்லது 'பொன்னாடு' எனக் குறிக்கிறார். வங்காளத்திலிருந்து இந் நாட்டிற்குக் கரையோரப் பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அவர் திட்டமாகக் கூறுவிடினும் அதற்குரிய குறிப்புகளை அறிவிக்கிறார். கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் மலேயாத் தீபகற்பம், சுமத்திரா, ஜாவாத் தீவுகள் ஆகியவைகளிலுள்ள முக்கிய வாணிகத் தலங்களைத் தாலமி என்பார் அறிந்திருந்தார். பெயர்கள் வடமொழியில் உள்ளன. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தூரக் கிழக்கு நாடுகளுடன் இந்தியர் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதில் ஐயமில்லை. பாலூராவிலிருந்து (Palura-கஞ்சாம் மாவட்டத்தில் சிக்காகோவிற்கு அருகில் உள்ளது) மலேயாத் தீபகற்பத்திற்குச் செல்லும் நேர் வழியொன்று இருந்ததாகத் தாலமியின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம்.

கடல் கடந்து தூர நாடுகளுக்குச் செல்வதன் பொருட்டு மேற்கொள்ளப்படும் பயங்கரமான பிரயாணங்களைப்பற்றிய

சுவையான குறிப்புகளை இந்திய இலக்கியங்களிற் காணலாம். ஜாதகக் கதைகள், கதாசரித் சாகரம் போன்ற நூல்களிலும் சுவர்ண பூமிக்குச் செல்லும் வணிகரின் பிரயாணச் செய்திகள் இடம் பெறுகின்றன. தூரக் கிழக்கிலுள்ள பல நாடுகளுக்குப் 'பொன்விளையும் பூமி' என்னும் பெயர் வழங்கப்பட்டிருந்தது. பொன்னுலான பூமியை உடைய நாடு எனக் கருதப்பட்ட இந் நாட்டிற்கு விஜயம் செய்த வணிகர், பெரும் பொருள்களுடன் திரும்பினர். மற்றும் பலர், நாவாய்கள் உடைந்ததால் பொருள் களை இழந்து, பல இன்னல்களுக்கும் இலக்காயினர் என்பதும் தெரியவரும். முன்னோர் விட்டுச் சென்ற சொத்துகளை இழந்த க்ஷத்திரிய இளவல்கள், இழந்த சொத்துகளை மீண்டும் அடைவதன் பொருட்டுச் சுவர்ண பூமிக்குச் செல்வதைப் பல இலக்கியங்கள் சித்திரிக்கின்றன.

க்ஷத்திரிய இளவல்களின் முயற்சியால் தொலைநாடுகளில் இந்திய அரசியல் ஆதிக்கம் நிறுவப்பட்டிருக்கக்கூடும். கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து இப் பகுதிகளில் இந்தியப் பெயருடைய மன்னர்கள் ஆண்டுவந்ததை அறிகிறோம். அவர் களுடை சமயம், பழக்கவழக்கங்கள், மொழி ஆகிய யாவும் இந்தியருடையனவே. இவைகளை இந்தியக் குடியேற்ற நாடுகள் எனக் கருதுவதில் தவறில்லை. கி. பி. இரண்டாம், ஐந் தாம் நூற்றாண்டுகளின் இடைப்பகுதியில் மலேயாத் தீபகற்பம், கம்போடியா, அன்னம், ஜாவா, பலி, போர்னியோ, சுமத்திராத் தீவுகள் ஆகிய இடங்களில் இந்தியக் குடியேற்ற நாடுகள் தோன்றியிருக்கவேண்டும். இந் நாடுகளின் வரலாறு அங்குள்ள வடமொழிக் கல்வெட்டுகளிலிருந்தும், சீனர் விட்டுச் சென் றிருக்கும் குறிப்புகளிலிருந்தும் அறியப்படும். பிராமண சமயம்—குறிப்பாகச் சைவம்—இந் நாடுகளில் பரவியிருந்தது; பௌத்தக் கொள்கைகளும் பரவியிருந்தன; அப் பகுதிகளின் ஆதிக் குடிகளின் ஆட்சியாளரின் பண்பாட்டு முறைகளைப் பின்பற்றத் தொடங்கியதும் ஈரினத்தினர் இடையிலும் கருத்துப் பரிவர்த் தனைகள் தோன்றின. இந்துப் பழக்கவழக்கங்களும், இம் மக்க ளுடன் ஏற்பட்ட கூட்டுறவால் சிறிது மாறுதல் அடைந்தன. என்றாலும், ஓராயிரம் ஆண்டுகள்வரை இந்திய நாகரிகத்தின் சிறப்பியல்புகள் இப் பகுதியிலுள்ள சமுதாயத்தினரால் அதிக மாகக் கடைப்பிடிக்கப்பட்டன.

குடியேறிய இந்தியர்கள் ஏற்படுத்திய அரசுகளிற்சில, ஓராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக, இந்தியாவில் இந்து ஆட்சி மறைந்த பின்னருங்கூடச் சிறப்புற்று விளங்கின. இந்தோ சீனு மாநிலத்தில் சம்பா, காம்போஜம் என்ற சத்திவாய்ந்த இரண்டு அரசுகள் எழுந்தன. இக் கால அன்னம் (Annam) பகுதி முழுவதையும் சம்பா அரசு தன்னுள் அடக்கியிருந்தது.

சம்பாவை ஆண்ட மன்னர்களுள் ஜெயபரமேசுவர வர்மதேவ ஈஸ்வரமூர்த்தி (1050-1060), உருத்திரவர்மன் (1061-1069), ஹரி வர்மன் (1070-1081), மஹாராஜாதிராஜ ஸ்ரீ ஜெய இந்திய வர்மன் (1163-1130), ஜெயஸிம்ஹவர்மன் (1257-1287) ஆகியோர் பெருவீரராய் விளங்கினர். தம் நாட்டை மேற்குப் பகுதியிலிருந்துவந்த காம்போஜர்களது தாக்குதல்களிலிருந்தும், மாபெரு மங்கோலியத் தலைவன் குப்ளேகானின் தாக்குதலிலிருந்தும் பாதுகாத்தனர்; சீன அரசர்களுடன் அரசியல் தொடர்புகொண்டிருந்தனர். 1800 ஆண்டுகள் சிறப்புற அரசு செலுத்தியபின் (கி. பி. 1450-1471) அவர்களது ஆதிக்கம் குறைந்தது. வடபகுதியிலிருந்து அன்னமியர்கள் விடாது படையெடுத்ததால், பதினைரும் நூற்றாண்டில் மங்கோலிய நாடோடிகளால் வலியிழந்த இந்து சாம்ராச்சியம் நொறுக்கப்பட்டது. சம்பாவில் பிரசித்திபெற்ற நகரங்கள் பல இருந்தன. நாடு முழுவதும் அழகான இந்து, புத்தக் கோயில்களும் எழுப்பப் பட்டிருந்தன.

இந்து சாம்ராச்சியமான காம்போஜத்தின் எழுச்சியைப் பற்றிய தெளிவான செய்திகளில்லை. கௌண்டின்யன் என்பவன், நாக இளவரசியான சோமா என்பவளை மணந்து, காம்போஜத்தின் அரசகுலத்தைத் தோற்றுவித்தான் என்பதைப் பழங்காலக் கதையொன்றிலிருந்து அறியலாம். அவன் துரோணரின் மகன் அசுவத்தாமனிடமிருந்து பெற்ற ஈட்டியொன்றை அங்கு நாட்டுவித்தான். இந்திரபிரஸ்த மன்னன், ஆதித்திய வமிசனைக் காம்போஜ நாட்டின் அரசனுக்கினன் என்னும் மற்றுமொரு பரம்பரைச் செய்தி கூறும். எவ்வாறிருப்பினும், காம்போஜத்தின் ஆதி இந்து அரசு கி. பி. முதலாம் அல்லது இரண்டாம் நூற்றண்டில் தோன்றியிருக்கவேண்டும். கம்போடியாவின் தெற்குப்பகுதியில் அமைந்த இதைச் சீனர் பியூனன் (Funan) எனக் கூறுவர். வலிமை மிகப்பெற்ற இவ்வரசு, பல அடிமை நாடுகளைக் கொண்டிருந்தது. தெற்கு முனையில் டுவன்சியன் (Tuen Sien) என்னும் மற்றுமோர் அடிமை நாடு இருந்தது. இந் நாட்டைப்பற்றிச் சீன நூலாசிரியர் ஒருவர் பின்வருமாறு குறிப்பார்:

'ஆயிரவருக்கு அதிகமான பிராமணர் இங்கு வசிக்கின்றனர். அவர்களின் கொள்கைகளை மக்கள் ஏற்று நடக்கின்றூர்கள்; தங்கள் பெண்களையும் அவர்களுக்கு மணமுடித்து வைக்கின்றூர்கள். அவர்களுடைய புனித இலக்கியங்களை அல்லும் பகலும் ஓதுகிறூர்கள்.'

பியூனன் நாட்டு மன்னர்கள் இந்தியாவிற்கும், சீனுவிற்கும் பல தூதுவர்களை அனுப்பினுர்கள்.

ஒரு காலத்தில் பியூனன் நாட்டின் அடிமை நாடுகளில் ஒன்றாய் இருந்த காம்போஜ தேசம், ஆறாம் நூற்றாண்டில் வலுவடைந்து, முதன்மை பெற்றது. வடகிழக்கில் சிறு பகுதியாய் இருந்த காம்போஜம், மிகப்பெரிய நாடாய் விரிந்தது. அத்தேசத்தின் மன்னர்கள் தொள்ளாயிரம் ஆண்டுகள் மிக்க சிறப்புடன் அரசு செலுத்தினார்கள். இரண்டாம் ஜெயவர்மன், ஏழாம் ஜெயவர்மன், யசோவர்மன், இரண்டாம் சூர்யவர்மன் ஆகியோர் இந் நாட்டுத் தலைசிறந்த மன்னருள் சிலர். கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் கிழக்குத் திக்கிலிருந்து அன்னம் நாட்டினரின் படையெடுப்பும் மேற்கிலிருந்து தாய்களின் (Thais-சயாமை வெற்றி கண்டவர்கள்) படையெடுப்பும் பிரசித்திபெற்ற காம்போஜ நாட்டைச் சிற்றரசாகச் சிதைத்தன. அப் பகுதி இன்றும் பிரெஞ்சுக்காரரின் பாதுகாப்பில் இருந்து வருகிறது.

சம்பாவைக்காட்டிலும், காம்போஜ நாடு மிகச்சிறந்து விளங்கியது. இக் காலக் கம்போடியா நீங்கலாக, கொச்சின் சீனா, லேயோஸ், சையாம், பர்மாவின் பகுதிகள், மலேயாத் தீபகற்பம் ஆகியவைகளும் காம்போஜப் பேரரசு எல்லைக்குள் அடங்கியிருந்தன. வடமொழிக் கல்வெட்டுகள் பல அந் நாட்டு மன்னர்களின் விரிவான வரலாற்றை அறிவிக்கின்றன. ஆங்கோர் வாட்டு (Angkor Vat) 'ஆங்கோர்தாம்' போன்ற நூற்றுக்கணக்கான அற்புதக் கோவில்கள் இன்றும் அம் மன்னராட்சியின் சிறப்புகளையும் செழிப்பையும் எடுத்தியம்புகின்றன.

'ஆங்கோர் வாட்டு' உலக அதிசயங்களுள் ஒன்று. விஷ்ணுவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட இக் கோயில், கூரையிடப்பட்ட கட்டடம் ஒன்றன்மேல் நிற்கிறது. மேல் தளம் ஒவ்வொன்றும், கூரையுடன் கூடிய மேற்றட்டுகளை உடையது. அவை சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. மேற்றட்டு ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் செல்வதற்கு வசதியான படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பல கோபுரங்களும் (spires) காணப்படுகின்றன. மூன்றாவது, இறுதி மேற்றட்டுகளிலுள்ள நான்கு முனைகளிலும் எழுப்பப்பட்டுள்ள எட்டுக் கோபுரங்களும் 180 அடி உயரமுள்ளவை. மூன்றாம் மேற்றட்டைக் கடந்தும், கோவிலின் மையப்பகுதியை அடையலாம். அதன் உயர்ந்த கோபுரம் (பூமியிலிருந்து 213 அடி உயரத்திலுள்ளது) அப்பகுதி முழுவதும் வியாபிக்கிறது. கட்டடத்தைச் சுற்றிலும் கற்சுவர்கள் அமைந்துள்ளன. கீழ் மேலாக, மூன்றின்கீழ் இரண்டு மைலும், தெற்கு வடக்காக அரை மைல் விஸ்தீரணமும் உள்ள இச் சுவரில், பல மேற்றட்டுகளும் அகன்ற வாயில்களும் அமைக்கப்பட்டுள்ளன. சுவருக்கு வெளியே 700 அடி ஆழமுள்ள அகழி காணப்படும். இருமருங்கிலும் வேலைப்பாடமைந்த சிறு தூண்களையுடைய கைப்பிடிச்சுவர்களோடு கூடிய, 36 அடி அகலமுள்ள கல்லா

லான நடைபாதையொன்றும், அகழியின் குறுக்கில் அமைக்கப் பட்டுள்ளது. கற்பாதையைத் தொடர்ந்து வெளிச்சுவரின் தலைவாயிலிலிருந்து முதல் மேற்றட்டின் வாயில்வரையிலும், சுமார் இரண்டு பர்லாங்குத் தூரத்திற்கு அகன்ற சாலையும் அமைக்கப்பட்டுள்ளது.

'ஆங்கோர் தாம்' (நக்ரதாமா) என்பது ஏழாம் ஜயவர்ம மன்னனுல் நிறுவப்பட்ட தலைநகரின் இக்காலப் பெயர். சதுர வடிவுள்ள இந் நகரத்தின் ஒவ்வொரு பக்கமும் இரண்டு மைல் நீளமுள்ளது. நகரத்தைச் சுற்றிலும் உயர்ந்த கற்சுவர்களும், சுவர்களுக்கு வெளியில் 330 அடி அகலமுள்ள அகழி ஒன்றும் காணப்படுகின்றன. நகரின் மையத்தில் அழகுமிக்க 'பையான்' (Bayon) கோயில் அமைந்துள்ளது. 'பிரமிடு' (Pyramid) வடிவி லுள்ள இக் கோவில் நாற்பது உயர்ந்த கோபுரங்களையுடைய தாயும் மூன்றடுக்குகள் கொண்டதாயும் காணப்படுகிறது. கட்டடம் முழுவதும் அடித்தளமாகக் கொண்டிருக்கும் மையக் கோபுரமொன்று 150 அடி உயரமுள்ளது. கோபுரம் ஒவ்வொன் றிலும், நாற்புறங்களிலும் சிவபிரானின் அழகிய சிலை, தியானத் தில் அமர்ந்திருக்கும் கோலத்தில் செதுக்கப்பட்டுள்ளது. மதச் சார்பற்ற பெரிய கட்டடங்கள் 'பையான்' கோவிலைச் சுற்றிலும் அமைந்திருக்கின்றன.

நகரத்தின் பல வாயில்கள், கோபுரங்களும் காவலாளிகள் தங்குமிடங்களும்கொண்ட மாபெருங்கட்டடங்களாய்விளங்கின. 100 அடி அகலமுள்ள ஐந்து பெருவழிகள் ஒரு மைல் நீளத்திற்கு அமைக்கப்பட்டு, நகரத்தின் மத்தியைச் சென்றடைகின்றன. கரைகளுடன் கூடிய ஏராளமான ஏரிகளும், 1200 அடி நீளமும் 15 அடி உயரமுமுள்ள சிறந்த சிற்ப வேலைப்பாடுகளமைந்த உப்பரிகைகளும் நகரை அலங்கரித்தன. சுருங்கக் கூறுமளவில் ஒவ்வொன்றும் உன்னத நோக்குடன் அமைக்கப்பட்டு, அக் காலத்தில் உலக முழுவதிலுமுள்ள நகரங்களில், மிகச்சிறந்த ஒன்ருய் அந் நகரம் விளங்கியது.

மலேயாத் தீபகற்பமும், இந்திய ஆர்ச்சிபிலாகோவும் இரு பெரிய இந்து சாம்ராச்சியங்களின் எழுச்சியையும் வீழ்ச்சியை யும் கண்டன. கி.பி. எட்டாம் நூற்ருண்டில் சைலேந்திர குலத் தினரால் முதற்பேரரசு அமைக்கப்பட்டது. மலேயாத் தீப கற்பமும் சற்றேறக்குறைய ஆர்ச்சிபிலாகோப் பகுதியின் முழுப் பகுதியும், சுமத்திரா, ஜாவா, பலி, போர்னியோ முதலிய தீவு களும் இப் பேரரசில் அடங்கியிருந்தன. இப் பகுதியுடன்

வாணிகம் செய்து வந்த அராபிய வாணிகர்கள், பேரரசனின் செல்வம், செல்வாக்கு, மகிமை ஆகியவைகளை வானளாவப்



ஆங்கோர் வாட்டு (கம்போடியா)

புகழ்ந்து, அரசியலதிகாரம் முழுவதும் பெற்றிருந்த பெரு மன்னனை 'மகாராஜன்' எனப் பெயரிட்டு வழங்குகின்றார்கள். வலிமையுள்ள கடற்படையொன்றை உடைய இவன், 'சம்பா,

காம்போஜம்' ஆகிய நாடுகளின்மீது படையெடுத்துச் சென்று வெற்றி கண்டான். ஆயிரம் யோசனை (Parsong) விஸ்தீரணத்திற்கும் மேற்பட்ட பல பெரிய தீவுகளின் பேரரசனாய் இவன் விளங்கினான் என அராபிய நூலாசிரியர் குறிப்பர். இக் குறிப்பேடுகளின் ஆசிரியர் குறிக்கும் கதையொன்றில், மன்னன், ஒவ்வொரு நாள் காலையிலும், ஏரியொன்றில் தங்கக் கட்டியொன்றை வீசுவது வழக்கமெனக் காணப்படுகிறது. இந்திய, சீன நாட்டு மன்னர்கள், இவ்வரசனுக்குப் பெருமதிப்புச் செலுத்தினார்கள் என்பதும் அராபியச் செய்திகளிலிருந்து அறியலாகும்.

கி. பி. 903இல் எழுதிய இபின் ராஸ்தே (Ibn Rosteh) குறிப்பதாவது, 'இப் பெருமன்னன், மகாராஜன் அல்லது மன்னர் மன்னன் என வழங்கப்படுகிறான். தீவுகளில் வாழ்ந்து வருவதால், இந்தியாவின் தலைசிறந்த மன்னன் என வழங்கப்படும் பேற்றை இவன் பெறவில்லை. இவனைக்காட்டிலும் அதிக வருமானம் உள்ளவனும் பணம் படைத்தவனுமான வேறு மன்னன் இல்லை. இம் மன்னனின் ஒரு நாள் வருமானம் இருநூறு மணங்கு எடையுள்ள தங்கம் என 'இபுன் கோர்டாட்ஸ்பெக்' என்பவர் (கி. பி. 814-848) மதிப்பிடுகிறார்.

மகாயான பௌத்தத்தைக் கடைப்பிடித்த சைலேந்திர மன்னர் குலத்தினர் இந்திய, சீன மன்னர்களுடன் அரசியல் தொடர்பு கொண்டிருந்தனர். பாலபுத்திரதேவன் என்னும் மன்னன், வங்காளத்துத் தேவ பாலனுக்கு நாளந்தாவில்தான் (பாலபுத்திரதேவன்) கட்டியுள்ள விஹாரத்திற்கு ஐந்து கிராமங்களை மானியமாக அளிக்குமாறு வேண்டி, தூதுவனொருவனை அனுப்பி வைத்தான். தேவபாலனும் இவ் வேண்டுகோளுக்கு இணங்கினான். மகாயான புத்த சமயத்தின் இருப்பிடமாய் அக்காலத்தில் வங்காளம் விளங்கியதென்றும், அங்கிருந்து சைலேந்திர குல மன்னர் ஊக்கம் பெற்றனர் என்றும் நாம் அறிகிறோம். வங்காளத்திலிருந்து வந்த 'குமாரகோஷர்' (Kumarakosha) என்னும் பௌத்தத் துறவியார், சைலேந்திர மன்னர்களின் குரு அல்லது ஆசாரியராய் விளங்கினார். அவரது கட்டளைக்கிணங்கச் சைலேந்திர மன்னன் தாராவில் (Tara) அழகான கட்டடம் ஒன்றை அமைத்தான். சைலேந்திர மன்னன் குலத்தவர், கட்டடக் கலையில் மிக்க ஆர்வங்கொண்டவர். 'பாராபுதூர்' (Barabudur) என்னுமிடத்திலுள்ள, பிரசித்தி பெற்ற கம்பீரமான 'ஸ்தூபி' இன்றும் சைலேந்திரன் சிறப்பைப் பறைசாற்றி வருகிறது. குன்று ஒன்றன் உச்சியிலமைந்திருக்கும் இப்புனிதக்

கட்டடம், ஒன்றன்மேல் ஒன்ருயமைந்த ஒன்பது அடுக்குகளை யுடையது. ஒவ்வோர் அடுக்கும், அதற்குச் சற்றுக் கீழுள்ள அடுக்கிலிருந்து சற்று உள்ளடங்கி யாவற்றிற்கும் மேல் அமைந் துள்ள அடுக்கில் மையமாக மணிக்கூண்டு போன்றதொரு



பாராபுதூர் (ஜாவா)

ஸ்தூபியையும் உடையதாயிருக்கிறது. அடித்தளமாயமைந் துள்ள அடுக்கின் அதிகபட்ச நீளம் 131 கெஜம். கீழே அமைந்

துள்ள ஐந்து அடுக்குகளும் உட்புறத்தில் சுவர்களால் சூழப்பட்டு, அவைகளைத் தாங்குவதற்கான தூண்களோடு, நான்கு திறந்த காலரிகளாய் அமைந்துள்ளன. மேலுள்ள அடுக்குகளைச் சுற்றிலும் பல ஸ்தூபிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஸ்தூபியிலும் துளையிடப்பட்ட சட்டத்தினுள் அமைந்த புத்த உருவச்சிலையும் காணப்படுகிறது. புத்த இலக்கியக் கருத்துகளைச் சித்திரிக்கும் சிற்பங்கள், காலரி முழுவதும் நிரம்பியிருந்தன. தூண்கள் முழுவதிலும், சிறு மாடங்களில் அமர்ந்திருக்கும் பௌத்தரின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இச் சிற்பங்கள் இந்தோ-ஜாவானியக் கலைக்குத் தலைசிறந்த உதாரணங்களாய் விளங்கி வருகின்றன. இக் கோவிலின் பரப்பு 400 சதுர அடி என்பதையும், இதன் அடுக்குகள் யாவும் சிற்பியின் உயர்வையும் வேலைத் திறனையும் வெளிப்படுத்தும் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய புத்தச் சிலைகளையுடையவை என்பதையும் எண்ணிப்பார்க்கும்போது, பாராபுதூர்க் கோயிலை உலகின் எட்டாம் அதிசயமாகப் பிறர் எண்ணிப் போற்றுவதில் வியப்பேதுமில்லை. ஜாவா, காம்போஜம் ஆகிய நாடுகளிலுள்ள கலை, இந்திய நாட்டுடன் தொடர்பு கொண்டது. இந்திய மன்னர்கள் அதைப் போற்றி வளர்த்தார்கள். எனினும், 'பாராபுதூர்', 'ஆங்கோர் வாட்டு' ஆகிய கலைக்கூடங்களைப் போலக் கற்பனைச் செறிவிலும் நிருமாணத்திலும் சிறந்த கலைப்பொக்கிஷங்களை இந்திய நாடெங்கும் காண்பது அரிது.

கி. பி. பதினோராம் நூற்றாண்டில், செல்வத்தில் திளைத்த கடல் கடந்த சாம்ராச்சியத்தைச் சோழ மன்னர் கவருவதற்கு முயலும்வரை, சைலேந்திர குல மன்னர் சீரும் சிறப்புமாக அரசு செலுத்தி வந்தனர். முதலாம் இராஜேந்திர சோழன் வலிமை மிக்க கடற்படையுடன் சைலேந்திரரின் பேரரசின்மீது போர் தொடுத்தான். இம் முயற்சியில் வெற்றிகண்ட அவன், சைலேந்திரப் பேரரசின் பெரும்பகுதியைக் கைப்பற்றினான். தொலைவிலுள்ள இப்பகுதிகளைக் கட்டியாள்வது கடினமாயிருந்ததால் சோழரது ஆட்சியை ஊக்கத்துடன் எதிர்த்துவந்த சைலேந்திரர் ஒரு நூற்றாண்டிற்குப்பின் சோழர் ஆதிக்கத்திலிருந்து மீட்டனர். எனினும், நாளடைவில் அவரது ஆட்சி நசித்து வந்தது. பதின்மூன்றும் நூற்றாண்டில் ஈழத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பு, பேரரசின் வீழ்ச்சிக்கு இறுதிக் காரணமாயிற்று.

சைலேந்திரரின் பலவீனமும் இறுதி வீழ்ச்சியும் பேராசை கொண்ட 'ஜாவா' தனது அரசியலாதிக்கத்தை நிலைப்படுத்திக்

கொள்வதற்கு வாய்ப்பளித்தன. கி. பி. நான்காம் நூற்றுண்டிலேயே ஜாவாவில் இந்து சாம்ராச்சியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சைலேந்திரர் அதை வென்றனர். கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டு வரையிலும் 'ஜாவா' சைலேந்திர அரசின் ஒரு பகுதியாகவே இருந்தது. ஒன்பதாம் நூற்றுண்டுக்குப்பின் தனது சுதந்திரத்தை மீண்டும் பெற்றது. ஒரு காலத்தில் இத் தீவின் மையப்பகுதி அரசியல் பீடமாய் விளங்கியது. சைலேந்திர அரசின் இருப்பிடமாய் விளங்கிய இப் பகுதியில் பாராபுதூர் உட்படப் பல அற்புத நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டிருந்தன. இப்போது ஜாவாவின் கீழ்ப்பகுதி அரசியற் செல்வாக்குப் பெற்று விளங்கியது. அரசியற்செல்வாக்கின் கேந்திரஸ்தானங்களாய் விளங்கிய 'கெதிரி' (Kediri), 'சிங்கசாரி' (Singasari) என்னும் இடங்களையுடைய ஜாவாவின் கீழ்ப்பகுதி அரசியலில் முக்கிய அமிசம் வகிக்கும் வாய்ப்புப் பெற்றது. கி.பி. பதின்மூன்றும் நூற்றுண்டின் இறுதியில் புதிய அரச குலமொன்று 'விஜயன்' என்னும் அரசனுல் தோற்றுவிக்கப்பட்டது. 'திக்த வில்வம்' (கசப்பான வில்வக்கனி) அல்லது ஜாவானிய மொழியில் 'மஜா பஹித்' (Maja Pahit) என வழங்கப்படும் நகரை விஜயன் தலைநகராகக் கொண்டான். 'மஜா பஹித்' அரசு சுற்றிலுமுள்ள தீவுகளை வென்று, கி. பி. 1365 இல் சற்றேறக் குறைய மலேயாத் தீபகற்பம் முழுவதையும், மலேயாத் தீவுக் கூட்டங்களையும் (Archipelago) தன்னுள் அடக்கியிருந்தது. பொதுவாகக் கூறுமிடத்து, வடக்குச் 'செலீபித்' தீவுகள் (Celebes) நீங்கலாக இப்போது டச்சுக்காரர் வசமிருக்கும் தீவுக்கூட்டப் பகுதிகளையும், மலேசியாத் தீபகற்பத்தையும் 'மஜா பஹித்' அரசு ஆண்டு வந்தது.

கி. பி. பதினைந்தாம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஜாவாவிலிருந்து வெளிப்பட்டுப் புகலிடம் தேடியலைந்த இந்துத்தலைவன் ஒருவன், 'மலாக்கா' அரசை நிறுவினுன். இவ் வரசு மாபேரரசியற் செல்வாக்குப் பெற்று முக்கியமான வாணிகத் தலமாய் விளங்கியது. இதனுல் அண்மையிலுள்ள தொகுதிகளுக்குத் தொல்லைகளும் ஏற்பட்டன. இரண்டாமவனுக அரியணை ஏறிய 'மலாக்கா' நாட்டு மன்னன், இஸ்லாமிய மதத்தைத் தழுவினுன். மலாக்கா அச்சமயத்தின் கேந்திரஸ்தானமாய்விளங்கலாயிற்று. வர்த்தகமும் வாணிகமும் பெருகியதைப் போல, இப் புதிய சமயக்கருத்துகளும் ஜாவாவில் புகுந்து, அந்நாட்டு அரச குலத்தினர் சிலரும் இச் சமயத்தைத் தழுவினர். இப் புதிய சமய ஆதரவாளரின் இடைவிடா முயற்சியால், பதினுரும் நூற்றுண்டின் முற்பகுதியில் 'மஜாபஹித்' மன்னன் அரச பதவியை

விட்டுத் துரத்தப்பட்டான். இந்து அரசான 'மஜா பஹித்' அழிந்ததும், தீவு முழுவதும் இஸ்லாமியத்தைத் தழுவ நேர்ந்தது. அரச குடும்பத்தினரும், இந்துக்களுள் பலரும் புகலிடம் தேடி ஆயிரமாண்டுகளுக்கும் அதிகமாக இந்துநாடாய் விளங்கிய 'பலீ' (Bali) என்னும் தீவில் சரண் புகுந்தனர். இன்றும் இந்து சமயம் தழைத்துவரும் இத் தீவு நீங்கலாக மலேயா ஆர்ச்சி-பிலாகோவின் பிற பகுதிகளிலும், பொதுவாகக் கூறுமிடத்து, இஸ்லாமிய சமயக் கருத்துகளும் பண்பாடும் புகுந்து கொண்டன.

இந்தியக் கலைகளும் இலக்கியமும் ஜாவாவில் தழைத்தோங்கியதைப்போல வேறெந்த நாட்டிலும் தழைத்தோங்கவில்லை. இன்னும் பாழடைந்த நூற்றுக்கணக்கான கோயில்களையும், கைப்பிரதிகளாகவே வழங்கி வரும் வடமொழி இலக்கியங்களையும் நாம் காணலாம். இராமாயணமும் மகாபாரதமும் இத் தீவுகளில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தன, இன்றும் 'வஜாங்' என்று வழங்கப்படும் நிழற்படங்களுக்கும், மற்றும் அரங்கில் நடிக்கப்படும் நாடகங்களுக்கும், இராமாயண மகாபாரதக் கருத்துகள் பயன்பட்டு வருகின்றன. 'மஜா பஹித்' அரசு வீழ்ந்ததும் ஜாவாவில் கலைகளும் நசித்துப்போயின. இறுதியாகத் தூரக் கிழக்கிலிருந்த குடியேற்ற நாடுகளைப் பரவலாக ஆராய்வது பயன்தரும். சற்றேறக்குறைய ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு இந்துக்கள் தங்கள் நாட்டிலேயே சுதந்திரத்தை இழந்த பிறகும், இந்தோ-சீனாவிலும், இந்திய ஆர்ச்சிபிலாகோவின் பல தீவுகளிலும், சுமத்திராவிலிருந்து நியூகினி வரையிலும் ஆட்சியிலிருந்தனர். இந்திய சமயம், இந்தியப் பண்பாடு, இந்தியச் சட்டம், இந்திய அரசியல் ஆகிய யாவும், இப் பகுதியில் வாழும் ஆதிக்குடிகளின் வாழ்க்கையைப் பெரிதும் வளமாக்கின. இந்திய சமயக் கருத்துகள், கலை, இலக்கியம் ஆகியவை அந்நாட்டு மக்களின் அறவுணர்ச்சியையும், அறிவாற்றலையும் போற்றி வளர்த்தன. சுருங்கக்கூறின், அம் மக்கள் நாகரிகமென்னும் ஏணியில் ஒருபடி ஏறுவதற்கு இந்தியப் பண்பாடு உதவி செய்ததெனலாம். இயல்பாக ஏற்பட்ட இனக்கலவை பேரிந்தியா ஒன்றை ஏற்படுத்தி, அப்பேரிந்தியாவின் ஆதிகுடிகளுக்கு இந்திய ஆன்மிக உணர்ச்சியைப் பேரளவில் ஊட்டின. இந்து சமயம் தாய்நாட்டில் தழைத்தோங்கியிருந்த காலம் வரையிலும் குடியேற்ற நாடுகளிலும் அது மிகப்பெரிய சத்தியாகவே விளங்கி வந்தது. இந்திய நாட்டில் இந்துக்களின் வீழ்ச்சி தொடங்கியதும் குடியேற்ற நாடுகளிலும் அவர்கள் செல்வாக்குக் குறைந்தது. குடியேற்ற நாடுகளை அமைப்பதில் பெற்றிருந்த

முதலிடத்தையும் இந்தியா இழந்தது. நீரூற்று வற்றியதால் அதை நம்பியிருந்த வாய்க்கால்களும் வறண்டு நாளடைவில் மறைந்தன. கி. பி. 1100 அல்லது 1200இல் இருந்து இந்து சமயத்தின் செல்வாக்குக் குறைந்து அந் நாடுகளிலுள்ள இயற்கைச் சத்திகள் தலையெடுத்ததும், கி. பி. பதினைந்து பதினாறும் நூற்றாண்டுகளில் இஸ்லாமிய சமயம் வேரூன்றியதும், காலப்போக்கில் தோன்றிய விளைவுகள் என நாம் கருதுவது தவறு.

இந்து சமயக் கோட்பாடுகளை அந்நியர் கடைப்பிடித் தொழுகுவது இயலாது; அதன் எல்லைக்குட்பிறந்தவர்களே அதைக்கடைப்பிடிக்கக்கூடும்' என்ற பழக்கமான கருத்துத் தவறென்பதை இக் குடியேற்ற நாட்டு வரலாறு மெய்ப்பிக்கின்றது. அந்நியப் பண்பாட்டையும் தன்னுள் கொண்டு தொன்மையான ஆதிக்குடிகளையும் தனது நாகரிகத்தாலும், பண்பாட்டினாலும் உயர்த்தும் பேராற்றல் இந் நாகரிகத்திற்கு உண்டு என்பதையும் நாம் தெளிவாகக் காணலாம். மேற்கு, கிழக்கு, மத்திய ஆசியாவிலும் சற்றுக்குறைந்த அளவில் இந்திய நாகரிகம் இதே போன்ற பெருஞ்சாதனையை நிறைவேற்றியது என்பதை நாம் நினைவிருத்திக்கொள்ளும்போது, நியாயமான முறையில் வலியுறுத்தப்படவேண்டிய இந்திய நாட்டின் பெருமையை நன்கு உணர்ந்தவர்களாவோம். இந் நாட்டு எல்லை விரிவடைந்ததும், பண்பாடு பரவியதும் இந்தியன் ஒவ்வொருவனுக்கும் பெருமையளிக்கக்கூடியவை; இந்திய வரலாற்றிலேயே தலைசிறந்த இவை, அதிகமாக வலியுறுத்தப்படாத செய்திகளாம்.

# 16. பண்டைய இந்திய நினைவுச் சின்னங்கள்

## வரலாற்றிற்கு முந்திய காலம்

வரலாற்றிற்கு முந்திய காலத்துக் கலையழகு நிரம்பிய சின்னங்களை முன்னர் ஓர் அத்தியாயத்தில் குறித்தோம். அவற்றுள் முதலில் புதிய கற்காலக் கருவிகளையும் அடுத்து இலச்சினைகள், கட்டடங்கள், சிற்பங்கள், மொகஞ்சதாரோவிலும் பிற இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட தாமிர செப்புக் கருவிகள் ஆகியவற்றையும் குறிப்பிடலாம்.

மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட கலைப்பொருள்களுள் திமில் பெருத்த மாடு, எருமை, காட்டெருமை ஆகிய மிருகங்களின் உருவம் பொறிக்கப்பட்ட இலச்சினைகள் சிறந்தவை எனலாம். அப் பொருள்களைப்பற்றி ஸர் ஜான் மார்ஷல் கூறுவதாவது:

'இவற்றைக் கலை வாசனையற்ற ஆதி மனிதர் செய்து முடித்தனர் என்றோ, அல்லது வழக்கொழிந்த கலை என்றோ கருதவியலாது. உருவத்தில் சிறியவையெனினும், பின்னணியும் அமைப்பும் தீவிர ஆலோசனைக்குப் பின்னரே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். மூலத்தைத் தழுவி இயற்கை மணத்தோடு கூடிய இக் கலைப்பண்பை எண்ணிப் பார்க்கும்போது கிரேக்கர் கலையும் ஒருகால் தலை குனிய நேரலாம்.'

ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு கற்சிலைகளைப் பற்றிய அந்த ஆசிரியரின் குறிப்பு வருமாறு:

'அவற்றை நான் முதலிற்கண்டபோது அவை வரலாற்றிற்கு முந்திய காலத்தவை என்பதை என்னால் நம்ப இயலவில்லை. ஆதிக்கலைகளைப்பற்றிய எல்லாக் கருத்துகளையும் அடியோடு மறுக்கின்ற வகையில் அவை கிரேக்க சகாத்தம் தொடங்கும் வரை அமைந்திருந்தன. இதைப் போன்ற உருவகக் கலையைப் (Modelling) பண்டைய உலகில் எங்கும் காண்பதரிது.

## மௌரியர் காலம்—கலை வளர்ச்சித் தொடக்கம்

கி. மு. 2700-க்கு முன் மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களின் சிதைவு தொடங்கியிருக்க இயலாது. இதையடுத்து,



அசோகர் காலத்தூண், லௌரியா—நந்தன்கார்
(லக்நௌ பல்கலைக் கழகத் தொல்பொருளாராய்ச்சித் துறையின் அனுமதி பெற்றது.)

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு நம் கவனத்தைக் கவரக்கூடிய பழங்கால நினைவுச் சின்னங்கள் இல்லை.

வரலாற்றுச் செய்திகள் தெளிவுபடுங்காலத்தில், கி. மு. 200 ஆம் ஆண்டில் தோன்றியனவாகக் கருதக்கூடிய நினைவுச் சின்னங்கள் நமக்குக் கிடைக்கின்றன. மௌரியப் பேரரசர் அசோகரது ஆட்சியைச் சேர்ந்த சிறந்த சின்னங்கள் நமக்கு ஏராளமாகக் கிடைக்கின்றன. இச் சின்னங்களின் உதவியுடன் இந்தியக் கலையைப்பற்றிய திட்டவட்டமான கருத்துகளை அறியக்கூடும்.

ஒரே கல்லாலான தூண்களே (297 ஆம் பக்கம் பார்க்க) அசோகர் காலத்துக் கலைப்பொருள்களுக்குச் சிறந்த சான்று களாய் விளங்குகின்றன. இத் தூண்களின்மீது அசோகரின் ஆணைகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தூணும் ஒரே கல்லாலான ஒரு தண்டையும், அதன் உச்சியில் மற்றொரு கல்லி னாலான முகப்பையும் கொண்டதாய் இருக்கிறது. சந்தனக் கல் லினாலான தண்டு பொதுவில் வட்ட வடிவமானது. உயரச் செல்லச்செல்ல சற்றுக்குறுகியும், நன்கு மெருகிடப்பட்டும் உரிய அளவுகளை உடையதாய் அமைந்திருக்கிறது. நன்றாக மெருகிடப்பட்ட முகப்பில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிராணிகளின் உருவங்கள், பீடம் ஒன்றன்மேல் அமர்ந்திருப்பன போன்று செதுக்கப்பட்டிருக்கின்றன. பீடம் உயர்ந்த சிற்ப வேலைப்பாடமைந்தது. உருவத்தின் கீழ்ப்பகுதியில் தலை கீழான தாமரைப்பூ வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. இத் தாமரைப் பூவைப் 'பெர்ஸிபாலிஸ் தேசத்து மணி' (Persepolitan bell) எனப் பொருந்தாப் பெயரிட்டு வழங்குவதுமுண்டு. மிகப் பெரிய கற்களை உடைப்பதிலும், குவாரியிலிருந்து (Quarry) நூற் றுக்கணக்கான மைல்கள் அவற்றைக் கடத்துவதிலும்—சில சந் தர்ப்பங்களில் குன்றுகளின் உச்சியில் எடுத்துச் செல்வதிலும்— பொறிவல்லுநருக்கு அதிக வேலை இருந்திருக்க வேண்டும். கற் களுக்குத் தகுந்த உருவம் கொடுப்பதிலும், மெருகு ஏற்றுவதி லும், அக் காலத்துக் கல் தச்சர்களின் அரிய திறன் புலனாகிறது. கற்களில் வடிக்கப்பட்டிருக்கும் சிற்பங்கள் கலையழகு மிகுந்தவை யாயும், இயற்கையோடு ஒன்றியவையாயும் காணப்படுகின் றன. சிற்பிகளின் திறனோடு போட்டியிடுவது போன்று காணப்படும் சாரநாத்துக் கற்றூணிலுள்ள முகப்பு, யாவற்றிலும் சிறந்து விளங்குகிறது. சிறு பிராணிகளின் உருவங்கள் பொறிக் கப்பட்ட பீடம் ஒன்றன்மேல், ஒன்றன் முதுகு மற்றொன்றில் ஒட்டியபடி, நான்கு சிங்கங்களின் உருவங்கள் அமைக்கப்பட் டுள்ளன. சிற்பக்கலையின் சிகரமென விளங்கும் சாரநாத்துக் கற்றூண் முகப்பு, அழகிற்கும் கம்பீரத்திற்கும் புகழ் பெற்றது.

உலகிலுள்ள கலா ரசிகர்களின் பாராட்டுதல்களை இது பெற்றிருக்கிறது. காலஞ்சென்ற டாக்டர் V. A. ஸ்மித்து என்பவர், சாரநாத்து முகப்பைப்பற்றிப் பின்வருமாறு கூறுவர்:

(சாரநாத்து அசோகர் சின்னம்-காசிக்கருகில்)

'பிராணிகளின் உருவங்களைக்கொண்ட இச் சிற்பங்களைப் போன்றவற்றை உலகின் வேறெந்தப் பகுதியிலும் காண

இயலாது. கம்பீரமும், அங்க அமைப்பு ஒவ்வொன்றிலும் முழுமையும் பெற்ற இவ் வுருவங்களுக்கு ஈடாகப் பண்டைய சிற்பம் எதுவுமே இல்லை.

அசோகரால் நிறுவப்பட்ட பிற கற்றூண்கள் சாரநாத்துக் கற்றூணைவிடத் தரம் குறைந்தவை என்றாலும், அழகு மிக்கவை. மௌரியர் காலத்து ஆபரணங்களும் இவற்றைப்போல உண்மையழகு பொருந்தியவை. பொற்கொல்லனின் திறமையை இவை நன்கு விளக்குகின்றன.

சிற்பக் கலையுடன் ஒப்பிடும்போது மௌரியர் காலத்துக் கட்டடக்கலை தரம் குறைந்ததாகவே காணப்படும். தலைநகரான பாடலிபுத்திரத்திலுள்ள பெருமாளிகைகளைச் சமகாலக் கிரேக்க நூலாசிரியர் குறிப்பர். அகில உலகிலும் இவற்றைப்போலக் கம்பீரமானவையும், அழகு பொருந்தியவையுமான கட்டடங்களைக் காண்பதரிது என்றும் அவர் கருதுவர். எழுநூறு ஆண்டுகளுக்குப்பின் இக்கட்டடங்களைக்கண்ணுற்ற சீனயாத்திரிகரான பாஹியான் என்பவர் வியப்படைந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால், இவ் வழகிய கட்டடங்கள் யாவும் நசித்துப்போயின. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சியின் பயனாக நூற்றுக்கால் மண்டபம் ஒன்று நமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

சாரநாத்து ஸ்தூபியைச் சுற்றிலும் அமைக்கப்பட்ட ஒரே கல்லினாலான தடுப்பு வேலியைத் தவிர, குகைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட சைத்திய விஹாரங்கள் பல, பராபர் (Barabar) குன்றுகளிலும், அதைச் சுற்றிலும் பாட்னா மாவட்டத்திலுள்ள பீகார்ப்பகுதியிலும் காணப்படுகின்றன. கரடுமுரடான கற்பாறைகளில், தொல்பொருள்கள் வெட்டியெடுக்கப்பட்டபோதிலும், இக் குகைகளின் சுவர்கள் பளிங்குபோல மெருகிடப்பட்டுள்ளன.

அசோகர் பல ஸ்தூபிகளை நிறுவினார். கருங்கற்களாலாவது செங்கற்களாலாவது கட்டப்பட்ட கூண்டு போன்ற தூணும், அதைத் தாங்கி நிற்கும் வட்ட வடிவமான அடித்தளம் ஒன்றும் கொண்டதே 'ஸ்தூபி' எனப்படுவது. சில ஸ்தூபிகளைச் சுற்றிலும் சாதாரணமான அல்லது சிற்ப வேலைப்பாடமைந்த சுற்றுவேலிகள் இடப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டொரு வாயில்களும் அமைக்கப்பட்டு, அவ் வாயில்களில் அழகிய பல சிற்பங்களும் செதுக்கப்பட்டிருந்தன. இந்தியாவிலும், ஆப்கானிஸ்தானத்திலும், 84,000 ஸ்தூபிகளை அசோகர் எழுப்பினார் எனப்

பரம்பரைச் செய்தி கூறும். ஆயினும், இவற்றுள் பெரும்பாலானவை நசித்துப்போயின. பாதுகாக்கப்பட்டும், பெரியனவாக்கப்பட்டுமுள்ள சிலஸ்தூபிகள் இன்றும் காணப்படுகின்றன. பில்சாவிற்கு மிகவும் சமீபத்திலுள்ள போபால் மாகாணத்தில், சாஞ்சி என்னுமிடத்திலுள்ள ஸ்தூபி, யாவற்றிலும் சிறப்புற்று விளங்குகிறது. இப்போதுள்ள ஸ்தூபி, 121½ அடிக் குறுக்களவுடையதாகவும், 77½ அடி உயரமுள்ளதாயும், 11 அடி உயரமுள்ள கனத்த கல்லாலான சுற்று வேலியுடையதாயும் காணப்படுகிறது. அசோகரால் முதலில் எழுப்பப்பட்டபோது, பாதிப் பரிமாணமுள்ளதாகவே இது இருந்ததென ஸர் ஜான் மார்ஷல் கூறுவர். காங்கிரீட்டையும் கல்லையும் சேர்த்துக் குழைத்துப் பலமுறை பூசியதால், இது இப்போதுள்ள பரிமாணத்தை அடைந்துள்ளதென்பது அவர் கருத்து. சுற்று வேலியும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. அசோகரால் எழுப்பப்பட்ட ஸ்தூபிகளுக்கும் இதைப்போன்ற கதி ஏற்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட செய்திகளிலிருந்து, மௌரியர் கலை இந்தியக்கலை வளர்ச்சி வரலாற்றில் மிகவும் முன்னேற்றமடைந்த ஒரு நிலையாகக் கருதக்கூடியதாயிருக்கிறது. அசோகர் காலத்துக் கலைஞர் திடீரென முளைத்தெழுந்தவர் அல்லர்; நெடுங்காலமாகவே கலையைப் பயின்று முன்னேற்றமடைந்திருக்க வேண்டும். எனினும், கி.மு. 250ஆம் ஆண்டிற்கு முன் உருவாகிய கலைப்பொருள் எதுவும் கிட்டாதிருப்பது, மேற்கூறிய கருத்தை ஏற்பதில் தடையாய் நிற்கிறது.

இந்தியக் கலை வளர்ச்சி வரலாற்றை அறிந்துகொள்வதில் நமக்குப் பேரிடையூருய் இப் பிரச்சினை முன் நிற்கிறது. கி.மு. 270, கி. மு. 250ஆகிய பண்டைக் காலங்களிலேயே அரிய பல கலைப்படைப்புகளை நாம் கண்டபோதிலும், இடைக்காலம் சூனியமாய் இருப்பது, தீராத பிரச்சினையாய் இருந்து வருகிறது.

தேவையான சான்றுகள் கிட்டும்வரை இப் பிரச்சினையைத் தீர்ப்பது எளிதன்று. நிச்சயமாய் எதையும் கூற இயலாதெனினும், பல ஊகங்களுக்கு இடமுண்டு.

முதலாவதாகச் சிந்து சமவெளி மக்களிடமுள்ள கலைப் பண்பு வழிவழியாக மௌரியர் காலம் வரையிலும் தொடர்ந்திருக்கக்கூடும். மரத்தாலும் மற்றும் அழியக்கூடிய பொருள்களாலும் இவை உற்பத்தி செய்யப்பட்டிருப்பதால், இடைக்காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பல பொருள்கள் அழிந்திருக்கக்கூடும். கல் முதலிய கட்டியான பொருள்களாலான

கலைப்பொருள்கள் காலப்போக்கில் புதைபொருளாராய்ச்சியாள ரால் கண்டெடுக்கப்படலாம். இந்திய வரி வடிவங்களைப் பொறுத்த பிரச்சினையும் சற்றேறக்குறைய இதைப் போன்றதே. நம் அறிவிற்கு எட்டுகின்ற வரையிலுமுள்ள ஆதி வரி வடிவங்



கள், அசோகரின் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இவற்றி னின்று பிற வடிவங்கள் எவ்வாறு பிறக்கின்றன என்பதையும், இவ் வரிவடிவங்களின் பிறப்பைக் குறித்த பிற செய்திகளையும் இன்றும் நாம் அறியக்கூடவில்லை. மேற்கு ஆசியாவில் நிலவிய

பல்வகை வரி வடிவங்களிலிருந்து இவை பிறந்திருக்கக்கூடு மென்பதை உறுதிப்படுத்துவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மொகஞ்சதாரோவிலும் ஹரப்பாவிலும் கண்டெடுக்கப்பட்ட இலச்சினைகளில் காணப்படும் சித்திர வரி வடிவங்களிலிருந்து, (எழுத்து ஒவ்வொன்றிற்கும், உலகியற் பொருள்களின் வடிவமொன்று தரப்பட்டிருக்கிறது.) அசோகரின் 'பிராம்மி' (Brahmi) எழுத்துத் தோன்றியிருக்கவேண்டு மென அறிஞர் சிலர் எண்ணி வருகின்றனர். இதைப்போலவே, அசோகர் காலத்துக் கலைப்பண்பும், சிந்து சமவெளியிலிருந்து கிடைத்த பரம்பரைச் சொத்தென எண்ணலாம். இவ்விரு துறைகளிலும் வளர்ச்சியின் பல நிலைகளும், நம் கண்களுக்குப் புலப்படுவதில்லை.

இரண்டாவதாக, சிந்து சமவெளியில் நிலவிய கலைப்பண்புகள் நாளடைவில் வழக்கொழிந்து, மௌரியர் கலை முறை புதிதாகத் தோன்றியிருக்கவும் கூடும். மௌரியரின் புதிய கலை முறை எவ்வாறு தோன்றியதென்பதே தெளிவற்ற செய்தியாய் இருந்து வருகிறது. இதைக் குறித்த இரண்டு வகையான கருத்துகளை நாம் அறிவிக்கலாம். சிற்பக்கலைக்கு மரத்தை உபயோகித்ததோடு, மௌரியர் ஆட்சிக்கு முந்திய காலக் கலைஞர் கற்களையும் உபயோகித்திருக்க வேண்டும். இவை ஒருகால் அழிந்து போயிருக்கக்கூடும்; அல்லது, நம் கண்களுக்குப் புலப்படாமலும் இருக்கக்கூடும். மற்றுமொரு கருத்து வருமாறு: முதலாவதாக, மௌரியர் காலத்திலேயே கலைப்படைப்புகளுக்குக் கல்லுபயோகம் தொடங்கியிருக்க வேண்டும். மரவுபயோகத்திலிருந்து கல்லுபயோகம் தொடங்குவதில், மௌரியருக்கேற்பட்ட சிரமங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகத் தரங்குறைந்த அசோகரின் கற்றூண்கள் விளங்குகின்றன. நன்கமைந்துள்ள பிற அசோகர் தூண்கள், அந்நியநாட்டுக் கலைஞரின் கைவேலையாயும் இருக்கக் கூடும். இதனின்று, அந்நிய நாட்டுக் கலைஞர்களையும் பேரரசர் அமர்த்தியிருந்தார் என்பதும் தெளிவு. இக் கருத்திற்கேற்ப, இந்தியக்கலை, அசோகரது ஆட்சிக்கு நெடுங்காலத்திற்குப் பின்னும் அந்நியரது அரவணைப்பிலேயே வளர்ந்தது. முற்றிலும் இந்தியரால் ஆக்கப்பட்ட கலைப்படைப்புகள், குப்தர் காலத்திலேயே எழலாயின.

## மௌரியராட்சியின் இறுதியிலிருந்து குப்தப்பேரரசு எழுச்சி வரை

மௌரியரது வீழ்ச்சிக்கும், குப்தரது எழுச்சிக்கும் இடையிலுள்ள ஐந்து நூற்றாண்டுக்காலம், இந்தியக்கலை வளர்ச்சியில்

ஒரு முக்கிய சகாத்தமாய் விளங்குகிறது. கிடைக்கும் சான்றுகளிலிருந்து பல பகுதிகளிலும் சிற்பக்கலையில் வெவ்வேறு வகையான உத்திகள் கையாளப்பட்டன என்பது தெரியவரும். பார்ஹூத் (மத்திய இந்திய நாகோத் மாகாணம்), புத்த கயா, காஞ்சி (போபால் மாகாணம்), மதுரா, காந்தாரம் (வடமேற்குப் பஞ்சாபும் சுற்றியுள்ள பகுதியும்), வடவிந்தியா, தெற்கில் அமராவதி, நாகார்ஜுன கொண்டா (கிருஷ்ணு நதியின் முகத்துவாரம்) ஆகிய ஒவ்வொரு பகுதியிலும் அரிய கலைக் கருவூலங்கள் உருவாயின.

கி. மு. இரண்டாம் நூற்றுண்டில், சுங்கரது ஆட்சியில், 'பார்ஹூத்' என்னுமிடத்தில் பெரியதொரு 'ஸ்தூபி' எழுப்பப்பட்டது. ஸ்தூபி முழுவதும் இப்போது சிதைந்து, வேலிச்சுவர் மட்டிலும் எஞ்சியுள்ளது. தலைவாயில் ஒன்று மட்டிலும் இப்போது கல்கத்தா நகரிலுள்ள இந்தியக் கண்காட்சிச்சாலையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. சிவப்பு நுரைக்கல்லாலான சுற்றுச்சுவர், வழக்கம் போலுள்ள நெடுக்குக் குறுக்குக் கம்பிகளோடு, சிகரமாயுள்ள கல்லொன்றையும் உடையதாயிருக்கிறது. அங்குப் பொறிக்கப்பட்ட பல சித்திரங்கள் புத்தரின் வாழ்க்கையையும் ஜாதகக் கதைகளையும் நகைச்சுவையுடன் கூடிய பல காட்சிகளையும் விளக்குகின்றன. சித்திரிக்கப்பட்டிருக்கும் காட்சிகளைப்பற்றிய சிறு குறிப்புகள், ஆங்காங்கே செதுக்கப்பட்டுள்ளன. மனித உருவங்கள் திருப்திகரமாக அமைக்கப்படவில்லை. உடற்கட்டுகளிலும் அவை நிற்பது உட்காருவது போன்ற தோற்றங்களிலும், குறைபாடுகள் பல காணப்படுகின்றன. முழுமையாக நோக்கும் போது, மக்களின் சமய நம்பிக்கைகளையும், கருத்துகளையும், உடை, அணி, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றையும் எளிமையாகவும் ஆணித்தரமாகவும் சிற்பங்கள் வெளியிடுகின்றன. இந்தியச் சகோதரரின் உள்ளங்களையும் பழக்கவழக்கங்களையும் நாம் அறிந்துகொள்லதற்குச் சிற்பங்கள் நல்வாய்ப்பளிக்கின்றன. மனித வாழ்க்கையின் துக்கமும் சுகமும், இச் சிற்பங்களில் மாறிமாறிப் பிரதிபலிக்கின்றன. முற்காலச் சமய நூல்களில் காணப்படும் வாழ்க்கையின் சோக மனப்பான்மையும், துன்பியல் சித்திரங்களும் சற்று மறைந்து, அவற்றிற்கு நேர்மாருக வாழ்க்கையில் பற்றையும் நன்னம்பிக்கையையும் இச் சிற்பங்கள் வெளியிடுகின்றன. இலக்கியத்திலிருந்து கிடைக்கும் கருத்துகளுக்குச் சிறந்த மாற்று மருந்தாக, பார்ஹூத் கலை விளங்கி வருகிறது. புத்த கயாவிலுள்ள பெரிய கோயிலைச் சுற்றிலும் சிறு வேலியொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இவ் வேலி கி. மு. முதல் நூற்றுண்டிலேயே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். கோயில், பிற்காலத்தில் எழுந்ததாகக் காணப்படுகிறது. வேலிச்சுவர்களிலுள்ள சிற்பங்கள் பார்ஹூத்வகையைச் சேர்ந்தவை. சிற்பம் ஒவ்வொன்றும் தனிச் சிறப்புவாய்ந்ததாகத் தென்படுகின்றது.

சாஞ்சியிலுள்ள மூன்று பெரிய ஸ்தூபிகளும் இக் காலத்தவை எனக் கருதப்படுகின்றன. நல்வினையின் விளைவாக இன்றும் அவை நல்ல நிலையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அசோகரால் நிறுவப்பட்ட பெரிய ஸ்தூபி, இப்போது பெரிதாக்கப்பட்டது. சுற்றிலுமுள்ள வேலிக்கு நான்கு தலைவாயில்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு தலைவாயிலிலும் முக்கியப் பகுதிகளில் அழகான சிற்டங்கள் அமைக்கப்பட்டன. வேலிச் சுவர் ஆடம்பரமின்றி அமைந்திருந்தபோதிலும், ஜாதகக் கதைகளும், புத்தரின் வாழ்க்கைச் சம்பவங்கள் பலவற்றைச் சித்திரிக்கும் அழகிய சிற்பங்களும், தலைவாயில் சுவர்களில் பொறிக்கப்



சாஞ்சி நுழைவாயில்

பட்டிருந்தன. காட்சிகள் அநேகமாக பார்ஹுத்தில் காணக் கிடைப்பவைகளை ஒத்திருக்கின்றன. அவை வெளியிடும் கருத்துகளிலும் மிகுந்த ஒற்றுமை காணப்படுகின்றது. சிலைகளுள் ஒவ்வொன்றும், பார்ஹுத் சிலைகளைக்காட்டிலும் அழகு பொருந்தியதாகவும், பாவங்களை வெளியிடுவதில் மிக நேர்த்தியாயும், அலங்காரத்தில் இயைந்தும் நிற்பதோடு, மிக உயர்ந்ததாயும், சிற்பியின் கற்பனையையும் கைத்திறனையும் வெளிப்படுத்துவதாயும் அமைந்திருக்கிறது. பார்ஹுத் சிலைகளின் மெலிந்த

தோற்றம் இங்கில்லை. பல நிலைகளில் அமைக்கப்பட்ட மனித உருவங்கள், மிக நேர்த்தியாய்ச் செதுக்கப்பட்டுள்ளன. சாஞ்சிச் சிலைகளை வடித்த சிற்பிகள் கலையார்வம் மிகுந்தவர்களாய்க் காணப்படுவார்கள்; அழகின் தன்மையை உணர்ந்தவர்களாயும், உருவங்களுக்கேற்ற பரிமாணத்தை அமைப்பதில் வல்லுநர்களாயும், இருமருங்கிலும் ஒரே ரகமான சிற்பங்களை அமைப்பதில் தேர்ந்தவர்களாயும், வேதாந்த கருத்துகள் நிரம்பிய அருஞ் செய்திகளை மிக லாகவமாக மக்களுக்குச் சிற்பங்களின் மூலம் எடுத்தோதும் சீலர்களாயும் காணப்படுகிறார்கள். அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், நம்பிக்கை, நற்காலத்தை எதிர் நோக்கியிருத்தல், குறிக்கோள்கள் ஆகியவற்றையும் அடிப் படையாகக்கொண்ட பல சிற்பங்கள் பார்ஹூத்தைப்போல இங்கும் நிறுவப்பட்டுள்ளன. பொதுவாகக் கூறுமிடத்து, இவ் வடிப்படைகள் யாவும் மிக நுண்ணிய வடிவுடையவையாயும் வாழ்வின் உண்மை நோக்கையும் பயன்களையும் குறிப்பிட வல்லவையாயும் விளங்குகின்றன.

சுருங்கக்கூறும் போது, பார்ஹூத், புத்த கயா, சாஞ்சி என்னும் இடங்களில் காணப்படும் வேலிச்சுவர்ச் சிற்பங்களை கி. மு. 150-க்கும் கி. பி. 50-க்கும் இடையிலுள்ள காலத்து இந்தியச் சிற்பக்கலை வளர்ச்சியின் மூன்று முக்கியப் படிகளாகக் கொள்ளலாம். கடினமான இக் கலையில் மிக்க தேர்ச்சி பெற்ற இந்தியச் சிற்பி, இரசிகத் தன்மையை முழுவதும் வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்று விளங்குவதைக் காணலாம். கருத்துகளையும், எண்ண அலைகளையும், நம்பிக்கைகளையும், கோட்பாடுகளையும் எளிதில் விளக்கவல்ல நல்லதொரு கருவியாய்ச் சிற்பக்கலை விளங்கி வந்தது.

இக் காலத்தில் எழுப்பப்பட்ட சிதைந்த சின்னங்கள் பல வற்றை இன்றும் 'மதுரா' என்னுமிடத்தில் காணலாம். பார் ஹூத், சாஞ்சி என்னும் இடங்களைப்போல, வேலிச்சுவர்களையும் அவற்றில் வேலைப்பாடமைந்த சிற்பங்களையும் நாம் காண இய லாதிருப்பினும், சிற்பங்களைக்கொண்ட சிறு கிராதிகளின் பகுதி களையும், செதுக்கப்பட்டோ, அல்லது தனியாகவோ நிற்கும் உருவச்சிலைகள் பலவற்றையும் நாம் காண்கிறோம். இவற்றுடன் சிறு கட்டடங்கள் சிலவற்றையும் நாம் காணலாம். மதுராவில் புள்ளிகளையுடைய சிவப்பு நிறக் கற்கள் பயன்படுத்தப்பட்டுள் ளன. கால வரன்முறையையொட்டி மதுரா நகரச் சிற்பங்களை இருகூறுகளாகப் பிரிக்கலாம். கரடுமுரடான கல்லினாலான சில, காலத்தால் முந்தியவை. பார்ஹூத் சிற்பக்கலையை ஒட்டிய

வையே என்றாலும், உருவ அமைப்பில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவற்றைப்பற்றிய தனிக் குறிப்புகள் தேவையில்லை. காலத்தால் சற்றுப்பிந்திய சிற்பங்களில் தனி யான கலைத்திறனைக் காண்கிறோம். புத்தபிரானை நரராகச்

Photo: A. K. Coomaraswamy

குஷான் அரசன், மதுரா

சித்திரித்திருப்பதொரு புதுமை. பார்ஹூத், புத்த கயா, சாஞ்சி என்னும் இடங்களிலுள்ள சிற்பங்களில், புத்தபிரானைச் சக்கர

மாகவோ, அரியாசனமாகவோ, இரு பாதங்களாகவோ உரு வகப்படுத்தி அமைத்திருப்பதன்றி, நரராகச் சித்திரிக்கவில்லை. புத்தரை மானிடராகச் சித்திரிக்கும் பழக்கம் மதுராவிலேயே முதலாவதாகத் தொடங்குகிறது. இதைத் தொடர்ந்து பல நூற்றாண்டுகளுக்குப் புத்தபிரானின் உருவச்சிலை போன்ற பல உருவங்களால், இந்திய நாட்டில் தலைசிறந்து விளங்கும் சமயக் கருத்துகளை மக்களுக்கு எளிதில் எடுத்துரைக்கும் பணியில் இந்தியச் சிற்பிகள் ஈடுபட்டிருந்தார்கள்.

## காந்தாரக் கலை
## (The Gandhara School)

உரிய சிறப்பைவிடச் சற்று அதிகமாகவே காந்தாரக் கலை யின் புகழ் ஓங்கியிருப்பது தெரியவரும். கலையுலகில் இடம் பெறு வதற்கு உரிமையுள்ள ஒரே வகை இந்தியக் கலையாகக் காந் தாரக் கலையை ஐரோப்பிய நூலாசிரியர் சிலர் கருதி வந்த கால முண்டு. இந்திய நாட்டிலும் தூரக்கிழக்கிலும் பிற்காலங்களில் எழுந்த பல கலைகளுக்கும் காந்தாரக் கலையை வழிகாட்டியாக இன்றும் கருதுவோரும் உண்டு. காந்தாரச் சிற்பங்களின் சிறப் பிற்குத் தடை சொல்வது இயலாது எனினும், மேற்குறிப்பிட்ட கருத்துகள், அக் கலையின் சிறப்பைத் தேவைக்கு அதிகமாகவே புகழ்ந்து பேசுகின்றன என்பதும் தெளிவு.

சிதைந்த சிற்பங்கள் பல, தட்சசீலம், ஆப்கானிஸ்தானம், வடமேற்கெல்லை மாகாணம் போன்ற தொன்மை வாய்ந்த நக ரங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை, பெரும்பாலும் புத்தரின் உருவச்சிலைகளாகவோ அல்லது புத்தரின் வாழ்க் கையையொட்டிய செய்திகளைச் சித்திரிக்கும் சிறு சிற்பங் களாகவோ காணப்படுகின்றன. பிற இந்தியச் சிற்பங்களில் நாம் காணவியலாத தனிச்சிறப்புகள் சில, காந்தாரச் சிற்பங் களுக்குண்டு. உடற்கூறுகளில் மிகுந்த கவனம் செலுத்தி மனிதச்சிலைகளை உருப்படுத்தியிருப்பது காந்தாரக் கலைஞர் கையாண்ட உத்திகளுள் முதலாவதாகக் காணப்படும். மீசை யையும் தசைகளையும் செதுக்குவதில் இவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருப்பது கவனித்தற்குரியது. சிலைகளுக்கு அகன்ற கோடுகளுடனும் பல மடிப்புகளுடனும் கூடிய ஆடை அணிகளை உடலோடு ஒட்டி அமைத்திருப்பது இக் கலைக்கே உரிய இரண்டாவது சிறப்பு.

காந்தாரக் கலையின் இத் தனிச்சிறப்புகள் கிரேக்கர் மரபை யொட்டியவை; அல்லது நுணுக்கமாகக் கூறப்புகுந்தால்,

ஆசியா மைனர், உரோமப் பேரரசு ஆகிய இடங்களில் தழைத் தோங்கிய கிரேக்கக் கலை மரபையொட்டியவை எனக் குறிப் பிடலாம். எனவே, காந்தாரக்கலையை இந்திய-கிரேக்கப் பண் பாடு அல்லது கிரேக்க உரோமானியப் பண்பாடு எனக் கருதுவ துண்டு. வடமேற்கு இந்தியாவிலும், பாக்டிரியாவிலும் வசித்த கிரேக்க அரசர்கள் இந்திய நாட்டில் இக் கலைப் பண்பு தொடங்குவதற்குக் காரணமா யிருந்தார்கள். கிரேக்கரின் கலை நுணுக்கங்களை இந்தியர் கை யாண்டபோதிலும், இக் கலையின் உண்மை அடிப்படை இந்திய நாட்டையே சார்ந்தது. புத்த சமயத்தினரின் குறிக்கோள் களுக்கும் சமயக் கோட்பாடு களுக்கும் விளக்கம் தருவதற் கென்றே இக் கலை பயன்படுத் தப்பட்டது. காந்தாரக்கலைப் பகுதியைச் சேர்ந்த சிற்பங் களில், கிரேக்க இலக்கியக் கருத்துக்களை கலைக்கெனக் கிரேக்கர் கொண்டிருந்த குறிக் கோளோ இல்லை என்றே கூற லாம். காந்தாரச் சிற்பிக்கு இந் திய உள்ளமும், கிரேக்கரின் கைத்திறனும் அமைந்திருந்தன.

போதிசத்துவர்—இலாகூர் பொருட்காட்சிச்சாலை

புத்தபிரானின் சிலையை உருப் படுத்தி நமக்களித்த பெருமை, காந்தாரக்கலைஞரையே சாரும். கிரேக்கக் கடவுளான அப்போ லோவைச் சிருஷ்டித்தது போன்ற முயற்சியில் இதுவும் ஒன்று. புத்தர், போதி சத்துவர் ஆகியோரின் உருவச்சிலைகளும், புத்தரின் வாழ்க்கையைஒட்டிய பல காட்சிகளைச் சிற்பங்கள் வாயிலாக எடுத்துரைத்து ஒரு வகைக் கருங்கல்லில் செதுக்கியிருப்பதும் இக் கலைஞரின் அரும் பணிகளாய் விளங்கி வருகின்றன. மதுரா முதலிய சில இடங்

களில் வடிக்கப்பட்ட புத்தர் சிலைகள், காந்தாரக் கலையைப் பின்பற்றி எழுந்தவை எனக் கருதப்பட்டு வந்தன. இப்போது அக் கருத்து ஏற்கப்படுவதில்லை. மதுராவில் வடிக்கப்பட்ட சிலைகள் தனி ரகத்தைச் சார்ந்தவை என இப்போது கருதப்படுகிறது. காந்தாரக் கலைப்பண்புடைய புத்த சிற்பங்களுக்கும், இந்திய மரபையொட்டிய பிற புத்தர் சிலைகளுக்கும் இடையிலுள்ள வேற்றுமைகள் அதிகம். உடற்கூறுகளைத் தத்ரூபமாகச் சித்திரிப்பதிலும், உடலின் அழகை வெளிப்படுத்துவதிலும் காந்தாரக் கலைஞர் மிக்க கவனம் செலுத்தினர். சீரிய உருவங்களமைப்பதிலும், உருவச்சிலைகளுக்கு பத்தியுடன் கூடிய கம்பீரமான தோற்றமளிப்பதிலும் இந் நாட்டுக் கலைஞர் கவனம் செலுத்தி வந்தனர். காந்தாரக்கலை, உலகவியலையொட்டிய உண்மையுடன் கூடியதாயும், பிற இந்தியக்கலை உயரிய நோக்கமுடையவையாயும் காணப்படுகின்றன. மேலை நாட்டுக் கலைப்பண்பிற்கும், இந்தியக் கலைப்பண்பிற்கும் உள்ள அடிப்படை வேற்றுமை இதுவேயாகும். பார்ஹுத், சாஞ்சி என்னும் இடங்களிலுள்ள கலைகளைப் போலக் காந்தாரக் கலைப் பொக்கிஷங்களும், பண்டைக்கால இந்திய நாட்டின் வாழ்க்கை முறைகளையும் குறிக்கோள்களையும் பளிங்குபோலப் பிரதிபலிக்கின்றன.

மதுராவில் காணப்படும் கலைப்பண்பு. காந்தாரக் கலைப் பண்பு ஆகிய இரண்டும் சித்திய மன்னர்களால் போற்றி வளர்க்கப்பட்டவை. குஷான மன்னர்களின் உருவச்சிலைகள் இக் காலத்துக் கலைப்படைப்புகளில் மிகச் சிறந்தவையாயும் புதுமையாயும் காணப்படுகின்றன. குஷானியர் காலத்துக் கலை—குறிப்பாகக் காந்தாரக் கலைமுறை—சீன துருக்கிஸ்தானம் வழியாகத் தூரக் கிழக்குக்குச்சென்று, சீன ஜப்பானியக் கலைமுறைகளின் மீதும் ஆதிக்கம் செலுத்தியது.

மேலே நாம் குறிப்பிட்ட அருமையான சிற்பக் கலைக்கூடங்களுடன் நாகார்ஜுன கொண்டா, ஜக்கய்யபேட்டை, அமராவதி, கிருஷ்ணநதிப் பள்ளத்தாக்கின் கீழ்ப்பகுதி ஆகிய இடங்களில் அழகான ஸ்தூபிகள் பல எழுப்பப்பட்டுள்ளன. அமராவதி ஸ்தூபியைச் சுற்றிலுமுள்ள வேலி, சலவைக்கல்லால் அமைந்ததோடு, அதன் உச்சியிலுள்ள மணிக்கூண்டும் சலவைக் கல்லாலேயே அமைக்கப்பட்டுள்ளது. முழுமையாய் இருந்த காலத்தில் இது மிக்க பொலிவுடன் விளங்கியிருக்க வேண்டும். துரதிருஷ்டவசமாக ஸ்தூபி சிதைந்து, சில பகுதிகள் இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் கண்காட்சிச்சாலைக்கும், மற்றும் சில சென்னை அரசாங்கக் கண்காட்சிச்சாலைக்கும் அனுப்பப்

பட்டுள்ளன. ஸ்தூபிகளில் உள்ள சிற்பங்கள் யாவும் ஒரே வகையைச் சேர்ந்தவை. அமைப்பில் இவை வடவிந்தியச் சிற்பங்களைப் போலன்றி, சில மாறுபாடுகளுடன் காணப்படுகின்றன. இவற்றைக் கலைப்படைப்பில் அமராவதி வகையைச் சார்ந்தவை எனக் குறிப்பதுமுண்டு. அமராவதிச் சிலைகள் ஒல்லியாயும் மந்தகாசம் புரிபவையாயும் காணப்படுகின்றன. பலவிதத் தோற்றங்களில் இவை அமைக்கப்பட்டுள்ளன. இட நெருக்கடி அதிகமாகவும் சித்திரக் காட்சிகள் ஒரே அடைவாகவும் இருப்பதால், பொதுவில் இவை கவர்ச்சி குன்றியே காணப்படுகின்றன. தனித்தனியே உருவங்கள் நன்கு அமைந்திருக்கின்றன. கலைப்பணபு மிக உயர்ந்து காணப்படுகிறது



இந்தியா அலுவலகம், இலண்டன்

பலகை மூடி, அமராவதி ஸ்தூபி

என்பதில் ஐயமில்லை. தாவரங்களும் பூ வகைகளும், குறிப்பாகத் தாமரைப்பூக்கள் மிக அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. புத்தரின் உருவமும் சிற்சில இடங்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

எனினும், புனிதரான புத்தபிரானை அடையாளக் குறியிட்டு விளக்கும் பழக்கமே பெரிதும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இக் கலைமுறையை, பார்ஹூத், சாஞ்சி, புத்தகயா ஆகிய இடங்களில் கையாளப்பட்டிருக்கும் முறைகளுக்கும், மதுரா, காந்தாரக் கலைமுறைகளுக்கும் இடைப்பட்ட நிலையாகக் கருதலாம்.

இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சியாளரின் பெருமுயற்சியால், நாகார்ஜுன கொண்டாவில், அக் காலத்துக் கலைச் சின்னங்கள் சில அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஒரு ஸ்தூபியும், இரு பள்ளிகளும், ஒரு மடாலயமும் கண்டெடுக்கப்பட்ட பொருள்களுள் அடங்குகின்றன. ஸ்தூபிக்கருகில், சுண்ணும்புக் கற்களிலுலான பலகைகளில் புத்தரின் வாழ்க்கைச் சித்திரங்கள் பல பொறிக்கப்பட்டுள்ளன. பக்கம் 311-ல் காணும் நாகார்ஜுன கொண்டாவிலுள்ள சித்திரத்தில், தேவதைகள் கையில் பிடித்திருக்கும் துணியொன்றில் புத்தரின் ஏழு காலடிகளையும், பிறப்பையும், புனிதரைத் தேவதைகள் வரவேற்கும் காட்சியையும் காணலாம்.

நம் கவனத்தில் இருந்துவரும் காலத்தில் ஏராளமான சிற்பங்கள் இருந்ததைப்போலக் கட்டடங்கள் இல்லை. அழகிய சில கோயில்களும் புத்த விஹாரங்களும் இருந்தன. புருஷபுரத்தில் (பெஷாவர்) கனிஷ்கன் எழுப்பிய புகழ்பெற்ற கோபுரம், ஆசிய நாட்டு அதிசயங்களுள் ஒன்றாய் விளங்கியது. இவை யாவும் சுவடு ஏதுமின்றி அழிந்துவிட்டன. நாம் மேலே குறித்த ஸ்தூபிகள் நீங்கலாகக் கலைப்பொருள்களாகக் கவனத்திற்குரிய ஒருசில கட்டடங்களே காணப்படுகின்றன. இவை இந்தியாவின் பல பகுதிகளில் காணப்படும் கற்பாறைகளில் குடைந்தெடுக்கப்பட்ட குகைகளாய் விளங்குகின்றன. அசோகர் காலத்துக் குகைகள், சாதாரண அறைகளாய்க் காணப்படுகின்றன. நாம் ஆராயும் காலத்துக் குகை அறைகள் பல தூண்களையுடையவையாயும், சிற்பங்கள் நிறைந்தவையாயும் காணப்படுகின்றன. சில குகைகள் முனிவர் வசிப்பதற்கேற்ற விஹாரங்களாய் விளங்கின. அலங்காரமற்றவைகளாய் விளங்கும் இவை, மையத்தில் பரந்த அறையொன்றையும், மருங்குகளில் வேறு சிறிய அறைகளையும் கொண்டுள்ளன. சில கட்டடங்கள், சைத்தியங்கள் அல்லது பிரார்த்தனைக் கூடங்களாய் விளங்கின. 'சைத்தியம்' ஒவ்வொன்றும் ஒவ்வோர் அழகான கலைக் கூடமாய் இருந்தது. ஒவ்வொரு சைத்தியமும் நீண்ட சதுர வடிவுடைய அறையொன்றையும், எதிர்ப்புறத்தில் அரை வட்ட வடிவமான வாயிலையும் கொண்டிருந்தது. இரு வரிசைகளாய்

அமைந்த தூண்கள், மையத்தில் ஒரு கூடமாகவும், இரு மருங்கிலும் இரு அறைகளாகவும் சைத்தியத்தைப் பிரித்தன. அரை வட்ட வடிவமான வாயிலுக்கு எதிர்ப்புறத்தில் 'தகோபா' (Dagoba) என்னும் ஸ்தூபியொன்று அமைந்திருந்தது. முன் புறச்சுவரில் அழகிய பல சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. மூன்று சிறு வாயில்கள் மத்தியக் கூடத்திலிருந்து பக்க அறைகளுக்குச் செல்வதற்கென அமைக்கப்பட்டிருந்தன. தலை வாயிலுக்கு உயரத்தில் அமைக்கப்பட்ட குதிரைலாட வடிவமுள்ள சன்னல் வழியாக உட்புகுந்த சூரிய ஒளி, மறுகோடியிலமைந்திருந்த தகோபாவைப் பிரகாசமாக்கியது. ஒளிமிக்க 'தகோபாவின்' முன், மங்கிய ஒளி வீசிய கூடத்தில் பக்தர் கூடிப் பிரார்த்தனை செலுத்திய காட்சி தெய்விகமாயும், கவர்ச்சிமிக்கதாயும் இருந்திருக்க வேண்டும்.



புத்தபிரான் பிறப்பைச் சித்திரிக்கும்
பலகை — நாகார்ஜுன கொண்டா

நாசிக், பஜா, பெட்சா, கார்லே முதலிய பம்பாய் மாகாணத்தின் பல பகுதிகளிலும் இத்தகைய சைத்தியங்கள் பல இருந்தன. கார்லே குகைக்கூடம் யாவற்றிலும் சிறந்ததெனக் கருதப்படுகிறது. இக் கூடத்தின் முன்சுவரில் அமைக்கப்பட்டிருக்கும் பல சிற்பங்களும், உட்புறத்திலுள்ள வரிசையான

தூண்களும், கட்டடத்தின் இசைந்த அளவோடுகூடிய பல பகுதிகளும், இச் சைத்தியத்தின் சிறப்பிற்குரிய காரணங்களாய் விளங்குகின்றன.

குகைகளின் உட்புறங்களில் உள்ள தூண்களோடு, பெஸ்நகர் தூணைப்போன்ற தனித்த தூண்கள் பல காணப்படுகின்றன. ஹிலியோடோரசு (Heliodoros) என்னும் கிரேக்க ஸ்தானிகன் ஒருவன், பெஸ்நகர் 'கருடஸ்தம்பத்தை' விஷ்ணுவிற்குக் காணிக்கையாக நிறுவினன். தனித்த தூண்கள் பெரும்பாலும் ஒரே கல்லாலானவை. அசோகருடைய கற்றூண்களில்



சைத்தியக் குகை, கார்லே

நாம் காணும் மெருகும், அளவான அமைப்பும், அழகிய முகப்புகளும் இக் கற்றூண்களில் காணப்படுவதில்லை. இதை எண்ணும்

போது, கலைத்திறனைக் குறைவாகவே மதிப்பிடவேண்டியிருக்கிறது. சிற்பக்கலையிலும், ஸ்தூபிகள் எழுப்புவதிலும், குகைக் கோயில்களை அமைப்பதிலும் நல்ல முன்னேற்றம் தென்படுகிறது. அசோகரின் தூண்களில் காணப்படும் மிருகங்களின் ஈடற்ற அழகிய உருவங்களைப் போலப் பிற்காலத்தில் நாம் காண்பது மிக அரிது. ஆயினும், இதற்கு நஷ்ட ஈடாக அருமையான மனித உருவச்சிலைகளும், புத்தபிரானின் அற்புதமான உருவச்சிலைகளும் வடிக்கப்பட்டிருந்தன.

## குப்தர் காலம் (கி. பி. 320—600)[1]

இந்தியச் சிற்பக்கலையின் தூய சரிதை குப்தர் காலத்திலிருந்து தொடங்குவதாகக் கொள்ளலாம். பல நூற்றாண்டுகளாய் வளர்ந்த கலை உத்திகள் முழுமை பெற்று, திட்டமாகக் கலை முறைகள் உருப்பெற்றன. துல்லியமான அமைப்புகளோடு கலையழகுக் கோட்பாடுகளும் வளர்ந்தன. கண்ணுமூச்சி விளையாட்டுகளும் பரிசோதனைகளும் நின்றுவிட்டன எனலாம். கலையின் உன்னதக் குறிக்கோள்களில் நிறைந்த ஞானமும், கலை முறைகளில் நல்ல திறனும் உறுதி அடைந்ததோடு, இரசிகத் தன்மையுடனும் கலையழகுடனும் சமைக்கப்பட்ட பல கலைப்பொக்கிஷங்கள் உருப்பெற்றன. இவ் வுயரிய கலைப் படைப்புகள் பிற்காலக் கலைஞருக்கு ஆர்வத்தையும், அதே சமயத்தில் ஏக்கத்தையும் அளிப்பனவாயிருந்தன. குப்தர் காலத்துச் சிற்பங்கள் இந்திய நாட்டிற்கு மட்டுமன்றி, தூரக் கிழக்கு நாடுகளுக்கும் வழிகாட்டிகளாய் விளங்கின. மலேயாத் தீபகற்பம், சுமத்திரா, ஜாவா, அன்னும், கம்போடியா, செளிபூஸ் ஆகிய இடங்களில் உள்ள சிற்பங்களிலும் குப்தர் கலைப் பண்பாட்டின் செல்வாக்குக் காணப்படுகிறது.

பிராமண, புத்த சமயக் கடவுளரின் உருவச்சிலைகளைக் குப்தர் காலத்துக் கலைஞர் படைத்தனர். இதுவே அவர்கள் புரிந்த சீரிய கலைத்தொண்டாகும். புத்தரின் உருவச்சிலைகள் பல, காசிக்கருகில் உள்ள சாரநாத் என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுளொன்று, இந்திய நாட்டிலேயே தலைசிறந்ததாக மதிக்கப்படுகிறது. மதுராவிலும் மற்றும் சில இடங்களிலும், புத்தரின் கல் உருவச் சிலைகளும்

1. கி.பி. 495-க்குமேல் குப்தரின் அரசியலாதிக்கம் நீடித்திருக்கவில்லையெனினும், அவர்களால் தொடங்கப்பட்ட கலைமுறைகள் கி.பி. 600 அல்லது அதற்குப் பின்னும் நீடித்திருந்தன. எனவே, 'குப்தர் காலம்' என்னும் தலைப்பில், கலையைப் பொறுத்தவரையிலும் காலவரையறையைச் சற்று நீட்டிக்கலாம்.

தாமிரச் சிலைகளும் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. 'தியோகார்க் கோயிலிலுள்ள' (Deogarh temple, ஜான்ஸி மாவட்டம்) சில பலகைகளிலும், மற்றும் சில இடங்களிலும் சிவன், விஷ்ணு



கருட ஸ்தம்பம் —பெஸ் நகர்

முதலிய பல பிராமணக் கடவுளரின் உருவங்கள் செதுக்கப் பட்டுள்ளன. இவை யாவும் இந்தியக் கலைப்படைப்புகளில் மிகச்சிறந்தவை எனக் கருதப்படுகின்றன. கலையழகிற்கும், கவர்ச்சிக்கும், கம்பீரத்திற்கும், அழகான தோற்றத்திற்கும், ஒளி

மிக்க ஆன்மிகத் தோற்றத்திற்கும் இவை மிகவும் பெயர் பெற்று விளங்குகின்றன. பொதுவாகக் கூறுமிடத்து, சாந்தியோடு கூடிய திருமுகமும், நுண்ணறிவோடு சமைக்கப்பட்ட பொருத்தமான அளவோடு கூடிய அங்கங்களும் கலையழகும் குப்தர் காலத்துக் கலைப்பண்பாடுகளாய் விளங்குகின்றன. விறுவிறுப்பும், கலாரசனையோடு கூடிய தோற்றமும் குப்தர் காலத்துக் கலைஞரின் தனிப்பெருந்திறனை விளங்கின. கலைமுறைகளில் அறிவிற்கு அதிகமான இடமிருந்தபோதிலும், உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கும் நல்ல வாய்ப்பிருந்தது. பலவித அலங்கார வேலைப்பாடுகளோடு கூடிய குப்தர் கலைத்திறன், பிற்காலக் கலைஞருக்குத் தகுந்த வழிகாட்டியாய் விளங்கியதில் வியப்பில்லை. பிற்காலக் கலைப்படைப்புகளில் குப்தரின் செல்வாக்கு மிகுந்திருந்தது.

உலோக வார்ப்புக்கலை, சிகரத்தையே எட்டியது எனத் துணிந்து கூறலாம். எண்பதடி உயரமுள்ள தாமிரத்தாலான புத்தரின் உருவச்சிலையொன்றை நாளந்தாவில் கண்டதாக யுவான்-சுவாங் கூறுகிறார். 'சுல்தான் கஞ்சில்' கண்டெடுக்கப்பட்ட $7\frac{1}{2}$ அடி உயரமுள்ள வெண்கலப் புத்தர் சிலை, அரியதொரு சிற்பமாய் விளங்குகிறது. டில்லியில் குதுப்மினாருக்கு அருகிலுள்ள இரும்புத்தூண், குப்தராட்சியின் முற்பகுதியில் அமைக்கப்பட்ட உன்னதக் கலைப்பொருள் எனலாம். உலையிலிட்டுக் காய்ச்சி அடிக்கப்பட்ட இரும்பினால் இத்தகையதொரு தூணை, ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு முன்பு ஐரோப்பாவின் தலைசிறந்த கொல்லப்பட்டறையிலும் உருவாக்குவது இயலாததொரு பணி எனத் துணிந்து கூறலாம்.

சித்திரக்கலையும் இக் காலத்தில் மகோன்னத நிலையடைந்தது எனக் கூறலாம். அஜந்தாக் குகையின் சுவர்களிலும் கூரையிலும் காணப்படும் அற்புத வண்ணச் சித்திரங்களை உலக மக்கள் யாவரும் கண்டு வியப்புறுகின்றார்கள். மொத்த எண்ணிக்கையான இருபத்தொன்பது குகைகளுள் பதினாறில் அற்புதமான சித்திரங்கள் கி. பி. 1879ஆம் ஆண்டு வரையிலும் நிலைத்திருந்தன. இவற்றுள் பெரும்பாலன சிதைக்கப்பட்டன என்பதை எண்ணும்போது வருத்தம் உண்டாவது இயற்கை; மற்றுமுள்ள சித்திரங்களுட் சில, கி. பி. முதல் நூற்றாண்டிலேயே உருப்பெற்றனவென்றாலும், பெரும்பாலன குப்தர் காலத்திலேயே எழுந்தன. கற்பனைச்செறிவும் கண்கவர் வண்ணங்களும் ஓவியத்திறனும் மிக்க இச் சித்திரங்களின் சிறப்பை நாம் கற்பனை செய்துகொள்ளும் வாய்ப்பையே பெற்றிருக்கிறோம். வகைவகையாயும் வனப்புமிக்கவையாயும் புதுமை

நிரம்பியவையாயுமுள்ள 'அலங்காரச் சித்திரங்களோடு' கலைஞன் தன் கைத்திறன் முழுவதையும் காட்டியமைத்திருக்கும் புனிதப் பொருள்களும் சின்னங்களும் புத்தர் சிலைகளும் அவர்தம் வாழ்க்கைச் சித்திரங்களும் (ஜாதகக் கதைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் சம்பவங்களுட்பட) மிக நேர்த்தியாய்க் காணப்படுகின்றன. 'மரணப்படுக்கையிலுள்ள இளவரசி', 'தாயும் சேயும்' ஆகிய சித்திரங்கள் பல்லாயிரக்கணக்கான

(கல்கத்தா நகர் இந்தியக் கண்காட்சிச்சாலையினரின் இசைவு பெற்றது)
நரநாராயணர்—தியோகார் கோயில்

மக்களின் ஏகமனதான பாராட்டுதல்களைப் பெற்றிருக்கின்றன. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் உருப்பெற்றவையும், சிலோன் நாட்டில் சிகிரியா என்னுமிடத்தில் வண்ண ஓவியங்

களும் அஜந்தாக் குகைச் சித்திரங்களைப் போலவே அமைந்துள்ளன. அவை நன்கு பாதுகாக்கப்பட்டு இன்றும் புதுப் பொலிவுடன் விளங்குகின்றன. 'பாக்' (Bagh) என்னுமிடத்திலுள்ள குகைகளிலும் உயர்ந்த வண்ணச் சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

நம் கைக்குக் கிட்டியுள்ள ஆதாரங்களிலிருந்து, சிற்பக் கலையுடன் ஒப்பிடும்போது, குப்தர் காலத்துக் கட்டடக் கலை மிகத் தாழ்ந்த நிலையிலேயே இருந்ததெனலாம். சாஞ்சியிலுள்ள கற்கோயிலும், தியோகாரிலுள்ள கற்கோயிலைப்போல மிகச்சிறியது என்றாலும், நேர்த்தியானதாய் விளங்குகிறது. 'பித்தார்காயன்' (Bitargaon) என்ற இடத்திலுள்ள செங்கல்லால் ஆன இடிந்த கோயில் பெரிதாய்க் கட்டப்பட்டிருக்கவேண்டும். 'நாச்ன-கே-தலாய்' (Nachna-ke-Talai) என்ற இடத்திலும், மற்றும் சில இடங்களிலும், பெருங்கற்கோயில்கள் இருந்திருக்கவேண்டுமென்பதற்கான சின்னங்கள் தென்படுகின்றன. திட்டமிட்டு அமைக்கப்பட்ட இக் கோயில்களில் சதுர வடிவமான கூடமொன்றும், கர்ப்பக் கிருகமும் வராந்தாவும் முக்கிய உறுப்புகளாய் அமைந்துள்ளன. சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய பலகைகள் கோயிலை அழகுபடுத்துகின்றன. கட்டட அமைப்பிற்கிணங்கியே சிற்ப வேலைப்பாடும் அமைந்திருப்பதன்றித் தேவைக் கதிகமான சிற்பங்கள் அங்கில்லை. உன்னதமான மிகப்பெரிய கோயில்கள் பல, குப்தர் காலத்தில் கட்டப்பட்டிருக்கவேண்டும். அவை யாவும் காலப்போக்கில் அழிந்திருக்கக்கூடும். பிற்காலங்களில் காணப்படும் வேலைப்பாடமைந்த வானளாவிய கோபுரங்கள் (சிகரங்கள்) இக் கோயில்களில் இல்லை. பித்தார்காயன் கோயிலில் கோபுரம் அமைக்கும் வழக்கம் தொடங்கியதெனலாம். சிற்பங்கள் சில, கோபுரத்துடன் கூடிய கோயிலின் உருவங்களைச் சித்திரிப்பவையாய்க் காணப்படுகின்றன.

குப்தர் காலத்துத் தலைசிறந்த மன்னர் சிலர் வெளியிட்ட தங்க நாணயங்களில், அக்காலத்துக் கலையார்வம் மிளிர்வதைக் காணலாம். செல்வமும் செல்வாக்கும் மிக்க அம் மன்னர்கள், ஏராளமான நாணயங்களை வெளியிட்டார்கள். நாணய வெளியீட்டில், அந்நியரின் செல்வாக்குக் காணப்படுகின்றதென ஆராய்ச்சியாளர் சிலர் கருதிவருகின்றனர். எனினும், நாணயங்களின் மீது பொறிக்கப்பட்டுள்ள உருவங்கள் யாவும் இந்தியரின் தனிப்பெருந் திறனேயன்றிப் பிறிதில்லை என ஐயமின்றிக் கூறலாம். தங்கள் கருத்துகளைத் தடையேதுமின்றி வெளியிட்டுப் பன்னெடுங்காலமாக இந் நாட்டில் வளர்ந்துவரும் கலை முறை

களையும், அந்நியரின் உறவால் கிடைத்த அனுபவங்களையும் ஒன்றுகூட்டி, அற்புதச் சித்திரங்கள் பலவற்றைக் கலைஞர் பொறித்தனர். நன்கு திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ள இந் நாணயங்கள், இந்தியக் கலைப்பொருள்களில் தலைசிறந்தவை எனக் கருதப்படுகின்றன.

## இடைக்காலம் (கி. பி. 600—1200)

குப்தர் ஆட்சியைத் தொடர்ந்து. சுமார் 600 ஆண்டுகளுக்கு இந்தியக் கலை வளர்ச்சியில், கட்டடக் கலைக்கு அதிக கௌரவம் கிடைத்ததெனலாம். பலவகையான கட்டடங்கள் எழுப்பப் பட்டு வந்ததோடு, இந் நாடெங்கும் நாம் இன்றும் கண்டு வரும் மிகச்சிறந்த கோயில்களும் கட்டப்பட்டன.

பொதுவாகக் கூறுமிடத்து, இக் காலத்துக் கட்டடங்கள் இந்தோ-ஆரியன் அல்லது வடவிந்திய வகை, திராவிடம் அல்லது தென்னிந்திய வகை என்னும் இரு வகையைச் சேர்ந் தவை. இவ்விரு வகைகளுக்குமிடையேயுள்ள வேற்றுமை, 'சிகரத்தின்' உருவத்தைப் பொறுத்ததே. 'சிகரம்' என்பது, உயரமாகக் கர்ப்பக் கிருகத்தின்மேல் அமைக்கப்படும். அதன் நிழலிலேயே மூர்த்தியின் உருவம் பிரதிஷ்டை செய்யப்படும். வடவிந்தியச் 'சிகரம்' (320ஆம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்க) உயரமாய் எழுப்பப்பட்ட கூனுருளை வடிவமுடையது. இது மையத்தில் அதிகக் குறுக்களவு உள்ளதாயும், உச்சியில் குறுகியும் காணப்படும் மேல் முனை கூராய் அமைந்திருக்கும். தென்னிந்தியச் 'சிகரம்' (324ஆம் பக்கம் பார்க்க) பிரமிடு போன்ற தோற்றமுடையது. அடுக்கடுக்காய் உள்ள தட்டுகள் மேலே செல்லச்செல்ல அகலக் குறைவுடையனவாய்க் காணப் படும். ஒவ்வொரு மேல் தட்டும் சற்று உள்ளடங்கியே அமைந் திருக்கும்; உச்சியில் சிறியதொரு வட்டவடிவமான கல்லைச் சிகரமாகப் பெற்றிருக்கும். இருவகைச் சிகரங்களிலும் அலங்கார மான சிற்ப வேலைப்பாடுகள் காணப்படும்.

இவ் விருவகைக் கட்டடங்களுக்கும் இடையிலுள்ள மற்று மொரு வேற்றுமை பின் வருமாறு: தென்னிந்தியக் கோயில் களில் ஏராளமான தூண்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காண லாம். வடவிந்தியாவில் தூண்களைக்கொண்ட கட்டடங்கள் மிகச்சொற்பமாகவே காணப்படும்.

### வடவிந்தியா

கூனுருளை வடிவம் தாங்கிய சிகரங்களையுடைய கோயில்கள் வடவிந்தியாவில் ஏராளமாய்க் காணப்படுகின்றன. ஒரிஸ்ஸாவி

லுள்ள புவனேசுவரத்திலும், மத்திய இந்தியாவைச் சார்ந்த சத்ரபூர் மாகாணத்திலுள்ள காஜுராகோ (Khajuraho) என்னு மிடத்திலும் ஏராளமான கோயில்கள் காணப்படுகின்றன. இக் கோயில்கள் பலவும் கீழிருந்து மேல் வரையில் சிற்பங்கள் நிறைந்து கம்பீரமான தோற்றத்துடன் காட்சியளிக்கின்றன. அடிப்படையான கோட்பாடுகளைக் கையாண்டு அமைக்கப்பட்டிருந்தும், சிற்ப வேலைப்பாடுகளைச் சற்று மாற்றுவதாலும் பொதுத் தோற்றத்தில் சில மாறுபாடுகளைச் செய்வதாலும் எல்லையற்ற அழகு பெற்று விளங்கும் சிகரங்கள் பலவகையாய்க் காட்சியளிக்கின்றன. காஜுராகோ கோயிலில், பிரதான சிகரத்தோடு சிறு சிகரங்களும் எழுப்பப்பட்டு, நாளடைவில் இவற்றைத் தனித்தனியே எழுப்பும் வழக்கமும் ஏற்பட்டது. இவை பெரும்பாலும் அழகூட்டுவதற்கென்றே அமைக்கப்பட்டன. பிற கோயில்களிலும், மையமான சிகரத்துடன் அலங்காரத்திற்கென எழுப்பப்பட்டிருக்கும் பல சிறிய சிகரங்களையும் நாம் காணலாம்.

இக் கோயில்களுள் ஒன்றை மட்டிலும் குறித்து விளக்குவது மிகக் கடினம். புவனேசுவரத்திலுள்ள 'லிங்கராஜா', 'ராஜா ராணி' கோயில்களும், சந்தேல (Chandella) குலத்து மன்னர் காஜுரா கோவில் எழுப்பிய பல கோயில்களும், இக் காலத்து முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் எழுந்த தலைசிறந்த கோயில்களுக்கு மேற்கோள்களாக எடுத்துரைக்கப்படுகின்றன. பூரி ஜகந்நாதரின் கோயில் புகழ் மிக்கதெனினும் அழகில் குறைந்ததாகவே காணப்படுகிறது. இராஜபுதனத்திலும் அருமையான பல கோயில்கள் காணப்படுகின்றன.

பொது வகையான கோயில்கள் நீங்கலாக, ஒவ்வொரு வட்டாரத்திலும், தனி வகையான கோயில்களும் எழுப்பப்பட்டன. காஷ்மீரத்திலும் இராஜபுதனத்திலும் இக் கலையார்வம் மிருந்திருந்தது. மார்த்தாண்டர் கோயில் முந்திய வகைக்குச் சிறந்த மேற்கோள். 'ஆபு' மேட்டிலுள்ள 'திலாவரா'க் கோயில்கள் இரண்டும் பிந்திய வகைக்குரிய மேற்கோள்களாய் விளங்குகின்றன. சிறிய அளவுடைய இக் கோயில்களுக்குச் சிகரங்கள் அமைக்கப்படவில்லை. கர்ப்ப கிருகத்தின் மேலமைந்திருக்கும் மணிக்கூண்டும், முன்புறத்திலமைந்திருக்கும் மண்டபத்திலுள்ள தூண்களும் வருணிக்க இயலாத பொலிவுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. கடினமான கல்லை, ஓலை போன்ற தாளை வெட்டுவது போன்று கையாண்டிருப்பது மிக விந்தையாய் விளங்கும். அங்கு காணப்படும் அலங்கார வேலைப்பாடுகள், மனித சக்திக்கு அப்பாற்பட்டவையாயும், இந்தியக் கலைக்கருவூலத்தின் விலை

மதிப்பற்ற மாணிக்கங்களாயும் விளங்குகின்றன. இவற்றுள் ஒன்று, கி. பி. 1032ஆம் ஆண்டில், 'விமலா ஷா' (Vimala Sha) என்னும் அமைச்சர் அல்லது கவர்னராலும், மற்றொன்று, கி. பி. 1231-ல் 'தேஜபாலன்' (Tejahpala) என்பவனாலும் எழுப்பப் பட்டன.



லிங்கராசா கோயில்—புவனேசுவரம் E.N.A.

## தென்னிந்தியா

பல்லவர் ஆட்சிக் காலந்தொட்டு, தென்னிந்தியத் தீபகற்பத்தின் கலை வரலாறு தொடங்குவதாகக் கொள்ளலாம். கட்டடக் கலையும் சிற்பக்கலையும் பல்லவரால் போற்றி வளர்க்கப் பட்டன. பல்லவ மன்னர் எழுப்பிய கலைக்கோயில்களில், திராவிடக் கலைப்பண்பை நாம் காண்கிறோம். 'காஞ்சி' அல்லது 'காஞ்சிபுரம்' எனப் பெயர் கொண்ட கலைநகரிலுள்ள கோயில்களுடன், 'ஏழு பகோடாக்கள்' (Pagodas) அல்லது 'மாமல்லபுர ரதங்கள்' என வழங்கப்படும் குகை வெட்டுக் கோயில்களும் திராவிடக் கலை மரபையொட்டியவையாய் விளங்குகின்றன. இக் கலை முறையைப் 'பல்லவர்-பாணி' அல்லது 'பல்லவர் முறை' என வழங்குவதும் பொருந்தும். பின் கூறப்பட்ட

இரதங்கள் ஒரே கல்லில் குடைந்தெடுக்கப்பட்ட சிறு கோயில்களாய் விளங்குகின்றன. கடற்கரையோரத்தில் அமைந்துள்ள இவை, பல்லவரால் எழுப்பப்பட்ட மாமல்லபுரம் அல்லது மகாபலிபுரத்திற்கு அழகூட்டி வருகின்றன. மாபெரும் பல்லவ



படப்பிடிப்பு—ஜான்சனும் ஹாப்மனும்.

மகாதேவர் கோயில்—காஜுராகோ

மல்லன் நரசிம்மவர்மனால் (கி. பி. ஏழாம் நூற்றாண்டு) மாமல்லபுரம் எழுப்பப்பட்டது. இப்போது அந் நகருக்கு, அங்குள்ள ஒரே கல்லினாலான சிற்பங்களே பெருமையளிக்கின்றன. கற்சுவர்களில் குடைந்தெடுக்கப்பட்ட அழகிய சிற்பங்கள் நகரை

அலங்கரிக்கின்றன. கோயில்கள் அல்லது 'பகோடாக்கள்' என வழங்கப்படும் இவை, பஞ்சபாண்டவர் பெயர்களையும், அவர்தம் மனைவியான திரௌபதியின் பெயரையும் தாங்கி நிற்கின்றன. இவை முறையே, தர்மராஜ ரதம், பீம ரதம், திரௌபதி ரதம் முதலிய பெயர்களால் வழங்கி வருகின்றன. கற்பாறைகளில் குடைந்தெடுக்கப்பட்டுள்ள இக் கோயில்களுக்குச் சாதாரணக்



தேஜபாலன் கோயில்—ஆபு மலை

கோயில்களின் இலட்சணங்கள் யாவும் பொருந்தியிருப்பதோடு இவை பல்லவர் கலைத்திறனைப் பறைசாற்றும் அரிய சான்றுகளாயும் விளங்கி வருகின்றன. சிற்பங்களின் கலைத்தொகுதியொன்று மிகவும் சிறப்புப்பெற்று விளங்குகிறது. இச் சிற்பம் சித்திரிக்கும் காட்சியை அருச்சுனன் 'தவம்' எனப் பெயரிட்டு வழங்குவது மரபு. அருச்சுனனுக்கும், இச் சித்திரத்திற்குமுள்ள தொடர்பு சந்தேகத்திற்கிடமானது. பல்லவர் காலத்தில் பல குகைக் கோயில்களும் கட்டப்பட்டன என்பது தெரியவரும்.

பல்லவர் ஆட்சியின் முற்பகுதியில் சமைக்கப்பட்ட கலைப் பொருள்களும் உயர்ந்த ரகத்தைச் சார்ந்தவையாய் இருக்கின்றன என்பது கவனித்தற்குரிய செய்தியாகும். ஆட்சித்

தொடக்கத்தில் சமைக்கப்பட்ட கலைப்பொருள்கள் இப்போது நம் கைகளுக்கெட்டவில்லையெனினும், அவை இருந்திருக்க வேண்டுமென்பது திண்ணம். காஞ்சியிலும், மாமல்லபுரத்திலும் கலைக்கோயில்களைச் சமைத்த கலைஞருக்கும், மாமல்லபுரத்தில் கல்லைக் குடைந்து அவற்றிற்கு உயிரூட்டிய சிற்பிகளுக்கும் நல்ல பயிற்சி இருந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமெதுவுமில்லை. பல நூற்றுண்டுகளாய் வளர்ந்த கலைப்பண்புகளையும் அனுபவங்களையும் அவர்கள் நன்கு பயன்படுத்தியுள்ளார்கள். மௌரியர் காலக் கலைஞர் நம்மை வியப்பிலாழ்த்துவது போலவே, குப்தர் காலத்துக் கலைஞரும் நமக்குத் திகைப்பூட்டுகின்றனர். தகுந்த

உரிமை : கிளீனும் பெயரும்

கல்வெட்டுச் சிற்பக்கலை—மாமல்லபுரம்

பயிற்சியின்றித் திடீரென அவர்கள் சிறப்படைந்திருக்க இயலாது என்பதை மேலே குறித்துள்ளோம். அந்நிய நாட்டுக் கலைஞரை இறக்குமதி செய்து அவரது உதவியுடன் சிற்பங்கள் செய்து முடிக்கப்பட்டன எனும் கருத்தை நாம் ஏற்பதற்கில்லை. தொடக்கத்தில் மரம் போன்ற கடினமற்ற பொருள்களில் சிற்ப வேலை பயின்று, அனுபவமடைந்து தாங்கள் பெற்ற திறனைக் கல்லில் அவர்கள் வடித்தார்கள் எனக் கொள்வது பொருத்தமான கருத்தாய் விளங்குகிறது. மரம் போன்ற அழியும் பொருள்களை அவர்கள் உபயோகித்திருந்தால், அவை சின்னாள்

களில் அழிந்திருக்கக்கூடும்; அல்லது நம் கண்களுக்குப் புலப்படாது ஒளிந்திருக்கும். அவற்றை ஆராய்ச்சியாளர் பின்னொரு காலத்தில் கண்டெடுக்கவும் கூடும்.

தென்னிந்தியத் தீபகற்பத்திற்கு வழிகாட்டியாய்ப் பல்லவர் கலைப்பண்பு அமைந்ததோடு, தூரக்கிழக்கு நாடுகளிலும் இக்



தஞ்சைக்கோயில் E.N.A.

கலை முறையின் செல்வாக்குக் காணப்படுகிறது. ஜாவா, கம்போடியா, அன்னம் முதலிய இடங்களில் உள்ள கோயில் சிகரங்கள், திராவிட பாணியில் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. அவற்றுக்கும், தென்னிந்தியக் கோபுரங்களுக்கும் சிறு

வேற்றுமைகள் சில காணப்படுகின்றன. தென்னிந்தியக் கோயில்களில் நாம் சாதாரணமாகக் காணும் தூண்களைத் தூரக் கிழக்கு நாடுகளில் காண்பது அருமையாய் இருக்கிறது.

பல்லவரையடுத்துத் தென்னிந்தியாவில் அரசெய்திய சோழர், கட்டடக் கலையில் கை தேர்ந்தவராய் விளங்கினர். திராவிடக்கலை முறையை வளர்த்து, அதற்கு உன்னதமான இடத்தையும் அவர்கள் தேடித் தந்தார்கள். பேரரசன் இராஜ ராஜனால் கட்டப்பட்ட தஞ்சைப் பிரகதீசுவரர் ஆலயம், இக் கலை முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட தலைசிறந்த கலைப் பொக்கிஷமாய் விளங்குகிறது. பதினன்கு அடுக்குகளைக் கொண்ட மாபெருஞ்சிகரம், 190 அடி உயரமுள்ளது. சிகரத்தின் உச்சியில் மணிக்கூண்டு வடிவமுள்ள ஒற்றைக்கல் ஒன்றும் பொருத்தப்பட்டிருக்கிறது. இப் பெரிய கல்லை, இதற்கென அமைக்கப்பட்ட நான்கு மைல் நீளமுள்ள சாய்ந்த தளத்தின் உதவியோடு 90 அடி உயரத்திற்குக் கொண்டுசென்றனர் எனக் கூறப்படுகிறது. இப் பெரிய கோபுரத்தின் அடித்தளத்தி லிருந்து உச்சி வரையிலும், அழகிய சிற்பங்களும் சித்திர வார்ப்புகளும் காணப்படுகின்றன, முற்றமொன்றின் மையத்தி லமைந்திருக்கும் இக் கோபுரத்தைச் சுற்றிலும் பல சிறிய கோயில்களும் அமைக்கப்பட்டிருந்த போதிலும், கர்ப்பகிருகத் தின் மேலமைந்துள்ள கம்பீரமான கோபுரம், அப் பகுதி முழு வதற்கும் சிகரமாய் அமைந்து விளங்குகிறது. அவ் வட்டாரத் திற்கே இது தனிச்சிறப்பு அளித்து வருகிறது என்றும் கூறலாம்.

திருச்சி மாவட்டத்திலுள்ள கங்கை கொண்ட சோழபுரத் தில் மற்றுமொரு சிறந்த ஆலயமிருந்தது. இராஜேந்திர சோழன் என்னும் மன்னனின் தலைநகராயக் கங்கை கொண்ட சோழ புரம் விளங்கியது. மாபெரு மாளிகையொன்றும், பதினைந்து மைல் நீளமுள்ள கற்கரைகளமைந்த செயற்கைக் குளமொன் றும் அந் நகரைப் பொலிவுறச் செய்தன. இவை யாவும் இப்போது அழிந்து அலங்கோலமாய்க் காட்சியளிக்கின்றன.

சோழர் கலைப்பொருள்கள் யாவும் கம்பீரமான தோற்ற முள்ளவை. பெரிய அளவுடைய இவற்றில் நுணுக்கமான சிற்ப வேலைப்பாடுகள் பல உண்டு. இவற்றை அமைத்த கலைஞரின் பொறுமையும் கைத்திறனும் நம் பாராட்டுகளுக்குரியவை. பெர்கூசன் (Fergusson) கூறுவதைப் போல, சோழக் கலைஞரின் கற்பனைத் திறன் அரக்கத் தன்மை வாய்ந்ததாகவும், கைத் திறன் நகாசு வேலையில் சிறந்த பொற்கொல்லரின் வேலையைப் போன்றும் விளங்கின!

சோழர் கலை முறையில் புதியதோர் மாறுதலேற்பட்டு வந்தது. இதன் செல்வாக்குப் பெற்றுப் பிற்காலத் திராவிடக் கலைப்பண்பு பெரிய மாறுதல்களுக்குட்பட்டது, கோயில் என்ற கட்டட வகைக்கு மாபெருந் தலைவாயில்களான 'கோபுரங்களை' அமைத்தது, இவர்தம் பெருமைக்குரிய செய்தி. நாளடைவில் கோபுரங்கள் பெருகின. மிகப்பெரிய அளவில் நிருமாணிக்கப் பட்டு, ஒன்றன்மேல் ஒன்ருகப் பல அடுக்குகளையுடையனவாய் இக் கோபுரங்கள் உருவெடுத்தன. மிக உயரமாயும், கலையழகு நிரம்பியவையாயுமிருந்த இக் கோபுரங்கள் இறுதியில் கோயில் களின் மிக முக்கிய உறுப்புகளென எண்ணப்படலாயின. மூர்த்தியைக்கொண்ட ஆடம்பரமற்ற கோயிலைக்காட்டிலும், கோபுரங்களின் புகழ் வளர்ந்தது. உதாரணமாக, கும்பகோணம் கோயிலிலுள்ள கோபுரம் மிகப்பெரியது. கோயில் ஆடம்பரமற்ற தொரு சிறிய கட்டடமாய் விளங்குகிறது. எனவே, முழுமை யாக நோக்கும்போது இரண்டிற்குமுள்ள பொருத்தம் சற்றுத் திருப்திக்குறைவாகவே தென்படுகிறது. கலை ரசனை மிகுந்த அறிஞர் இதைச் சற்றுக் குறைவாக மதிப்பிடவும் இடமேற்படு கிறது.

இதே போன்று அமைந்த பெரிய கோயில்கள் பல தென் னிந்தியாவிலுண்டு. கோபுரத்துடன் கற்றூண் மண்டபங்களும், நீண்ட பிரகாரங்களும் பிற்காலத்தில் எழுந்த கோயில்களில் காணப்படுகின்றன. மதுரை, ஸ்ரீரங்கம், இராமேசுவரம் ஆகிய இடங்களிலுள்ள பெருங்கோயில்களைக் கண்டு, யாவரும் வியப் பெய்துகின்றனர். அக் கோயில்களின் மதிற்சுவர்களும் நீண்ட பிரகாரங்களும் பிரமிக்கத்தக்க கட்டடங்களும், ஆயிரக்கால் மண்டபங்களும், மூடப்பட்ட தூண் வரிசைகளின் அமைப்பால் ஏற்பட்ட இடைவெளிகளும், காண்போர் யாவரையும் பரவசப் படுத்துகின்றன. இக் கோயில்களில் பெரும்பாலானவை பிற் காலங்களிலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும்.

## தக்காணத்தின் மேற்பகுதி

இரு தனிவகையான கட்டடக் கலைகளைத் தோற்றுவித்த வடவிந்திய, தென்னிந்தியப் பகுதிகளின் இடையில் தக்காணப் பீடபூமியில், இரு வகைகளுமே வழக்கிலிருந்தன. இப் பகுதியில் ஆட்சி செய்த சாளுக்கியர், இராஷ்டிரகூடர் ஆகிய இரு குலத் தினரும் கட்டடக் கலையில் ஆர்வம் மிக்கவராய் இருந்தனர். பிராமணக் கடவுளருக்கென எழுப்பப்பட்ட பல குகைக்கோயில் களைச் சாளுக்கியரின் தலைநகரான பாதாமியில் நாம் காண் கிருேம். இக் கோயில்களில் அருமையான உருவச்சிலைகளும்

அற்புதச் சிற்பங்களும் காணப்படுகின்றன. இக் குகைக் கோயில்கள் நீங்கலாகச் சாதாரணமாகக் கட்டப்பட்ட மற்றும் பல கோயில்களையும் பாதாமியிலும், இதர இடங்களிலும் நாம் காண இயலும். இவை யாவும் பல்லவர் முறையையோ, அல்லது திராவிடர் முறையையோ கடைப்பிடித்து எழுப்பப்பட்டுள்ளன. இதே பாணியை இராஷ்டிரகூடரும் கையாண்டனர் என்பது தெரிய வருகிறது. எல்லோராவிலுள்ள உலகப் பிரசித்தி பெற்ற கைலாச நாதர் கோயில், திராவிடக்கலை அடிப்படையில் அமைக்கப்பட்ட சீரிய கலைப்படைப்பாய் விளங்கி வருகிறது. கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்—முதலாம் கிருஷ்ணன் காலத்தில்—இது கட்டப்பட்டிருக்க வேண்டும். மாமல்லபுரத்து ரதங்களை உருவாக்குவதில் கையாளப்பட்ட பல உத்திகளும் இங்கு மீண்டும் உயர்ந்த அளவில் பயன்படுத்தப் பட்டன. சிறு குன்றின் பகுதியொன்றைத் தேர்ந்து, மலைத் தொடரிலிருந்து அதை வேறுபடுத்தினர். மாமல்லபுரத்து ரதம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெருங்கல்லிலிருந்து குடைந்தெடுக் கப்பட்டதே போல, இப் பெரிய குன்றிலிருந்து மாபெருங் கோயிலொன்று குடைந்தெடுக்கப்பட்டது. திறந்த வெளியில் கம்பீரமாய் அமைக்கப்பட்ட இக்கோயில் இப்போது எளிய தோற்றமுடையதாகவே தென்படுகிறது. ஆனால், இப்போது எஞ்சியிருப்பது, ஒரு காலத்தில் குன்றின் பகுதியாய் விளங்கிய தென்பதும், கோயிலைச் சுற்றியமைந்திருந்த மூன்று பெரிய கற்களுள் ஒன்றென்பதும் தெளிவு.

கோயிலுக்குத் திராவிடக் கலை முறையை அடிப்படையாய்க் கொண்ட சிற்ப வேலைப்பாடுகளமைந்த சிகரமொன்று அமைக் கப்பட்டிருக்கிறது. குன்றுகளைச் சுற்றிலும் மேற்கொள்ளப்பட்ட புதை பொருளாராய்ச்சியின் விளைவாகச் சில குகைகள் கண் டெடுக்கப்பட்டுள்ளன. விசாலமான அறைகளைக்கொண்ட இக் குகைகளில் பல தூண்கள் உண்டு. தூண்களில், பிராமணத் தெய்வங்களின் பல உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. எல்லோ ராவிலுள்ள கைலாச நாதர் கோயில், கலையுலகில் ஈடும் எடுப்பு மற்றதோர் உன்னதப் படைப்பு. கலை நுட்பத்தையும், கலைஞனது உழைப்பையும் மதிப்பிடும்போது, உலக வரலாற் றிலேயே இதைப்போல் பிறிதொன்றைக் காண இயலாதெனக் கூறலாம்.

தலைசிறந்த இக் கோயிலுக்குச் சமீபத்திலுள்ள எல்லோராக் குன்றில் குகைக்கோயில்கள் பலவற்றையும் காணலாம். கார்லே, நாசிக்கு என்னும் இடங்களில் நாம் கண்ணுற்ற

கோயில்களைப் போலவே இவை அமைந்துள்ளன. விசுவகர்மக் குகையின் முகப்பில் கண் கவர் மாறுதல்கள் சில புகுத்தப்பட்டிருக்கின்றன.

பம்பாய்க்கு அருகிலுள்ள எலிபெண்டாத் தீவிலுள்ள குகைகள் பிராமணச் சமயக் கடவுளரின் உருவச்சிலைகளுக்கு மிகவும் பெயர் பெற்று விளங்குகின்றன.

## மைசூர்ப் பீடபூமி

பிற்காலச் சாளுக்கியரைத் தொடர்ந்து கி. பி. பன்னிரண்டு பதின்மூன்றும் நூற்றுண்டுகளில் மைசூர்ப் பீடபூமியை ஆண்டு வந்த ஹொய்சலர் (Hoysalas), புதியதொரு கட்டடக் கலையைத் தொடங்கினர். இவர் தம் முன்னோர்களான கங்கரின் (Gangas) கலைப்பண்பை வழிமுறையாக இவர் பெற்றிருக்கக்கூடும். சமண தீர்த்தங்கரர் கோமதீசுவரரின் மாபெரிய உருவச்சிலை, கங்கர் ஆட்சிக் காலத்தில்—கி. பி. 983 ஆம் ஆண்டில்—அமைச்சராய்ப் பணியாற்றிய சாமுண்ட-ரே (Chamunda Ray) என்பவரால் அமைக்கப்பட்டது. சிரவண பெல்கோலா (Saravana Belgola)



ஹொய்சலேஸ்வரர் கோயில் ஹாளேபிட்

என்னுமிடத்தில் உயர்ந்ததொரு குன்றின்மேல் அமைந்திருக்கும் இவ்வுருவம் 56 அடி. அதாவது, சாதாரண மனிதனது

உயரத்தைப் போலப் பத்து மடங்கு உயரமுள்ளது. மிகவும் கடினமான ஒரே கல்லில் இவ் வுருவம் சமைக்கப்பட்டிருக்கிறது. மாபெரிய இத் திட்டத்தைப் போலவும் அல்லது இதைச்செய்து முடித்ததிலும், இதைப் போன்ற சிற்பத்தை வேறெங்கும் காண இயலாது.

கலையைப் பொறுத்தவரையிலும் ஹொய்சலரிடமும் இத் தகைய பண்புகள் காணப்படுகின்றன. உருவச்சிலைகளுக்குப் பதிலாகப் பெருங்கோயில்களை இவர்கள் எழுப்பினுர்கள். இவர் களால் கட்டப்பட்ட கோயில்கள் சதுரவடிவைப் பெருது, நட்சத் திர வடிவுடையவையாகவோ அல்லது பல கோணங்களைக் கொண்டவையாகவோ விளங்குகின்றன. அகலமான பீடம் அல்லது ஆசனங்களின்மீது வளைத்து வளைத்து அமைக்கப்பட்ட கும்பங்களில் அதிக இடைவெளிகள் காணப்படுவதால், சிற்ப வேலைப்பாடுகள் செய்வதற்கு நல்வாய்ப்பிருந்தது. சிகரம் பிரமிடு போன்று அமைந்திருந்ததெனினும், உயரக்குறைவான திராவிடக் கலை முறையடிப்படையிலேயே அமைக்கப்பட்டது எனலாம். ஹாளேபிட் (Halebid) அல்லது துவார சமுத்திரத்தில் கட்டப்பட்டிருக்கும் ஹொய்சலேசுவரர் கோயில், ஹொய்சலர் பாணிக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாய் விளங்கிவருகிறது. ஐந்தடி அல்லது ஆறடி உயரமுள்ள மேல்தட்டின் மேல் அமைந் திருக்கும் இக் கோயில் முழுவதும் கற்கள் பரப்பப்பட்டுக் காணப் படுகிறது. யானைகள், புலிகள், சுருள்வடிவங்கள், குதிரைவீரர், தேவலோக மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றின் உருவங்கள் கீழிருந்து உச்சிவரை பொறிக்கப்பட்டுள்ளன. பட்டை ஒவ் வொன்றும் 700 அடி அல்லது அதற்கு மேற்பட்டிருந்தும், ஒவ் வொன்றும் முழுவதும் சிற்பங்களால் நிரப்பப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் ஒரு பட்டையில், கடிவாளமேந்திய பாகரோடு கூடிய இரண்டாயிரம் யானைச்சிற்பங்கள் மிக நுணுக்கமாகச் செதுக்கப்பட்டுள்ளன, இதேபோன்று மீதியுள்ள பத்துப்பட்டை களிலும் அலங்காரச் சித்திர வேலைப்பாடுகள் காணப்படுகின் றன. ஹொய்சலேசுவர கோயிலிலுள்ள சிற்பங்கள் பின்வருமாறு மிக அழகாக வருணிக்கப்பட்டுள்ளன. மனித முயற்சியின் மிக உன்னதப் படைப்புகளான இவற்றைப் போன்றவற்றைப் பொறுமைக்குப் பெயர் பெற்ற கீழ்த்தேசமெங்கும் காண்பதரிது.

## இடைக்காலச் சிற்பங்கள்

இச் சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இடைக்காலக் கோயில்களை ஆராய்வதன் மூலம், அவற்றின் சிறப்பியல்புகளை நாம் எளிதில் அறியலாம். இவை நீங்கலாக ஆண்-பெண் கடவு

ளரின் பல உருவச்சிலைகளையும் நாம் காணலாம். ஒவ்வொரு பகுதியிலும் அதன் சூழ்நிலைக்கேற்ற முறைகள் கையாளப்பட்டு வந்தன. உள்நாட்டுத் தலைவர் பலர் (உ-ம்: பாலர், சேனர், சாந்தலர், காலசூரிகள்) ஆகியவர்கள் கலையார்வத்தை உரமிட்டு ஊட்டி வளர்த்தனர். இவ்வாறு எழுந்த பல பாணிகளை ஆராய்வதும் விளக்குவதும் மிகக்கடினம். இடைக்காலச் சிற்பங்களை ஆராயும்போது சமயக் கருத்துகளின் செல்வாக்கு மிகுதியையே நாம் காண்கிறோம். கலைரசனைக்குச் சற்றுத் தாழ்ந்த இடமே வழங்கப்பட்டிருக்கிறது. இக் காலக் கலைக்கண்ணோடு நோக்கும்போது, சில சிற்பங்கள் விகாரமாயும் தோற்றமளிக்கக்கூடும். ஆழ்ந்து நோக்கினாலன்றி, அவற்றில் பொதிந்து கிடக்கும் சமயக் கருத்துகளை நாம் உணர இயலாது. நடராஜ சிவ தத்துவம், இடைக்காலக் கலைஞர்--குறிப்பாகத் தென்னாட்டவர்—நமக்கு விடுத்துச்சென்றிருக்கும் விலையில்லாச் சொத்து. வட விந்தியச்சிலைகள் சில பிராமண, புத்த சமயக் கடவுளரின் உருவந்தாங்கி அழகுடன் விளங்குகின்றன. ஆனால், அவற்றில் கலைஞனது சுய சிந்தனைக்கு இடமேயில்லை. தாந்திரிகக் கருத்துகளுக்குப் (Tantrik ideas) பிற்காலத்தில் நல்ல செல்வாக்கு ஏற்பட்டிருந்ததென்பது தெரிய வருகிறது. என்றாலும் இக்காலக் கலைரசனைக்குப் பொருந்தாதவைகளாகவே அவை தென்படுகின்றன.

பண்டைய இந்தியாவில், கலை, சமயத்தின் கைப்பாவையாய் விளங்கி வந்திருக்கிறது. பொதுவில் வழக்கிலிருந்த சமயக் கருத்துகளையும் நம்பிக்கைகளையும் விளக்குவதற்குக் கலை பெரிதும் பயன்படுத்தப்பட்டது. ஆன்மிகக் கருத்துகளையும், பாவங்களையும் கலைப்பொருள்கள் நன்கு விளக்குகின்றன. எனவே, இந்தியர் கலையை உணர்ந்து பாராட்டுவதற்கு, இந் நாட்டுச் சமயக் கருத்துகளையும், வரலாற்றையும் நன்கு கற்றுணர்வது மிக அவசியமாகும். முந்திய சகாத்தங்களிலுள்ள கலைப்படைப்புகளில் புலன்களுக்கு உணர்ச்சியூட்டும் உலகாயதமே மிக்க செல்வாக்குப் பெற்று விளங்கியிருக்கிறது. சமயக்கருத்துகளும், கலையார்வத்துடன் குழைந்து சுவையூட்டுகின்ற வகையில் அமைந்திருந்தன. நாளடைவில், கலைஞரின் கலையார்வம் குறைந்து வருவதும் தெளிவாகத் தெரியவரும். சமயவாதிகளின் கைகளில் சிக்குண்டு அவர்கள் எண்ணம் போலக் கலைப் பொருள்களை ஆக்கித்தருவதிலேயே பிற்காலக் கலைஞரின் கவனம் சென்றது எனலாம்.

## இடைக்காலச் சித்திரக் கலை

கைலாசநாதர் கோயில் கூரையிலும், அக்கோயிலைச் சுற்றியுள்ள குகைகளிலும் காணப்படும் சித்திரங்கள் அஜந்தா, பாக் (Bagh) ஆகிய இடங்களில் உள்ள சித்திரங்களைப் போலன்றிப் புது வகையாய்த் தென்படுகின்றன. புதுக்கோட்டை(சென்னை) சித்தன்ன வாசலிலுள்ள குகைக்கோயிலும், சில அற்புதச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவை பல்லவ அரசன் மகேந்திரவர்மன் காலத்தில் தீட்டப்பட்டவை என அறிகிறோம். தஞ்சைப் பெரிய கோயிலில் கி. பி. பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழ சித்திரங்கள் பல காணப்படுகின்றன. பிற்காலச் சித்திரங்கள், கிழக்கிந்தியாவிலும், குஜராத்திலும் கண்டெடுக்கப்பட்ட பனை ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டவை. ஆனால், அவை தரத்தில் மிகக்குறைந்தவையாய்க் காணப்படுகின்றன.

## முடிவு

ஆதி இந்தியரின் சீரிய கலைப்பண்பையும் உயர்ந்த கருத்துகளையும் நன்கு உணர்ந்துகொள்வதற்கு மேலே நாம் முயன்றது போன்று, இந்தியக் கலை வரலாற்றைத் தொடர்ச்சியாக ஆராய்தல் வேண்டும். மனித எண்ணங்களைப் பிழையின்றிச் சித்திரிப்பது, உண்மையான கலையெனக் கருதப்படும். தேசீயக் கலை, மக்களின் உள்ளத்தை மதிப்பிட உதவும் உயர்ந்த அளவுகோலாகும். உலக வரலாற்றில் நல்லிடம் பெற்றிருந்த நாட்டு மக்கள், மகோன்னதமான கலைப்படைப்புகளை விடுத்துச் சென்றுள்ளார்கள். அவர்தம் பண்பாட்டை அறிந்துகொள்வதற்குக் கலைப் பொருள்கள் நன்கு பயன்படுகின்றன. கலைப்படைப்புகளின் உயர்தரமும் தன்மையும் நாட்டுமக்களின் சீரிய ஒழுக்கமுறைகளுக்குச் சான்று பகர்வனவாய் விளங்குகின்றன. கலை அடிப்படையில் மதிப்பிடும்போது, முற்கால நாகரிகங்களில் இந்தியப் பண்பாட்டிற்கு மிக உயர்ந்ததோர் இடமுண்டு என்பது தெளிவு. இந்தியரின் கவுரவம், கலைப்பண்பு ஆகியவற்றோடு கலைத்திறனும் சலியா உழைப்பும், இக் கலைப்பொருள்கள் வாயிலாக வெளியிடப்படுகின்றன. முழு நோக்காக மதிப்பிடும்போது, இந்திய மன்னர்கள் வசமிருந்த ஆட்பலமும், எல்லையற்ற செல்வமும் தெளிவாக விளங்கும்; அவற்றுடன், அவ்வப்போது எழுந்த சமயக் கோட்பாடுகளில் மன்னனும் மக்களும் கொண்டிருந்த எல்லையற்ற ஆர்வமும் நன்கு விளங்கும். புற அழகிலும் உலகியல் வாழ்விலும் நேரத்தை வீணாக்காமல், ஆன்மிகச் சிந்தனையிலும் ஒழுக்க முறைகளிலும் இந்தியர் அதிகக் கவனம் செலுத்தி வந்த

னர் என்பதும் நன்கு விளங்கும். போகமும் மோகமும் நிறைந்த உலகியல் வாழ்வில் உழலும் போதும், சாந்தி நிறைந்த மோட்ச சாம்ராச்சியத்தின் நினைவு, இந்தியர் மனத்தை விட்டு என்றுமே நீங்கியதில்லை. ஆன்மிகச் சிந்தனையிலும், புத்த சமயத்தின் தூய கோட்பாடுகளிலிருந்து தாந்திரிகரின் உலகாயதக் கொள்கை வரையிலுமுள்ள பல்வேறு கருத்துகளும் நிலைகளும் கலைமூலம் விளக்கம் பெற்றிருக்கின்றன. இந்தியக் கலையைப்பற்றிய விரிவான ஆராய்ச்சி இச் சிறு நூலின் நோக்கத்திற்கப்பாற்பட்டது. என்றாலும், பண்டைய இந்தியரின் சீரிய வாழ்க்கையை அவை உணர்த்தும் வகையையும், கலைப் பொக்கிஷங்கள் தரும் விளக்கங்களையும், இந்திய வரலாற்றைக் கற்க முற்படும் மாணவர்கள் மனத்திலிறுத்திக்கொள்ள வேண்டுவது இன்றியமையாததெனக் கூறலாம்.

# பகுதி–I வமிசாவளி அட்டவணை

மௌரியர்

- சந்திரகுப்த பிரியதரிசனன்
  - பிந்துசார அமித்திர காதன்
    - சுஷீமா (சுமனு)
      - நிக்ரோதன்
    - அசோகவர்த்தன பிரியதரிசனர்
      - மகேந்திரன்
      - சங்கமித்திரன்
      - சாருமதி
      - (தர்ம விவர்த்தன) (சூயசசு)
        - பந்து பாலிதன் (தசரதன் ?)
        - சம்பிரதி
          சாலிசூகன்
          தேவதர்மன் (-வர்மன்)
          சதம்தனுசு
          பிருகத்ரதன்
        - விகதசோகன்
          - வீரசேனன் (காந்தாரம்)
            சுபகசேனன்
      - குணாளன்
      - ஜலௌகன் (காஷ்மீர்)
      - திவாரன்
    - விகதசோகன் (? திச்சன்)

## முற்காலக் குப்தர்கள்

- குப்தன்
  - கடோத்கஜன்
    - முதலாம் சந்திரகுப்தன் = குமாரதேவி (லிச்சாவி)
      - சமுத்திரகுப்தன் (பராக்கிரமாங்கன் ; ஸ்ரீ விக்கிரமன் ?)
        - இரண்டாம் சந்திரகுப்தன் (விக்கிரமாதித்தன்) (தேவகுப்தன்)
          - கோவிந்தகுப்தன் (திர்குத்)
          - குமாரகுப்தன் — 1 (மகேந்திராதித்தியன்)
            - ஸ்கந்தகுப்தன் (விக்கிரமாதித்தியன்)
            - புருகுப்தன் (ஸ்ரீ விக்கிரமன்)
              - நரசிம்மகுப்தன் (பாலாதித்தியன்)
                - இரண்டாம் குமாரகுப்தன் (கிரமாதித்தியன்)
                  - விஷ்ணு குப்தன்
              - புதகுப்தன்
            - கடோத்கஜகுப்தன் (?) (டுமெய்ன்)
          - பிரபாவதி (வாகாடகரின் அரசி)

## புஷ்ய பூதி வமிசம்

நரவர்த்தனன் (தானேசுவரம்)

|

முதலாம் ராஜ்யவர்த்தனன்

|

ஆதித்திய வர்த்தனன்

|

பிரபாகர வர்த்தனன்

|

- இரண்டாம் ராஜ்யவர்த்தனன்
- ஹர்ஷவர்த்தனன் (சிலாதித்தியன்) தானேசுவரமும் கன்னோசியும்
  - |
  - பெண்வாரிசு = இரண்டாம் துருவசேனன் (துருவபட்ட பாலாதித்தியன்) (வல்லபி)
  - |
  - நான்காம் தரசேனன் (வல்லபி)
- ராஜ்யஸ்ரீ (மௌகாரிகளின் அரசி)

## பிரதிஹாரப் பேரரசர்கள்

### பெயரில்லா முன்னேன்

(இரகு குலத்தைச் சார்ந்த இலக்குமணனின் வழித்தோன்றல் எனக் கருதப்படுவோன்)

முதலாம் நாகபட்டன் — பெயர் அறியக்கூடவில்லை

காகுத்தன் — தேவராஜன் (தேவசத்தி)

வத்ஸராஜன்

இரண்டாம் நாகபட்டன் (மரு, கன்னேசி முதலியன)

இராமபத்திரன் (இராமதேவன்)

முதலாம் போஜன் (மிஹிரன்), (கன்னேசி) பிரபாசன், ஆதி-வராகன்

யுவராஜ நாகபட்டன் — முதலாம் மகேந்திரபாலன் (மகேந்திரயுத நிர்ப்பயராஜ, பாகன்)

முதலாம் மகிபாலன் (க்ஷிதிபாலன்?) — இரண்டாம் விஞயகபாலன் போஜன் (ஹர்ஷன்)

தேவபாலன் (?) — விஜயபாலன் (?) — இரண்டாம் மகேந்திர பாலன்

இரண்டாம் மகிபாலன் (?) — இராச்சிய பாலன் (?) (கன்னேசியும், பாரியும்)

திரிலோசனபாலன் (?) (பரி)

யசபாலன் (?)

## வங்காளப் பாலரும் காஹதவாலரும்

- தயித விஷ்ணு
  - ஸ்ரீ வப்யதன்
    - முதலாம் கோபாலன்
      - தர்மபாலன்
        - திரிபுவனபாலன்
        - தேபாலன்
          - இராஜ்யபாலன்
      - வாக்பாலன்
        - ஜயபாலன்
          - முதலாம் விக்கிரக பாலன் (சூரபாலன்-I)
            - நாராயண பாலன்
              - இராஜ்ய பாலன்
                - இரண்டாம் கோபாலன்
                  - இரண்டாம் விக்கிரகபாலன்


யசோவிக்ரஹன் (காஹதவாலன்)
மகிசந்திரன்
சந்திரதேவன் (கன்னேசியும், காசியும்)
மதனபாலன்
கோவிந்த சந்திரன் = குமாரதேவி
விஜயசந்திரன்
ஜயசந்திரன்
ஹரிச்சந்திரன் ?
சம்யுக்தா = மூன்றும் பிருதிவிராஜன்
மகனன்
பெண் = விக்கிரகபாலன் III = யௌவனஸ்ரீ
தேவரக்ஷிதா (தெ. பீஹார்) = சங்கரதேவி
முதலாம் மகிபாலன்
நயபாலன்
இலக்ஷ்மி-கர்ணன் (சேதி)
மகிபாலன் II
சூரபாலன் II
இராமபாலன்
இராஜ்யபாலன்
விட்டபாலன்
குமாரபாலன்
மதனபாலன்
கோபாலன் III

## வங்காளத்துச் சேனர்

வீரசேனன் (முன்னோன்)

|

சாமந்த சேனன் (ராதா அல்லது மேற்கு (வங்காளம்)

|

ஹேமந்த சேனன்

|

விஜய சேனன் (வங்காளம்)

|

பல்லால சேனன்

|

இலட்சுமணசேனன்

விசுவருப சேனன்

|

? இளவல்கள், சூரிய சேனனும் புருஷோத்தம சேனனும்

கேசவ சேனன்

(இலக்மான்ய பிசார் ராய் இலக்மன் தபகத்-இ-அக்பாரி ?)

## முற்காலச் சாளுக்கியர்

ஜயசிம்மன்-1

இரணராகவன்

1. புலகேசி- கி.பி. 543-44

2. கீர்த்தி வர்மன்-1 கி.பி. 566-c 597

3. மங்களேசன் c. கி.பி. 597-608

4. புலகேசி-II கி.பி. 609-642

குப்ஜ விஷ்ணு வர்த்தனன் 'விஷம-சித்தி' வெங்கி, பிஸ்தபுரக் கீழைச்சாளுக்கிய குலத்தைத் தோற்றுவித்தவன்

ஜயசிம்மன் 'தராஸ்ரயன்'

நாகவர்த்தனன் (நாசிக்குக் கிளை)

சந்திராதித்தியன்

ஆதித்தியவர்மன்

5. விக்கிரமாதித்தியன்-I 'இரணரசிகன்' கி.பி. 655-680

ஜயசிம்மன் ('இலாட' குலம்)

6. வினயாதித்தியன் கி.பி. 680-696

7. விஜயாதித்தியன் கி.பி. 696-733

8. விக்கிரமாதித்தியன்–II கி.பி. 733-746

9. கீர்த்தி வர்மன்–II (கி.பி. 746–757),

பீமன்-I

## கீழைச் சாளுக்கிய வம்சம்

1. குப்ஜ விஷ்ணுவர்த்தனன்-I
ஆதிசாளுக்கியன் இரண்டாம் புலகேசியின் சகோதரன்

2 ஜயசிம்மன்-I

3. இந்திர-பட்டாரகன்
4. விஷ்ணு வர்த்தனன்-II
5. மங்கி-யுவராஜன்

6. ஜெயசிம்மன்-II

8. விஷ்ணுவர்த்தனன்-III
9. விஜயாதித்தியன்-I
10. விஷ்ணு வர்த்தன்-IV

7. கோக்கிள்ளி

11. விஜயாதித்தியன்-II, நரேந்திர-மிருகராஜன்
12. கலி-விஷ்ணு வர்த்தனன்-V

நிருப-ருத்திரன்

13. குணக-விஜயாதித்தியன்-III

விக்கிரமாதித்தியன்-I
(யுவ-ராஜன்)
14. சாளுக்கிய பீமன்-I
(துரோஹார்ஜுனன்)
முடிசூட்டு விழா, கி.பி. 892

யுத்தமல்லன்-I
18. தாரபன், தாடபன், அல்லது
தாலன்-I
21. யுத்தமல்லன்-II

15. விஜயாதித்தியன்-IV

19. விக்கிரமாதித்தியன்-II

16. அம்மன்-I விஷ்ணுவர்த்-
தனன்-VI 'இராஜமகேந்திரன்'

22. சாளுக்கிய
பீமன்-III

23. பாதபன்

தாலன்-II
'விஷ்ணுவர்த்தனன்'

17. பேடா
விஜயாதித்தியன்-V

20. பீமன்-II

24. தானூர்ணவன்

23. அம்மன்-II
விஜயாதித்தியன்-VI
'இராஜமகேந்திரன்'
கி. பி. 945—970

25. சத்தி வர்மன்

26. விமலாதித்தியன்
(முதலாம் இராஜராஜ சோழன் மகள்
குந்தவையை மணந்தவன்)
கி. பி. 1011-1022

27. இராஜராஜ நரேந்திரன்-I
(முதலாம் இராஜேந்திர சோழன் மகள் அம்மங்கா
தேவியை மணந்தவன்) 1022-1063
28. இராஜேந்திரன்-III

விஜயாதித்தியன்-VII
வேங்கி நாட்டு வைசிராய்

(கீழைச் சாளுக்கியச் சோழப் பேரரசுகளை இணைத்து முதலாம் குலோத்துங்க சோழன் என்னும் பெயரோடு ஆண்டுவந்தான். 1070-1122. இரண்டாம் இராஜேந்திரதேவ சோழன் மகள் மதுராந்தகியை மணந்தான்.)

## இராஷ்டிரகூட வம்சம்

தந்தி வர்மன்-II
|
இந்திரன்-I
|
கோவிந்தன்-I
|
கர்ககன் அல்லது கக்கன்-I

- இந்திரன்-II (சாளுக்கிய இளவரசியை மணந்தான்.)
  - தந்தி துர்க்கன் (தந்தி வர்மன்-II) 'வைரமேகன்' ('கட்காவலோகன்' கி. பி. 754
- கிருஷ்ணன்-I 'அகாலவர்ஷன்' 'சுபதுங்கன்' கி. பி. 768—772 (எல்லோராவிலுள்ள கைலாசக் குகைக்கோயிலை எழுப்பியவன்.)
  - கோவிந்தன்-II
  - துருவன்
    - கம்பன் 'ஸ்தம்பன்', இரணவலோகன்
    - கோவிந்தன்-III 793-814
      - நிருபதுங்கன் அமோகவர்ஷன்-I அல்லது 'சர்வன்' 814-877
    - இந்திரன் ('இலாட' குலம்)
- நன்னன் சங்கரகணன் 793

- கிருஷ்ணன்-II 876-913 (காலசூரி அல்லது சேதி மன்னன் மகள் கொக்கல்லாவை மணந்தாள்.)
  - (ஜகத்துங்கன், காலசூரி இளவரசி இலட்சுமியை மணந்தான்.)
    - இந்திரன்-III. 915-927 விஜாம்பா என்னும் காலசூரி இளவரசியை மணந்தான்.
      - அமோகவர்ஷன்-II. (ஓராண்டு ஆட்சிக்குப் பின் சகோதரனால் நீக்கப்பட்டான்)
      - கோவிந்தன்-IV சாகசாங்கன் 918 - 934
    - வட்டிகன் அல்லது அமோகவர்ஷன்-III C. 934-939 குந்தவையை மணந்தான்.
      - பெண் : ரேவகை மேலைக்கங்க மன்னன் இரண்டாம் புதுகனை மணந்தாள்.
      - கிருஷ்ணன்-III 939-968
        - ஒரே மகன்
          - இந்திரன்-IV (982-ல் மரணமடைந்தான்)
      - கொட்டிகன் 963-972
      - நிருபமன்
        - கக்கலன் அல்லது கர்க்கன்-II அல்லது அமோகவர்ஷன்-IV 972-973
- பெண் : சங்கா (பல்லவ மன்னன் மூன்றும் நந்திவர்மனை மணந்தாள்.)

## கல்யாண நாட்டுச் சாளுக்கிய வம்சம்

விஜயாதித்தியன் (696-733)
|
பீமன்-I
|
கீர்த்தி வர்மன்-III
|
தைலப்பா அல்லது தைலன்-I
|
விக்கிரமாதித்தன்-III
|
பீமன்-II
|
அய்யனன்-I
|
விக்கிரமாதித்தியன்-IV
சேதி மன்னன் இலக்ஷ்மணனின் மகள் பொந்தா தேவியை மணந்தான்.
|
1. தைலப்பன் அல்லது தைலன்-II 'ஆகவமல்லன்'
இராஷ்டிரகூட மன்னன் மகள் ஜாகவ்வியை மணந்தான். கி. பி. 973-997

2. சத்தியாசிரயன், இரிவபேதங்கன் கி.பி. 997-1008
தசவர்மன் அல்லது யசோவர்மன்

3. விக்கிரமாதித்தியன்-V கி.பி. 1008-1014
4. அய்யனன்-II 1014-1015
5. ஜயசிம்மன்-II 'ஜகதேக மல்லன்' கி.பி. 1015-1042

6. சோமேசுவரன்-I
'ஆகவமல்லன்'
கி.பி. 1042-1068

பெண் : ஹன்மா அல்லது
ஆவல்லா தேவி-சேனு
தேசத்து யாதவத் தலைவன்
மூன்றும் பில்லமனை மணந்தாள்.

7. சோமேசுவரன்-II
'புவனைக மல்லன்'
1068-1076

8. விக்கிரமாதித்தியன்-V
'திரிபுவன மல்லன்'
1076-1127

ஜயசிம்மன்

விஷ்ணுவர்த்தன்
விஜயாதித்தியன்

ஜயகர்ணன்
'திரைலோக்கிய மல்லன்'

9. சோமேசுவரன்-III
'பூலோக மல்லன்'
1127-1138

பெண்: மைலால தேவி
கோவாக்கடம்பருள் இரண்டாம்
ஜயகேசியை மணந்தாள்

10. பெர்மன், ஜகதேகமல்லன்-II
1138. 1151

11. தைலப்பன்-III
நுர்மதிதைலன், 'திரைலோக்கிய மல்லன்'
1151-1156-1163-இல் மரணமடைந்தான்.

12. சோமேசுவரன்-IV
'திரிபுவன மல்லன்'
1184-1208

## பல்லவ மன்னர்

சிம்ம வர்மன் — IV

விஷ்ணு கோபன் — III

சிம்ம வர்மன் — V

சிம்ம விஷ்ணு | பீம வர்மன்

மகேந்திரவர்மன் — I | புத்த வர்மன்

நரசிம்மவர்மன் — I | ஆதித்தியவர்மன்

C. 642-668 | கோவிந்தவர்மன்

மகேந்திரவர்மன் — II | ஹிரண்யவர்மன்

பரமேசுவரவர்மன் — I C. 674 | நந்திவர்மன் — II

எட்டாம் நூற்றுண்டில் 65 ஆண்டு ஆட்சி புரிந்திருக்க வேண்டும்.

நரசிம்மவர்மன் — II | தந்திவர்மன்

பரமேசுவரவர்மன் — II | மகேந்திரவர்மன் — III

இராட்டிரகூடன் மூன்றுங்கோவிந்தனுல் முறியடிக்கப்பட்டான் (793-814)

நந்திவர்மன் — III (கம்பா ?)

இராஷ்டிரகூடன் அமோகவர்ஷன் — I மகள் சங்காவை மணந்தான்

நிருபதுங்கன்

அபராஜிதன்

கி. பி 9-ஆம் நூற்றுண்டின் இறுதியில் சோழமன்னன் முதலாம் ஆதித்தியனுல் முறியடிக்கப்பட்டான்.

## சோழ மன்னர்

விஜயபாலன்
தஞ்சையைக் கைப்பற்றினான்
C. 846—871

↓

ஆதித்தியன்-I
871—907

↓

பராந்தகன்-I
கி.பி. 907—53

↓ (மக்கள்)

- இராஜாதித்தியன்-I
  947-949
- கண்டராதித்தியன்
  949-957
  - மதுராந்தக உத்தமன்
    969-985
- அரிஞ்சயன்
  956-957
  - பராந்தகன்-II
    சுந்தர சோழன்
    955-973
    - ஆதித்தியன்-II
      அல்லது
      'கரிகாலன்-II
      956-969
    - இராஜராஜன்-I
      'மும்முடிச் சோழன்'
      'நுர்மதிச் சோழன்'
      'அருண்மொழித்தேவன்'
      985-1016

இராஜேந்திரன்-1
'பண்டித சோழன்'
'முடிகொண்ட சோழன்'
கங்கைகொண்ட சோழன்
நிகரிலி சோழன், 1012-1044

மகள் குந்தவை
கீழைச் சாளுக்கியன் விமலா
தித்தியனை மணந்தாள்

மகள் அம்மங்காதேவி
கீழைச்சாளுக்கியன்
முதலாம் இராஜராஜனை
மணந்தாள்.

இராஜாதிராஜன்-I
'ஜயம் கொண்ட சோழன்'
யுவராஜன், 1018-1044
மன்னன், 1044-1054

இராஜேந்திரதேவன்-II
1052-1064

வீரராஜேந்திரன்
1063-1069

இராஜமகேந்திரன்
1060-1063

மகள் மதுராந்தகி
கீழைச் சாளுக்கியன்-II
இராஜேந்திரனை
'குலோத்துங்கன்-I' மணந்தாள்.

இராஜேந்திரன்-III
குலோத்துங்க சோழன்-I
1070-1122

அதி இராஜேந்திரன்
1067-1070

மகள்-கல்யாண
நாட்டு ஆறும் விக்கிர
மாதித்தியனை மணந்தாள்.

இராஜராஜன் வேங்கி நாட்டு வைசிராய் | மும்முடிச் சோழன் வேங்கிநாட்டு வைசிராய் | வீரசோழன் வேங்கி நாட்டு வைசிராய் | விக்கிரமசோழன் 1118-1135

குலோத்துங்க சோழன்-II
1133—1150

இராஜராஜன்—II (1146—1173)

ஒன்றுவிட்ட சோதரர்
இராஜாதி ராஜன்—II
1163—1179

வழித்தோன்றல்கள் :

குலோத்துங்கன்—III
1178—1218

இராஜராஜன்—III
1216—1246

இராஜேந்திரன்—IV
1246—1279

# முற்பகுதியின் நூலடைவு


## அதிகாரம்—1

Ancient Geography of India : Cunningham (கன்னிங்காம்)
Bhuankosa section of the Puranas (புராணத் தொகுதிகளில் புவனகோசப் பகுதி)
Cambridge History of India : Vol. I
Census of India, 1231 : Vol. I. (1931 ஆம் ஆண்டு இந்திய மக்கள் கணக்கெடுப்பு. புள்ளி விவரம்)
Fundamental Unity of India : R. K. Mookerji (ஆர். கே. மூக்கர்ஜி)
History of Greece : George Grote (ஜார்ஜ் குரோட்டு)
Imperial Gazetteer of India: the Indian Empire, Vol. I. XXVI (இந்திய அரசின் வெளியீடு)
Studies in Indian Antiquities Raichaudhuri (ராய் சௌதுரி)

## அதிகாரம் 2

Imperial Gazetteer of India, the Indian Empire, Vol. I-II. (இந்திய அரசின் வெளியீடு)
Indus Civilisation : Ernest Macay (எர்னெஸ்ட் மாக்கே)
Indus Valley Civilisation : S. R. Kohli (எஸ். ஆர். கோலி)
Mohenjo-Daro and the Indus Civilisation : Sir John Marshall. (சர்.ஜான் மார்ஷல்)
Oxford History of India : V. Smith (V. ஸ்மித்து)
Pragaitihasika Mohenjo-Daro (in Bengali) Calcutta University : K. Goswami (கே. கோஸ்சுவாமி)
Prehistoric India : Stuart Piggot (ஸ்டுவர்ட்டு பிக்காட்)
Script of Harappa and Mohenjo-Daro : C. R. Hunter (ஜி. ஆர். ஹண்டர்)

## அதிகாரம் 3

Ancient India : R. C. Majumdar (ஆர். ஸி. மஜூம்தார்)
Buried Empires : Patrick Carleton (பாட்ரிக் கார்லிடன்)

Cambridge Ancient-History, Vol. I. Chapters II and IV
Cambridge History of India, Vol. I. Chapters III and IV
Hindu Public Life, Vol. I Ghosal (கோசால்)
History of Ancient Sanskrit Literature : Max Muller (மாக்ஸ் முல்லர்)
History of Indian Literature, Vol.II. Winternitz (விண்டர் நிட்ஸ்)
Imperial Gazetteer of India, the Indian Empire. Vol. II (இந்திய அரசின் வெளியீடு)
Life in Ancient India : P. T. Srinivasa Iyengar (பி. டி. சீனிவாச ஐயங்கார்)
Original Sanskrit Texts : Muir (மியூர்)
Orion : B. G. Tilak (பி. ஜி. திலக்கு)
Religion and Philosophy of Veda : Keith (கெய்த்)
Rig-Veda : Kaegi (கேய்கி)
Rig-Veda Samhitha-Translated by R. C. Dutt (மொழி பெயர்த்தவர் ஆர். சி. தத்)
Rig-Veda Samhitha-Translated by Wilson (மொழி பெயர்த்தவர் வில்சன்)
Sanskrit Literature : Macdonell (மாக்டொனல்)
Vedapravesika : U. C. Vatavyala (யூ. சி. வடவியாலா)
Vedic Age (History and Culture of the Indian People, Vol. I edited by R. C. Majumdar and A. D. Pusalker (இந்திய மக்களது கலாசார, சரித்திர வரலாறு. தொகுதி-I பதிப்பித்தவர்கள் : ஆர். சி. மஜும்தார், ஆ. டி. புசால்கர்)
Vedic Index : Macdonell and Keith (மாக்டொனல், கெய்த்)

## அதிகாரம் 4

Aitareya Aranyaka : Keith (கெய்த்)
Aitareya Brahmana
Ancient Indian Numismatics : S. K. Chakravarthy (எஸ். கே. சக்கரவர்த்தி)
Atharva Veda Samhita
Atharva Veda (Translation) : Bloomfield (மொழி பெயர்ப்பு புளும் பீல்ட்)
Brihadaranyaka Upanishad
Cambridge History of India, Vol. I. Chapter V.
Chhandogya Upanishad
Commemoration Volume : Bhandarkar (பண்டார்கார்)
Early History of the Vaishnava Sect : Raychaudhuri (ராய் சௌதுரி)

History of Indian Literature : Weber (வீபர்)
Hymns of Indian Literature, Vol. I, Winternitz (வின்டர் நிட்ஸ்)
Hymns of the Atharvaveda—Translated : Griffith (மொழி பெயர்ப்பு : கிரிப்பித்து)
Jaiminiya Brahmana
Jaiminiya Upanishad Brahmana
Katha Upanishad
Kena Upanishad
Life in Ancient India : P. T. Srinivasa Iyengar (பி. டி. சீனிவாச ஐயங்கார்)
Mundaka : Mandukya Upanishad
Panchavimsa Brahmana
Prasna Upanishad
Religion and Philosophy of the Veda : Keith (கெய்த்)
Sama Veda Samhita
Sankayana Aranyaka
Sanskrit Literature : Macdonell (மாக்டொனல்)
Satapatha Brahmana
Saunaka's Brihad Devata
Svetasvatara Upanishad
Taittiriya Aranyaka
Texts of the White Yajurveda—Translated : Griffith (கிரிப்பித்து)
Translation of the Samhita of the Sama Veda : Stevenson (ஸ்டீவன்சன்)
Vedic Index : Macdonell and Keith (மாக்டொனல், கெய்த்)
Vedic Mythology, Macdonell (மாக்டொனல்)
Yajurvèda Samhita
Yaska's Nirukta

## அதிகாரம் 5

Ancient Persian Lexicon and the Texts of the Achamenidan Inscription : Tolman (டால்மன்)
Bhavisyanukirtan Section of the Puranas
Buddhist India : Rhys Davids (ரிஸ் டேவிட்ஸ்)
Cambridge History of India : Vol. I. Chapters VI, VII, XIII, XIV, XV, XVI
Dialogues of the Buddha : Rhys Davids (ரிஸ் டேவிட்ஸ்)
Dynasties of the Kali Age : Pargiter (பார்கைட்டர்)
Early History of India : V. Smith (வி. ஸ்மித்து)
History of Greece : George Grote (ஜார்ஜ் குரோட்டு)

tory of Greece : J. R. Bury (ஜே. பி. பியூரி)
History of Herodotus : Translated by George Rawlinson (ஜார்ஜ் ராவின்ஸன் மொழி பெயர்த்தது)
Illustrated London News, February 22, 1936, p. 328
Invasion of India by Alexander the Great : M'Crindle (மெக்கிரிண்டில்)
Jaina Sutras : Jacobi (யாக்கபி)
Jataka : Fausboll (பவுஸ்போல்)
Mahavamsa : Geiger (கெய்ஜர்)
Nirayavaliya Sutta : Warren (வாரன்)
Old Persian Inscriptions of the Achaemenian Emperors: Sukumar Sena (சுகுமார் சென்)
Parisishtaparvan : Hemachandra (ஹேமசந்திரர்)
Political History of Ancient India : Raychaudhuri (ராய் சௌதுரி)
Uvasaga Dasao : Hoyernle (ஹோயர்நல்)
Vinaya Texts : Rhys Davids and Oldenberg (ரிஸ் டேவிட்ஸ், ஓல்டன் பெர்கு)

## அதிகாரம் 6

Agrarian System of Ancient India : Ghosal (கோசல்)
Ancient India as described in classical Literature—M'Crindle (மெக்கிரிண்டில்)
Ashtadhyayi Sutrapatha : Panini (பாணினி)
Asvalayana Grihya Sutra
Bodhayana Dharmasutra
Buddha : Oldenberg (ஓல்டன் பெர்கு)
Buddhist India : Rhys Davids (ரிஸ் டேவிட்ஸ்)
Buddhist Suttas
Buddhistic Studies : B. C. Law (பி. ஸி. லா)
Cambridge History of India : Vol. I. Chapters VI, VII, VIII, IX, X, XI, XV.I
Corporate Life in Ancient India : R. C. Majumdar (ஆர். சி. மஜூம்தார்)
Dialogues of the Buddha
Early History of the Vaishnava Sect : Raychoudhuri (ராய் சௌதுரி)
Epic Mythology : Hopkins (ஹாப்கின்ஸ்)
Gautama Dharmasastra
Gobhila Grihya Sutra

Great Epic of India : Hopkins (ஹாப்கின்ஸ்)
Heart of Jainism : Sinclair Stevenson (சின்கிளேர் ஸ்டீவன்சன்)
Hindu Law and Custom : Jolly (ஜாலி)
Hindu Polity : Jayaswal (ஜயஸ்வால்)
Hinduism and Buddhism, 3 Vols : Sir Charles, Eliot (சர் சார்லஸ் எலியட்டு)
History of Indian Literature : Winternitz (விண்டர்நிட்ஸ்)
History of Pali Literature : B. C. Law (பி. சி. லா.)
Indian Antiquities : Barnet (பார்னெட்டு)
Indo-Aryan Races : Chanda (சண்டா)
Jaina Sutras : (ஜைன சூத்திரம்)
Jatakas : (ஜாதகக் கதைகள்)
Life of Buddha : E. J. Thomas (இ. ஜே. தாமஸ்)
Local Government in Ancient India : R. K. Mookerji (ஆர். கே. மூக்கர்ஜி)
Mahabharata
Mahabhashya : Patanjali (பதஞ்சலி)
Manual of Indian Buddhism : Kern (கெர்ன்)
Oxford History of India : V. Smith (வி. ஸ்மித்து)
Political History of Ancient India : Raychoudhury (ராய் சௌதுரி)
Ramayana : இராமாயணம்
Social Organisation in North-East India : Fick (பிக்)
Social and Military Position of the Ruling Caste in Ancient India : Hopkins (ஹாப்கின்ஸ்)
Studies in Indian Antiquities : Raychaudhuri (ராய் சௌதுரி)
Theism in Medieval India : Carpenter (கார்பெண்டர்)
Vaishnavism, Saivism and Minor Religious Systems : Sir R. G. Bhandarkar (ஸர். ஆர். ஜி. பண்டார்கர்)
Vasish : the Dharmasutra
Vinaya Texts

## அதிகாரம் 7

The Age of Imperial Unity : Edited by R. C. Majumdar (ஆர். சி. மஜூம்தார்)
Age of the Nandas and Mauryas : Edited by K. A. N. Sastri (ஸ்ரீ கா. அ. நீலகண்ட சாஸ்திரி பதிப்பு)
Ancient India as described by Megasthenes and Arrian M'Crindle (மெக்கிரிண்டில்)
Asoka : R. K. Mookerji (ஆர். கே. மூக்கர்ஜி)

Asoka : V. Smith (வி. ஸ்மித்து)
Asoka Edicts in New Light : B. M. Barua (பி. எம். பருவா)
Asoka Inscriptions : B. M. Barua (பி. எம். பருவா)
Asokavadana (அசோகாவதானம்)
Bhavishyanukirtan section of the Puranas
Buddhist India : Rhys Davids (ரீஸ் டேவிட்ஸ்)
Cambridge History of India Vol. I, Chapters XVIII, XX
Carmichael Lectures, 1923 (கார்மைக்கேல் பிரசங்கங்கள்)
Chandragupta Maurya and His Times R. K. Mookerji (ஆர். கே. முக்கர்ஜி)
A Comprehensive History of India, Vol. II : Edited by K. A. N. Sastri (கே. எ. என். சாஸ்திரி பதிப்பு)
Early History of India : V. Smith (வி. ஸ்மித்து)
Epitome of the Historiae Philip-Picae of Pompeius Trogus : Justin (ஜஸ்டின்)
Inscriptions of Asoka : Hultzch (ஹல்ட்ச்)
Mahavamsa (மஹாவம்சம்)
Mudra Rakshasa : Visakhadatta (முத்ரா ராக்ஷசம், விசாக தத்தர்)
Parisishtaparvan : Hemachandra (ஹேமசந்திரர்)
Political History of Ancient India : Raychaudhuri (ராய் சௌதுரி)
Rajatarangini (ராஜதரங்கிணி)

## அதிகாரம் 8

Ancient History of the Deccan : Jouveau Dubreuil (ஜோவோ துப்ரெய்ல்)
Beginnings of South Indian History : S. Krishnaswami Iyengar. (S. கிருஷ்ணசுவாமி ஐயங்கார்)
Cambridge History of India, Vol. I, Chapters XVII, XXI, XXII, XXIII, XXIV.
Catalogue of Indian Coins (Ancient India) : Allan (ஆலன்)
Catalogue of Indian Coins (Andhras, Western Kshatra pas, etc): Rapson (ராப்ஸன்)
Catalogue of the Coins in the Indian Museum : Smith (ஸ்மித்து)
Coins of the Greek and Scythic Kings of Bactria and India: Gardner (கார்ட்னர்)
Dynastics of Kali Age : Pargiter (பார்கைட்டர்)
Early History of the Deccan : Sir. R. G. Bhandarkar (ஸர். ஆர். ஜி. பண்டார்கர்)

Early History of India : V. Smith (வி. ஸ்மித்து)
Greeks in Bactria and India : Tarn (டார்ன்)
Guide to Sanchi : Marshall (மார்ஷல்)
Guide to Taxila : Marshall (மார்ஷல்)
Indo-Greek Coins : White head (வைட் ஹெட்)
The Indo-Greeks : A. K. Narain (ஏ. கே. நாரெயின்)
Karoshthi Inscriptions : Sten Konow (ஸ்டென் கோநௌ)
Notes on the Indo-Scythians : Sylvain Levi (சில்வெயின் லெவி)
Political History of Ancient India : Raychaudhuri (ராய் சௌதுரி)
Sakasthana : F. W. Thomas (எப். டபிள்யூ. தாமஸ்)
Scythian Period : Johanna Engelberta Van Lohuizen de Leeuw (ஜொகன்னு ஈஞ்சல் பர்த்தா வான் லோகுய்சன் டி லீ)
Tamils : Eighteen Hundred years Ago : V. Kanakasabhai Pillai (வி. கனகசபைப் பிள்ளை)
Udayagiri Khandagiri Cave Inscriptions : Barua (பருவா)

## அதிகாரம் 9

Ancient India (M'Crindle's Translation) Ptolemy (தாலமி)
Ancient India as described in Classical Literature : M'Crindle (மெக்ரிண்டில்)
Ancient India as described by Megasthenes and Arrian : M'Crindle (மெக்ரிண்டில்)
Arthasastra : Kautilya (கௌடில்யனின் அர்த்த சாத்திரம்)
Asoka (அசோகன்) : Smith (ஸ்மித்து)
Cambridge History of India, Vol. I
Catalogue of Indian Coins (Andhras, Western Kshatrapas, etc); Rapson (ராப்ஸன்)
Champa : R. C. Majumdar (ஆர். சி. மஜும்தார்)
Early History of Bengal — Monahan (மொனுஹன்)
Hindu Political Theories : Ghosal (கோசல்)
History of Dharmasastra : Kane (கானே)
History of Indian Literature : Winternitz (வின்டர்நிட்ஸ்)
History of Sanskrit Literature : Keith (கெய்த்)
India and Java : Bijanraj Chatterjee (பிஜன்ராஜ் சாட்டர்ஜி)
Indian Cultural Influence in Cambodia : Bijanraj Chatterjee
Indo Greek Coins : White head (வைட்ஹெட்)
Inscriptions of Asoka : Hultzsch (ஹுல்ட்சு)
Mahabhashya : Patanjali (பதஞ்சலி)
Manava Dharmasastra (மானவ தர்மசாத்திரம்)

Manual of Indian Buddhism : Kern (கெர்ன்)
Natural History : Plini (பிளினி)
Periplus of the Erythraean Sea
Political History of Ancient India : Raychaudhuri (ராய் செளதுரி)
Sanskrit Drama : Keith (கெய்த்)
Some New Numismatic Data in Pali Literature : C. D. Chatterjee (சி. டி. சாட்டர்ஜீ)
Suvarnadvipa : R. C. Majumdar (ஆர். சி. மஜூம்தார்)

## அதிகாரம் 10

Age of the Imperial Guptas : R. D. Banerji (R. D. பானர்ஜீ)
Ancient History of the Deccan : Jouveau-Dubriuil (ஜோவே துப்ரெய்ல்)
Arya Manjusri Mula Kalpa
Buddhist Records of the Western World : Beal (பியால்)
Catalogue of Indian Coins (Guptha Dynasties) : Allan (ஆலன்)
The Classical Age : Edited by R. C. Majumdar (R. C. மஜூம் தார் பதிப்பு)
The Decline of the Kingdom of Magadha : B. P. Sinha (சின்ஹா)
Dynasties of the Kali Age : Pargiter (பார்கைட்டர்)
Early History of India : Smith (ஸ்மித்து)
History of North-Eastern India : Basak (பசாக்)
Inscriptions of the Early Gupta kings : Fleet (பிளீட்டு)
On Yuan Chwang : Watters (வாட்டர்ஸ்)
Political History of Ancient India : Raychaudhuri (ராய் செளதுரி)
Travels of Fa-Hien
Vakataka Dynasty of Berar : Smith (ஸ்மித்து)
New History of the Indian people : Vol. VI. Edited by R. C. Majumdar and A. S. Altekar (பதிப்பாசிரியர்,: R C. மஜூம் தாரும், A. S. அல்டேகரும்)

## அதிகாரம் 11

Banglar Itihasa : R. D. Banerji R. D. (பானர்ஜீ)
Dynastic History of Northern India : H. C. Ray (ரே)
Early History of India : Smith. Gauda Lekha Mala : A. K. Maitreoa (மைத்திரேயர்)

Gauda Rajamala : R. P. Chanda (சந்தா)
Gurjara-Prathiharas : R. C. Majumdar (மஜூம்தார்)
Harsha Charita : Bana (பாணரின் ஹர்ஷ சரிதம்)
Harsha : R. K. Mookerji (மூக்கர்ஜி)
History of India as told by her own Historians : Vol. I : Elliot (எலியட்டு)
History of Kanauj : R. S. Tripathi (திரிபதி)
Inscriptions of the Early Gupta Kings : Fleet (பிளீட்)
On Yuan Chwang : Watters (வாட்டர்ஸ்)
Political History of Ancient India : Raychaudhuri (ராய் சௌதுரி)
Rajatarangini : (ராஜதரங்கிணி)

## அதிகாரம் : 12

Dynasties of the Kanarese Districts : Fleet (பிளீட்டு)
Early History of the Deccan : Sir. R. G. Bhandarkar (ஸர். ஆர். ஜி. பண்டார்கர்)
Foreign Notices of South India : Nilakanta Sastri (நீலகண்ட சாஸ்திரி)
Historical Inscriptions of South India : Sewell and Aiyangar (சியூவெல்லும், ஐயங்காரும்)
A History of South India : K. A. N. Sastri (சாஸ்திரி)
Mysore and Coorg from the Inscriptions : Rice (ரைஸ்)
Pallavas : Dubreuil (துப்ரெயில்)
Rashtrakutas and their Times : Altekar (அல்டேகர்)
Studies in Pallava History : Heras (ஹீராஸ்)
Successors of the Satavahanas : D. C. Sircar (சர்க்கார்)

## அதிகாரம் 13-14

The Age of Imperial Kanauj : Edited by R. C. Majumdar (R. C. மஜூம்தார் பதிப்பு)
Ancient India : S. K. Aiyangar (S. K. ஐயங்கார்)
Arab Invasions of India : R. C. Majumdar (மஜூம்தார்)
Bombay Gazetteer, Vol. I (பம்பாய் மாகாண அரசின் வெளியீடு-1)
Caste in India : Senart (செனார்ட்டு)
Caste System of Northern India : Blunt (பிளண்ட்)
Census of India, 1931 (1931ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு)
Cholas :—The Nilakanta Sastri (நீலகண்ட சாஸ்திரி)

Dynastic History of Northern India : H. C. Ray (ரே)

Early History of Bengal : Girindramohan Sarkar (கிரீந்திர மோகன் சர்க்கார்)

Early History of Kamrup : R. L. Barua (பருவா)

Historical Inscriptions of Southern India : Sewell and Aiyangar (சியூவெல்லும், ஐயங்காரும்)

History of Assam, Gait

History of India as told by her own Historians, Vol. I, II : Elliot (எலியட்டு)

History of Kanauj : R. S. Tripathi (திரிபதி)

History of Orissa : R. D. Banerji (பானர்ஜி)

History of Paramaras : D. C. Ganguli (கங்குலி)

History of Sanskrit Literature : Keith (கெய்த்)

Hymns of the Alvars: Hooper (ஹூப்பர்)

Hymns of the Tamil Saivite Saints: Kingsbury and Phillips (கிங்ஸ்பரியும் பிலிப்ஸும்)

India (Sachau) : al-Beruni (ஆல்-பிரூனி)

Inscriptions of Bengal : R. G. Majumdar (மஜூம்தார்)

Kamarupasasanavali : Padmanath Bhattacharya (பத்மநாத் பட்டாச்சார்யா)

Lakshmana Sena Era: Raychaudhuri (ராய் சௌதுரி)

Life and Times of Sultan Mahmud of Ghaznai : Nazim (நசீம்)

List of Inscriptions of Northern India : Kielhorn (கீல்ஹார்ன்)

List of the Inscriptions of Southern India : Kielhorn,

Navasahasankacharita : Padma gupta (பத்மகுப்தன்)

Nepal: Percival Landon (பெர்சிவல் லாண்டன்)

Origin and Early History of Saivism in South India : C. V. Narayana Iyer (நாராயண ஐயர்)

Origin and Growth of Caste in India : Dutt (தத்)

Outline of the Religious Literature of India : Farquhar (பார்க்யூஹார்)

Palas of Bengal : R. D. Banerji (பானர்ஜி)

Pandyan Kingdom: Nilakanta Sastri (நீலகண்ட சாஸ்திரி)

Pavanadutam: Dhoyi (தோயி)

Rajatarangini: Kalhana (கல்ஹணர்)

Rajputana Gazetteer (ராஜபுதன அரசின் வெளியீடு)

Ramacharita: Sandhyakara Nandi (சந்தியாகர நந்தி)

Sri Sankarachary: C. N. Krishnaswami Iyer (சி. என். கிருஷ்ண சுவாமி ஐயர்)

The Struggle for Empire: Edited by R. C. Majumdar (மஜும்தார்)
Studies in Tamil Literature and History: Dikshitar (தீக்ஷிதர்)
Theism in Medieval India: Carpenter (கார்பெண்டர்)
Travels: Marco polo (மார்க்கோ போலோ)
Unavimas-Samhitha: Edited by Panchanan Tarkaratna: (பஞ்சானன் தர்க்கரத்னம் பதிப்பு)
Vaishnavism, Saivism, and Minor Religious Systems: Sir R. G. Bhandarkar (பண்டார்கார்)
Vaishnavite Reformers of India: T. Rajagopalachariar (டி. இராஜகோபாலாசாரியார்)
Vikramankadevacharita: Bilhana (பில்ஹணர்)
The Wonder that was India: A. L. Basham (பஷாம்)

## அதிகாரம் 15

Ancient Indian Colonies in the Far East: R. C. Majumdar (மஜும்தார்)
Vol. I: Champa (சம்பா)
Vol. II: Suvarnadvipa (சுவர்ணத்துவீபம்)
Ancient Indian Colonisation in South East-Asia: R. C. Majumdar (மஜும்தார்)
Hindu Colonies in the Far East: R. C. Majumdar (மஜும்தார்)
Hinduism and Buddhism, Vol. II: Eliot (எலியட்டு)
India and Central Asia: P. C. Bagchi (பாக்சி)
India and the Western World: H. G. Rawlinson (ராலின்சன்)
Indian Cultural Influence in Cambodia: B. R. Chatterji (சாட்டர்ஜி)
Indian Influences on the Literature of Java and Bali: H. Sarkars (சர்க்கார்)

## அதிகாரம் 16

Beginnings of Buddhist Art: A. Foucher (பௌச்சர்)
Cambridge History of India, Vol. I
History of Fine Art in India and Ceylon: V. A. Smith (ஸ்மித்து)
History of Indian and Indonesian Art: A. K. Coomaraswamy
History of Indian and Eastern Architecture (Edited by J. Burgess and R. P. Spiers): J. Fergusson (பெர்குசன்)
Indian Architecture: Percy Brown (பெர்சி பிரௌன்)
Indian Sculpture: Stella Kramrisch (ஸ்டெல்லா கிராம்ரிச்)
A Survey of Indian Sculpture: S. K. Saraswati (சரஸ்வதி)

# கலைச்சொற்கள்

## A

| | | |
|---|---|---|
| Age, Epic | — | வீரகாவிய காலம் |
| Age, Vedic | — | வேத காலம் |
| Age of Brahmanas | — | பிராமணங்கள் காலம் |
| Age, Copper | — | தாமிரக் காலம் |
| Age, Iron | — | இரும்புக் காலம் |
| Ancient Historical Monuments and records | — | பழைய வரலாற்றுச் சின்னங்களும பதிவுகளும் |
| Ancient grant | — | தொன்மைக் கொடை |
| Anthropology | — | மானிட இயல் நூல் |
| Anthropo Geography | — | நிலநூலும், மானிட இயலும் |
| Archives | — | ஆவணக்களரி, ஆயப்பதிவேடுகள் |
| Archaeologist | — | தொல்பொருட்கலைஞர் |
| Archaeology | — | தொல்பொருளாராய்ச்சி |

## B

| | | |
|---|---|---|
| Barter | — | பண்டமாற்று |
| Bay | — | விரிகுடா |
| Basti | — | சமணக்கோயில் |
| Bakthi cult | — | பத்தி இயக்கம், பத்தி வழிபாட்டு முறை |
| Bibilography | — | நூலடைவு |
| Bull-Cult | — | நந்தி வழிபாடு |
| Bhuddhas Eight fold path | — | புத்தரின் அட்டசீல நெறி |
| Buffer State | — | இடைநாடு |

## C

| | | |
|---|---|---|
| Capital punishment | — | தூக்குத்தண்டனை |
| Caste System | — | சாதி முறை |
| Calligraphy | — | கையெழுத்துக் கலை |

Census — குடிமதிப்பு, குடிக்கணக்கு
Chronology — கால வரன்முறை
Cess — மேல் வரி
Copper Age — செம்புக் காலம்
Coup d' etat — திடீர்ப் புரட்சி
Coup-de-grace — இறுதித் தாக்குதல்
Coup-de-main — திடீர்த் தாக்குதல்
Copper plate — செப்பேடு
Corps — படைப்பிரிவு
Coins-token — ஒப்பு நாணயங்கள்
Culture — பண்பாடு

## D

Data — விவரங்கள்
Durbar — கொலு, தர்பார்
Decipher — விளக்கு
Dyarchy — இரட்டையாட்சி
District — மாவட்டம்
Dynastic marriage — (அரசர்) குலத்திருமணம்
Dynasty — அரசமரபு, குலம், வமிசம்

## E

Earthernware — மட்பாண்டம்
Emigrants — பிற நாட்டில் குடியேறுவோர்
Emigration — வெளியேறுவோர்
Empire — பேரரசு
Epic — வீரகாதை, காவியம்
Epigraphy — கல்வெட்டுத்துறை
Episode — கிளைக்கதை
Epitaph — கல்லறைச்சொற்றொடர்
Era — அப்தம்
Etymology — சொல்லிலக்கணம்
Expansion — விரிவாக்கம்
Extortion — அச்சுறுத்திப் பறித்தல்
Extra-territorial — நாட்டு எல்லைக்கு அப்பாற்பட்ட

## F

Fable — நீதிக்கதை
Field-measurement — நில அளவை

Fiscal — வரியைப் பற்றிய
Flood-gates — வெள்ள மடை
Fratricide — உடன்பிறப்புக் கொலை
Fresco — சுவர்ச்சித்திரம், ஓவியம்
Frontispiece — முகப்புத்தாள்

## G

Gallery, Art — கலைக்கூடம்
Geneology — குடிவழி, குலமரபு
Ghats — மலைத்தொடர்கள்
Grant-in-aid — உதவிக் கொடைகள்
Greater India — கடல் கடந்த இந்தியா

## H

Half-brother — ஒன்றுவிட்ட உடன்பிறப்பாளன்
Harem — உவளகம், அந்தப்புரம்
Heritage — மரபுரிமை, தாயம்
Historian — வரலாற்று ஆசிரியன்
Historical geography — வரலாற்று நிலவியல்
Historicity — வரலாற்று உண்மை
Historiography — வரலாறு எழுதும் கலை
Homage — வணக்கம்
Hymn — துதிப்பாடல், பாசுரம்

## I

Iconoclast — திருவுரு உடைப்பான்
Iconography — விக்கிரகக் கலை
Idol worship — உருவ வழிபாடு
Imperialism — பேரரசுக் கோட்பாடு
Inscription — வெட்டெழுத்து
Iron Age — இரும்புக்காலம்

## J

Jaghir — ஜாகீர்
Janizary — மெய்காப்பாளர்

## K

Khutba — இஸ்லாமியப் பொது வழிபாடு
Kingdom — அரசு

## L

Land revenue assignment — நிலவருவாய் உரிமைப்பாடு
Legenn (Coin) — நாணயச் சொற்றொடர்
Local institutions — தல தாபனங்கள்

## M

Maritime spirit — கடலோடும் ஊக்கம்
Material culture — உலகவழிப் பண்பாடு
Mausoleum — மசோலியம், மசூதி
Megalithic — பெரும்பாறைகளாலான
Monolithic — ஒரே கல்லாலான
Mouth of the river — முகத்துவாரம்
Mythology — புராணவியல்

## N

Nationalism — நாட்டுணர்ச்சி
Native chiefs — நாட்டுச் சிற்றரசர்கள்
Navy — கப்பற்படை
Neo-lithic — புதுக்கற்கால
Nomads — நரோடாடிகள்

## O

Obsolete — வழக்கொழிந்த
Overlordship — ஆதிபத்தியம்
Overseas Empire — கடல் கடந்த பேரரசு

## P

Paleolithic age — பழங்கற்காலம்
Panchayat — பஞ்சாயத்து
Pastoral people — ஆடுமாடு மேய்ப்போர்
Penal Law — தண்டனைச் சட்டம்
Pictograph — ஓவிய எழுத்து
Poll-tak — தலை வரி
Pre-dravidians — திராவிடருக்கு முன்பிருந்தோர்
Pre-historic — வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட
Punch marked coins — அடையாளத் துளையிடப்பட்ட காசுகள்
Puisne (Judge) — சாதாரண நீதிபதி

## Q

| | |
|---|---|
| Quasi governmental | — ஆட்சி முறை போன்ற |

## R

| | |
|---|---|
| Ryotwari | — நேர்க்குடிவாரம் |

## S

| | |
|---|---|
| Sabotage | — அழிவு வேலை |
| Sallekhana | — சல்லேகனம் |
| Secular State | — மதச்சார்பற்ற அரசு |
| Sovereignsty | — இறைமை, முழு அதிகாரம் |
| State bounty | — அரசியற்கொடை |
| Stone-Age | — கற்காலம் |
| Stupas | — தூபிகள் |
| Sub-Continent | — துணைக்கண்டம் |

## T

| | |
|---|---|
| Tenure | — பதவிக்காலம் |
| Terra cotta | — சுட்ட மண் |
| Theocracy | — சமய ஆட்சி |
| Theocratic | — சமயச் சார்புடைய |
| Tribute | — திறை |

## U

| | |
|---|---|
| Urban | — நகர்ப்புற, நகர் சார்ந்த |

## V

| | |
|---|---|
| Village Communities | — சிற்றூர்த் தொகுதிகள், ஊர்ச் சமயங்கள் |

## Z

| | |
|---|---|
| Zamindar | — ஜமீந்தார், பெருநிலக்கிழார் |
| Zamindaris | — ஜமீன் நிலங்கள் |

# பொருட்குறிப்பு அகராதி

## அ


அக்கினி, தீக்கடவுள், 30, 33, 46, 51, 53, 61
அக்கினி குண்டம், 39
அக்கினி சாலா, 39
அக்கினி மித்திரன், 152, 153
அகஸ்டஸ், 156, 278
அகிச்சத்திரா (ரோஹில் கந்து) 195, 211
அகுர்மசுதா, 82
அங்கதேசம் (மக்கள்), 54, 70, 75, 93, 115
அச்சுதன், 196
அச்சுவகர், 83
அசங்கர், 268
அசந்திவதம், 54
அசுவத்தாமன், 284
அசுவபதி, 207
அசுவமேதம் (வேள்வி), 56, 121, 153, 154, 188, 198, 201, 217, 232, 236, 266, 273
அசுவினிகள், 51
அசோகர், 48, 74, 88, 116, 117, 119, 132, 135-137, 138-142, 143, 145, 147, 148-150, 166, 171, 173, 174, 178, 179, 187, 188, 192, 198, 218, 237, 279, 296, 298, 300, 301, 303, 310, 312, 313
அசோகர் கல்வெட்டு, 88, 120, 135, 143, 169, 174, 300
அத்திரி, 47
அத்துவைதம், 51, 52, 63, 270, 273
அத்நாரன், 72
அதர்வவேதம், 57, 63, 65, 66
அதிகாரிகள், 260
அதிதி, 51
அதீச தீபங்கரர், 226
அநந்தவர்மன் சோடகங்கன், 253
அப்பர், 272
அபச்யர், 70
அபயவர்த்தனன், 31
அபராந்தம்–புத்த சமயம், 189
அபரார்க்கன், 256
அபராஜித பல்லவன். 234
அபாலா, 39
அபிசாரர், 83, 88
அப்ரமதம், 127
அம்பாஷ்தர், 83
அம்பி, 85, 87, 133
அமராவதி, 155, 302, 308, 309
அமாத்தியர், 257
அமித்திரகாதன், 135
அமித்திரகேதஸ், 179
அமோகவர்ஷன், 239, 256, 269
அயோத்தி, 70, 72, 123, 124, 235
அர்சேக்ஸ், 159
அர்ஜுனன் (மகாபாரதம்) 123, 125, 126
அரபிக்கடல், 278

அராபியர், 227, 229, 237, 240,241, 242. 279, 287
அரிச்சந்திரன், 227
அரியன், 165, 179
அருச்சுனன் (கூர்ச்சர மன்னன்), 245
அருச்சுனன் தவம், 322
அருணி, 55
அரேபியா, 240, 258
அல்படிஜின், 242
அல்பயிலமான், 242
அல்மசூதி, 228
அல்ஜர்ஸ், 242
அலகாபாது தூண் கல்வெட்டு, 195, 255, 258, 274
அலெக்ஸாந்தர் (எபிரஸ்), 142
அலெக்ஸாந்தர் (மாஸிடோனியா), 85, 87, 88, 128, 129, 131
அலெக்ஸாந்திரியா, 191 278
அவதாரங்கள், 63
அவந்தி, 70, 77, 227
அவந்திவர்மன், 2்7
அவமுக்தநாடு, 197
அற்புத சாகரம், 249
அன்டியால் கிடாஸ், 157, 189
அன்னும், 283
அனஸ், 32
அனுருத்தன், 77
அஜந்தாக் குகைகள், 317, 331
அஜாதசத்துரு, 75, 76, 77, 78, 95, 114
அஸ்மகம், 70
அஸ்லிசஸ், 158
அஸ்வகோஷர், 161, 163
அஸ்வாலயனர், 122
அஸ்ஸாம், 16, 223, 249
அஹிம்சை (கொள்கை), 109, 111, 135
அக்ஷபடலாதிக்கிருதன், 256

ஆ

ஆகவமல்லன், 251
ஆங்கோர்தாம், 285, 286
ஆங்கோர்வாட்டு, 285, 290
ஆங்கீரசிஸ், 47
ஆசாரியர்கள், 272
ஆசியா, 204, 240, 277, 279, 280, 300
ஆசிரமங்கள், 176
ஆத்துமன், 67
ஆதிசூரன், 224
ஆதித்தியசேனன், 203, 217
ஆதித்திய சோழன், 234, 239
ஆதித்திய தேவன், 214
ஆதித்திய வமிசம், 51, 284
ஆதித்திய வமிசன், 284
ஆதித்தியன், 51, 234, 239
ஆதிநேயஸ், 179
ஆந்திரர், 54
ஆப்கானிஸ்தானம், 87, 135, 156, 159, 216, 230, 248, 298, 306
ஆப்பிரிக்கா, 279
ஆபிரர், 155, 159
ஆபு, ?45, 269, 319
ஆம்ரகார்த்தவன், 200
ஆர்நாஸ், 84, 87
ஆர்மஸ், 245
ஆர்யதேவன், 191
ஆர்யபட்டர், 200, 274
ஆரண்யகங்கள், 67
ஆரியர், 16, 27, 28, 29, 30, 33, 34-36, 41, 43, 46, 48, 53, 179

ஆரியவர்த்தம், 5, 153, 196, 198, 205
ஆருகதம், 61
ஆருகதர், 188
ஆல்பிருனி, 9, 162, 230, 243, 261
ஆல்ஹஜாஜ், 241
ஆலர், 241
ஆழ்வார்கள், 242
ஆன்டிகோனசு, 142
ஆன்டியோக்கஸ் I, 136
ஆன்டியோக்கஸ் II, 138, 142
ஆன்டியோக்கஸ் III, 148
ஆனந்தபாலன், 243
ஆஜ்மீர், 247, 248, 256
ஆஜீவகர்கள், 112, 143, 147, 188, 268
ஆஸெஸ் I, 158
ஆஸெஸ் II, 158, 159

## இ

இசிடோர், 158
இட்சிங் (ஐட்சிங்), 263
இந்திய ஆர்ச்சிபிலாகோ, 17, 251, 277, 282, 286, 292
இந்திய மக்கள் தொகை (கணக்கெடுப்பு), 8
இந்திரப்பிரஸ்தம், 125
இந்திரராஜன், 215, 222
இந்திரவர்மன் (மஹாராஜாதி ராஜன்), 284
இந்திரன், 30-32, 48-52, 63, 108, 125, 187, 255
இந்திரன்-III, 229, 239
இந்துக்களின் குடியேற்ற நாடுகள், 280, 292
இபின்-ராஸ்தே, 288
இபுன் கோர்டாட்பெக், 288
இரட்டையாட்சி, 166
இராகுலன், 116
இராசசியவர்த்தனன், 208
இராட்டிரம், 237, 259
இராமசரிதம், 276
இராமகுப்தன், 199
இராமச்சந்திரன் (யாதவ மன்னன்), 252
இராமபாலன், 225, 248
இராமாயணம், 9, 93, 122, 123, 190, 227, 292
இராமானுஜர், 270, 272, 273, 276
இராமேசுவரம், 326
இராவணன், 123, 124
இராஜ்யஸ்ரீ, 209
இராஜ்யபால பிரதிஹாரன், 229
இராக்ஷதர், 123
இராஜகிருகம் (ராஜகீர்), 76
இராஜசிம்மன் (நரசிம்மவர்மன்), 235
இராஜபுதனம், 229
இராஜேந்திர சோழன், 250, 252, 325
இராஜேந்திர சோழன்-I, 224, 239, 251, 252, 290, 325
இராஜேந்திர சோழன்-III (குலோத்துங்கன்-I), 251
இராஷ்டிரகூடர்கள், 224, 229, 231, 237, 238, 250, 326
இரும்புக் காலம், 15,
இலக்குமணன், 123, 227
இலங்கை, 123, 251
இலக்ஷ்மணய்யராயன், 250
இலக்ஷ்மிகர்ணன், 126, 248
இலிங்காயதம், 270
இஸ்லாம், 9

இஸ்லாமியர், 9, 239, 240, 279, 292

ஈ

ஈசானவர்மன் மௌகாரி, 207, 217, 221
ஈசுவரசேனன், 231
ஈசுவர தேவர் (சிவ), 214
ஈசுவரன், 110
ஈராக்கு, 241
ஈரான், 195, 203

உ

உக்கிரசேனன், 197
உணவு—வேத காலம், 40; குப்தர் காலம், 265
உத்தண்டபுரம், 226
உத்பாதர், 219
உத்பாலகர்ள், 219
உத்யோதகரர், 270
உதபாண்டபுரம் (ஓஹிந்து), 219, 220, 230, 241, 242
உதயகிரி, 266
உதயணன், 72
உதாயி, 77
உதிதன், 211
உபரித, 259
உமாஹைமவதிவாசினி, 108
உருத்திரசேனன் II, 200
உருத்திரதாமன் I, 155, 159, 185, 193
உருத்திரதேவன், 196
உருத்திரம்மாள் (உருத்திரம்பா), 252, 255
உருவில்வம், 116
உஜ்ஜயினி, 72, 136, 147, 159, 175, 200, 206
உஷஸ், 51

எ

எக்பதானு, 89,
எகிப்து, 183, 192, 277
எசுர் வேதம், 66
எல்லோரா, 238
எலிபென்டாத் தீவுக் குகைகள், 328

ஏ

ஏதென்ஸ், 55, 191
ஏலாரா, 156
ஏலியன், 180
ஏலேலசிங்கன், 156

ஐ

ஐத்திரேய பிராமணம், 69
ஐரோப்பா, 279, 315
ஐஹோல்—கல்வெட்டுகள், 227

ஒ

ஒரிசா (ஒரிஸ்ஸா) 70, 211, 223, 249, 253, 254, 270
ஒலோதான, 178
ஒனெசிகிரிட்டோஸ், 110

ஓ

ஓகிந்து, 85
ஓலநாயகம், 257

க

கக்கா (பிரதிஹாரர்), 223

கங்கர்கள், கீழைக்கங்கர், 252, 253, 259, 328
கங்கை ஆற்றிடை நிலப் பகுதி(கங்கைச் சமவெளி), 54, 87, 98, 106, 142, 146, 184, 194, 216, 222, 226, 229, 237, 262, 267
கங்கை கொண்ட சோழபுரம், 325
கங்கை நதியும் பள்ளத் தாக்கும், 148, 201, 202, 233, 241, 243, 251, 267
கச்சபகாத-தலைவன், 245
கஞ்சம், 136, 207, 213, 221
கஞ்சூர், 282
கடக வம்சம், 221
கடம்பர்கள், 155, 233
கண்டக் நதி, 54
கண்டகார், 135,
கணபதி நாகன், 196
கத்தியவார், 134, 173, 193, 201, 226, 228, 242, 244
கத்யாய், 83
கதாசரித்சாகரம், 283
கபிலவஸ்து, 71, 112, 115, 116
கம்போடியா, 122, 283, 285, 313, 324
கர்ணகாலசூரி, 225
கர்ண சுவர்ண, 207, 217, 221
கர்ணன், 126
கர்த்திரிபுரம், 198
கர்ம மார்க்கம், 273
கருடச் சின்னம், 189
கருடஸ்தம்பம், 192, 312
கருவகி, 145
கல்கத்தா, 302
கல்கி ராஜா, 205
கல்பசூத்திரம்; 73
கல்பவிருக்ஷம், 109
கல்யாணி, 239, 251, 272, 276
கல்யாணி நாட்டுத் திரிபுவன மல்லன், 245
கல்ஹணர், 139, 148, 149, 162, 164, 205, 219, 243, 276
கலிங்கம், 70, 81, 136-139, 149, 155, 171, 174, 247, 249, 252
கவிராஜன், 274
கள்ளார், 241
கன்னோசி நாட்டு ஹர்ஷன், 135, 207, 208, 212, 214-218, 221, 228, 236, 241, 247, 254, 270, 274
கன்னோசி - பிரதிஹாரர், 215, 223, 224, 225, 228, 229, 238, 239, 242, 244, 245, 261
கனிஷ்கன்-I, 161, 163, 164, 240, 310
கஜினி, 239, 242
கஜினிச் சுல்தான்கள், 229, 242
கஜுரகோ, 247
கஸ்யப மதங்க முனிவர், 189

## கா

காஞ்சீபுரம் (காஞ்சி), 155, 197, 233, 234, 235, 264, 273, 320
காகதவால மன்னர்கள், 247, 250
காகதீயர்கள், 251, 252
காகவர்ணன், 78
காங்கேயதேவன், 247
காச்மீரம்-ஏடுகள், 139, 148
காசிகள், 16, 17, 72
காஞ்சி-பல்லவர், 233, 234, 238
காஞ்சி மாநகரம், 232, 233, 235, 238, 252

காட்பிசஸ்-I, 160, 161
காட்பிசஸ்-II, 161, 162, 185
காத்தியாயனர், 122
காந்தாரம், 34, 70, 82, 83, 138, 205
காந்தாரக்கலை, 306, 307, 308
காபூல், 135, 138, 160, 242
காபூல் நாட்டின் துருக்கி ஷாகிய மன்னர்கள், 241
காம்பில்யம், 54
காம்போஜம், 71, 138, 284, 285
காம்போஜர்கள், 224
காமந்தகர், 276
காமருபம், 198, 210, 212, 217, 221, 250
காயஸ்தர், 258
கார்க்கோடர், 218, 242
கார்த்திகேயன், 108, 166
கார்லேக்குகை, 311, 327
கார்ஷாபணம், 185
காரவேலர்கள், 269
காரவேலன், 155, 166, 188
காருவாகி, 178
கால்சி, 138
காலசூரிகள், 206, 232, 236, 247
காலசோகன், 78
காலிஞ்சர் மன்னர், 243
காலிப்புகள், 238, 240
காவேரி ஆறு, 234, 236, 239
காளிதாசர், 148, 152, 153, 200 274
கான்ஸ்டான்டி நோபிள், 238
காஸ்மாஸ்-இண்டிகோ-பெலஸ்டஸ், 205
காஸ்பியன் கடல், 280
காஜுராஹோ, 309, 321

கி

கியா-சே, 74
கியூத்-ஸி-கியோ, 161
கிர்நார், 138, 269
கிரகவர்மன் மௌகாரி, 208, 209
கிராமம், 43, 100, 260
கிரிவிரஜம், 74, 78, 90, 109, 122
கிரிவிகள், 54
கிருஷ்ணமிசிரர், 247
கிருஷ்ண வழிபாடு, 49, 64, 110, 123, 125, 127, 190
கிருஷ்ணன், தேவகிபுத்திரன், 110
கிருஷ்ணன்-I, 238
கிருஷ்ணன்-II, 239
கிருஷ்ணா நதி, 154, 230, 238, 253, 308
கிருஹ்ய சூத்திரங்கள், 104, 108, 109, 122
கிரேக்கர், 152, 179, 192, 278, 279, 307
கிரைசோஸடம்-நகரடயன், 192
கிரைஸி-பொன்னுடு, 282

கிளாடியஸ், 160
கிஷ்கிந்தை, 122, 123

### கீ

கீத கோவிந்தம், 250, 276
கீர்த்திவர்மன் (சாந்தல), 247
கீர்த்திவர்மன்-I (சாளுக்கியன்), 236

### கு

குகைகள், அசோகர், 310
குகைச் சித்திரங்கள், 312
குசன், 124
குசிநகரம், 117
குடும்பிகள், 237
குணாளன், 147
குந்தபுரம், 112
குப்தர்கள், 164, 193, 197, 313
குப்தர் காலம், 313
குப்த விஷ்ணுவர்த்தனன், 236
குப்ளேகான், 284
குபேர் நாகை, 200
குபேரன், 197, 255
கும்பகோணம், 326
குமரில்லன், 273
குமார அமாத்தியர், 257, 259
குமார குப்தன் 111, 202, 207
குமாரகோஷர், 288
குமாரதேவி, 194
குமாரபாலன் (அன்கில் வாரா), 269
குமாரபாலன் (குசராத்து), 254
குமாரபாலன் (வங்கம்), 238
குமாரபாலன், 226
குமாரலதன், 191
குமார ஜீவர், 268
குர்ரம் (கிராமம்), 260
குராளன், 197
குருக்ஷேத்திரம், 54, 126
குலினிஸக் கொள்கை, 249
குலோத்துங்கன்-I, 251
குவாலியர், 244
குவின்டஸ் கர்டியஸ், 80, 108, 180, 187
குஜராத், 246, 269, 331
குஷானர், 158, 160, 166, 191, 280, 308
குஷானிய—சாதவாகன காலம் 273
குஸ்தலபூர், 197

### கூ

கூடல் சங்கமம், 251
கூர்க்கர், 16
கூர்ச்சரம், 229, 236, 237, 238, 242, 245, 246, 251
கூர்ச்சரர், 210, 219, 227, 229, 235
கூணிகன், 114
கூஜர்கள், 261

### கெ

கெதிரி, 291
கெய்ஜர், 74

### கே

கேசவசேனன், 250
கேரள நாடு, 156, 229, 270
கேரள புத்திரர், 138

### கை

கை-பின், 148
கைலாசக்கோயில் (எல்லோரா), 238
கைலாசம், 331

### கொ

கொச்சி, 156
கொச்சின்-சீனு, 285
கொண்டோபர்னஸ், 160
கொப்பம் போர், 251
கொரியா, 281
கொற்கை, 278
கொனகமானன், 146

### கோ

கோகர்ணம், 222
கோசலம்-கோசலா, 54, 70, 73, 76, 90, 93, 121
கோட்டம், 260
கோட்டா, 195
கோட்டூர், 197
கோதாவிரி ஆறு, 53, 54, 122, 123, 154, 155, 236, 252
கோபசந்திரா, 220
கோபாலன்-I, 222, 224
கோபாலன்-II, 224
கோபுரம், 326
கோரி முகமது, 243,
கோலர், 16
கோவிந்த சந்திரன், 224
கோவிந்தன்-III, 228, 239
கோஷா (மாட்டுப்பண்ணை), 105

### கௌ

கௌடர்கள், 201, 203, 207, 208, 211, 217, 219, 221, 222, 238, 249
கௌடில்யர் (சாணக்கியர்), 81, 130, 134, 168
கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம், 168, 169, 172, 174, 177, 182, 186, 190, 220
கௌண்டின்யன், 284
கௌதமி பாலஸ்ரீ, 178
கௌதமி புத்திர சாதகர்ணி, 154, 159, 177, 193
கௌமுதி மகோற்சவம், 275
கௌரவர், 54, 62, 70, 90, 103, 125, 126

### ச

சக்கரர், 108
சக்ரபாணி, 226
சக்ராயுதன், 228, 238
சகசாங்கன், 200
சகாதேவன், 125, 127
சகுந்தலை, 127
சங்கர்ஷணன், 187, 189
சங்கரவர்மன், 219, 220
சங்கராச்சாரியார், 127, 270, 273, 276
சங்கிதைகள், 45, 66, 68
சசாங்கன், 207, 208, 221, 270
சசிகுப்தன், 87

சசிவ, 257
சண்டகௌசிகம் (நாடகம்), 229
சண்டாளர் சாதி, 261
சண்டிதேவர், 276
சத்தியபுத்திரர், 138
சத்ருஞ்சயம், 245, 269
சத்வதர், 70
சதபதப் பிரமாணம், 125
சதாரா, 201
சதி, 98, 99, 262
சந்தவார் போர்க்களம், 216
சந்திரதேவன், 247
சந்திரன், 197
சந்திரர்கள், 218
சந்திரகுப்தர்-I, 194, 199
சந்திரகுப்தர்-II (விக்கிரமாதித்யன்), 160, 194, 199, 201, 200, 232, 255, 262, 266, 274
சந்திரகுப்த மௌரியன்-I, 79, 80, 88, 113, 128, 129, 130, 131-135, 171, 188
சந்திரவர்மன், 196, 197
சந்திரவர்மன் கோட்டம், 196
சந்திராபீடன், 218
சப்தசிந்து, 35
சபக்டிஜின், 242, 246
சபா, 38, 58, 92
சம்பதி, 147
சம்பரன், 34
சம்பா (இந்தோசீனு), 75, 101, 106, 114, 285
சம்பிரதி அல்லது சம்பதி, 147
சபபு, 266
சம்ஸ்கிருதக் (வடமொழி) கல்லூரி தாரா, 9, 168, 246, 274, 276, 281, 283, 285, 292
சமணர்கள், 75, 91, 97, 109, 112 113, 114, 115, 118, 130, 131, 132, 135, 147, 168, 188, 267, 268, 269
சமதாதம், 138, 198
சமந்தசேனன், 249
சமயம் (வேதகாலம்)
மகதராட்சி 47-52, 108-112
மௌரியராட்சி, குப்தர் காலம், 186-190, 265-270
சிவ வழிபாடு, 270
வைணவ இயக்கம், 272,
வேதச் சடங்குகள், 273
சமிதி, 38
சமுத்திரகுப்தன், 74, 160, 194-199, 214, 232, 255, 256, 274
சமுதாய நிலை—வேத காலம்—ஆரிய காலம், 39-43, 55-61.
மகதர் காலம்-மௌரியர் காலம், 98-104
குப்தர் காலம், 260-262
சயால்கோட், 152, 157, 205
சர்வ கலாசாலைகள் — இந்திய உபநிடதங்கள், 226
சர்வவர்மன், 191
சர்வாதிகாரின், 257
சர்வார்த்த சிந்தக, 257
சர். ஆரெல்ஸ ஸ்டெயின், 280
சரகன், 191
சரஸ்வதி, 33, 51, 54, 98, 180, 211
சவார்கள், 54, 103
சவோட்டகம், 242
சன்னிதாத்திரி, 172
சனகனிகர், 198, 200

## சா

சாக்கியமுனி, 116, 140, 163, 213

சாக்கியர்கள், 72, 76, 100, 112, 115
சாகர், 90, 127, 154, 158, 159, 160, 162, 177, 190, 193, 199, 200
சாகஸ்தானம், 158
சாகாலம் (சாகலா) (சயால்கோட்), 152, 157
சாகேதம் (அயோத்தி),100, 152, 162, 164
சாகேத மதம், 100
சாசானிய குலம், 164
சாஞ்சி, 299, 302-305, 310, 317
சாத்தியகி, 237
சாத்திரங்கள், 92
சாத்கர்ணி-I, 154
சாதவாகனர் குலம், 155, 159, 176, 177, 188, 193, 231, 226
சாதிமுறை, 60, 103, 176, 177, 260, 261
சாந்தலர்கள், 229
சாந்தோக்கிய உபநிடதம், 60, 110, 124, 125
சாபாஸ், 235
சாமுண்ட-ரே (அமைச்சர்), 328
சாரநாத்து, 116, 297, 298, 313
சாலங்காயனர், 155, 231
சாலிசுகன், 148
சாலிவாகனன், 154
சாவாத் (சுவாத்) 263
சாவித்திரி, 127
சாளுக்கியர்கள், 207, 210, 229, 235-237, 239, 242, 250, 251, 269, 273

சி

சிகரங்கள் (கோபுரங்கள்), 317
சிங்கசாரி (ஜாவா), 291
சிசுநாகன், 73, 78
சித்தராஜ ஜெயசிம்மன், 251
சித்தன்ன வாசல் (குகைக் கோயில்), 331
சித்தார்த்தர் (கௌதம புத்தர்), 115-118
சித்தார்த்தன் (மகா வீரரின் தந்தை), 112
சித்திரங்கள் (இடைக்காலம்) 331
சிந்து, 17-28, 29, 70, 88, 101, 106, 153, 156, 159, 211, 212, 218, 223, 229, 241
சிந்து-சௌவீரம், 70
சிந்துராஜா — நவசாகசாங்கர், 245, 246
சிபி, 127
சிபிகள், 83
சிம்மவர்மன், 146, 233
சிம்ம விஷ்ணு, 233
சிமிட், 17
சிமுகன், 154, 188
சிரமணர், 172
சிரவண-பெல்கோலா, 135, 328
சிராவஸ்தி, 72, 107, 196
சிறிஞ்சயர்கள், 31, 32, 33, 34, 54, 125, 126
சிரியா, 138, 152,183, 277, 279
சிருங்கேரி, 270
சிராணிகர் (பிம்பிசாரன்), 73
சிவகந்தவர்மன்-232
சிவசு, 34
சிவதேவன், 217
சிவபாகவதர்கள், 111
சிவன், 25-27, 29, 51, 63, 109, 187, 214, 325

சீ

சீதை (இராமன் மனைவி), 123, 124
சீலபட்டாரிகை, 275
சீலாதித்தியன் (ஹர்ஷர்), 209, 210

சு

சுக்கிரீவன், 123
சுகந்தா (இராணி), 219
சுங்கர்கள், 148, 151, 153, 159, 302
சுசுனியாக் கல்வெட்டுகள், 196
சுத்தோதனன், 116
சுதர்ஸன (ஏரி), 173
சுதஸ், 34
சுந்திரமூர்த்தி, 272
சுபத்திரை, 125
சுபந்து, 274
சுபாகசேனன், 148, 152
சுமத்திரா, 142, 283, 286, 291, 313
சுமேரியப் பண்பாடு, 26, 28
சுயம்வரம் (ஸ்வயம்வரம்), 99, 262
சுரா (சோமபானம்), 39, 40
சுருதி (வேதம்), 65, 67
சுல்தான்கஞ்ச், 315
சுலிகர்கள், 207
சுலைமான் (அராபிய வணிகன்), 228, 255
சுவர்ணதீபம் (சுமத்திரா), 142, 288
சுவர்ண பூமி, 142, 282, 283
சுவாமிதத்தன் (கோட்டூர்), 197
சுவேதகேது, 55
சுவேதாம்பரசமணர், 112, 115, 25
சுளுகம் (பிரமதேவனி , 235
சுஸ்ருதம், 191

சூ

சூதன் (தேரோட்டி), 57, 59 93
சூத்திரங்கள், 67, 68, 73, 100
சூர்பாரக, 106
சூர்யவர்மன்-II, 285
சூர்யன், 30, 51
சூரசேனர்கள், 224, 249
சூரசேனம் (மதுரா), 70
சூரசேனன் (மதுரா), 11
சூரபாலன், 225
சூரர்கள், 224, 249
சூரியசேனை, 217

செ

செங்கடல், 278
செங்கிஸ்கான், 280
செர்க்சஸ், 82
செல்யூகஸ், 131, 135, 147, 1 56
செல்யூகஸ்-நிகேட்டர், 147
செளிபூஸ் (செலீபத் தீவுகள்) 291, 313
சென்னை (வடபகுதி), 70
சென்னை, 197, 232, 250, 273

சே

சேனர்கள், 249, 258, 269, 330
சேத்துகள் (தனவணிகர்), 258

சை

சைசுநாகர்கள், 73, 78, 80
சைத்தியக் குகை 163, 311
சைரசு, 82

சைலேந்திரர்கள், 291
சைவ சமயம், 161, 266, 268, 270, 273
சைவ நாயன்மார்கள், 234
சைனு, 183, 189, 211, 213, 217, 219, 238, 261, 262, 281, 282, 283, 284

சொ

சொபாரா, 138

சோ

சோடர்கள், 134
சோம, 40, 51, 56
சோமதேவன், 276
சோம (நாக இளவரசி), 284
சோமநாதபுரம், 239, 244, 246
சோமேசுர ஆகவமல்லன், 251
சோமேசுவரன் -III, 251, 256, 276
சோழர்கள், 156, 234, 239, 250, 251, 252, 257, 265, 273, 290, 325

சௌ

சௌகாத்திரா (சொகோத்ரா), 275

ட

டச்சுக்காரர், 291
டயடோசு, 132
டரையசு, 82, 84, 88

டி

டில்லி, 247, 248, 252

டெ

டெமிட்ரியசு, 132
டெமிட்ரியசு இளவல் (பாக்திரியா), 152, 156, 190

த

தக்காணம், 5, 52, 155, 184, 189, 193, 197, 232, 239, 247, 249, 251, 252, 257, 264, 326
தக்ளமகான் பாலைவனம், 280
தகாரா, 184
தகோபா (ஸ்தூபி), 311
தசபுரம் (மாண்டஸோர்), 206
தசரதன், 121, 123
தஞ்சாவூர், 156, 237, 239, 250, 325, 331
தஞ்சூர், 282
தட்சசீலம் 9, 83, 88, 136, 138, 150, 157
தண்டகாரண்யம், 123
தண்டின், 276,
ததிகர்ணன், 188
தந்திதுர்க்கன், 237
தமிலம், 189
தமிழகம், மக்கள், 6, 156, 235, 272
தர்சகன், 77
தர்மம் (தர்ம), 127, 139, 140, 141, 171

தர்மபாலர், பண்டித (சமயத் தொண்டர்), 226
தர்மபாலன்-மன்னன், 222, 226, 228, 238
தர்மவிஜயம், 139, 142
தர்மாதித்தியன், 220
தருமசாத்திரங்கள், 264
தவாகா, 198
தனசாகரம், 249
தனஞ்சயன் (குஸ்தலபூர்), 197
தனநந்தன், 81
தஜுஜ், 242
தஸ்யுக்கள், 32, 33, 34, 54
தளிகர்கள், 236

### தா

தாசபுரம் (மண்டசோரே), 206
தாசர்கள், 32, 34, 41
தாத்திரி (ஈஸ்வரன்), 48, 110
தாதா-II, 210
தாமஸ், புனிதர், 160
தாமிர யுகம், 15
தாமிரலிப்தி, 106
தாமோதர குப்தன், 219
தார்த்தாரிகள் (டார்டார்கள்), 264
தாரா, 264, 288
தாலமி, 126
தாலமி-II, 142
தானேசுவரம், 207-209, 211
தாஹிர், 241

### தி

திக்நாகாசாரியார், 268
திகம்பரர், 268, 269
திட்டா-I, 220
திட்டா (இராணி), 220, 230
திபெத்து, 259, 281, 282,
தியாஸ், 49
திராவிடக் கலை, 320, 327, 329
திராவிட நாடு, 156, 237
திராவிடர்கள், 15, 16, 28
திரிசலை (மகாவீரரின் தாயார்), 112
திரிபரதீசோசு, 131
திரிலோசன பாலன், 243
திரிபுவன மல்ல விக்கிரமாதித்தியன், 245
திருச்சிராப்பள்ளி, 156
திருதராட்டிர விசித்திர வீரியன், 124, 125
திருமூர்த்தி, 30
திருநெல்வேலி, 156
திரௌபதி, 125, 126
திலாவராக்கோயில், 319
தீவ்யாவதான, 191
திவ்வோகான், 225
திவாகரர், 215
திவாரா, 147
திவோ தாஸன், 33
திஸ்ஸா மொக்கிலி புத்தர், 119

### து

துர்க்கை, 108
துர்யோதனன், 125
துர்லபவர்த்தனன், 218
துருக்கியர், 218, 246, 247, 248, 250
துருக்கியர் கல்வெட்டுகள், 245
துருவாதரவர்ஷன், 228
துருவதேவி, 199
துருவபட்டன், 210

துருவன் (ராட்டிரகூடர்), 239
துருஷ்கர், 246
துருஹ்யம், 32
துரோணர், 126, 178, 284
துவார சமுத்திரம், 253, 329
துவாரகை, 125, 126
துவைதம், 273
துவைராஜ்ய, 166

தூ

தூபிகள், 299, 303, 309, 311

தெ

தென்னிந்திய மொழிகள், 16

தே

தேபால், 241
தேரி காதை, 99
தேவகிரி, 250, 251, 252
தேவகுப்தன், 208, 217
தேவதத்தர், 117
தேவநாம்பிய (பிரியதர்ஸின்), 137, 166, 187
தேவபாலன் (பாலர்), 233
தேவபுத்திரன், 166
தேவர்களின் தேவர், 143
தேவர்கள் (மன்னர்கள்), 247
தேவராட்டிர நாட்டுக் குபேரன், 197
தேவவர்மன், 148
தேவனும்பிரிய, 149
தேவிசந்திர குப்தம், 274
தேஜபாலன், 245, 269, 320

தை

தைலன்-I, 239
தைலன்-II, 239, 246, 250

தொ

தொசாலி (வாணிகமும் தொழிலும்), 189

தோ

தோமாத்தலைவன், 248
தோயி, 250
தோரமாணன், 203

தௌ

தௌலதாபாது (தேவகிரி), 251
தௌலி, 138

ந

நகரபதி, 260
நகுலன், 125
நசத்தியஸ், 30, 51
நடராஜ சிவன், 330
நந்தர்குலம், 77, 79-81, 129, 134
நந்தனன், 129
நந்திவர்த்தனன், 77, 234
நந்திவர்மன் பல்லவமல்லன், 234
நந்தின், 196
நயபாலன் 282
நரசிம்ம குப்தன், 202
நரசிம்மவர்மன்-I, 233, 236
நரசிம்மவர்மன்-II, 235
நரசிம்மவர்மன் மகாமல்லன், 235, 321
நரவர்மன், 196
நரன் (அர்ஜுனன்), 123

நவசகசாங்கன், 200, 246
நளன், 127

நா

நாக்லிஸ்தான், 18
நாகசேனன், 195
நாகதத்தன், 196
நாகபட்டன்-I, 227
நாகபட்டன்-II, 227, 238,
நாகர்கள், 164, 193, 195
நாகரஹரம், 223
நாகார்ஜுன கொண்டா, 167, 183, 189, 308, 310
நாகார்ஜுனன், 181, 191
நாச்ஞுகேதலாய், 317
நாடு, 259
நாதமுனி, 272
நாநய, 190
நாரதர், 274
நார்வார், 196
நாராயண பாலன், 224
நாராயணன், 110, 125, 226, 268, 272
நாளந்தா, 210, 223, 263, 282, 315

நி

நிக்கோபார்த் தீவுகள், 251
நிகாலிசாகர், 138
நிச்யர், 70
நிசா, 83, 84
நிதனப்பூரி, 211
நியாய சூத்திரங்கள், 264, 268
நியார்க்கஸ் 87, 104
நியூகினி, 292
நிருவாணம், 118, 144
நிர்கிரந்தர்கள், 112, 143
நிலவரித் திட்டம், மௌரியர் குப்தர் காலம், 172, 259
நினைவுச் சின்னங்கள், 294-332
நிஜாம், 238, 239, 254
நிஷாதா, 61

நீ

நீதி நிருவாகம்-குப்தர் காலம், 258
நீர்ப்பாசனம்-மௌரிய காஷ்மீரம், 172, 219
நீலராஜன், 197

நெ

நெல்சிந்தா, 278

நே

நேப்பாளம், 7, 138, 194, 198, 217, 281
நேரன், 241

நை

நைகமா, 206
நைமிசாரண்யம், 9
நைல் நதி, 18, 279

ப

பகதத்த குடும்பம் (காமரூபம்), 217
பகவத், 111
பக்வத் கீதை, 110, 127, 270
பசுவர், 270, 272
பசுபதி-பாசுபதர்கள், 63, 111, 180, 270
பஞ்சதந்திரம், 276
பஞ்சமகன், 77, 78

பஞ்சவடி, 123
பஞ்சாப் (சமவெளி), 152, 156, 219, 243, 244, 280
பட்டநாராயணன், 276
பட்டலா, 84
பட்டி (காலாட்படை), 38, 39
படைகள் — ஆரியர் மகதப் பேரரசு, மௌரியர், குப்தர், 95, 171, 258
பண்டகாணிகர், 106
பண்டல்கண்ட், 246, 247
பக்தி இயக்கம், 49,51,110,266, 272, 273
பத்திரபாகு, 115, 190
பத்ராசலன் (தளபதி), 134
பத்ரிநாத், 270
பதஞ்சலி, 5, 122, 152
பதுமாவதி, 164, 195
பந்தி, 208, 210
பந்துபாலிதன், 147
பர்கூஸன், ஜெ, 325
பர்த்ருஹரி, 276
பர்மா, 3, 7
பர்ஜன்யன், 51, 108
பரதர்கள், 32, 33, 34, 54
பரதன், 4, 8, 72
பரவகுப்த, 219
பரத்வாஜர், 47
பரத சாம்ராச்சியம், 8
பரமாத்துமன், 63
பரமார்த்திதேவன் (அரசன்), 247
பரமாரர்கள், 229
பரன், 72
பராசரர் (வியாசரின் தந்தை), 122
பராபர் குன்றுகள், 298
பரிநிருவாணம், 74, 79, 113, 117, 131
பரிஷ, 257
பரிஷத், 258, 260
பரீக்ஷித்து (பரீட்சித்து), 54, 121, 126
பல்லவர் கலை, 320-326
பல்லவர்கள், 155, 182, 232, 235, 238, 264, 320-327
பல்லாரி மாவட்டம், 13
பல்லாள சேனன், 249
பலக்க நாடு, 197
பலபுத்திரதேவன், 223
பலுசிஸ்தான், 3, 18, 28, 87, 135, 240
பலுரம், 189
பவபூதி, 276
பவனதூதன், 250
பழைய கற்கால மனிதர் (இந்தியா), 10-12
பஹ்லவர், 154, 158, 177, 190, 193
பஹாரிமத், 242

பா

பாக்கிஸ்தான், 7
பாக்டிரியா, 156, 307
பாக்தசு, 34
பாக்தாது, 238
பாகல்கண்டு, 237
பாகவத புராணம், 272
பாகவதர்கள், 89, 110, 111, 126, 268, 272
பாகூர், 264
பாசன், 76
பாஞ்சராத்திரர், 268, 272
பாஞ்சாலர்கள், 54, 93, 103, 124, 125
பாடலிக் கிராமம், 76
பாடலிபுத்திரம், 76, 79, 81, 90, 101, 107, 115, 122, 130, 134, 137, 145, 147, 148, 152, 172,

பாடலிபுத்திரம் 180, 184, 185, 200, 223, 228, 263
பாண்டவர்கள், 322
பாண்டிய மன்னன், 134, 138, 156, 234, 252, 278
பாண்டியன், 122, 253
பாண்டுகள், 103, 122, 126, 181, 199, 200, 208, 215, 227, 241, 255, 268, 270, 272, 274, 276
பாணன், 149, 168
பாணரின் ஹர்ஷ சரிதம், 200, 227, 255, 268, 276
பாணர், 200, 215, 255
பாணிகள், 45
பாணினி, 68, 88, 110, 121, 191, 220
பாணினியின் இலக்கணச் சூத்திரங்கள், 191, 220
பாபிலோன், 87, 106, 128, 131, 277
பார்கர், 71, 72
பார்சுகள், 31
பார்சுவர், 114, 115
பார்த்தியர், 154, 160, 161
பார்ஹூட்டு, 151, 302
பாரசீகம், 82, 84, 88
பாரதம் (பரத கண்டம்), 8
பாரத வர்ஷம், 1, 4, 8
பாரவி, 274, 276
பாரிகாசா, 279
பால்மிரா (சிரியா), 297
பால்ஹர (வல்லவ ராஜா), 238
பாலமன்னர், 220—226, 248
பாலர் குலம், 220, 225
பாலவர்மன், 196
பாலாதித்தியன், 203
பாலி, 120
பாலி நூல்கள், 106
பாலிபியுசு, 148
பாலூரா (கஞ்சம்), 282
பாவா, 76
பாஹியான், 201, 214, 255, 261
பாஸ்கர வர்மன், 210, 211
பாஸ்கரர், 276
பாஸ்கராசாரியார், 252, 264

## பி

பிங்களர், 68
பித்தாபுரம், 197
பிந்துசாரன், 133, 135, 136, 150
பிப்பலிவனம், 130
பிம்பிசாரன், 73, 77, 78, 82, 142
பியூனுன், 284, 285
பிரச்சியர், 70
பிரசேனஜித்து, 72, 76
பிரத்தியோதன், 72, 78
பிரதிஹாரர், 215, 216, 223, 224, 227, 228, 229
பிரதிஸ்தானம், 154
பிரபாகரவர்த்தனன், 209, 212
பிரபாவதி, 200, 232
பிரம்ம சூத்திரங்கள், 68
பிரமதேவன், 235
பிரம்மணஸ்பதி, 51
பிரமா, 50, 63, 67
பிரயாகை (வரலாற்றுக்கு முந்திய), 211, 212, 217
பிரவாகன-ஜய்வலி, 55
பிரஜாபதி, 30, 49, 51
பிரம்மானந்தகுபாலன், 243
பிராகிருதம், 9, 61
பிராமணர், 61, 91
பிரிட்டிஷ் கண்காட்சிச் சாலை, 308
பிரியதரிசன் (அசோகர்), 137, 138
பிருஹத்-தேவதம், 49
பிருதிவீ, 49, 56
பிருதிவி ராஜன்-III, 247, 248

பிரெஞ்சுக்காரர், 285
பில் சாதியினர் (பில்கள்), 16, 61
பில்லமன், 252
பில்ஹணர், 251
பியிப்போஸ், 128
பிளினி, 171, 185, 278
பிஜ்ஜால கால சூரியன், 251, 259
பிஹேறாவா (பெஹோவா), 226
பிஸ்தபுரம் (பித்தாபுரம்), 197, 236
பிஷஜ், 48

### பீ

பீமசேனன், 125
பீமன் (ஷாஹி), 225
பீமன்-I (குஜராத்து), 245
பீமன் (கைவர்த்தன்), 225
பீரார், 148
பீன்மால், 242
பீஷ்மர், 126
பீஹார், 194, 248, 249
பீஜபூர், 235

### பு

புக்கர், 253
புக்தி, 259
புண்டரநகரம், 139
புண்டரவர்க்கனம், 138
புண்டரர், 54, 70, 122
புத்த சமயம், 55, 267, 268, 269
புத்த கௌதமர், 115-118, 143, 307, 308
புத்தியர், 16
புதகுப்தன், 203, 204, 244
புதிய கற்காலம், 12, 13
புதுக்கோட்டை, 235, 331
புராணங்கள் 77, 147, 159
புருக்கள் (பௌரவர்), 32-34, 54, 83
புருகுப்த, 202
புருஷசூக்தம், 42
புருஷபுரம், 162
புரோகிதன், 37, 53, 258
புரோச்சு, 184, 192, 210, 240
புரோலராஜன்-II, 252
புலகேசி-I, 234
புலகேசி-II, 210, 234, 240, 252
புளிந்தர்கள், 54
புவனேசுவரம், 319
புளுட்டார்க்கு, 129
புஷ்கரணம், 196
புஷ்கலாவதி, 83, 88
புஷ்பபுரம், 195
புஷ்யகுப்தன், 173
புஷ்யபூதி வமிசம், 203, 207
புஷ்யமித்தரசுங்கன், 148, 269
புஷ்யமித்திரன், 148, 155, 188, 221
புஷன்,50

### பூ

பூர்வநந்தன், 80
பூர்வமீமாம்ஸை, 273
பூரி, 270
பூலர், 274

### பெ

பெண்ணாறு, 234
பெரிக்கிளிஸ், 246
பெரிப்புளுஸ், செங்கடல் ஆப் தி எரித்ரேயன் ஸீ, 278
பெஷாவர், 34, 85
பெஹோவா, 226
பெஸ்நகர், 152, 189, 196, 314

பொ

பொட்டவிஷ்டி, 259
பொருளாதாரநிலை (வேத கால), 42-46
(ஆரியகால), 61-64
(குப்தர்கால), 261, 262, 265

போ

போகவர்மன் மௌகாரி, 217
போகஸகாய்ச் சாசனம், 30, 33
போதிசத்துவர், 307
போதியர்கள், 261
போபதேவன், 252
போர்னியோ, 286
போரஸ், 83, 85
போஜர்கள், 70
போஜன் (மாணவர்), 262,263, 264
போஜன்-I (கன்னேசி), 215, 228, 254
போஜன்-II, 228
போஜன் (தாரா நாடு), 276

பௌ

பௌரவர், 32, 54, 83

ம

மக்ரான், 240
மகதம், 54, 69, 73, 91, 150, 151, 155, 164, 203, 210, 218
மகத நாட்டுக் கண்வர் குலம், 46
மகமது நபி, 240
மகா கோசலன், 72
மகாசபை, 260
மகாதண்டநாயகன், 257
மகாநந்தின், 79
மகாபதுமன், 79
மகாபலதிக்ருதன், 257
மகாபாரதம், 83, 91, 190, 274
மகாபாஷ்யம் (பதஞ்சலியார்), 191
மகாபிராதனன், 257
மகாயான பௌத்த மதம், 189
மகாராஷ்டிரம், 231, 237, 252
மகாவீர வர்த்தமானர், 112,113, 114, 115
மகிபாலன், 225
மகேந்திரகிரி, 197
மகேந்திரபால பிரதிஹாரன், 224, 228
மகேந்திர வர்மன்-I, 235, 256, 270, 274, 331
மகேந்திராதித்தியன், 202
மகேஸ்வரர்கள், 111, 269
மகோதய, 214, 215, 226
மங்களேசன், 236
மசாகா, 84
மண்டசோரே (தாசபுரம்), 206
மண்டர், 242
மண்டலம், 260
மத்தவிலாச பிரகாசினி, 235
மத்தியதேசம், 5, 57, 91, 201, 226, 247, 248, 261, 269
மத்ரகர், 198
மத்துவாச்சாரியார், 273
மதருஸ் (சென்னை), 250
மதிலன், 196
மதுரா (சிலைவுச்சின்னங்களும், சிற்பங்களும்), 110, 163, 305, 307, 313
மதுரை, 156, 326
மத்தியமிக, 152
மந்தராஜன், 197
மந்திரம், 65
மந்திரின், 256

மந்திரிபரிஷத், 258
மர்மாட் (மார்வார்), 242
மராத்தியர் (இராஷ்டிர கூடர்கள்), 239
மல்லகரம், 259
மல்லம், 70
மலபார், 156, 270
மலாக்கா, 291
மலாகந்து, 84
மலிபா(மால்வா), 242
மலேயாத்தீபகற்பம், 251, 285, 292, 313
மலேயாத் தீவுக் கூட்டங்கள், 251, 283
மன்செஹ்ரா, 138
மனுநீதி, 178, 185, 257
மஹாஸ்தானம், 139
மஹிபால பிரதிஹாரன், 228, 238
மஹிபாலன்-I, 224, 251
மஹிபாலன்- II, 225
மஜாபஹித், 292

மா

மாங்கீர், 238
மாண்டசோர், 196, 205, 206
மாணிக்கவாசகர், 272
மாதவ குப்தன், 210
மாமல்லபுரம், 233, 321
மாயாதேவி(புத்தரின் தாய்), 116
மார்க்கோபோலோ, 252, 259
மார்த்தாண்டர் கோயில், 219
மார்வார், 242
மார்ஷல்(சர் ஜான்), 294, 299
மால்கெடம்(மானியகேடம்), 238
மாலிக்காபூர், 252
மாலிக்கு இக்தியாருதீன், 250
மாளவம் (அவந்தி), 134, 153, 191, 200, 206, 236, 237, 246
மாளவிகாக்னிமித்திரம், 148
மான்யகேடகம் (மால்கெட்), 238
மானவதர்ம சாத்திரம், 185
மாஷ்காரிகள், 268

மி

மிகிரகுலன், 202, 205
மித்திரன், 30, 51
மித்திரடேடஸ், 157
மிருச்சகடிகம், 274
மிலிந்தபான்ஹோ, (மிலிந்தபன்ஹ), 183, 191
மிஹிர, 190

மீ

மீமாம்சை, 264

மு

முக்கிய பிரதான, 257
முக்தாபீட, 218
முகமத் பின் காசிம், 241
முசிரிஸ், 278
முஞ்சன், 246
முண்டர்கள், 16
முண்டன், 78
முத்திராராக்ஷசம், 130, 133, 274

மூ

மூரா, 129
மூரையஸ், 129
மூல்தான், 243
மூலகம், 70

மூலப்பிரகிருதிகள், 254
மூலராஜன்-II, 245
மூன்றும் வீரபல்லாளன், 253
மூஸங்கி, 251

மெ

மெக்கா, 240
மெகஸ்தனீஸ், 169, 199, 179
மெகரௌலி இரும்புத்தூண் கல்வெட்டு, 196
மெசபடேமிய, 27
மெடிட்டரேனியன் (மத்திய தரைக் கடல்), 279
மெதினு, 246
மெனந்தரின் கேள்விகள், 191
மெனண்டர் (மெனந்தர்), 152, 157, 188

மே

மேகவர்ணன், 74, 194
மேகவர்மன், 194
மேகலா, 201

மை

மைசூர், 233, 269, 270, 328
மைத்திரர்கள், 206

மொ

மொஹஞ்சதாரோ, 18—28, 29—32, 301

மோ

மோக்ஷபசரிஷத், 213

மௌ

மௌகாரிகர்கள், 205, 207
மௌசிகானர்கள், 84
மௌரிய சாம்ராச்சியம், 128, 150, 165, 167, 168, 169, 171-192

ய

யசஸ்கரன், 219
யசோதர்மன், 202, 205-207, 270
யசோதரபுரம், 284
யசோதரா, 116
யசோதரை, 112
யசோவர்மன் (காம்போஜம்), 285
யசோவர்மன் (கன்னோசி), 203, 215, 218, 221, 276
யதுக்கள், 31, 32
யமுனாசாரியர், 272
யவனர்கள் (கிரேக்கர்கள்), 84, 89, 102, 108, 127, 132, 153, 154, 175, 191, 192
யக்ஷ-பாணி (யக்ஷ பண்பாடு), 108

யா

யாஞ்ஞவல்கியர், 55
யாதேயர்கள் (யதுக்கள்) 31, 32
யாமினித் துருக்கியர், 245

யு

யுதிட்டிரன், 125
யுவான் சுவாங், 162, 205, 208,

யுவான் சுவாங், 210-213, 227, 240, 255, 263, 264, 270, 281, 315

**யூ**

யூக்ரடைடிஸ், 157
யூ-ச்சி, 158, 160, 161
யூச்சிக் கூட்டத்தினர், 184
யூடிமாசு, 128, 134
யூத்திடீமஸ், 156
யூர்கெட்டிஸ்-II, 183

**யெ**

யென்-கேயோ-சென், 161

**ர**

ரண சூரன், 224
ரதங்கள் (கோவில்கள்), 233, 321, 322
ரவிகீர்த்தி, 274
ராஜபுத்திரர்கள், 244, 253

**ரா**

ராம் கங்கா ஆறு, 243
ராம்பூர்வ, 139
ராஜ்யமதி, 217
ராஜசூயம், 56, 121
ராஜசேகரர், 276
ராஜதரங்கிணி, 230
ராஜபுதனம், 242, 258
ராஜன், 36, 37, 94, 97
ராஜன்யர்கள், 41

**ரி**

ரிக்-சங்கிதைகள், 47, 65
ரிக்வேத காலம், 29—52
ரிக் வேதம், 29-52, 49, 63, 65
ரிட்டா, 50

**ரு**

ருத்திரன் (சிவன்), 51, 63
ரும்மிந்தைத் தூண்கல்வெட்டு, 126, 138

**ரூ**

ரூஹட், 243

**ரோ**

ரோகில்கண்டு, 211

**ல**

லட்டாலூர், 237
லல்லியஷாகி, 251
லலிதாதித்தியன், 218
லவா, 124
லஷ்மணசேனன், 249

**லா**

லாட்டூர் (லட்டாலூர்), 237

**லி**

லிங்க வழிபாடு, 48, 51, 269
லிச்சாவிகள், 71, 98, 194, 200

**லு**

லும்பினிக் கிராமம், 116

**லே**

லேயோஸ், 285

லோ

லோகரா குலம், 220
லோகவிபாக, 233

வ

வங்கம், 189, 220
வங்காளம்-பாலர் ஆட்சி, பிற் கால, 220, 226, 228, 256
பாலசேனர், குப்தர் ஆட்சி, பௌத்தம், 248, 250, 258, 259
வசிஷ்ட புத்திர சாதகர்ணி, 155, 235
வசிஷ்டர், 33, 47
வசுபந்து, 268
வசுமதி, 90,
வசுமித்திரன்,153
வட்டகமனி அபயர், 120
வத்சம், 70, 72
வத்சராஜன், 227
வராக குகை,234
வராக மிஹரர், 200, 247
வருணம், 41, 176
வருணன், 30, 49, 255
வரேந்திரி, 248
வல்லபி, 210,212,263,269,274,
வளநாடு, 259
வஸ்துபாலன், 245
வஜேஷ்கன், 164, 269

வா

வாகாடகர்கள், 232
வாசினி, 108
வாசுதேவன் (கிருஷ்ண தேவகி புத்திரன்), 110, 123, 187, 272
வாசுதேவன்-சுங்கன்,153
வாத்ஸாயனர், 270
வாத, 51
வாதாபி, 210, 234, 235, 236
வாமனன், 219
வார்டாக், 163
வாரங்கல், 251
வான்மீகி, 122, 124
வான சாத்திரக் கல்லூரி, 252, 264
வாஜபேய வேள்வி, 56, 266

வி

விக்கிரக பாலன்-II, 225
விக்கிரம சகாத்தம் (சம்வத்), 158
விக்கிரம சீலம், 226
விக்கிரமாங்கதேவ சரித்திரம், 251
விக்கிரமாதித்திய சாகாரி, 206
விக்கிரமாதித்தியனின் அருஞ்செயல்கள், 206
விக்ரமாதித்தியன்-I புதிய சாக சாங்கர், 234, 236, 246
விக்கிரமாதித்திய ஸ்கந்த குப்தன், 201, 207
விக்கிரமாதித்தியன் - II, 234, 236, 274
விக்கிரமாதித்தியன்-III, 269, 724
விக்கிரமாதித்தியன்-VI, 251
விக்கிரகபாலன்-I, 225
விக்கிரகபாலன்-III, 225
விசாகா, 187
விசிஷ்டாத்துவைதம், 273
விசுவருப சேனன், 250
விசுவாமித்திரன், 34, 47
விஞ்ஞானம்-வேதகாலம், 47, 48
விஞ்ஞானேஸ்வரர், சட்ட நிபுணர், 251

வித்தியாதரன், 246
விதர்ப்ப நாட்டினர், 152
விதவை மணம், 39, 98
விதவையை எரித்தல், 26, 98
விதாத்திரி, 49
விதிசை, 154
விதூலே, 127
விதேக நாட்டினர், 55, 72
விந்தியக் குன்றுகள், 232, 272
விநயாதித்தன், 269
விநாயகபாலன், 228
விமலசூரி, 191
விமலன், 269
விமலசாயி கோயில், 245
விமலா ஷா, 320
விமா காட்பிசிஸ்-II, 161
வியாக்கிர தேவன், 232
வியாக்கிர ராஜன், 197, 232
வியாசர், 122
விரத்தியர், 127
விரதவல வாகேலன், 245
விரஜி (வஜ்ஜி), 71
விரஜியயன் நாட்டுக் கூட்டம், 71
விராட்டியர், 61, 73
விருச்சிவத்துகள், 31
விவசாயம், 39, 45, 104, 105, 181
விஷ்ணு உருக்கிரமன், 51
விஷ்ணு குண்டின், 207
விஷ்ணு குப்தன், 217
விஷ்ணு கோபன், 232
விஷ்ணு வர்த்தனன், 253
விஷயாபதி, 259
விஜயன் (மஜாபஹித்), 291
விஜயசேனன், 249
விஜயநகர், 253
விஸ்வவாரா, 39

வீ

வீடு (மோக்ஷம்), 127
வீரசேன சாபன், 200
வீரசைவர்கள், 272
வீரபல்லாளன்-II, 249
வீரபல்லாளன்-III, 253

வே

வேதகாலம் — முந்திய கால ஆரியர், 29–52
அரசியலமைப்பு, சமூக அமைப்பு, கலை, 35-39
விஞ்ஞானம், சமயம், 47-48
வேதப் பண்பாடு-சடங்குகள், 31, 35, 63, 64, 273,
வேதம், 64, 67, 273

வை

வைகண்ட் (உதபாண்டபுரம்), 242
வைசாலி, 71, 75, 90, 119
வைசிய சாதி, 42, 171, 260
வைணவ ஆழ்வார்கள், 234
வைணவ சமயம், 189, 234, 266, 273
வைணவர்கள் அல்லது பாகவதர்கள், 234
வைஜயந்தி, 155
வைஸ்ரவணன், 108

க்ஷ

க்ஷகராதர்கள், 193
க்ஷத்திரிய குலம், 57, 58, 73, 80, 111, 237, 260, 261, 284

க்ஷீ

க்ஷீரஸ்வாமின், 219

க்ஷே

க்ஷேம குப்தன், 220
க்ஷேமீஸ்வரன், 229
க்ஷேமேந்திரன், 80, 276
க்ஷேமேஸ்வரன், 276

ஸ்

ஸ்கந்த குப்தன், 201, 205, 207
ஸ்டிராபோ, 179, 186, 187
ஸ்மித்து, டாக்டர் வின்சென்டு, 297
ஸ்வாத் நாடு, 82, 83, 84
ஸ்வேதாஸ்வதார உபநிஷத்து, 266

ஸ

ஸர்வவர்மன் மௌகாரி, 207
ஸவரஸ்வாமி, 273
ஸஹஜாதி, 107

ஜ

ஜக்கய்ய பேட்டை, 308
ஜம்பூத்வீபம், 4
ஜய ஈசுவரமூர்த்தி, 284
ஜயதேவர், 276
ஜயபீடவிநயாதித்தன், 219
ஜயவர்மன்-II, 285
ஜயவர்மன்-VII, 285
ஜலந்தர், 198
ஜலால்பூர், 85
ஜலாலாபாது, 223
ஜலௌகன், 147
ஜனகர், 123
ஜனமேஜயன், 54, 123, 126
ஜஸ்டின், 131

ஜா

ஜாதகக் கதைகள், 120, 121, 283, 303
ஜாலந்தர், 211
ஜாவ்கர் (தீப்பாய்தல்-சடங்கு), 87
ஜாவா, 283, 290, 291, 324

ஜி

ஜிட்ரோசியா (பலுச்சிஸ்தானம்), 135

ஜீ

ஜீலம் (நதி), 85
ஜீவித குப்தன்-II, 217

ஜு

ஜுஜுய்டு, 242

ஜெ

ஜெயசிம்மவர்மன், 284
ஜெயபாலன், 242

ஸ்ரீ

ஸ்ரீ பிருதிவி வல்லபன், 225
ஸ்ரீ மேகவர்மன் (வண்ணன்), 194
ஸ்ரீ யக்ஞ சதகர்ணி, 155
ஸ்ரீ ரங்கம், 273, 326
ஸ்ரீ வைஷ்ணவர், 273
ஸ்ரீ ஹர்ஷன், 276

ஷ

ஷாகி குலம், 230

ஹ

ஹர்யங்க மன்னர்கள், 73
ஹர்ஷ சரிதம், 181, 212, 227, 276
ஹர்ஷ தேவன், 216
ஹர்ஷன் (கன்னோசி), 131,135, 208-218, 221, 229, 236, 241, 269, 270, 274
ஹரப்பா, 294, 301
ஹரவிஜயம், 181
ஹரிசேனர், 198
ஹரிச்சந்திரன், 121
ஹரித புத்திரர்கள், 235
ஹரிவர்மன், 285
ஹரிஹரர், 253
ஹல-சாதவாகனர், 191
ஹனுமன், 123
ஹஸ்திவர்மன், 196

ஹா

ஹாலே-பீட், 329

ஹி

ஹிப்பாலஸ், 184
ஹிராக்கிள்ஸ், 109, 111,187
ஹிலியோடொரசு, 189, 312

ஹீ

ஹீரட்டு, 135
ஹீரோடோடசு, 8
ஹீனயான பௌத்தம், 119

ஹூ

ஹூணர்கள், 204, 205, 206, 244, 265, 267

ஹெ

ஹெர்மியூஸ், 157
ஹெல்முத் ஆறு, 241

ஹே

ஹேமசந்திரர், 269
ஹேமந்தசேனன், 2
ஹேமாத்திரி, 252

ஹொ

ஹொய்சலர், 272
ஹொய்சலேஸ்வரர், 329

ஹோ

ஹோமர், 192


ANCIENT ASIA
English Miles
100 0 100 500 1000
Longitude East 80° of Greenwich
TURKESTAN
TIBET
GOBI DESERT
MANCHURIA
SAKHALIN
Kurile Is.
JAPAN
PACIFIC OCEAN
PHILIPPINE ISLANDS
BORNEO
CELEBES
SUMATRA
JAVA
BANKA
MADURA
Bali
INDIAN OCEAN
ARABIA
EGYPT
GREECE
MACEDON
EPIRUS
Athens
Corinth
Cyrene
Alexandria
Antioch
Palmyra
Babylon
Ctesiphon
Susa
Persepolis
MEDIA
Ecbatana
BACTRIA
DRANGIANA
ARACHOSIA
CARMANIA
GEDROSIA
SIESTAN
Bokhara
SOGDIANA
Samarkand
FERGHANA
PAMIR
Kashgar
Yarkand
Khotan
Turfan
Karashar
Caspian Sea
Aral Sea
L. Balkash
L. Baikal
R. Danube
R. Volga
R. Ural
R. Obi
R. Irtish
R. Yenesei
R. Lena
R. Amur
R. Jaxartes
R. Oxus
R. Tigris
R. Euphrates
R. Nile
R. Indus
R. Brahmaputra
Persian Gulf
RED SEA
Socotra
(Dioscorida)
Muttra
Kanauj
Benares
Pataliputra
Sanchi
Ujjain
MALWA
Valabhi
Ajanta
Ellora
Surparaka
Paithan
Amaravati
Kanchi
Kaviripaddinam
Muziris
TAMRAPARNI
Tamralipti
Prome
Thaton
Sukhotai
Angkor Thom
(Angkorvat)
Ayuthia
Pnom-Penh
KAMBUJA
Cambodia
Mison
Caban (Vijaya)
Nhatrang (Kauthara)
Phanrang
(Panduranga)
Ligor
Takoapa
Palembang
Borobudur
Prambanam
Dieng Plateau
Majapahit
Kediri
Tsing Chow
Kwang-Chow (Sinassin)
or Canton
Hoang-ho R.
Yang-tse-kiang
60°
40°
20°
0°
100°
120°
140°
160°




புராதன இந்தியா (பாரத வர்ஷம்)




இடைக்கால இந்தியா—தொடக்கம்